பருவ இதழ்ச் சுவடிப்பதிப்பு வரலாறு

பருவ இதழ்ச் சுவடிப்பதிப்பு வரலாறு

மோ.கோ.கோவைமணி

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

பருவ இதழ்ச்
சுவடிப்பதிப்பு வரலாறு

பருவ இதழ்ச் சுவடிப்பதிப்பு வரலாறு

முனைவர் மோ.கோ.கோவைமணி
உதவிப் பேராசிரியர்
ஓலைச்சுவடித்துறை

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

ISBN : 978-81-7090-402-1

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு எண் : 359

நூல்	:	பருவ இதழ்ச் சுவடிப்பதிப்பு வரலாறு
ஆசிரியர்	:	முனைவர் மோ.கோ. கோவைமணி
பதிப்பு	:	திருவள்ளுவராண்டு 2041, ஆனி முதற்பதிப்பு - சூன் 2010
பக்கம்	:	533+14
அளவு	:	டெம்மி 1/8
தாள்	:	70 ஜிஎஸ்எம் மேப்லித்தோ
படிகள்	:	1200
விலை	:	உரூ. 170.00
அச்சு	:	டுடே கிராபிக்ஸ் 192, பெல்ஸ் சாலை எஸ்.ஆர். காம்ப்ளக்ஸ் சேப்பாக்கம் சென்னை 600 005

முனைவர் ம. இராசேந்திரன்
துணைவேந்தர்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்-613010

நாள் 03-06-2010

அணிந்துரை

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணைக்கும் மேலான வழிகாட்டுதலுக்குமிணங்க 2010 சூன் 23-27ஆம் நாட்களில் கோவையில் நடைபெறும் வரலாற்றுச் சிறப்புமிக்க உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டினைத் தமிழுலகம் மகிழ்ச்சியோடு வரவேற்றுப் போற்றுகிறது. உலகமெலாம் தமிழோசை பரவிடவும் தமிழர்தம் தொன்மையும் சிறப்பும் வெளிப்படவும் இம்மாநாடு வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை. இம்மாநாட்டு ஆய்வரங்குகளில் உள்நாட்டு, வெளிநாட்டு அறிஞர்கள் ஓராயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு ஐம்பத்தைந்து வகைப்பாடுகளில் ஆய்வுக் கட்டுரைகளைப் படிக்கவுள்ளனர்.

இம்மாபெரும் ஆய்வரங்க நிகழ்ச்சிகளை அமைத்து, ஒருங்கிணைத்து நடத்தும் பெரும் பொறுப்பினை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு அளித்துள்ளார்கள். தமிழ்ப் பல்கலைக்கழகம் இப்பொறுப்பினை மனமுவந்து ஏற்று அல்லும் பகலும் அயராது பணியாற்றி வருகிறது. மாநாட்டிற்குப் பெருமை சேர்க்கும் ஆய்வரங்கங்களின் பணிப் பொறுப்பினைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு அளித்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்மாநாட்டினையொட்டித் தமிழ்மொழி, இலக்கியம், இலக்கணம், வரலாறு, நாகரிகம், பண்பாடு, கலை, அறிவியல், மொழிபெயர்ப்பு எனப் பல்வேறு துறைகள் சார்ந்த நூல்களைச் சிறப்பு வெளியீடுகளாகத் தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியிடுகிறது. அவ்வகையில் இந்நூலும் ஒன்று. இதன் ஆக்கப்பணியில் முனைந்து பணியாற்றிய நூலாசிரியர் முனைவர் மோ.கோ.கோவைமணி, பதிவாளர் முனைவர் சா.பி.சரவணன், பதிப்புத்துறை இயக்குநர் திரு. வை.கண்ணபுரக்கண்ணன், அலுவலர்கள், பணியாளர்கள், கணினியச்சு செய்தளித்தோர், அட்டை வடிவாக்குநர், அச்சகத்தார் முதலிய அனைவருக்கும் என் வாழ்த்தும் நன்றியும் உரியதாகும்.

முன்னுரை

நூலாசிரியரால் ஓலையிலோ காகிதத்திலோ தம்மாலோ பிறராலோ எழுதப்பெற்றது சுவடி. இச்சுவடி நாளடைவில் பல படிநிலைகளில் ஓலை எழுதுவோராலும் எழுதுவிப்போராலும் பல்கிப் பெருகிற்று எனலாம். மூலத்தை மட்டுமோ அல்லது மூலத்துடன் அடிக்குறிப்பு, உரை, கருத்துரை, குறிப்புரை, பதவுரை, பொழிப்புரை, விளக்கவுரை போன்றவற்றில் ஏதாவதொன்றி னையோ ஒன்றிற்கும் மேற்பட்டவற்றைப் பெற்றோ பதிப்பிக்கப் பெறுவதே 'சுவடிப்பதிப்பு'. அதாவது, சுவடிகளை (ஓலை, காகிதம்) அடிப்படையாகக் கொண்டு பதிப்பிக்கப் பெறுவன எல்லாம் சுவடிப்பதிப்பு எனலாம்.

நூலாசிரியர் தம்மாலோ பிறராலோ எழுதப்பெறும் ஏடு "மூலவேடு'. சில மூலவேடுகள் தொடக்க காலத்தில் வாய்மொழியாக வழங்கப்பெற்று வாய்மொழியாகவே வளர்ந்து பின்னாளில் சுவடியாக ஏட்டுருவம் பெறுவதுண்டு. இவ்வாறு வாய்மொழியாய் வழங்கி ஏட்டுருவம் பெற்றனவும் "மூலவேடு' எனலாம். மூலவேடு பலருக்குத் தேவைப்படும் போது படியெடுக்கப்பெறுகின்றன. அவற்றைப் 'படியேடுகள்' எனலாம். மூல நூலுக்கு உரையாசிரியரால் மூலமும் உரையுமாகவோ, உரை மட்டும் தனித்தோ எழுதப்பெறுவதை 'உரையேடு' எனலாம். ஒரு நூலுக்குப் படியேடுகள் உரையேடுகள் பல்கிப் பெருகிய பின் ஏடெழுதுவோரால் பாடவேறுபாடுகள் ஏற்பட்டுவிடுகின்றன. இந்நிலையில், கல்வியிற் சிறந்த ஒருவரால் ஒரு நூல் தொடர்பான மூலவேடு, படியேடு, உரையேடு ஆகியவற்றைத் திரட்டி ஒப்பிட்டுத் திருத்தமான பாடத்துடன் அச்சிடுவதே 'சுவடிப்பதிப்பு' எனலாம். அதாவது, சுவடியிலுள்ளவற்றை இன்றைய

காகிதத்தில் அச்சினால் பதிப்பிக்கப் பெற்றவையே சுவடிப் பதிப்புகள் எனலாம். இச்சுவடிப் பதிப்பானது பழைய பதிப்பு, திருத்தப் பதிப்பு, ஆராய்ச்சிப் பதிப்பு என மூன்று வகைப்படும்.

சுவடியிலுள்ள எழுத்தமைதியை அவ்வாறே ஏற்றுக் கொண்டு -ஏட்டிலுள்ளவாறே அச்சில் பதிப்பித்ததைப் 'பழைய பதிப்பு' (பாடல், அதன்கீழ் உரை என்ற பிரிப்பு முறையால் மட்டும் வேறுபட்டுக் காணப்படும்; பாடல் அடிகளாகவோ அடிகள் சீர்களாகவோ பிரித்துக் காட்டப்பெறாத நிலையில் மெய்யெழுத்துகளுக்குப் புள்ளியில்லாமலும் ஒற்றை இரட்டைக் கொம்புகளுக்கு வேறுபாடில்லாமலும் அச்சிடுதல்) எனலாம்.

மெய்யெழுத்துகளுக்குப் புள்ளியிட்டும், ஒற்றை இரட்டைக் கொம்புகளுக்கு வேறுபாடு காட்டியும் பொருள் தெளிவுக்கு நிறுத்தக் குறியீடுகளைப் பயன்படுத்தியும் வரி யமைப்புகள், சீர் அமைப்புகளை உருவாக்கியும் இன்றைய அச்சு வடிவில் பதிப்பிப்பதைத் 'திருத்தப் பதிப்பு' எனலாம். நூலில் காணும் ஐயங்களை நீக்கிப் பொருள் தெளிவு ஏற்படவும், படிப்பவர்கள் தாமே பாடத்தை உறுதிசெய்து கொள்வதற்காக எல்லாப் பிரதிகளிலும் காணப்படும் பாடவேறுபாடுகளைக் குறிப்பதுவும், பாடல்கள் உரைகள் எனத் தனித்தனியாகப் பிரிப்பதுவும் போன்ற அமைப்பு களையும் இதில் மேற்கொள்ளலாம்.

பல சுவடிகளை ஆய்ந்து, சிறந்த பாடத்தைத் தேர்ந்து சந்திகளைப் பிரிப்பதும், தெளிவுரை, குறிப்புரை, கருத்துரை போன்ற அமைப்புகளுடன் நூலின் முழுத் தன்மையையும் ஆய்ந்து நூலில் காணப்படும் சிறப்புச் செய்திகள், நூலாசிரியர், உரையாசிரியர் பாட்டுடைத் தலைவர் ஆகியோர் வரலாறுகள், பாட்டு முதற்குறிப்பு அகரநிரல், அருஞ்சொற்பொருள் அகரநிரல், பதிப்பு வரலாறு போன்ற அமைப்புகளுடைய பதிப்பை 'ஆராய்ச்சிப் பதிப்பு' எனலாம்.

ஆக, மூலயேடு, படியேடு, உரையேடு என்றிருந்த சுவடிகள் பழைய பதிப்பு, திருத்தப் பதிப்பு, ஆராய்ச்சிப் பதிப்பு என்ற நிலையில் வெளிவந்துள்ளன.

இச்சுவடிப் பதிப்பிற்கு யாழ்ப்பாணம் நல்லூர் க. ஆறுமுக நாவலர், சி.வை. தாமோதரம் பிள்ளை, மகாமகோபாத்தியாய உ.வே. சாமிநாதையர், பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை ஆகிய நால்வரும் சிறப்பாகத் தொண்டாற்றியவர்களாவர். சுவடிப்பதிப்பு இப்படித்தான் இருக்கவேண்டும் என்று வரையறை செய்தவர்கள் இவர்கள். எவ்வெவ் வகைகளில் எல்லாம் சுவடிகளை ஆராய்ந்து எளிமைப்படுத்தி மக்களுக்கு அளித்தால் பயனுடையதாக இருக்குமென்று செய்து காட்டியவர்கள். சுவடிப்பதிப்பு நெறிமுறைக்கு வித்திட்டவர்கள் இவர்கள். "பழந்தமிழ் இலக்கிய வெளியீட்டுக்குக் கால் கொண்டவர் ஆறுமுக நாவலர்; சுவர் எழுப்பியவர் தாமோதரம் பிள்ளை; கூரை வேய்ந்து, நிலையம் கோலியவர் சாமிநாத ஐயர்" (சுவடிக்கலை, மேற்கோள், ப.134) என்று திரு.வி.க. இப்பதிப்பாசிரியர்களுக்குப் புகழாரம் சூட்டுகின்றார். இவர்களுக்கு முன்னும் பின்னுமாகச் சுவடிப்பதிப்புப் பணியைச் சிறப்பாகச் செய்தவர்கள் பலராவர்.

திருநெல்வேலி அம்பலவாணக் கவிராயர், அ. முத்துச் சாமிப் பிள்ளை, புதுவை நயனப்ப முதலியார், முகவை இராமாநுசக் கவிராயர், களத்தூர் வேதகிரி முதலியார், மழவை மகாலிங்கையர், தாண்டவராய முதலியார், திருத்தணிகை ச. விசாகப் பெருமாளையர், திருத்தணிகை ச. சரவணப் பெருமாளையர், திருவேங்கடாசல முதலியார், சந்திரசேகர கவிராச பண்டிதர், திரிசிரபுரம் வி. கோவிந்த பிள்ளை, கொட்டையூர் த. சிவக்கொழுந்து தேசிகர், காஞ்சிபுரம் மகாவித்துவான் சி.எஸ். சபாபதி முதலியார், யாழ்ப்பாணம் கோப்பாய் அம்பலவாண பண்டிதர், யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை அம்பலவாண நாவலர், யாழ்ப்பாணம் மன்னிப்பாய் அருணாசல சதாசிவம் பிள்ளை, தொண்டை மண்டலம் இராசநல்லூர் இராமச்சந்திர கவிராயர், மகாவித்துவான் சி. மீனாட்சிசுந்தரம் பிள்ளை, வடலூர் இராமலிங்க அடிகள், சோடசாவதானம் வீ. சுப்பராய செட்டியார், கோமளபுரம் இராசகோபாலப் பிள்ளை, யாழ்ப்பாணம் உடுப்பிட்டி கு. கதிரைவேற்பிள்ளை, புதுவை

சவராயலு நாயகர், பொன்னம்பல சுவாமிகள், தொழுவூர் செ. வேலாயுத முதலியார், காயல்பட்டினம் செய்யது அப்துல் காதிரு நயினார் லப்பை ஆலிம், யாழ்ப்பாணம் புலோலியூர் நா. கதிரைவேற் பிள்ளை, யாழ்ப்பாணம் வடகோவை சபாபதி நாவலர், யாழ்ப்பாணம் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர், வல்லுவெட்டித்துறை வயித்தியலிங்கம் பிள்ளை, அச்சுவேலி தம்பிமுத்துப் பிள்ளை புலவர், திரிகோணமலை த. கனகசுந்தரம் பிள்ளை, மகாவித்துவான் திருமயிலை சண்முகம் பிள்ளை, எதிர்க்கோட்டை அ. நாராயணையங்கார், பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர், காஞ்சி நாகலிங்க முனிவர், சோழ வந்தான் அரசஞ் சண்முகனார், மகாவித்துவான் இரா. இராக வையங்கார், திரு.வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார், திரு.மு.சி. பூர்ணலிங்கம் பிள்ளை, வேதாந்தி கோ. வடிவேலு செட்டியார், திருமணம் தி. செல்வக் கேசவராய முதலியார், வடக்குப்பட்டு த. சுப்பிரமணியப் பிள்ளை, காவேரிப்பாக்கம் ரா.நமச்சிவாய முதலியார், வ.உ.சிதம்பரம் பிள்ளை, கயப் பாக்கம் ர. சதாசிவ செட்டியார், காஞ்சிபுரம் ர. கோவிந்தராச முதலியார், ஈக்காடு இரத்தினவேலு முதலியார், பூவை கலியாணசுந்தர முதலியார், மகாவித்துவான் மு. இராக வையங்கார், திட்டாணிவிட்டம் வே. இராஜகோபால ஐயங்கார். இ.வை. அனந்தராமையர், சே. கிருஷ்ணமாச்சாரியார், அ. சக்கர வர்த்தி நயினார், திருவாரூர் வி. கல்யாணசுந்தர முதலியார், நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார், திருநெல்வேலி கா. சுப்பிரமணிய பிள்ளை, டி.கே. சிதம்பரநாத முதலியார், இராவ்பகதூர் ச. பவானந்தம் பிள்ளை, கரந்தைக் கவியரசு அரங்க வேங்கடாசலம் பிள்ளை, புன்னைலைக் கட்டுவன் சி. கணேசையர், ஔவை சு. துரைசாமி பிள்ளை, திருக்கண்ண புரம் திருமாளிகைச் சௌரிப்பெருமாள் அரங்கனார், ச. சோம சுந்தர தேசிகர், மாங்காடு வடிவேலு முதலியார், மகா வித்துவான் மே.வீ. வேணுகோபாலப் பிள்ளை, பேரா. மு. சண்முகம் பிள்ளை, மறைமலையடிகள், மு. அருணாசலம், இரா. இளங்குமரன், அடிகளாசிரியர், த.கோ. பரமசிவம், வே. இரா. மாதவன், ப.வெ. நாகராசன், ச.வே. சுப்பிர

மணியன், மு.கோ. இராமன், ச. சிவகாமி, அன்னிதாமசு, தா.வே. வீராசாமி, ஏ.என். பெருமாள், பூ. சுப்பிரமணியம், தி. மகாலட்சுமி, சூ. நிர்மலாதேவி, தெ.பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை, சு. சௌந்தரபாண்டியன், இ. சுந்தரமூர்த்தி, தி.வே. கோபாலையர், வீ. சொக்கலிங்கம், அ.மா. பரிமணம், ம. சீராளன், சி.கோ. தெய்வநாயகம், ச. திலகம், மா. சத்தியபாமா, இரா. நாகசாமி, ய.மணிகண்டன், அ. இராசேந்திரன், ச. பால சாரநாதன், வி.மு. சுப்பிரமணிய ஐயர், கி. ஜெகந்நாதாச் சாரியார், அ. விநாயகமூர்த்தி, எஸ். ஸ்ரீநிவாசையர், வை.தி. நடராசன், ஆ. தசரதன், எஸ். முத்துரத்ன முதலியார், இரா.மா. கோவிந்தசாமிப் பிள்ளை போன்றோரும் சுவடிப்பதிப்புகளை வெளியிட்ட வர்களில் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

மேலும், தருமபுர ஆதீனம், திருவாவடுதுறை ஆதீனம், பேரூர் ஆதீனம், திருப்பனந்தாள் காசித்திருமடம், கோவை கௌமார மடம், பழநி தேவஸ்தானம், மதுரைத் தமிழ்ச்சங்கம், புதுவைத் தமிழ்ச்சங்கம், தஞ்சைத் தமிழ்ச்சங்கம், மதுரை மாணவர் செந்தமிழ்ச்சங்கம், கோவைத் தமிழ்ச்சங்கம், கரந்தைத் தமிழ்ச்சங்கம், திருவனந்தபுரம் தமிழ்ச்சங்கம், தஞ்சை சரஸ்வதிமகால் நூலகம், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சென்னை உ.வே. சாமிநாதையர் சுவடிகள் நூலகம், சென்னை அடையாறு நூலகம், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம், திருவனந்தபுரம் கேரளப் பல்கலைக்கழகம், திருப்பதி ஸ்ரீவெங்கடேஸ்வரா பல்கலைக் கழகம், சென்னை ஆசியவியல் நிறுவனம், பழஞ்சுவடிகள் பாதுகாப்பு மையம், ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், கிறிஸ்தவ இலக்கியக் கழகம், ஞாயிறு நூற்பதிப்புக் கழகம், வைணவ நூற்பதிப்புக்கழகம், தமிழ்ப் பதிப்பகம், தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், ஐந்திணை பதிப்பகம், வானதி பதிப்பகம், அமுத நிலையம், மணிவாசகர் பதிப்பகம்,

பாவை வெளியீட்டகம், பாரி நிலையம் ஆகியவற்றின் வாயிலாகவும் சுவடிப்பதிப்புகள் வெளிவந்திருக்கின்றன.

இத்தனிச் சுவடிப்பதிப்புகளன்றி அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், உண்மை விளக்கம் அல்லது சித்தாந்த தீபிகை, உயராய்வு, கலாநிலையம், கலைமகள் - சென்னை, கல்வெட்டு, குமரகுருபரன், கொங்கு மலர், சக்தி, சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ், சித்தாந்தம் (1912), சித்தாந்தம் (1928), சிவநேசன், செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி, செல்வக் களஞ்சியம், ஞானசம்பந்தம், ஞானபோதினி, தமிழாய்வு, தமிழ்க்கலை, தமிழ்ப்பொழில், திருக்கோயில், தேனோலை, நல்லறம், பஞ்சாமிர்தம், புலமை, பைந்தமிழ், மாதாந்திர அமுதம், முக்குடை, மெய்கண்டார், விவேகபாநு, ஸ்ரீகாமகோடி ப்ரதீபம், ஸ்ரீகுமரகுருபரர், ஸ்ரீசங்கர க்ருபா, ஹரிசமய திவாகரன் போன்ற பருவ இதழ்களின் வாயிலாகவும் சுவடிப்பதிப்புகள் வெளிவந்திருக்கின்றன.

இந்நூல், இதழ்களில் வெளிவந்த சுவடிப்பதிப்புகளை முதன்மை ஆதாரமாகக் கொண்டு ஏனைய பதிப்புகளைத் துணைக்கழைத்துப் பருவ இதழ்ச் சுவடிப்பதிப்பு வரலாறு குறித்து விரிவாக ஆராய்கின்றது.

இதழியல் - ஒரு பார்வை என்னும் பகுதியில் இதழியலின் வரையறை, தொடக்க கால இதழியலின் தன்மை, இலக்கியங்களில் இதழ்கள் குறித்த செய்திகள், உலக அளவில் இதழியலின் தோற்றுவாய், இந்திய - தமிழக இதழியலின் தோற்றுவாய், பருவ இதழ்களின் வகைப்பாடு, இந்தியாவில் நிலவி வந்த இதழியல் சட்டங்கள் குறித்த பல்வேறு செய்திகள் ஆராயப்பெற்றுள்ளன.

இலக்கியப் பருவ இதழ்கள் என்னும் பகுதியில் பார்வையிடப்பெற்ற பருவ இதழ்களில் சுவடிப்பதிப்புகளை வெளியிட்ட 36 பருவ இதழ்கள் ஆய்வுக்காகத் தெரிவுசெய்யப் பெற்றுள்ளன. அவை, அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், உண்மை விளக்கம் எனும் சித்தாந்த தீபிகை,

உயராய்வு, கலாநிலையம், கலைமகள், கல்வெட்டு, குமர குருபரன், கொங்குமலர், சக்தி, சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ், சித்தாந்தம் (1912), சித்தாந்தம் (1928), சிவநேசன், செங்குந்தமித்திரன், செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி, செல்வக் களஞ்சியம், ஞானசம்பந்தம், ஞானபோதினி, தமிழாய்வு, தமிழ்க்கலை, தமிழ்ப்பொழில், திருக்கோயில், தேனோலை, நல்லறம், பஞ்சாமிர்தம், புலமை, பைந்தமிழ், மாதாந்திர அமுதம், முக்குடை, மெய்கண்டார், விவேகபாநு, ஹரிசமய திவாகரன், ஸ்ரீகாமகோடி ப்ரதீபம், ஸ்ரீகுமரகுருபரர், ஸ்ரீசங்கர க்ருபா ஆகியவையாகும். இப்பருவ இதழ்கள் வெளியீட்டு நிலையில் தனியார்ப் பருவ இதழ்கள், தமிழ்ச்சங்கப் பருவ இதழ்கள், சுவடி நூலகப் பருவ இதழ்கள், நிறுவனப் பருவ இதழ்கள், ஆதீனப் பருவ இதழ்கள், பல்கலைக்கழகப் பருவ இதழ்கள் என்று ஆறு வகைகளாகப் பிரிக்கப்பெற்று அவ்வ வற்றின் தோற்றம், நோக்கம், போக்கு, அவற்றில் வெளியான சுவடிப்பதிப்புகள், நெறிமுறைகள் குறித்து சுட்டப்பெறுகிறது.

சுவடிப்பதிப்பு வரலாற்றில் பருவ இதழ்கள் என்னும் பகுதியில் சுவடிப்பதிப்பின் தோற்றம், மூன்று நிலைகளில் அமையும் சுவடிப்பதிப்பு வரலாறு மற்றும் பருவ இதழ்கள் வெளியிட்ட சுவடிப்பதிப்புகளின் வகைகள் ஆகியவற்றை ஆராய்வது இவ்வியலின் முக்கிய நோக்கமாகும். வெளியீட்டு நிலை மற்றும் உள்ளடக்க நிலையில் தனியார் பருவ இதழில் மூலச் சுவடிப்பதிப்புகள், மூலமும் குறிப்பும் கொண்ட சுவடிப்பதிப்புகள், மூலமும் உரையும் கொண்ட சுவடிப் பதிப்புகள், குறைச் சுவடிப்பதிப்புகள், தமிழ்ச் சங்கப் பருவ இதழில் மூலச் சுவடிப்பதிப்புகள், மூலம் குறிப்பும் கொண்ட சுவடிப்பதிப்புகள், மூலமும் உரையும் கொண்ட சுவடிப் பதிப்புகள், திருத்தப் பதிப்புகள், குறைச் சுவடிப் பதிப்புகள், சுவடி நூலகப் பருவ இதழில் மூலச் சுவடிப் பதிப்புகள், மூலமும் குறிப்பும் கொண்ட சுவடிப்பதிப்புகள், மூலமும் உரையும் கொண்ட சுவடிப்பதிப்புகள், திருத்தப் பதிப்புகள், குறைச் சுவடிப்பதிப்புகள், ஆதீனப் பருவ இதழில் மூலச் சுவடிப்

பதிப்புகள், மூலமும் குறிப்பும் கொண்ட சுவடிப்பதிப்புகள், திருத்தப் பதிப்புகள், குறைச் சுவடிப் பதிப்புகள், நிறுவனப் பருவ இதழில் மூலச் சுவடிப்பதிப்புகள், மூலமும் குறிப்பும் கொண்ட சுவடிப்பதிப்புகள், மூலமும் உரையும் கொண்ட சுவடிப்பதிப்புகள், திருத்தப் பதிப்புகள், குறைச் சுவடிப் பதிப்புகள், பல்கலைக்கழகப் பருவ இதழில் மூலச் சுவடிப் பதிப்புகள், மூலமும் குறிப்பும் கொண்ட சுவடிப்பதிப்புகள், மூலமும் உரையும் கொண்ட சுவடிப்பதிப்புகள், குறைச் சுவடிப்பதிப்புகள் போன்ற 27 வகைகளில் அமைந்த பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகள் இனங்காணப்பெற்று ஆராயப் பெறுகிறது.

பருவ இதழ்களில் சுவடிப்பதிப்புகள் எனும் பகுதியில் பருவ இதழ்களில் வெளிவந்த சுவடிப்பதிப்புகளைப் பருவ இதழ்ச் சுவடிப்பதிப்பிற்கு முன்-பின் தனிநூற் பதிப்புகள், தனிநூற் பதிப்பிற்குப் பின் பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகள், பருவ இதழ்ச் சுவடிப்பதிப்பிற்குப் பின் தனிநூற் பதிப்புகள், பருவ இதழ்ச் சுவடிப்பதிப்பின் தனிநூற்பதிப்புகள், பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகள், நூலிதழ்ச் சுவடிப்பதிப்புகள் என்றவாறு பகுத்துக்கொண்டு சுவடிப்பதிப்புகள் இனங்காணப் பெற்றுள்ளன.

பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகளின் வகையும் வடிவும் எனும் பகுதியில் பருவ இதழ்களில் வெளிவந்து பருவ இதழ்ப் பதிப்பாகவே உள்ள சுவடிப்பதிப்புகள் இனங்காணப்பெற்று, அவற்றின் வகையும் வடிவும் குறித்து இப்பகுதி ஆய்வு செய்கிறது. இவற்றின் வகைகளாகக் காப்பியம், புராணம், தத்துவம், நீதி இலக்கியம், இலக்கணம், சிற்றிலக்கியம் (அகவல், அட்டகம், அட்டமங்கலம், அந்தாதி, அனுபூதி, ஆற்றுப்படை, ஆனந்தக் களிப்பு, உலா, ஊசல், ஊடல், கண்ணி, கலித்துறை, காதல், கும்மி, குறவஞ்சி, கோவை, சதகம், சிந்து, தாலாட்டு, திருவனந்தல், துதி (தோத்திரம்), தூது, நலங்கு, நொண்டி நாடகம், பஞ்சகம், பதம், பதிகம், பத்து, பரணி, பள்ளு, பாட்டு, பிள்ளைத்தமிழ், மஞ்சரி, மடல், மாலை, வகுப்பு,

வண்ணம், வாகனக்கவி, விண்ணப்பம், விருத்தம், வெண்பா), வாழ்க்கை வரலாற்றிலக்கியம், நாட்டுப்புற இலக்கியம், திரட்டு நூல்கள், பல்வகை நூல்கள் ஆகிய ஒன்பது வகைகளில் பகுத்தாய்வதாக அமைகிறது.

பருவ இதழ்ச் சுவடிப்பதிப்பு வரலாறு எனும் பகுதியில் இலக்கியப் பருவ இதழ்களில் வெளிவந்த 408 நூல்களுக்கான பதிப்பு வரலாறு எடுத்துரைக்கப்பெற்றுள்ளது.

பருவ இதழ்களில் மருத்துவச் சுவடிப்பதிப்புகள் எனும் இறுதிப் பகுதியில் மருத்துவ நூல்களை வெளியிட்ட இதழ்களைப் பற்றியும், அவற்றில் இடம்பெற்ற மருத்துவ நூல்கள் பற்றியும், அவற்றின் பதிப்பு நிலை குறித்தும் ஆராயப் பெற்றுள்ளது.

பருவ இதழ்களில் வந்த சுவடிப்பதிப்புகளின் நோக்கும் போக்கும் எனும் பகுதியில் பருவ இதழ்களில் வெளிவந்த சுவடிப்பதிப்புகளின் நோக்கத்தையும் அவற்றின் போக்கையும் ஆராய்வது இப்பகுதியின் முக்கிய நோக்கமாகும். எவ்வெவ் வகைகளிலெல்லாம் பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகள் வெளிவந் திருக்கின்றன என்று ஆராயும் நிலையில் நூற்பெயர் மாற்றம் பெற்றவை, உரைக்குறிப்பால் அறிமுகமானவை, குறைப் பதிப்பை நிறைவு செய்பவை, முதற்பதிப்பு கிட்டாமையால் வெளிவந்தவை, பதிப்புரை பெற்றவை, அறிமுக நோக்கில் வெளிவந்தவை, நூலாசிரியரின் குறைப் பதிப்பை நிறைவு செய்தவை, குறைப்பதிப்பை முழுநூலாகக் கருதியவை, ஒரு நூலின் யாப்பை மாற்றிப் பதிப்பித்தவை, ஒரே நூல் இருவேறு பெயர்களில் வெளிவந்தவை, பாதுகாத்தவரால் நூற்பெயர் சுட்டப்பெற்றவை, மனன நிலையில் உருவானவை, மீண்டும் பருவ இதழில் வெளிவந்தவை, ஏடு பிறழ்ச்சியால் உருவானவை, ஓரிதழில் மூலமும் பிறிதோரிதழில் உரையும் வெளிவந்தவை, பதிப்புக்கு முன் அறிமுகப்படுத்தியவை, தவறான பதிப்பு களைச் சுட்டியவை, முதற் பதிப்பும் மறுபதிப்பும், திருத்தப் பதிப்பு, பல சுவடிப்பதிப்பு, குறைப்பதிப்பு போன்ற வகை

களில் விரிவாக ஆராயப்பெறுகிறது. மேலும், பருவ இதழ்களில் வெளிவந்த சுவடிப்பதிப்புகளுக்கான பக்க எண்ணமைப்பு குறித்தும், பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகளில் திரட்டு - தொகுப்பு குறித்தும், பருவ இதழ்ச் சுவடிப்பதிப்பு நெறிமுறைகள் குறித்தும் இப்பகுதியில் ஆராயப்பெற்றுள்ளது.

இந்நூல் உருவாவதற்கு முழு காரணமான மாண்புநிறை துணைவேந்தர் ம. இராசேந்திரன் அவர்களுக்கும், பருவ இதழ்களில் சுவடிப்பதிப்புகள் என்ற என்னுடைய முனைவர் பட்டத்திற்கு வழிகாட்டியாக இருந்து நெறிப்படுத்திய தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் ஓலைச்சுவடித்துறைத் தலைவர் தெய்வத்திரு பேராசிரியர் முனைவர் த.கோ. பரமசிவம் அவர்களுக்கும், இவ்வாய்வில் திரட்டப்பெற்ற ஏனைய தகவல்களையும் சேர்த்து பருவ இதழ்ச் சுவடிப்பதிப்பு வரலாறு என்றவொரு நூல் உருவாவதற்கு பல்லாற்றானும் உதவியாக விருந்த ஓலைச்சுவடித்துறைத் தலைவர் பேராசிரியர் முனைவர் வே.இரா. மாதவன் அவர்களுக்கும், இந்நூல் உருவாகுங் காலத்தில் பல உதவிகள் புரிந்த பதிப்புத்துறை இயக்குநர் முனைவர் வை. கண்ணபுரக்கண்ணன் அவர்களுக்கும் என் நெஞ்சான்ற நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சாவூர்

27.5.2010 மோ.கோ. கோவைமணி

1. இதழியல் - ஒரு பார்வை

இதழின் தொடக்கக் காலம் முதல் 19ஆம் நூற்றாண்டு வரை இந்தியாவில் நிலவிய இதழியலும் அதற்கான சட்டங்களும் குறித்து இக்கட்டுரை ஆராய்கின்றது. தொன்று தொட்டே நம்மிடம் இதழியல் அனுபவம் தோன்றி இருக்கின்றது எனலாம். கூட்டுக் குடும்பமாக மனிதர்கள் வாழ்ந்த காலத்திலிருந்தே தங்களுக்குள் செய்திகளைப் பரிமாறிக் கொள்ள பல்வேறு வகையான உத்திகளைக் கையாண்டுள்ளனர். அதாவது, மனிதன் தன்னுணர்ச்சியின் உந்துதலால் உணர்ச்சியொலியாலும், போலியொலியாலும், குறிப்பொலியாலும், சீழ்க்கையொலியாலும் தன் கருத்தைப் பிறருக்கு அறிவிக்கச் செய்தான். மேலும், பறையறைவித்தும், மணியடித்தும், புகையெழுப்பியும், தீ அம்புகளை வானத்தில் எறிந்தும் ஓரிடத்தில் நடப்பதைச் சுற்றுவட்டாரத்து மக்களுக்கு அறிவிக்கச் செய்தான். இப்படியாக ஆதிமனிதனின் இதழியல் உத்தி இருந்ததை அறிகின்றோம்.

மொழியை உருவாக்கிய மனிதன், அம்மொழியை நிலைநிறுத்த வரிவடித்தைக் கண்டுபிடித்தான். இவ்வரி வடிவத்தைக் கொண்டு பல செய்திகளைக் கல்வெட்டாகவும், செப்பேடாகவும், ஓலைச்சுவடியாகவும் உருவாக்கத் தலைப் பட்டான். இதற்காக எழுது பொருள்களையும் எழுதப்படு பொருள்களையும் கண்டுபிடித்தான். எழுது பொருள்களாகக் கோரைப்புல், களிமண், மூங்கில் பத்தை, பட்டுத்துணி, மரப் பட்டை, பனையோலை, கல்; செப்புத் தகடு, தங்கத் தகடு, வெள்ளித் தகடு, தோல் போன்றவற்றையும்; எழுதப்படு பொருள்களாகத் தடித்த கூர்மையான நாணல் குச்சி,

செடிகொடிகளின் இலைச்சாறு, மிருகத்தின் குருதி, கூர்மை யான இரும்புக் கருவி, தங்க ஊசி, வெள்ளி ஊசி, செம்பூசி, தூரிகை, உளி போன்றவற்றையும் கண்டுபிடித்து இருக்கின்றான்.

இதழியலின் தந்தை

"ரோம் நாட்டை ஆண்ட ஜூலியஸ் சீசர் கி.மு.60இல் அரண்மனைச் செய்திகளை 'ஆக்டா டைர்னா' (Acta Diurna - அன்றாட நடவடிக்கை) என்ற பெயரில் எழுதி பொதுவிடங் களில் வைத்தார். அவர் போரிட்டுக் கொண்டிருந்த பொழுது, போர்ச் செய்திகளைத் தலைநகருக்கு அனுப்பி வைத்தார். இதனால் சீசரை 'இதழியலின் தந்தை' என்று அழைக்கின்றனர். ஆனால், சிலர் சீசருக்கு முன்பே கி.மு.106இல் சிசரோ பிறப்பு-இறப்பு விவரங்களை எழுதித் தனது அரண்மனைக்கு முன்னால் பலரும் பார்க்க அறிவித்தார் என்றும், ஆதலால் அவரையே இதழியலின் முன்னோடியாகக் கருத வேண்டுமென்றும்" (இதழியல் கலை, மேற்கோள், பக்.40-41) குறிப்பிடுவர். கி.பி.3ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அசோகர் கல்வெட்டுக்களில் தம் ஆணைகளையும் அறிவுரைகளையும், புத்தரின் கொள்கை களையும் பொறித்திருக்கின்றார். எனவே இவற்றினைப் பார்க்கும் போது "இந்திய மாமன்னர் அசோகர் தான் இதழியலின் தந்தை" (இதழியல்,ப.x) என்று சூ. இன்னாசி குறிப்பிடுகின்றார். இவர்களின் கூற்றுகளைப் பார்க்கும் போது உலக இதழியலின் தந்தையாக சிசரோவையும், இந்திய இதழியலின் தந்தையாக மாமன்னர் அசோகரையும் குறிப்பிடலாம்.

இதழியலின் தோற்றுவாய்

கி.பி.105இல் மல்பெரி மரப்பட்டையிலிருந்து சாய்லன் என்ற சீனாக்காரரர் முதன் முதலாக காகிதம் செய்வதைக் கண்டுபிடித்தார். உலக மக்கள் காகிதம் செய்யும் கலையைக் கற்றுச் சென்றனர். கி.பி.1041இல் பிசெங் என்ற சீனாக்காரரர் களிமண்ணில் எழுத்துக்களைச் செய்து சுட்டு, தகடு சுத்தி, கடினப்படுத்தி, அச்சிடும் முறையைக் கண்டுபிடித்தார். அதன்

பின்பு அச்சுக் கலையில் ஒரு புரட்சி ஏற்பட்டது எனலாம். கி.பி.1450இல் ஜான் கூடன்பர்க் என்ற ஜெர்மானியர் முதன் முதலில் அச்சுப்பொறியினைக் கண்டுபிடித்தார். காகிதமும் அச்சுப்பொறியும் கண்டுபிடிக்கப்பட்ட பின்பு தாள்களின் வழியேயான இதழியலின் வளர்ச்சி தொடங்குகின்றது எனலாம். இந்தியாவில் கி.பி.1556இல் அச்சுக்கலையின் தோற்றம் பெற்றிருந்தாலும் இதழியலின் தொடக்கம் சற்று தாமதமாகத்தான் தோன்றியிருக்கின்றது. ஏனெனில் இதற்கு ஆங்கிலேயரின் அடக்குமுறை ஆட்சியும் தங்கள் மதத்தை மட்டும் பரப்பவேண்டும் என்ற அவாவும் மேலோங்கி நின்றதுமே இதற்குக் காரணம் எனலாம்.

கி.பி.1768இல் வில்லியம் போல்ட்ஸ் என்னும் ஆங்கிலேயர் செய்தி இதழ் ஒன்றைத் தொடங்குவதற்கு விருப்பம் கொண்டு, கல்கத்தா நகரின் ஓரிடத்தில் "பொது மக்களுக்குக் கல்கத்தா நகரின் செய்திகள் இல்லாதது வணிகத்திற்கும் சமுதாயத்திற்கும் பெரிய இழப்பாகும். ஒவ்வொரு இந்தியனுக்கும் அது இன்றியமையாதது. அச்சுத்தொழில் அறிந்தவர்கள், அச்சகத்தை நடத்துபவர்கள் ஆகியோருக்கு நான் ஊக்கமளிக்கத் தயாராக இருக்கிறேன்" (தமிழ் இதழியல்,ப.25) என்று தட்டி ஒன்றில் எழுதி வைத்தாராம். இதனைக் கண்ட ஆங்கில அரசு வில்லியம் போல்ட்ஸ்சை நாடு கடத்தியிருக்கின்றது. கி.பி.1780வரை இந்தியாவிலிருந்த ஐரோப்பியர்கள் இங்கிலாந்திலிருந்து கப்பல் மூலம் வந்துசேரும் இதழ்களையே நம்பியிருந்தனர். இவ் இதழ்கள் இங்கிலாந்தில் வெளியாகி ஒன்பது முதல் பன்னிரண்டு மாத இடைவெளிக்குப் பிறகே இந்தியா வர நேர்ந்தது. இக்குறையினைப் போக்கும் விதத்தில் ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி கி.பி.1780இல் கொல்கத்தாவில் 'பெங்கால் கெசட்டி' என்னும் மாத இதழைத் தொடங்கினார். இவ்விதழ் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளது.

தொடக்க கால இதழின் போக்கு

பெங்கால் கெசட்டி ஆங்கில அரசு அதிகாரிகளின் முறையற்ற செய்திகளைக் கண்டித்து எழுதியது. குறிப்பாக,

இந்தியத் தலைமை ஆளுநர் வாரன்கேஸ்டிங், இந்திய உச்சநீதிமன்ற நீதிபதி எலிஜா இம்பே ஆகியோரைத் தாக்கி எழுதியது. இதன் காரணமாக இப்பத்திரிகை ஆட்சியாளரின் எதிர்ப்புக்கு உள்ளானது. இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியினர் பெங்கால் கெசட்டில் வெளிவந்த செய்திகளை ஆதாரமாகக் கொண்டு அவ்வரசைச் சாடினர். இதனால் ஜேம்ஸ் அகஸ்டஸ் உறிக்கிக்கு இந்தியாவில் இருந்த ஆங்கில அரசு அதிகாரிகள் பல தொல்லைகளைக் கொடுக்கத் தொடங்கினர். இந்தியாவில் முதல் இதழ் ஆசிரியரே வழக்கு மன்றம், அடிதடி, அச்சுறுத்தல், சிறைச்சாலை, தண்டம், நாடு கடத்தல் ஆகிய கொடுமைகளை எல்லாம் சந்திக்க நேர்ந்தது.

ஆங்கிலேயரான ஜேம்ஸ் அகஸ்டஸ் உறிக்கி அவர்கள் அச்சகம் நடத்துவதற்காகவும் இதழ் வெளியிடுவதற்காகவும் காப்பீட்டுத் தொகையாக ரூபாய் எட்டாயிரத்தை ஆங்கில அரசுக்குச் செலுத்தியிருக்கின்றார். ஆங்கில அரசு அதிகாரி களைப் பழித்து எழுதியமைக்காக ரூ.500 அபராதமும் நான்கு மாத சிறைத் தண்டனையும் பெற்றிருக்கின்றார். சிறைக்குச் சென்றபோதும் உறிக்கி அவர்கள் பெங்கால் கெசட்டைத் தம் போக்கிலேயே வெளியிட்டார். இதனால் மீண்டும் அவருக்கு ஆங்கில அரசு ரூ.5000 அபராதத் தொகை விதித்தது. அப்படியும் அவர் தம் போக்கிலிருந்து மாறாததால் கி.பி.1782இல் பெங்கால் கெசட் இதழின் அச்சுப்பொறிகளும் எழுத்துக்களும் பறிமுதல் செய்யப்பெற்று அச்சகம் மூடப்பெற்று முத்திரை வைக்கப் பெற்றிருக்கின்றது.

ஹிக்கியின் இதழ் ஆங்கில அரசு அதிகாரிகளின் குறைகளையே சுட்டிக் காட்டியது என்று குற்றம் சாட்டப் பெற்றது. என்றாலும், அவருக்குப் பின் தொடங்கிய ஆங்கி லேயர்களின் இதழ்களும் ஹிக்கியின் போக்கினையே கடை பிடித்தன. கிழக்கிந்தியக் கம்பெனி நிறுவாகத்தினர் மற்றும் அதிகாரிகளின் உல்லாச வாழ்க்கையினையும், அவர்களுடைய ஒரு சார்பு போக்கினையும், தங்களைச் சார்ந்து இல்லாதவர்கள் மீது அவர்கள் விடுத்த கொடுமைக் கணைகளையும் வெறுத்த

கம்பெனிப் பணியாளர்கள் தங்கள் மனக்குமுறலை வெளிக் காட்ட இதழ்களைப் பயன்படுத்திக் கொண்டனர். என்றாலும் உறிக்கிக்கு ஏற்பட்ட கொடுமை தங்களுக்கு நேரா வண்ணம் பார்த்துக்கொண்டனர்.

இதழ்களின் போக்கும் சட்டங்களும்

கி.பி.1812இல் கிறித்துவத் தமிழரால் சென்னையில் 'மாசத்தினச் சரிதை' என்னும் இதழ் நடத்தப்பெற்றிருக்கின்றது. ஒரு மாதத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் கால முறைப்படி செய்து மாத முடிவில் தினசரிச் செய்தியாக இவ்விதழ் வெளியிட்டது. இவ்விதழ் வெளியிட்ட அச்சுக்கூடத்தின் மூலம்தான் கி.பி.1812இல் 'திருக்குறள் மூலமும் நாலடியார் மூலமும்' என்னும் முதல் சுவடிப்பதிப்பு நூல் வெளிவந்து இருக்கின்றது. இவ்விதழின் இதழ்ப் பகுதிகள் எதுவும் இன்று கிடைக்கவில்லை என்றாலும் இதழ் இருந்தமைக்கான சான்று நமக்குக் கிடைத்திருக்கின்றது எனலாம்.

இந்நிலையில் கி.பி.1818இல் வில்லியம் பட்டர்வொர்த் பெய்லியின் 'தணிக்கைச் சட்டம்' நடைமுறைக்கு வந்தது. "அரசாங்கத்தில் நடைமுறைச் செயல்களுக்குத் தடையாகும் வகையில் வெளியிடப்படும் செய்திகளைத் தடுப்பதும், பொதுமக்களிடையில் அரசாங்கத்தைப் பற்றிய தவறான கருத்துகளைப் பரவச் செய்யும் வகையில் வெளியிடப்படும் செய்திப் பகுதிகளைத் தடுப்பதும், சமய உணர்வு காரணமாக எவர்க்குள்ளும் வேறுபாடுகள் வளர்ந்துவிடக் கூடாது என்று கருத்தாகப் பார்த்துக் கொள்வதும், இந்திய மக்களின் உணர்வுகள் பாதிக்காத வகையில் இயங்கச் செய்வதும், எங்கும் அமைதியான சூழ்நிலையை உருவாக்குவதுமே தணிக்கை முறையின் கடமைகளாக இருந்தன. இம்முறையில் இதழாசி ரியர்கள் பொதுவான தங்கள் பகுதிவாழ் மக்களின் பிரச்சனைகள் பற்றி விவாதிப்பதற்கும் சிந்திப்பதற்கும் தடைசெய்யப்பட வில்லை" (மேற்கோள், இந்திய இதழ்கள், ப.162).

இச்சட்டத்தை முழுமையாக உணர்ந்து கொண்ட இந்தியர்கள் சமுதாய சீர்திருத்தம், சமய மறுமலர்ச்சி போன்ற சிந்தனையில் ஈடுபட்டு எழுதலாயினர். இதனால் ஆங்கிலேயர் மனங்கோணாததைக் கண்டவர்கள் ஆங்கிலேயரைத் தாக்காமல் தங்கள் மதத்தைப் பற்றியும் சமயத்தைப் பற்றியும் பரப்புவதற்கு இதழ்களைப் பயன்படுத்திக் கொண்டார்கள். சிலர், ஆங்கிலக் கல்வியைப் பெறுவதிலும் ஆங்கில ஆட்சியியல் பற்றி அறிவதிலும் ஆர்வம் கொண்டவர்களாக இருந்திருக்கின்றனர். அவர்கள் ஆங்கிலேயரை அரவணைத்து இதழ்களை நடத்திச் சென்றிருக்கின்றனர். இன்னும் சிலரிடம் நம்மை ஏன் அவர்கள் ஆளவேண்டும், எங்கிருந்தோ வந்த வர்கள் நம்மைத் தாழ்த்துவதா, காலங்காலமாய் நம்முடைய சமயமாக இருந்துவரும் இந்து சமயத்தையும் அதன் நோக்கங் களையும் அறிவுரைகளையும் வந்தவர்கள் பழிப்பதா என்பன போன்ற எண்ணங்கள் மக்களிடையே உருவாயின. அக்கால இதழ்கள் இக்கருத்துக்களை மக்களிடையே எடுத்துச் சென்றன. வெளியாரின் உறவு நீக்கமே நம்மைக் காக்கும் என்னும் கருத்தினை அவை மக்களிடையே படிப்படியாக ஊட்டின. ஆங்கிலேயரை வெளியேற்றிவிட வேண்டும் என்னும் உணர்வின் எல்லைக்கு அவை செல்லவில்லை என்றாலும் தங்களுக்கிடையே உரிமைவேண்டும், தங்களைத் தாங்களே ஆண்டு கொள்ள வகை காணவேண்டும் என்று மக்களைத் தூண்டின. இந்நிலையில்,

1823 பிரெஞ்சு இந்திய அரசு நிர்வாக ஆவணம், புதுவை
1829 சுஜநரஞ்சனி, பெங்களூர்
1831 தமிழ் மேகசின், சென்னை
1832 புனித ஜார்ஜ் கெசட்டு, சென்னை
1833 இராசவிருத்தி போதினி, சென்னை
1835 மெட்ராஸ் கிரானிகல், சென்னை
1835 சத்திய தூதன், சென்னை
1835 மதராசு செர்னல் ஆப் லிட்டரேச்சர் அண்டு சயின்சு, சென்னை

1838 புதுவை நடுநிலை, புதுவை
1838 இந்திய ஞாயிறு, புதுவை
1838 விருத்தாந்தி, சென்னை
1840 பால தீபிகை, நாகர்கோவில்
1840 பொதுஜன பிரசாரணி, சென்னை
1841 ஜன சிநேகன், சென்னை
1842 சுவிசேச பிரபல விளக்கம், நாகர்கோவில்
1842 வர்த்தமான தரங்கிணி, சென்னை
1842 அரோரா, சென்னை
1847 திராவிட தீபிகை, சென்னை
1847 நற்போதகம், திருநெல்வேலி
1848 பாலியர் நேசன், பாளையங்கோட்டை
1849 நற்போதகம், திருநெல்வேலி
1849 சிறுபிள்ளையின் நேசத்தோழன், பாளையங்கோட்டை
1849 தரங்கை நேசன், சென்னை
1850 உதய நட்சத்திரம், சென்னை
1854 கிறிஸ்து மார்க்க விளக்கம், மதுரை
1855 தினவர்த்தமானி, சென்னை
1856 அரசிதழ்கள் (சென்னை, தென்னார்க்காடு, தஞ்சாவூர், திருச்சி,மதுரை, சேலம், கோவை திருநெல்வேலி, ஆகிய மாவட்டங்கள்)
1856 விவேக விலாசம்,
1856 சத்திய துவஜம்

போன்ற இதழ்கள் வெளிவந்திருக்கின்றன. இவற்றில் பெரும்பான்மையான இதழ்கள் ஆங்கிலேயரைச் சாடாமல் தான் உண்டு தன் சமயம் உண்டு என்று செல்வதையும், ஆங்கிலேயரின் கூற்றுக்கு மறுப்பு கூறாமல் அவர்களின் கருத்துக்களை அரவணைத்துச் செல்வதையும் தங்கள் குறிக்கோளாகக் கொண்டிருந்தன. இவ் இதழ்களுக்கிடையே சில இதழ்கள் ஆங்கிலேயரை நாட்டைவிட்டு வெளியேற்றிவிட வேண்டும் என்ற ஆதங்கத்தோடும் வெளிவந்திருக்கின்றன. இக்கால

கட்டத்தில் வெளிவந்த இதழ்களின் நோக்கங்களைக் கண்ட ஆங்கில அரசு கி.பி.1857ஆம் ஆண்டு **'வாய்ப்பூட்டுச் சட்டம்'** ஒன்றைக் கொண்டுவந்தது.

இச்சட்டத்தின்படி, "நேராகவோ, மறைபொருளாகவோ, குறிப்பாகவோ, உட்கருத்தாலோ வேறு எந்த விதத்தாலோ சில செயல்களை எழுப்பக்கூடிய எதையும் வெளியிடலாகாது" என்பதால், இந்தியர்கள் எவரும் இதழ்களை உரிமையோடு நடத்தமுடியாத சூழ்நிலை உருவாகிவிட்டது. ஆகவே, இந்தியர்களால் அரசியல் இதழ்களை நடத்தமுடியவில்லை. இருப்பினும், சிலர் இலக்கியம் - சமயம் - சமூகம் ஆகிய கெடுபிடியற்ற துறைகளில் தங்கள் எண்ணங்களைச் செலுத்தி இதழ்களை நடத்தத் தொடங்கினர். இந்நிலையில்,

1860 அமிர்த வசனி, திருச்சிராப்பள்ளி
1860 விவேக சிந்தாமணி, சென்னை
1860 கதா மஞ்சரி, சென்னை
1861 தேசோபகாரி, நெய்யூர்-குமரி மாவட்டம்
1861 சத்திய தீபம், சென்னை
1861 ஜனோபகாரப் பத்திரிகை, கள்ளிக்கோட்டை
1864 தத்துவ போதினி, சென்னை
1865 விவேக விளக்கம், சென்னை
1866 கலாவர்த்தினி, சென்னை
1867 சித்தாந்த ரத்னாகரம், சென்னை
1867 சன்மார்க்க விவேக விருத்தி, வடலூர்
1867 தேசாபிமானி, சென்னை

போன்ற இதழ்கள் வெளிவந்திருக்கின்றன. கி.பி.1864ஆம் ஆண்டு வெளிவந்த தத்துவபோதினி இதழின் நோக்கம் குறித்து 7.5.1864ஆம் இதழ்ப் பகுதியில் "நாம் நம்முடைய மதம் முழுமையும் கூண்டோடு கைலாசத்துக்குச் செலுத்த அன்னிய மதத்தார் பலவாறாய் முயற்சி செய்யும் இக்காலத்தில் நம்முடைய மதத்தை நிலை நிறுத்துவதற்காக என்னதான் செய்யலாகாது.

நம்முடைய மதத்தில் ஓரெழுத்துந் தெரியாது, தெளிவாய் அச்சிடப்பட்ட கிறிஸ்து மத புஸ்தகங்களைக்

கண்டும் பாதிரிகளுடைய ஆதாரமற்ற தூஷணைகளைக் கேட்டுமல்லவோ நம்முடைய சிறுவர்கள் மதிமயங்கிப் போகிறார்கள்.

இச்சமயத்தில் நாம் அசிரத்தையாயிருப்பது நியாயமா, தர்மமா, கடவுளுக்குத்தான் இஷ்டமா?

வேதார்த்தங்களை வெளிப்படுத்துவதற்கு இன்னும் பல ஹேதுக்களுளவாயினும் இது ஒன்றே போதுமானதாய் இருக்கிறது.

இதுதவிர, நமது தேசத்தாருக்குப் பிரயோஜனமாகும் பொருட்டு, பிரகிருதி சாஸ்திரம், பதார்த்த விக்கியான சாஸ்திரம், ராஜிய தந்திர சாஸ்திரம் முதலிய விஷயங்களில் இங்கிலீஷ் நூல்களின் பொருள்களைக் கூடிய வரையில் சங்கரகித்து, இந்தப் பத்திரிகை மூலமாய் நம்முடைய ஜனங்களுக்குத் தெரிவிக்க நிச்சயித்திருக்கிறோம்.

கடைசியாக நம்முடைய ஏற்பாடுகளிலும் ஆசாரங் களிலும், சாஸ்திரத்திற்கும் யுக்திக்கும் முற்றும் விரோதமாயும், நம்முடைய க்ஷேமத்திற்கும் விருத்திக்கும் ஹானியாயும் உள்ளவைகளைக் குறித்தும் பிரசங்கிக்கப்படும்.

நம்முடைய பாஷையில் வசன காவியமில்லாத குறையையும் கூடிய வரையில் பரிபூர்த்தி செய்ய நாங்கள் நிச்சயித்திருக்கிறோம்.

இந்தப் பத்திரிகையின் ஸ்வரூபத்தையும், உத்தேசி யத்தையும் பிரயோஜனத்தையும், நன்றாய்த் தேர்ந்து, நம்முடை யவர்கள் தகுந்தபடி இதை ஆதரிப்பார்களாகில், இதை பிரகிருதத்தில் யோசித்தவாறு மாதத்துக்கொருதர மாத்திர மின்றி இரண்டு அல்லது மூன்று தரம் பிரசுரம் செய்ய நிச்சயித் திருக்கின்றனம்” என்று பத்திரிகாசிரியர் குறிப்பிடுவதில் இருந்து அக்கால இதழின் போக்கு வெளிப்படுவதைக் காணலாம்.

இவ்விதழைத் தொடர்ந்து கி.பி.1866ஆம் ஆண்டு ‘கலா வர்த்தினி’ என்னும் இந்து சமய மாத இதழ் சென்னையிலிருந்து

வெளிவந்துள்ளது. இவ்விதழில் இந்து மத சித்தாந்தம், விரத மகிமைகள், புராணம், தர்க்கம், தமிழ் வைத்திய சாஸ்திரம், வான சாஸ்திரம், சங்கப்புலவர் வரலாறு போன்றவை இடம் பெற்றிருக்கின்றன. இந்தக் காலகட்டத்தில் மீண்டும் ஓர் இதழ்ச் சட்டம் கி.பி.1867ஆம் ஆண்டு கொண்டுவரப் பெற்று உள்ளது. இச்சட்டத்தின்படி அச்சகம் வைத்திருப்பவர் நீதிபதி ஒருவர் முன் உறுதிமொழிப் பத்திரம் கொடுக்கவேண்டும். அச்சக உரிமையாளரும் பதிப்பாளரும் அச்சு வெளியாகும் இடங்களை அரசுக்கு அறிவிக்கவேண்டும். அச்சிட்ட இதழ் களின் இரண்டு படிகளை அரசுக்கு அளிக்கவேண்டும். தவறுகின்றவர்களுக்கு ரூ.2000ம் தண்டம் அல்லது ஆறு மாத சிறைத் தண்டனை வழங்கப்படும் என்கின்றது. இச்சட்டம் கொண்டு வந்ததற்குப் பிறகு இந்தியர்கள் பலர் அச்சகங் களையும் இதழ்களையும் தொடங்கினர் என்றே சொல்லலாம்.

1868 சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்புச் சுருக்கம், சென்னை
1869 சூரியோதயம்
1870 நேடிவ் பப்ளிக் ஒபினியன்
1870 சத்திய தீபம், சென்னை
1870 சர்வ ஜன மனோரஜ்சனி
1870 பிரம்ம தீபிகை, சென்னை
1870 விவேக விளக்கம், சென்னை
1871 ஆந்திர பாசா சஞ்சீவினி, சென்னை
1871 சுகிர்த வசனி, சென்னை
1871 போலீசு வீக்லி சர்குலர், சென்னை
1871 வர்த்தமான தரங்கிணி, சென்னை
1872 வியவகார தரங்கிணி, சென்னை
1873 தேச பூசணி, சென்னை
1874 திருவாங்கூர் அபிமானி, நாகர்கோவில்
1877 சித்தாந்த சங்கிரகம்

போன்ற பொதுஜன இதழ்களும்,

1868 முதலாயிரம், சென்னை
1870 மகாபக்த விஜயம், சென்னை
1870 கதா சிந்தாமணி, சென்னை
1872 உண்மை விளக்கம், சென்னை
1876 மச்ச புராணம், சென்னை
1877 வால்மீகி இராமாயண வசனம், சென்னை
1877 திருவாய்மொழி, சென்னை
1877 பராசுர சுமிருதி, சென்னை

போன்ற நூலிதழ்களும் வெளிவந்துள்ளன. 1870இல் முதல் மருத்துவ இதழான 'அகத்தியர் வர்த்தமானி' சென்னையில் இருந்து வெளிவந்துள்ளது. சமய இதழ்களாக,

1870 பிரம்ம தீபிகை, சென்னை
1870 விவேக விளக்கம், சென்னை
1870 ஞானபாநு, சென்னை
1877 பழநி தல விநோதம்

போன்றவை வெளிவந்துள்ளன.

இவ்வாறு இந்தியர்கள் பொதுஜன, சமய, மருத்துவ, இலக்கிய இதழ்களை வெளியிட்டு வரலாயினர். கி.பி.1878ஆம் ஆண்டு 'இந்தியமொழி இதழ்ச்சட்டம்' (The Vernacular Press Act) ஒன்றை லிட்டன்பிரபு அவர்கள் கொண்டுவந்துள்ளார். இச்சட்டத்தின்படி, இதழ்கள் குறிப்பிட்ட தொகையைப் பிணையாகக் (Deposit) கட்டவேண்டும். அரசாங்கத்தின் மீது வெறுப்பு உண்டாகுமாறு எழுதக்கூடாது. இனம், மதம், சாதி இவற்றின் அடிப்படையில் கலவரத்தைத் தூண்டும் முறையில் செய்திகள் வெளியிடக்கூடாது. நீதிபதி அல்லது காவல்துறை அதிகாரியிடம் உறுதிமொழிப் பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும். இவ்விருவருக்கும் இதழ்களைப் பறிமுதல் செய்யும் அதிகாரம் உண்டு. இந்நடவடிக்கைகளை எதிர்த்து வழக்கு மன்றம் போகமுடியாது. இச்சட்டத்தை மீறுபவர்களுக்கு முதலில் எச்சரிக்கையும், மீண்டும் தொடர்ந்தால் பிணையத்

தொகை இழப்பும், அதன் பின்னரும் தொடர்ந்தால் அபராதத் தொகையையோ அல்லது சிறைத்தண்டனையோ விதிக்கப் படும் என்ற கடுமையான சட்டத்தினால் மக்கள் அரசியல் இதழ் நடத்துவதை விட்டுவிட்டு அரசாங்க எதிர்ப்பு இல்லாத துறைகளில் இதழ்களை வெளியிடத் தலைப்பட்டனர். இந்நிலையில்,

1878 மகாபாரத வசனம்
1878 பாகவத புராண வசனம்
1878 குருபரம்பரா பிரபாவம்
1880 மார்க்கண்டேய புராணம்
1880 திருப்பாவை
1880 முதலாயிர வியாக்கியானம்
1881 பரதத்துவப் பிரகாசிகை
1881 தேவாரப் பதிகத் திருமுறைகள்
1881 பெரிய திருமொழி
1882 இயல்பா-முதல் திருவந்தாதி
1882 நாலாயிரதிவ்விய பிரபந்தம்
1882 முதலாயிரம்
1883 பகவத் விஷயம்
1883 நாச்சியார் திருமொழி
1883 திருவிளையாடற் புராணம்
1883 பெரிய புராணம் உரையுடன்
1884 கூர்ம புராணம்
1884 பெரிய புராணம் உரையுடனும் விளக்கங்களுடனும்

போன்ற நூலிதழ்களை வெளியிடுவதில் அதிக கவனம் செலுத்தியிருக்கின்றனர் எனலாம். இதனால் நூல்களை வெளியிட்ட பெருமையையும் இதழ்கள் அடைந்திருக்கின்றன என்றால் அது மிகையல்ல.

இப்படியாக ஆங்கில அரசின் அடக்குமுறை இதழியல் சட்டங்களால் மக்களின் உள்ளக்குமுறலில் இருந்த சுதந்திர வேட்கை மறைமுகப் பத்திரிகைகள் மூலம் வெளிப்படலாயின.

விடுதலைப் போராட்டக் காலத்தில் தேசபக்தர்களைத் திரட்டும் கருவியாக பல இதழ்கள் தோன்றியிருக்கின்றன. இவ்வாறு உருவான இதழ்களைத் தடுக்க ஆங்கில அரசு பல்வேறு வகையான அடக்குமுறைகளைக் கையாண்டுள்ளது. "அச்சகங்கள் வைத்திருப்பவர்கள் இதழ்கள் நடத்த முன் வந்தாலோ உதவி செய்தாலோ அவர்களது உடைமைகள் பறிக்கப் படுவதுடன் உயிர்களும் பறிக்கப்படும்" என்று தமக்கெதிராக இதழ் நடத்துபவர்களுக்கு எச்சரிக்கையும் விடுத்திருக்கிறது.

சுதந்திரம் நமது பிறப்புரிமை என்று கொண்ட மக்கள் ஆங்கில அரசுக்குத் தெரியாமல் பல இதழ்களை நடத்தி யுள்ளனர். "பிரிட்டிஷ் ஆதிக்கத்தினால் கடுமையாகச் சுரண் டப்பட்ட ஜமைக்கா மக்கள் தங்களது பத்திரிகைகளை இரக சியமாக உருவாக்கிக் கொண்டனர். இப்படி வெளியான ஜமைக்கா பத்திரிகைகளின் வரலாறு சுவையானது. பகலில் விவசாயிகளாக பணியாற்றுகின்றவர்கள் இரவில் அச்சக ஊழியர்களாக மாறி பத்திரிகைகளை உருவாக்கினர். இப்படி உருவாக்கப்பட்ட பத்திரிகைகளைத் தபால் மூலம் அடுத்த ஊர்களுக்கு அனுப்புவதில்லை. விவசாய காரியங்களுக்காக வெளியூர் செல்பவர்கள் பத்திரிகைகளைக் கொண்டுபோய்க் கொடுப்பார்கள். அவர்கள் படித்த பிறகு அதே பத்திரிகையைப் பக்கத்து ஊருக்கு அனுப்பி வைப்பார்கள். இப்படி ஒரே பத்திரிகை பல ஊர்களுக்குப் பயணம் செய்யும்" (உலகப் பத்திரிகைகளின் தோற்றமும் வளர்ச்சியும், ப.100) என்ற ஜமைக்கா மக்களின் போக்கில் இந்திய இதழ்கள் பல மறைமுக மாக வெளிவந்து சுதந்திர வேட்கையைத் தூண்டின எனலாம்.

இந்தியா சுதந்திரம் அடைந்ததற்குப் பிறகு கி.பி. 1954ஆம் ஆண்டு Delivery of Books Act கொண்டுவரப்பெற்றது. இச்சட்டத்தின்படி இந்தியாவில் உள்ள சில முக்கிய நூலகங் களுக்கும் Registrar of Booksக்கும் ஒவ்வொரு படி அனுப்பி வைக்க வேண்டும் என்று விதிக்கப்பெற்றது. இதன்படி கொல்கத்தா நேஷனல் நூலகம், மும்பை மைய நூலகம், சென்னை கன்னிமாரா நூலகம், புதுதில்லி பொதுநூலகம்

மற்றும் அந்தந்த மாநில Registrar of Booksக்கும் அனுப்பிப் பதிவு செய்திடவேண்டும். இச்சட்டத்தின் தொடர்ச்சியாக கி.பி.2002ஆம் ஆண்டு இச்சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப் பெற்றுள்ளது. அதாவது, மேலே குறிப்பிட்ட ஐந்து இடங்க ளோடு புதுதில்லியிலுள்ள பாராளுமன்ற நூலகத்திற்கும் ஒரு படி அனுப்பிவைக்க வேண்டும் என்று இந்திய அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இதழியல் வரலாற்றில் பருவ இதழ்கள்

இதழை 'Journal' என்றும், செய்தியை 'News' என்றும் ஆங்கிலத்தில் குறிப்பிடுகின்றோம். சென்னைப் பல்கலைக்கழக 'ஆங்கிலம்-தமிழ் சொற்களஞ்சியம்' எனும் நூலில் 'Journal'யை "நாட்குறிப்புச்சுவடி, அன்றாட நடப்புக் குறிப்பு, தொழிற் கணக்கு முறையில் நாளேடு, செய்தித்தாள், பத்திரிகை, குறிப்புப் புத்தகம்" (ப.552) என்றும்; 'News'யைச் "செய்தி, புதுத்தகவல், புதிய நிகழ்ச்சிகளின் விவரம்" (ப.666) என்றும் குறிப்பிடுவதைக் காணும்போது Journal மற்றும் News ஆகிய இரண்டும் செய்தியைக் குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

செய்தியை ஆங்கிலத்தில் News என்பதைப் போல் அதற்குச் சொல்லும் விளக்கமும் விசித்திரமாகவே இருக்கிறது. "N - வடக்குத் திசையையும் (North), E - கிழக்குத் திசையையும் (East), W - மேற்குத் திசையையும் (West), S - தெற்குத் திசையையும் (South) குறிக்கின்றது. நான்கு திசைகளிலிருந்து வருவதைத்தான் 'News' என்கின்றனர்" என்பார் பேராசிரியர் சு. சக்திவேல் (இதழியல், ப.11). ஆக, இதழானது நான்கு திசைகளிலிருந்து கிடைக்கக் கூடிய செய்திகளின் பேழை எனலாம்.

இதழியலின் தோற்றம்

தொன்றுதொட்டே நம்மிடம் இதழியல்துறை இருந்து உள்ளது. மனிதனின் தோற்றத்தோடு இவ்வியலும் பிறந்தது எனலாம். கூட்டுவாழ்க்கையில் மனிதன் ஈடுபட்ட காலத்தி லிருந்தே மனிதர்கள் செய்திகளைப் பரிமாறிக்கொள்ளத்

தொடங்கினர். முதலில் மனிதன் ஓசையெழுப்பிப் பேசுவதற்கு முன்பு செய்கைகளின் மூலம் தம் கருத்தைப் பிறருடன் பரிமாறிக்கொண்டான். அதன் பிறகு சீழ்க்கை ஒலியாலும், பறையறைவித்தும், மணியடித்தும், புகையெழுப்பியும், தீயம்புகளை வானத்தில் எறிந்தும் ஓரிடத்தில் நடப்பதை சுற்று வட்டாரத்து மக்களுக்கு அறிவிக்கும் பழக்கம் தோன்றியது. பின்னர் மனிதன் உணர்ச்சியின் உந்துதலால் தனது குரல் வளத்தைப் பயன்படுத்திச் சிலவகையான ஒலிகளை எழுப்பி னான். உணர்ச்சியொலியாலும், போலியொலியாலும், குறிப் பொலியாலும் தம்கருத்தை வெளிப்படுத்தினான். இம்மூன்று வகை ஒலிகளினால் மனிதனுடைய பேச்சு நாளடைவில் நன்றாகச் சீர்திருத்தி - பண்பட்டு - மொழி, எழுத்து வடிவாகத் தோன்றியது.

இவ்வாறு உருவான எழுத்து கல்வெட்டாகவும், செப்பேடாகவும், ஓலைச்சுவடியாகவும் உருவாகின. அரசர்கள் தங்களது அறிக்கைகளையும் கட்டளைகளையும் ஓலை, தோல், துணி போன்றவற்றில் குறிக்கச் செய்து தம் குடிமக்களுக்கு அறிவித்தனர். குறிப்பாகத் துணியால் எழுதப்பெற்ற அரசின் செய்திகள் பொதுவிடங்களில் வைத்து மக்களுக்கு அறிவித்தனர். காதலர்கள் தங்கள் அன்பைப் பல வழிகளில் புலப்படுத்தி யுள்ளனர். சான்றாக, மாதவி பிரிந்து சென்ற கோவலனுக்குத் தாழம்பூவின் தோட்டில், பித்திகையின் முகையாகிய எழுத்தாணியால் செம்பஞ்சுக் குழம்பில் தோய்த்து மடல் வரைந்து வசந்தமாலையிடமும் மாடலனிடனும் கொடுத் தனுப்பினாள் என்று சிலப்பதிகாரம் (வேனில் காதை, வரி.45-71) சுட்டும். இம்மடலைத் 'திருமுகம்' என்பர். சகுந்தலை தாமரை இலையின் பின்புறத்தில் நகத்தால் கீறித் தனது காத லுணர்ச்சிகளைத் துஷ்யந்தனுக்குப் புலப்படுத்தினாள் என்று சாகுந்தலம் உணர்த்துகின்றது.

மேலும், பழங்காலத்தில் செய்திகளை எழுதித் தெரிவிப்பதைவிட பறையறைந்து (திருமணம், படையெடுப்புச் செய்திகள்) சொல்வதையே வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

இதற்கு நம் பழந்தமிழ் இலக்கியங்களில் பல சான்றுகள் இருக்கின்றன. செங்குட்டுவன் சிலைக்குக் கல் எடுக்க இமயமலை செல்ல எத்தனித்தபோது 'அமைச்சன் அழும்பில் வேள்' என்பான்,

"நாவலம் தண்பொழில் நண்ணார் ஒற்றுநம்
காவலர் வஞ்சிக் கடைமுகம் பிரியா;
வம்பு அணியானை வேந்தர் ஒற்றே
தம்செவிப் படுக்கும் தகைமைய அன்றோ?
அறைபறை என்றே அழும்பில்வேள் உரைப்ப"

(சிலப்.காட்சிக்., வரி.173-177)

என்று பறையறைந்து வடதிசை செல்வதைச் சொல்லலாம் என்கின்றார். பின் வள்ளுவன் பட்டத்து யானை மீதேறி பறை அறிவித்தான். இதனைச் சிலம்பு,

"இறையிக லியானை யெருத்தத் தேற்றி
அறைபறை எழுந்ததால் அணிநகர் மருங்கென்"

(காட்சி, 263-264)

என்கின்றது. அரசுச் செய்திகளை முரசறைந்து அறிவிப்பவனை 'வள்ளுவ முதுமகன்' (பெருங்கதை) என்பர். புனல்நெல்லையும் நெற்கதிரையும் நனைத்த செய்தியைத் துடிமூலம் மற்றவர்க்கு அறிவித்ததைப் பரிபாடல்,

"அகவயல் இளநெல் அரிகால் சூடு
தொகுபுனல் பரந்தெனத் துடிபட" (பரி.7:27-28)

என்றும், மதம் கொண்ட யானை தெருவில் செல்வதைப் பறையறைந்து தெரிவித்ததைப் பதிற்றுப்பத்து - மூன்றாம்பத்து (22)ம், சிலப்பதிகாரம் அடைக்கலக் காதை (46)யும் உணர்த்து கின்றன. முதுகுடிப் பிறந்தோனாகிய வள்ளுவன் யானை மீதேறி ஊரையும் மன்னனையும் வாழ்த்தி முரசறைந்ததை மணிமேகலை,

"வச்சிரக் கோட்டத்து மணங்கெழு முரசம்
கச்சை யானைப் பிடர்த்தலை யேற்றி
ஏற்றுரி போர்த்த இடியுறு முழக்கின்
கூற்றுக்கண் விளிக்குங் குருதி வேட்கை

முருகுகடிப் படூஉம் முதுகுடிப் பிறந்தோன்
திருவிழை மூதூர் வாழ்கென் றேத்தி
வான மும்மாரி பொழிக மன்னவன்
கோள்நிலை திரியாக் கோலோ னாகுக"

(மணிமேகலை, விழா.27-31)

என்று சுட்டுகின்றது. அதியமான் நெடுமானஞ்சி ஔவையைத் தூது விட்டதையும் (புறம்.95), பிசிராந்தையார் கோப்பெருஞ் சோழனிடம் அன்னச் சேவலைத் தூது விட்டதையும் (புறம்.67) காணலாம். மேலும், திருவள்ளுவர் 'தூது' என்ற அதிகாரமே எழுதியுள்ளார். திருவள்ளுவர் 'ஒற்றாடல்' (59) என்னும் அதிகாரத்தில் ஒற்று, ஒற்றர்கள் பற்றியும் விளக்கியுள்ளார்.

மேற்காணும் இவைகளெல்லாம் பண்டைக்காலத்துத் தகவல் தொடர்புச் சாதனங்கள் என்றே சொன்னாலும், இவைகளே, இதழியலின் தோற்றமாகத் திகழ்கின்றன. கி.பி. 3ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த, அசோகர் கல்வெட்டுக்களில் தம் ஆணைகளையும், அறிக்கைகளையும், அறிவுரைகளையும், புத்தரின் கொள்கைகளையும் பொறித்தார். "ரோம் நாட்டை ஆண்ட ஜூலியஸ் சீசர் கி.மு.60இல் அரண்மனைச் செய்திகளை 'ஆக்டா டைர்னா' என்ற பெயரில் எழுதிப் பொது இடங்களில் வைத்தார். அவர் போரிட்டுக் கொண்டிருந்த பொழுது, போர்ச் செய்திகளைத் தலைநகருக்கு அனுப்பிவைத்தார். இதனால் சீசரை 'இதழியலின் தந்தை' என்று அழைக்கின்றனர். ஆனால் சிலர், சீசருக்கு முன்பே கி.மு.106இல் சிசரோ பிறப்பு-இறப்பு விவரங்களை எழுதித் தனது அரண்மனைக்கு முன்னால் பலரும் பார்க்க அறிவித்தாரென்றும், ஆதலால் அவரையே இதழியலின் முன்னோடியாகக் கருதவேண்டு"மென்றும் க. குளத்தூரான் அவர்களின் கருத்தை டாக்டர் மா.பா. குருசாமி அவர்கள் (இதழியல் கலை, பக்.40-41) மேற்கோளாகக் காட்டியுள்ளார். இவற்றினைப் பார்க்கும்போது, உலக இதழியலின் தந்தையாக சிசரோவையும், இந்திய இதழியலின் தந்தையாக அசோகரையும் குறிப்பிடலாம்.

அச்சுக்கலையும் இதழ்களின் தோற்றமும்

மொழியை ஏற்படுத்தி, அதனைப் புலப்படுத்த மனிதன் பலவகையான எழுது பொருள்களையும் எழுதப்படு பொருள் களையும் கண்டுபிடித்தான். எழுதப்படு பொருள்களாக கோரைப்புல், களிமண், மூங்கில் பத்தை, பட்டுத்துணி, கல், மரப்பட்டை, பனையோலை, செப்புத்தகடு, தோல், தங்கத் தகடு, வெள்ளித்தகடு போன்றனவும், எழுது பொருள்களாக தடித்த கூர்மையான நாணல் குச்சி, செடிகொடிகளின் சாறு, மிருகத்தின் இரத்தம், கூரான இரும்புக் கருவி, தூரிகை, உளி போன்றனவும் பயன்பட்டுள்ளன.

இவ்வாறு இப்பொருள்களில் பொறிக்கப்பட்டு வந்த செய்திகள் காகிதத்தின் வரவுக்குப் பிறகு இவற்றின் போக்கே மாறிவிட்டது. காகிதத்தின் வரவும் அச்சுப்பொறியின் கண்டு பிடிப்பும் இத்தகவல் சாதனப் போக்கின் திசையை முற்றிலும் மாற்றிவிட்டது. கி.பி.105இல் மல்பெரி மரப் பட்டையி லிருந்து சாய்லன் என்ற சீனாக்காரரர் முதன் முதலாக காகிதம் செய்வதைக் கண்டுபிடித்தார். சீனர்களோடு வாணிபம் செய்த உலக மக்கள் காகிதம் செய்யும் கலையைக் கற்றுச் சென்றனர். கி.பி.795இல் அரேபியர்கள் பாக்தாத்தில் காகிதம் செய்யும் ஆலை ஒன்றை நிறுவினர்.

அச்சுக்கலையும் முதன்முதலில் சீனாவில் தான் தோன்றியது. அவற்றில் மை தடவித் தாளில் 'அழுத்தி' (press) அச்சிட்டனர். அச்சகத்திற்குப் 'பிரஸ்' என்று பெயர் வந்ததற்கும் இதுவே காரணமாகும். கி.பி.1041இல் பிசெங் என்ற சீனாக்காரரர் களிமண்ணில் எழுத்துக்களைச் செய்து சுட்டு, தகடு சுத்தி, கடினப்படுத்தி, அச்சிடும் முறையைக் கொண்டு வந்தார். அதன்பின்பு அச்சுக் கலையில் புரட்சி ஏற்பட்டது. கி.பி. 1450இல் ஜான் கூடன்பர்க் என்ற ஜெர்மானியர் முதன் முதலில் அச்சுப் பொறியினைக் கண்டுபிடித்தார்.

காகிதமும் அச்சு எந்திரமும் கண்டு பிடிக்கப்பட்ட பின்பு இதழ்களின் வளர்ச்சி தொடங்குகின்றது எனலாம்.

ஜெர்மனி நாட்டில் மெயின்ஸ் நகரில் பிறந்த ஜான்கூடன்பர்க் தனித்தனி உலோக அச்சு எழுத்துக்களைக் கண்டுபிடித்த போது அச்சுப்பொறியையும் கண்டுபிடித்தார். அச்சுக் கலையின் தந்தை எனப் போற்றப்படும் அவர் கி.பி.1455இல் 'கீர்த்தனைகள்' என்ற புத்தகம் முழுமைபெற அச்சு எழுத்துக்களைப் பயன் படுத்தினார். இதுவே அச்சில் வெளியான முதல் புத்தகமாகும். உலோக அச்சு, அச்சுப்பொறி, அச்சுப் புத்தகம் ஆகிய மூன்றி னுக்கும் 'ஜான்கூடன்பர்க்' தந்தையாவார். அதன் பின்பு இத்தாலியில் கி.பி.1465லும், பிரான்சில் கி.பி.1470லும், ஸ்பெயினில் கி.பி.1474லும், இங்கிலாந்தில் கி.பி.1477லும், டென்மார்க்கில் கி.பி.1482லும், போர்ச்சிகலில் கி.பி.1495லும், ரஷ்யாவில் கி.பி.1553லும் அச்சுக்கலை பரவியது.

இந்தியாவில் கி.பி.1556ஆம் ஆண்டு கோவாவில் முதலாவது அச்சுக்கூடம் தோன்றியது. இங்குக் கி.பி.1557இல் 'தம்பிரான் வணக்கம்' என்ற தமிழ் நூல் அச்சிடப்பட்டது. இதற்குமுன், கி.பி.1498இல் வாசுகோடகாமா சேர நாட்டில் உள்ள கள்ளிக்கோட்டைக்கு வந்து சேர்ந்தார். கி.பி.1550இல் அம்பலக்காட்டில் திருச்சபை ஒன்றை நிறுவினார். இச்சபையில் பயன்படுத்துவதற்காக கி.பி.1554இல் இலிச்பனில் (போர்த்துக்கல்) 'கார்த்தில்யா' என்ற 38 பக்கத் தமிழ் நூல் ரோமன் எழுத்துக்களில் அச்சாயிற்று. இதுதான் முதல் தமிழ் அச்சுநூல்.

கி.பி.1577இல் கொல்லத்திற்கு ஓர் அச்சகம் வந்தது. அங்கு கி.பி.1578ஆம் ஆண்டு மீண்டும் 'தம்பிரான் வணக்கம்' அச்சானது. கி.பி.1578இல் திருநெல்வேலி புன்னைக்காயலில் ஓர் அச்சுக்கூடம் நிறுவப்பட்டது. இங்குத் 'தமிழ் அச்சுத்தந்தை' என்று போற்றப்படும் திருத்தந்தை அண்டிறீக் எழுதி அச்சிட்ட 'அடியார் வணக்கம்' எனும் நூல் கி.பி.1586இல் அச்சானது. அதன்பிறகு கி.பி.1674ஆம் ஆண்டு பம்பாயிலும், கி.பி.1679ஆம் ஆண்டு கேரளாவிலுள்ள அம்பலக்காட்டிலும் அச்சுக்கூடங்கள் நிறுவப்பட்டன. கி.பி.1712ஆம் ஆண்டு தமிழ்நாடு-தஞ்சை

மாவட்டம் - தரங்கம்பாடியில் ஓர் அச்சுக்கூடம் நிறுவப்பட்டது. கி.பி.1713இல் இங்குத் தமிழ் எழுத்துக்கள் வார்க்கப்பட்டன. கி.பி.1715இல் தாள் ஆலையும் நிறுவப்பட்டது. இப்படித் தரங்கம்பாடியில் அச்சு எந்திரம், அச்சு வார்ப்பு, தாள் ஆலை என மூன்றும் ஒருசேர இருந்து இந்தியாவின் அச்சுக் கலைக்கு வித்தாய் அமைந்திருந்தது. சீகன்பால்கு என்ற கிறித்துவத் துறவி 'நற்செய்தி'யை (பைபிள்) முதன் முதலில் தமிழ்ப்படுத்தினார். இந்நூல் கி.பி.1715இல் தரங்கம்பாடியில் அச்சாயிற்று. இந்நூலுக்காகவே அச்சு வார்ப்பாலையும், அச்சுத் தாள் ஆலையும் தரங்கம்பாடியில் நிறுவப்பட்டது குறிப்பிடத் தக்கது.

இப்படியாக அச்சுக்கலையின் தொடக்க காலத்தில் கிறித்துவ சமயப் பரப்பலுக்கான நூல்களே வெளிவந்துள்ளன. இந்தியாவில் - ஏன் உலக அளவிலும் அச்சகங்கள் தோன்றி, பல ஆண்டுகள் கழித்தே இதழ்கள் தோன்றியுள்ளன.

பருவ இதழ்

ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் வெளிவருவதைக் 'கால இதழ்' (Periodical) அல்லது 'பருவ இதழ்' (Magazine) எனலாம். இதனை, "Magazines and Periodicals and bound, paper-covered publications issued regularly. Usually weekly, fort-nightly, monthy or quarterly" (Lexicon Universal Encyclopedia) என்பர். வார இதழ், திங்கள் இருமுறை இதழ், திங்கள் மும்முறை இதழ், திங்களிதழ், இரு திங்களிதழ், முத்திங்களிதழ், நாற்றிங்களிதழ், அரையாண்டிதழ், ஆண்டிதழ் என உறுதி செய்யப்பெற்ற காலங்களில் தொடர்ந்து வெளிவருவதைப் 'பருவ இதழ்' என்று கூறலாம்.

'சென்னைப் பல்கலைக்கழக ஆங்கில-தமிழ் சொற் களஞ்சியம்' 'Periodical' என்பதைப் பத்திரிகை, பருவ இதழ் என்று குறிப்பிடுகின்றது. சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூல் நிலைய அரையாண்டு வெளியீட்டிற்கு 'அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ்' என்றும், தஞ்சை

சரஸ்வதிமகால் நூல் நிலைய நாற்றிங்கள் வெளியீட்டிற்குச் 'சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ்' என்றும் குறிப்பிடுவதி லிருந்து 'பருவ இதழ்' என்ற சொல்லானது காலமுறை இதழைச் சுட்டுவது அறியப்பெறுகிறது. எனவே, காலமுறை இதழ்தான் இங்குப் 'பருவ இதழ்' என்று சுட்டப்பெறுகிறது.

ஓலையும் ஏடும் மிகப்பழமையான சொற்கள். புல்லினத்தின் உறுப்புகளைத் தொல்காப்பியர்,

"தோடே மடலே ஓலை என்றா
ஏடே இதழே பாளை என்றா
ஈர்க்கே குலையென நேர்ந்தன பிறவும்
புல்லொடு வருமெனச் சொல்லினர் புலவர்"

(தொல். மரபியல், நூ.88)

எனும் நூற்பாவால் தோடு, மடல், ஓலை, ஏடு, இதழ் என்பன பனை, தெங்கு, கமுகு முதலியவற்றின் இலைகளைக் குறிப்பிடு கின்றன என்கின்றார். இத்தகு ஓலைகளில், ஏடுகளில், மடல்களில் நூல்கள் எழுதப்பெற்றன. ஆதலின் எழுதப்பெற்ற ஓலைகளும் ஏடுகளும் கூட தோடு, மடல், ஓலை, ஏடு, இதழ் என்றே அழைக்கப்பெற்றன.

"வடமொழி வாசகஞ் செய்த நல்லேடு" (சிலப்., 15:58)

என்பது எழுதப்பெற்ற ஓலையேட்டையும்,

"பொருவருங் கவிதை யேட்டைப் போற்றிமுன்"
(திருவிளை. கிழியறுத்த படலம், பா.11)

என்பது கவிதை எழுதப்பெற்ற ஓலையேட்டையும்,

"நீடுமெய்ப் பொருளின் உண்மை
நிலைபெறுந் தன்மை யெல்லாம்
ஏடுற வெழுதி"
(திருத்தொண்டர் புராணம் - திருஞான., பா.796)

என்பது எழுதவிருக்கும் ஏட்டையும்,

"ஏட்டுப்பொறி நீக்கி, மெல்லென விரித்து"
(பெருங்கதை, 4:10:109-110)

"இறைவரும் கைவிடார் ஏடவர்பால் சென்ற
பிறரும் அறிந்து இன்பம் பெறலால்"

(முதுமொழி மேல்வைப்பு, பா.69)

"ஆற்றல ழியுமென் றந்தணர்க ணான்மறையைப்
போற்றியுரைத் தேட்டின் புறத்தெழுதா ரேட்டெழுதி
வல்லுநரும் வல்லாரும் வள்ளுவனார் முப்பாலைச்
சொல்லிடினு மாற்றல்சோர் வின்று"

(திருவள்ளுவமாலை, பா.15)

"வேகவதிக் கெதிரேற விட்டதொரு சிற்றேடு"

(மனோன்மணீயம், 4:29)

போன்றன எழுதிய ஓலையையும் சுட்டுதல் காணலாம். பழங்காலத்தில் ஏடு, ஓலை, இதழ் என்று வழங்கி வந்தவை இன்று இதழாகக் காணப்படுகின்றன. இதழை 'Journal' என்று ஆங்கிலத்தில் குறிப்பிடுகின்றனர். சென்னைப் பல்கலைக்கழக ஆங்கிலம்-தமிழ் சொற்களஞ்சியம் 'Journal'லை நாளேடு, செய்தித்தாள், பத்திரிகை என்கின்றது.

பருவம் என்னும் சொல் காலத்தைக் குறிக்கும். இதற்குப் பழந்தமிழ் இலக்கியத்தில் பல சான்றுகள் மண்டிக் கிடக்கின்றன. அவற்றுள் சில,

"இவை பாராட்டிய பருவமு முளவே" (அகம். 26:11)

என்பது காலத்தையும்,

"ஆதவம் பனிமழை யனிலத் தச்சுறாப்
பாதவ மாமெனப் பருவ மாறினும்
பேதைபங் குடையவெம் பிரானை யுன்னியே
மாதவம் புரிந்தனன் மதலை வேண்டியே"

(கந்த., அசுர. மார்க்கண்., பா.176)

என்பது ஓராண்டுக்குண்டான கார்காலம், கூதிர்காலம், முன்பனிக்காலம், பின்பனிக்காலம், இளவேனிற்காலம், முதுவேனிற்காலம் ஆகிய ஆறு காலங்களையும்,

"காசறு துறவின் மிக்க கடவுளர் சிந்தை போல
மாசறு விசும்பின் வெய்யோன் வடதிசை யயண முன்னி
ஆசற நடக்கு நாளு ளைங்கணைக் கிழவன் வைகிப்
பாசறைப் பரிவு தீர்க்கும் பங்குனிப் பருவஞ் செய்தான்"
(சீவக. பா.851)

என்பது ஆண்டுக்குண்டான பன்னிரண்டு திங்களில் ஒன்றான பங்குனித் திங்களைப் பங்குனிப் பருவம் என்று கூறியதால் பருவம் என்பது திங்க(மாதம்)ளாவதையும்,

"கொடுத்தலும் துய்த்தலும் தேற்றா இடுக்குடை
உள்ளத்தான் பெற்ற பெரும்செல்வம், இல்லத்து
உருவுடைக் கன்னியரைப் போலப் பருவத்தால்
ஏதிலான் துய்க்கப் படும்" (நாலடி. பா.274)

என்பது தக்க காலத்தையும்,

"பருவமொ ராயிரந் தீர" (கம்ப. அகலி., பா.28)

என்பது ஆண்டையும் குறிப்பதாக இலக்கியங்கள் குறிப்பிடு கின்றன. ஆகப் பருவம் என்பது காலத்தை அடிப்படையாகக் கொண்டது என்பது தெளிவு. இன்று தாளில் எழுதப்பெற்று அல்லது அச்சடிக்கப்பெற்று ஒரு குறிப்பிட்ட கால இடை வெளியில் வெளிவருவதை ஏடு என்றும், இதழ் என்றும் அழைக்கின்றனர். அதாவது, நாளேடு, வாரயேடு, திங்களேடு என்பன நாளிதழ், வார இதழ், திங்ளிதழ் என்றழைக்கப் படுவதால் அறியலாம். பழங்காலத்தில் எழுதப்பெற்று ஏடாகக் குறிப்பிட்டதை இன்று அச்சடித்த இதழாகவும் நூலாகவும் கருதுகின்றனர்.

உலகப் பருவ இதழ்கள்

கி.பி.1480ஆம் ஆண்டிலேயே ஆஸ்திரியாவில் அச்சகங்கள் இயங்கத் தொடங்கிவிட்ட போதிலும் லைனர்ஜெய்டாஸ் என்ற வார இதழ் கி.பி.1605ஆம் ஆண்டில் வெளிவந்தது. இதுவே, உலகத்தின் முதல் வார இதழாகும். இவ்விதழ் கி.பி.1714ஆம் ஆண்டில் வளர்ச்சியுற்று நாளிதழாக

மாறியது. உலகத்தில் பிரசுரமான முதல் நாளிதழும் இதுதான். இனி உலகெங்கும் தோன்றிய முதல் இதழ்களைக் காலநிரல்படி வரிசைப்படுத்திப் பார்ப்போம். 'உலகப் பத்திரிகைகளின் தோற்றமும் வளர்ச்சியும்' எனும் நூலில் கூறப்பெற்றுள்ள கருத்துகளின் அடிப்படையில் இவ்வாண்டு நிரல் அமைக்கப்பெற்று உள்ளது.

ஐரோப்பாக் கண்டம்

லைனர்ஜெய்டாஸ் - 1605 (ஆஸ்திரியா)
நியுவிடிச் டிஸ்ஷெரி - 1605 (பெல்ஜியம்)
லா கெஸட் - 1631 (பிரான்ஸ்)
மெர்குர் ஜீசே போஸ்கியா - 1661 (போலந்து)
மெய்லிகௌரஸ் - 1702 (பிரிட்டன்)
பிராஸ்கோநோவினி - 1719 (செக்ஸ்லோவேகியா)
பியூலி ஈராயில் - 1762 (சுவிட்சர்லாந்து)
ஹிப்ஹியார்சே - 1763 (இத்தாலி)
நர்ஸ்கே இன்டலிஜன்ஸ் செட்வேர் - 1763 (நார்வே)
ஸ்லாவெனோ - 1768 (யூகோஸ்லாவியா)
ஸ்பிடிஷ் டிடிங்கல் - 1771 (பின்லாந்து)
காலமாயா - 1821 (கிரீஸ்)
குரியுனால் ருமேனிஸ்கி - 1829 (ருமேனியா)
ஆட்டன் பிளாடட் - 1830 (ஸ்வீடன்)
வக்சம்பர்ஜர் ஓர்ட் - 1848 (லக்சம்பர்க்)
டையானிட்டி கோடிசிகா - 1864 (போர்ச்சுக்கல்)
தாரபோணி - 1913 (அல்பேனியா)
டைம்ஸ் - 1864 (மால்டா)
ஐரிஷ் பிரஸ் - 1931 (அயர்லாந்து)
ஹங்கிஸ்னோவி - 1942 (சைப்ரஸ்)

அமெரிக்கக் கண்டம்

தி பப்ளிக் அக்கரன்ஸஸ் - 1690 (அமெரிக்கா)
கெசட்டர் டி மெக்ஸ்கோ - 1722 (மெக்ஸிகோ)
கெசட்டேகுவாடி மாலா - 1729 (குவாடிமாலா)

நோவேவோஸ் காட்டியா - 1752 (கனடா)
எல்மெரிகுரியோ பெருவானா - 1791 (பெரு)
புஜி மிவியாண்டி - 1792 (ஈக்வடார்)
கெசட்டி பொலிட்டிக்கே - 1804 (ஹைட்டி)
கெசட்ட டிகாரகாஸ் - 1808 (வெனிசுலா)
லா அரோரா டிச்சிலி - 1812 (சிலி)
லா கெசட்டா - 1830 (ஹாண்டுராஸ்)
டு ஜீல்புர் - 1848 (ஐஸ்லாந்து)
பியன் பன்னிகோ - 1878 (உருகுவே)
லிஸ்டில் டையோரியா - 1889 (டொமினிக்கன் ரிபப்ளிக்)
டயோரியா வாடிக்கே - 1890 (எல்சால்வடார்)
எல்ஜாலேடியா - 1909 (போர்ட்டோ ரீகோ)
டிரினிடாட் கார்டியன் - 1917 (டிர்னிடாட் டொபாக்கோ)
லா டிரிபியூன் - 1925 (பராகுவே)

ஆசியாக் கண்டம்

பெங்கால் கெசட் - 1780 (இந்தியா)
பிரின்ஸ் ஆப் வேல்ஸ் கெசட் - 1805 (மலேசியா)
கொழும்பு ஜர்னல் - 1832 (இலங்கை)
நியூஜிலாந்து கெசட் - 1840 (நியூஜிலாந்து)
ஸ்ட்ரெயிட்ஸ் டைம்ஸ் - 1845 (சிங்கப்பூர்)
சௌத் சைமாமார்னிங் போஸ்ட் - 1850 (ஹாங்காங்)
ஹாலேபனாஸ், ஹரஜோலப் - 1863 (இஸ்ரேல்)
அல்ஹி ஜாஜ் - 1908 (சவுதி அரேபியா)
சிராஜ் அல் அக்பர் - 1912 (ஆப்கானிஸ்தான்)
எல்ரே-அல்-கம் - 1960 (குவைத்)
உநௌ - 1974 (மல்கோரியா)

ஆப்பிரிக்காக் கண்டம்

சிரியா-லியோன் கெசட் - 1801 (சிரியாலியோன்)
தி ராயல் கோல்டு கோஸ்ட் கெசட் - 1822 (கானா)
சௌத் ஆப்ரிக்கா கமர்ஷியல் அட்வர்டைசர் - 1824 (தென்ஆப்பிரிக்கா)

லைபிரியா ஹெரால்டு - 1826 (லைபீரியா)
அல்வாகேயி - 1830 (எகிப்து)
லேசர்ஜில் - 1831 (மொரீஷயஸ்)
கெஜட்டி - 1870 (மடகாஸ்கர்)
ரொடிஷியா ஹெரால்ட் - 1891 (ஜிம்பாப்வே)
அப்பிரிக்கன்ஸ்டாண்டர்ட் - 1902 (உகாண்டா)
லொராஸ்கே மார்கிஸ் ஹார்டியல் - 1905 (மோசாம்பில்)
லிவின்ங்ஸ்டோன் மெயில் - 1906 (ஜாம்பியா)

என அமைந்திருக்கக் காணலாம். இவைகளைப் பார்க்கும் போது உலக நாடுகளிலேயே இதழ்களின் தொடக்கமாக கி.பி.1605இல் வெளியான லைனர்ஜெய்டாஸ் (ஆஸ்திரியா) மற்றும் நியுவிடிச் டிஸ்ஷெரி (பெல்ஜியம்) ஆகிய இரண்டு வார இதழ்களைத் தான் குறிப்பிட முடிகிறது. எனவே, உலக இதழியல் வரலாற்றில் நாளிதழ், வார இதழ், மாதம் இருமுறை மற்றும் மும்முறை இதழ், மாத இதழ், முத்திங்களிதழ், நாற்றிங்களிதழ், அரையாண்டிதழ், ஆண்டிதழ் ஆகியவைகளில் வார இதழே முதன் முதலில் வெளிவந்த பெருமையைப் பெறுகிறது.

இந்தியப் பருவ இதழ்கள்

ஆங்கிலேயர் ஆட்சி செய்தபோது இந்தியாவின் தலைநகராய் இருந்த கல்கத்தாவில் கி.பி.1780 சனவரி 29ஆம் நாளன்று ஜேம்ஸ் அகஸ்டஸ் இக்கே என்னும் ஆங்கிலேயர் ஆங்கிலத்தில் 'வங்காள கெசட்' என்ற முதல் வார இதழ் தொடங்கினார். இதுவே, இந்தியாவில் முதல் இதழுமாகும். இந்தியாவில் முதல் இதழ் ஆங்கிலத்தில்தான் வெளிவந்து உள்ளது.

அதுபோல் இந்திய மொழிகளில் வங்கமொழியில் தான் முதல் இதழ் வெளிவந்துள்ளது என்பர் இதழியலாளர்கள். ஆனால், அ.மா. சாமி அவர்கள், "இந்திய இதழியல் வரலாற்றைக் கல்கத்தாவில் இருந்து தொடங்குவார்கள். அதற்குக் காரணம், அன்று கல்கத்தா இந்தியாவின் தலைநகராக விளங்கியது. அங்கேதான் இந்தியாவின் முதல் இதழும் முளைவிட்டது.

அங்கே வாழ்ந்த ஆங்கிலேயர்தான் முதன்முதல் இந்திய இதழியல் வரலாற்றை எழுதி வைத்தார்கள். இந்தியர்களும் இன்றுவரை அதை அப்படியே பின்பற்றிக்கொண்டு இருக்கிறார்களே தவிர, தாங்களாகச் சொந்தமாக ஓர் இதழியல் வரலாறு எழுதவேயில்லை. உண்மையில் இந்திய இதழியல் வரலாறு தமிழ்நாட்டில் இருந்து எழுதப்படவேண்டும். அச்சு இதழ்கள் தோன்றி வளர அச்சகங்களே அடிப்படை. இந்திய மொழிகளில் முதன் முதல் அச்சுக்கண்டமொழி தமிழே" (19ஆம் நூற்றாண்டுத் தமிழ் இதழ்கள், ப.13) என்கிறார். இவரின் கருத்து ஆராயப்படவேண்டிய ஒன்றுதான். மேலும், இவர் இந்தியாவிலேயே தமிழ் மொழியில் தான் முதல் இதழ் தோன்றி இருக்கின்றது என்றும் வாதிடுகின்றார். இவரின் கூற்று ஏற்புடையதாகவே உள்ளது. இந்திய மொழிகளின் முதல் இதழ்களைக் கால நிரல்படுத்திக் காண்போம்.

மாசத் தினச் சரிதை - 1812 (தமிழ்)
சமாச்சார் தர்பன் - 1818 (வங்காளம்)
திக் தர்சன் - 1818 (வங்காளம்)
மும்பாய்னா சமாச்சார் - 1822 (குஜராத்தி)
மீரட்-அல்-அக்பர் - 1822 (உருது)
ஊதந்த் மார்டண்டு - 1826 (இந்தி-தேவநாகரி)
பம்பாய் தர்பன் - 1832 (மராத்தி)
சத்தியதூதன் - 1835 (தெலுங்கு)
விஞ்ஞான நிக்ஷேபம் - 1840 (மலையாளம்)
அருணோதயா - 1846 (அசாமி)
கர்னாடிக் பிரகாசிகா - 1865 (கன்னடம்)
அக்பர் தர்பார் சாகிப் - 1867 (பஞ்சாபி)
ஆஷா - 1925 (ஒரியா)

என அமைவதைக் காணலாம்.

தமிழ்ப் பருவ இதழ்கள்

தமிழ்மொழியில் கி.பி.1554இல் 'கார்த்தில்யா' என்னும் அச்சுநூல் உருவாகி ஏறக்குறைய 250 ஆண்டுகள் கழிந்த

பின்னரே இதழ்கள் தோன்றத் தொடங்கியுள்ளன. கி.பி.1802 இல் 'சிலோன் கெசட்' என்னும் மும்மொழி (தமிழ், சிங்களம், ஆங்கிலம்) இதழில் 'அரசாங்க வர்த்தமானி' என்ற தனிப் பெயருடன் தமிழ் இடம்பெற்றுள்ளது. இவ்விதழின் சிறப்பு என்னவென்றால் ஒவ்வொரு கட்டுரை அல்லது செய்தியும் மூன்று மொழிகளிலும் வெளியாகும். மூன்று மொழிகளில் ஏதாவது ஒன்றைத் தெரிந்தவர்கள் அந்தப் பத்திரிகையைப் படிக்கலாம்.

ஜான்மர்டாக்(கி.பி.1819-1904) அவர்கள் தொகுத்த 'தமிழ் அச்சு நூல்களின் பட்டியல்' என்னும் நூலை அவரது காலத்திலேயே 1865ஆம் ஆண்டு அச்சிட்டு வெளிப்படுத்தினார். இந்நூலில், 'பருவ இதழ்கள் - செய்தித்தாள்கள்' என்ற பகுதியில் அக்காலத்தில் வெளிவந்த 12 இதழ்களைப் பற்றிக் குறிப்பிடு கின்றார். இப்பன்னிரண்டு இதழ்களில் பத்து இதழ்கள் கிறித்துவச் சமயத்தைச் சார்ந்ததாகவும் மற்ற இரண்டு இதழ்கள் பிரம்மஞான இயக்கத்தைச் சார்ந்ததாகவும் இருக்கின்றன. இப்பட்டியல் முழுமையானதாக இருக்க முடியாது என்கிறார் அ.மா. சாமி. "மர்டாக் தமிழில் அதிகப் புலமை இல்லாதவர். (இலங்கையில் கூட சிங்கள இதழ்தான் நடத்தினார்) இவரது தமிழறிவு மிகவும் குறைவு என்பது நூலின் முன்னுரையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, மற்ற இதழ்களைப் படிக்க அவருக்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்காது. கிறித்துவக் கல்விக் கழகத்தின் தலைவர் என்ற முறையில் கிறித்துவ இதழ்கள் அனைத்தும் மர்டாக்கின் பார்வைக்கு வந்திருக்கக் கூடும். மற்ற இதழ்களை அவர் பார்த்ததாகவே தெரியவில்லை. நமக்குத் தெரிந்து 1831 - 1865 ஆண்டுகளுக்கு இடையே இருபதுக்கு மேற்பட்ட இதழ்கள் (கிறித்துவ சமயத்தைச் சாராதவை) வெளிவந்தும், அவை பற்றி மர்டாக் குறிப்பிடாததற்கு இதுதான் காரணமாக இருக்கும்" (19ஆம் நூற்றாண்டுத் தமிழ் இதழ்கள், ப.26) என்னும் இவரின் கூற்று தமிழில் வெளிவந்த இவரது இதழ்களின் பட்டியலைக் காணும்போது உண்மையென்றே தோன்றுகிறது.

மர்டாக் பட்டியலில் தமிழ்மொழியில் முதன்முதலாக வெளிவந்த இதழாகத் 'தமிழ் மேகசி'னைக் குறிப்பிடுகிறார். இவ்விதழ் சென்னைக் கிறித்துவக் கல்விக் கழகத்தின் சார்பில் 1831ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. ஜான்மர்டாக் குறிப்பிடும் பட்டியலின்படி 'தமிழ் மேகசின்' (1831)ம், அ.மா. சாமி குறிப்பிடும் பட்டியலின்படி 'மாசத்தினச்சரிதை' (1812)ம் தமிழ் மொழியில் தமிழ் நாட்டில் வெளிவந்த முதல் இதழ் என்கிறார்கள். இதில் எது சரியானது? இதழ்களின் பட்டியலில் 'தமிழ் மேகசின்' இடம்பெற்றிருக்கின்றது. ஆனால் 'மாசத்தினச்சரிதை' இதழ்களின் பட்டியலில் இடம்பெற வில்லை. மாறாக, 'மாசத் தினச் சரிதையின் அச்சுக்கூடம்' என்னும் அச்சுக்கூடத்தின் பெயரைக் கொண்டு 'மாசத்தினச் சரிதை' இதழைக் குறிப்பிடுகின்றார் அ.மா.சாமி.

உலகப் பொது மறையாம் திருக்குறள் முதல் முதலில் அச்சேறியது கி.பி.1812இல். "திருநெல்வேலி அம்பலவாணக் கவிராயர் பிழை தீர்த்துச் சென்னைப் பட்டினத்திற்கு அனுப்பி விச்சு அவ்விடத்திலிருந்து திருவாவடுதுறை ஆதீன வித்துவான் அம்பலவாணத் தம்பிரான், சீர்காழி வடுகநாத பண்டாரம் அவர்கள் மறுபடி கண்ணோட்டத்துடன் ஆராயப்பட்டு அச்சிற் பதிப்பித்த காயிதப் பொத்தகம்" என்று அச்சேற்றியவர் களைப் பற்றி அந்நூலிலேயே குறிப்புக் காணப்படுகிறது. இந்நூலை யார் - எங்கு - எப்பொழுது - எந்த அச்சகத்தில் அச்சிடப்பட்டது என்பதை இந்நூலின் முகப்பு அட்டையில் இடம்பெற்றிருக்கும் குறிப்புத் தெரிவிக்கின்றது. "இது பொத்தகம் கலியுகாப்தம் 4900க்கு ஆங்கீரச வருடம் தொண்டை மண்டலம் சென்னைப் பட்டினத்தில் தஞ்சை நகர மலையப்பப்பிள்ளை குமாரன் ஞானப்பிரகாசனால் அச்சில் பதிக்கப்பட்டது. மாசத்தினச்சரிதையின் அச்சுக்கூடம். இ.ஆண்டு 1812" என்னும் குறிப்பால் மாசத்தினச்சரிதை என்னும் அச்சுக்கூடத்தில் இருந்து 1812ஆம் வருடம் தஞ்சை நகர மலையப்பப்பிள்ளை குமாரன் ஞானப்பிரகாசன் அவர்களால் சென்னையிலிருந்து 'திருக்குறள் - மூலபாடம்' வெளிவந்ததாக அறிய முடிகிறது.

இதழ்கள் தோன்றிய காலந்தொட்டு இதழ்களின் பெயரில் அச்சகங்கள் நிறுவப்பட்டு வந்துள்ளன என்பது வரலாற்று உண்மை. அதாவது அத்தினீயம் அண்டு டெய்லி நியூஸ் பிரஸ், இந்து பிரஸ், கல்வி விளக்க அச்சுக்கூடம், சுதேசமித்திரன் அச்சுக்கூடம், ஞானரத்னாகரம் அச்சுக்கூடம், ஞானபானு அச்சுக்கூடம், திராவிட வர்த்தமாணி அச்சுக்கூடம், வித்தியா ரத்னாகரம் பிரஸ், மெய்ஞ்ஞான விளக்கம் அச்சுக்கூடம், வித்தியாவிநோதினி அச்சுக்கூடம், விவேக கலாநிதி பிரஸ், விவேக சந்திரோதயம் அச்சுக்கூடம், அத்வைத விளக்கம் என்னும் அச்சுக்கூடம் போன்ற பல இதழ்களின் பெயர்களில் அமைந்த அச்சுக்கூடங்களின் பட்டியலை அடுக்கிக்கொண்டே போகலாம்.

இக்கூற்றின்படி, 'மாசத் தினச் சரிதை' என்ற மாத இதழும் 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வெளிவந்திருக்க வேண்டும். திருக்குறள் இவ்வச்சகத்தின் வழியே கி.பி.1812இல் வெளியிடப்பட்டிருப்பதற்கு நூல் ஆதாரம் கிடைத்திருக் கின்றது. இந்நூல் தோன்றிய கி.பி.1812ஆம் ஆண்டையே 'மாசத்தினச் சரிதை' மாத இதழின் ஆண்டாகக் கொள்ளப்பட் டிருப்பது அவ்வளவு பொருத்தமாகத் தோன்றவில்லை. அச்சுக்கூடங்களின் வரலாற்றைப் பார்க்கும்போது முதலில் பிரச்சாரத் துண்டு அறிக்கைகளும் அரசின் ஆணைகளுமே வெளியிட்டுப் பிறகு பல மாத/ஆண்டுகளின் முயற்சியால் நூல்களை உருவாக்கியுள்ளனர். "உலக நாடுகளில் அச்சுக் கலையின் வளர்ச்சியையொட்டியே செய்தி வெளியீடுகள் துண்டுப் பிரசுரங்களாக அச்சிடப்பட்டு மக்களுக்கு வழங்கப்பட்டன" என்கிறார் மு.அ. முகம்மது உசேன் (தமிழ் இதழியல், ப.19). கி.பி.1455இல் 'கீர்த்தனைகள்' என்ற உபவாசப் பத்திரிகையை ஜான்கூடன்பர்க் வெளியிட்டார். இதுவொரு துண்டுப் பிரசுரமாகும். இது 13 பக்கங்களைக் கொண்டது. இதன்பிறகு பல துண்டுப் பிரசுரங்கள் வெளிவந்து சேமிப்பாரின்றி அழிந்திருக்கலாம். முன்னர்க் குறிப்பிட்டதுபோல் 1455, 1465, 1470, 1474, 1477, 1482, 1495,

1553, 1556 ஆகிய ஆண்டுகளில் பல்வேறு இடங்களில் அச்சகங்கள் நிறுவப்பட்டன. இவ்வச்சகங்களின் பணி எதுவுமே நமக்கு முழுமையாகத் தெரியவில்லை. சேமிப்பதற்கு ஏதுவில்லாத கிறித்துவ சமயப் பரப்புத் துண்டுப் பிரசுரங்களை இவ்வச்சகங்கள் வெளியிட்டிருக்கலாம்.

கட்டடம் செய்யப்பெற்ற நூல்கள் உலகின் ஏதோ வொரு மூலையில் கிடைப்பதால் அதனைக் கொண்டு அவ்வவற்றின் வரலாற்றைக் கணிக்கின்றோம். ஒரு அச்சகம் நூல்களை மட்டும் வெளியிடுவனவாக இருந்திருக்க முடியாது. நூல்களை வெளியிடுவது அவ்வச்சகத் தொழில்களில் ஒன்றாகவே இருந்திருக்கின்றது. ஒரு அச்சகத்தின் துணைத் தொழிலான நூல்வெளியீட்டைக் கொண்டு அவ்வச்சகம் நூல் வெளியிட்ட ஆண்டில் தோன்றியது என்று ஆணித்தரமாகக் கூறமுடியாது. இவ்வச்சகம் நூல்களை வெளியிடுவதற்கு முன் பல ஆண்டுகள் அச்சுத்தொழிலில் ஈடுபட்டிருக்க வேண்டும். அனுபவமுள்ள அச்சுக்கூடத்தில் தான் நூல்கள் அச்சிடக் கொடுப்பது வழக்கம். 1812இல் வெளியான 'திருக்குறள்-மூலபாடம்' தஞ்சையைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் என்பவர் சென்னையில் உள்ள 'மாசத்தினச்சரிதை' அச்சுக் கூடத்தில் ஏன் அச்சிட்டிருக்கிறார். அக்காலத்தில் இவ்வச்சுக்கூடம் 'மாசத்தினச்சரிதை' என்னும் மாத இதழைத் திறம்பட நடத்தி வந்திருக்கவேண்டும். இதனைக் கண்ட ஞானப்பிரகாசம் இவ்வச்சகத்தில் அச்சிட்டிருக்கவேண்டும் என்பதே உண்மை. எனவே, அனுபவமிக்க அச்சகமாக மாசத் தினச்சரிதை அச்சுக் கூடத்தை கருதிப் பார்ப்பின் இவ்வச்சுக்கூடம் கி.பி.1812க்கும் முன்னரே 'மாசத்தினச்சரிதை' எனும் மாத இதழ் தமிழகத்தில் முதன் முதலில் வெளிவந்திருக்கக் கூடும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

வார இதழ்கள்

வாரம், அதாவது ஏழு நாள்களுக்கு ஒருமுறை வெளி வரும் இதழை 'வார இதழ்' எனலாம். இவ்வகை இதழ்களில்

இலக்கியம், தத்துவம், கலை, தொழில், திரைப்படம், அரசியல், கல்வி, பொருளாதாரம், விளையாட்டு, நூல் மதிப்புரை, கோவில் வரலாறு ஆகியன பற்றிய கருத்துகள் செய்திகளாக வெளிவரும். மேலும், செய்திகளுக்கு இடையே நகைச்சுவைத் துணுக்கு களும், ஓவியர்கள் வரையும் வரைபடங்களும் வெளிவரும்.

திங்கள் இருமுறை மற்றும் மும்முறை இதழ்கள்

பதினைந்து நாள்களுக்கு ஒருமுறை வெளிவரும் இதழைத் 'திங்கள் இருமுறை இதழ்' என்றும், பத்து நாள்களுக்கு ஒருமுறை வெளிவரும் இதழைத் 'திங்கள் மும்முறை இதழ்' என்றும் கூறலாம். வார இதழிற்கும் திங்கள் இதழிற்குமிடையே இவ்விரு இதழ்களும் பாலமாக இருந்துவருகின்றன. வார இதழில் செய்திகளும் கருத்துகளும் இடம்பெறுகின்றன. ஆனால் திங்கள் இருமுறை மற்றும் மும்முறை இதழ்களில் கருத்துகள் ஆராய்ச்சிப் பின்னணியுடன் ஆழமாகவும் நுணுக்கமாகவும் ஆய்வு நடத்தப்பெற்று வெளியிடப்பெறுகின்றன. இவ்வகையான இதழ்களில் பெரும்பாலும் அரசியல், சமூகம், சமயம் பற்றிய செய்திகளே ஆராயப்பெற்றுள்ளன.

திங்களிதழ்கள்

திங்களுக்கு ஒருமுறை வெளிவரும் இதழைத் 'திங்களிதழ்' எனலாம். ஒரு குறிப்பிட்ட செய்தியைத் தெளி வாகவும் விரிவாகவும் விளக்கமாகவும் உணர்த்தத் திங்களிதழ் பயன்படுகின்றது. சிறுகதை, குறுநாவல், இலக்கிய ஆய்வு, இலக்கிய நூல்கள் ஆகியவற்றை வெளியிடத் திங்களிதழ்தான் பொருத்தமானதாகக் கருதப்பெறுகிறது. தத்துவம், நிதி, ஆராய்ச்சி, விளையாட்டு, இலக்கியம் ஆகிய துறைகளுக்கும் திங்களிதழ் பெரிதும் உதவி செய்கின்றது. அறிவியல் தொடர்பான ஆய்வுக்கட்டுரைகள், குழந்தை களுக்கான கதைகள், வேடிக்கைப் படங்கள் போன்றவற்றையும் திங்க ளிதழ்கள் வெளிப்படுத்துகின்றன. இதழியல் வரலாற்றில் - பருவ இதழ்களில் அதிகமாக இடம்பெறுவன திங்களிதழ்களே.

முத்திங்களிதழ்கள்

மூன்று திங்களுக்கொருமுறை என ஆண்டிற்கு நான்கு முறை வெளிவரும் இதழை 'முத்திங்களிதழ்' (காலாண்டிதழ்) எனலாம். இது, எண்ணிக்கையிலும் விற்பனை அளவிலும் குறைவாகத்தான் இருக்கின்றது. ஆயினும் பல துறைகளில் விரிவான ஆய்வு நடத்துபவர்களுக்கு இவ்வகையான இதழ் பெரிதும் பயன்படுகின்றது. பொதுவாக, பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் இவ்வகை இதழ் வெளியிடுவதைப் பார்க்க முடிகின்றது. பல்வேறு ஆய்வுகள் பற்றிய கட்டுரைகளை மிகக் குறுகிய காலத்தில் தயாரிக்கவும், வெளியிடவும் முடியாது. ஏனென்றால் இவ்வகைக் கட்டுரைகள் அதிகமான பக்கங்களைக் கொண்டவையாகவும் ஆழமான ஆராய்ச்சிக் கருத்துடனும் இருக்கும். பெரும்பாலான முத்திங்களிதழ்கள் நூற்றுக்கும் மேற்பட்ட பக்கங்களைக் கொண்டு தனியொரு நூலாகவே வெளிவருவதைப் பார்க்க முடிகிறது. முத்திங்களிதழ்களில் இலக்கியம், தத்துவம், கல்வி, சட்டம், மொழியியல், கலை, வரலாறு, நாட்டுப்புறவியல் போன்றன பற்றிய கட்டுரைகளே மிகுதியும் இடம்பெறுகின்றன.

நாற்றிங்கள், அரையாண்டு மற்றும் ஆண்டிதழ்கள்

நான்கு திங்களுக்கு ஒருமுறை வெளிவரும் இதழை 'நாற்றிங்களிதழ்' என்றும், ஆறு திங்களுக்கு ஒருமுறை வெளி வரும் இதழை 'அரையாண்டிதழ்' என்றும், ஆண்டிற்கு ஒரு முறை வெளிவரும் இதழை 'ஆண்டிதழ்' என்றும் கூறலாம். முத்திங்களிதழ்கள் ஆற்றும் பணிகளையே இவ்விதழ்களும் ஆற்றுகின்றன. என்றாலும் கால அடிப்படையில் வேறுபட்டு நிற்கின்றன. இவ்வகையான இதழ்களில் அரசியல் பற்றிய செய்திகள் முற்றிலும் இல்லை என்றே சொல்லலாம். இலக்கியம், வணிகம், நிதி, சட்டம், பொது நிர்வாகம், தொழில்கள் தொடர்பான கட்டுரைகள்தாம் இவ்வகையான இதழ்களில் பெரும்பான்மையாக இருக்கக் காணலாம். பள்ளி, கல்லூரி, மத்திய - மாநில அரசுகளின் ஆண்டறிக்கைகளும் இவ்வகையினவே.

இவ்வாறான வார இதழ், திங்கள் இருமுறை இதழ், திங்கள் மும்முறை இதழ், திங்களிதழ், முத்திங்களிதழ், நாற்றிங்களிதழ், அரையாண்டிதழ், ஆண்டிதழ் போன்ற பருவ இதழ்களில் பல்வேறு வகையான உள்ளடக்கங்கள் உள்ளன. குறிப்பாக, சிறுவர்களுக்கான சிறுவர் இதழ்கள், மகளிர்க்கான மகளிர் இதழ்கள், பருவ வயதினர்க்கான இதழ்கள், ஆன்மிக இதழ்கள் எனப் பாகுபடுத்திய நிலையில் பல்வேறு இதழ்கள் வெளிவருகின்றன. இவையல்லாமல் அயல்நாடுகளில் தமிழ் இதழ், அரசியலிதழ், அறிவியலிதழ், ஆய்வு இதழ், இணைய இதழ், இயக்க இதழ்கள் (தனித்தமிழ் இயக்க இதழ், தேசிய இயக்க இதழ், பகுத்தறிவு இயக்க இதழ்), இலக்கிய இதழ், உள்நாடு பற்றிய இதழ், எழுத்தாளர் இதழ், கட்சி இதழ்கள் (காங்கிரஸ் இதழ், கம்யூனிஸ்ட் இதழ், தி.க. இதழ், தி.மு.க. இதழ், தமிழரசுக்கழக இதழ், அ.இ.அ.தி.மு.க. இதழ், ம.தி.மு.க. இதழ், பா.ம.க. இதழ்), கணினி இதழ், கதை இதழ், கலை இதழ், கல்வி இதழ், கல்வெட்டியல் இதழ், கவிதை இதழ், கால்நடை அறிவியல் இதழ், கிராமநல இதழ், கூட்டுறவு இதழ், சட்ட இதழ், சமய இதழ்கள் (இந்து சமய இதழ், இஸ்லாமிய இதழ், கிறிஸ்தவ இதழ், சமண இதழ்), சமூக இதழ், சர்வோதய இதழ், செய்தி இதழ், செய்தித் துணுக்கு இதழ், சோதிட இதழ், தகவல் இதழ், தமிழாய்வு பற்றிய ஆங்கில இதழ், தனிச்சுற்று இதழ், திரைப்பட இதழ், தொகுப்பு இதழ், தொழில் இதழ், தொழிற்சங்க இதழ், நாடக இதழ், நாட்டு நிர்வாக இதழ், நாட்டுப்புறவியல் இதழ், நூலக இதழ், நூலிதழ், பயண இதழ், பன்மொழி இதழ், பாலுணர்வு இதழ், பிற மாநிலங்களில் தமிழிதழ், பொறியியல் இதழ், மதுவிலக்கு இதழ், மருத்துவ இதழ், மொழியியல் இதழ், வணிக இதழ், விகட இதழ், விளையாட்டு இதழ், வெளிநாடு பற்றிய இதழ், வேளாண்மை இதழ் எனப் பல வகைகளில் இதழ்கள் வெளிவருகின்றன.

இலக்கியப் பருவ இதழ்கள்

இவ்வகையான பருவ இதழ்களில் ஒன்றே 'இலக்கியப் பருவ இதழ்'. இதில் தமிழிலக்கியம் - தமிழிலக்கணம்

தொடர்பான ஆய்வுகள், விவாதங்கள், நூல்கள், உரைகள், வினா-விடைகள், பொதுக்கட்டுரைகள், சொல்லாராய்ச்சிகள், நூலாராய்ச்சிகள், தமிழ் மற்றும் தமிழ்ப்புலவர் வரலாறுகள், தமிழ்ப் பாடங்கள், மொழிபெயர்ப்புகள் மற்றும் மொழிபெயர்ப்பு குறித்த கட்டுரைகள், தமிழையும் தமிழிலக்கியத்தையும் மேம்படுத்தும் வகையிலமையும் கருத்துகள் சிறப்பிடம் பெறுகின்றன. இவ்விலக்கியப் பருவ இதழ்களை நூல்கள் வெளி யிட்ட பருவ இதழ், நூல்கள் வெளியிடாத பருவ இதழ் எனப் பிரிக்கலாம். மேலும், நூல்கள் வெளியிட்ட பருவ இதழ் களைச் சுவடிப்பதிப்புகள் வெளியிட்ட பருவ இதழ், நிகழ்கால ஆசிரியர்தம் நூல்கள் வெளியிட்ட பருவ இதழ் எனப் பிரிக்கலாம்.

சுவடிப்பதிப்புகள் வெளியிட்டதாக அறியத்தக்க பருவ இதழ்கள் தமிழகத்தில் பல வெளிவந்திருக்கின்றன. அவ்விதழ் களைப் பார்வையிட முடியவில்லை. என்றாலும் அங்கங்குக் காணும் குறிப்புகளால் அபிநவப் பத்திரிகை, அமிர்த வசனி, அருள் ஒளி, அழகேசன், ஆனந்தபோதினி, இந்து சமயச் செய்தி, கம்ப நாடர், கலாநிதி, கலாவல்லி, காமகோடி, குமரன், கொங்கு, சமய ஞானம், சாந்தி, சித்தாந்த ஞான போதம், சில்பஸ்ரீ, செந்தமிழ்ப்பானு, சைவம், ஞான அரசு, தமிழகம், தமிழர், திருநாவுக்கரசு, தருமசீலன், திருவிளக்கு, வித்தியாபாநு, விவேக சிந்தாமணி, விவேக தீபிகை, ஸ்ரீ வைஷ்ணவன் போன்ற பருவ இதழ்கள் சுவடிப்பதிப்புகளை வெளியிட்டதாக அறியமுடிகிறது.

உலக - இந்திய - தமிழக இதழியல் வரலாற்றில் பருவ இதழே முதன் முதலாக வெளிவந்திருக்கின்றது என்பது இதழியல் வரலாற்றுண்மை. தொடக்கக் காலந் தொடங்கித் தமிழில் வெளிவந்த இதழ்களின் எண்ணிக்கை ஆயிரக்கணக்காய் இருக்க இவற்றின் உள்ளடக்கம் மட்டும் ஏறக்குறைய எழுபத்தைந்து வகைகளாக இருக்கின்றன. இவற்றில் ஒன்றாகத் தமிழிலக்கிய இதழ்கள் உலகின் பல்வேறு இடங்களிலிருந்தும் வெளிவந்திருக் கின்றன. குறிப்பாக, இலங்கையில் இளம்பிறை (1964), கலாநிதி

(1929, 1948), கலைமகள் (1925), சிவதொண்டன் (1936), தமிழாநந்த போதினி, மெய்கண்டான் (1923); இராங்கியத்தில் ஞானப்பழம் (1975), இரங்கூனில் அன்பு (1927), வேதம் (1926) போன்ற அயல்நாட்டிதழ்களும்; கேரளாவில் அறிவு விளக்கம் (1901), தமிழன் (1912), ப்ராசீன கைரளி; கர்னாடகாவில் குறள் மலர் (1965); புதுவையில் கலைமகள் (1913), தமிழ் மகவு (1917); ஆந்திர மாநிலத்தில் Tirumala Tirupathi Devasthanams Builletin (1950), Journal of the Srivenkateswara Oriental Institute (1940) போன்ற அண்டை மாநில இதழ்களும் குறிப்பிடத்தக்கன.

இவ்வகையில் 36 பருவ இதழ்கள் தெரிவுசெய்யப் பெற்றன. அவை தனியார் பருவ இதழ்கள் 11, தமிழ்ச்சங்கப் பருவ இதழ்கள் 3, சுவடி நூலகப் பருவ இதழ்கள் 2, ஆதீனப் பருவ இதழ்கள் 7, நிறுவனப் பருவ இதழ்கள் 10, பல்கலைக் கழகப் பருவ இதழ்கள் 3 ஆகியவையாகும்.

பருவ் இதழ்ச் சுவடிப்பதிப்பின் தொடக்கக் காலம் கி.பி.1897 எனலாம். எனவே, கி.பி.1897 முதல் கி.பி.2000 வரை வெளிவந்த 36 இலக்கியப் பருவ இதழ்களில் இதுவரை 406 சுவடிப்பதிப்புகள் கிடைத்துள்ளன. இதழ்களைத் தேடுவது என்பது பெரும்பணி. இருப்பினும் புகழ்பெற்ற சில நூலகங்களில் இப்பொழுது (1996-2000) கிடைக்கக் கூடிய இலக்கியப் பருவ இதழ்களை மட்டும் பார்வையிட்டு அவற்றில் கிடைத்த சுவடிப்பதிப்பு நூல்கள் தொகுக்கப்பெற்றுள்ளன. இது 50 விழுக்காடு என்றே சொல்லலாம். ஏறக்குறைய 2500 வகையான பருவ இதழ்களைப் பார்வையிட்டதில் 36 இலக்கியப் பருவ இதழ்கள் மட்டுமே சுவடிப்பதிப்புகளை வெளியிட்டதாக அறியமுடிகிறது.

இப்பருவ இதழ்களில் பெரும்பாலானவை இந்திய விடுதலைக்கு முந்தைய காலத்தன. என்றாலும், இந்திய விடுதலைக்குப் பின் சில நிறுவன வெளியீட்டுப் பருவ இதழ் களில் சுவடிப்பதிப்பு நூல்களை மிகுதியாகக் காணமுடிகின்றது.

பார்வையிட்ட நூலகங்களில் சில இதழ்கள் தொடக்கம் முதல் இறுதி வரை கிடைத்தன. சில இதழ்களின் பகுதிகள் முழுமையும் கிடைக்கவில்லை. ஏனெனில் இதழ்களைச் சேகரித்து வைக்கும் பழக்கம் நம்மிடையே குறைவு. எனவே, கிடைத்த முழுமை/குறைப்பகுதிகளைப் பார்வையிட்டு அவற்றிலிருந்து சுவடிப்பதிப்பு நூல்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ளன. நேரடியாக ஓலை/காகிதச் சுவடிகளிலிருந்து பருவ இதழ்களில் பதிப்பிக்கப்பெற்ற நூல்களும், மறுபதிப்பு நூல்களும், ஏதாவதொரு வகையில் சுவடியோடு தொடர்பு கொண்டு பதிப்பிக்கப்பெற்ற நூல்களும் இங்குத் தெரிவு செய்யப்பெற்றுள்ளன.

சுவடிப்பதிப்பு வரலாற்றில் பருவ இதழ்களில் வெளி வந்த நூல்கள் சிறப்பான இடத்தைப் பெறுகின்றன. ஆனால், இந்நூல்கள் பருவ இதழ்கள் வெளிவந்த காலத்தில் மக்களால் பேசப்பட்டு வந்தனவேயன்றி அதன்பின் பேசுவாரற்று இதழோடு நின்றுவிட்டன. தமிழ்மொழியின் வளர்ச்சிக்கும் தமிழின உணர்வுக்கும் இச்சுவடிப் பதிப்புகள் பெருந்துணை புரிந்திருக் கின்றன. இதழ்களின் வழியாக அவை தலைகாட்டத் தவறி யிருந்தால் பல நூல்களின் பெயர்களைக் கூட நாம் அறிந்திருக்க முடியாது. அந்த வகையில் இதழ்களின் தமிழ்ப்பணியை நினைவுகூர்ந்து நன்றி பாராட்டவேண்டும்.

இலக்கியப் பருவ இதழ்களில் வெளிவந்த நூல்களின் சுவடிகள் அழிந்த நிலையில் மறைந்துபோன தமிழ் நூல்களாக - மறைந்திருக்கும் இதழ்களிலிருந்து இயன்றவரை தமிழுலகிற்கு அறிமுகப்படுத்தும் நோக்கத்தில் இந்நூல் அமைகின்றது. இவ்வகையில் இன்று அறிமுகமில்லாத சில நூல்களையாவது தமிழிலக்கிய வரலாற்றில் இடம்பெறச் செய்வதே இதன் நோக்கமாகும். இதனால் தமிழிலக்கியத்தின் பரப்பு மேலும் விரிவடைவதோடு மட்டுமல்லாமல் சுவடிப்பதிப்பு வரலாற் றிற்கும் ஒரு தெளிவு பிறக்கும் எனலாம்.

2. இலக்கியப் பருவ இதழ்கள்

சுவடிப்பதிப்பின் வரலாற்றைத் 'திருக்குறள் மூலபாடம் - நாலடியார் மூலபாடம்'' (கி.பி.1812) தொடங்குவதைப்போல் பருவ இதழ்களில் வெளிவந்த சுவடிப்பதிப்பின் வரலாற்றை 'உண்மை விளக்கம் எனும் சித்தாந்த தீபிகை' (1897) எனும் திங்களிதழில் வெளிவந்த 'திருவானைக்கா உலா'' (1897) தொடங்குகின்றது. இப்பருவ இதழ் தொடங்கி இன்றுவரை பல்வேறு பருவ இதழ்கள் சுவடிப்பதிப்புகளை வெளியிட்டுள்ளன. சுவடிப் பதிப்புகளை வெளியிட்ட இலக்கியப் பருவ இதழ்களை வெளியீட்டு நிலையில் ஆறு வகைகளாகப் பிரிக்கலாம். அவை, தனியார் பருவ இதழ்கள், தமிழ்ச் சங்கப் பருவ இதழ்கள், சுவடி நூலகப் பருவ இதழ்கள், ஆதீனப் பருவ இதழ்கள், நிறுவனப் பருவ இதழ்கள், பல்கலைக்கழகப் பருவ இதழ்கள் போன்றன வாகும்.

1. தனியார் பருவ இதழ்கள்

சுவடிப்பதிப்புகள் வெளிவரத் தொடங்கிய 19ஆம் நூற்றாண்டில் தனியார் சுவடிப்பதிப்புகளே மிகுதியும் வெளிவந்திருக்கின்றன. 19ஆம் நூற்றாண்டில் சுவடிப்பதிப்புகளை வெளியிடுவதற்கான அச்சுக்கூடங்கள் மிகுதியாகத் தோன்றியுள்ளன. இவ் அச்சுக்கூடங்கள் வாயிலாகத் தனியார் சுவடிப்பதிப்புகள் பல வெளிவந்திருக்கின்றன. குறிப்பாக, மாசத் தினச் சரிதையின் அச்சுக்கூடம், ரவானா அச்சுக்கூடம், கல்வி விளக்க அச்சுக்கூடம், சரஸ்வதி அச்சுக்கூடம், அமெரிக்கன் மிஷன் அச்சுக்கூடம், ரிக்கார்ட் அச்சுக்கூடம், பரப்பிரம்ம முத்திராசாலை, முத்தமிழ் விளக்க அச்சுக்கூடம், இலக்ஷ்மி

விலாச அச்சுக்கூடம், கலாரத்னாகரம் அச்சுக்கூடம், மினர்வா பதிப்பகம், சென்னை கல்விச்சங்கத்து அச்சுக்கூடம், திராவிட தீபிகை அச்சுக்கூடம், இலக்கணக் களஞ்சியம் பிரஸ், ஜீவரக்ஷாமிர்த அச்சுக்கூடம், வித்வரக்ஷாமிர்த அச்சுக்கூடம், மெஞ்ஞான விளக்க அச்சுக்கூடம், அல்பீனியன் அச்சுக்கூடம், வித்தியாநுபாலன யந்திரசாலை, செங்கல்வராய நாயக்கர் அனாதை விடுதி அச்சகம் ,போன்ற அச்சுக்கூடங்களைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

இவ்வாறான அச்சுக்கூடங்கள்தான் 19ஆம் நூற்றாண்டின் சுவடிப்பதிப்புகளை வெளியிட்டுள்ளன. சில அச்சுக்கூடங்கள் இதழ்களையும் வெளியிட்டுள்ளன. இதழ்களின் பெயரிலேயே அச்சுக்கூடங்களின் பெயரும் இருப்பதைக் காணமுடிகிறது. குறிப்பாக, மாசத் தினச்சரிதையின் அச்சுக்கூடம், சுதேசாபிமானி அச்சுக்கூடம், பூர்ண சந்திரோதய அச்சுக்கூடம், தேசாபிமானி அச்சுக்கூடம், மீனலோசனி அச்சுக்கூடம், விவேக சந்திரோதய அச்சுக்கூடம் போன்றவற்றைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். ஆக, 19ஆம் நூற்றாண்டில் இருந்த அச்சுக்கூடங்கள் சுவடிப்பதிப்பு களையும் இதழ்களையும் வெளியிடுவதைத் தம்முடைய இரு கண்களாகப் போற்றி வந்தன என்பது தெரிகிறது.

19ஆம் நூற்றாண்டின் இறுதியில் வெளிவந்த உண்மை விளக்கம் எனும் சித்தாந்த தீபிகை (1897), ஞானபோதினி (1897), விவேகபாநு (1900) ஆகிய மூன்று தனியார் இதழ்கள்தான் சுவடிப்பதிப்புகளை வெளியிடும் முறையை அறிமுகப்படுத்தின. இவற்றைத் தொடர்ந்து பைந்தமிழ் (1923), பஞ்சாமிர்தம் (1924), ஹரிசமய திவாகரன் (1924), செல்வக் களஞ்சியம் (1926), சிவநேசன் (1927), கலாநிலையம் (1928), தேனோலை (1974), புலமை (1975) போன்ற பதினொரு தனியார் பருவ இதழ்களும் சுவடிப்பதிப்புகளை வெளியிட்டுள்ளன.

உண்மை விளக்கம் எனும் சித்தாந்த தீபிகை

'உண்மை விளக்கம் அல்லது சித்தாந்த தீபிகை' எனும் திங்களிதழ் திரு. நாகரத்தினம் அவர்களை ஆசிரியராகக்

கொண்டு சென்னையிலிருந்து 1897ஆம் ஆண்டு சூன் திங்கள் முதல் வெளிவந்துள்ளது. இது, 'சமய ஞானம், தத்துவ ஞானம், கலை ஞானம், பூதபௌதிக முதலிய சாஸ்திர ஞானம் இவற்றைப் பற்றி விவகரிக்கும் மாதாந்திரப் பத்திரிகை' என இதன் தலைப்புப் பகுதியில் இடம்பெறுள்ளது. 1897ஆம் ஆண்டு சூலை இதழ் 'உண்மை விளக்கம் எனும் சித்தாந்த தீபிகை' எனுப் பெயரில் சிறுமாற்றம் பெற்று வெளிவந்துள்ளது. 1897ஆம் ஆண்டு சூன் இதழ் மட்டும் 'உண்மை விளக்கம் அல்லது சித்தாந்த தீபிகை' என வெளிவந்து இருக்கின்றது.

இவ்விதழ் முதல் நான்கு ஆண்டுகள் தமிழிலும் பிறகு ஆங்கிலத்திலும் வெளிவந்திருக்கின்றது. இவ்விதழில் சிவஞான சித்தியார், தாயுமானவர் அருளிச்செய்த பாடல்கள், திருமந்திரம், பதார்த்த தீபிகை போன்ற நூல்களும் அதற்கான உரைகளும் வெளிவந்துள்ளன. இவையல்லாமல் 'திருவானைக்கா உலா' எனும் சுவடிப்பதிப்பும் இவ்விதழில் வெளிவந்துள்ளது. 'உண்மை விளக்கம் எனும் சித்தாந்த தீபிகை' என்ற பெயரில் 1872ஆம் ஆண்டு ஓர் இதழ் சென்னையிலிருந்து வெளிவந் திருப்பதும் தெரிகிறது. இவ்விதழ் இதனினின்றும் வேறானது.

ஞானபோதினி

'ஞானபோதினி' எனும் திங்களிதழ் மு.சி. பூர்ணலிங்கம் பிள்ளை அவர்களை ஆசிரியராகக் கொண்டு சென்னையிலிருந்து 1897ஆம் ஆண்டு ஆகஸ்ட் முதல் வெளிவந்துள்ளது. ஆறாம் ஸம்புடம் (தொகுதி) முதற்கொண்டு மு.சி. பூர்ணலிங்கம் பிள்ளையோடு வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியும் இணை யாசிரியராகப் பணியாற்றியுள்ளார்.

இவ்விதழில் தமிழ்ச்சரிதம், இலக்கணம், பொருணூல், உடல் நூல், வைத்தியம், தத்துவம், கானம், நாடகம், கல்வி, சமயம் பற்றிய ஆய்வுக் கட்டுரைகளும், இக்காலப் புலவர்களின் கவிதைகள், பழந்தமிழ் நூல்கள், நூல்

மதிப்புரைகள், ஆராய்ச்சித் தொடர்புக் கட்டுரைகள், தமிழிலக்கிய நூல்களின் வசனப் பகுதிகள் ஆகியனவும் இடம்பெற்றுள்ளன. இவ்விதழில் 'குலோத்துங்க சோழன் கோவை, திருப்பரங்கிரிக் குமரனூசல், திருப்பரங்கிரிக் குமரன் தாலாட்டு, தோத்திர வெண்பா' ஆகிய நான்கு சுவடிப்பதிப்புகள் வெளிவந்து இருக்கின்றன.

விவேகபாநு

'விவேகபாநு' எனும் திங்களிதழ் வள்ளிநாயக சுவாமிகளை ஆசிரியராகக் கொண்டு திருநெல்வேலியிலிருந்து 1900ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் வெளிவந்துள்ளது. அறிவு, உலகப்பற்று, பண்பாடு, ஒழுக்கம் ஆகியவற்றைத் திருநெல்வேலி மாவட்ட மக்களுக்கு ஊட்டும் முக்கிய நோக்கத்தோடு இவ்விதழ் தோற்றுவிக்கப்பெற்றுள்ளது.

இவ்விதழின் நோக்கத்தை வள்ளிநாயக சுவாமி, "விவேகத்தை ஜனங்களுக்குப் போதிப்பதற்கு மார்க்கங்கள் பலவுளவேனும் அவற்றுளெல்லாம் சிறந்தது பத்திரிகையே என்பது துணிவு. ஏனென்றால் இது எத்திறத்தாருக்கும் பக்குவ முதலியது கவனியாமல் தூர சமீபத்தை நோக்காமல் ஞானத்தை உபதேசிக்கின்றது. ஆதலின், லௌகிகத்திற்கும் வைதிகத்திற்கும் அவசியமான ஒழுக்கங்களையெடுத்துப் போதிக்கும் பத்திரிகையொன்றேனும் தற்காலத்தில் பிரசுரிக்கப்பட்டு வராத நமது ஜில்லாவில், அத்தகைய பத்திரிகையொன்று வெளிப்படுத்த அதிக விருப்பமுற்றிருந்த எமக்கு, அதைக் கொண்டு முடிக்கும் சக்தி சிறிதுமின்றாயினும், சில அறிஞர்கள் விஷயதானம் செய்வதாய் வாக்களித்து எமக்கு ஊக்கத்தை உண்டு பண்ணினமையின், இப்பத்திரிகையைப் பிரசுரம் செய்து ஒருவாறு துணிந்தனம்" (விவேகபாநு, 1:1:1900, ப.1) என்றார்.

இவ் உன்னத நோக்கத்தோடு தோற்றுவிக்கப்பெற்ற இவ்விதழ் முதலாண்டு இதழ்ப் பகுதியோடு நின்றுவிட, பின்னர் ஓராண்டு கழித்து மு.ரா. கந்தசாமிக் கவிராயர்

அவர்கள் இவ்விதழ் உரிமையைப் பெற்று வெளியிடத் தொடங்கியிருக்கின்றார். இதனை மு.ரா. கந்தசாமிக் கவிராயர், "இவ்விவேகபாநு என்ற மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகையானது தூத்துக்குடி ஸ்ரீமத் வள்ளிநாயக சுவாமிகளால் 1900ஆம் வருடம் செப்டம்பர் மாதம் தொடங்கி ஒரு வருஷ காலம் மிகவும் சிறப்புடன் நடாத்தப்பெற்றது. தற்காலத்தில் தன்னிகரில்லாத் தலைமைப் புலமை வாய்ந்த ஸ்ரீமான் உ.வே. சாமிநாதைய ரவர்கள் முதலான பண்டித சிகாமணிகளால் கொண்டாடப் பெற்றதும் யாவருமறிந்த விஷயமே.

இங்ஙனஞ் சிறந்து நிகழ்ந்த இதனை இத்தமிழ் நாட்டின் தவக்குறைவால் சிற்சில அசௌகரியங்களைக் கருதி ஸ்ரீமத் வள்ளிநாயக சுவாமிகள் சிலகாலம் நிறுத்தி வேறு யாரேனும் நடத்துவராயின் இதன் முழுச் சுதந்திரங்களையும் கொடுத்துத் தாமுமியன்றவரை யுதவிபுரிவதாக என்பாலும் என் நண்பர்கள் பாலும் தெரிவித்தார்கள்.

இதனை மீண்டும் நடத்தவேண்டுமென்ற பெரு விருப்பத்தால் இதன் சுதந்திரங்களைப் பெற்றுக்கொண்டு சரிவர நடத்தி வருவதாக மேற்படி சுவாமிகளிடம் நான் தெரிவித்தேன். சுவாமிகள் அகமகிழ்ந்து ஆசி கூறி 'விவேகபாநு'வின் சகல சுதந்திரங்களையும் எனக்குக் கொடுத்தருளினார்கள்" (விவேக பாநு, 2:1:1902, ப.1) என்றார்.

இவ்விதழில் காரியார் நாரியார் பாப்பகுந்துகொண்ட திருவிளையாடல், திருஉருமாமலைச் சிலேடை வெண்பா, நீதிமொழி, பகவத் கீதைக்கும்மி, பதிபசுபாசத் தொகை, புலிமுலை புல்வாய்க்கருளின திருவிளையாடல், மூர்த்தி நாயனார்க்கரசளித்த திருவிளையாடல் ஆகிய ஏழு சுவடிப் பதிப்புகள் வெளிவந்துள்ளன.

பைந்தமிழ்

'பைந்தமிழ்' எனும் திங்களிதழ் ஜகதீச ஐயரை ஆசிரியராகக் கொண்டு சென்னையிலிருந்து 1923ஆம் ஆண்டு சனவரி முதல் வெளிவந்துள்ளது.

தமிழ்மொழியின் மேன்மையை விளக்கும் கட்டுரைகள், நூல்கள், நீதிநூற் கருத்துகள் போன்றவை இவ்விதழில் வெளிவந்துள்ளன. மேலும், நீதிவெண்பா என்ற சுவடிப் பதிப்பையும் வெளியிட்டுள்ளது.

பஞ்சாமிர்தம்

'பஞ்சாமிர்தம்' எனும் திங்களிதழ் அ. மாதவையாவை ஆசிரியராகக் கொண்டு சென்னையிலிருந்து 1924ஆம் ஆண்டு முதல் வெளிவந்துள்ளது. சாக்ரடீஸ், அரசியல், குட்டிக்கதை, சர்வ சமய சமரசதர்சனி கவிதை, கூட்டுறவு இயக்கம், மொழிபெயர்ப்பு, மதிப்புரை, பலதுறைப் பொறுக்கு மணிகள், தொடர்கதை முதலியன இவ்விதழில் இடம்பெற்றுள்ளன. தமிழ்ப் பண்பாட்டையும் வாழ்க்கை முறைகளையும் எடுத்துக் கூறும் இதழ்கள் தமிழில் இல்லை என்ற நிலையைப் போக்கவும்; பிற மாநிலம் மற்றும் அயல்நாடுகளில் வாழும் தமிழர்கள் ஆங்கிலம் அறிந்து தமிழறியா நிலையில், தாய்மொழி பயில ஆர்வம் கொண்டவர்களின் ஆசையைப் போக்கவும்; நாடெங்கும் தேசிய உணர்ச்சியை ஊட்டவும்; நாளிதழ் படிக்க இயலாதவர்கள் அத்திங்கள் நிகழ்ச்சிகளை ஒட்டுமொத்தமாக அறிந்துகொள்ளவும்; உண்மை, அன்பு, அறிவு, ஒற்றுமை, உழைப்பு எனும் ஐந்தும் கலந்த பஞ்சாமிர்த மாகவும் இவ்விதழ் வெளிவந்திருக்கிறது. இதனை இவ்விதழின் ஆசிரியர் அ. மாதவையா, "தமிழிலே மாதப் பத்திரிகைகள் பல வெளிவருகின்றன; எனினும், இவை பெரும்பாலும் ஒரு சில விஷயங்களையே கையாளுகின்றன. நமது நாகரிக வாழ்க்கைக்குரிய பல துறைகளையும் தழுவி நடைபெறும் மாதப் பத்திரிகை, நான் அறிந்தவரை, ஒன்றேனும் தமிழில் இல்லை. இங்கிலீஷில் பலவும், வங்காளி, குஜராத்தி, மராத்தி, தெலுங்கு முதலிய மொழிகளில் சிலவும் இத்தகைய பத்திரிகைகள் உள. மற்று எவ்விதத்திலும் இந்த பாஷை களுக்குத் தாழாததும், இவை யாவற்றிலும் மேலான பழம்புகழ் படைத்ததுமான நமது அருமைத் தாய்மொழிக்கு உள்ள இக்குறையை நிரப்புவது என்னினும் மிக்க அறிவும் படிப்பும்

உள்ளவர் பணியாயினும், வேறு எவரும் முன்வராமை யினால் நாட்டுப் பற்றும் பாஷாபிமானமும் உள்ள தமிழ் மக்களின் உதவியைக் கொண்டு உழைத்துப் பார்க்க துணிந்து, நான் முன் வரலானேன்.

உண்மை, அன்பு, அறிவு, ஒற்றுமை, உழைப்பு என்னும் ஐந்தையும் கலந்ததாகும் இப்பஞ்சாமிர்தம். தமிழ் நாட்டிலும், தமிழ் மக்கள் குடியேறியுள்ள பிற நாடுகளிலும் ஆங்கிலம் ஆண்மக்கள் பலர்க்கும், மாதர் சிறுவர் சிறுமி களுக்கும், ஆங்கிலம் அறிந்தும் தமிழ்த்தாயைக் கைவிடாத சிலர்க்கும், நெடுநாளாய்த் தாம் புறக்கணித்து வந்த தாய்மொழியை மீண்டும் பயில ஆசை கொண்டுள்ளார் களுக்கும் தினசரி பத்திரிகைகளை வாங்கிப் படிக்கப் பணம் இல்லாதவர்க்கும் உரித்தாகும். நாடெங்கும் ஆங்கு ஆங்கு முளைத்தெழுந்த தேசிய உணர்ச்சிப் பயிருக்கு இப்பத்திரிகை மூலமாய் உரம் இட்டு, அறிவுநீர் பாய்ச்சி, இவ்வுணர்ச்சியைத் தழைத்தோங்கச் செய்ய முயலுவது என் முக்கிய நோக்கம்" (பஞ்சாமிர்தம், 1:1:1924) என்றார்.

இம்முக்கிய நோக்கங்களுடன் சில சுவடிப்பதிப்பு களையும் இவ்விதழ் வெளியிட்டுள்ளது. பார்வையிட்ட முதலிரண்டு இதழ்களில் கலியுகமாலை, தனிப்பாடற்றிரட்டு ஆகிய இரண்டு சுவடிப்பதிப்புகள் வெளிவந்திருக்கின்றன.

ஹரிசமய திவாகரன்

பண்டித அரங்க ராமானுஜத்தை ஆசிரியராகக் கொண்டு 'ஹரிசமய திவாகரன்' எனும் திங்களிதழ் மதுரையி லிருந்து 1924ஆம் ஆண்டு தை முதல் வெளிவந்து உள்ளது. மதம் தொடர்பான கண்டனங்களும், தெய்வ நம்பிக்கையை வெறுக்கும் செய்திகளும் இடம்பெறாத ஹரிசமய திவாகரனி'ல் ஆழ்வார்கள் அருளிய பாடல்களின் ஆழ்பொருள்கள், ஆசாரியர் களின் கால ஆராய்ச்சிகள், இராமாயணம், பாரதம், பாகவதம், விஷ்ணு புராணம் ஆகியவற்றிலுள்ள நீதிகள், அச்சிடப்பெறாத நூல்கள், அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய நான்கு வகைப்

பொருள்கள், அகப்பொருள் விரவி வரப்பெற்ற பாடல்களுக்குப் பூர்வாசிரியர்களும் தமிழறிஞர்களும் கொண்ட பொருள்களின் ஒற்றுமை வேற்றுமைகள், வாழ்க்கை நன்முறையில் அமையக் கடைப்பிடிக்க வேண்டிய பொதுநீதிகள் ஆகியன வெளிவந் திருக்கின்றன.

இதனைப் பண்டித அரங்க ராமாநுஜம், "இப் பத்திரிகையில் மத தூஷணங்களும் தெய்வ நிந்தைகளும் வெறுக்கத் தக்க விஷயங்களும் சாஸ்திர விரோதமானவைகளும் வீண் வேடிக்கை உண்டுபண்ணத்தக்கவைகளும் எழுதப் பெறாவாம். .... தக்க வித்வான்களால் சுருதி, ஸ்மிருதி, இதிஹாஸ, புராண விஷயங்களின் ஆழ்பொருள் ஆசார்யர்க ளருளின ப்ரபந்த ரஹஸ்ய வ்யாக்யானங்களின் ஆழ்பொருள் களும், ஆசார்யர்களின் காலவாராய்ச்சியின் சீர்திருத்தங்களும், நுண்ணிய சில ஆராய்ச்சிகளும், ஸ்ரீராமாயண, பாரத, பாகவத, விஷ்ணு புராண, பகவத்கீதை முதலியவற்றிற் கண்ட நீதிகளும் உபாக்யானங்களும் தர்ம சாஸ்திரங்களும் அச்சிடப்பெறாத சில அரிய நூல்களும், அச்சிடப்பெற்ற நூல்களிற் கண்ட அச்சுப் பிழையின் சீர்திருத்தங்களும், அறம், பொருள், இன்பம், வீடு எனும் நால்வகை உறுதிப் பொருள்களும், சம்பிர தாயத்தைப் பற்றிய தமிழ் நூல்களும், வருணாச்சரம தர்ம முறைகளும், வ்யாக்கியானங்களிற் கண்ட தமிழ் பிரமான நூல் விளக்கமும் வைஷ்ணவாச்சாரமும், ஆசார்யசிஷ்ய லஷணங் களும், தத்வ இயல்புகளும், அகப்பொருள் விரவி வரப்பட்ட பாடல்களுக்குப் பூர்வாசார்யர்களும் தமிழறிஞர்களும் கொண்ட பொருள்களின் ஒற்றுமை வேற்றுமை நயங்களும், கம்பராமாயண, வில்லிபாரதங்களிற் கண்ட அரிய விஷயங் களும், பூர்வாசார்யர்கள் இன்ன வழியாய் சம்பிரதாயத்தை விர்த்தி செய்து வந்தார்களென்பதும், விதிவாக்கியங்களையும், பிரஸ்துத ப்ரசம்ஸாபரமான வாக்கியங்களையும் பகுத்தறியு முறையும் சாஸ்திரங்களின் அர்த்த நிர்ணயம் செய்யும் வகையும், நன்முறையைக் கைக்கொள்ளும் உபாயங்களும் பொது விஷயங்களும் இதில் எழுதப்பெறும்" (ஹரிசமய திவாகரன், 1:1:1924, பக்.1-2) என்றார்.

இவ்விதழில் இராமசெயம் (இராமாயணத் திருப்புகழ்), எதிராசரந்தாதி, கண்ணிநுண் சிறுதாம்பு ஆகிய மூன்று சுவடிப்பதிப்புகள் வெளிவந்திருக்கின்றன.

செல்வக்களஞ்சியம்

'செல்வக்களஞ்சியம்' எனும் திங்களிதழ் ஆர்.எஸ். பதியை ஆசிரியராகக் கொண்டு மதுரையிலிருந்து 1926ஆம் ஆண்டு தைத்திங்கள் முதல் வெளிவந்துள்ளது. மேலைநாடு போல, தமிழ்நாடும் தொழில் வளத்தில் சிறந்து விளங்கத்தக்க முறையில் மேலைநாட்டுத் தொழில் முறைகளை அறிமுகப் படுத்துவது; உழவுத் தொழிலையும் நெசவுத் தொழிலையும் மேம்படுத்தும் முறைகளை ஆராய்ந்து வெளிப்படுத்துவது; நோயின்றி வாழும் சிறந்த சித்த வைத்திய முறைகளை எடுத்துரைப்பது; தமிழ் மக்களின் அறிவுத் திறனை மேலை நாட்டார்க்கு ஈடாகக் கொணர்வதற்கான வழிமுறைகளை ஆராய்வது; உணவுப் பொருள்களின் தேவையையும் அவற்றின் இன்றியமையாமையையும் எடுத்துரைப்பது போன்ற முக்கிய நோக்கங்களுடன் இவ்விதழ் வெளிவந்திருக்கின்றது.

இதனை இவ்விதழின் ஆசிரியர், "உடல்நலம் பேணு வதற்குரிய வழிகள், சித்த வைத்திய முறைகள், நோய்வராது காத்துக்கொள்ளும் பற்பல வழிகளின் நுட்பங்கள், உணவுப் பொருள்களின் உயர்வு தாழ்வுகள், பல்வகைக் கல்விப் பேறுகள் முதலிய பொருள்களின் உயர்வு தாழ்வுகள் முதலியவற்றைக் குறித்து விரிவாகவும் விளக்கமாகவும் கற்பிக்கும். இவை யாவற்றிற்கும் மேலாகப் பற்பல நூதனக் கைத்தொழில் களையும், மேல்நாட்டுப் பெருமுயற்சிகளையும், நமது தேசத்து மக்கள் கற்றுத்தேர்ந்த நமது நாட்டிற் பல பெரிய நூதனத் தொழிற்சாலைகளை அமைத்து ஏராளமான புதுப்பொருள் களை இயந்திரத் துணையாற் செய்து குவித்து பெருத்த வாணிகம் நடத்திச் செல்வப்பெருக்கும் செழிப்பும் பெறுமாறு தகுந்த அறிவு புகட்டும். இந்தியாவில் இப்பொழுது சிறந்து விளங்குகின்ற உழவுத் தொழிலையும், இதற்கு முன் முதன்மை

பெற்றிருந்த நெசவுத் தொழிலையும் இன்னும் அதிக நன்றாகச் செய்யும் முறைகளையும் ஆராய்ந்து அறிந்து வெளிப்படுத்தும்.

நாட்டைத் திருத்துவதற்குரிய அறிவும் கடமையும் வாய்க்கப்பெற்றிருக்கும் புலவர் பெருமான்களும், திறமை வாய்ந்த வைத்தியர்களும், மேல்நாட்டுத் தொழில்முறை நூலாராய்ச்சிக்காரர்களும் உலகத்தவர்க்கு உயர்தரமான உண்மைப் பொருள்களை எடுத்துப் புகட்ட விரும்புவாரும், நமது தமிழ் மக்கள் சோம்பல் என்னும் தூக்கத்தினின்றும் விழித்து மேல் நாட்டு மக்களைப் போலச் சுறுசுறுப்பான தொழிலாளிகளாகவும் முதலாளிகளாகவும் முன்னேற்றமடையும் வகை வழிகளைப் பற்றித் தெளிவு பெற உணர்ந்தவர்களும் தங்கள் தங்கள் அனுபவங்களை இச் செல்வக்களஞ்சியத்தின் வாயிலாக அறிவித்துத் தமிழ் நாட்டவருக்குத் துணைபுரிந்து வருவார்களாக" (செல்வக் களஞ்சியம், 1:1:1926, ப.3) என்றார்.

ஆக, செல்வக்களஞ்சியம் தமிழ்நாடு தொழில் துறையில் முன்னேற வேண்டும் என்ற நோக்கத்தில் செயற்பட்டது என்பது தெரிகிறது. என்றாலும் இலக்கியங்களை அறிமுகப்படுத்தும் போக்கும் இவ்விதழிற்கு இருந்திருக்கின்றது. இவ்வகையில், 'திருக்குறள் அதிகார சாரமாகிய திருத்தாலாட்டு" எனும் நூல் முதல் தொகுதியில் வெளியிடப்பட்டுள்ளது.

சிவநேசன்

'சிவநேசன்' எனும் திங்களிதழ் இராம.கு.இராம. இராம சாமி செட்டியாரை ஆசிரியராகக் கொண்டு பலவான்குடியி லிருந்து 1927ஆம் ஆண்டு ஆவணி முதல் வெளிவந்துள்ளது. சைவம் தழைத்தோங்கச் செய்யும் வழிமுறைகள், சைவ சமயம் தொடர்பான கட்டுரைகள், நூலாய்வுகள், நூல் தொடர்பான கருத்துமேடை, நூல் அறிமுகம், அச்சிடப்பெறாத நூல்கள், மதிப்புரைகள் போன்றன இவ்விதழில் வெளிவந்திருக்கின்றன.

இவ்விதழில் சங்கரலிங்க உலா, திருக்கழுக்குன்றச் சிலேடை வெண்பா, திருமயிலை யமகவந்தாதி, தேவிகாலோத்ர

ஆகமம் - தமிழ் மூலமும் சித்தாந்த ரத்ந விருத்தி எனும் உரையும், பழமலைக் கோவை ஆகிய ஐந்து சுவடிப் பதிப்புகள் வெளிவந்துள்ளன.

கலாநிலையம்

'கலாநிலையம்' எனும் வார இதழ் டி.என். சேஷாசலத்தை ஆசிரியராகக் கொண்டு சென்னையிலிருந்து 1928ஆம் ஆண்டு சனவரி முதல் வாரம் (வியாழக்கிழமை) வெளிவந்துள்ளது. ஓராண்டில் உள்ள 52 வியாழக்கிழமைகளில் 26வது மற்றும் 52வது வியாழக்கிழமை கலாநிலையத்திற்கு விடுமுறை நாளாகும். ஆகவே, முதல் 25 வாரப் பகுதிகள் ஒரு கட்டடமாகவும், அடுத்த 25 வாரப் பகுதிகள் மற்றொரு கட்டடமாகவும் என ஆண்டிற்கு இரண்டு கட்டடங்களாக வெளிவந்துள்ளன. என்றாலும் இரண்டு கட்டடங்களும் முறையான தொடர் எண்ணைப் பெற்று ஒரே தொகுதியாக அமைந்துள்ளது.

இலக்கியச் செறிவு மிகுந்த இலக்கியங்களை எளிய வரும் எளிதில் புரிந்து தெளியும் வண்ணம், மாணவர் வினா எழுப்புவது போலவும், அதற்கு ஆசிரியர் விடையளிப்பது போலவுமான நடையில் 'தமிழ்ப்பாடம்' என்ற பகுதி வெளி யிடுவது; தமிழ் இலக்கிய இலக்கணங்களில் தேர்ச்சி பெற்றுப் பல்வேறு இடங்களிலுள்ள அறிஞர்களின் கருத்துகள் மற்றவர்க்கும் பயன்படும் முறையில் வெளியிடுவது; தமிழே தமதுயிர் என்றெண்ணி வாழ்ந்து வரும் தமிழ்ப் புலவர்களுக் காகச் சிறந்த ஆங்கிலப் புவவர்களின் நயமான பகுதிகளை மொழிபெயர்த்து வெளியிடுவது; அரசியல், சமூக சீர்த்திருத்தம் போன்றவற்றில் ஈடுபடாமல் முற்றிலும் இலக்கிய இதழாகவே அமைவது போன்ற முக்கிய நோக்கங்களுடன் கலாநிலையம் வெளிவந்திருக்கிறது. இதனை டி.என். சேஷாசலம், "கம்பர் போன்ற தமிழ்க் கவிகளின் அழகையும் நயத்தையும் கேள்வி யுற்றுத் தாமும் அக்கவிகளைப் படித்து அனுபவிக்க வேண்டும் எனும் விருப்பு இக்காலம் எல்லோர் மனத்திலும் தோன்றியிருக்

கின்றது. எனினும், பழக்கக் குறைவினால் எடுத்த புத்தகத்தைப் படித்துப் பொருள் புரிந்துகொள்ள முடியாமல் பலர் மனம் சோர்ந்து சும்மா இருந்துவிடுகின்றனர். ஆர்வம் இருந்தும் அவரது ஆசையை நிறைவேற்றிவைக்கத் தகுந்த சாதனங்கள் இல்லாத படியினால் ஊக்கம் தளர்ச்சியடைவது இயல்பே. இப்படிப்பட்டவர் இலக்கிய இன்பம் அனுபவிப்பதற்கு வேண்டிய அளவு தமிழ்ப் பயிற்சி பெறுவதற்கு உதவியாய் இப்பத்திரிகையில் 'தமிழ்ப் பாடம்' என்னும் தலைப்பின் கீழ் வாரந்தோறும் பாடங்கள் ஓதி வருவோம். இந்த முறையில் தொடர்ச்சியாய்ச் சிறிது கவனத்தோடும் படித்து வருபவர் எவர்க்கும் இரண்டொரு வருடங்களில் கம்பராமாயணம், சிந்தாமணி போன்ற நூல்களும் எளிதில் பொருள் விளங்காமற் போகா என்பது நிச்சயம்.

தமிழ் இலக்கிய இலக்கணங்களில் மிக்க தேர்ச்சி பெற்ற அறிஞர் பற்பலர் இந்நாட்டில் பலவிடங்களில் இருக்கின்றனர். அவர்களுள் ஒருவருக்கு ஒருவர் தொடர்பு இன்றி அவரவர் ஆய்ந்து உணர்ந்த அரும்பொருள்கள் மற்றவர்க்கு எட்டாமல் போக நேர்வது இக்காலத் தமிழின் நிலைக்கு உள்ள ஒரு பெரும் குறை. சுவைப்பொருளை உண்போர் யாவரும் விருந்தோடு உண்ண வேண்டுவர். கவிகளில் அவரவர் கண்ட நயமும் பயனும், கூறுவோர் கேட்போர் இருவர்க்கும் இன்பம் அளிக்கும் தன்மையன. ஆதலால், அனையவர் அனைவரும் தம்முடன் அளவளாவி மகிழ்வதற்கு இப்பத்திரிகை புதியதோர் தூதுமாய் உலவும்.

அல்லாது, தமிழ்மொழி இளைத்திடாமல் இதுகாறும் நிலை நின்று வருவதற்கு ஆதாரமாய் நமது தமிழ்ப் பண்டிதர் களுக்கும், முன்னுரைத்த தூதன்றி இன்னுமொன்று யாம் செய்யக் கடமைப்பட்டுள்ளோம். இவர்களில் ஆங்கிலப் பயிற்சி இல்லாதவர் அம்மொழியில் எழுதியுள்ள பெரும்புலவர்களது திறமையும் அறிவும் அவர் கண்ட வாய்மையும் உணர்ந்து கொள்ள இயலாதவராயிருக்கின்றனர். இந்தக் குறையை ஒரு சிறிது தவிர்ப்பதற்கு எண்ணி, ஆங்கிலப்

பேராசிரியர்களின் நூல்களின் நயமான பாகங்களைத் தேர்ந்தெடுத்து மொழிபெயர்த்தும் விளக்கியும் இப்பத்திரிகையில் எழுதிவருவோம்.

நினைத்த கருமங்களுக்கு ஏற்ப இப்பத்திரிகையில் வெளிவரும் விஷயங்களை மூன்று வகைகளாய்ப் பிரித்தோம். எனினும், எல்லாம் யாவர்க்கும் படிக்கப் பயனும் சுவையும் உடையனவாகவே இருக்கும். நவீன கதையுமொன்று நல்ல நடையில் சுவையும் அமைப்பும் பிறழாமல் தொடர்ந்து வரக் காண்பீர்.

அரசியல் முறைகளின் குணாகுணங்களைப் பற்றி வாதிக்க இப்பத்திரிகை நினைத்ததில்லை. மதாசார குலாசார தேசாசார சீர்திருத்த வழக்குகளுக்குக் கலாநிலையத்தில் இடம் இராது" (கலாநிலையம், 1:1:1928, ப.1) என்றார்.

இந்நோக்கங்களிலிருந்து சிறிதும் மாறுபடாத இவ்விதழில் இலக்கியம் தொடர்பான கட்டுரைகள், விவாதங்கள், இலக்கிய நூல்கள், உரைகள், தமிழ்ப் பாடம், மொழிபெயர்ப்புகள், சுவடிப்பதிப்புகள் போன்றன வெளிவந்துள்ளன. இலக்கிய நூல்களில் ஏற்கெனவே வெளிவந்த நூல்களுக்கு உரைகளும், புதியதாகச் சுவடியில் இருந்து அறிமுகப்படுத்தும் நூல்களுக்கு மூலமும் வெளிவந்துள்ளன. இவ்விதழ் 25.7.1935 வரையே வெளிவந்துள்ளது.

இவ்விதழில் அண்டபுராணம், கலைமகளந்தாதி, களவியற்றுறை விளக்கம், திருவிளையாடற் கருணைத்திரு விருத்தம், தினகர வெண்பா, பொதிகை நிகண்டு 1 & 2, மதுரைக் கோவை, மாறன் பாப்பாவினம், ஸ்ரீவைகுந்தநாதர் பிள்ளைத்தமிழ் ஆகிய பத்துச் சுவடிப்பதிப்புகள் வெளிவந் திருக்கின்றன.

தேனோலை

'தேனோலை' எனும் காலாண்டிதழ் கொடுமுடி சண்முகப்பிரகதத்தை ஆசிரியராகக் கொண்டு சென்னையிலிருந்து 1974ஆம் ஆண்டு ஜூலை முதல் வெளிவந்துள்ளது. ஒவ்வொரு

காலாண்டிதழும் தொடரெண் பெற்றுள்ளது. பழஞ்சுவடிகளில் காணப்படக்கூடிய பட்டயங்கள், பட்டாக்கள், நூல்கள் எனப் பல நிலைகளில் இவ்விதழ் வெளிவந்துள்ளது.

இவ்விதழில் திருநீலகண்டர் பள்ளு, பூர்வச்சக்கரவர்த்தி நாடகம், மெச்சும்பெருமாள் பாண்டியன் கதை ஆகிய மூன்று சுவடிப்பதிப்புகள் வெளிவந்திருக்கின்றன.

புலமை

'புலமை' எனும் காலாண்டிதழ் திரு.கந்தசாமியை ஆசிரியராகக் கொண்டு சென்னையிலிருந்து 1975ஆம் ஆண்டு சனவரி முதல் வெளிவந்துகொண்டிருக்கின்றது. முதல் ஒன்பது இதழ்கள் காலாண்டிதழாகவும் அதற்கடுத்த இதழிலிருந்து அரையாண்டிதழாகவும் வெளிவந்துகொண்டு இருக்கின்றது. இதில் இலக்கணம், மொழியியல், சங்க இலக்கியம், காப்பியம், வரலாறு போன்ற பல்தமிழ்த் துறைகளில் ஆய்வுக் கட்டுரைகள் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வெளிவருகின்றன. ஒவ்வோர் ஆய்வுக் கட்டுரையும் நூல் வடிவம் பெறுதற்குரிய அருமை வாய்ந்தவை. கலப்பு மொழியாக இல்லாமல் கட்டுரைகள் தமிழாகவும் உயர்ந்த நடையமைப்பும் கொண்டுள்ளன. இவ்விதழ், ஆய்வுப் பொருளுக்கும் நடைக்கும் முக்கியத்துவம் கொடுத்துள்ளது எனலாம்.

ஆராய்ச்சிக் கட்டுரைகளுக்கே முதன்மை தந்து கொண்டிருக்கும் இவ்விதழில் 'இலக்கண தீபம்' எனும் சுவடிப் பதிப்பு வெளிவந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

2. தமிழ்ச்சங்கப் பருவ இதழ்கள்

முத்தமிழ் வளர்த்த மூவேந்தர்களுள் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த தனிப்பெருமை பாண்டியரையே சாரும். முதல்-இடை-கடைச் சங்கங்கள் மூன்றும் பாண்டிய நாட்டிலேயே தோன்றி மறைந்தன என்பர். முச்சங்கங்கள் இருந்ததை இலக்கிய இலக்கண நூல்கள் சுட்டுகின்றன. திருநாவுக்கரசர் தேவாரம்,

"நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி
நல்கனகக்கிழி தருமிக்கு அருளினோன் காண்"
(தேவாரம், 6:76:3)

என்பதால் முதற் சங்கம் இருந்ததை அறியமுடிகிறது. மேலும், இறையனார் அகப்பொருள் நக்கீரர் உரையால் சங்கம் பற்றிய முழு விவரத்தை அறியமுடிகிறது. அதாவது, தலைச்சங்கம் கடல்கொள்ளப்பட்ட மதுரையிலும், இடைச்சங்கம் கபாட புரத்திலும், கடைச்சங்கம் உத்தர மதுரையிலும் இருந்தன என்பார் நக்கீரர். மேலும், அவர்தம் உரையால் முச்சங்கங்களும் மூவேறிடங்களில் தோன்றிக் கடல்கோள்களால் அடுத்தடுத்து அழிந்ததையும், ஏறக்குறைய 197 அரசர்கள் காலத்தில் 10,000 ஆண்டுகள் இருந்ததையும் அறியமுடிகிறது (இறையனார் அகப்பொருள் உரை, கழக வெளியீடு, 1976, பக்.5-6).

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் 1901ஆம் ஆண்டு பொ. பாண்டித்துரைத் தேவரால் மீண்டும் மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கம் தோற்றுவிக்கப்பெற்றுள்ளது. இதுவே இன்றைய மதுரைத் தமிழ்ச்சங்கம் ஆகும். இதனைத் தொடர்ந்து தமிழர்கள் வாழுமிடமெல்லாம் தமிழ்ச் சங்கங்கள் தோன்றலாயின. இவ்வகையில் தஞ்சை, கரந்தை, சென்னை, திருப்பத்தூர், காரைக்குடி, திண்டுக்கல், திருச்சி, சேலம், கோவை, தருமபுரி, ஊற்றங்கரை, தாரமங்கலம், கரூர் போன்ற தமிழகத் தமிழ்ச் சங்கங்களும்; தில்லி, மும்பை, கொல்கத்தா, பெங்களூர், எர்ணாகுளம், கோட்டயம், திருவனந்தபுரம், கொச்சி, கள்ளிக்கோட்டை, மைசூர், ஜெய்ப்பூர், நாக்பூர், திர்பரோடா, சூரத் போன்ற பிற மாநிலத் தமிழ்ச் சங்கங்களும்; இலண்டன், பெரிலின், நியூயார்க், சிகாகோ போன்ற அயல் நாட்டுத் தமிழ்ச் சங்கங்களும் குறிப்பிடத்தக்கனவாகும்.

இத்தமிழ்ச் சங்கங்கள் தங்களின் தமிழ்ப் பணியைப் பல்வேறு நிலைகளில் செயலாற்றி வருகின்றன. குறிப்பாக, சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்தல், தமிழிலக்கிய இலக்கண நூல்களை அச்சிட்டு வெளியிடுதல், பிற

மொழியாளர் களுக்குத் தமிழ்மொழியைப் பயிற்றுவித்தல், கருத்தரங்கம், உரையரங்கம், பட்டிமண்டபம், கவியரங்கம் ஆகியவற்றை நடத்துதல், தமிழ் விழாக்கள் நடத்துதல், தமிழ் நூல் நிலையம் அமைத்தல், துறைதோறும் தமிழை வளர்த்தல், தமிழ்த் தேர்வுகள் நடத்திச் சான்றிதழ் வழங்குதல் போன்ற பல தமிழ்ப் பணிகளை ஆற்றி வருகின்றன.

இவற்றோடு பழஞ்சுவடிகளிலிருந்து நூல்களைப் பதிப்பிக்கும் பணியையும் சில தமிழ்ச் சங்கங்கள் செயலாற்றி வந்துள்ளன. இவ்வகையில் மதுரைத் தமிழ்ச்சங்கம் ஐந்திணை ஐம்பது உரையுடன், கனாநூல், வளையாபதிச் செய்யுட்கள், புலவராற்றுப்படை, இனியது நாற்பது உரையுடன், நேமிநாதம் உரையுடன், திருநூற்றந்தாதி உரையுடன், திணைமாலை நூற்றைம்பது உரையுடன், அநுமான விளக்கம், அட்டாங்க யோகக்குறள், பன்னிருபாட்டியல், நான்மணிக் கடிகை பழைய உரையுடன், முத்தொள்ளாயிரச் செய்யுட்கள், திருச்செந்திற் கலம்பகம், திருவாரூருலா, சுகசந்தர்சன தீபிகை, தேவையுலா, நரிவிருத்தம், சிதம்பரப் பாட்டியல் உரையுடன், திருக்கலம்பகம் உரையுடன், விக்கிரமசோழனுலா, குருமொழி வினாவிடை, கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை, திருத்தணிகைத் திருவிருத்தம், மதுரைத் திருப்பணிமாலை, சந்திராலோகம், ஞானாமிர்தக் கட்டளை, பாண்டியம், மநீஷா பஞ்சகம், அகப் பொருள் விளக்கம், திருமந்திரம் நூறு பாட்டுக்குரை, உவமான சங்கிரகம்-1, உவமான சங்கிரகம்-2, மாறனலங்காரம் மூலமும் உரையும், திருப்புல்லாணி மாலை, பழமொழி மூலமும் பழைய உரையும் (முதல் 100 செய்யுள்), திருமாலிருஞ்சோலைமலை அழகர் பிள்ளைத்தமிழ், பொருட்டொகை நிகண்டு, அகராதி நிகண்டு, மேகவிடுதூது, திருக்குற்றால மாலை, தண்டலையார் சதகம், இராமோதந்தம், பழமொழி மூலமும் பழைய உரையும் (2ஆவது 100 செய்யுள்), சேதுநாடும் தமிழும், மதங்க சூளாமணி, கூடற்புராணம், அரும்பொருள் விளக்க நிகண்டு, மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும், பாப்பாவினம் (மாறன் பாப்பாவினம்), மதுரை மும்மணிக்கோவை, பழனிப்

பிள்ளைத்தமிழ், கடம்பர்கோயில் உலா, சங்கரநயினார் கோயில் அந்தாதி, கலைசைக் கோவை, பெருந்தொகை, சூடிக் கொடுத்த நாய்ச்சியார் தோத்திரப் பாமாலை, சிராமலைக் கோவை, மத்யமவியாயோகம், அமிர்தரஜ்ஜனி, திருமுருகாற்றுப்படை, பொன்வண்ணத்தந்தாதி போன்ற சுவடிப் பதிப்புகளையும்; கரந்தைத் தமிழ்ச்சங்கம் நெல்லை வருக்கக் கோவை, சித்தரந்தாதி, தொல்காப்பியம் - பொதுப்பாயிரம், கச்சிக் கலம்பகம், பரத சாத்திரம், தமிழரசி குறவஞ்சி, தொல்காப்பியம் - சொல்லதிகாரம் தெய்வச்சிலையார் உரை போன்ற சுவடிப்பதிப்புகளையும்; கோவைத் தமிழ்ச் சங்கம் சி.கே. சுப்பிரமணிய முதலியாரின் விளக்கவுரையுடன் பெரியபுராணம் என்னும் திருத்தொண்டர் புராணம் பல தொகுதிகள் மற்றும் சேரவேந்தர் செய்யுட்கோவை ஆகிய சுவடிப்பதிப்புகளையும் வெளியிட்டுள்ளன.

இப்பணிகளோடு பருவ இதழ் வெளியீட்டுப் பணியும் நிகழ்ந்திருக்கின்றன. மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் 'செந்தமிழ்', தஞ்சைத் தமிழ்ச்சங்கத்தின் 'தமிழகம்', கோவைத் தமிழ்ச் சங்கத்தின் 'கொங்குமலர்' மற்றும் நூலிதழ்களான பெரியபுராணம் என்னும் திருத்தொண்டர் புராணம், சேரவேந்தர் செய்யுட் கோவை, கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் 'தமிழ்ப்பொழில்', சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தின் 'தமிழ்த்தாய்', மும்பைத் தமிழ்ச் சங்கத்தின் 'சங்கச் செய்தி', பெங்களூர் தமிழ்ச் சங்கத்தின் 'காவேரி-ஊற்று'', பெர்லின் தமிழ்ச் சங்கத்தின் 'தமிழன் குரல்' போன்ற தமிழ்ச்சங்கப் பருவ இதழ்களைக் குறிப்பிடலாம். இவற்றில் செந்தமிழ் (1902), தமிழ்ப்பொழில் (1925), கொங்குமலர் (1934) ஆகிய தமிழ்ச் சங்கப் பருவ இதழ்கள் சுவடிப்பதிப்புகளை வெளியிட்டுள்ளன. சுவடிப்பதிப்புகளை வெளியிட்ட தமிழ்ச் சங்கப் பருவ இதழ்களில் கொங்குமலர் தவிர ஏனைய இரண்டும் இன்று வரை தொடர்ந்து வெளிவந்துகொண்டு இருக்கின்றன.

செந்தமிழ்

பாண்டித்துரைத் தேவரால் கி.பி.1901ஆம் ஆண்டு மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கம் நிறுவப்பெற்றது. இதுவே

இப்போதுள்ள 'மதுரைத் தமிழ்ச் சங்கம்' ஆகும். இச்சங்கத் திற்கென 1902ஆம் ஆண்டு 'செந்தமிழ்' எனும் திங்களிதழ் ஒன்று உருவாக்கப்பெற்றது. 1-11 தொகுதிகளுக்கு மு. இராக வையங்காரும், 12-48 தொகுதிகளுக்குத் திரு. நாராய ணையங்காரும், 49-51 தொகுதிகளுக்குத் திருவாளர் நா. அப்ப ணையங்காரும் பத்திராசிரியர்களாகப் பணியாற்றி யுள்ளனர். இவர்களுக்குப் பிறகு சங்க நிர்வாக ஆசிரியர் பி.டி. இராசனும், அவருக்குப் பிறகு சங்கச் செயலாளர், தலைவர் மற்றும் துணைத் தலைவர் போன்றோரும் பத்திராசிரியர்களாகப் பணியாற்றி வருகின்றனர்.

இவ்விதழில் தமிழிலக்கிய இலக்கணம் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகள், அச்சிடப்பெறாத பழந்தமிழ் நூல்கள், தமிழ்நாட்டு வரலாறு மற்றும் தமிழ்ப் புலவர்கள் வரலாறு, ஆவணங்கள், ஆங்கிலம் & சமஸ்கிருத மொழிபெயர்ப்புகள், தமிழ் வளர்ச்சிக்கும் மேன்மைக்கும் தேவையான கருத்துகள் போன்றன வெளிவந்துள்ளன. இதனை இவ்விதழாசிரியர், "இது, பெரும்பான்மையும் தமிழிலக்கிய இலக்கண விஷயங்களும், புராதன சரிதங்களும், சாஸனங்களும், வடமொழியினும் ஆங்கிலத்தினுள் தமிழிற்கு வேண்டுவனவாகக் கருதப்படும் நூன்மொழி பெயர்ப்புகளும் ஒன்றையொன்றிகழாச் சமயக் கொள்கைகளும், தமிழின் அருமை பெருமையடங்கிய விஷயங்களும், தமிழ் வளர்ச்சிக்கு வேண்டுவன பிறவும் கொண்டு நடைபெறுகின்றது. இப்பத்திரிகை மூலம் வெளிவரும் செந்தமிழ் நூல்கள், தனித்தனி புத்தகங்களாதற்கு உரிய நிலையில் அச்சிடலாகும்" (செந்தமிழ், 2:6:1904, ப.4) என்றார். இந்நோக்கங்களிலிருந்து வழுவாமல் திருவாளர் நா. அப்பணையங்காரின் காலம் வரை செயலாற்றி வந்துள்ள செந்தமிழ் இதழ், பிறகு அதன் போக்கில் பெரும்மாற்றம் தெரிகின்றது.

இவ்விதழிற்குத் தொடக்க காலத்தில் கட்டுரை எழுதிய அறிஞர்களில் சோழவந்தான் அரசஞ் சண்முகம்பிள்ளை, வி.கோ. சூரியநாராயண சாஸ்திரி, யாழ்ப்பாணம் நா. கதிரைவேற்

பிள்ளை, உ.வே. சாமிநாதையர், சுன்னாகம் அ. குமாரசாமிப் பிள்ளை, பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர், அ. மாதவையர், வை.மு. சடகோபராமாநுஜாச்சாரியார், தி. செல்வக்கேசவராய முதலியார், எம்.கே.எம். அப்துல் காதிரு ராவுத்தர், ஆ. முத்துத் தம்பி பிள்ளை, எம். ஜோசப்டையஸ் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்களாவர்.

செந்தமிழ் இதழில் அகப்பொருள் விளக்கம் மூலமும் உரையும், அகராதி நிகண்டு, அசதிக்கோவை, அட்டாங்க யோகக்குறள், அம்பிகை நவமணிமாலை, அரும்பொருள் விளக்க நிகண்டு, அருவியன் காதை, ஆசிரியமாலைச் செய்யுட்கள், ஆழ்வார் பிள்ளைத்தமிழ், ஆன்மலிங்கமாலை, இரணியன் வதைப்பரணி, இராமசெயம் (இராமாயணத் திருப்புகழ்), இராஜராஜ தேவருலா, இலக்கண தீபம், இனியது நாற்பது உரையுடன், உவமான சங்கிரகம்-1, உவமான சங்கிரகம்-2, எதிராசரந்தாதி, ஐந்திணையெழுபது உரையுடன், ஐந்திணையைம்பது உரையுடன், கடம்பர்கோயில் உலா, கம்பராமாயணக் கௌஸ்துபம், கரவைவேலன் கோவை, கலசைக் கோவை, கனா நூல், காழியந்தாதி, கீழ்வேளூர் உலா, குருகைமான்மியம்-1, குருகைமான்மியம்-2, குருபரம்பரை, கூடற்புராணம், சங்கரசோழனுலா, சங்கரநயினார் கோயில் அந்தாதி, சதுரங்க நூல், சிதம்பரப் பாட்டியல் உரையுடன், சிராமலைக்கோவை, சிறைவிடந்தாதி, சோடசகலா பிராசாத யோகம், சோடசகலா பிராசாத விருத்தம், சௌமிய நாராயணப் பெருமாள் திருநாள் வாகனக்கவி, தண்டலையார் சதகம், தருக்க சூத்திரம், தளசிங்க மாலை, தளவாய் ரெகுநாத சேதுபதியவர்கள் மீது வண்ணம், திணைமாலை நூற்றைம்பது, திருக்கயிலாய ஞான உலா, திருக்கலம்பகம் மூலமும் உரையும், திருக்குருகூர்த் திருப்பணிமாலை, திருக்குறுங்குடி அழகியநம்பி பிள்ளைத்தமிழ், திருக்குற்றால ஊடற்பிரபந்தம், திருக்குற்றால மாலை, திருச்சிறுபுலியூர் உலா, திருச்செந்திற் கலம்பகம், திருச்செந்தூர்ப்பரணி, திருஞானசம்பந்த சுவாமிகள் பிள்ளைத்தமிழ், திருத்தணிகைத் திருவிருத்தம், திருத்தொட்டிக்

கலைக் கேசவப்பெருமாள் வண்ணம், திருநறையூர் நம்பி மேகவிடுதூது, திருநூற்றந்தாதி மூலமும் உரையும், திருப்பணி மாலை, திருப்பதிக்கோவை, திருப்புல்லாணிச் செகநாதர் பேரில் ஊசல்-வண்ணம்-விண்ணப்பம் - சிந்து, திருப்புல்லாணி நொண்டி நாடகம், திருப்புல்லாணி பதுமாசனித் தாயார் பேரில் ஊசல், திருமாலிருஞ்சோலைமலை அழகர் பிள்ளைத்தமிழ், திருமுருகாற்றுப்படை உரையாசிரியருரை, திருவாரூருலா, திருவாரூர் இரட்டைமணிமாலை, தேவையுலா, தொட்டிக்கலைச் கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை, தொல்காப்பியம்-பொருளதிகாரம்-செய்யுளியல் நச்சினார்க் கினியர் உரை, நந்திக்கலம்பகம், நம்மாழ்வார் வண்ணம், நரி விருத்தம், நாலடியார் திருத்தவுரை, நான்மணிக்கடிகை பழைய உரை, நுண்பொருண் மாலை, நேமிநாதம், பதிபசுபாசத் தொகை, பழமொழி மூலமும் உரையும், பழனிக்கோவை, பழனிப் பிள்ளைத்தமிழ், பன்னிருபாட்டியல், பாண்டி மண்டல சதகம், பாப்பாவினம், பிரபந்த தீபிகை, பிராசாத அகவல், பிராசாத தீபம், பிராசாத மாலை, புரூரவ சரிதை, புலவராற்றுப்படை, புல்லையந்தாதி, பெருந்தொகை, பெரும்பொருள் விளக்கப் பாடல்கள், பொருட்டொகை நிகண்டு, பொன்வண்ணத்தந்தாதி, மதுரை மும்மணிக்கோவை, மாறனகப்பொருளும் திருப்பதிக் கோவையும், மாறனலங்காரம், மிழலைச் சதகம், முத்திரை, முத்தொள்ளாயிரச் செய்யுட்கள், ராம சரிதப்பாட்டு, வருத்தமறவுய்யும் வழி, வளையாபதிச் செய்யுட்கள், விக்கிரம சோழனுலா ஆகிய 109 சுவடிப்பதிப்புகள் வெளிவந்திருக்கின்றன. இவற்றில் பெரும்பாலானவை தனி நூலாக்கம் பெற்றிருக்கின்றன.

செந்தமிழ் தொடங்கிய நாள் தொட்டு இன்று வரை தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கின்றது. என்றாலும், இடையிடையே சில திங்கள்கள், சில ஆண்டுகள் வெளிவர வில்லை. பல இதழ்கள் இணைந்த பகுதிகளாகவும் வெளிவந்து உள்ளன. நவம்பர் 1938 - அக்டோபர் 1939 மற்றும் நவம்பர் 1948 - அக்டோபர் 1949 ஆகிய இரண்டு ஆண்டுகளும்,

தொகுதி *58:11-12, 61:4-5. 65:1-2. 66:1, 69:2-3* ஆகிய இதழ்ப் பகுதிகள் வெளிவரவில்லை.

10:10-12; 15:7-9; 39:4-5 & 11-12; 41:6-8 & 9-12; 42:8-9 & 10-12; 43:1-2, 4-5 & 10-11; 44:1-2, 4-5, 7-8 & 10-11; 45:5-6, 7-8, 9-10 & 11-12; 46:4-5, 6-7, 8-9 & 10-12; 47:2-3, 4-5, 6-7, 8-9 & 10-12; 48:1-2, 3-4, 5-6, 7-8, 9-10 & 11-12; 49:1-2, 3-4, 5-6, 7-8 & 9-10; 57:11-12; 59:1-2, 3-5, 6-8 & 9-12; 60:1-2, 3-4, 5-6, 7-9 & 10-12; 61:1-2 & 7-8; 73:3-4 ஆகிய பகுதிகள் இணைந்த இதழ்களாக வெளிவந்திருக்கின்றன. 59ஆம் தொகுதி முதல் காலாண்டிதழாக வெளிவந்துகொண்டு இருக்கிறது. திங்களிதழாக வெளிவந்த முதல் 58 தொகுதிகளுக்குள் மட்டுமே சுவடிப்பதிப்புகள் வெளிவந்திருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்ப்பொழில்

'கரந்தைத் தமிழ்ச்சங்கம்' உயர்திரு த.வே. இராதாகிருட்டின பிள்ளையால் 14.5.1911ஆம் ஆண்டு தஞ்சைக்கருகே கருந்தட்டாங்குடி என்னும் கரந்தையில் தோற்றுவிக்கப்பெற்றது. சங்கத்திற்கென்று தனியே ஓர் இதழ் வெளியிட எண்ணி 1913ஆம் ஆண்டு 'தமிழவேள் தமிழ்மொழி' தொடங்கப்பெற்றது. ஆயினும் இது தொடர்ந்து வெளிவரவில்லை. 1914ஆம் ஆண்டில் மீண்டும் இதழ் தொடங்கத் திட்டமிட்டு 1925ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் 'தமிழ்ப்பொழில்' தோன்றியது. கவியரசு ரா. வேங்கடாசலம் பிள்ளை இவ்விதழின் முதல் ஆசிரியராவார். திங்களிதழாகத் தொடங்கி இன்று வரை தொடர்ந்து வெளிவந்துகொண்டிருக்கிறது.

தமிழ்ப்பொழில் தொடங்கி நாற்பதாண்டுகள் வரை (1966 ஏப்ரல் வரை) இடையறவின்றி வெளிவந்துள்ளது. பின்னர் மே 1966 முதல் ஏப்ரல் 1968 வரை வெளிவரவில்லை. மீண்டும் தமிழ்ப்பொழில் தலையெடுத்துத் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கிறது என்றாலும் சில தொய்வுகளும் ஏற்பட்டுள்ளன. துணர்கள் 9-19, 25-28, 32-37, 45-49, 54

ஆகியன மட்டும் தனித்தனி மலர்களைக் கொண்டிருந்தன. இடையில் வெளிவந்த துணர்களில் மலர்கள் இரண்டோ மூன்றோ இணைந்து ஒரு தனியிதழாக வெளிவந்துள்ளன. துணர் 55, மலர் 4லிருந்து தொடர்ந்து திங்களுக்கொன்றாக வெளிவந்துகொண்டிருக்கின்றது.

கரந்தைக் கவியரசு வேங்கடாசலம் பிள்ளை, திருவாளர்கள் எல். உலகநாத பிள்ளை, நீ. கந்தசாமிப் பிள்ளை, ஐ. குமாரசாமிப் பிள்ளை, கோ.சி. பெரியசாமிப் புலவர், அ. கணபதிப் பிள்ளை, ச. சுயம்பிரகாசம், செ. தனக்கோடி, அரங்க வே. சுப்பிரமணியன் ஆகியோர் பொழிற்றொண்டராய் விளங்கினர். பொழிலின் 22 துணர்களில் தமிழறிஞர்களே பொழிற்றொண்டர்களராக இருந்துள்ளனர். பின்னர் கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவர், அமைச்சர் போன்றோரும் பொழிற் றொண்டர்களாக இருந்திருக்கின்றனர். 1983ஆம் ஆண்டு முதல் பாவலரேறு ச. பாலசுந்தரனார் அவர்கள் பொழிற்றொண்டராகப் பணியாற்றி வந்துள்ளார்.

இவ்விதழில் தமிழ் வளர்ச்சி, தமிழர் மேம்பாடு பற்றிய கட்டுரைகள் அதிகம் வெளிவந்துள்ளன. சிறப்பாகத் தமிழ் மொழி வரலாறு, சொல்லாக்கம், மொழிபெயர்ப்புகள், தமிழ் நூல் ஆராய்ச்சி, ஆய்வுக் கட்டுரைகள், நிகழ்கால ஆசிரியர்தம் நூல்கள், பழந்தமிழ் நூல்கள், அரிய நூல்களின் தமிழ் மொழிபெயர்ப்புகள், தமிழ்த் தனிச் செய்யுள்கள், தமிழ்நல் மதிப்புரைகள், தமிழ்ச்சங்கச் செய்திகள் போன்றன வெளிவந்து உள்ளன.

தமிழ்ப்பொழிலில் உதயகுமார காவியம், கருந்திட்டைக் குடிப் பதிகம், குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ், சித்தரந்தாதி, சிராமலையந்தாதி, சுவாமிநாதம், தத்துவ விளக்கம், தியாகராசர் பள்ளேசல், திருமலை வெண்பா, தில்லையுலா, நெல்லை வருக்கக் கோவை, பட்டமதன வித்தார மாலை, பதிபசுபாசத் தொகை, பதிபசுபாசப் பனுவல், பதிபசுபாச வகை, பரத சாத்திரம், பரமோபதேசம், பழைய பாடற்றிரட்டு, புலவர் பிணைபோன வரலாறு, வசந்தன் உயிர்வரு படலம் ஆகிய இருபது சுவடிப்பதிப்புகள் வெளிவந்திருக்கின்றன.

கொங்குமலர்

மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்கு முன்னரே கோவைத் தமிழ்ச்சங்கம் தோன்றியதாகத் தெரிகிறது. என்றாலும் செயற்பாடுகள் எல்லாம் கோவை எல்லைக்குள்ளேயே இருந்திருக்கின்றன. திருவாளர்கள் சி.எம். இராமச்சந்திர செட்டியார், சி.கே. சுப்பிரமணிய முதலியார் ஆகியோரின் முயற்சியால் கோவைத் தமிழ்ச்சங்கம் உலகிற்கு அறிமுகமாகி இருக்கின்றது. சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியாரை ஆசிரிய ராகக் கொண்டு கோவைத் தமிழ்ச்சங்க வெளியீடாக 1934ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் முதல் 'கொங்குமலர்' எனும் திங்களிதழ் தோற்றுவிக்கப்பெற்றிருக்கின்றது.

"கொங்கு மலர் ஆறு பகுதிகளைக் கொண்டது. அதாவது, செய்யுள் பகுதி, சரிதப் பகுதி, கலைப் பகுதி, சமயப் பகுதி, ஆராய்ச்சிப் பகுதி, ஒழிபு ஆகும். மூன்றாம் மலரி லிருந்து ஒழிபு என்னும் பகுதியில் இனிமேல் நாட்டு நடப்பு, திங்கள் விசேஷங்கள், கல்வி சம்பந்தமான பிரகடனங்கள் இவை வரும். முக்கியமாகக் கொங்கு நாட்டில் நடைபெறும் உற்ச வாதிகள் குறிக்கப்பெறும். உபாத்தியாயர்களுக்கு அனுகூலமான செய்திகள் பிரசுரிக்கப்பெறும். வாரந்தோறும் (திங்கள்) ஒரு கதை அல்லது இரண்டு கதைகள் எழுதப்பெறும். இன்னமும் பொது ஜனங்களுக்கு அனுகூலமான பல கட்டுரைகள் வெளிவரும்" (கொங்கு மலர், மலர் 3,1936, ப.2) என்பதால் கொங்கு மலரின் நோக்கம் புலப்படும். இம்மலர், தொடர் எண் பெற்று வெளிவந்துள்ளது.

இவ்விதழில் ஆனந்தரங்கன் கோவை, தென்சேரி மாலை ஆகிய இரண்டு குறைச்சுவடிப்பதிப்புகள் வெளிவந்து இருக்கின்றன. இவ்விதழ் நான்கு மலரோடு நின்றுள்ளது.

3. சுவடிநூலகப் பருவ இதழ்கள்

சுவடி நூலகங்கள், நிறுவனங்கள் போன்றவற்றில் உலகெங்கும் பழந்தமிழ்ச் சுவடிகள் பாதுகாக்கப்பெற்று

வருகின்றன. தனியார் பலரிடமும் பல்லாயிரக்கணக்கான தமிழ்ச் சுவடிகள் இருப்பதாக அறியமுடிகிறது. "ஐரோப்பிய நாடுகளில் பிரிட்டன், பிரான்ஸ், நெதர்லாண்ட், டென்மார்க், சுவிட்சர்லாந்து, ஜெர்மனி, இத்தாலி, போர்ச்சுக்கல், பெல்ஜியம், ருமேனியா, அயர்லாந்து, ஸ்காட்லாந்து, ஸ்வீடன், பின்லாந்து, ஸ்பெயின், நார்வே, செக்கோஸ்லாவாகியா, போலந்து போன்ற பல நாடுகளிலும் தமிழ்ச்சுவடிகள் இருப்பதை அறியமுடிகிறது. பிரிட்டனில் மட்டும் இலண்டன், ஆக்ஸ்போர்டு, மாண்செஸ்டர், கேம்பிரிட்ச், எடின்பரோ, கிளாசுகோ முதலிய இடங்களில் நானூற்றிற்கும் மேற்பட்ட தமிழ்ச்சுவடிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன" (வே.இரா. மாதவன், சுவடிப் பதிப்பியல், ப.211).

இதேபோல் இந்தியாவில் கொல்கத்தா தேசிய நூலகம், திருவனந்தபுரம் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், மதுரைத் தமிழ்ச் சங்கம், திருப்பதி ஸ்ரீவெங்கடேஸ்வரா பல்கலைக் கழகம், அடையாறு நூலகம், மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் நூல் நிலையம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடித்துறை, பேரூர் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க்கல்லூரி, ஈரோடு கலைமகள் கல்வி நிலையம், சென்னை - உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், பிரெஞ்சிந்திய நிறுவனம், திருவாவடுதுறை ஆதீனம், சிதம்பரம் ஸ்ரீமௌன சுவாமிகள் திருமடம், சென்னை ஆசியவியல் நிறுவனம், தஞ்சை சரஸ்வதிமகால் நூலகம் போன்ற இடங்களில் தமிழ்ச் சுவடிகள் இருக்கின்றன. இவற்றில் சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், தஞ்சை சரஸ்வதிமகால் நூலகம், மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடித்துறைச் சுவடிகள் நூலகம் போன்றவை தமிழகச் சுவடி நூலகங்களாகும். இந்நூலகங்கள் சுவடிப்பதிப்புப் பணியில் முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு பல சுவடிப் பதிப்புகளை வெளியிட்டுள்ளன.

தஞ்சை சரஸ்வதிமகால் நூலகம் தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம், மராத்தி ஆகிய மொழிகளில் இலக்கியம், இலக்கணம், புராணம், கதைப்பாடல், தத்துவம், அறிவியல், வரலாறு, மருத்துவம், சோதிடம், இசை, நாடகம், பழங்கணக்கு போன்ற பொருண்மைகளில் நூல்களையும், இந்நூலகச் சுவடிகளின் அட்டவணைகளையும் சேர்த்து இதுவரை 400க்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளது.

சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் தமிழ், தெலுங்கு, மலையாளம், அரபி, பாரசீகம், கன்னடம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் இலக்கியம், இலக்கணம், வரலாறு, சோதிடம், இசை, நாடகம், வானவியல், மருத்துவம், அறிவியல், தத்துவம், பழங்கணக்கு போன்ற பொருண்மைகளில் நூல்களையும், இந்நூலகச் சுவடிகளின் அட்டவணைகளையும் சேர்த்து இதுவரை 350க்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டு உள்ளது.

மகாமகோபாத்தியாய உ.வே. சாமிநாதையர் நூலகம் தமிழ்மொழியில் மட்டும் இலக்கியம், இலக்கணம், புராணம், வாழ்க்கை வரலாறு, கட்டுரைத் தொகுப்பு போன்ற பொருண்மைகளில் இதுவரை 200க்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளது.

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடித்துறை இலக்கியம், இலக்கணம், மருத்துவம் போன்ற பொருண்மைகளில் நூல்களையும், இந்நூலகச் சுவடிகள் விளக்க அட்டவணைகள் மற்றும் அனைத்துலகத் தமிழ் ஓலைச்சுவடிகளின் அட்டவணைகள் ஆகியவற்றையும் சேர்த்து இதுவரை 50க்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளது.

இத்தனிநிலைச் சுவடிப்பதிப்புகளுடன் தமிழ்ச் சுவடி நூலகங்கள் பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகளையும் வெளியிட்டு உள்ளன. இவ்வகையில் சரஸ்வதிமகால் நூலகத்தின் The Journal of the Tanjore Maharaja Serfoji's Saraswathi Mahal Library, சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தின் Bulletin of the Government Oriental Manuscripts Library, Madras ஆகிய பருவ இதழ்கள்

இடம்பெறுகின்றன. இவ்விரு இதழ்களைத் தமிழில் சரஸ்வதி மகால் நூலகப் பருவ இதழ் என்றும், சென்னை - அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ் என்றும் முறையே குறிப்பிடுவர்.

சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ்

தஞ்சைப் பகுதியை மராட்டிய மன்னர்கள் கி.பி.1676 முதல் 1855ஆம் ஆண்டு வரை ஆட்சி செய்து வந்தனர். அம்மன்னர்களால் தொகுக்கப் பெற்றனவும், படியெடுக்கப் பெற்றனவும், விலைக்கு வாங்கியனவும், நன்கொடையாகப் பெறப்பட்டனவும் ஆகிய பல்வேறு வகையான சுவடிகளுடன் சரஸ்வதிமகால் நூலகம் தஞ்சையில் அமைந்துள்ளது. இதில் தமிழ், தெலுங்கு, மலையாளம், மராத்தி, சமஸ்கிருதம் போன்ற மொழிநூல் சுவடிகளும் கலைநூல் சுவடிகளும் பல்லாயிரக் கணக்கில் இருக்கின்றன.

இந்நூலகத்தின் தனிநூல் பதிப்பு முயற்சி கி.பி.1949ஆம் ஆண்டு தொடங்குகிறது. என்றாலும் கி.பி.1939ஆம் ஆண்டு 'சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ்' என்ற நாற்றிங்களிதழைத் தொடங்கியுள்ளது. இந்நூலகத்தின் அப்போதைய கௌரவ காரியதரிசியான திருவாளர் எஸ். கோபாலனின் மதிப்பூதியத்தை ஆதாரமாகக் கொண்டு இப்பருவ இதழ் தொடங்கப் பெற்று உள்ளது. 1939ஆம் ஆண்டு முதல் 1990ஆம் ஆண்டு வரையிலான முதல் 39 தொகுதிகள் நாற்றிங்களிதழாகவும், 1991ஆம் ஆண்டு முதல் (40ஆம் தொகுதி முதல்) முத்திங்கள் இதழாகவும் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கிறது.

இவ்விதழின் பதிப்பாசிரியர்களாக இந்நூலகக் கௌரவக் காரியதரிசிகளும், நூலக இயக்குநர்களும், பதிப்புத்துறை மேலாளர்களும் இருந்துள்ளனர். இவ்விதழில் சமஸ்கிருதம், தமிழ், தெலுங்கு, மராத்தி, ஆங்கிலம் என ஐந்து மொழிகளில் கட்டுரைகளும் பதிப்பு நூல்களும் வெளிவந்துள்ளன.

தமிழ்ச் சுவடிப்பதிப்புகள் வெளிவந்த பருவ இதழ்கள், தமிழ்ச் சுவடிப்பதிப்புகள் வெளிவராத பருவ இதழ்கள் எனப்

பருவ இதழ்களின் காலத்தை இரண்டாகப் பகுத்துக் காணலாம். கி.பி.1953 - 1992 (தொகுதி 9-40) வரையிலான காலத்திலும், 1998-2000 (தொகுதி 44-46)வரையிலான காலத்திலும் தமிழ்ச் சுவடிப்பதிப்புகள் வெளிவந்திருக்கின்றன. 1939-1952 (தொகுதி 1-8) வரையிலான காலத்திலும், 1993-1997 (தொகுதி 41-43) வரையிலான காலத்திலும் தமிழ்ச் சுவடிப்பதிப்புகள் வெளிவரவில்லை. 1939 - 1952 வரையுள்ள காலத்தில் சமஸ்கிருதமும் ஆங்கிலமும் முழுமையாக ஆட்கொண்டிருந்தன. ஆனால் இதற்கு மாறாக 1993-1997 வரையுள்ள காலத்தில் சமஸ்கிருதம் பற்றிய ஆய்வுகள் தமிழ்மொழியிலேயே வெளிவந்துள்ளன.

இப்பருவ இதழில் கதிர்காம வேலவன் தோத்திரம், கந்தர் காதல், கமலாலய அம்மன் பிள்ளைத்தமிழ், காஞ்சி மன்னன் அம்மானை, காத்தவராயன் சுவாமி பேரில் கும்மிப் பாடல், குயில் ராமாயணம், குருநாதபூபதி பேரில் அட்ட மங்கலம், குருக்ஷேத்திர மாலை, சட்டைநாதர் தோத்திரம், சரப புராணம், சிதம்பரச் செய்யுட்கோவை, சிவகாமி அம்மன் பேரில் அகவல், சிவபாரத சரித்திரம் - உரைநடை, சுந்தரர் சரித்திரச் சுருக்க அகவல், சுமிருதி சந்திரிகை - உரைநடை, செட்டிச்சி யம்மாள் கதை, செந்தில் வேலவன் தோத்திரம், ஞானக் குறவஞ்சி, ஞானசாரம், ஞானவம்மானை, தஞ்சை வெள்ளைப் பிள்ளையார் குறவஞ்சி, தத்துவவிளக்கம், திருச்செங்கோட் டகவல், திருச்சோற்றுத்துறை தலபுராணம், திருஞானசம்பந்த சுவாமிகள் பிள்ளைத்தமிழ், திருநாவுக்கரசு சுவாமிகள் சரித்திரச் சுருக்க அகவல், திருநெறி விளக்கம், திருவூடல், தேரூர்ந்த சோழன் கதை, நன்னாவூர் சங்கமேசுவரசுவாமி வேதநாயகி அம்மன் பேரில் விறலிவிடுதூது, நாசிகேது புராணம், பஞ்ச நதீசுரர் தோத்திரம், பட்டினத்தார் வெண்பா, பட்டினத்துப் பிள்ளை சரித்திரச் சுருக்க அகவல், பழனிமாலை, பழனி வேலவன் தோத்திரம், மகாமக அந்தாதிக் கும்மி, மன்னார் மோகனப் பள்ளு, மூதுரை (வாக்குண்டாம்), யாப்பருங்கலம், வருமுருகாற்றுப்படை, வலைவீசு புராணம், விசயராகவ நாயக்கர் அய்யன் பேரில் முளைப்பாட்டு, விபூதி தோத்திரம்,

ஸ்ரீவீரபோக வசந்தராயர் வரலாறு ஆகிய 45 தமிழ்ச் சுவடிப் பதிப்புகள் வெளிவந்துள்ளன.

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ்

திரு.காலின் மெக்கன்ஸி, டாக்டர் லெய்டன், திரு. சி.பி. பிரௌன் ஆகியோரின் சுவடித் தொகுப்புகளையும், சென்னைக் கல்விச் சங்கத் தொகுப்புகளையும், சென்னை இலக்கியச் சங்கத் தொகுப்புகளையும் ஒன்றுகூட்டிக் கி.பி. 1869ஆம் ஆண்டு சென்னையில் 'அரசினர் கீழைநாட்டுக் கையெழுத்து நூல் நிலையம்' உருவானது. இந்நூலகம் 1870ஆம் ஆண்டு சென்னை மாநிலக் கல்லூரி நூலகத்துடன் இணைக்கப்பெற்றது. பின்னர் 1876ஆம் ஆண்டு முதல் சென்னைப் பல்கலைக்கழக நூலகக் கட்டிடத்தில் தனித்து இயங்கி வருகின்றது.

இந்நூலகத்தில் முதல் பதிப்பு நூல் 1950ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. திருவாளர் தி. சந்திரசேகரன் அவர்கள் இந்நூலகக் காப்பாட்சியராக இருந்த காலத்தில்தான் அதிகமான நூல்கள் ஓலைச்சுவடிகளிலிருந்து பதிப்பாகி இருக்கின்றன. கி.பி.1948ஆம் ஆண்டு முதல் இந்நூலகம் 'அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ்' எனும் அரையாண்டிதழ் வெளியிட்டு வருகின்றது.

1948ஆம் ஆண்டு முதல் 1976ஆம் ஆண்டு வரை 21 தொகுதிகள் தொடர்ந்தும் இடையிடையே சில ஆண்டுகள் விடுபட்டும் வெளியாகியுள்ளதைக் காணமுடிகிறது. 1976ஆம் ஆண்டுக்குப் பிறகு 18 ஆண்டுகள் கழித்து மீண்டும் 1995ஆம் ஆண்டு 22வது தொகுதி வெளிவந்துள்ளது. தொகுதி 21லிருந்து ஆண்டுக்கு ஒரு இணைந்த இதழாக வெளிவந்து கொண்டிருக்கின்றது. இதுவரை மொத்தம் 27 தொகுதிகள் (கி.பி.2000 வரை) 47 பகுதிகளில் வெளியாகியுள்ளன. இவ்விதழின் முதற் பதிப்பாசிரியர் திருவாளர் தி. சந்திரசேகரன் ஆவார். இவர் தொகுதி 1 முதல் 15:1 வரை பதிப்பாசிரியராக இருந்துள்ளார். தொகுதி 15:2க்குத் திருவாளர் ஏ.ஏ. இராமநாதன் அவர்களும்,

தொகுதி 17:2, 18, 19:1க்குத் திருவாளர் ஆர்.கே. பார்த்தசாரதி அவர்களும், தொகுதி 21க்குத் திருவாளர் சி.ஆர். விட்டோபாபு அவர்களும், தொகுதி 22 முதல் 27 வரை முனைவர் எஸ். சௌந்தரபாண்டியன் அவர்களும் பதிப்பாசிரியர்களாக இருந்துள்ளனர்.

இப்பருவ இதழில் தமிழ், சமஸ்கிருதம், கன்னடம், தெலுங்கு, அராபி ஆகிய மொழிகளில் சுவடிப்பதிப்புகள் வெளிவந்துள்ளன. இவற்றில் நூல்களைத் தவிர வேறெந்த செய்தியும் இடம்பெற்றில. ஒவ்வோர் இதழ்ப் பதிப்பிற்கு முன் ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் பதிப்பு நூலின் முன்னுரை சுருக்கமாக இடம்பெற்றுள்ளது.

இவ்விதழில் அருங்கலச் செப்பு, அலங்கார நூல், ஆத்திசூடித் திறவுகோல், ஆத்திசூடி வெண்பா, ஆழ்வார் திருவனந்தல், இரிஷிவிந்தக் குறவஞ்சி, இலக்கண தீபம், இலக்குமி வெண்பா, எக்காலக்கண்ணி, எட்டெட்டந்தாதி, எலிவிடுதூது, ஐயனார் கதை - வில்லுப்பாட்டு, கட்டிமகிபன் பள்ளு, கதிர்காமச் சிந்து, கருணாகரமாலை, குமாரபுரி முருகன் மும்மணிக்கோவை, கோதை நாய்ச்சியார் தாலாட்டு, சனிபகவான் தோத்திரம், சிதம்பர விலாசம், சிறுத்தொண்டன் சிந்து, ஞான உலா, தசாவதாரப்பத்து, திருக்கழுக்குன்ற மாலை, திருத்தணிகை முருகன் தாலாட்டு, திருத்தொண்டர் மாலை, திருப்புல்லாணி எம்பெருமான் மீது பாடிய தாலாட்டு - திருவனந்தல், நலங்கு, திருப்புல்லாணி எம்பெருமான் மீதும் பதுமாசனித் தாயார் மீதும் பாடிய கிளைப்பாட்டு, திருமந்திர மாலை (திருமூலர் தியானக் குறிப்பு), திருவள்ளுவர் பிள்ளைத்தமிழ், திருவிளையாடற் பயகரமாலை, நம்மாழ்வார் ஊஞ்சற் கவிதை, நம்மாழ்வார் திருக்கோலக்கவி, நம்மாழ்வார் பதம், நல்லபிள்ளை சித்திர மடல், நல்வழிப் பாடல்கள், நவக்கிரக தோத்திரம், நாடோடிப் பாடல்கள், நாலுமந்திரி கதை, நீதிசாரக்கரு, நூற்றெட்டுத் திருப்பதி வெண்பா, நெஞ்சறி விளக்கம்-1, நெஞ்சறி விளக்கம்-2, நெஞ்சுபதேசக் கீர்த்தனங்கள், நெல்லைக் குமரன் துதி, பரிபூரண சித்தி,

பர்த்ருஹரி சிருங்கார சதகம், பர்த்ருஹரி நீதி சதகம், பழனி மலை வடிவேலர் பதிகம், பழனியாண்டவர் கலித்துறை, பாதாதிகேச உவமானம், பாலையானந்தர் சுவாமியார் ஞானக் கும்மிப்பாடல், பிரபந்த மரபியல், பூதர விலாசம், மாணிக்கப் பவழக்கோவை, மாணிக்கவாசகர் ஞானக்கலித்துறை, மாணிக்கவாசகர் திருமணியகவல், மீனாட்சியம்மன் கிளிப் பாடல், முருகரனுபூதி, முனிமொழி, மூவர் அம்மானை, யோக மாலை, வருகைப் பத்து, வாதவூரர் ஆனந்தக் களிப்பு, விராலி மலை வேலவர் காதல், விராலிமலை வேலவர் குறவஞ்சி நாடகம், வில்லிபாரதம் - மௌலி சூட்டுச் சருக்கம், வேங்கடேசப் பெருமாள் தமிழ்மாலை, வேதபுரி ஈசுவரர் அந்தாதி போன்ற 71 பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகள் தமிழ்மொழியில் மட்டும் வெளிவந்துள்ளன.

இவ்விரு சுவடி நூலகப் பருவ இதழ்கள் பன்மொழிச் சுவடிகளை வெளியிட்டுள்ளன. எனவே, இப்பருவ இதழ்களைப் ‘பன்மொழிப் பருவ இதழ்’ என்றும் கூறலாம். சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழில் நூற்பதிப்பன்றி ஆய்வுக் கட்டுரைகளும் பன்மொழியில் வெளிவந்துள்ளன. ஆனால், அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் நூற் பதிப்புகள் மட்டுமே வெளிவந்திருக்கின்றன. இப்பருவ இதழ்களில் 99 விழுக்காடு முழுமையான சுவடியைக் கொண்ட பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகள் வெளிவந்திருக்கின்றன.

4. ஆதீனப் பருவ இதழ்கள்

சமயத்தை வளர்க்கவும் பரப்பவும் இந்தியா முழுவதும் காலந்தோறும் ஆதீனங்கள் தோன்றியுள்ளன. ஆதீனங்கள் சமயத்தையும் மொழியையும் இரு கண்களாகப் போற்றின. இந்து சமயத்தில் சைவ, வைணவ, அத்வைத ஆதீனங்கள் தோன்றியுள்ளன. தருமையாதீனம், திருவாவடுதுறையாதீனம், திருப்பனந்தாள் காசித்திருமடம், காஞ்சி சங்கராச்சாரியார் திருமடம், ஸ்ரீராமகிருஷ்ண மடம், கோவை பேரூராதீனம், கோவை கௌமார மடம் போன்ற மடங்கள் சமய சாத்திர நூல்களையும் தமிழிலக்கிய இலக்கணம் மற்றும் மொழி பெயர்ப்பு நூல்களையும் வெளியிட்டு வருகின்றன.

இலக்கியம், சித்தாந்த சாத்திரம், தலபுராணம், திருமுறைகள், தல வரலாறுகள் போன்ற பொருண்மைகளில் தருமையாதீனம் 900க்கும் மேற்பட்ட நூல்களையும், திருவாவடுதுறையாதீனம் 460க்கும் மேற்பட்ட நூல்களையும், திருப்பனந்தாள் காசித்திருமடம் 200க்கும் மேற்பட்ட நூல் களையும் வெளியிட்டுள்ளன. வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், தவத்திரு இராமானந்த சுவாமிகள், தவத்திரு கந்தசாமி சுவாமிகள், தவத்திரு சுந்தர சுவாமிகள் ஆகியோரின் நூல்கள் மட்டும் வெளியிடும் நிலையில் கோவை கௌமார மடாலயம் இதுவரை 225க்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளது.

தருமை யாதீனம், திருவாவடுதுறை யாதீனம், திருப்பனந்தாள் காசித் திருமடம், கோவை - கௌமார மடாலயம் போன்ற மடங்கள் நூல்கள் வெளியிட்டு வருவதோடு பருவ இதழ்களையும் வெளியிட்டு வருகின்றன. இவ் இதழ்களில் ஆதீனத் தலைவர்களின் அருளாசி, அவர்தம் கருத்துகள், இதழ் சார்ந்த சமயச் செய்திகள், சமயநூல் கருத்துகள், சமய நூல்கள், சமயக் கட்டுரைகள், மொழி பெயர்ப்புகள், நூலாராய்ச்சிகள், நூல் அறிமுகம், சுவடிப் பதிப்புகள், சமய வாதங்கள் போன்றன இடம்பெறுகின்றன. ஆதீன இதழ்கள் எல்லாவற்றிலும் சுவடிப்பதிப்புகள் வெளிவருவதில்லை. ஆதீனங்கள் வெளியிட்ட இதழ்களில் வெளிவந்த சுவடிப்பதிப்புகளை 'ஆதீனப் பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகள்' என்றும், ஆதீனங்கள் வெளியிட்ட பருவ இதழ்களை 'ஆதீனப் பருவ இதழ்கள்' என்றும் கூறலாம். சுவடிப்பதிப்புகளை வெளியிட்ட ஆதீனப் பருவ இதழ்கள் சிலவே. அவை, ஞானசம்பந்தம் (1941), குமரகுருபரன் (1950), ஸ்ரீசங்கர க்ருபா (1959), ஸ்ரீகாமகோடி ப்ரதீபம் (1960), ஸ்ரீகுமரகுருபரர் (1978), மாதாந்திர அமுதம் (1980), மெய்கண்டார் (1982) போன்றவையாகும்.

ஞானசம்பந்தம்

'ஞானசம்பந்தம்' எனும் திங்களிதழ் ஸ்ரீமத் சிவகுரு நாதத் தம்பிரான் சுவாமிகளை ஆசிரியராகக் கொண்டு தருமையாதீன வெளியீடாக 1941ஆம் ஆண்டு டிசம்பர் முதல் வெளிவந்துகொண்டிருக்கின்றது. சைவ சமயத் திங்களிதழான இவ்விதழில் சைவசமயம் தொடர்பான பல்வேறு ஆய்வுக் கட்டுரைகளும், இலக்கியம், இலக்கணம், தோத்திரம், சாத்திரம், வரலாறு, மருத்துவம், சோதிடம் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகளும், விவாதங்களும், சைவ இலக்கிய விளக்கங்களும், கல்வெட்டாராய்ச்சிகள் கவிதைகள் நாடகங்கள் பழந்தமிழிலக்கிய நூல்களும், அதற்கான உரைகளும் என வெளிவந்துகொண்டிருக்கின்றன. "ஞானசம்பந்தம் சிறப்பாகச் சைவ சித்தாந்தக் கொள்கையைப் பரப்பும் நோக்கத்தில் எழுந்து, வேலை செய்து வருகிறது. பொதுவான கடவுட் கொள்கையை அது போன்றி வருகிறது. இலக்கியம் - சமயச் சார்புடைய இலக்கியங்கள் எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்கிறது. அச்சில் வாராத அருமையான நூல்கள் பல இதுவரை இதன்வழி வெளிவந்துள்ளன" (ஞானசம்பந்தம், 15:1:1955, ப.2).

நூல் பதிப்புகள் தனிப்பக்கத் தமிழெண் கொடுத்து முற்சேர்ப்பாக இவ்விதழில் இணைக்கப்பெற்றுள்ளது. மற்ற பகுதிகள் 1, 2, 3,... என்ற முறையில் அமைந்துள்ளன.

இவ்விதழில் உருப சொருப அகவல், காரைக்கால் அம்மையார் சரித்திரம், சங்கர சிவக்கொழுந்து மாலை, சிவசயிலப் பள்ளு, தாயுமானவர் மடல் - குறிப்புரையுடன், திருவாரூர் மும்மணிக்கோவை, திருவையாற்றுத் தருமசம்வர்த்தனி மாலை, திருவையாற்றுப் பதிற்றுப்பத்தந்தாதி, தேவி மான்மியம், தையல்நாயகி அந்தாதி - மூலமும் உரையும், தொல்காப்பியம் சொல்லதிகாரம் கல்லாடனார் உரையுடன், முத்தி நிச்சயம் ஆகிய பன்னிரண்டு சுவடிப்பதிப்புகள் வெளிவந்துள்ளன.

குமரகுருபரன்

'குமரகுருபரன்' எனும் திங்களிதழ் திரு.டி.எம். குமர குருபரனை ஆசிரியராகக் கொண்டு ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீகுமர

குருபர சுவாமிகள் மடத்தின் வெளியீடாக 1950ஆம் ஆண்டு தை மாதம் முதல் 1977ஆம் ஆண்டு வரை தொடர்ந்து 28 ஆண்டுகள் வெளிவந்துள்ளது. பின்னர் இவ்விதழ் திருப்பனந்தாள் காசித் திருமடத்தின் வெளியீடாக 'ஸ்ரீகுமரகுருபரர்' எனப் பெயர் மாற்றம் பெற்று வெளிவந்து கொண்டிருக்கின்றது.

"இப்பத்திரிகை மக்களின் அறிவு வளர்ச்சிக்கெனவே தோன்றுவதாகும். அறிவைப் பெருக்கி என்றும் அழியா இன்பப் பேற்றினை அருளும் 'மெய்ப்பொருள்' பெறுதலே இதன் குறிக்கோளாகும். ..... அரசியல் வகுப்பு வாதங்களில் கலவாது கலைஞானத்தைப் பரப்புவதும் தமிழையும் சைவத்தையும் வளர்ப்பதுமே இப்பத்திரிகையின் நோக்கம். குமரகுருபர சுவாமிகள் பிரபந்தம், பன்னிரு திருமுறைகளின் ஆராய்ச்சி, உலகையுரக்கும் உழவு, விஞ்ஞானம், மாணவ மாணவிகட்கு அறிவுரையாகிய பொருள்களைப் பற்றிய கட்டுரைகளுடன் இஃது ஒவ்வொரு மாதமும் முதல் தேதியில் வெளிவரும்" (குமரகுருபரன், 1:1:1949, பக்.1-3) என்பர்.

குமரகுருபரன் ஓர் இலக்கிய சமய இதழாக வெளிவந்து உள்ளது. சமயம் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகளும், பழந்தமிழ் இலக்கியங்களுக்கு விளக்கங்களும், மடத்துச் செய்திகளும், இன்றைய புலவர்தம் கவிகளும், சுவடிப் பதிப்பு களும் அதற்கான உரைகளும் எனப் பல்வேறு நிலைகளில் இவ்விதழ் வெளிவந்துள்ளது. சமயக் குரவர்களைப் பற்றியும், குமரகுருபரைப் பற்றியும், அவர்களது நூல்களைப் பற்றியும் ஆய்வுகள் நிகழ்ந்துள்ளன. ஒவ்வோர் இதழின் இறுதியில் 'கலைக்கோயிலில் வரப்பெற்றுக்கொண்ட புத்தகங்களின் விவரம்' தரப்பெற்றுள்ளது.

இவ்விதழில் அகவல்பா, குமரகுருபர சுவாமிகள் சரித்திரம், சிறைவிடந்தாதி, திருமயிலை உவமை வெண்பா, திருவாசக அனுபூதி - உரையுடன், பத்திநெறிப் பதிகம், மூவர் அம்மானை, விநாயக மான்மியம் ஆகிய எட்டுச் சுவடிப் பதிப்புகள் வெளிவந்துள்ளன.

ஸ்ரீசங்கர க்ருபா

'ஸ்ரீசங்கர க்ருபா' எனும் திங்களிதழ் கே.ஆர். வெங்கட்ராமனை ஆசிரியராகக் கொண்டு திருச்சி - திருவரங்கத்திலிருந்து 1949ஆம் ஆண்டு முதல் வெளிவந்துள்ளது. சில காலம் வெளிவந்து நின்றும்விட்டது. பின்னர் மீண்டும் 1959ஆம் ஆண்டு சூலை முதல் கே.வ. சுப்ரதானத்தை ஆசியராகக் கொண்டு சிருங்கேரி சாரதாபீட வெளியீடாக வெளிவந்து கொண்டிருக்கின்றது. தமிழ் - ஆங்கிலம் - சமஸ்கிருதம் கலந்த மும்மொழி இதழாகத் திகழ்கின்றது.

இதில் சிருங்கேரி ஸ்ரீமகாசந்நிதானம் அவர்களின் உபதேசம், யோகம், ஞானம், கீதை உபதேசம், ஞானவாசிட்ட சுருக்கம், ஸ்ரீசாரதா புஜங்கம், வேதப்பிராமாண்யம், ஸ்ரீகுருகிருபா விலாசம், அபிராமி அந்தாதி, குறிப்புகள், இன்றைய புலவர்தம் நூல்கள், கவிதை, நாடகம், கீதசந்தோசம், ஆத்மபோதம் போன்றவை தொடர்பாகக் கட்டுரைகளும் ஆய்வுகளும் வெளிவந்துள்ளன. இவ்விதழில் 'அநுபோக ரத்னமாலை' எனும் சுவடிப்பதிப்பு மட்டும் வெளிவந்துள்ளது.

ஸ்ரீகாமகோடி ப்ரதீபம்

'ஸ்ரீகாமகோடி ப்ரதீபம்' எனும் திங்களிதழ் பண்டித ராஜா. வி. சுப்பிரமணிய சாஸ்திரியை ஆசிரியராகக் கொண்டு காஞ்சி சங்கரமட வெளியீடாகச் சென்னையிலிருந்து 1960ஆம் ஆண்டு பிப்ரவரி முதல் வெளிவந்து கொண்டிருக்கின்றது. இது, தமிழ் - சமஸ்கிருதம் - ஆங்கிலம் கலந்த மும்மொழி இதழாகத் திகழ்கின்றது.

சநாதன தர்மத்தின் முக்கிய நோக்கங்களையும், அடிப்படைக் கருத்துகளையும், உண்மைகளையும் மக்கள் அறிந்துகொள்ளும் வகையில் அமைந்த சிறந்த கட்டுரைகள் இவ்விதழில் பெரும்பாலும் இடம்பெற்றுள்ளன. மேலும், ஆசாரியர்களின் அருள்வாக்கு, புராணக்கதை, சிவமூர்த்தம், ஸ்ரீமந்நாராயணீயம், இந்து சமயக் கொள்கைகள், ஆஸ்திகர்கள் கொண்டாடும் விழாக்கள், புண்ணிய காரியங்கள், பூஜை முறைகள், இலக்கியக் கட்டுரைகள், ஸ்ரீசங்கர பகவத்

பாதாசார்ய பரம்பரையான ஸ்ரீகாமகோடி பீடத்தின் வரலாறு, அவற்றின் பெருமைகள் போன்றன இவ்விதழில் முக்கிய அங்கம் வகிக்கின்றன. பொதுவாக, தர்ம தத்துவங்களை மக்கள் நன்றாக உணரச் செய்வதையே தலையாய நோக்கமாகக் கொண்ட இவ்விதழ் 'மெய்ஞ்ஞானத் தங்கம்' எனும் சுவடிப் பதிப்பையும் வெளியிட்டுள்ளது.

ஸ்ரீகுமரகுருபரர்

'ஸ்ரீகுமரகுருபரர்' எனும் திங்களிதழ் ம.வே. பசுபதியை ஆசிரியராகக் கொண்டு திருப்பனந்தாள் காசித் திருமடத்தின் வெளியீடாக, குமரகுருபரனின் மறுதோன்றலாக 1978ஆம் ஆண்டு ஐப்பசி முதல் வெளிவந்துகொண்டு இருக்கின்றது. இதில் விடையரங்கம், நூல்நிறை (நூல் மதிப்புரை), சமயம், இலக்கியம், இலக்கணம் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகள், திருக்கணித பஞ்சாங்கம், இன்றைய புலவர்தம் நூல்கள், நூலாராய்ச்சி, சொல்லாராய்ச்சி, மடத்து நிகழ்ச்சிகள், விளம்பரங்கள், திருத்தலக் குறிப்புகள், குமரகுருபரர் பிரபந்தங்கள் சிலவற்றிற்கான உரைகள், குமரகுருபரர் பிரபந்தங்கள் சிலவற்றிற்கான மொழிபெயர்ப்புகள், ஏனையோரின் இலக்கிய மொழிபெயர்ப்புகள், அரிய நூல் வெளியீடுகள் போன்றன வெளிவந்துள்ளன. மேலும் இவ்விதழில் 'குமரகுருபர சுவாமிகள் சரித்திர சார பஞ்சம், ஞானாமிர்தம் - பழைய உரையுடன்', திருத்தொண்டர் மாலை, பனைசைச் சிலேடை வெண்பா உரையுடன் ஆகிய நான்கு சுவடிப்பதிப்புகளும் வெளிவந்துள்ளன.

மாதாந்திர அமுதம்

'மாதாந்திர அமுதம்' எனும் திங்களிதழ் தவத்திரு சுந்தரசுவாமிகளைச் சிறப்பாசிரியராகக் கொண்டு கோவை - கௌமார மடாலயத்தின் வெளியீடாக 1980ஆம் ஆண்டு சூலை முதல் வெளிவந்துகொண்டிருக்கின்றது. தவத்திரு சுந்தர சுவாமிகள் குடம் 1 முதல் குடம் 15 வரையில் உள்ள இதழ்ப் பகுதிகளுக்குச் சிறப்பாசிரியராகப் பணியாற்றியுள்ளார்.

அவர்தம் மறைவிற்குப் பிறகு குடம் 16 முதல் தவத்திரு குமர குருபர சுவாமிகள் சிறப்பாசிரியராகப் பணியாற்றி வருகின்றார்.

இவ்விதழில் கௌமாரம் தொடர்பான ஆய்வுகளும், செய்திகளும், துணுக்குகளும், நூல்களும் வெளிவருகின்றன. மேலும் மாதச் செய்திகள், சிறப்பாசிரியர் பங்குகொள்ளும் நிகழ்ச்சிகள், மடாலயத்துப் பள்ளிக்கூடத்தின் செய்திகள் மற்றும் கருத்தரங்க நிகழ்வுகள் போன்றன வெளிவருகின்றன. குறிப்பாக வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், தவத்திரு இராமானந்த சுவாமிகள், தவத்திரு கந்தசாமி சுவாமிகள், தவத்திரு சுந்தரசுவாமிகள் ஆகியோரின் நூல்கள், அந்நூல்கள் தொடர்பான கருத்துகள் வெளியிடுவதைத் தமது முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.

இவ்விதழில் அறநெறி வெண்பா, இராமானந்தத் திரட்டு (சூரியமூர்த்தி பதிகம், சைவ சமயம், சாத்தேய சமயம், காணாபத்ய சமயம், வைணவ சமயம், விநாயகர் பதிகம், மெய்ஞ்ஞானக்காதல், பஞ்சகம், கௌமார சமயம், பதிக அந்தாதி, பிடித்த பதிகம், சற்குரு பதிகம், சற்குரு அந்தாதி மாலை, சந்தப் பதிகம், தயாநிதிக் கண்ணி, அடைக்கலப் பதிகம், பெரியோர் வணக்கம், குருகீத ரசம், சபரிமலை ஐயப்பசாமி பதிகம்), ஈச்சநாரி விநாயகர் பதிகம், ஈச்சநாரி விநாயகர் பதிற்றுப்பத்தந்தாதி, கருணாம்பிகை யமக அந்தாதி, காரமடை ஆண்டாள் பதிகம், கீரநத்தம் விநாயகர் திருப்புகழ், கீரநத்தம் விநாயகர் பதிகம், குருந்தமலை ஸ்ரீகுழந்தை வேலாயுதசாமி பிள்ளைத்தமிழ், குருமுதற் பாசுர நூல், கோவை இராமநாதபுரம் விநாயகர் பதிகம், கௌமார வினோத நூல், சரித்திர சார வண்ணம், சிரவை சற்குரு பதிகம், ஞானவந்தாதி, தண்டபாணி மாலை, திருச்செந்தூர் முருகக்கடவுள் நற்றாய் இரங்கல் வண்ணம், திருப்பழனி முருகக்கடவுள் கலவிமகிழ்தல் வண்ணம், தில்லை இதழகல் அந்தாதி, நெல்லை இதழகல் அந்தாதி, பதிக உந்தி நூல், பேரூர் ஸ்ரீஅகிலாண்டநாயகி பதிகம், மகாலக்குமி பதிகம், வெள்ளக்கிணற்று வள்ளிநாயகன் பதிகம் ஆகிய இருபத்துநான்கு சுவடிப்பதிப்புகள் வெளிவந்து இருக்கின்றன.

மெய்கண்டார்

'மெய்கண்டார்' எனும் திங்களிதழ் திருவாவடுதுறை ஆதீன வெளியீடாக 1982ஆம் ஆண்டு திசம்பர் முதல் வெளிவந்துகொண்டு இருக்கின்றது. முதல் பதினான்கு மலர்களுக்கு ஸ்ரீமத் சுந்தரமூர்த்தித் தம்பிரான் சுவாமிகள் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். அடுத்து பதினைந்தாவது மலரிலிருந்து தவத்திரு புலவர் சுயம்புநாதத் தம்பிரான் சுவாமிகள் செயலாற்றி வருகின்றார்.

இவ்விதழில் தேவாரங்களின் பொருளடைவு, திருமுறை அட்டவணை, ஆதீனச் செய்தித்திரட்டு, ஆதீன சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சி மையம் நடத்திய பாடச்சுருக்கம் (இவை பின்னாளில் தனி நூல்களாக வெளியிடப்பெற்றுச் சைவ சித்தாந்த நேர்முகப் பயிற்சி மாணவர்களின் தனிச்சுற்றுக்கு வழங்கப்பெற்றுள்ளன), சித்தாந்த சைவத்தில் எழுப்பப்படும் ஐயவினாக்களுக்கான விளக்கம், ஆன்மிகக் கட்டுரைகள், அகராதிகள் (துறைசைத் தமிழகராதி, சாசனச்சொல் அகராதி), திருமூலர் திருமந்திரம் - ஸ்ரீபஞ்சாக்ஷரதீபம் எனும் உரை, ஆதீனத்தில் உள்ள கல்வெட்டுகள் - செப்பேடுகள் - ஓலைகள் பற்றிய குறிப்புகளும் வெளியீடுகளும், ஆதீனச் சமயப் பிரச்சாரக் குறிப்புகள், உரையுடன் தேவாரத் திருப்பதிகங்கள் போன்றன வெளிவந்துள்ளன. இவையல்லாமல் சில சுவடிப்பதிப்புகளும் வெளிவந்திருக்கின்றன.

திருஞானசம்பந்த சுவாமிகள் ஆனந்தக்களிப்பு, விநாயகர் தோத்திராஷ்டகம், ஸ்ரீமெய்கண்ட தேசிகர் மாலை ஆகிய மூன்று சுவடிப்பதிப்புகள் இவ்விதழில் வெளிவந்துள்ளன.

5. நிறுவனப் பருவ இதழ்கள்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தனியார் அச்சகங்கள் சுவடிப்பதிப்புகளையும் பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகளையும் வெளியிட்டதைப் போல் இருபதாம் நூற்றாண்டில் நிறுவனச் சுவடிப்பதிப்புகளும் நிறுவனப் பருவ இதழ்ச் சுவடிப் பதிப்பு களும் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளன. நிறுவனம்

வெளியிட்ட பருவ இதழை 'நிறுவனப் பருவ இதழ்' என்றும், நிறுவனப் பருவ இதழில் வெளிவந்த சுவடிப்பதிப்பை 'நிறுவனப் பருவ இதழ்ச் சுவடிப்பதிப்பு' என்றும், சுவடிப் பதிப்புகளை வெளியிட்ட நிறுவனப் பருவ இதழை 'நிறுவனச் சுவடிப் பதிப்புப் பருவ இதழ்' என்றும் கூறலாம். இந்நிறுவனச் சுவடிப் பதிப்புப் பருவ இதழ்களை வெளியீட்டு நிலையில் இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். ஒன்று, தனியார் நிறுவனப் பருவ இதழ்கள்; மற்றொன்று, அரசு நிறுவனப் பருவ இதழ்கள் என அவை அமையும்.

அ. தனியார் நிறுவனப் பருவ இதழ்கள்

பத்தொன்பது மற்றும் இருபதாம் நூற்றாண்டுகளில் நூல்களை அச்சிட்டு விற்பனை செய்வதற்காகப் பல்வேறு தனியார் நிறுவனங்கள் தோன்றின. குறிப்பாக, சென்னைப் பாடப்புத்தக சங்கம் (1850), பொதுக்கல்விப் பயிற்சித்துறை (1854), கிறித்தவத் தாய்மொழிக் கல்விக்கழகம் (1858), ரிப்பன் புத்தகசாலை, ஊ. புஷ்பரதஞ்செட்டியார் அண்டு கோ., மட்டுவார் குழலாம்பாள் அச்சுக்கூடம், கிறிஸ்தவ இலக்கியக் கழகம் (1891), அல்லயன்ஸ் அண்டு கோ (1908), ஒற்றுமை ஆபீசு வெளியீடு, மனோன்மணிவிலாச அச்சுக்கூடம், பூமகள் அச்சுக்கூடம், சிரோன்மணி விலாச அச்சுக்கூடம், இ.மா. கோபாலகிருஷ்ண கோனார் அண்டு கோ., பி. இரத்தின நாயகர் அண்டு சன்ஸ், விவேக போதினி, ஆனந்தபோதினி, மறைமலையடிகளின் பொதுநிலைக் கழகம், சி. குமாரசாமி நாயுடு அண்டு சன்ஸ், ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம், ஞாயிறு நூற்பதிப்புக் கழகம், புதுமலர்ச்சி நூற்பதிப்புக் கழகம், சக்தி காரியாலயம், கலைமகள் காரியாலயம், தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், தென்னிந்திய மொழிகள் புத்தக நிறுவனம், சைவ சித்தாந்த மகாசமாஜம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், ஜைனச் சங்கப் பதிப்பகம், ஜைன அறநிலையம், ஜைன சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், வைணவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், ஜைன இளைஞர் மன்றம், ஜைன சித்தாந்த நிலையம், ஜைன

இலக்கிய ஆராய்ச்சி மன்றம், மணிவாசகர் பதிப்பகம், ஆசியவியல் நிறுவனம், பழந்தமிழ்ச் சுவடிகள் பாதுகாப்பு மையம் போன்ற தனியார் நிறுவனங்களைக் குறிப்பிடலாம்.

இந்நிறுவனங்கள் சுவடிப்பதிப்புகளை வெளியிட்டு வருகின்றன. இவற்றில் சில நிறுவனங்கள் பருவ இதழ் களையும் நடத்தியுள்ளன. குறிப்பாக, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம் (செந்தமிழ்ச் செல்வி), தென்னிந்திய செங்குந்தர் மகாஜனசங்கம் (செங்குந்தமித்திரன்), சக்தி காரியாலயம் (சக்தி, மங்கை, கதைக்கடல், அணில்), கலைமகள் காரியாலயம் (கலைமகள், மஞ்சரி), தென்னிந்திய மொழிகள் புத்தக நிறுவனம் (புத்தக நண்பன்), சைவ சித்தாந்த மகாசமாஜம் (சித்தாந்தம்), ஜைன இளைஞர் மன்றம் (முக்குடை), ஜைன அறநிலையம் (நல்லறம்) போன்ற நிறுவனங்களைக் குறிப்பிட லாம். இவற்றில் சித்தாந்தம் (1912), கலைமகள் - சென்னை (1923), செந்தமிழ்ச் செல்வி (1923), செங்குந்தமித்திரன் (1927), சித்தாந்தம் (1928), சக்தி (1939), நல்லறம் (1958), தேனோலை (1974), முக்குடை (1974) போன்ற பருவ இதழ்கள் சுவடிப் பதிப்புகளை வெளியிட்டுள்ளன.

சித்தாந்தம் (1912)

பூவை. கலியாணசுந்தர முதலியாரை (மணவழகு) ஆசிரியராகக் கொண்டு 'சித்தாந்தம்' (1912) எனும் திங்களிதழ் 1912ஆம் ஆண்டு சனவரி முதல் வெளிவந்துள்ளது. இது 1905ஆம் ஆண்டு சென்னையில் தோன்றிய சைவசித்தாந்த மகாசமாஜத்தின் வெளியீடாகும். சைவ சமயம் தொடர்பான கட்டுரைகள், திருமுறை மற்றும் சாத்திர நூலாராய்ச்சிகள், கட்டுரைகள், நூலறிமுகம் போன்றன இவ்விதழ்ப் பொருள்களாக இருந்துள்ளன. சுவாமி வேதாசலம் (மறைமலையடிகள்) அவர்களின் சித்தாந்தக் கட்டுரைகள் பல இதில் வெளிவந்த வையே. தமிழறிஞர்கள், சைவ சித்தாந்தத்தில் ஈடுபாடு மிக்கோர் அனைவரும் தங்களின் கருத்துக்களைக் கட்டுரைக ளாக இவ்விதழில் வெளியிட்டுள்ளனர்.

இவையன்றி சுவடிப் பதிப்புகளும் இவ்விதழில் வெளிவந்துள்ளன. குறிப்பாக, திரிபதார்த்த தசகாரியம், பதிபசுபாசத் தொகை ஆகிய இரண்டு சுவடிப்பதிப்புகளைக் குறிப்பிடலாம். இவ்விதழ் 1920க்கு மேலும் நடந்தது என்கின்றார் மு. அருணாசலம். இவ்விதழ்கள் இன்று கிடைப்பது அரிதாக இருக்கின்றது.

கலைமகள் - சென்னை

'கலைமகள்' எனும் திங்களிதழ் ஆர். நாராயணசாமி ஐயரை ஆசிரியராகக் கொண்டு 1932ஆம் ஆண்டு சனவரி முதல் சென்னை கலைமகள் காரியாலயத்தின் வெளியீடாக வெளிவந்து கொண்டு இருக்கின்றது. இவ்விதழின் கௌரவ ஆசிரியர்களாக திருவாளர்கள் எஸ். அனவரத விநாயகம் பிள்ளை, டி.கே. சிதம்பரநாத முதலியார், எஸ். வையாபுரிப்பிள்ளை, பி.என். அப்புசாமி ஐயர், மு. இராகவையங்கார், கே.வி. கிருஷ்ணசாமி ஐயர் போன்றோர் பணியாற்றியுள்ளனர். இவ்விதழில் இலக்கியம், நற்கலை, சாஸ்திரம், சரித்திரம், மாதர் பகுதி, சிறுவர் பகுதி, மதிப்புரை, குறிப்பும் திரட்டும் போன்ற பகுதிகள் வெளிவந்துள்ளன. மேலும், மிகச் சிறந்த சிறுகதைகள், தொடர் கதைகள், கவிதைகள், இலக்கிய ஆராய்ச்சிக் கட்டுரைகள், பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் மற்றும் இலக்கியங்கள் போன்றனவும் வெளிவந்துள்ளன.

இவ்விதழாசிரியர், "பிரபலமான தமிழ் வித்துவான்களும் ஆங்கில பாஷையிலும் தமிழிலும் தேர்ச்சியடைந்த பல கலைஞர்களும் இதற்கு விஷயதானம் செய்து வருவதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். நம் தாய்மொழியாகிய தமிழில் உள்ள பல நூல்களின் அருமை பெருமைகளை எடுத்துக்காட்டி யாவரும் இன்புறச் செய்வதோடு வேறு பாஷையிலும் வேறு தேசங்களிலும் உள்ள அரிய சாஸ்திர விஷயங்களையும் கல்விமான்களுடைய உதவியினால் இப்பத்திரிகை மூலமாய் வெளிப்படுத்தலாமென்று நினைக்கிறோம். அன்றியும் நீதி தருமங்களை உணர்த்தும் படியான கதைகளும், சிறுவர்களும்

பெண்களும் களிப்படையக் கூடிய விநோத விஷயங்களும் அமைக்கவேண்டும் என்பது எமது கருத்து. இவ்விஷயங்களெல்லாம் கூடிய வரையில் எல்லாரும் எளிதில் அறிந்து கொள்ளும் படியான நடையிலேயே அமைந்து இருக்கும். இதில் நம் தேசத்திலுள்ள சிற்பம், ஓவியம், சங்கீதம் முதலிய கலைகளின் மேம்பாட்டைப் படங்களுடன் எடுத்துக் காட்டவும் முயல்வோம். தமிழர்கள் அனைவரும் இப்பத்திரிகையை ஆதரித்து விருத்தியாகும்படி செய்வார்களென்று நம்புகிறோம்" (கலைமகள், 1:1:1932) என்று இவ்விதழின் நோக்கத்தையும் வேண்டுகோளையும் வெளிப்படுத்துவதைக் காணமுடிகிறது.

இவ்விதழின் தொகுதி எண் மாறிமாறி வந்தாலும் பகுதி எண் மட்டும் தொடர்ந்து தொடரெண்ணைப் பெற்று வெளிவந்து கொண்டிருக்கின்றது. இன்று வரை இவ்விதழ் தொடர்ந்து வெளிவந்துகொண்டிருப்பினும் தொடக்க காலக் கலைமகளும் பிற்காலக் கலைமகளும் உள்ளடக்கத்தில் பெரும் மாறுதலுடன் காணப்படுகின்றன. உ.வே.சா. அவர்கள் வாழ்ந்த காலத்தில் அவர்தம் குறிப்புரையுடன் பல சுவடிப்பதிப்புகள் மற்றும் கட்டுரைகள் வெளிவந்துள்ளன.

இவ்விதழில், உதயணகுமார காவியம், களக்காட்டு சத்தியவாசகர் இரட்டை மணிமாலை, சிவசிவ வெண்பா, தமிழ்நெறி விளக்கம், திருஇலஞ்சி முருகன் உலா, திருக்காளத்தி இட்டகாமிய மாலை, திருக்குற்றாலக்குறவஞ்சி, திருக்குற்றாலச் சிலேடை வெண்பா, திருமலையாண்டவர் குறவஞ்சி, பத்மகிரி நாதர் தென்றல்விடுதூது, பழனி இரட்டைமணிமாலை, பாச வதைப் பரணி, புகையிலைவிடுதூது, மகரநெடுங் குழைக்காதர் பாமாலை, மான்விடுதூது, வலிவல மும்மணிக் கோவை ஆகிய பதினாறு சுவடிப்பதிப்புகள் வெளிவந்து இருக்கின்றன.

செந்தமிழ்ச் செல்வி

திருவாளர் தி.செ. விசுவநாதம் பிள்ளையின் உதவியோடும் திருவாளர் வ. திரவியப் பிள்ளையின் உறுதுணையோடும் திருவாளர் வ. சுப்பையா பிள்ளை 21.09.1920ஆம் ஆண்டு திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த

நூற்பதிப்புக்கழகம் லிமிடெட் தொடங்கினார். இது, முதலில் விற்பனைக் கழகமாகவும் பின்னர் நூற்பதிப்புக் கழகமாகவும் மாறியது.

இக்கழகம் சிறந்த கட்டுரைகளையும், கழகப் பணிகளையும் கழகக் கொள்கைகளையும் வெளியிடும் பொருட்டுச் 'செந்தமிழ்ச் செல்வி' எனும் திங்களிதழைத் தைத் திங்கள் 1923ஆம் ஆண்டு முதல் தொடங்கியது. இதன் முதல் பத்திராசிரியராக மணி. திருநாவுக்கரசு முதலியார் நியமிக்கப் பட்டார். இதழாசிரியர் குழு ஒன்றும் அமைக்கப்பட்டது. இக் குழுவிற்குத் தலைவராகத் திருவாளர் மணி. திருநாவுக்கரசு முதலியாரும், உறுப்பினர்களாகத் திருவாளர்கள் பா.வே. மாணிக்க நாயக்கர், கா. சுப்பிரமணிய பிள்ளை, ச. சச்சிதானந்தம் பிள்ளை, ந.மு. வேங்கடசாமி நாட்டார், அ. சிதம்பரனார், மா.வே. நெல்லையப்ப பிள்ளை, மு. கதிரேசஞ் செட்டியார் ஆகிய பெரும் புலவர்கள் பணியாற்றியுள்ளனர். இதற்குப் பிறகு பதிப்பாசிரியராக இருந்தவர் திருவாளர் வ. சுப்பையா பிள்ளை ஆவார். இவர் ஏப்ரல் 1983ஆம் ஆண்டு வரை இவ்விதழைத் திறம்பட நடத்தி வந்தார். இவர்தம் மறைவிற்குப் பிறகு மே 1983ஆம் ஆண்டு முதல் தாமரைச் செல்வரின் மருமகனார் இரா. முத்துக் குமாரசாமி பதிப்பாசிரியராகப் பணியாற்றி வருகின்றார்.

இவ்விதழ் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கின்றது. என்றாலும் இடையிடையே சில திங்கள்கள், சில ஆண்டுகள் விடுபட்டுள்ளது. அதாவது, தைத் திங்கள் 1923ஆம் ஆண்டு தொடங்கிய இவ்விதழ் சிலம்பு 1, பரல் 1 முதல் சிலம்பு 11, பரல் 6, 1933ஆம் ஆண்டு வரை தொடர்ந்து வெளிவந்துள்ளது. அடுத்த இதழான ஆவணி இதழ் சிலம்பு 12, பரல் 1, 1933ஆம் ஆண்டு என்று வெளிவந்துள்ளது. சிலம்பு 11இல் 7-12க்கான பரல்கள் இல்லை. இதற்கு என்ன காரணம் என்று ஆராய்ந்து பார்க்கும்போது சிலம்பு 12லிருந்து வெளிவந்த சிலம்புகளில் முதல் பரல் ஆவணி மாதத்தில் தொடங்குகிறது. இம்முறை நீண்ட ஆண்டுகளுக்கு நிலைக்கவில்லை. சிலம்பு 16, பரல்

8, 1937-38 பங்குனி வரை தொடர்ந்து வெளிவந்திருக்கின்றது. அதன் பிறகு 1938 சித்திரை முதல் 1939 பங்குனி வரை செந்தமிழ்ச் செல்வி வெளிவரவில்லை. 1939 சித்திரையை முதல் பரலாகக் கொண்டு 17ஆம் சிலம்பு வெளிவரத் தொடங்கியது. இம்முறையும் நீண்ட காலம் நிலைக்கவில்லை. சிலம்பு 19, பரல் 12, 1941-42 வரை சித்திரை முதல் பரலைக் கொண்ட இவ்விதழ் சிலம்பு 20. பரல் 1ஆனது 1942ஆம் ஆண்டு கார்த்திகைத் திங்கள் தொடங்குகிறது. 1942ஆம் ஆண்டு வைகாசி - ஐப்பசி ஆகிய ஆறு திங்கள்கள் இவ்விதழ்ப் பகுதிகள் வெளிவரவில்லை. சிலம்பு 20.. 21 ஆகிய இரண்டு இதழ்கள் மட்டும் கார்த்திகையில் தொடங்கி 1943ஆம் ஆண்டோடு இதழ் நின்றிருக்கின்றது. சிற்சில திங்கள்கள் அவ்வப்போது நின்றும் மீண்டும் வெளிவந்து கொண்டும் இருந்த செந்தமிழ்ச் செல்வி 1944-47ஆம் ஆண்டுப் பகுதிகள் வெளிவரவில்லை. "1944இல் வெள்ளைத்தாளில் 'செல்வி' இதழை அச்சிடக் கூடாது என்று அரசு ஆணையிட்டபோது, மட்டத்தாளில் வெளியிட விரும்பாமல் 1947 வரை நான்காண்டுகள் பதிப்பிக் காமலே பதிப்பாளர் நிறுத்தி வைத்தனர்" (மா.சு. சம்பந்தம், தமிழ் இதழியல் வரலாறு, ப.68) என்பதால் இக்காலப் பகுதியில் இதழ் வெளிவராமைக்கான காரணம் தெரிகின்றது. இதன் பிறகு செந்தமிழ்ச் செல்வி தொடர்ந்து வெளிவந்து கொண்டு இருக்கின்றது.

சங்கப் பாடல்கள், புராணம், இதிகாசம், பிற்காலச் சான்றோர் நூல்கள், தமிழ் வரலாறு, தமிழ்ப் புலவர் வரலாறு, தமிழ் மன்னர் வரலாறு, மொழிபெயர்ப்புகள், சொல்லா ராய்ச்சிகள், புதுக்கருத்துக்களுக்கேற்ற தமிழ்ச் சொற்கள், சைவ சமய நூற்பொருள்கள், புறச்சமய உண்மைகள் போன்றவற்றை எடுத்துரைக்கும் இவ்விதழ் உள்ளத்தை மகிழ்வித்து, உணர்ச்சியை ஊட்டி, அறிவைப் பெருக்கும் கூற்றுகளில் முனைந்து நிற்கும். மேலும் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கும் காட்சிப் படங்கள் கொண்டும் இவ்விதழ் வெளிவரும் என்பர். இதனை, "தமிழ் வகையில் பழஞ் சங்கச் செய்யுட்கள், புராணம், இதிகாசம்,

பிற்காலத்துச் சான்றோர் நூல்கள் முதலியவற்றிலுள்ள அரும் பொருட்டிறங்களையும் புத்தம் புதிய முறையில் ஆராய்ந்து 'செந்தமிழ்ச்செல்வி' கூறும். தமிழ் வரலாறு, தமிழ்ப் புலவர் வரலாறு, தமிழ் மன்னர் வரலாறு முதலியனவும் அவ்வப்போது எடுத்துரைக்கும். அன்றியும் இதன்கண் தமிழ் நன்மக்களுக்கும் பெரும் பயன்தரும் பொருள்கள் பிறமொழிகளினின்று மொழிபெயர்த்து வெளியிடப்பெறும். சொல் ஆராய்ச்சி, புதுக்கருத்துகட்கு ஏற்ற தமிழ்ச் சொல்லாக்கல் முதலியனவும் இதில் பேரறிஞரால் எழுதப்படும். தமிழ் மொழியின் தனித் தன்மை இனிது விளங்கச் செந்தமிழ்ச் சொற்களே இதனுள் பெரிதும் பெய்துரைக்கப்படும். தமிழின் சீரிய நிலையை அரசியலாரும் கல்வித் துறையினரும் அறிந்து உரியன புரியுமாறு இது கிளர்ச்சி செய்யும்.

இது சமயத்திறத்தில் எம்மதமும் சம்மதமாகக் கொண்டு சைவ சமய நூற்பொருள்களைத் தெள்ளத் தெளிய எவரும் உணருமாறு நன்கெடுத்து விளக்கும்; புறச்சமயங்களிலுள்ள உண்மைகளையும் சமயம் நேர்ந்துழிக் கோட்டமின்றி நடுநிலையில் நின்று கூறும்.

இனி இஃது அரசியலைக் குறித்து யாதும் புகலாது மோன விரதம் பூண்டு நிற்கும். பொருட் பேறுடைய உலகச் செய்தித் திரட்டையும் அடிக்கடி வெளியிடும். ஆசார சீர்திருத்தம் பற்றி வாய்த்த போதெல்லாம் தனக்குத் தோன்றியதை அஞ்சாது எடுத்துரைக்கும்.

அன்றியும் இவ்விதழ் உள்ளத்தை மகிழ்வித்து, உணர்ச்சியை யூட்டி, அறிவைப் பெருக்கும் கூற்றுகளில் முனைந்து நிற்கும்; கண்ணுக்கு விருந்தாகக் காட்சிப் படம் பல கொண்டு திகழும்'' (சிலம்பு 1, பரல் 1, 1923) என்று இவ்விதழாசிரியர் குறிப்பிடுகின்றார்.

இவ்வுயரிய நோக்கோடு தோன்றி வளர்ந்த செந்தமிழ்ச் செல்வியில் சுவடிப்பதிப்புகள் சிலவும் வெளிவந்திருக்கின்றன. அவை, இளசை ஒருபாவொருபஃது, குருபரம்பரை அகவல்,

சிவானந்த போதம், தத்துவ விளக்கம், தாள சமுத்திரம் உரையுடன், தாளவோத்து-நூற்றெட்டுத் தாளங்கள், திருஞான சம்பந்த சுவாமிகள் திருத்தாலாட்டு, திருஞானத் தாழிசை, திருவிசைப்பாவுடையார் துவாதசமாலை, நியதிப்பயன், பஞ்ச மரபு மூலமும் உரையும், பொன்னாணிக்கோவை, மாயாப் பிரலாபம், முத்தி நிச்சயம் ஆகிய பதினான்கு சுவடிப்பதிப்புகள் வெளிவந்திருக்கின்றன.

"கழகம் வெளியிட்ட பழந்தமிழ் இலக்கண இலக்கி யங்கள் யாவும் ஏட்டுச் சுவடிகளைக் கொண்டு ஆய்வு வெளியிடப்பெறவில்லை என்பது உண்மை. ஆனால், அவை முன்னமே வெளிந்துள்ள மூலப் படிகளையும் உரைப்படி களையும் திருத்தப் பாடங்கண்டு புத்துரை விளக்கங்கள் எழுதி வெளியிடப்பட்டவையாகும்" (செந்தமிழ்ச் செல்வி, சிலம்பு 45, ப.556) என்னும் வ. சுப்பையா பிள்ளையின் கூற்று வழி, கழகம் சுவடிப்பதிப்பு வெளியிடவில்லை என்று தெரிகின்றது. ஆனால், அச்சிட்ட நூற்படிகளோடு ஏட்டுப்படிகளை ஒப்பிட்டுப் பார்த்துத் திருத்தம் செய்து வெளியிடப்பெற்ற கழகப் பதிப்புகள் சில உண்டு. குறிப்பாக, பேராசிரியர் கந்தசாமியின் 'தொல்காப்பியம் சேனாவரையம்', பின்னத்தூர் நாராயண சாமியின் உரையோடு கூடிய 'நற்றிணை', கருப்பக்கிளார் சு.அ. இராமசாமிப் புலவரின் உரையுடன் பொ.வே. சோமசுந்தரனாரின் 'சூளாமணி', ஔவை சு. துரைசாமிப் பிள்ளையின் விளக்க வுரையுடன் 'பதிற்றுப்பத்து மற்றும் புறநானூறு' ஆகிய நூற் பதிப்புகளைச் சுட்டலாம்.

இம்மறைமுகச் சுவடிப்பதிப்பில் ஈடுபட்ட கழகம் செந்தமிழ்ச்செல்வி இதழில் நேரிடையாக மறைந்துபோகும் நூல்களை அறிமுகப்படுத்தி அந்நூல்களைத் தமிழுலகில் நிலைநிறுத்தும் பணியினைச் செய்துள்ளது எனலாம்.

செங்குந்தமித்திரன்

காஞ்சி, நாகலிங்க முனிவரை ஆசிரியராகக் கொண்டு 'தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க'த் திங்கள் வெளியீடாக

சனவரி 1927ஆம் ஆண்டு முதல் சென்னையிலிருந்து வெளிவந்து கொண்டு இருக்கின்றது. செங்குந்தரின் நோக்கங்கள், அவர்தம் கருத்துகள், செங்குந்த மக்களது அறிவு ஆற்றல் கொடை புகழ் வழக்கம் ஒழுக்கம் முதலியனவும் வெளிவந்துள்ளன. மேலும் செங்குந்தர் பிரபந்தத் தொகுதியுள் வரும் அரிய நூல்களை விருத்தி செய்வதற்கான வழிமுறைகளை ஆராய்வது, கல்வி தொழில் வாணிகம் விவசாயம் தேசியம் கல்வெட்டு செப்பேடு முதலியவற்றில் செங்குந்தர் தொடர்பாக உள்ள செய்திகளை ஆராய்வது, 'நமது கூட்டத்தினருக்கு நாம் செய்ய வேண்டிய கடமை' என்ற தலைப்பின் கீழ் கூட்டத்தினரின் வளர்ச்சிப் பாதைக்கான வழிகளை ஆராய்வது. இதுவரை வெளிப்படாத மிக்குயர்ந்த தமிழ் நூல்களை நூதன முறையில் பதிப்பித்தல் போன்றன இவ்விதழில் வெளிவந்துள்ளன.

இச்சங்கத்தின் சுவடிப்பதிப்பாக 'செங்குந்தர் பிரபந்தத் திரட்டு' எனும் நூல் தொகுப்பு ஒன்று வெளிவந்துள்ளது. இதில் ஒட்டக்கூத்தரின் ஈட்டியெழுபது, எழுப்பெழுபது, புகழேந்திப் புலவரின் திருக்கைவழக்கம் உள்ளிட்ட பன்னிரண்டு பிரபந்தங்கள் இடம்பெற்றுள்ளன.

செங்குந்தமித்திரன் இதழில் 'இரட்டையர் அம்மானை' எனும் சுவடிப்பதிப்பு வெளிவந்துள்ளது.

சித்தாந்தம் (1928)

'சித்தாந்தம்' எனும் திங்களிதழ் ம. பாலசுப்பிரமணிய முதலியாரை ஆசிரியராகக் கொண்டு சென்னை சைவசித்தாந்த மகாசமாஜத்தின் வெளியீடாக 1928ஆம் ஆண்டு சனவரி முதல் வெளிவந்து கொண்டு இருக்கின்றது. 1912இல் வெளிவந்த சித்தாந்தம் இதழினின்றும் இது வேறானது. சித்தாந்தம் 1928 முதல் 1933 வரையிலான ஆறு மலர்கள் A4 அளவிலும், 1934 முதல் 1972 வரையிலான 39 மலர்கள் கிரௌன் அளவிலும், 1973 முதல் திம்மி அளவிலும் வெளிவந்துகொண்டு இருக்கின்றது.

சமாஜ அறிக்கைகள், சைவசமய விழாக்கள், அது தொடர்பான கருத்துகள், திருமுறை மற்றும் சாத்திர நூலாய்வுகள், சமய விவாதங்கள், சைவ சமயக் கட்டுரைகள், அரிய நூல்கள் என இவ்விதழ் வெளிவந்து கொண்டு இருக்கின்றது. சித்தாந்தம் A4 அளவில் வெளிவந்த காலத்தில் கிரௌன் அளவில் அனுபந்தப் பகுதி வெளிவந்துள்ளது. ஒவ்வொரு அனுபந்தப் பகுதியிலும் 16 பக்கங்கள் இடம்பெற்றிருந்தன. இவ்விதழில் தனிப்பக்க எண்ணுடன் திருவாசகம், சித்தாந்த சாத்திரங்கள் வெளிவந்துள்ளன. பின்னாளில் இவை தனிநூலாக்கவும் பெற்றுள்ளன. ஆனால், இவை சுவடிப்பதிப்புகள் அல்ல.

சித்தாந்தம் இதழில் அச்சில் விடுபட்ட அப்பர்பாடல், அணிமுருகாற்றுப்படை, அருட்பாமாலை, அருள்முருகாற்றுப்படை, அருள்முறைத்திரட்டு, இலந்துறை அருட்பாமாலை, கரவகுப்பு, கருணையந்தாதி, களவகுப்பு, கூந்தலூர் அருட்பாமாலை, கோமதி அந்தாதி, சக்தி வகுப்பு, சிறுவேளூர் அருட்பாமாலை, சொரூப வகுப்பு, ஞானசாரம், ஞானாமிர்தம் - மூலமும் விளக்கவுரையும், தசகாரியம், தணிகைவெண்பாவுரை, திருஈங்கோய்மலை எழுபது, திருக்குணமங்கலம் அருட்பா மாலை, திருநெறி விளக்கம், திருப்புகலூர் அருட்பாமாலை, திருப்புகழ் - வெளிவராத இருபாடல்கள், திருவாவடுதுறை குருபரம்பரை, திருவான்மியூர் சிவபெருமான் பதிகம், திருவிடை மருதூர் அருட்பாமாலை, திருவிளையாடற் கருணைத் திருவிருத்தம், பஞ்சாக்கரமாலை, பிராசாத அகவல், பொருள் முருகாற்றுப்படை, முப்பந்தொட்டியுலா, வருமுருகாற்றுப் படை ஆகிய முப்பத்திரண்டு சுவடிப்பதிப்புகள் வெளிவந்து உள்ளன.

சக்தி

வை.கோவிந்தனால் 1939ஆம் ஆண்டு சக்தி காரியாலயம் சென்னையில் நிறுவப்பெற்றது. நூல் வெளியீட்டுத் துறையில் வரலாறு படைத்த இந்நிறுவனம் பல்வகைத் தலைப்புகளில் பயனான பொருள்கள் பற்றி 250 நூல்களை வெளிக்கொணர்ந்து உள்ளது. பாரதியார் கவிதைகள், திருக்குறள் பரிமேலழகர்

உரை, கம்பராமாயண காண்டங்கள், நாவல்கள் மற்றும் புதிய புதிய நூல்களைப் படைத்துத் தந்த பெருமைக்கு உரியது இந்நிறுவனம்.

'சக்தி' எனும் திங்களிதழ் அ. கிருஷ்ணமூர்த்தியை ஆசிரியராகக் கொண்டு இந்நிறுவனத்தின் வெளியீடாகச் சென்னையிலிருந்து 1939ஆம் ஆண்டு ஆவணி முதல் வெளிவந் துள்ளது. முதல் ஐந்து மலர்கள் டபுள்கிரௌன் அளவிலும், ஆறாவது மலரிலிருந்து கிரௌன் அளவிலும் இவ்விதழ் வெளிவந்திருக்கின்றது. மனித சமுதாயம் முழுமை பெறும் ஞானத்தையும், அருளறிவு, பொருளறிவு கடவுட்கலை இயற் கலை ஆகியவற்றையும், அறிவு தொழில் விடுதலை ஆகிய மூன்று சக்திகளையும் புகட்ட வல்லதாக இவ்விதழ் அமையும். இதனை இவ்விதழாசிரியர், "மனித சமுதாயம் பூரணம் பெறுவதற்கு, ஆத்ம ஞானமும் வேண்டும், லௌகிக ஞானமும் வேண்டும். அருளறிவு, பொருளறிவு, கடவுட்கலை, இயற் கலை ஆகியவற்றைச் சக்தி தூண்டுவாள். மடமை, வறுமை, அடிமைத்தனம் இம்மூன்றும் நமது நாட்டைத் துன்புறுத்தும் இடர்களாம். இவற்றை நீக்க அறிவு, தொழில், வீரசுதந்திரம் ஆகிய மூன்று சக்திகள் வேண்டும். நமது சமுதாயத்தில் பல மாசுகள் படிந்து ஒற்றுமையைக் கெடுக்கின்றன. அம்மாசுகளை அறவே நீக்கச் சுத்த சன்மார்க்க சக்தியைத் தூண்ட வேண்டும். இவ்வாறு எத்தனையோ அரும்பணிகள் உள்ளன. காலத்தின் தேவைக்கும் மாறுதலுக்கும் ஏற்றபடி, நாட்டின் புதிய முன்னேற் றத்தைக் கருதிச் சிறந்த அறிவாளிகளின் கூட்டுறவால் சக்தி பல துறைகளிலும் தன்னால் இயன்ற பணி செய்யவே தமிழர் முன் தோன்றுகிறாள்" (சக்தி, 1:1:1939,ப.3) என்று குறிப்பிடு கின்றார்.

சக்தியின் முதல் இரண்டு மலர்களில் மட்டுமே பழந் தமிழ் நூற்பதிப்புகள் இடம்பெற்றுள்ளன. ஏனைய இதழ்களில் சுவடிப்பதிப்புகள் எதுவும் வெளிவரவில்லை. சைலாச நிகண்டு சூளாமணி, சாத்தூர் நொண்டி ஆகிய இரண்டு சுவடிப் பதிப்புகள் இவ்விதழில் வெளிவந்துள்ளன. மேலும்

இவ்விதழில் பெ. தூரன், சுரபி, தேசிக விநாயகம் பிள்ளை, நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை போன்றோரின் கவிதைகளும் இடம்பெற்றுள்ளன. சுந்தானந்த பாரதியாரின் படைப்புகள் இவ்விதழில் அதிகமாக இடம்பெற்றிருக்கின்றன. ருஷ்ய அறிஞர் டால்ஸ்டாயைத் தமிழ் மக்களுக்கு நன்கு அறிமுகப்படுத்தியதும் இந்த இதழ்தான்.

நல்லறம்

'நல்லறம்' எனும் திங்களிதழ் டி.எஸ். ஸ்ரீபாலை ஆசிரியராகக் கொண்டு ஜைன அறநிலையத்தின் வெளியீடாக மேல்சித்தாமூரிலிருந்து 1958ஆம் ஆண்டு சனவரி முதல் வெளிவந்துள்ளது. இவ்விதழிற்கு முதலிரண்டாண்டுக் காலம் வரை டி.எஸ். ஸ்ரீபாலும், பின்னர் வந்த இரண்டாண்டுகள் புலவர் கம்பீர நயினாரும், அதற்கும் அடுத்து மோ.ச. பரதனும் நான்காண்டுக் காலம் நடத்தி வந்துள்ளனர். இவ்விதழில் சைன மதம் தொடர்பான கட்டுரைகள், தீர்த்தங்கரர்கள் பற்றிய ஆய்வுகள், சைனர் வாழிடங்களின் வரலாறுகள், சைன நூலாய்வுகள் போன்றன வெளிவந்துள்ளன.

இவ்விதழில் அப்பாண்டைநாதர் உலா, திருநாதர் குன்றத்துப் பதிகம், திருமேற்றிசையந்தாதி ஆகிய மூன்று சுவடிப்பதிப்புகள் வெளிவந்துள்ளன.

முக்குடை

'முக்குடை' எனும் திங்களிதழ் த. சனத்குமாரை ஆசிரியராகக் கொண்டு சமண இளைஞர் மன்ற வெளியீடாகச் சென்னையிலிருந்து வெளிவந்துள்ளது. தமிழ் - ஆங்கிலம் கலந்த இருமொழி இதழாகத் திகழ்கிறது. இவ்விதழில் தத்துவ விளக்கக் கட்டுரைகள், கதைகள், ஆராய்ச்சிக் கட்டுரைகள், சமண சமயத்தினர் நிலை, இளைஞர்களின் மத ஈடுபாடு, சிறுவர் பகுதி, ஆகம விளக்கம், அறத்துணுக்குகள் போன்றவை இடம்பெற்றிருக்கின்றன. ஆதிபகவன் முதலான தீர்த்தங்கரர்கள் அருளிய அறவுரைகளைப் பரப்புவதும், அவர்களின் அறச் சிந்தனைகளை உரிய முறையில் மக்களை அடையச் செய்வதும்

இவ்விதழின் முக்கிய நோக்கமாக இருக்கின்றது. மேலும் சமண சமய நூல்களைப் பதிப்பிப்பதையும் தம் பணியாகக் கொண்டிருக்கின்றது.

சமண இளைஞர் மன்றச் சுவடிப்பதிப்புகளாக அவிநயம், அமுதசாகரம், இந்திரகாளியம், தொல்காப்பிய ஒப்பியல், நரிவிருத்தம், அருகன் அந்தாதி, அருங்கலச் செப்பு, திருக்குறள் மூலம் போன்றவை வெளிவந்துள்ளன. இவை யல்லாமல் 'முக்குடை' இதழிலும் சில பதிப்புகள் வெளிவந்து உள்ளன. குறிப்பாக, திருமயிலாபுரிப் பத்து, தீபங்குடிப் பத்து, வீரபுரப் பத்து ஆகிய மூன்று சுவடிப்பதிப்புகளைக் குறிப்பிடலாம்.

ஆ. அரசு நிறுவனப் பருவ இதழ்கள்

இந்திய விடுதலைக்குப் பிறகு உருவாக்கப்பெற்ற அரசு நிறுவனங்கள் பல உண்டு. அவற்றில் கல்வித்துறை சார்பானவை சில. தமிழ்நாடு அரசின் தொல்பொருள் ஆய்வுத் துறை, தமிழ்வளர்ச்சிக் கழகம், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை அரசாங்க அறநிலையப் பாதுகாப்புத்துறை (தமிழ்நாடு அரசு அறநிலையப் பாதுகாப்புத்துறை), தொல்லியல் ஆய்வுத் துறை, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் போன்ற அரசு நிறுவனங் களைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

தமிழின்-தமிழகத்தின் பெருமையையும் கலைச்செல்வங் களையும் உலகுக்கு உணர்த்தும் உன்னத நோக்கோடு இந்நிறுவனங்கள் செயலாற்றி வருகின்றன. தங்களின் ஆய்வு முடிபுகளையும் அரிய கண்டுபிடிப்புகளையும் வெளிப்படுத்தத் தங்கள் நிறுவனத்திற்கெனத் தனித்தனியே இதழைத் தொடங்கியுள்ளன. அரசு நிறுவனங்கள் வெளியிட்ட பருவ இதழ்களில் சுவடிப்பதிப்புகள் இடம்பெற்ற பருவ இதழ்களை 'அரசு நிறுவனச் சுவடிப்பதிப்புப் பருவ இதழ்கள்' என்கின்றோம். தமிழ்நாட்டு அரசின் தொல்பொருள் ஆய்வுத்துறை (கல்வெட்டு), சென்னை அரசாங்க அறநிலையப் பாதுகாப்புத்துறை (திருக்கோயில்), உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் (தமிழியல்)

போன்ற அரசு நிறுவனங்கள் பருவ இதழ்களை வெளியிட்டு உள்ளன. இவற்றில் திருக்கோயில் (1958), கல்வெட்டு (1974) ஆகிய பருவ இதழ்கள் சுவடிப்பதிப்புகளை வெளியிட்டுள்ளன.

திருக்கோயில்

'திருக்கோயில்' எனும் திங்களிதழ் ஜி. கலியாணத்தை ஆசிரியராகக் கொண்டு சென்னை அரசாங்க அறநிலையப் பாதுகாப்புத் துறையின் வெளியீடாக 1958ஆம் ஆண்டு அக்டோபர் முதல் வெளிவந்து கொண்டு இருக்கின்றது. முதல் மூன்றாண்டுகளுக்குத் திருக்கோயில் இதழின் ஒவ்வொரு பகுதியும் தனித்தனிப் பக்கவெண் பெற்று வெளிவர, அடுத்து வெளிவந்த திருக்கோயில் இதழ்ப் பகுதிகள் ஓராண்டுக்குத் தொடரெண் பெற்று முறையே வெளிவந்துகொண்டு இருக்கின்றது. A4 அளவில் பக்கத்திற்கு இரண்டு பத்திகளாகத் தொடர்ந்து வெளிவருகின்றது.

சென்னை அரசாங்க அறநிலையப் பாதுகாப்புத் துறையின் வாயிலாக இவ்விதழ் முதலில் வெளிவந்தது. பின்னர் தமிழ்நாடு அரசு இத்துறையின் பெயரை இந்து அறநிலையத்துறை எனப் பெயர் மாற்றம் செய்தபோது இவ்விதழும் இந்து அறநிலையத்துறையின் வெளியீடாக வெளிவருகின்றது. நம் நாட்டில் 275 தேவாரப் பாடல்பெற்ற தலங்களும், 108 திவ்யப் பிரபந்தங்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற திருப்பதிகளும் உள்ளன. அவற்றைப் பற்றிய குறிப்புகளும் மற்றும் சமயம் சம்பந்தமான கட்டுரைகளும் இவ்விதழில் தொடர்ந்து வெளிவருகின்றன. மேலும், ஆலயங்கள், ஆலய அமைப்பு, திருவிழாக்கள், திருவாதிரை - திருவோணம் - விசாகம் முதலிய நட்சத்திரங்களைப் பற்றியும், மாநிலமெங்கும் நடைபெற்ற திருப்பணிகள் பற்றியும், நாதசுவர, ஆகம, திருமுறைப் பயிற்சி வகுப்புகள் முதலியவற்றைப் பற்றியும் அவ்வப்போது வெளிவருகின்றது.

"இப்போது கிடைத்தற்கரியனவாய் உள்ளனவும், பழமையும் பெருமையும் இலக்கியச் சிறப்பும் மிக்கனவாகிய,

நல்ல பல சமய இலக்கியங்களைப் பகுதி பகுதியாகத் தொடர்ந்து வெளியிட்டு வருவது சமய ஆர்வலர்களுக்கும் தமிழ் இலக்கிய அன்பர்களுக்கும், பெரிதும் பயன்படுவதாக இருக்கும் என்னும் கருத்தில், தொடர்ந்து பல சமய இலக்கியங்கள் பகுதி பகுதியாக வெளியிடப்பெறவிருக்கின்றன. அந்நிலையில் முதற்கண் 'பட்சிதீர்த்தம்' என இந்தியநாடு முழுவதும் புகழ் பெற்றுத் திகழும் திருக்கழுக்குன்றம் என்னும் தொண்டை நாட்டுச் சிவதலம் பற்றி அந்தகக்கவி வீரராகவர் என்னும் அருட்பெறு கவிஞர் பெருமான் இயற்றியருளிய திருக்கழுக் குன்றத் தலபுராணம் மூலமும் உரையுமாக, இத்திங்கள் முதல் வெளியிடப்பெறுகின்றது. இதன் உரைப்பகுதி சென்ற 19ஆம் நூற்றாண்டில் மிகவும் புகழ்பெற்றுத் தலைசிறந்து விளங்கியிருந்த மகாவித்துவான் காஞ்சிபுரம் திரு. சபாபதி முதலியார் அவர்களின் உரையைப் பெரிதும் தழுவியும், மூலச் செய்யுட்களின் சீர்கள் சந்திகள் முதலியவை பிரித்தும் வெளியிடப்பெறுகின்றன. திருக்கழுக்குன்றத்தில் எழுந்தருளியுள்ள வேதாசலப்பெருமான் ஆகிய மறைமலை அண்ணலின் திருவருளால் இச்சமய இலக்கியப் பகுதியின் வெளியீடு நன்கினிது அமைந்து, அன்பர்கள் அனைவருக்கும் நல்ல பயன்களை நல்குவதாகுக? இதனை அடுத்து அரிசமய, இருசமய விளக்கம் முதலிய சிறந்த பல நூல்கள் வெளிவரும்" (திருக்கோயில், 15:6:1973, ப.112) என்று இவ்விதழின் நோக்கம் செயல்பாடு பற்றி ந.ரா. முருகவேள் குறிப்பிடுகின்றார்.

இவ்விதழில், திருஞானசம்பந்தர் பிள்ளைத்தமிழ், திருவாரூர்க் கமலைப் பராசக்தி மாலை, பழனிமலைக் கந்தசுவாமி கலித்துறைமாலை, வண்ணத்தியல்பு நூல், வயலூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி ஆகிய ஐந்து சுவடிப்பதிப்புகள் வெளிவந்துள்ளன.

கல்வெட்டு

'கல்வெட்டு' எனும் காலாண்டிதழ் இரா. நாகசாமியை ஆசிரியராகக் கொண்டு தமிழக அரசின் தொல்பொருள்

ஆய்வுத் துறையின் வெளியீடாகச் சென்னையிலிருந்து 14.4.1974ஆம் ஆண்டு முதல் வெளிவந்து கொண்டு இருக்கின்றது. தொல்பொருள் ஆய்வுத்துறையின் இயக்குநரே இவ்விதழின் ஆசிரியராகத் திகழ்கின்றனர். ஒவ்வோரிதழும் தொடரெண் பெற்று ஆண்டுக்கு நான்கு இதழ்கள் என வெளிவந்துள்ளன. இம்முறையில் சில ஆண்டுகளே வெளிவர, பின்னர் அவ்வப்போது வெளிவருவது என ஆகியுள்ளது. இருப்பினும் இதழ் வரிசையெண் கால இடைவெளியின்றி தொடரெண் கொடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, 21ஆவது இதழ் 1984ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வெளிவந்துள்ளது. அடுத்த இதழான 22ஆவது இதழ் 1989ஆம் ஆண்டு மே மாதம் வெளிவந்துள்ளதைக் குறிப்பிடலாம். இதில் கல்வெட்டு தொடர்பான செய்திகள், புதிய கல்வெட்டுகள், வரலாற் றாய்வுகள், வரலாற்றை உறுதிப்படுத்தப் பயன்படும் வரலாற் றிலக்கிய நூல் ஆய்வுகள், நூல் பதிப்புகள் போன்றன இடம் பெற்றுள்ளன.

இவ்விதழில் வரலாற்றாய்வை உறுதிப்படுத்தும் மல்லைச் சிவந்தெழுந்த பல்லவராயன் உலா, தளவாய் முதலியாரவர்கள் பேரில் அமுதரஸ மஞ்சரி ஆகிய இரண்டு சுவடிப்பதிப்புகள் வெளிவந்துள்ளன.

6. பல்கலைக்கழகப் பருவ இதழ்கள்

சென்னைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், திருவனந்தபுரம் கேரளப் பல்கலைக்கழகம், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் போன்றவை தமிழ்ப் பணியோடு சுவடிப் பதிப்புகளையும் வெளியிட்டுள்ளன. தமிழகத்திலுள்ள பல்கலைக்கழகங்களில் சென்னைப் பல்கலைக்கழகம் ‘கயாதர நிகண்டு’ எனும் நூலையும்; அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ‘கம்பராமாயணம் - 1 முதல் 16 தொகுதிகள் மற்றும் உத்தர காண்டம் 1 மற்றும் 2 தொகுதிகள், திருவருட்பா 1 முதல் 10 தொகுதிகள், சுவாமிநாதம்’ போன்ற பதிப்பு நூல்களையும்; மதுரை காமராசர் பல்கலைக்கழகம் ‘யூகிமுனி பிடிவாதம்

ஆயிரம், வீரபாண்டிய கட்டபொம்மு, முத்துப்பட்டன் கதை, காத்தவராயன் பாடல், கட்டபொம்மு கூத்து, கான்சாகிபு சண்டை, ஐவர் ராசாக்கள் கதை' போன்ற பதிப்பு நூல்களையும்; தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் 'சீவேந்திரர் சரிதம், செழியதரையன் பிரபந்தங்கள், ஆத்திசூடி உரை, குறுந்தொகை, தொல்காப்பியம் பொருளதிகாரம் செய்யுளியல், இலக்கண சூடாமணி, அறுவகை இலக்கணம், அகத்தியர் வைத்திய காவியம் 1500, அகத்தியர் குழம்பு, நோயும் மருந்தும், நான்மணிக்கடிகை, சாந்தாதி அசுவமகம், அகத்தியர் வைத்தியக்கும்மி' போன்ற பதிப்பு நூல்களையும் வெளியிட்டுள்ளன.

தமிழகப் பல்கலைக்கழகங்கள் இத்தனிநிலைச் சுவடிப் பதிப்புகள் தவிர பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகளும் வெளியிட்டு உள்ளன. இவ்வகையில் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையின் 'தமிழாய்வு' (1972), சென்னைப் பல்கலைக்கழகத் தமிழிலக்கியத்துறையின் 'உயராய்வு' (1983), தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் 'தமிழ்க்கலை' (1983) ஆகிய பருவ இதழ்கள் இடம்பெறுகின்றன. தமிழாய்வு, உயராய்வு ஆகிய பருவ இதழ்களில் வெளிவந்த சில சுவடிப் பதிப்புகள் பின்னாளில் தனிநூலாகவும் வெளிவந்துள்ளன.

தமிழாய்வு

தமிழ் நாட்டிலுள்ள மூத்த பல்கலைக்கழகம் என்ற பெருமைக்குரியது சென்னைப் பல்கலைக்கழகம். இதன் பன்மொழித் துறை ஆய்வுகளை ஆங்கிலத்திலும் பிற மொழிகளிலும் சென்னைப் பல்கலைக்கழகத்தின் 'கிழக்கியல் கலை ஆய்வு இதழ்' (Annals of Oriental Research) வெளியிட்டு வருகின்றது. இதுவரை எந்தத் தமிழகப் பல்கலைக்கழகமும் தமிழ்த்துறைக்கெனப் பருவ இதழ் நடத்தியதில்லை. ஆனால், டாக்டர் ந. சஞ்சீவியின் முயற்சியால் 1972ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் சார்பில் 'தமிழாய்வு' எனும் அரையாண்டிதழ் இந்திய விடுதலை வெள்ளிவிழாவை முன்னிட்டு தோற்றுவிக்கப்பெற்றிருக்கின்றது.

1972 முதல் 1976 வரை வெளிவந்த முதல் நான்கு தொகுதிகளுக்குப் பேரா. ந. சஞ்சீவியும், 1977 முதல் 1990 வரை வெளிவந்த 5-14 தொகுதிகளுக்குப் பேரா. சி. பாலசுப்பிர மணியமும் பதிப்பாசிரியர்களாகப் பணியாற்றியுள்ளனர். 14ஆம் தொகுதிக்குப் பிறகு 'தமிழாய்வு' நின்றுவிட்டது.

இவ்விதழில் ஆய்வுக்கட்டுரைகள், கருத்தரங்கின் பொழிவுகள், மதிப்புரை மாலை, நூலடைவு மற்றும் சொல்லடைவு, அச்சில் வாரா அருந்தமிழ் மற்றும் துறைச்செய்திகள் போன்றவை வெளியிடப்பெற்றன.

அச்சில் வாரா அருந்தமிழ் என்னும் பகுதியில் சுவடிப் பதிப்பு நூல்கள் வெளிவந்துள்ளன. அவை, அடிமதிக்குடி அய்யனார் பிள்ளைத்தமிழ், அப்பாண்டைநாதர் உலா, அல்லிகதை, ஈனமுத்துப் பாண்டியன் கதை, கம்பராமாயணக் கௌஸ்துபம், சேலம் தாலந்தீர்த்த செழியன் மஞ்சரி, நாககுமார காவியம், பாரதி தீபம், மெய்ம்மொழிச் சரிதை, மேரு மந்தர மாலை ஆகிய பத்துச் சுவடிப்பதிப்புகள் ஆகும். அச்சில் வாரா அருந்தமிழ்ப் பகுதி மட்டும் தனிப்பக்க எண் பெற்றுள்ளது. பொதுவாக, இதழ்கள் எதுவும் மறுபதிப்பு கண்டதாகத் தெரியவில்லை. ஆனால், 'தமிழாய்வு' தொகுதி 1, பகுதி 1 மட்டும் 1974ஆம் ஆண்டு மறுபதிப்புக் கண்டுள்ளது.

உயராய்வு

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் வாயிலாகத் 'தமிழாய்வு' என்னும் அரையாண்டிதழ் வெளிவந்து கொண்டிருந்த போது தமிழ்த்துறையானது 1980ஆம் ஆண்டு மொழித்துறை, இலக்கியத்துறை என இரண்டாக்கப்பெற்றது. அப்போது தமிழிலக்கியத்துறையின் சார்பில் பேரா. ந. சஞ்சீவியால் 'உயராய்வு' எனும் ஆண்டிதழ் 1983ஆம் ஆண்டு தொடங்கப்பெற்றுள்ளது. 1983ஆம் ஆண்டிதழிற்குப் பேரா. பொன். கோதண்டராமனும், 1986-95ஆம் ஆண்டுகளுக்குரிய இதழிற்குப் பேரா. கு. மோகனராசுவும் பதிப்பாசிரியர்களாகப் பணியாற்றியுள்ளனர். ஆக, உயராய்வு 1983, 1984 & 85,

1986-95ஆம் ஆண்டுக்குரிய மூன்று இதழ்ப் பகுதிகளே இதுவரை வெளிவந்துள்ளன. 1995ஆம் ஆண்டுக்குப் பிறகு உயராய்வு வெளிவரவில்லை.

ஒவ்வோர் ஆண்டிதழும் மூன்று பகுதிகளால் அமைக்கப்பெற்றுள்ளது. முதல் பகுதியில் தமிழாய்வுக் கட்டுரைகள் தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் இடம்பெற்று உள்ளன. இரண்டாம் பகுதியில் தமிழியல் கட்டுரைகளுக்கான வகை தொகைகள் அமைந்துள்ளன. மூன்றாம் பகுதியில் அச்சில் வாரா அருந்தமிழ் மற்றும் துறைச்செய்திகள் இடம்பெற்று உள்ளன.

இதுவரை வெளிவந்துள்ள மூன்று இதழ்ப் பகுதிகளில் முதலிரண்டு இதழ்ப் பகுதிகள் அச்சில்வாரா அருந்தமிழ்ப் பகுதியை வெளியிட்டுள்ளன. இதில், ஆத்திசூடி பரிமேலழகர் உரை, இருபுராண விருத்தம், நீதிநூல் ஆகிய மூன்று சுவடிப் பதிப்புகள் வெளிவந்துள்ளன. இவ்விதழின் ஒவ்வொரு பகுதியும் தனித்தனிப் பக்கவெண் பெற்றுள்ளது.

தமிழ்க்கலை

தமிழாய்விற்கென்று தமிழ்ப் பல்கலைக்கழகம் 1981ஆம் ஆண்டு தஞ்சையில் உருவாக்கப்பெற்றது. இப்பல்கலைக் கழகம் 1983ஆம் ஆண்டு மார்ச்சு முதல் 'தமிழ்க்கலை' எனும் தமிழியல் காலாண்டு ஆய்விதழ் ஒன்றைத் தொடங்கியது. இவ்விதழ் பதிப்புத்துறை இயக்குநரின் மேற்பார்வையில் பதிப்பாசிரியர் குழுவினரால் வெளியிடப்பெற்று வருகிறது.

1983ஆம் ஆண்டு மட்டும் நான்கு பருவங்களுக்கும் நான்கு பருவ இதழ்கள் வெளிவந்துள்ளன. 1984ஆம் ஆண்டு முதல் 1989ஆம் ஆண்டு வரை இரண்டிரண்டு பருவங்களுக்கு ஓர் இதழ் என்று ஆண்டுக்கு இரண்டு பருவ இதழ்கள் வெளிவந்துள்ளன. 1990ஆம் ஆண்டு முதல் 1994ஆம் ஆண்டு வரை நான்கு பருவங்களுக்கு ஓர் இதழ் என்று ஆண்டுக்கு ஓர் இதழ் வெளிவந்துள்ளது. 1994ஆம் ஆண்டுக்குப் பிறகு இவ்விதழ் வெளிவராமலிருக்கின்றது.

இவ்வாய்விதழில் மொழியியல், கலையியல், இலக்கியம், சமூகவியல், உளவியல், மானிடவியல், மருத்துவவியல், தொழில்நுட்பவியல் மற்றும் பல்வேறு அறிவியல் சார்ந்த கட்டுரைகள் வெளிவந்துள்ளன. இதில் பல்கலைக்கழக ஆய்வாளர்களும் தமிழறிஞர்களும் ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளனர்.

இவ்விதழ் முழுக்க முழுக்க ஆய்வுக் கட்டுரைகளையே தாங்கி வந்தாலும் 1994ஆம் ஆண்டு இதழில் மட்டும் 'உதயத்தூர் புலைமாடத்தி வரத்து' எனும் சுவடிப்பதிப்பு வெளிவந்துள்ளது.

தொகுப்புரை

தமிழ்ச் சங்கங்கள், சுவடி நூலகங்கள், ஆதீனங்கள், நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் ஆகியன பதிப்புத்துறையில் செயலாற்றி வருவன. இவ்வமைப்புகளின் பருவ இதழ்களில் சுவடிப்பதிப்புகள் வெளிவந்திருப்பதைவிட நூற்பதிப்புத் துறையில் ஈடுபடாத 19ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வெளிவந்த தனியார் பருவ இதழ்களில் சுவடிப்பதிப்புகள் வெளிவந்திருப்பது பாராட்ட வேண்டிய ஒன்று.

- பருவ இதழ்ச் சுவடிப்பதிப்பின் வரலாற்றைத் தனியார் பருவ இதழ்தான் தொடங்கி வைக்கிறது. அதாவது, 'உண்மை விளக்கம் அல்லது சித்தாந்த தீபிகை' எனும் திங்களிதழ் 'திருவானைக்கா உலா' (1897)வை வெளியிட்டுள்ளது.

- சுவடிப்பதிப்புகளை வெளியிட்ட பெரும்பான்மையான தனியார் பருவ இதழ்கள் கி.பி.1930க்கும் முற்பட்ட காலத்தனவாகவே இருக்கின்றன.

- தமிழ்ச் சங்கப் பருவ இதழான 'செந்தமிழ்' இதழில் முழுமை மற்றும் திரட்டுச் சுவடிப்பதிப்புகள் பெரும்பான்மை தனிநூற்பதிப்பாக வெளிவந்திருக்கின்றன. ஆனால்,

'தமிழ்ப்பொழில்' இதழில் இந்நிலையைக் காண்பதரிதாக இருக்கின்றது.

- சுவடி நூலகம் பன்மொழிச் சுவடிகளைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. இந்நூலக வெளியீடுகள் பன்மொழியில் அமைவது போல, இந்நூலகப் பருவ இதழ்களிலும் பன்மொழிப் பொருண்மை காணப்படுகின்றது.

- சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழில் வெளிவந்த சுவடிப்பதிப்புகளில் சில ஆஃப் பிரிண்ட் முறையில் தனிநூலாக்கப்பெற்றுள்ளன. ஆனால், அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் வெளிவந்த சுவடிப்பதிப்புகள் எதுவும் அந்நூலகத் தனிநூற் பதிப்பாக வெளிவராதிருக்கின்றது.

- சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ் 1939-1952ஆம் ஆண்டு வரையுள்ள கால இதழ்ப் பகுதிகளில் தமிழ் மொழி இடம்பெறாதிருக்க, சமஸ்கிருதமும் ஆங்கிலமும் முற்றிலுமாக இடம்பெற்றிருந்தன. இதற்கு மாறாக இவ்விதழின் 1993-1997ஆம் ஆண்டுக் காலத்தில் சமஸ்கிருதச் செய்தியைக் கூடத் தமிழ்மொழியில் தெரிவிக்கும் போக்கு காணப்படுகின்றது. இதனைப் பார்க்கும்போது இவ்விதழ் தொடக்கத்தில் சமஸ்கிருதத்திற்கும் இக்காலத்தில் தமிழிற்கும் முக்கியத்துவம் கொடுத்திருப்பது தெரிகின்றது.

- சுவடிநூலகப் பருவ இதழான சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழில் நூற்பதிப்புகளும் ஆய்வுக்கட்டுரைகளும் பன்மொழியில் வெளிவந்திருக்க, அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் பன்மொழியிலான நூற்பதிப்புகள் மட்டும் வெளிவந்திருப்பது தெரிகின்றது.

- சுவடிநூலகப் பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகள் எல்லாம் அவ்வவ் நூலகச் சுவடிகளை மட்டும் ஆதாரமாகக் கொண்டு வெளிவந்திருப்பது தெரிகின்றது.

- ஆதீனப் பருவ இதழ்களில், ஆதீனம் சார்ந்த சமய இலக்கியங்கள், ஆதீனத் தலைவர்கள் இயற்றிய நூல்கள் என வெளிவந்திருப்பது தெரிகின்றது. குறிப்பாக, மாதாந்திர அமுதம் இதழில் கௌமாரம் தொடர் பாகவும், கௌமார மடாலயத்தைச் சேர்ந்த வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள், தவத்திரு இராமானந்த சுவாமிகள், தவத்திரு கந்தசாமி சுவாமிகள், தவத்திரு சுந்தரசுவாமிகள் ஆகியோரின் நூல்கள் மட்டும் வெளிவந்திருப்பது இக்கூற்றினை உறுதிப்படுத்து கின்றது.

- பருவ இதழ்ச் சுவடிப்பதிப்பின் வரலாறு 1897இல் தொடங்கினாலும் பல்கலைக்கழகப் பருவ இதழ்களில் சுவடிப்பதிப்புகள் 75 ஆண்டுகள் கழிந்த பிறகே வெளிவந்திருப்பது தெரிகின்றது.

- பல்கலைக்கழகச் சுவடிப்பதிப்புப் பருவ இதழ்களான தமிழாய்வு, உயராய்வு, தமிழ்க்கலை ஆகியவற்றில் இதுவரை பதினான்கு சுவடிப்பதிப்புகள் வெளிவந்திருப்பது தெரிகின்றது.

- தமிழ்க்கலையில் வெளிவந்த சுவடிப்பதிப்பைத் தவிர ஏனைய பல்கலைக்கழகச் சுவடிப்பதிப்புகள் எல்லாம் தனிப்பக்கவெண் பெற்று வெளிவந்திருப்பது தெரிகின்றது.

- ஒவ்வொரு நூலும் ஒரே இதழ்ப் பகுதியில் முடிவதாகப் பல்கலைக்கழகப் பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகள் அமைந்திருப்பது தெரிகின்றது.

- நேரிடைச் சுவடிப்பதிப்புகளை வெளியிடாத சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், செந்தமிழ்ச் செல்வியில் சில சுவடிப்பதிப்புகளை வெளியிட்டு உள்ளது தெரிகின்றது.

- தனியார்ச் சுவடிப்பதிப்புப் பருவ இதழ்கள் தொடங்கப் பெற்ற காலத்தைப் பார்க்கும்போது 1901-1923 மற்றும் 1928 - 1973 ஆகிய ஆண்டுகளுக்குள் வேறெந்தத்

தனியார்ச் சுவடிப்பதிப்புப் பருவ இதழ்களும் வெளிவர வில்லை என்பதை அறியமுடிகிறது.

- ஆதீனங்களின் தனிநூற் பதிப்புகளையும், ஆதீனப் பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகளையும் எண்ணிக்கை அளவில் ஒப்பிட்டுப் பார்க்கும் போது தனிநூற் பதிப்புகளைவிட ஆதீனப் பருவ இதழ்ச் சுவடிப் பதிப்புகள் அருகியே இருப்பதும், பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்ச் சங்கங்களின் தனிநூற்பதிப்புகளையும்; பல்லைக்கழகம் மற்றும் தமிழ்ச் சங்கங்களின் பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகளையும் எண்ணிக்கை அளவில் ஒப்பிட்டுப் பார்க்கும்போது பருவ இதழ்ச் சுவடிப் பதிப்புகளை விடத் தனிநூற்பதிப்புகள் அருகியே இருப்பதும், சுவடி நூலகங்களின் தனிநூற்பதிப்பு களையும் சுவடிநூலகப் பருவ இதழ்களின் சுவடிப் பதிப்புகளையும் எண்ணிக்கை அளவில் ஒப்பிட்டுப் பார்க்கும்போது தனிநூற்பதிப்புகளின் பாதி அளவே பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகள் வெளிவந் திருப்பதும் தெரிகின்றது.

- சுவடிப்பதிப்பு வரலாற்றுக்கும் (1812), பருவ இதழ்ச் சுவடிப்பதிப்பு வரலாற்றுக்கும் (1897) இடையே 85 ஆண்டுகள் கால இடைவெளி அமைந்திருக்கின்றது.

- ஆய்வுக்குப் பயன்படுத்தப்பெற்ற 36 பருவ இதழ்களில் வார இதழ் 1ம், திங்களிதழ் 26ம், காலாண்டிதழ் 4ம், நாற்றிங்களிதழ் 1ம், அரையாண்டிதழ் 2ம், ஆண்டிதழ் 1ம் என அமைந்திருப்பதைக் காணும்போது திங்க ளிதழ்களே சுவடிப்பதிப்புகளை வெளியிட்ட பருவ இதழ்களில் பெரும்பான்மையாக அமைந்திருப்பது விளங்குகின்றது.

- தனிநூலாக்கும் எண்ணத்துடன் வெளியிடப்பெற்ற பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகள் தனிப்பக்கவெண் பெற்று வெளிவந்துள்ளன. நூற்பகுதிக்கு ஒருவகை எண்ணும், முன்னுரை பதிப்புரை ஆய்வுரை

போன்றவற்றிற்கு வேறோர் எண்ணும் கொடுத்து உள்ளனர். பகுதி பகுதியாக வெளிவரும் நூலின் தொடக்கத்தில் நூற்பகுதியும் இறுதியில் முன்னுரைப் பகுதியும் அமைவதால் இவ்விரு வகைக்கு வேறுபட்ட எண்களைக் கொடுத்திருப்பது தெரிகின்றது.

- சுவடி நூலகப் பருவ இதழ்கள் மற்றும் பல்கலைக்கழகப் பருவ இதழ்கள் ஆகியவற்றில் வெளிவந்த சுவடிப் பதிப்புகளின் பதிப்பாசிரியர்கள் அவ்வவ் அமைப்பைச் சார்ந்த தமிழறிஞர்களாகவும்; தனியார் பருவ இதழ்கள், தமிழ்ச் சங்கப் பருவ இதழ்கள், ஆதீனப் பருவ இதழ்கள், நிறுவனப் பருவ இதழ்கள் ஆகியவற்றில் வெளிவந்த சுவடிப்பதிப்புகளின் பதிப்பாசிரியர்கள் ஏனைய தமிழறிஞர்களாகவும் இருந்திருக்கின்றனர் என்பது தெரிகின்றது.

- அழிவிலிருந்து சுவடிகள் காக்கப்பெற வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் தமிழ்ச் சங்கப் பருவ இதழ்கள் மற்றும் சுவடி நூலகப் பருவ இதழ்கள் ஆகியவற்றில் குறைச்சுவடிப்பதிப்புகளும் வெளிவந்திருக்க, ஏனைய வகைப் பருவ இதழ்களில் குறைச்சுவடிப்பதிப்புகளைக் காண்பது அரிதாகவே இருக்கின்றது.

3. சுவடிப்பதிப்பு வரலாற்றில் பருவ இதழ்கள்

இந்தியாவில் - தமிழகத்தில் - முதல் சுவடிப்பதிப்பு நூல் கி.பி.1812இல் வெளிவந்துள்ளது. இதைத் தொடர்ந்து இன்றுவரை பல்லாயிரம் சுவடிப்பதிப்புகள் தமிழுலகில் வலம் வந்துகொண்டிருக்கின்றன. சுவடிப்பதிப்பு வகைகளில் பருவ இதழ்ச் சுவடிப்பதிப்பும் ஒன்று. சுவடிப்பதிப்பு வரலாற்றில் பருவ இதழ்களில் வெளிவந்த சுவடிப்பதிப்பின் இடம் குறித்து இப்பகுதி ஆய்கின்றது. குறிப்பாக, இவ்வியலில் சுவடிப்பதிப்பு வரலாறு, சுவடிப்பதிப்பு வகைகள், பருவ இதழ்ச் சுவடிப் பதிப்புகளின் வகைகள், பருவ இதழ்ச்சுவடிப்பதிப்புப் பதிப்பாசிரியர்கள் போன்ற பொருள்களில் ஆராயப்பெறுகின்றன.

சுவடிப்பதிப்பு வரலாறு

பனையோலைகளில் எழுத்தாணி கொண்டு எழுதப் பெற்றவற்றைச் 'சுவடி' என்றும், அச்செழுத்துக்களைக் கோத்து, அவற்றின் மேல் மை தடவிக் காகிதத்தில் பதியச் செய்தல், கணினியில் எழுத்துக்களை உருவாக்கி ஃபிலிம் எடுத்தோ தகட்டில் ஏற்றியோ காகிதத்தில் பதியச் செய்தல் ஆகிய வற்றைப் 'பதிப்பு' என்றும் கூறுகின்றோம்.

"மாசு விசும்பின் திலகமொடு பதித்த
திங்கள் அன்ன நின்திரு முகத்து" (அகம்.253:24-25)

எனும் சங்கப்பாடல் வரிகளில் பதிப்பு எனும் சொல் முதன் முதலில் இடம்பெற்றுள்ளதை அறியமுடிகிறது. பின்னாளில் நூல் அச்சிடுதலுக்கு மேற்கொள்ளப்படும் பின்புலப் பணிகளுக்கும் 'பதிப்பு' என்ற சொல் பொருந்துவதாயிற்று. சுவடியிலிருந்து அச்சில் பதிப்பிக்கப்பெறுவதெல்லாம் 'சுவடிப்பதிப்பு' என்கின்றோம். சுவடியிலிருந்து அச்சாக்கப்பெற்ற

நூல்களின் பதிப்பு முறை பற்றியும், சுவடிப்பதிப்பின் தொடக்க காலம் முதல் இன்று வரை அதன் வடிவம், தன்மை, அவற்றின் முதிர்ச்சி, முன்னேற்றம் ஆகியன பற்றியும், இப்பதிப்புகள் யாரால், எவ்விதம், எவற்றில், எதனால் அமைந்துள்ளன என அளவிட்டுரைத்தல் பற்றியும் கூறுவது 'சுவடிப்பதிப்பு வரலாறு' ஆகும்.

ஞானப்பிரகாசனின் மாசத்தினச் சரிதையின் அச்சுக்கூடம் சென்னையில் கி.பி.1812ஆம் ஆண்டு அம்பலவாணக் கவிராயரால் 'திருக்குறள் மூலம்' வெளியிட்டதிலிருந்து சுவடிப்பதிப்பின் வரலாறு தொடங்குகின்றது. இதை உறுதி செய்வதற்குத் "திருக்குறள் மூலபாடம் - தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார் அருளிச் செய்தது - இலக்கண விலக்கியவாராய்ச்சி யுடையவர்களா லிகிதப் பிழையற வாராய்ந்து சுத்தபாட மாக்கப்பட்டது - கலியுகாப்தம் 4913க்கு ஆங்கீரஸ வருஷம் - தொண்டை மண்டலம் சென்னப்பட்டினத்தில் தஞ்சை நகரம் மலையப்ப பிள்ளை குமாரன் ஞானப்பிரகாசனால் அச்சிற் பதிப்பிக்கப்பட்டது - மாசத்தினச்சரிதையின் அச்சுக்கூடம். இ. ஆண்டு 1812" எனும் திருக்குறளின் முகப்பட்டை உதவு கிறது. இதைத் தொடர்ந்து தனியார் அச்சுக்கூடங்கள் பல சுவடிப்பதிப்புகளை வெளியிட்டு வருகின்றன. 19ஆம் நூற்றாண்டில் பெரும்பான்மையான சுவடிப் பதிப்புகளைத் தனியார் அச்சுக்கூடங்களே வெளியிட்டிருக் கின்றன எனலாம்.

கி.பி.1812ஆம் ஆண்டு முதல் சுவடிப்பதிப்பும், அடுத்த சுவடிப்பதிப்பு கி.பி.1816ஆம் ஆண்டு சீகண்டேசர் நான்மணி மாலை (ஜே. சாமுவேல் யூனியன் பிரஸ், நாகர்கோயில்)யும், அதனையும் அடுத்த சுவடிப்பதிப்பு கி.பி.1830ஆம் ஆண்டு வெளிவந்திருக்கின்றது. இதனைப் பார்க்கும்போது இவ் விடைப்பட்ட காலத்தில் இருந்த அச்சகத் தடைச்சட்டம் ஒரு காரணமாக இருந்திருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகின்றது. இதனால் கி.பி.1835க்கு முன் இந்தியர்கள் துணிந்து அச்சகம் நடத்தியதாகத் தெரியவில்லை. கி.பி.1835ஆம் ஆண்டு சார்லஸ் மெக்கல் பால் கொண்டு வந்த 'செய்தித்தாள் பதிவுச் சட்டம்'

இந்தியர்களும் அச்சகம் நடத்த வழிவகுத்தது எனலாம். இதனை மா.சு. சம்பந்தம், "ஆங்கிலேயர் ஆட்சியின்போது விதிக்கப் பட்டிருந்த தடையின் காரணமாக இந்நாட்டு (இந்தியர்) மக்களால் சொந்தமாக அச்சகங்களை ஏற்படுத்த முடியவில்லை. பின்னர் 1835இல் அச்சுக்கூடத் தடை நீக்கத்தின் விளைவாகப் பல அச்சகங்கள் தோன்றலாயின" (அச்சுக்கலை, பக்.230-231) என்று கூறுகின்றார்.

முதல் சுவடிப்பதிப்பை வெளியிட்ட மாசத்தினச் சரிதையின் அச்சுக்கூடமானது 'மாசத்தினச் சரிதை' என்கின்ற திங்கள் இதழையும், 'திருக்குறள் மூலம், நாலடியார் மூலம்' ஆகியவற்றையும் வெளியிட்டதை மட்டும் அறியமுடிகின்றது. இவ்விரு செய்திகளல்லாமல் இவ்வச்சகம் குறித்து வேறொன்றும் அறியமுடியவில்லை. அச்சகத் தடைச்சட்டத்தால் இவ்வச்சுக் கூடம் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்றே எண்ணத் தோன்று கின்றது. மேடவாக்கம் சேஷாசல முதலியாரால் 1830ஆம் ஆண்டு உருவாக்கப்பெற்ற 'ரவானா அச்சுக்கூடம்' தான் நீண்ட இடைவெளிக்குப் பிறகு மீண்டும் சுவடிப்பதிப்பை வெளியிடத் தொடங்கியுள்ளது. இவ்வச்சுக்கூடம், அழகிய மணவாள தாசரின் திருவேங்கடத்தந்தாதி மூலபாடம், சோலைமலை அழகர் அந்தாதி, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கத்து மாலை, திருவரங்கத்துக் கலம்பகம், நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி, திருவேங்கட மாலை ஆகிய நூல்களைத் திருவேங்கடாசல முதலியார் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு 1830ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளது (மா.சு. சம்பந்தம், அச்சும் பதிப்பும், பக்.147-148).

இதனையடுத்து 1831ஆம் ஆண்டு திருத்தணிகை கந்தசாமி ஐயரால் 'கல்வி விளக்க அச்சுக்கூடம்' தொடங்கப் பெற்றது. பின்னர் இவ்வச்சுக்கூடம் திருத்தணிகை விசாகப் பெருமாளையருடையதாகியது. இவ்வச்சுக்கூடத்தின் வழியாகத் திருத்தணிகை விசாகப்பெருமாளையரும் சரவணப்பெருமா ளையரும் தங்களுடைய பதிப்புகளை வெளியிட்டுள்ளனர். இவர்களின் பதிப்புப் பணியின் தொடக்கமாக 1831ஆம் ஆண்டு

'திருவள்ளுவருரையும், திருவள்ளுவமாலையுரையும்' வெளியிட்டிருப்பதை "தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் அருளிச் செய்த திருக்குறளினுரை-திருத்தணிகைச் சரவணப் பெருமாளையரால் பரிமேலழகர் உரையைச் சுருக்கி வெளிப்படையாக்கிப் பதவுரையும் தாற்பரியவுரையுமாகச் செய்யப் பட்டது. இதனோடு திருவள்ளுவ மாலைக்கும் உரை செய்து சேர்த்திருக்கின்றது" எனும் குறிப்பால் அறியமுடிகிறது.

இவற்றைத் தொடர்ந்து திருவேங்கட முதலியாரின் சரஸ்வதி அச்சுக்கூடம் 1835ஆம் ஆண்டு 'திருவாசகம்' வெளியிட்டுள்ளதை "இது கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகர் முதலாகிய கனம் பொருந்திய சில வித்துவான்களாற் பரிசோதிக்கப்பட்டு, சின்னத்தம்பி முதலியாரால், தமிழ்ப் புலவராகிய திருவேங்கடாசல முதலியாரது சரஸ்வதி அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது" எனும் குறிப்பால் அறிய முடிகிறது.

திருத்தணிகைச் சரவணப்பெருமாள் ஐயர் குமாரராகிய கந்தசாமி ஐயரது 'கல்வி விளக்க அச்சுக்கூடம்' 1841ஆம் ஆண்டு புதுவை நயனப்ப முதலியார் 'திருக்கோவையார்' வெளியிட்டுள்ளதை "திருச்சிற்றம்பலம். திருக்கோவையார் என்கிற திருச்சிற்றம்பலக் கோவையார். வேதாந்த சித்தாந்த சைவ சமயாசாரியராய் திருவாதவூரில் எழுந்தருளியிருந்த மாணிக்கவாசக சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளியது. இஃது அச்சிற் பதிப்பித்திருக்கும் திருவாசகத்தோடியைபுற்று இருக்க வேண்டுமாதலால் ஏட்டுப் பிரதிகளின் பாடம் தோறும் ஒன்றற்கு ஒன்று ஒவ்வாமற் றுகள்களாற் பொதிவுற்றிருத்தலின் அத்துகள்களை நீக்கிச் சுத்தபாடமாக வழங்குவிக்கும் பொருட்டுச் சென்னை கல்விச் சங்கத்துத் தமிழ்ப் புலவராகிய புதுவை நயனப்ப முதலியாரால் ஆதீன வித்துவான்களிடத்திருந்து பல பிரதிகளை வருவித்து நச்சினார்க்கினியார் உரைக்கு இணங்கினதாகப் பரிசோதித்துப் பிலவ வருடம் ஆடி மாதம் திருத்தணிகைச் சரவணப் பெருமாள் ஐயர் குமாரராகிய கந்தசாமி ஐயரது கல்வி விளக்க அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப் பட்டது" எனும் குறிப்பால் அறியமுடிகிறது.

திருக்குறள் - இல்லறவியல் 24 அதிகாரங்களுக்கு இராமாநுஜ கவிராயரின் வெள்ளுரையை 1840ஆம் ஆண்டு 'அமெரிக்கன் மிசியோன் அச்சுக்கூட'மும், இதன் இரண்டாவது பாகமாக அமைந்த துறவறவியல் மற்றும் அரசியல் பகுதிகளை 1852ஆம் ஆண்டு மேற்படியாரின் வெள்ளுரையை 'வேப்பேரி மிசியோன் அச்சுக்கூட'மும் வெளியிட்டுள்ளதை "திருக்குறள் இல்லறவியல் 24 அதிகாரங்களுக்கு இராமாநுச கவிராயரின் வெள்ளுரைப் பதிப்பை 1840ஆம் ஆண்டு அமெரிக்கன் மிசியோன் அச்சுக்கூடம் வெளியிட்டுள்ளது. ...... இதன் இரண்டாவது பாகமாக 1852ஆம் ஆண்டு துறவறவியல் மற்றும் அரசியலும் இணைந்து வேப்பேரி மிசியோன் அச்சுக்கூடம் வெளியிட்டுள்ளது" எனும் குறிப்பு உறுதிப்படுத்துகிறது.

நாலடியார் மூலமும் உரையுமாக 1844ஆம் ஆண்டு புதுவை நயனப்ப முதலியார் 'ரிக்கார்டு அச்சுக்கூடம்' வழி வெளியிட்டுள்ளதை "முநிவர்கள் அருளிச்செய்த நீதிநூலாகிய நாலடியார் இதற்கு கூடலூர் சபாபதி முதலியார் சிறுவர் முதலிய யாவரும் எளிதில் உணரும்படி பதுமனார் உரையை வெளிப்படையாக்கிப் பதப்பொருளுங் கருத்துமாக உரை செய்து தருகவெனக் கேட்டுக்கொண்டதால் சென்னைக் கல்விச் சங்கத் தமிழ்ப் புலவராகிய புதுவை நயநப்ப முதலியார் அவர்களால் உரைசெய்யப்பட்டு வளவனூர் சுப்பராய முதலியார் அவர்கள் குமாரராகிய முத்துசாமி முதலியாரால் ரிக்கார்டு அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது" எனும் குறிப்பால் அறியமுடிகிறது.

தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியத்தை 1847ஆம் ஆண்டு மழவை மகாலிங்கையரைப் பதிப்பாசிரிய ராகக் கொண்டு திருவண்ணாமலை வீரபத்திர ஐயரின் 'கல்விக்கடல் அச்சுக்கூடம்' வெளியிட்டுள்ளது.

'திருக்குறள் மூலமும் உரையும்' களத்தூர் வேதகிரி முதலியாரைப் பதிப்பாசிரியராகக் கொண்டு 1856ஆம் ஆண்டு சித்தாதிரிப்பேட்டை நெல்லுமண்டி வேங்கட்டராம முதலியார்

குமாரர் கேசவ முதலியாரின் 'பிரபாகர அச்சுக்கூடம்' வெளியிட்டுள்ளதை "மதுரை புதுவை சென்னை இச்சங்கங் களின் தமிழ்த் தலைமைப் புலமை நடாத்திய களத்தூர் வேதகிரி முதலியார் செய்த பதவுரை கருத்துரை விசேட உரைகளுடன் பல இலக்கண மேற்கோள் கொடுத்துப் பதித்த பிரதிக்கிணங்கச் சிந்தாதிரிப்பேட்டை நெல்லுமண்டி வேங்கடட்டராம முதலியார் குமாரர் கேசவ முதலியாரால் பிரபாகர அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது" எனும் குறிப்பு உணர்த்துகிறது.

யாழ்ப்பாணம் நல்லூர் ஆறுமுக நாவலரின் 'வித்தியாநுபாலன யந்திரசாலை' வழியாகத் தமது நூல்களைப் பதிப்பித்துள்ளார். காட்டாக, 1860ஆம் ஆண்டு 'திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும்' பதிப்பிக்கப்பெற்றுள்ளதை "இவை இராமநாதபுரம் சமஸ்தானம் பொன்னுசாமித் தேவரவர்கள் வேண்டுகோளின்படி யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலரவர்களால் பல பிரதி ரூபங்களைக் கொண்டு பரிசோதிக்கப்பட்டவை. சிதம்பர சைவப்பிரகாச வித்தியா சாலைத் தரும பரிபாலகர் ச. பொன்னுஸ்வாமி அவர்களால் சென்னபட்டணம் வித்தியாநுபாலன யந்திரசாலையில் அச்சிற் பதிப்பிக்கப்பட்டன" என்பதால் அறியமுடிகிறது.

1861ஆம் ஆண்டு 'திருக்கோவையார் நச்சினார்க்கினியர் உரை' பதிப்பிக்கப்பட்டுள்ளதை "திருக்கோவையார் - சைவ சமயாசாரியராகிய மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்தது. இஃது மதுரையாசிரியர் பாரத்துவாசி நச்சினார்க் கினியருரையோடு இராமநாதபுர ஜமீந்தாரவர்களின் மாநேஜ ராகிய ம-ள-ள- ஸ்ரீபொன்னுசாமித் தேவரவர்கள் கேட்டுக் கொண்டபடி, யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலரால் பல பிரதி ரூபங்களைக் கொண்டு பரிசோதித்து சென்ன பட்டனம் வித்தியாநுபாலன யந்திரசாலையில் அச்சிற் பதிப்பிக்கப்பட்டது" என்பதால் அறியமுடிகிறது.

1865ஆம் ஆண்டு 'கந்தபுராணம்' பதிப்பிக்கப்பெற்று உள்ளதைக் "கந்தபுராணம் - சுப்பிரமணியசுவாமி வரப்பிரசாதி

யாயும் குமரகோட்டத் தருச்சகராயும் காஞ்சீபுரத்தில் எழுந்தருளி யிருந்த கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் அருளிச்செய்தது இஃது யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலரவர்களால் பல பிரதி ரூபங்களைக் கொண்டு பரிசோதித்து மேற்படியூர் சதாசிவப்பிள்ளையால் சென்னப் பட்டணம் வித்தியாநுபாலன யந்திரசாலையில் அச்சிற் பதிப்பிக்கப்பட்டது" என்பதால் அறியமுடிகிறது.

திருநின்றவூர் அருணாசல சுவாமிகளின் 'நாலடியார் மூலமும் உரையும்' 1860ஆம் ஆண்டு பூவிருந்தவல்லி கந்தசாமி முதலியாரின் 'இயலிசை நாடகவிலாச அச்சுக்கூடம்' வெளியிட்டுள்ளதை "வேதகிரி முதலியார் பதிப்புக்கு இணங்க திருநின்றவூர் அருணாசல சுவாமிகளால் பார்வையிடப்பட்டு, பூவிருந்த வல்லி கந்தசாமி முதலியாரால் தமது இயலிசை நாடக விலாச அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது" என்பதால் அறிய முடிகிறது.

யாழ்ப்பாணம் நல்லூர் ஆறுமுக நாவலரின் 'திருக்குறள் மூலமும் பரிமேலழகர் உரையும்' 1861ஆம் ஆண்டு சென்ன பட்டனம் 'வாணி நிகேதனவச்சுக்கூடம்' வெளியிட்டுள்ளதை "இராமநாதபுரம் சமஸ்தானம் பொன்னுசாமித்தேவர் வேண்டு கோளின் படி யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலரால் பல பிரதி ரூபங்களைக் கொண்டு பரிசோதித்து வெளியிட்டது - இது, சென்னபட்டணம் வாணி நிகேதன வச்சுக்கூடத்தில் துன்மதி வருடம் வைகாசி மாதம் பதிப்பிக்கப்பட்டது" என்பதால் அறியமுடிகிறது.

பூவிருந்தவல்லி கந்தசாமி முதலியாரின் 'நாலடியார் மூலமும் உரையும்' 1863ஆம் ஆண்டு இரத்தந முதலியாரின் 'சண்முக விலாச அச்சுக்கூடம்' வெளியிட்டுள்ளதை "களத்தூர் வேதகிரி முதலியாரால் பதவுரையும் கருத்துரையும் செய்து பல விலக்கண மேற்கோளுங்காட்டி அச்சிற்பதிப்பித்த பிரதிக்கிணங்க, பூவிருந்தவல்லி கந்தசாமி முதலியாரால் நுங்கம்பாக்கம் இரத்ந முதலியார் சண்முகவிலாச அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது" என்பதால் அறியமுடிகிறது.

கோமளபுரம் இராசகோபால் பிள்ளையின் 'தொல் காப்பியம் சொல்லதிகாரம் சேனாவரையம்' பதிப்பை 1868ஆம் ஆண்டு 'வர்த்தமான தரங்கிணி சாகை அச்சுக்கூடம்' வெளியிட் டுள்ளதை "கா.பச்சையப்ப முதலியார் தர்ம விசாரணை சபாத்தி யக்ஷகராகிய மேலைமணம்பேடு சீனிவாச சடகோப முதலியா ரவர்கள் வேண்டுகோளின்படி சென்னை நார்மல் ஸ்கூல் என்னும் போதனா சக்தி விர்த்தி வித்தியாசாலைத் தமிழ்த் தலைமைப்புலவர் கோளமபுரம் இராசகோபால பிள்ளை யவர்களால் பல ஏடுகளைக் கொண்டு வழுவறப் பரிசோதிக்கப் பட்டு வர்த்தமான தரங்கிணி சாகை அச்சுக்கூடத்தில் பதிக்கப்பட்டது" என்பதால் அறியமுடிகிறது.

திரிசிரபுரம் சோடசாவதானம் சுப்பராய செட்டியாரின் 'தொல்காப்பியம் எழுத்ததிகாரம் இளம்பூரணர்' பதிப்பை 1868ஆம் ஆண்டு 'அத்திநியம் அண்ட் டெலிநியூஸ் பிரான்ச் அச்சுக்கூடம்' வெளியிட்டுள்ளதைத் "திரிசிரபுரம் சோடசாவ தானம் சுப்பராயச் செட்டியாரால் பல ஏடுகளைக் கொண்டு பரிசோதித்து சென்னை மலைச்சாலையில் இருக்கும் அத்திநியம் அண்ட் டெலிநியூஸ் பிரான்ச் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப் பட்டது" என்பதால் அறியமுடிகிறது.

சி.வை. தாமோதரம் பிள்ளை பதிப்பித்த 'தொல்காப்பியம் சொல்லதிகாரம் சேனாவரையம்' உரையை 1868ஆம் ஆண்டு ஊ. புஷ்பரதஞ் செட்டியாரின் 'கலாரத்நாகர அச்சுக்கூடம்' வெளியிட்டுள்ளது.

இராமாநுஜாசாரியார் மற்றும் கா. ராமஸ்வாமி நாயுடு ஆகியோரைப் பதிப்பாசிரியராகக் கொண்டு 1878ஆம் ஆண்டு 'குருபரம்பரா ப்ரபாவம்' சென்னை 'கார்டியன் அச்சுக்கூடம்' வெளியிட்டுள்ளதை "ஸ்ரீமதுபயவேதாந்த ப்ரவர்த்தக பரம ஹம்ஸரான பின்பழகியபெருமாள் ஜீயர் திருவாய் மலர்ந்தருளிய ஆறாயிரப்படி 'குருபரம்பராப்ரபாவம்'. இது, த்ராவிட பாஷையில் ப்ரமாணத்திரட்டு - படம், இவை களுடன் ஸ்ரீமதுபயவேதாந்த ப்ரவர்த்தகரான வித்வான் -

காஞ்சீபுரம், ஆஸூரி- ராமாநுஜாசார்யரவர்களாலும், ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபாததூளியாகிய கா. ராமஸ்வாமி நாயுடு அவர்களாலும் பல பிரதிகளைக் கொண்டு பிழையறப் பரிசோதிக்கப்பட்டு, திருவல்லிக்கேணிக்கடுத்த ராயப்பேட்டை ஸ்ரீமத் வரவரமுநிந்த்ரரை வாழ்த்துஞ் சபையைச் சேர்ந்த ஸ்ரீ-ரா-ராமக்ருஷ்ணபிள்ளையவர்களால் - சென்னை மலைச்சாலை யிலிருக்கும் கார்டியன் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது" என்பதால் அறியமுடிகிறது.

தி.க. சுப்பராய செட்டியாரின் அடியார்க்கு நல்லார் உரையுடன் 'சிலப்பதிகாரம் புகார்க்காண்ட'த்தை 1880ஆம் ஆண்டு சென்னை 'மிமோரியல் அச்சுக்கூடம் வெளியிட்டுள்ளது. ப. அரங்கசாமி பிள்ளையைப் பதிப்பாசிரியராகக் கொண்டு 'சீவகசிந்தாமணி முதற்பாகம்' (முதல் ஐந்து இலம்பகங்கள்) 1883ஆம் ஆண்டு சென்னை 'அட்டலட்சுமி அச்சுக்கூடம்' வெளியிட்டுள்ளது. திருமயிலை சண்முகம்பிள்ளையைப் பதிப்பாசிரியராகக் கொண்டு 1894ஆம் ஆண்டு 'மணிமேகலை மூலம்' கயப்பாக்கம் முருகேச செட்டியாரின் 'ரிப்பன் அச்சுக் கூடம்' வெளியிட்டுள்ளது. உ.வே. சாமிநாதையர் பதிப்பித்த 'சிலப்பதிகாரம் அடியார்க்கு நல்லாருரை அரும்பதவுரை'யை 1892ஆம் ஆண்டு பூவிருந்தவல்லி ஜூபிலி அச்சுக்கூடம்' (வெள்ளைய நாடார் வெள்ளிவிழா அச்சுக்கூடம்) வெளியிட் டுள்ளது.

இதேபோல் பத்தொன்பதாம் நூற்றாண்டில் சுவடிப் பதிப்புகளை அச்சிட்டதாக அறியத்தக்க அச்சுக் கூடங்கள் தமிழகத்தில் பல தோன்றியுள்ளன. 'மதராஸ் லாரன்ஸ் அனாதைகள் பிரஸ் (1836), மதராஸ் அமெரிக்கன் பிரஸ் (1840), திராவிட தீபிகை அச்சுக்கூடம் (1844), ரிகார்ட் பிரஸ் (1844), ஜீவரக்ஷாமிர்த அச்சுக்கூடம் (1845), வித்வ ரக்ஷாமிர்த அச்சுக்கூடம் (1845), பாரதி அச்சுக்கூடம் (1846), முத்தமிழ் மணிப்ரவாள அச்சுக்கூடம் (1848), விவேக கல்வி விளக்க அச்சுக்கூடம் (1853), விவேக விளக்க அச்சுக்கூடம் (1853), இலக்கணக் களஞ்சியம் பிரஸ் (1854), மெய்ஞ்ஞான விளக்க

அச்சுக்கூடம் (1855), கல்விக் களஞ்சிய அச்சுக்கூடம் (1859), கலைமகள் விலாச அச்சுக்கூடம் (1859), கலைமகள் விலாச செந்தமிழச்சுக்கூடம் (1859), வாணி நிகேதன் அச்சுக்கூடம் (1860), மெய்ஞ்ஞான சூரியோதய விலாச அச்சுக்கூடம் (1863), கலாநிதி அச்சுக்கூடம் (1866), நீதிசார விளக்க அச்சுக்கூடம் (1866), ஸ்ரீநிகேதன அச்சுக்கூடம் (1873), இலட்சுமி விலாச அச்சுக்கூடம் (1873), வித்யா ரத்நாகர அச்சுக்கூடம் (1879), நேஷனல் அச்சுக்கூடம் (1900) போன்ற அச்சுக்கூடங்கள் சென்னை நகரில் தோன்றியுள்ளன.

காஞ்சியில் இயற்றமிழ் விளக்க அச்சுக்கூடமும், திருப்பதியில் கலைக்கியான முத்திராக்ஷரசாலையும், சித்தூரில் வித்யாவிநோத அச்சுக்கூடமும், தக்கோலத்தில் விவேக சந்திரோதய அச்சுக்கூடமும், சிதம்பரத்தில் சண்முக சுந்தர விலாச யந்திரசாலை - சித்தாந்த வித்தியாநுபாலன யந்திரசாலை - பிரம்ம வித்யா பிரஸ் போன்றவையும், கூடலூரில் தேசாபிமானி அச்சுக்கூடமும், நாகப்பட்டினத்தில் நீலலோசனி பிரஸ்ஸும், தஞ்சையில் தஞ்சை நாஷனல் அச்சுக்கூடம் - தேசாபிமானி அச்சுக்கூடம் - பூரண சந்திரோதய அச்சுக்கூடம் - திவாகர முத்திராட்சரசாலை போன்றவையும், கும்பகோணத்தில் ரிப்பன் அச்சுக்கூடமும், திருச்சியில் ஸ்ரீமட்டுவார் குழலாம்பாள் அச்சுக்கூடமும், தேவகோட்டையில் மீனலோசனி அச்சுக்கூடமும், வேலூரில் வாணி விலாச அச்சுக்கூடமும், திருப்பற்றூரில் சின்னைய நாடார் அச்சுக்கூடமும், மதுரையில் பாண்டியன் பிரஸ் - தமிழ்ச்சங்க முத்திராசாலை - காசிம் அச்சுக்கூடம் போன்றவையும், பாளையங்கோட்டையில் சண்முக விலாச அச்சுக்கூடமும்' தோன்றியுள்ளன. இவ் வகையான அச்சுக்கூடங்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் பல்வேறு வகையான சுவடிப்பதிப்புகளை வெளியிட்டுள்ளன.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தனியார் அச்சுக் கூடங்கள் வெளியிட்டு வந்த சுவடிப்பதிப்புப் பணியை, 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து பருவ இதழ்கள், தமிழ்ச் சங்கங்கள், சுவடி நூலகங்கள், நிறுவனங்கள், ஆதீனங்கள்,

பல்கலைக்கழகங்கள் போன்ற வெளியீட்டு அமைப்புகள் சுவடிப்பதிப்புகளை வெளியிட்டு வருகின்றன.

சுவடிப்பதிப்புகள் தனிநூலாக வெளிவரத் தொடங்கி 85 ஆண்டுகள் கழிந்த பிறகு பருவ இதழ்களில் சுவடிப் பதிப்புகள் வெளிவரத் தொடங்கியுள்ளன. கி.பி.1897ஆம் ஆண்டு உருவான 'உண்மை விளக்கம் அல்லது சித்தாந்த தீபிகை' என்னும் திங்களிதழ்தான் முதன் முதல் பருவ இதழ்ச் சுவடிப்பதிப்பை வெளியிட்டிருக்கின்றது. இந்த ஆண்டி லிருந்துதான் சுவடிப்பதிப்பு வரலாற்றில் பருவ இதழும் ஓர் அங்கமாக அமையத் தொடங்கியது எனலாம். இன்றுவரை பருவ இதழ்களில் 408 சுவடிப்பதிப்புகள் வெளிவந்திருப்பதைக் காணும்போது சுவடிப்பதிப்பு வரலாறு எழுதும்போது பருவ இதழ்களில் வெளிவந்த சுவடிப்பதிப்புகள் முக்கிய இடம் வகிக்கும் எனலாம்.

சுவடிப்பதிப்பு வகைகள்

அச்சுக்கூடங்கள், பருவ இதழ்கள், தமிழ்ச் சங்கங்கள், சுவடி நூலகங்கள், நிறுவனங்கள், ஆதீனங்கள், பல்கலைக் கழகங்கள் போன்ற அமைப்புகள் மூலம் வெளிவந்த சுவடிப் பதிப்புகளை அமைப்பு நிலை, வெளியீட்டு நிலை, உள்ளடக்க நிலை ஆகிய மூன்று நிலைகளில் அமைத்துக் காணலாம்.

அமைப்பு நிலையில் சுவடிப்பதிப்பின் வரலாற்றை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். அவை, காலநிலை, வளர்ச்சிநிலை ஆகியவையாகும். இதனை, "சுவடிப்பதிப்பின் முதல் நூல் எது? அது எந்த ஆண்டில் வெளியாயிற்று? யாரால் வெளியிடப்பட்டது? தொடர்ந்து எந்தெந்த நூல்கள் எந்தெந்த ஆண்டுகளில் யார் யாரால் வெளியிடப்பட்டுள்ளன என்னும் நிலைகளில் காணும் பதிப்பு நூல்களின் வரலாற்றையும் அவற்றின் பயன்பாட்டையும் ஆய்வது முதல் வகை. தொடக்க காலப் பதிப்புகளில் தலைப்புப் பக்கம் முதல், நூல் எவ்வாறு அமைகிறது? பாடல்கள் எவ்வாறு பதிப்பிக்கப்பெற்றுள்ளன? பாடலுக்கான உரை, விளக்கவுரை, எடுத்துக்காட்டுகள்

போன்ற அக அமைப்புகள் எவ்வாறு தோன்றி வளர்ந்துள்ளன? நூலுக்கான பதிப்புரை, முன்னுரை, ஆய்வுரை, சொல்லடைவு முதலான புற அமைப்புகள் எவ்வெவ்வாறு அமைந்து வளர்ந்து உள்ளன என்னும் முறைகளை ஆய்ந்து அவற்றின் பயன்பாடு எந்த நிலையை அடைந்துள்ளது என்பதை வரலாற்று அடிப் படையில் காட்டுவது இரண்டாவது வகை" (சுவடிச்சுடர், பக்.3-4) என்கின்றார் பூ. சுப்பிரமணியம்.

வெளியீட்டு நிலையில் சுவடிப்பதிப்பின் வரலாற்றை ஒன்பது வகைகளாகப் பிரிக்கலாம். அவை,

1. தமிழறிஞர் சுவடிப்பதிப்பு
2. தமிழ்ச்சங்கச் சுவடிப்பதிப்பு
3. ஆதீனச் சுவடிப்பதிப்பு
4. சுவடிநூலகச் சுவடிப்பதிப்பு
5. நூற்பதிப்புக்கழகச் சுவடிப்பதிப்பு
6. பல்கலைக்கழகச் சுவடிப்பதிப்பு
7. நிறுவனச் சுவடிப்பதிப்பு
8. தனியார் பதிப்பகச் சுவடிப்பதிப்பு
9. பருவ இதழ்ச் சுவடிப்பதிப்பு

ஆகியவையாகும். வெளியீட்டு நிலையில் உள்ள இவ்வொன்பது சுவடிப்பதிப்புகளுக்கும் ஒருவரே பதிப்பாசிரியராக ஆகலாம். அதாவது, ஒரு சுவடிப்பதிப்பாசிரியர் தாமே வெளியீட்டாள ராகும் போது தமிழறிஞர் சுவடிப்பதிப்பு வரலாற்றிலும், தமிழ்ச் சங்கம் வெளியிடும் போது தமிழ்ச்சங்கச் சுவடிப்பதிப்பு வரலாற்றிலும், ஆதீனம் வெளியிடும்போது ஆதீனச் சுவடிப் பதிப்பு வரலாற்றிலும், நூற்பதிப்புக்கழகம் வெளியிடும் போது நூற்பதிப்புக்கழகச் சுவடிப்பதிப்பு வரலாற்றிலும், பல்கலைக் கழகம் வெளியிடும் போது பல்கலைக்கழகச் சுவடிப்பதிப்பு வரலாற்றிலும், நிறுவனம் வெளியிடும் போது நிறுவனச் சுவடிப்பதிப்பு வரலாற்றிலும், தனியார் பதிப்பகம் வெளியிடும் போது தனியார் பதிப்பகச் சுவடிப்பதிப்பு வரலாற்றிலும், பருவ இதழ் வெளியிடும் போது பருவ இதழ்ச் சுவடிப்பதிப்பு

வரலாற்றிலும் இடம்பெறுகின்றார். ஏனைய வகைகளில் ஒன்றான அமைப்பு நிலையில் இவ்வாறு அமைவது அரிது.

உள்ளடக்க நிலையில் சுவடிப்பதிப்பின் வரலாற்றை ஐந்து வகைகளாகப் பிரிக்கலாம். அவை,

1. மூலச் சுவடிப்பதிப்பு
2. மூலமும் குறிப்பும் கொண்ட சுவடிப்பதிப்பு
3. மூலமும் உரையும் கொண்ட சுவடிப்பதிப்பு
4. திருத்தச் சுவடிப்பதிப்பு
5. குறைச்சுவடிப்பதிப்பு

ஆகியவையாகும்.

சுவடிப்பதிப்புகளை ஒருங்கே தொகுத்துத் திரட்டி வைக்கும் வழக்கம் இன்னும் நம்மிடம் தோன்றவில்லை. இதுவரை வெளிவந்துள்ள அனைத்துப் பதிப்புகளுக்குமான முறையான விவரங்கள் அடங்கிய அட்டவணைகள் கிடைப்பது அரிதே என்றபோது பதிப்புகள் கிடைப்பது கடினம். எனவே, கிடைத்துள்ள விவரங்களைக் கொண்டும் கிடைக்கும் சுவடிப் பதிப்புகளைக் கொண்டும் மேற்கூறிய அமைப்புநிலை, வெளியீட்டுநிலை, உள்ளடக்கநிலை ஆகிய மூன்று நிலை களைக் கொண்டு சுவடிப்பதிப்பு வரலாறு அமையும். இம் மூன்று சுவடிப்பதிப்பு வரலாற்று நிலைகளில் ஒன்றாகப் பருவ இதழும் அமையப்பெற்றிருப்பதை உற்று நோக்கும் போது சுவடிப்பதிப்பு வரலாற்றில் பருவ இதழ்களின் முக்கியத்துவம் புலப்படும்.

பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகளின் வகைகள்

பார்வையிடப்பெற்ற 36 பருவ இதழ்களிலிருந்து 408 (437 பதிப்புகள்) சுவடிப்பதிப்புகள் இங்குத் தெரிவுசெய்யப் பெற்றுள்ளன. இப்பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகளைக் கொண்டு வெளியீட்டு நிலையில் உள்ளடக்க நிலைப் பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகள் எவ்வெவ் வகைகளில் அமைந்து உள்ளன என்று பகுத்து ஆராயப்பெறுகின்றது. அதாவது

தனியார் பருவ இதழில் மூலச் சுவடிப்பதிப்பு - மூலமும் குறிப்பும் - மூலமும் உரையும் - குறைச்சுவடிப்பதிப்பு, தமிழ்ச் சங்கப் பருவ இதழில் மூலச்சுவடிப்பதிப்பு - மூலமும் குறிப்பும் - மூலமும் உரையும் - திருத்தச் சுவடிப்பதிப்பு - குறைச்சுவடிப் பதிப்பு, சுவடிநூலகப் பருவ இதழில் மூலச் சுவடிப்பதிப்பு - மூலமும் குறிப்பும் - மூலமும் உரையும் - திருத்தச் சுவடிப்பதிப்பு - குறைச்சுவடிப்பதிப்பு, ஆதீனப் பருவ இதழில் மூலச்சுவடிப் பதிப்பு - மூலமும் குறிப்பும் - மூலமும் உரையும் - குறைச்சுவடிப் பதிப்பு, நிறுவனப் பருவ இதழில் மூலச்சுவடிப்பதிப்பு - மூலமும் குறிப்பும் - மூலமும் உரையும் - திருத்தச் சுவடிப்பதிப்பு - குறைச்சுவடிப்பதிப்பு, பல்கலைக்கழகப் பருவ இதழில் மூலச் சுவடிப்பதிப்பு - மூலமும் குறிப்பும் - மூலமும் உரையும் - குறைச்சுவடிப்பதிப்பு ஆகிய இருபத்தேழு வகைகள் பகுத்தா ராயப்பெறும்.

தனியார் பருவ இதழில் மூலச்சுவடிப்பதிப்புகள்

தனிப்பட்ட ஒருவர் வெளியிட்ட பருவ இதழில் வெளி வந்த சுவடிப்பதிப்பைத் 'தனியார் பருவ இதழ்ச் சுவடிப்பதிப்பு' என்றும், அப்பருவ இதழில் மூலம் மட்டும் வெளிவந்த சுவடிப்பதிப்பைத் 'தனியார் பருவ இதழில் மூலச்சுவடிப் பதிப்பு' என்றும் கூறலாம். இவ்வகையில் உண்மை விளக்கம் எனும் சித்தாந்த தீபிகை, கலாநிலையம், சிவநேசன், செல்வக் களஞ்சியம், ஞானபோதினி, தேனோலை, பஞ்சாமிர்தம், புலமை, விவேகபாநு, ஹரிசமய திவாகரன் ஆகிய பருவ இதழ்கள் இடம்பெறுகின்றன.

உண்மை விளக்கம் எனும் சித்தாந்த தீபிகை திருவானைக்காவுலாவையும்; கலாநிலையம் கலைமகளந்தாதி, திருவிளையாடற் கருணைத் திருவிருத்தம், தினகர வெண்பா, (மாறன்) பாப்பாவினம், பொதிகை நிகண்டு (நூற்பா), மதுரைக் கோவை, ஸ்ரீவைகுந்தநாதர் பிள்ளைத்தமிழ் ஆகியவற்றையும்; சிவநேசன் சங்கரலிங்கவுலாவையும்; செல்வக்களஞ்சியம் 'திருக்குறள் அதிகார சாரமாகிய திருத்தாலாட்டு'வையும்; ஞானபோதினி திருப்பரங்கிரிக் குமரனூசல், திருப்பரங்கிரிக்

குமரன் தாலாட்டு, தோத்திர வெண்பா ஆகியவற்றையும்; தேனோலை திருநீலகண்டர் பள்ளு, பூர்வச் சக்கரவர்த்தி நாடகம், மெச்சும்பெருமாள் பாண்டியன் கதை ஆகிய வற்றையும்; புலமை இலக்கண தீபம் எனும் நூலையும்; விவேகபாநு காரியார் நாரியார் பாப்பகுந்துகொண்ட திருவிளையாடல், திருஉருமாமலைச் சிலேடை வெண்பா, நீதிமொழி, புலிமுலை புல்வாய்க்கருளின திருவிளையாடல், மூர்த்தி நாயனார்க்கரசளித்த திருவிளையாடல் ஆகிய வற்றையும்; ஹரிசமய திவாகரன் எதிராசரந்தாதி, கண்ணிநுண் சிறுதாம்பு ஆகியவற்றையும் வெளியிட்டுள்ளது.

தனியார் பருவ இதழில் மூலமும் குறிப்பும்

தனிப்பட்ட ஒருவர் வெளியிட்ட பருவ இதழில் மூலமும் குறிப்பும் கொண்டு வெளிவந்த சுவடிப்பதிப்பைத் 'தனியார் பருவ இதழில் மூலமும் குறிப்பும் கொண்ட சுவடிப் பதிப்பு' எனலாம். இவ்வகையில் சிவநேசன், ஞானபோதினி, ஹரிசமய திவாகரன் ஆகிய பருவ இதழ்கள் இடம்பெறு கின்றன. சிவநேசன் திருக்கழுக்குன்றச் சிலேடை வெண்பா, பழமலைக்கோவை ஆகியவற்றையும்; ஞானபோதினி குலோத்துங்க சோழன் கோவையையும்; ஹரிசமய திவாகரன் இராமாயணத் திருப்புகழ் (இராமசெயம்) எனும் நூலையும் வெளியிட்டுள்ளது.

தனியார் பருவ இதழில் மூலமும் உரையும்

தனிப்பட்ட ஒருவர் வெளியிட்ட பருவ இதழில் மூலமும் உரையும், மூலமும் பொழிப்புரையும், மூலமும் பதவுரையும், மூலமும் விளக்கவுரையும் கொண்டு வெளிவந்த சுவடிப்பதிப்பைத் 'தனியார் பருவ இதழில் மூலமும் உரையும் கொண்ட சுவடிப்பதிப்பு' எனலாம். இவ்வகையில் சிவநேசன், பைந்தமிழ், விவேகபாநு ஆகிய பருவ இதழ்கள் இடம்பெறு கின்றன. சிவநேசன் திருமயிலை யமகவந்தாதி, தேவிகாலோத்தர ஆகமம் - தமிழ் மூலமும் சித்தாந்த ரத்ன விருத்தி என்னும் உரையும் ஆகியவற்றையும்; பைந்தமிழ் நீதிவெண்பா'வையும்;

விவேகபாநு பகவத்கீதைக் கும்மி, பதிபசுபாசத் தொகை ஆகிய வற்றையும் வெளியிட்டுள்ளது.

தனியார் பருவ இதழில் குறைச்சுவடிப்பதிப்புகள்

தனிப்பட்ட ஒருவர் வெளியிட்ட பருவ இதழில் குறையுடன் வெளிவந்த சுவடிப்பதிப்பைத் 'தனியார் பருவ இதழில் குறைச்சுவடிப்பதிப்பு' எனலாம். இவ்வகையில் கலாநிலையம், பஞ்சாமிர்தம் ஆகிய பருவ இதழ்கள் இடம்பெறுகின்றன. கலாநிலையம் அண்டபுராணம், களவியற்றுறை விளக்கம்; பொதிகை நிகண்டு (விருத்தம்) ஆகியவற்றையும்; பஞ்சாமிர்தம் கலியுகமாலை, தனிப்பாடற் றிரட்டு ஆகியவற்றையும் வெளியிட்டுள்ளது.

தமிழ்ச்சங்கப் பருவ இதழில் மூலச்சுவடிப்பதிப்புகள்

தமிழ்ச்சங்கம் வெளியிட்ட பருவ இதழில் வெளிவந்த சுவடிப்பதிப்பைத் 'தமிழ்ச்சங்கப் பருவ இதழ்ச் சுவடிப்பதிப்பு' என்றும்; அப்பருவ இதழில் மூலம் மட்டும் வெளிவந்த சுவடிப்பதிப்பைத் 'தமிழ்ச்சங்கப் பருவ இதழில் மூலச்சுவடிப் பதிப்பு' என்றும் கூறலாம். இவ்வகையில் செந்தமிழ், தமிழ்ப்பொழில் ஆகிய பருவ இதழ்கள் இடம்பெறுகின்றன.

செந்தமிழ் அகராதி நிகண்டு, அட்டாங்க யோகக் குறள், அம்பிகை நவமணிமாலை, அரும்பொருள் விளக்க நிகண்டு, அருவியன் காதை, ஆன்மலிங்க மாலை, இரணியன் வதைப்பரணி, இராஜராஜதேவருலா, இலக்கண தீபம், உவமான சங்கிரகம் (விருத்தம்), உவமான சங்கிரகம் (நூற்பா), எதிராசரந்தாதி, கம்பராமாயண கவுத்துவமணிமாலை, கனாநூல், காழி அந்தாதி, குருபரம்பரை, கூடற்புராணம், சங்கரசோழனுலா, சதுரங்க நூல், சிறைவிடந்தாதி, சோடச கலாப் பிராசாத யோகம், சோடசகலாப் பிராசாத விருத்தம், சௌமியநாராயணப் பெருமாள் திருநாள் வாகனக்கவி, தருக்க சூத்திரம் (இருமுறை), தளவாய் ரெகுநாத சேதுபதியவர்கள் மீது வண்ணம், திருக்கயிலாய ஞான உலா, திருக்குற்றால ஊடற் பிரபந்தம், திருக்குற்றால மாலை, திருச்செந்திற்

கலம்பகம், திருத்தணிகைத் திருவிருத்தம், திருத்தொட்டிக் கலைக் கேசவப்பெருமாள் வண்ணம், திருநறையூர் நம்பி மேகவிடுதூது, திருப்பதிக்கோவை, திருப்புல்லாணிச் செகநாதர் பேரில் ஊசல், திருப்புல்லாணிச் செகநாதர் பேரில் வண்ணம், திருப்புல்லாணிச் செகநாதர் பேரில் விண்ணப்பம், திருப்புல்லாணிச் செகநாதர் மீது சிந்து, திருப்புல்லாணிப் பதுமாசனித் தாயார் பேரில் ஊசல், திருப்புல்லாணி மாலை, திருமாலிருஞ்சோலைமலை அழகர் பிள்ளைத்தமிழ், திருவாரூர் இரட்டைமணிமாலை, தேவையுலா, தொட்டிக்கலைக் கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை, நரிவிருத்தம், நுண்பொருண் மாலை, பழனிக்கோவை, பன்னிரு பாட்டியல், பாப்பாவினம், பிராசாத அகவல், பிராசாத தீபம், பிராசாத மாலை, புரூரவ சரிதை, புலவராற்றுப்படை (இருமுறை), பொருட்டொகை நிகண்டு, மாறனகப்பொருளும் திருப்பதிக் கோவையும், மிழலைச் சதகம், முத்திரை, வருத்தமறவுய்யும் வழி, விக்கிரம சோழனுலா ஆகிய சுவடிப்பதிப்புகளை வெளியிட்டுள்ளது.

தமிழ்ப்பொழில் உதயகுமார காவியம், கருந்திட்டைக் குடிப் பதிகம், சிராமலையந்தாதி, தத்துவ விளக்கம், தியாகராசர் பள்ளேசல், பதிபசுபாசப் பனுவல், பதிபசுபாச வகை, பரமோபதேசம், பழைய பாடற்றிரட்டு, புலவர் பிணைபோன வரலாறு, வசந்தன் உயிர்வரு ப்டலம் ஆகிய சுவடிப்பதிப்புகளை வெளியிட்டுள்ளது.

தமிழ்ச்சங்கப் பருவ இதழில் மூலமும் குறிப்பும்

தமிழ்ச்சங்கம் வெளியிட்ட பருவ இதழில் மூலமும் குறிப்பும் கொண்டு வெளிவந்த சுவடிப்பதிப்பைத் 'தமிழ்ச் சங்கப் பருவ இதழில் மூலமும் குறிப்பும் கொண்ட சுவடிப் பதிப்பு' எனலாம். இவ்வகையில் செந்தமிழ், தமிழ்ப்பொழில் ஆகிய பருவ இதழ்கள் இடம்பெறுகின்றன. செந்தமிழ் அகப்பொருள் விளக்கம், இராமாயணத் திருப்புகழ், கடம்பர் கோயில் உலா, கலைசைக் கோவை, குருகைமான்மியம் முதற்பகுதி, சிராமலைக்கோவை, தண்டலையார் சதகம்,

திருக்குருகூர்த் திருப்பணிமாலை, திருச்சிறுபுலியூர் உலா, திருப்புல்லாணி நொண்டி நாடகம், திருவாரூருலா, நம்மாழ்வார் வண்ணம், பழனிப் பிள்ளைத்தமிழ், மதுரை மும்மணிக்கோவை ஆகியவற்றையும்; தமிழ்ப்பொழில் நெல்லை வருக்கக் கோவை யையும் வெளியிட்டுள்ளது.

தமிழ்ச்சங்கப் பருவ இதழில் மூலமும் உரையும்

தமிழ்ச்சங்கம் வெளியிட்ட பருவ இதழில் மூலமும் உரையும் கொண்டு வெளிவந்த சுவடிப்பதிப்பைத் 'தமிழ்ச் சங்கப் பருவ இதழில் மூலமும் உரையும் கொண்ட சுவடிப் பதிப்பு' எனலாம். இவ்வகையில் செந்தமிழ், தமிழ்ப்பொழில் ஆகிய பருவ இதழ்கள் இடம்பெறுகின்றன. செந்தமிழ் இனியது நாற்பது, ஐந்திணையைம்பது, சிதம்பரப் பாட்டியல், திருக்கலம்பகம், திருநூற்றந்தாதி, திருமுரு காற்றுப்படை - உரையாசிரியருரை, தொல்காப்பியம் பொருளதிகாரம் செய்யுளியல் நச்சினார்க்கினியருரை, நான்மணிக்கடிகை, நேமிநாதம், பொன்வண்ணத்தந்தாதி, மாறனலங்காரம் ஆகியவற்றையும்; தமிழ்ப்பொழில் சித்தரந்தாதி, பரத சாத்திரம் ஆகியவற்றையும் வெளியிட்டு உள்ளது.

தமிழ்ச்சங்கப் பருவ இதழில் திருத்தச் சுவடிப்பதிப்புகள்

தமிழ்ச்சங்கம் வெளியிட்ட பருவ இதழில் பல பதிப்புகளையும் பல சுவடிகளையும் ஒப்புநோக்கித் திருத்தச் சுவடிப்பதிப்பாகப் பருவ இதழில் வெளிவந்ததைத் 'தமிழ்ச் சங்கப் பருவ இதழில் திருத்தச் சுவடிப்பதிப்பு' எனலாம். இவ்வகையில் செந்தமிழ், தமிழ்ப்பொழில் ஆகிய பருவ இதழ்கள் இடம்பெறுகின்றன. செந்தமிழ் நாலடியார் - இருவருரைத் திருத்தம், பதிபசுபாசத் தொகை ஆகியவற்றையும்; தமிழ்ப்பொழில் பதிபசுபாசத் தொகையையும் வெளியிட்டு உள்ளது.

தமிழ்ச்சங்கப் பருவ இதழில் குறைச்சுவடிப்பதிப்புகள்

தமிழ்ச்சங்கம் வெளியிட்ட பருவ இதழில் குறையுடன் வெளிவந்த சுவடிப்பதிப்பைத் 'தமிழ்ச்சங்கப் பருவ இதழில்

குறைச்சுவடிப்பதிப்பு' எனலாம். இவ்வகையில் கொங்குமலர், செந்தமிழ், தமிழ்ப்பொழில் ஆகிய பருவ இதழ்கள் இடம்பெறு கின்றன. கொங்குமலர் ஆனந்தரங்கன் கோவை, தென்சேரி மாலை ஆகியவற்றையும்; செந்தமிழ் அசதிக்கோவை, ஆசிரிய மாலைச் செய்யுட்கள், ஆழ்வார் பிள்ளைத்தமிழ், ஐந்திணை யெழுபது, கரவை வேலன் கோவை, கீழ்வேளூர் உலா, குருகை மான்மியம் - 2ம் பகுதி, சங்கரநயினார் கோயில் அந்தாதி, தளசிங்க மாலை, திணைமாலை நூற்றைம்பது, திருக்குறுங்குடி அழகியநம்பி பிள்ளைத்தமிழ், திருப்பணி மாலை, நந்திக் கலம்பகம், பழமொழி, பாண்டிமண்டல சதகம், பிரபந்த தீபிகை, புல்லையந்தாதி, பெருந்தொகை, பெரும்பொருள் விளக்கப் பாடல்கள், முத்தொள்ளாயிரச் செய்யுட்கள், ராமசரிதப் பாட்டு, வளையாபதிச் செய்யுட்கள் ஆகியவற்றையும்; தமிழ்ப் பொழில் குலோத்துங்கன் சோழன் கோவை, சுவாமிநாதம், திருமலை வெண்பா, தில்லையுலா, பட்டமதன வித்தார மாலை ஆகியவற்றையும் வெளியிட்டு உள்ளது.

சுவடிநூலகப் பருவ இதழில் மூலச்சுவடிப்பதிப்புகள்

சுவடிநூலகம் வெளியிட்ட பருவ இதழில் வெளிவந்த சுவடிப்பதிப்பைச் 'சுவடிநூலகப் பருவ இதழ்ச் சுவடிப்பதிப்பு' என்றும், அப்பருவ இதழில் மூலம் மட்டும் வெளிவந்த சுவடிப் பதிப்பைச் 'சுவடிநூலகப் பருவ இதழில் மூலச்சுவடிப்பதிப்பு' என்றும் கூறலாம். இவ்வகையில் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ் ஆகிய பருவ இதழ்கள் இடம்பெறுகின்றன.

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ் அலங்கார நூல், ஆத்திசூடித் திறவுகோல், ஆழ்வார் திருவனந்தல், இரிஷிவிந்தக் குறவஞ்சி, இலக்கண தீபம், எக்காலக்கண்ணி, எட்டெட்டந்தாதி, எலிவிடுதூது, ஐயனார் கதை - வில்லுப் பாட்டு, கட்டிமகிபன் பள்ளு, கதிர்காமச் சிந்து, கருணாகர மாலை, குமாரபுரி முருகன் மும்மணிக்கோவை, கோதை நாய்ச்சியார் தாலாட்டு, சனிபகவான் தோத்திரம், சிதம்பர விலாசம், சிறுத்தொண்டன் சிந்து, ஞான உலா, தசாவதாரப்

பத்து, திருத்தணிகை முருகன் தாலாட்டு, திருத்தொண்டர் மாலை, திருப்புல்லாணி எம்பெருமான் மீது பாடிய தாலாட்டு, திருப்புல்லாணி எம்பெருமான் மீது பாடிய திருவனந்தல், திருப்புல்லாணி எம்பெருமான் மீது பாடிய நலங்கு, திருப்புல்லாணி எம்பெருமான் மீதும் பதுமாசனித் தாயார் மீதும் பாடிய கிளைப்பாட்டு, திருமந்திர மாலை, திருவள்ளுவர் பிள்ளைத்தமிழ், நம்மாழ்வார் ஊஞ்சற் கவிதை, நம்மாழ்வார் திருக்கோலக்கவி, நம்மாழ்வார் பதம், நல்லபிள்ளை சித்திர மடல், நல்வழிப்பாடல்கள், நவக்கிரக தோத்திரம், நாடோடிப் பாடல்கள், நாலுமந்திரி கதை, நீதிசாரக் கரு, நூற்றெட்டுத் திருப்பதிவெண்பா, நெஞ்சறி விளக்கம் -1, நெஞ்சறி விளக்கம் - 2, நெஞ்சுபதேசக் கீர்த்தனங்கள், நெல்லைக் குமரன் துதி, பரிபூரண சித்தி, பர்த்ருஹரி சிருங்கார சதகம், பர்த்ருஹரி நீதிசதகம், பழனிமலை வடிவேலர் பதிகம், பழனியாண்டவர் கலித்துறை, பாதாதிகேச உவமானம், பாலையானந்த சுவாமியார் ஞானக்கும்மிப் பாடல், பிரபந்த மரபியல், மாணிக்க வாசகர் ஞானக்கலித்துறை, மாணிக்கவாசகர் திருமணியகவல், மீனாட்சியம்மன் கிளிப்பாடல், முருகரனுபூதி, முனிமொழி, மூவர் அம்மானை, யோக மாலை, வருகைப் பத்து, வாதவூரர் ஆனந்தக் களிப்பு, விராலிமலை வேலவர் காதல், விராலிமலை வேலவர் குறவஞ்சி நாடகம், வில்லிபாரதம் - மௌளி சூட்டுச் சருக்கம், வேங்கடேசப்பெருமாள் தமிழ்மாலை, வேதபுரி ஈசுவரர் அந்தாதி ஆகியவற்றை வெளியிட்டுள்ளது.

சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ் கதிர்காம வேலவன் தோத்திரம், கந்தர் காதல், கமலாலய அம்மன் பிள்ளைத்தமிழ், காஞ்சி மன்னனம்மானை, காத்தவராயன் சுவாமி பேரில் கும்மிப்பாடல், குயில் ராமாயணம், குருநாத பூபதி பேரில் அட்டமங்கலம், குருக்ஷேத்திர மாலை, சட்டைநாதர் தோத்திரம், சரப புராணம், சிவகாமியம்மன் பேரில் அகவல், சிவபாரத சரித்திரம், சுந்தரர் சரித்திரச் சுருக்க அகவல், சுமிருதி சந்திரிகை, செட்டிச்சியம்மாள் கதை, செந்தில்

வேலவன் தோத்திரம், ஞானக்குறவஞ்சி, ஞானசாரம், ஞான வம்மானை, தஞ்சை வெள்ளைப்பிள்ளையார் குறவஞ்சி, தத்துவ விளக்கம், திருச்செங்கோட்டகவல், திருச்சோற்றுத்துறை தலபுராணம், திருஞானசம்பந்த சுவாமிகள் பிள்ளைத்தமிழ், திருநாவுக்கரசு சுவாமிகள் சரித்திரச் சுருக்க அகவல், திருவூடல், தேரூர்ந்த சோழன் கதை, நாசிகேது புராணம், பஞ்சநதீசுரர் தோத்திரம், பட்டினத்துப்பிள்ளை சரித்திரச் சுருக்க அகவல், பழனிமாலை, பழனிவேலன் தோத்திரம், மகாமக அந்தாதிக் கும்மி, மன்னார் மோகனப் பள்ளு, வருமுருகாற்றுப்படை, வலைவீசு புராணம், விசயராகவ நாயக்கர் அய்யன் பேரில் முளைப்பாட்டு, விபூதி தோத்திரம், ஸ்ரீவீரபோக வசந்தராயர் வரலாறு ஆகியவற்றை வெளியிட்டுள்ளது.

சுவடிநூலகப் பருவ இதழில் மூலமும் குறிப்பும்

சுவடிநூலகம் வெளியிட்ட பருவ இதழில் மூலமும் குறிப்பும் கொண்டு வெளிவந்த சுவடிப்பதிப்பைச் 'சுவடி நூலகப் பருவ இதழில் மூலமும் குறிப்பும் கொண்ட சுவடிப் பதிப்பு' எனலாம். இவ்வகையில் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ் ஆகிய பருவ இதழ்கள் இடம்பெறுகின்றன. அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ் 'ஆத்திசூடி வெண்பா' எனும் நூலையும்; சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ் 'சிதம்பரச்செய்யுட்கோவை' எனும் நூலையும் வெளியிட்டுள்ளது.

சுவடிநூலகப் பருவ இதழில் மூலமும் உரையும்

சுவடிநூலகம் வெளியிட்ட பருவ இதழில் மூலமும் உரையும் கொண்டு வெளிவந்த சுவடிப்பதிப்பைச் 'சுவடிநூலகப் பருவ இதழில் மூலமும் உரையும் கொண்ட சுவடிப்பதிப்பு' எனலாம். இவ்வகையில் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ் ஆகிய பருவ இதழ்கள் இடம்பெறுகின்றன. அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ் 'அருங்கலச் செப்பு' எனும் நூலையும்;

சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ் 'திருநெறி விளக்கம்' எனும் நூலையும் வெளியிட்டுள்ளது.

சுவடிநூலகப் பருவ இதழில் திருத்தச் சுவடிப்பதிப்புகள்

சுவடிநூலகம் வெளியிட்ட பருவ இதழில் பல பதிப்புகளையும் பல சுவடிகளையும் ஒப்புநோக்கித் திருத்தப் பதிப்பாகப் பருவ இதழில் வெளிவந்த சுவடிப்பதிப்பைச் 'சுவடிநூலகப் பருவ இதழில் திருத்தச் சுவடிப்பதிப்பு' எனலாம். இவ்வகையில் சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ் இடம்பெறுகிறது. இவ்விதழ் மூதுரை, யாப்பருங்கலம் ஆகியவற்றை வெளியிட்டுள்ளது.

சுவடிநூலகப் பருவ இதழில் குறைச்சுவடிப்பதிப்புகள்

சுவடிநூலகம் வெளியிட்ட பருவ இதழில் குறையுடன் வெளிவந்த சுவடிப்பதிப்பைச் 'சுவடிநூலகப் பருவ இதழில் குறைச்சுவடிப்பதிப்பு' எனலாம். இவ்வகையில் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ் ஆகியன இடம்பெறுகின்றன. அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ் இலக்குமி வெண்பா, திருக்கழுக்குன்ற மாலை, திருவிளையாடற் பயகரமாலை, பூதர விலாசம், மாணிக்கப் பவழக்கோவை ஆகியவற்றையும்; சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ் நண்ணாவூர் சங்கமேசுவர சுவாமி வேதநாயகி அம்மன் பேரில் விறலிவிடுதூது, பட்டினத்தார் வெண்பா, வலைவீசு புராணம் ஆகியவற்றையும் வெளியிட்டுள்ளது.

ஆதீனப் பருவ இதழில் மூலச்சுவடிப்பதிப்புகள்

ஆதீனம் வெளியிட்ட பருவ இதழில் வெளிவந்த சுவடிப்பதிப்பை 'ஆதீனப் பருவ இதழ்ச் சுவடிப்பதிப்பு' என்றும், அப்பருவ இதழில் மூலம் மட்டும் வெளிவந்த சுவடிப்பதிப்பை 'ஆதீனப் பருவ இதழில் மூலச்சுவடிப்பதிப்பு' என்றும் கூறலாம். இவ்வகையில் குமரகுருபரன், ஞானசம்பந்தம், மாதாந்திர

அமுதம், மெய்கண்டார், ஸ்ரீகாமகோடி ப்ரதீபம், ஸ்ரீகுமர குருபரர், ஸ்ரீசங்கர க்ருபா ஆகிய பருவ இதழ்கள் இடம்பெறு கின்றன.

குமரகுருபரன் அகவல்பா, சிறைவிடந்தாதி, திருமயிலை உவமை வெண்பா, பத்திநெறிப் பதிகம், மூவர் அம்மானை, விநாயக மான்மியம்' ஆகியவற்றையும்; ஞானசம்பந்தம் 'உருப சொரூப அகவல், காரைக்காலம்மையார் சரித்திரம், சங்கர சிவக்கொழுந்து மாலை ஆகியவற்றையும்; மாதாந்திர அமுதம் அறநெறி வெண்பா, இராமானந்தத் திரட்டு, ஈச்சநாரி விநாயகர் பதிற்றுப்பத்தந்தாதி, குருமுதற் பாசுர நூல், கௌமார வினோத நூல், சிரவை சற்குரு பதிகம், ஞானவந்தாதி, தண்டபாணி மாலை, பதிக உந்தி நூல், மகாலக்குமிப் பதிகம்' ஆகியவற்றையும்; மெய்கண்டார் 'திருஞானசம்பந்தர் சுவாமிகள் ஆனந்தக்களிப்பு, விநாயகர் தோத்திராஷ்டகம், ஸ்ரீமெய்கண்ட தேசிகர் மாலை ஆகியவற்றையும்; ஸ்ரீகாம கோடி ப்ரதீபம் மெய்ஞ்ஞானத் தங்கம் எனும் நூலையும்; ஸ்ரீகுமரகுருபரர் குமரகுருபர சுவாமிகள் சரித்திர சார பஞ்சகம் எனும் நூலையும்; ஸ்ரீசங்கர க்ருபா அநுபோக ரத்ன மாலை எனும் நூலையும் வெளியிட்டுள்ளது.

ஆதீனப் பருவ இதழில் மூலமும் குறிப்பும்

ஆதீனம் வெளியிட்ட பருவ இதழில் மூலமும் குறிப்பும் கொண்டு வெளிவந்த சுவடிப்பதிப்பை 'ஆதீனப் பருவ இதழில் மூலமும் குறிப்பும் கொண்ட சுவடிப்பதிப்பு' எனலாம். இவ்வகையில் குமரகுருபரன், ஞானசம்பந்தம் ஆகிய பருவ இதழ்கள் இடம்பெறுகின்றன. குமரகுருபரன் குமரகுருபர சுவாமிகள் சரித்திரம் எனும் நூலையும்; ஞான சம்பந்தம் தாயுமானவர் மடல், திருவையாற்று தரும சம்வர்த்தனி மாலை ஆகியவற்றையும் வெளியிட்டுள்ளது.

ஆதீனப் பருவ இதழில் மூலமும் உரையும்

ஆதீனம் வெளியிட்ட பருவ இதழில் மூலமும் உரையும் கொண்டு வெளிவந்த சுவடிப்பதிப்பை 'ஆதீனப் பருவ இதழில்

மூலமும் உரையும் கொண்ட சுவடிப்பதிப்பு' எனலாம். இவ் வகையில் குமரகுருபரன், ஞானசம்பந்தம், மாதாந்திர அமுதம், ஸ்ரீகுமரகுருபரர் ஆகிய பருவ இதழ்கள் இடம்பெறுகின்றன.

குமரகுருபரன் திருவாசக அனுபூதியையும்; ஞான சம்பந்தம் திருவாரூர் மும்மணிகோவை, திருவையாற்றுப் பதிற்றுப்பத்தந்தாதி, தேவிமான்மியம், தையல்நாயகி அந்தாதி, தொல்காப்பியம் சொல்லதிகாரம் கல்லாடனார், முத்தி நிச்சயம் ஆகியவற்றையும்; மாதாந்திர அமுதம் ஈச்சநாரி விநாயகர் பதிகம், காரமடை ஆண்டாள் பதிகம், கீரநத்தம் விநாயகர் திருப்புகழ், கீரநத்தம் விநாயகர் பதிகம், குருந்தமலை ஸ்ரீகுழந்தை வேலாயுதசாமி பிள்ளைத்தமிழ், கோவை இராமநாதபுரம் விநாயகர் பதிகம், சரித்திர சார வண்ணம், திருச்செந்தூர் முருகக்கடவுள் நற்றாய் இரங்கல் வண்ணம், திருப்பழனி முருகக்கடவுள் கலவி மகிழ்தல் வண்ணம், தில்லை இதழகல் அந்தாதி, நெல்லை இதழகல் அந்தாதி, பேரூர் அகிலாண் டேஸ்வரி பதிகம், வெள்ளக்கிணற்று வள்ளிநாயகன் பதிகம் ஆகியவற்றையும்; ஸ்ரீகுமரகுருபரர் ஞானாமிர்தம் எனும் நூலையும் வெளியிட்டுள்ளது.

ஆதீனப் பருவ இதழில் குறைச்சுவடிப்பதிப்புகள்

ஆதீனம் வெளியிட்ட பருவ இதழில் குறையுடன் வெளிவந்த சுவடிப்பதிப்பை 'ஆதீனப் பருவ இதழில் குறைச் சுவடிப்பதிப்பு' எனலாம். இவ்வகையில் ஞானசம்பந்தம், மாதாந்திர அமுதம் ஆகிய பருவ இதழ்கள் இடம்பெறு கின்றன. ஞானசம்பந்தம் 'சிவசயிலப் பள்ளு'வையும்; மாதாந்திர அமுதம் 'கருணாம்பிகை யமகவந்தாதி'யையும் வெளியிட்டு உள்ளது.

நிறுவனப் பருவ இதழில் மூலச்சுவடிப்பதிப்புகள்

தனியார்/அரசு நிறுவனம் வெளியிட்ட பருவ இதழில் வெளிவந்த சுவடிப்பதிப்பை 'நிறுவனப் பருவ இதழ்ச் சுவடிப் பதிப்பு' என்றும், அப்பருவ இதழில் மூலம் மட்டும் வெளிவந்த சுவடிப்பதிப்பை 'நிறுவனப் பருவ இதழில் மூலச் சுவடிப்பதிப்பு'

என்றும் கூறலாம். இவ்வகையில் கலைமகள் (சென்னை), சக்தி, சித்தாந்தம் (1912), சித்தாந்தம் (1928), செந்தமிழ்ச் செல்வி, நல்லறம், முக்குடை ஆகிய தனியார் நிறுவனப் பருவ இதழ்களும்; கல்வெட்டு, திருக்கோயில் ஆகிய அரசு நிறுவனப் பருவ இதழ்களும் இடம்பெறுகின்றன.

கலைமகள் (சென்னை) பழனி இரட்டைமணிமாலை, வலிவல மும்மணிக்கோவை ஆகியவற்றையும்; சக்தி கைலாச நிகண்டு சூளாமணி, சாத்தூர் நொண்டி ஆகியவற்றையும்; சித்தாந்தம் (1912) திரிபதார்த்த தசகாரியம், பதிபசுபாசத் தொகை ஆகியவற்றையும்; சித்தாந்தம் (1928) அச்சில்விடுபட்ட அப்பர் பாடல், அணிமுருகாற்றுப்படை, அருட்பா மாலை, அருள்முருகாற்றுப்படை, அருள்முறைத்திரட்டு (இருமுறை), இலந்துறை அருட்பா மாலை, கர வகுப்பு, கருணையந்தாதி, கள வகுப்பு, கூந்தலூர் அருட்பா மாலை, சக்தி வகுப்பு, சிறுவேளூர் அருட்பா மாலை, சொரூப வகுப்பு, ஞானசாரம், தசகாரியம், திருஈங்கோய்மலை எழுபது, திருக்குணமங்கலம் அருட்பா மாலை, திருநெறி விளக்கம், திருப்புகலூர் அருட்பா மாலை, திருப்புகழ் வெளிவராத இருபாடல்கள், திருவாவடு துறைக் குருபரம்பரை, திருவான்மியூர் சிவபெருமான் பதிகம், திருவிடைமருதூர் அருட்பா மாலை, திருவிளையாடற் கருணைத் திருவிருத்தம், பிராசாத அகவல், பொருள்முரு காற்றுப்படை, முப்பந்தொட்டியுலா, வருமுருகாற்றுப்படை ஆகியவற்றையும் வெளியிட்டுள்ளது.

செந்தமிழ்ச் செல்வி இளசை ஒருபா ஒருபஃது, குருபரம்பரை அகவல், சிவானந்த போதம், தத்துவ விளக்கம், தாளவோத்து, திருஞானசம்பந்த சுவாமிகள் திருத்தாலாட்டு, திருஞானத்தாழிசை, நியதிப் பயன், பொன்னாணிக் கோவை, மாயாப் பிரலாபம்' ஆகியவற்றையும்; நல்லறம் 'அப்பாண்டை நாதர் உலா, திருநாதர் குன்றத்துப் பதிகம், திருமேற்றிசை யந்தாதி ஆகியவற்றையும்; முக்குடை திருமயிலாபுரிப் பத்து, தீபங்குடிப் பத்து, வீரபுரப் பத்து ஆகியவற்றையும்; கல்வெட்டு அமுதரஸ மஞ்சரி, மல்லைச் சிவந்தெழுந்த பல்லவராயன்

பேரில் உலா ஆகியவற்றையும்; திருக்கோயில் திருஞான சம்பந்தர் பிள்ளைத்தமிழ், திருவாரூர் கமலைப் பராசக்தி மாலை, பழனிமலைக் கந்தசுவாமி கலித்துறைமாலை, வயலூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி ஆகியவற்றையும் வெளியிட்டு உள்ளது.

நிறுவனப் பருவ இதழில் மூலமும் குறிப்பும்

தனியார்/அரசு நிறுவனம் வெளியிட்ட பருவ இதழில் மூலமும் குறிப்பும் கொண்டு வெளிவந்த சுவடிப்பதிப்பை 'நிறுவனப் பருவ இதழில் மூலமும் குறிப்பும் கொண்ட சுவடிப் பதிப்பு' எனலாம். இவ்வகையில் கலைமகள் மட்டுமே இடம் பெறுகிறது. இவ்விதழ் உதயணகுமார காவியம், களக்காட்டு சத்தியவாசகர் இரட்டைமணிமாலை, திருஇலஞ்சி முருகன் உலா, திருக்குற்றாலக் குறவஞ்சி, திருக்குற்றாலச் சிலேடை வெண்பா, பத்மகிரிநாதர் தென்றல்விடுதூது, பாசவதைப் பரணி, புகையிலைவிடுதூது, மகரநெடுங்குழைக் காதர் பாமாலை, மான்விடுதூது ஆகியவற்றை வெளியிட்டுள்ளது.

நிறுவனப் பருவ இதழில் மூலமும் உரையும்

தனியார்/அரசு நிறுவனம் வெளியிட்ட பருவ இதழில் மூலமும் உரையும் கொண்டு வெளிவந்த சுவடிப்பதிப்பை 'நிறுவனப் பருவ இதழில் மூலமும் உரையும் கொண்ட சுவடிப் பதிப்பு' எனலாம். இவ்வகையில் கலைமகள் (சென்னை), சித்தாந்தம் (1928), செந்தமிழ்ச்செல்வி, திருக்கோயில் ஆகிய பருவ இதழ்கள் இடம்பெறுகின்றன. கலைமகள் (சென்னை) 'சிவசிவ வெண்பா'வையும்; சித்தாந்தம் (1928) அருள்முறைத் திரட்டு, பதிபசுபாசத் தொகை ஆகியவற்றையும்; செந்தமிழ்ச் செல்வி திருவிசைப்பாவுடையார் துவாதசமாலை, பஞ்சமரபு - முதற்பகுதி, முத்தி நிச்சயம் ஆகியவற்றையும்; திருக்கோயில் வண்ணத்தியல்பு நூல் என்பதையும் வெளியிட்டுள்ளது.

நிறுவனப் பருவ இதழில் திருத்தச் சுவடிப்பதிப்புகள்

தனியார்/அரசு நிறுவனம் வெளியிட்ட பருவ இதழில் பல பதிப்புகளையும் பல சுவடிகளையும் ஒப்புநோக்கித் திருத்தப்

பதிப்பாக வெளிவந்த சுவடிப்பதிப்பை 'நிறுவனப் பருவ இதழில் திருத்தச் சுவடிப்பதிப்பு' எனலாம். இவ்வகையில் சித்தாந்தம் (1928) மட்டுமே இடம்பெறுகின்றது. இதில் ஞானாமிர்தம் வெளிவந்துள்ளது.

நிறுவனப் பருவ இதழில் குறைச்சுவடிப்பதிப்புகள்

தனியார்/அரசு நிறுவனம் வெளியிட்ட பருவ இதழில் குறையுடன் வெளிவந்த சுவடிப்பதிப்புகளை 'நிறுவனப் பருவ இதழில் குறைச்சுவடிப்பதிப்பு' என்லாம். இவ்வகையில் கலைமகள் (சென்னை), சித்தாந்தம் (1928), செங்குந்தமித்திரன், செந்தமிழ்ச்செல்வி ஆகிய பருவ இதழ்கள் இடம்பெறுகின்றன. கலைமகள் (சென்னை) தமிழ்நெறி விளக்கம், திருக்காளத்தி இட்டகாமிய மாலை, திருமலையாண்டவர் குறவஞ்சி ஆகிய வற்றையும்; சிந்தாந்தம் (1928) கோமதி அந்தாதி (இருமுறை), தணிகை வெண்பா, பஞ்சாக்கர மாலை ஆகியவற்றையும்; செங்குந்தமித்திரன் இரட்டையர் அம்மானையையும்; செந்தமிழ்ச்செல்வி தாள சமுத்திரம் என்பதையும் வெளியிட்டு உள்ளது.

பல்கலைக்கழகப் பருவ இதழில் மூலச்சுவடிப்பதிப்புகள்

பல்கலைக்கழகம் வெளியிட்ட பருவ இதழில் வெளிவந்த சுவடிப்பதிப்பைப் 'பல்கலைக்கழகப் பருவ இதழ்ச் சுவடிப் பதிப்பு' என்றும், அப்பருவ இதழில் மூலம் மட்டும் வெளிவந்த சுவடிப்பதிப்பைப் 'பல்கலைக்கழகப் பருவ இதழில் மூலச் சுவடிப்பதிப்பு' என்றும் கூறலாம். இவ்வகையில் தமிழாய்வு, தமிழ்க்கலை ஆகிய பருவ இதழ்கள் இடம்பெறு கின்றன. தமிழாய்வு அப்பாண்டைநாதர் உலா, ஈனமுத்துப் பாண்டியன் கதை, மேருமந்தர மாலை ஆகியவற்றையும்; தமிழ்க்கலை உதயத்தூர் புலைமாடத்தி வரத்து என்பதையும் வெளியிட்டு உள்ளது.

பல்கலைக்கழகப் பருவ இதழில் மூலமும் குறிப்பும்

பல்கலைக்கழகம் வெளியிட்ட பருவ இதழில் மூலமும் குறிப்பும் கொண்டு வெளிவந்த சுவடிப்பதிப்பைப் 'பல்கலைக்

கழகப் பருவ இதழில் மூலமும் குறிப்பும் கொண்ட சுவடிப் பதிப்பு' எனலாம். இவ்வகையில் உயராய்வு, தமிழாய்வு ஆகிய பருவ இதழ்கள் இடம்பெறுகின்றன. உயராய்வு இருபுராண விருத்தம் என்பதையும்; தமிழாய்வு அல்லி கதை, கம்பராமாயணக் கௌஸ்துபம், சேலம் தாலந்தீர்த்த செழியன் மஞ்சரி, பாரதி தீபம் ஆகியவற்றையும் வெளியிட்டுள்ளது.

பல்கலைக்கழகப் பருவ இதழில் மூலமும் உரையும்

பல்கலைக்கழகம் வெளியிட்ட பருவ இதழில் மூலமும் உரையும் கொண்டு வெளிவந்த சுவடிப்பதிப்பைப் 'பல்கலைக் கழகப் பருவ இதழில் மூலமும் உரையும் கொண்ட சுவடிப்பதிப்பு' எனலாம். இவ்வகையில் உயராய்வு, தமிழாய்வு ஆகிய பருவ இதழ்கள் இடம்பெறுகின்றன. உயராய்வு ஆத்திசூடி பரிமேலழகர் உரையையும்; தமிழாய்வு அடிமதிக் குடி அய்யனார் பிள்ளைத்தமிழ், நாககுமார காவியம் ஆகிய வற்றையும் வெளியிட்டுள்ளது.

பல்கலைக்கழகப் பருவ இதழில் குறைச்சுவடிப்பதிப்புகள்

பல்கலைக்கழகம் வெளியிட்ட பருவ இதழில் குறையுடன் வெளிவந்த சுவடிப்பதிப்பைப் 'பல்கலைக்கழகப் பருவ இதழில் குறைச்சுவடிப்பதிப்பு' எனலாம். இவ்வகையில் உயராய்வு, தமிழாய்வு ஆகிய பருவ இதழ்கள் இடம்பெறுகின்றன. உயராய்வு நீதிநூல் என்பதையும்; தமிழாய்வு மெய்ம்மொழிச் சரிதை என்பதையும் வெளியிட்டுள்ளது.

இங்குக் குறிப்பிடப்பெற்றுள்ள பருவ இதழ்ச் சுவடிப் பதிப்புகளில் சில ஒன்றுக்கும் மேற்பட்ட பருவ இதழ்களில் வெளிவந்திருக்கின்றன. குறிப்பாக அப்பாண்டைநாதர் உலா, இராமாயணத் திருப்புகழ், இலக்கண தீபம், எதிராசரந்தாதி, கம்பராமாயண கவுத்துவமணிமாலை, சிறைவிடந்தாதி, ஞானசாரம், ஞானாமிர்தம், தத்துவ விளக்கம், திருஞானசம்பந்த சுவாமிகள் பிள்ளைத்தமிழ், திருநெறி விளக்கம், திருவிளையாடற் கருணைத்திருவிருத்தம், பதிபசுபாசத் தொகை, பிராசாத அகவல், மாறன் பாப்பாவினம், முத்தி நிச்சயம், மூவர்

அம்மானை, வருமுருகாற்றுப்படை ஆகியவற்றைக் குறிப்பிட லாம். மேலும், இதழிலேயே மறுபதிப்பாகவும் சில வெளிவந் திருக்கின்றன. குறிப்பாக, அருள்முறைத்திரட்டு, கோமதி அந்தாதி, தருக்க சூத்திரம், புலவராற்றுப்படை, வலைவீசு புராணம் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இதன் காரண மாகவே தெரிவு செய்யப்பெற்ற 408 நூற்தலைப்புகள் 437 பதிப்புகளாக விரிவடைந்திருக்கின்றன எனலாம். இவற்றில் குறைச்சுவடிப்பதிப்புகள் 57ம், முழுமையான சுவடிப்பதிப்புகள் 380ம் என அமைந்திருக்கின்றன.

பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புப் பதிப்பாசிரியர்கள்

பொதுநிலையில் பதிப்பாசிரியர் என்று பல்வேறு வகையினரைச் சுட்டினாலும் இங்குச் சுவடிகளை அச்சேற்றிய சுவடிப்பதிப்புப் பதிப்பாசிரியர்கள் மட்டுமே பொருளாக அமைகின்றது. தனிநூற் சுவடிப்பதிப்புகளை வெளியிட்ட வர்கள் பின்னர், பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகளை வெளியிட்ட வர்களாகவும், பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகளை வெளியிட்ட வர்கள் பின்னர் தனிநூற் சுவடிப்பதிப்புகளை வெளியிட்ட வர்களாகவும், பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகளை மட்டுமே வெளியிட்டவர்களாகவும் என மூன்று நிலைகளில் 'பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புப் பதிப்பாசிரியர்கள்' அமைந்திருக் கின்றனர்.

மகாமகோபாத்தியாய உ.வே. சாமிநாதையர், பேரா.எஸ். வையாபுரிப் பிள்ளை, அ. குமாரசாமிப் பிள்ளை, வி.கோ. சூரியநாராயண சாஸ்திரி, மு. சண்முகம் பிள்ளை, மு.கோ. இராமன் போன்ற தனிநூற் பதிப்பாசிரியர்கள் பருவ இதழ்ச் சுவடிப்பதிப்பாசிரியர்களாகவும் விளங்கியிருக்கின்றனர்.

திரு.நாராயணையங்கார், ரா. இராகவையங்கார், மு. இராகவையங்கார், ரெ. இராமையங்கார், திரு.கி. இராமானுஜையங்கார், ஔவை சு. துரைசாமிப் பிள்ளை, வே.ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர், சி.கே. சுப்பிரமணிய முதலியார், எல். உலகநாத பிள்ளை, இராம. கோவிந்தசாமிப்

பிள்ளை, பூ. சுப்பிரமணியம், வீ. சொக்கலிங்கம், திருவாரூர் எஸ். சோமசுந்தர தேசிகர், பொ. பாண்டித்துரைத் தேவர் போன்ற பதிப்பாசிரியர்கள் பருவ இதழ்கள் மூலம் அறிமுக மாகித் தனிநூற்பதிப்புகளை வெளியிட்டுச் சிறப்படைந்த பதிப்பாசிரியர்களாகத் திகழ்கின்றனர்.

வ.ரா. கல்யாணசுந்தரம், மு. அப்பாவு பிள்ளை, அனவரத விநாயகம் பிள்ளை, ஆதிமைந்தன், டி.எஸ். இராமச்சந்திர ஐயர், சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார், த. கிருட்டிணமூர்த்தி, வி.எஸ். கிருஷ்ணன், கிருஷ்ணா சஞ்சீவி, அ. கோபாலையர், து.அ. கோபிநாத ராவ், தி.சு. கோவிந்த சாமிப் பிள்ளை, மோ.கோ. கோவைமணி, கொடுமுடி சண்முகப் பிரகதம், வீ. சண்முகம், சத்தியவாகீசுவையர், சம்பந்தன், எஸ். சரவண பிள்ளை, சொ. சிங்காரவேலன், பு. சிதம்பர புன்னைவனநாதன், ப. சிதம்பரம் பிள்ளை, கே.என். சிவராஜ பிள்ளை, நா.ரா. சிவராஜ பிள்ளை, ம. சீராளன், சுந்தர சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள், சுந்தரேச வாண்டையார், சே.ரா. சுப்பிரமணியக் கவிராயர், மே. சொ. சுப்பிரமணியக் கவிராயர், வெ.ப. சுப்பிரமணிய முதலியார், சுயம்புநாதத் தம்பிரான், பி.எஸ். சுலோசனா, டி.என். சேஷாசலம், கே.சோமசுந்தரம் பிள்ளை, சௌந்தர பாரதி, எஸ். தியாக ராஜன், இராம. திலகம், ச. திலகம், எம்.பி.எஸ். துரைசாமி முதலியார், ஜே.எம். நல்லசாமி, சு. நல்லசிவன் பிள்ளை, பண்டிதர் நாராயணசாமி, தி.கி. நாராயணசாமி நாயுடு, அ. நாராயணசுவாமி, மா.வெ. நெல்லையப்பப் பிள்ளை, மு. பசுபதி, தி. பட்டுச்சாமி ஓதுவார், ஆர்.எஸ். பதி, பத்மாவதி, வி.எஸ். பரமசிவம், இல. பழனிச்சாமி, ஆர்.கே. பார்த்தசாரதி, பால்வண்ண முதலியார், வே.பி. பாஸ்கரையர், த. பெரியாண்டவன், மருதாசலசாமி, மு. மாணிக்கநாயகர், முத்தம்மாள் கௌரிநாதன், ப.அ. முத்துத்தாண்டவராய பிள்ளை, பொ. முத்தையா பிள்ளை, கி. வெங்கிடசாமி ரெட்டியார், ந. வேங்கடாசாரியன், கி. வேங்கிடசாமி ரெட்டியார், இ.பா. வேணுகோபால், சே.லெ. ஜம்புலிங்கம்

பிள்ளை போன்றவர்கள் பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகளை மட்டும் வெளியிட்டவர்களாகத் திகழ்கின்றனர்.

இவற்றைப் பார்க்கும்போது பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புப் பதிப்பாசிரியர்கள் இம்மூன்று நிலையினராக இருக்கின்றனர் என்று உணர முடிகின்றது. அதாவது, பதிப்புத் துறையில் தலைசிறந்து விளங்கியவர்களையும், பருவ இதழ்கள் மூலம் அறிமுகமாகிப் பின்னாளில் சிறந்த பதிப்பாசிரியர்களானவர்களையும், சிறுசிறு நூல்களையும் இலக்கியப் பருவ இதழ்களில் வெளிப்படுத்தி அறிமுகமாகாத பல பதிப்பாசிரியர்களையும் பெற்றுள்ளது. இவ்வகைப்பட்டவர்களின் பதிப்புப் பணியையும் சுவடிப்பதிப்பு வரலாற்றில் இடம்பெறச் செய்தல் வேண்டும். இதனால் சுவடிப்பதிப்பு வரலாறு விரிவடைவதோடு பதிப்பாசிரியர்களின் எண்ணிக்கையும் கூடும் என்பது உண்மை.

தொகுப்புரை

- சுவடிப்பதிப்பின் வரலாற்றை அமைப்பு நிலை, வெளியீட்டு நிலை, உள்ளடக்க நிலை ஆகிய மூன்று நிலைகளில் ஆராயலாம் என்பதும்; இவற்றின் வகைகள் முறையே இரண்டு, ஒன்பது, ஐந்து என்றும் வரையறை செய்து அவற்றின் மூலம் சுவடிப்பதிப்பு வரலாறு காணப்படவேண்டும் என்பதும் தெளிவாகின்றது.
- தெரிவுசெய்யப்பெற்ற 437 பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகளிலிருந்து 27 வகையாக பருவ இதழ்ச் சுவடிப் பதிப்புகள் பகுப்பாய்வு செய்யப்பெற்றுள்ளது.
- தமிழ்ச்சங்கம், சுவடிநூலகம், நிறுவனம் ஆகிய இம்மூன்றும் வெளியிட்ட பருவ இதழ்களில் ஐந்து வகையான உள்ளடக்க நிலைச் சுவடிப்பதிப்புகள் வெளிவந்திருக்கின்றன. ஏனைய தனியார், ஆதீனம், பல்கலைக்கழகம் ஆகிய மூன்றும் வெளியிட்ட பருவ இதழ்களில் திருத்தச் சுவடிப்பதிப்பு நீங்கலாக உள்ள

நான்கு வகையான உள்ளடக்க நிலைச் சுவடிப் பதிப்புகள் வெளிவந்திருக்கின்றன. ஆகத், திருத்தச் சுவடிப்பதிப்பு தவிர ஏனைய நான்கும் அனைத்துப் பருவ இதழ்களில் வெளிவந்திருப்பது தெரிகின்றது.

- குறைச்சுவடிப்பதிப்புகளை வெளியிட்டுச் சுவடிகளின் அழிவிலிருந்து காப்பாற்றிய பெருமை ஏனைய பருவ இதழ்களைக் காட்டிலும் தமிழ்ச் சங்கப் பருவ இதழ்களுக்கு மிகவே உண்டு. தமிழ்ச்சங்கப் பருவ இதழ்களில் மட்டும் 31 குறைச்சுவடிப்பதிப்புகள் வெளிவந்திருப்பது இதனைத் தெளிவுபடுத்துகின்றது.
- பார்வையிடப்பெற்ற 437 சுவடிப்பதிப்புகளில் 284 மூலச்சுவடிப் பதிப்புகளாகவும்; 39 மூலமும் குறிப்பும் கொண்டவையாகவும்; 51 மூலமும் உரையும் கொண்டவையாகவும்; 6 திருத்தச் சுவடிப் பதிப்பாகவும்; 57 குறைச்சுவடிப்பதிப்பாகவும் அமைந்துள்ளன. இவற்றினைப் பார்க்கும்போது பருவ இதழ்கள் மூலச்சுவடிப்பதிப்புகளை வெளியிடுவதை முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தன என்பது தெளிவாகும்.

4. பருவ இதழ்களில் சுவடிப்பதிப்புகள்

பருவ இதழ்களில் பல்வேறு நிலைகளில் சுவடிப் பதிப்புகள் வெளிவந்திருக்கின்றன. பருவ இதழ்ச் சுவடிப் பதிப்புகளைத் தனிநூற்பதிப்பு பெற்றவை என்றும், தனிநூற் பதிப்பு பெறாதவை என்றும் பிரிக்கலாம். குறிப்பிட்ட தனிநூற் பதிப்புகள் பருவ இதழ்ச் சுவடிப்பதிப்போடும், பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகள் தனிநூற்பதிப்போடும் ஒன்றுடனொன்று தொடர்பு கொண்டதாகத் திகழ்கின்றன. அதாவது, குறிப்பிட்ட தனிநூற்பதிப்புகள் வெளிவந்த பிறகும் பருவ இதழ்களில் சுவடிப்பதிப்புகள் வெளிவந்திருக்கின்றன. அதேபோல், பருவ இதழ்களில் குறிப்பிட்ட சுவடிப்பதிப்புகள் வெளிவந்த பிறகும் தனிநூற்பதிப்புகள் வெளிவந்திருக்கின்றன. தனிநூற்பதிப்பு பெறாத சுவடிப்பதிப்புகளும் பருவ இதழ்களில் இருக்கின்றன. அவை அன்றைய கால கட்டத்தில் தமிழறிஞர் கைகளில் தவழ்ந்து இன்று மறைந்திருக்கும் பதிப்புகளாகத் திகழ்கின்றன. நூல்களை வெளியிடுவதற்கென்று சில இதழ்கள் அக்காலத்தில் தோன்றி நூல்களை வெளியிட்டிருக்கின்றன. இந்நிலையில், பருவ இதழ்களில் வெளிவந்த சுவடிப்பதிப்பின் தன்மைகளை ஆறு வகைகளாகப் பிரிக்கலாம். அவை,

1. பருவ இதழ்ச் சுவடிப்பதிப்பிற்கு முன்-பின் தனிநூற்பதிப்புகள்
2. தனிநூற்பதிப்பிற்குப் பின் பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகள்
3. பருவ இதழ்ச் சுவடிப்பதிப்பிற்குப் பின் தனிநூற்பதிப்புகள்
4. பருவ இதழ்ச் சுவடிப்பதிப்பின் தனிநூற்பதிப்புகள்
5. பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகள்
6. நூலிதழ்ச் சுவடிப்பதிப்புகள்

போன்றவையாகும்.

பருவ இதழ்ச் சுவடிப்பதிப்பிற்கு முன்-பின் தனிநூற்பதிப்புகள்

பருவ இதழ்களில் குறிப்பிட்ட சுவடிப்பதிப்புகள் வெளிவருவதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்பும் சில ஆண்டுகளுக்குப் பின்பும் வெளிவந்த குறிப்பிட்ட தனிநூற்பதிப்பைப் 'பருவ இதழ்ச் சுவடிப்பதிப்பிற்கு முன்-பின் தனிநூற்பதிப்பு' எனலாம். இவ்வகையில், அகப்பொருள் விளக்கம், அசதிக்கோவை, அருங்கலச் செப்பு, இராமாயணத் திருப்புகழ் (இராமசெயம்), இனியது நாற்பது, களக்காட்டு சத்தியவாசகர் இரட்டைமணிமாலை, குருபரம்பரை அகவல், குலோத்துங்க சோழன் கோவை, சிராமலைக்கோவை, சிராமலையந்தாதி, சிவசிவ வெண்பா, ஞானாமிர்தம், தணிகைவெண்பா, தண்டலையார் சதகம், தத்துவ விளக்கம், திருஈங்கோய்மலை எழுபது, திருக்கயிலாய ஞானஉலா, திருக்கலம்பகம், திருக்காளத்தி இட்டகாமியமாலை, திருக்குற்றாலக் குறவஞ்சி, திருத்தணிகைத் திருவிருத்தம், திருத்தொட்டிக்கலைக் கேசவப் பெருமாள் வண்ணம், திருத்தொண்டர் மாலை, திருநூற்றந்தாதி, திருமயிலை யமகவந்தாதி, திருமாலிருஞ்சோலைமலை அழகர் பிள்ளைத்தமிழ், திருமுருகாற்றுப்படை, திருவானைக்காவுலா, தினகரவெண்பா, தேவிகாலோத்ர ஆகமம், தொட்டிக்கலைக் கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை, தொல்காப்பியம் பொருளதிகாரம் செய்யுளியல் நச்சினார்க்கினியம், நந்திக் கலம்பகம், நாககுமார காவியம், நான்மணிக்கடிகை, நீதி வெண்பா, நெல்லை வருக்கக்கோவை, பஞ்சாக்கர மாலை, பதிபசுபாசத் தொகை, பரத சாத்திரம், பர்த்ருஹரி நீதிசதகம், பழமொழி, பிராசாத தீபம், பிராசாத மாலை, பொன்வண்ணத் தந்தாதி, மாயாப் பிரலாபம், வண்ணத்தியல்பு நூல் போன்ற பதிப்புகள் இடம்பெறுகின்றன.

தனிநூற்பதிப்பிற்குப் பின் பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகள்

பருவ இதழ்களில் குறிப்பிட்ட சுவடிப்பதிப்புகள் வெளிவருவதற்கு முன்னரே தனிநூற்பதிப்புகளாக வெளிவந்த பதிப்பைத் 'தனிநூற்பதிப்பிற்குப் பின் பருவ இதழ்ச் சுவடிப்

பதிப்பு' எனலாம். இவ்வகையில், அடிமதிக்குடி அய்யனார் பிள்ளைத்தமிழ், அப்பாண்டைநாதர் உலா, அறநெறி வெண்பா, இராமானந்தத் திரட்டு, காழியந்தாதி, கோதைநாய்ச்சியார் தாலாட்டு, சரித்திர சார வண்ணம், சனிபகவான் தோத்திரம், சிதம்பரச்செய்யுட்கோவை, சிறைவிடந்தாதி, ஞானவம்மானை, திருக்குறள் அதிகார சாரமாகிய திருத்தாலாட்டு, திருச்செந்தூர் முருகக்கடவுள் நற்றாய் இரங்கல் வண்ணம், திருஞானசம்பந்த சுவாமிகள் திருத்தாலாட்டு, திருஞானத்தாழிசை, திருப்பழனி முருகக்கடவுள் கலவி மகிழ்தல் வண்ணம், திருமயிலை உவமை வெண்பா, திருவிளையாடற் பயகரமாலை, தில்லை இதழகல் அந்தாதி, தையல்நாயகி அந்தாதி, நவக்கிரக தோத்திரம், நாசிகேது புராணம், நாலடியார் - இருவருரைத் திருத்தம், நெஞ்சறி விளக்கம் - 2, பர்த்ருஹரி சிருங்கார சதகம், பனைச் சிலேடை வெண்பா உரையுடன், பூதர விலாசம், மகாமக அந்தாதிக் கும்மி, முனிமொழி, மூதுரை, மெய்ஞ்ஞானத் தங்கம், யாப்பருங்கலம், வருகைப்பத்து, விநாயக மான்மியம் போன்ற பதிப்புகள் இடம்பெறுகின்றன.

பருவ இதழ்ச் சுவடிப்பதிப்பிற்குப் பின் தனிநூற்பதிப்புகள்

குறிப்பிட்ட சுவடிப்பதிப்புகள் பருவ இதழ்களில் வெளிவந்த பிறகு பிறிதொருவரால் பதிப்பிக்கப்பெற்ற தனிநூற்பதிப்பைப் 'பருவ இதழ்ச் சுவடிப்பதிப்பிற்குப் பின் தனிநூற்பதிப்பு' எனலாம். இவ்வகையில், அருள்முறைத் திரட்டு, ஆசிரியமாலைச் செய்யுட்கள், ஆத்திசூடித் திறவுகோல், ஆழ்வார் பிள்ளைத்தமிழ், ஆனந்தரங்கன் கோவை, இரணியன் வதைப்பரணி, இராஜராஜதேவருலா, இளசை ஒருபாவொரு பஃது, உதயணகுமார காவியம், உவமான சங்கிரகம் (விருத்தம்), உவமான சங்கிரகம் (நூற்பா), ஐந்திணையெழுபது, ஐந்திணையைம்பது, கடம்பர்கோயில் உலா, கரவை வேலன் கோவை, கருணையந்தாதி, கலைசைக்கோவை, காரியார் நாரியார் பாப்பகுந்துகொண்ட திருவிளையாடல், கீழ்வேளூர் உலா, குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ், கோமதி அந்தாதி, சங்கரசோழன் உலா, சங்கரநயினார் கோயில் அந்தாதி,

சங்கரலிங்க உலா, சித்தரந்தாதி, சுவாமிநாதம், சேலம் தாலந் தீர்த்த செழியன் மஞ்சரி, ஞானசாரம், தமிழ்நெறி விளக்கம், தளசிங்கமாலை, தனிப்பாடற்றிரட்டு, தாள சமுத்திரம், திணை மாலை நூற்றைம்பது, திருக்கழுக்குன்றச் சிலேடை வெண்பா, திருக்குற்றாலச் சிலேடை வெண்பா, திருச்செந்திற் கலம்பகம், திருப்புல்லாணி நொண்டி நாடகம், திருமலை வெண்பா, திருமேற்றிசையந்தாதி, திருவாவடுதுறை குருபரம்பரை, திருவிசைப்பாவுடையார் துவாதசமாலை, தீபங்குடிப் பத்து, தேவிமான்மியம், தொல்காப்பியம் சொல்லதிகாரம் கல்லாடர் விருத்தியுரை, நரி விருத்தம், நுண்பொருண் மாலை, பஞ்சமரபு, பத்மகிரிநாதர் தென்றல்விடுதூது, பழனி இரட்டைமணி மாலை, பழனிப் பிள்ளைத்தமிழ், பன்னிரு பாட்டியல், பாண்டி மண்டல சதகம், பாப்பாவினம், பிரபந்த தீபிகை, பிராசாத அகவல், புலிமுலை புல்வாய்க்கருளிய திருவிளையாடல், புல்லை யந்தாதி, பொதிகை நிகண்டு - 1, பொதிகை நிகண்டு - 2, மகர நெடுங்குழைக்காதர் பாமாலை, மதுரைக்கோவை, மாறனலங் காரம், முத்தி நிச்சயம், முத்தொள்ளாயிரச் செய்யுட்கள், மூர்த்தி நாயனார்க்கரசளித்த திருவிளையாடல், மூவர் அம்மானை, வளையாபதிச் செய்யுட்கள், விக்கிரம சோழனுலா, விராலிமலை வேலவர் குறவஞ்சி நாடகம் போன்ற பதிப்புகள் இடம்பெறு கின்றன.

பருவ இதழ்ச் சுவடிப்பதிப்பின் தனிநூற்பதிப்புகள்

குறிப்பிட்ட சுவடிப்பதிப்புகள் பருவ இதழ்களில் வெளி வந்த பிறகு அவ் இதழ்ப் பதிப்பே தனிநூலாக வெளிவருவதைப் 'பருவ இதழ்ச் சுவடிப்பதிப்பின் தனிநூற்பதிப்பு' எனலாம். இவ்வகையில், அகராதி நிகண்டு, அட்டாங்க யோகக் குறள், அரும்பொருள் விளக்க நிகண்டு, அல்லி கதை, இருபுராண விருத்தம், கதிர்காம வேலவன் தோத்திரம், கந்தர் காதல், கமலாலய அம்மன் பிள்ளைத்தமிழ், கருணாம்பிகை யமக வந்தாதி, கனாநூல், காஞ்சி மன்னன் அம்மானை, குயில் ராமாயணம், குருகைமான்மியம்-பகுதி 1, குருக்ஷேத்திர மாலை, கூடற் புராணம், சரப புராணம், சிதம்பரப் பாட்டியல், சிதம்பர

விலாசம், சிவபாரத சரித்திரம், சுமிருதி சந்திரிகை, செந்தில் வேலவன் தோத்திரம், ஞானக் குறவஞ்சி, தஞ்சை வெள்ளைப் பிள்ளையார் குறவஞ்சி, தாயுமானவர் மடல், திருஇலஞ்சி முருகன் உலா, திருக்குற்றால மாலை, திருச்சிறுபுலியூர் உலா, திருச்செங் கோட்டகவல், திருச்சோற்றுத்துறை தலபுராணம், திருஞானசம்பந்த சுவாமிகள் பிள்ளைத்தமிழ், திருநறையூர்நம்பி மேகவிடுதூது, திருநெறி விளக்கம், திருப்பணி மாலை, திருப்புல்லாணி மாலை, திருமலையாண்டவர் குறவஞ்சி, திருவாரூருலா, திருவாரூர் மும்மணிக்கோவை, திருவையாற்றுத் தருமசம்வர்த்தனி மாலை, தேவையுலா, நண்ணாவூர் சங்கமேசுவர சுவாமி வேதநாயகி அம்மன் பேரில் விறலிவிடுதூது, நியதிப் பயன், பழமலைக் கோவை, பழனி மாலை, பழனி வேலவன் தோத்திரம், பாச வதைப் பரணி, பாரதி தீபம், புகையிலைவிடுதூது, புலவ ராற்றுப்படை, பெருந்தொகை, பொருட்டொகை நிகண்டு, மதுரை மும்மணிக்கோவை, மாறனகப்பொருளும் திருப்பதிக் கோவையும், மான்விடுதூது, வருத்தமறவுய்யும்வழி, வருமுரு காற்றுப்படை, வலிவல மும்மணிக்கோவை, வலைவீசு புராணம் போன்ற பதிப்புகள் இடம்பெறுகின்றன.

பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகள்

பல்வேறு நிலைகளில் தனிநூற்பதிப்பு பெற்று வெளிவந்த பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகள் அன்றி பருவ இதழ்களில் வெளிவந்து பருவ இதழ்களிலேயே நிலைத்து விட்ட சுவடிப்பதிப்புகளைப் 'பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகள்' எனலாம்.

பருவ இதழ்களில் மட்டும் வெளிவந்திருக்கின்ற சுவடிப்பதிப்புகளைப் பன்னிரண்டு வகைகளாகப் பாகுபடுத்திக் காணலாம். அவை, காப்பியம், புராணம், தத்துவம், திரட்டு நூல்கள், பன்னிரு திருமுறை, நீதி இலக்கியம், இலக்கணம், இசை நூல்கள், சிற்றிலக்கிய வகைகள், வாழ்க்கை வரலாற் றிலக்கியம், நாட்டுப்புற இலக்கியம், பல்வகை நூல்கள் எனப் பகுக்கப்பெற்றிருக்கின்றன. இவ்வகையில் வெளிவந்த நூல்

களைப் பற்றி அடுத்து இடம்பெறும் 'பருவ இதழ்ச் சுவடிப் பதிப்புகளின் வகையும் வடிவும்' என்ற பகுதியில் விளக்கப் பெற்றுள்ளது.

நூலிதழ்ச் சுவடிப்பதிப்புகள்

ஒருநூல் பல பகுதிகளாகத் தொடர்ந்து வெளிவருவதைத் 'தொடர் வெளியீட்டு நூல்' என்கிறோம். இதனை வரிசை வெளியீடு என்றும், பகுதி வெளியீடு என்றும் குறிப்பிடு கின்றோம். இவ்வெளியீடுகளில் நூல்கள் மட்டுமே இடம் பெற்றிருக்கும். இவ்வெளியீடுகள் மாதத்திற்கொன்றோ, மாதத்திற்கிரண்டோ, வாரத்திற்கொன்றோ, ஆண்டிற்கு நான்கோ (காலாண்டு) எனக் காலத்தை முறையாக வகுத்துக் கொண்டு தொடர்ந்து வெளிவருவதால் இவற்றைச் சஞ்சிகைகள் - இதழ்கள் - பருவ இதழ்கள் என்றெல்லாம் குறிப்பிடுகின்றோம். இப்பருவ இதழ்களில் நூல்கள் மட்டுமே இடம் பெற்றிருப்பன வற்றை 'நூலிதழ்கள்' என்று குறிப்பிடலாம். (இங்குக் குறிப்பிடப் பெற்றிருக்கும் ஆண்டு நூலிதழின் தொடக்க ஆண்டைக் குறிக்கும்).

நூலிதழ் வகைப்பாடு

நூலிதழ்களைத் தமிழ் நூலிதழ்கள் என்றும், மொழி பெயர்ப்பு நூலிதழ்கள் என்றும், பல நூலிதழ்கள் என்றும் மூன்றாகப் பகுக்கலாம். ஒரு குறிப்பிட்ட தமிழ் நூலை மட்டுமே தொடர்ந்து பகுதி பகுதியாக வெளியிட்டு வரும் நூலிதழைத் 'தமிழ் நூலிதழ்' என்றும், பிற இந்திய மொழிகளில் உள்ள சிறந்த நூல்களைத் தமிழில் மொழியாக்கம் செய்து தொடர்ந்து பகுதி பகுதியாக வெளியிட்டு வரும் நூலிதழை 'மொழி பெயர்ப்பு நூலிதழ்' என்றும், ஒன்றுக்கும் மேற்பட்ட நூல்களை (தமிழ் நூல்கள் மற்றும் மொழிபெயர்ப்பு நூல்கள்)த் தொடர்ந்து பகுதி பகுதியாக ஒன்றன் பின் ஒன்றாக வெளியிட்டு வரும் நூலிதழைப் 'பல நூலிதழ்' என்றும் அழைக்கலாம்.

தமிழ் நூலிதழ் என்பது, ஒரு குறிப்பிட்ட தமிழ்நூல் தொடர்ந்து வெளிவந்து நூல் முற்றுப் பெற்றவுடன் இதழின்

வாழ்நாளும் நிறைவுறுவதாகும். குறிப்பாக, கம்பர் தமிழில் எழுதிய 'கம்பராமாயணம்' எனும் நூல் 'கம்பராமாயணம்' என்ற நூலிதழில் பகுதி பகுதியாகத் தொடர்ந்து வெளியிட்டு நூல் முற்றுப் பெற்றவுடன் இவ்விதழ் நின்றுவிட்டதைக் குறிப்பிடலாம்.

மொழி பெயர்ப்பு நூலிதழ் என்பது, பிறமொழிகளில் உள்ள சிறந்த நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்து ஒரு நூலிதழ் போல் தொடர்ந்து வெளிவந்து நூல் முற்றுப் பெற்றவுடன் இதழின் வாழ்நாளும் நிறைவுறுவதாகும். குறிப்பாக, மராத்திய மொழியில் மகிபதிபாவா என்பார் இயற்றிய 'பக்த விஜயம்' என்ற நூலைப் பலர் தமிழில் மொழி பெயர்த்திருக்கின்றனர்.

பல நூலிதழ் என்பது, நூற்பெயரையோ நூலாசிரியர் பெயரையோ நூலிதழின் பெயராகப் பெறாமல் ஒரு பொதுப் பெயரைப் பெற்று அவற்றுள் ஒரு தன்மைத்தான நூல்களைத் தொடர்ந்து வெளியிட்டு வருவதாகும். இவற்றில் ஒரு நூல் முற்றுப்பெற்றவுடன் வேறொரு நூல் தொடர்வதாக அமைந் திருக்கும். குறிப்பாக, 'இதிகாச மஞ்சரி' என்னும் பல நூலிதழில் முதலில் இராமாயணக் கதையின் உரைநடைப் பகுதி தொடர்ந்து வெளிவந்துள்ளது. இப்பகுதி முடிவடைந்த வுடன் அடுத்த இதழில் மகாபாரதக் கதையின் உரைநடைப் பகுதி தொடர்ந்து வெளிவந்துள்ளது. இப்படி இதிகாசக் கதைகள் ஒன்றன் பின் ஒன்றாகத் தொடர்ந்து வெளிவந்ததால் இதற்கு 'இதிகாச மஞ்சரி' என்ற பெயர் இட்டிருக்கின்றனர் எனலாம்.

நூலிதழ் அமைப்பு

நூலிதழ்களை அமைப்பு நிலையில் அகநிலை அமைப்பு, புறநிலை அமைப்பு என இரண்டு நிலைகளாகப் பகுக்கலாம். அகநிலை அமைப்பானது தமிழ் நூலிதழ், மொழிபெயர்ப்பு நூலிதழ், பல நூலிதழ் என்றவாறு அமைகிறது. புறநிலை

அமைப்பானது பக்கங்களை அடிப்படையாகக் கொண்டும் இதழின் அளவு அடிப்படையாகக் கொண்டும் அமைகிறது.

நூலிதழை நூல் பெயரில் அமைந்த நூலிதழ் என்றும், நூலாசிரியர் பெயரில் அமைந்த நூலிதழ் என்றும், பொதுப்பெயரில் அமைந்த நூலிதழ் என்றும் மூன்றாகப் பிரிக்கலாம். மேலும் இவற்றைப் பின்வருமாறு வகைப் படுத்தலாம். நூல் பெயரில் அமைந்த அகநிலை நூலிதழை, தமிழ் நூலிதழ், மொழிபெயர்ப்பு நூலிதழ், பல நூலிதழ் (ஒரு நூலாசிரியரின் நூல்களைக் கொண்ட பல நூலிதழ், பல நூலாசிரியர்களின் நூல்களைக் கொண்ட பல நூலிதழ்) என்றும், நூலாசிரியரின் பெயரில் அமைந்த அகநிலை நூலிதழை ஒரு நூலாசிரியர் பெயரிலமைந்த நூலிதழ், ஒன்றுக்கும் மேற்பட்ட நூலாசிரியர் பெயரிலமைந்த நூலிதழ் என்றும், பொதுப் பெயரில் அமைந்த அகநிலை நூலிதழை அமைப்புப் பெயரிலமைந்த நூலிதழ், சிறப்புப் பெயரிலமைந்த நூலிதழ் என்றும் வகைப்படுத்தலாம். இங்குத் தமிழ் நூலிதழ் மற்றும் மொழிபெயர்ப்பு நூலிதழ் குறித்து மட்டும் விளக்கப் பெற்றுள்ளது.

1. நூல் பெயரிலமைந்த அகநிலைத் தமிழ் நூலிதழ்

ஒரு குறிப்பிட்ட தமிழ் நூலின் பெயரிலேயே வெளிவரும் நூலிதழை 'நூல் பெயரிலமைந்த அகநிலை தமிழ் நூலிதழ்' எனலாம். இவ்வகையான நூலிதழ் மேலும் மூன்று நிலைகளாகப் பகுக்கலாம். அவை,

அ. செய்யுள் நடையில் அமைந்த தமிழ் நூலிதழ்

ஆ. உரைநடையில் அமைந்த தமிழ் நூலிதழ்

இ. செய்யுளும் உரைநடையும் அமைந்த தமிழ் நூலிதழ் என அமையும்.

அ. செய்யுள் நடையில் அமைந்த தமிழ் நூலிதழ்

செய்யுள் நடையில் அமைந்த தமிழ் நூலிதழானது செய்யுள் வடிவமாகவே நூலிதழ் முழுவதும் அமைந்திருப்ப தாகும். இவ்வகையில் தமிழியில் இயற்றப்பெற்ற பல நூல்கள்

பல்வேறு கால கட்டங்களில் நூலிதழ்களாக வெளிவந்திருக் கின்றன. குறிப்பாக,

1868 - கிருஷ்ணமாச்சாரியாரின் 'முதலாயிரம்'
1872 - சண்முக சுந்தரம் அவர்களின் 'சிவஞான போதம்'
1881 - பாலசுந்தர முதலியார் & வாசுதேச பிள்ளை ஆகியோரின் 'தேவாரப் பதிகத் திருமுறைகள்'
1882 - கிருஷ்ணமாச்சாரியாரின் 'நாலாயிர திவ்வியப் பிரபந்தம்'
1885 - திருவேங்கடசாரியாரின் 'இயல்பா'
1897 - நல்லசாமியின் 'சிவஞான சித்தியார்'
1894 - திருப்பாதிரிப்புலியூர் சிவசிதம்பர முதலியாரின் 'திருப்புகழ்'
1914 - என். கோடீஸ்வர ஐயரின் கவிகுஞ்சரபாரதி இயற்றிய 'ஸ்கந்தபுராண கீர்த்தனை'
1933 - திரு.வி. கலியாணசுந்தர முதலியாரின் 'திருவிளையாடற் புராணம்'

போன்ற நூலிதழ்களைக் குறிப்பிடலாம்.

ஆ. உரைநடையில் அமைந்த தமிழ் நூலிதழ்

உரைநடை(வசனம்)யில் அமைந்த தமிழ் நூலிதழானது உரைநடை வடிவமாகவே நூலிதழ் முழுவதும் அமைந்திருப்ப தாகும். இவ்வகையில் தமிழில் இயற்றப்பெற்ற பல நூல்கள் பல்வேறு கால கட்டங்களில் நூலிதழ்களாக வெளிவந்திருக் கின்றன. குறிப்பாக, 1847ஆம் ஆண்டு ஏ. சிற்றம்பல முதலியார் வெளியிட்ட 'வில்லிபாரத வசனம்' என்னும் நூலிதழைக் குறிப்பிடலாம்.

இ. செய்யுளும் உரைநடையும் அமைந்த தமிழ் நூலிதழ்

செய்யுளும் உரைநடையும் அமைந்த தமிழ் நூலித ழானது செய்யுளும் உரைநடையுமாகவே நூலிதழ் முழுவதும் அமைந்திருப்பதாகும். இவ்வகையில் தமிழில் இயற்றப்பெற்ற பல நூல்கள் பல்வேறு கால கட்டங்களில் நூலிதழ்களாக வெளிவந்திருக்கின்றன. குறிப்பாக,

1840 - இராமாநுஜக் கவிராயரின் விளக்கவுரையுடன் 'திருக்குறள் பரி. உரை'

1872 - சண்முக முதலியார் உரையுடன் வெளிவந்த 'உண்மை விளக்கம் எனும் சித்தாந்த தீபிகை'

1873 - சி. திருவேங்கடாசாரியார் உரையுடன் வெளிவந்த 'முதலாயிர வியாக்கியானம்'

1880 - பெரியவாச்சான் பிள்ளை உரையுடன் சோமையா முதலியாரின் 'திருவாய்மொழி'

1881 - பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானமும் பூர்வாசாரியர்கள் சேர்த்தருளின அரும்பத விளக்கமும், வியாக்கியானங்களைத் தழுவிச் சேர்க்கப்பட்ட பதவுரையும் கொண்டு திருவேங்கடாசாரியார் & கிருஷ்ணமாசாரியார் ஆகியோரின் 'பெரிய திருமொழி'

1882 - பெரியவாச்சான் பிள்ளை உரையுடன் எஸ். பார்த்தசாரதி ஐயங்கார் அவர்களின் 'பெரிய திருமொழி'

1883 - தி.க. சுப்பராயச்செட்டியார் உரையுடன் இ. ரத்தினவேலு முதலியார் வெளியிட்ட 'திருவிளையாடற் புராணம் உரையுடன்'

1883 - ஆறுமுகத்தம்பிரான் & அட்டாவதானம் சுப்பராய முதலியார் உரையுடன் பி. கிருஷ்ணசாமி முதலியார் & ஏ.ஆர். நாகலிங்க முதலியார் ஆகியோரின் பெரியபுராணம் உரையுடன்'

1891 - டி.கே. சுப்பராயசெட்டியார் உரையுடன் சென்னை ஆதிகலாநிதி அச்சுக்கூடம் வெளியிட்ட 'காஞ்சிப்புராணம்'

1891 - சுப்பராயலு நாயக்கர் உரையுடன் வெளிவந்த 'பெரியபுராணம் உரையுடன்'

1892 - ஈக்காடு இரத்தினவேலு முதலியார் உரையுடன் டி. குப்புசாமி நாயக்கர் வெளியிட்ட 'காசி காண்டம்'

1894 - வேலூர் திருவேங்கடம் உரையுடன் வெளிவந்த 'நந்தமண்டல சதகம்'

1896 - இரத்தினவேலு முதலியார் உரையுடன் டி. குப்புசாமி நாயக்கர் வெளியிட்ட 'திருவிளையாடற்புராணம் உரையுடன்'(இதன் மறு நூலிதழ்ப் பதிப்பு 1935ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது)

1896 - சூ. சுப்பராய நாயக்கர் உரையுடன் வெளிவந்த 'கந்தபுராணம் உரையுடன்'

1897 - என். வேதாசலம்பிள்ளை(மறைமலையடிகள்) உரையுடன் வெளிவந்த 'உண்மை விளக்கம் என்னும் சித்தாந்த தீபிகை'

1902 - கோ. வடிவேலு செட்டியார் & வி.பி. தெய்வநாயக முதலியார் ஆகியோரின் 'திருக்குறள் பரிமேலழகர் உரை'

1904 - காஞ்சிபுரம் இராமசாமி நாயுடு உரையுடன் சை.ர. நமசிவாய செட்டியார் அவர்களின் 'திருவருட்பா - திருமுறைகள் முழுதும்'

1908 - திரு.வி. கலியாணசுந்தர முதலியாரின் அரும்பதக்குறிப்புரையும் வசனமும் கொண்டு வி. உலகநாத முதலியார் & ஆ. சிவசங்கர முதலியார் வெளியிட்ட 'திருத்தொண்டர் புராணம்'

1910 - காஞ்சிபுரம் மகாவித்துவான் இராமாநந்த யோகிகளின் சொற்பொருள், பொழிப்புரை, கருத்துரை, விளக்கவுரையுடன் பு. சண்முக முதலியார் வெளியிட்ட 'தேவாரம்'

1911 - ஈக்காடு இரத்தினவேலு முதலியார் பொழிப்புரையுடன் வெளிவந்த கோனேரியப்பரின் 'உபதேச காண்டம்'

1911 - ஏ.ஆர். திருவேங்கடாசாரியாரின் 'திருவாய்மொழி - பகவத் விஷயம்'

1913 - இராமானந்தயோகி உரையுடன் பி. சண்முக முதலியார் வெளியிட்ட 'சீகாளத்திப் புராணம்'

1913 - பி.பி. சீனிவாசாச்சாரியாரின் 'திருவாய்மொழி பகவத் விஷயம்'

1914 - பூவை. கலியாணசுந்தர முதலியாரின் மெய்கண்ட விருத்தி எனும் உரையுடன் எஸ்.ஆர். மாணிக்க முதலியார் அவர்களின் 'திருப்பாடற்றிரட்டு' (தாயுமானவர் பாடல்கள்)

1924 - 'திருக்குறட் குமரேச வெண்பா உரையுடன்'

1925 - பி.எஸ். சுப்பிரமணியர் உரையுடன் சென்னை அல்லையன்ஸ் வெளியிட்ட 'திருப்புகழ்-விருத்தியுரை'

1930 - திரு.வி. கலியாணசுந்தர முதலியார் உரையுடன் சாது அச்சுக்கூடம் வெளியிட்ட 'திருத்தொண்டர் புராணம் உரையுடன்'

1931 - ஆ. பாலகிருஷ்ணபிள்ளை உரையுடன் வெளிவந்த 'திருவருட்பா'

1935 - சி.கே. சுப்பிரமணிய முதலியார் அவர்களின் 'திருத்தொண்டர் புராணம்'

போன்ற நூலிதழ்களைக் குறிப்பிடலாம்.

2. நூல் பெயரிலமைந்த அகநிலை மொழிபெயர்ப்பு நூலிதழ்

பிற மொழியில் மிகச் சிறந்து விளங்கும் நூல்களைத் தமிழ் மொழியில் மொழிபெயர்ப்பு செய்வது காலங் காலமாக நடந்து வரும் ஒரு வழக்கமாகும். இவ்வகையில் நூலிதழும் தனக்கென ஒரு இடத்தைப் பிடித்திருக்கின்றது எனலாம். இவ்வகையில் வெளிவந்த மொழிபெயர்ப்பு நூலிதழ்களை மூன்று நிலைகளாகப் பகுக்கலாம். அவை,

அ. வடமொழி - தமிழ் மொழிபெயர்ப்பு நூலிதழ்

ஆ. மராட்டிய மொழி - தமிழ் மொழிபெயர்ப்பு நூலிதழ்

இ. தெலுங்கு - தமிழ் மொழிபெயர்ப்பு நூலிதழ்

என்பனவாகும்.

அ. வடமொழி - தமிழ் மொழிபெயர்ப்பு நூலிதழ்

வடமொழியில் சிறப்புற்று விளங்கிய நூல்களைத் தமிழர்களும் உய்த்துணர வேண்டி வடமொழியும் தமிழ்

மொழியும் கற்ற வல்லவர்கள் பலர் வடமொழி நூல்களைத் தமிழில் செய்யுள் வடிவமாகவும் வசனமாகவும் மூலமும் உரையுமாகவும் மொழிபெயர்த்திருக்கின்றனர். இவ்வகையில் செய்யுள் வடிவில்,

1878 - இ. சீனிவாசராகவாச்சாரியாரின் 'வால்மீகி ராமாயணம்'

1891 - கந்தசாமி முதலியாரின் 'புராண பாகவதம்'

1891 - எம். ரங்காச்சாரியாரின் 'புராண பாகவதம்'

1911 - ஏ.வி. நரசிம்மாச்சாரியாரின் 'பாகதவதம்' (1-8 பாகங்கள்)

1913 - நடேச சாஸ்திரியாரின் 'பாகவதம்' (9-30 பாகங்கள்)

1915 - வி. வைத்தியநாத ஐயரின் 'பாகவதம்' (31-36 பாகங்கள்) (இறுதி மூன்றும் ஒரே நூல். இந்நூலை முறையே மூவரும் மொழிபெயர்த்திருக்கின்றனர்)

போன்ற மொழிபெயர்ப்பு நூலிதழ்களையும்; உரைநடை வடிவில்,

1876 - டி. சீனிவாசாச்சாரியாரின் வசன மொழிபெயர்ப்பில் 'வால்மீகி ராமாயணம்'

1878 - தாதாதேசிக தாதாச்சாரியாரின் வசன மொழிபெயர்ப்பில் 'வால்மீகி ராமாயணம்'

1878 - எஸ். சுப்பிரமணிய பிள்ளையின் வசன மொழிபெயர்ப்பில் 'புராண பாகவத வசனம்'

1878 - தாதாதேசிக தாதாச்சாரியாரின் வசன மொழிபெயர்ப்பில் 'மகாபாரத வசனம்'

1886 - கே. சீனிவாசராகவனின் வசன மொழிபெயர்ப்பில் 'வால்மீகி ராமாயணம்'

1890 - பி.எம். சீனிவாசராகவாச்சாரியாரின் வசன மொழிபெயர்ப்பில் 'வால்மீகி ராமாயணம்'

1890 - வரதராசனின் வசன மொழிபெயர்ப்பில் 'மகாபாரதம் அல்லது ஆரம்ப காலம் முதல் உள்ள இந்திய சரித்திரம்'

1891 - பஞ்சாபிகேசனின் வசன மொழிபெயர்ப்பில் 'மகாபாரதம்'

1891 - தாதாதேசிக தாதாச்சாரியாரின் வசன மொழிபெயர்ப்பில் 'வால்மீகி ராமாயணம்' (மறுபதிப்பு)

1892 - வைத்தியநாதனின் வசன மொழிபெயர்ப்பில் 'ஸ்ரீமத் ஆதிமகாபாரதம்'

1901 - உ.வே. ஸ்ரீநிவாஸாசார்யரின் வசன மொழிபெயர்ப்பில் 'மஹாபாரதம்'

1901 - எஸ்.எம். நடேச சாஸ்திரியாரின் வசன மொழிபெயர்ப்பில் 'வால்மீகி ராமாயணம்'

1909 - சி.ஆர் சீனிவாச ஐயங்காரின் வசன மொழிபெயர்ப்பில் 'வால்மீகி ராமாயணம்'

1909 - ஆர். சிவராம சாஸ்திரியாரின் வசன மொழிபெயர்ப்பில் 'பாகவதத் தமிழ் வசனம்'

1910 - கணபதி சாஸ்திரியின் வசன மொழிபெயர்ப்பில் 'ஆநந்த ராமாயணம்'

1910 - எம்.கே. வீரராகவ ஐயங்காரின் வசன மொழிபெயர்ப்பில் 'பாகவத தசம ஸ்கந்தம்'

1912 - ஏ.வி. நரசிம்ஹாச்சாரியாரின் வசன மொழிபெயர்ப்பில் 'வால்மீகி ராமாயணம்'

1913 - கே. ஸ்ரீநிவாச ஐயங்கார் & பி. சண்முகம் ஆகியோரின் வசன மொழிபெயர்ப்பில் 'ஆத்ம புராணம்'

1916 - ஏ.வி. நரசிம்மாச்சாரியரின் வசன மொழிபெயர்ப்பில் 'பாகவதத் தமிழ் வசனம்'

போன்ற மொழிபெயர்ப்பு நூலிதழ்களையும்; மூலமும் உரையுமாக,

1890 - வித்தியாரணிய அடிகளின் உரையுடன் கு. சீனிவாசன் அவர்கள் வெளியிட்ட 'சூதசங்கிதை'

1906 - டி. சுந்தரராஜசர்மா அவர்களின் 'பகவத்கீதையும் ஸ்ரீசங்கராசாரிய பாஷ்யமும்'

1913 - வீரசுப்பையர் சுவாமிகளின் உரையுடன் 'பகவத்கீதை மூலமும் உரையும்'

1917 - வீரமெய்யப்ப சுவாமிகளின் உரையுடன் 'பவகத்கீதை மூலமும் உரையும்'

1926 - பி.எஸ். கிருஷ்ணசாமி ஐயர் உரையுடன் 'வால்மீகி ராமாயணம்'

போன்ற மொழிபெயர்ப்பு மூலமும் உரையுமான நூலிதழ்களையும் குறிப்பிடலாம்.

ஆ. மராட்டிய மொழி - தமிழ் மொழிபெயர்ப்பு நூலிதழ்

மராத்திய மொழியில் தலைசிறந்து விளங்கும் ஓர் இலக்கியத்தைத் தமிழ்மொழியில் பெயர்ப்புச்செய்து நூலிதழாக வெளியிட்டிருக்கின்றனர். இவ்வகையில் மராத்திய மொழியில் பகிபதிபாவா அவர்களின் 'பக்த விஜயம்' என்ற நூலைத் தமிழ்மொழியில் வசனமாக நான்கு விதமாக மொழிபெயர்ப்புச் செய்திருக்கின்றனர். அம்மொழிபெயர்ப்புகள் நூலிதழ்களாக வெளிவந்திருக்கின்றன. அவை,

1898 - புதுவை நாராயணதாசரின் 'மகாபக்த விஜயம்'

1907 - வி. பாலகிருஷ்ண முதலியாரின் 'பக்தமாலா வசனம்'

1911 - வி. சீனிவாசராவின் 'பக்த மாலிகை'

1912 - டி. நரசிம்ம பாகவதரின் 'பக்தமாலா வசனம்'

போன்ற மொழிபெயர்ப்பு நூலிதழ்களைக் குறிப்பிடலாம்.

இ. தெலுங்கு - தமிழ் மொழிபெயர்ப்பு நூலிதழ்

தெலுங்கு மொழியில் தலைசிறந்து விளங்கும் ஓர் இலக்கியத்தைத் தமிழ்மொழியில் பெயர்ப்புச் செய்து நூலிதழாக வெளியிட்டிருக்கின்றனர். இவ்வகையில், வியாசர் வடமொழியில் எழுதிய பிரமாண்ட புராணத்தில் வரும் கதைப் பகுதியே 'அத்யாத்ம இராமாயணம்'. இராமனுடைய பரப்பிரம்ம சொரூபம், சரஸ்வதி பிரம்மா உரையாடலில் இக்கதைப்பகுதி இடம்பெறுகிறது. இந்த ராமாயணத்தைச் சிவன் பார்வதிக்கு உபதேசித்தார் என்பர். இந்த அத்யாத்ம ராமாயணம் தெலுங்கில் 16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கஞ்சர்ள சரபனகவி என்பார் காப்பியமாகப் படைத்துள்ளார். இவரைத்

தொடர்ந்து இம்மடிஜெக தேவராயலு (17ஆம் நூற்.), இராபாக ஸ்ரீராமகவி (கி.பி.18ஆம் நூற்.), கோட்டமராஜு நாகையா (கி.பி. 18ஆம் நூற்.), கிருஷ்ணகிரி வேங்கடரமண கவி (கி.பி.19ஆம் நூற்.), அல்லமராஜு ராமகிருஷ்ண கவி (கி.பி.19ஆம் நூற்.), இராமையா மாத்யுடு (கி.பி.19ஆம் நூற்.) போன்றோரும் இக்காப்பியத்தைத் தெலுங்கில் மொழிபெயர்த்திருக்கின்றனர். இவர்களைத் தவிர சீதாராம சாஸ்திரி என்பாரும் தெலுங்கில் இக்காப்பியத்தை மொழிபெயர்த்திருக்கின்றார். இம்மொழி பெயர்ப்பை அடிப்படையாகக் கொண்டு வே. பாலகிருஷ்ண முதலியார் அவர்கள் தமிழில் வசனமாக மொழிபெயர்த் திருக்கின்றார். இம்மொழிபெயர்ப்பு 1903ஆம் ஆண்டு நூலிதழாக வெளிவந்துள்ளது.

தொகுப்புரை

- மேற்காணும் பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகளின் தனிநூற்பதிப்புகளைக் காணும்போது பருவ இதழ்ச் சுவடிப்பதிப்பின் தேவை என்ன என்பது தெளிவாகத் தெரிகின்றது.
- மக்களின் அங்கீகாரம் பெறுவதற்காகவும் பருவ இதழ்களில் நூல்கள் வெளிவந்திருக்கின்றன. மக்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்ற பின் நிறை/குறை நூல்கள் எவையாயினும் அவை தனிநூலாக்கப்பெற்ற தன்மை பருவ இதழ்ப் பதிப்புகளில் வெளிப்படுகின்றது.
- தனிநூலாக அச்சிட்டதிற்குப் பிறகும் தெளிவு கருதி மீண்டும் பருவ இதழ்களில் வெளியிட்டிருப்பது தெரிகின்றது. இதனால் பல நூல்கள் பருவ இதழ்களால் திருத்தம் பெற்றுள்ளன.
- தமிழிலக்கியம் ஒரு சாரார்க்கே என்ற ஒரு நிலையை மாற்றி, பருவ இதழ்கள் எல்லோர் கையிலும் தமிழிலக் கியங்களைக் கொடுத்துப் பயிலச் செய்ததைப் பார்க்கும் போது தமிழிலக்கிய வளர்ச்சிக்கு இவற்றின் பங்களிப்பு

தெளிவாகத் தெரிகின்றது.

- பெருநூல்களைப் பதிப்பித்த புகழ்பெற்ற பதிப்பாசிரியர்கள் சிற்றிலக்கியங்களைப் பதிப்பிக்கப் பருவ இதழ்களைத்தான் தேர்ந்தெடுத்திருக்கின்றனர். குறிப்பாக, மகாமகோபாத்தியாய உ.வே. சாமிநாதையர் சிற்றிலக்கியங்களைப் பதிப்பிக்கப் பருவ இதழ்களைத்தான் தேர்ந்தெடுத்திருக்கின்றார். இவர் மட்டும் 29 வகையான சிற்றிலக்கியங்களைப் பருவ இதழ்கள் வழி (செந்தமிழ், சிவநேசன், கலைமகள்-சென்னை) வெளியிட்டுள்ளார். இப்பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகள் பின்னர்த் தனிநூலாக்கப் பெற்றிருக்கின்றன. இதேபோல் பேரா. எஸ். வையாபுரிப்பிள்ளை, திரு. நாராயணையங்கார், மு. இராகவையங்கார், ரா. இராகவையங்கார், திரு.கி. இராமாநுஜையங்கார், அ. குமாரசாமிப் பிள்ளை, ஔவை சு. துரைசாமிப் பிள்ளை, சி.கே. சுப்பிரமணிய முதலியார், மு. சண்முகம் பிள்ளை போன்ற பதிப்பாசிரியர்களும் தங்களின் சில நூல்களை முதலில் பருவ இதழ்களில் அறிமுகப்படுத்திப் பின்னர்த் தனி நூலாக்கியமை புலப்படுகின்றது.
- பருவ இதழில் வெளிவந்த நூல்தானே என்று ஒதுக்கி விடாமல் அவற்றுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப் பட்டதால்தான் இன்று நமக்கு 408 நூல்கள் கிடைத்திருக்கின்றன.
- இதுவரை, தமிழிலக்கிய வரலாற்றில் பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக சுட்டப்பெற்றிருக்கின்றன. இன்று கிடைக்கக் கூடிய பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகளை உற்றுப் பார்க்கும் போது தமிழிலக்கிய வரலாற்றைப் புதுப்பிக்க வேண்டியதன் அவசியம் தெரிகின்றது.
- பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகளைக் கொண்டு தமிழிலக்கிய வரலாற்றைப் புதுப்பித்தால் தமிழ் வளம்

பெறுவதோடு தமிழிலக்கியத்தின் பரப்பும் விரியும். எனவே, தமிழிலக்கிய வரலாற்றைப் புதுப்பிப்பது என்பது இன்றைய தேவைகளில் ஒன்றாகிறது.

- பருவ இதழ்களில் தனிப்பக்கவெண் பெற்று வெளிவந்த பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகளில் பெரும்பான்மை பின்னாளில் தனிநூலாக்கப் பெற்றிருப்பது தெரிகின்றது. ஆய்வுக்குப் பயன்படுத்தப்பெற்ற 408 பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகளில் 184 பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகள் பருவ இதழ்களிலேயே நிலைத்து விட்டவையாக அறியமுடிகின்றது.
- புகழ்பெற்ற சுவடிப்பதிப்பாசிரியர்களின் குறைப்பதிப்பு களும், ஏனையோரின் பதிப்புகளும் இவற்றில் இடம்பெற்றுள்ளன என்பது தெரிகிறது.
- தமிழிலக்கியத்திற்கு வளம் சேர்க்கும் விதத்தில் பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகள் அமைந்திருப்பதைக் காணும் போது சுவடிப்பதிப்பு வரலாற்றில் பருவ இதழின் பங்கு தெளிவாகத் தெரிகின்றது.
- பருவ இதழ்களில் நிலைத்துவிட்ட சுவடிப்பதிப்புகளை வெளிக்கொணரும் போது பல பதிப்பாசிரியர்கள் தமிழுலகிற்கு அறிமுகமாகின்றனர்.
- சுவடிகள் அழிந்த நிலையில் அச்சுவடிகளை வெளி யிட்ட பருவ இதழ்களே இன்று சுவடிகளாக மாறி யுள்ளன.
- பருவ இதழ்களில் நிலைத்துவிட்ட சுவடிப்பதிப்புகளில் பெரும்பான்மை குறையுடையனவாகவும், சிறியன வாகவும் இருப்பது தெரிகின்றது.
- இரண்டு பாடல் கொண்ட 'பஞ்சநதீசுரர் தோத்திரம்' முதல் 4000 பாடல்கள் கொண்ட 'குருபரம்பரை' வரை பருவ இதழ்களில் வெளிவந்திருப்பதைப் பார்க்கும்

போது சிறிய/பெரிய நூல் என்று பாகுபாடு காட்டாமல் பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகள் வெளிவந்திருப்பது தெரிகிறது.

- இன்ன வகை இலக்கியந்தான் பருவ இதழ்களில் வெளிவரவேண்டும் என்ற விதி இல்லை. பருவ இதழ் களில் நிலைத்துவிட்ட சுவடிப்பதிப்புகளின் வகைகளைக் காணும்போது இந்நிலை புலப்படுகின்றது. அதாவது காப்பியம், புராணம், தத்துவம், நீதி இலக்கியம், இலக்கணம், சிற்றிலக்கியம் (51 வகைகள்), வாழ்க்கை வரலாற்றிலக்கியம், நாட்டுப்புற இலக்கியம், திரட்டு நூல்கள், பல்வகை நூல்கள் போன்ற பத்து வகைகள் அமைந்திருப்பதைக் காணமுடிகிறது.
- இப்பகுதியில் கையாளப்பெற்ற 184 நூல்களில் பெரும் பான்மை தமிழ் இலக்கிய வரலாற்றில் இடம் பெறாதவை. இவற்றையும் தமிழிலக்கிய வரலாற்றில் உட்படுத்தி னால் தமிழிலக்கியத்தின் எண்ணிக்கை பெருகுவ தோடு அதன் வரலாற்றுப் பரப்பும் விரியும். குறிப்பாக, சிற்றிலக்கிய வரலாறு விரிவடைகின்றது. அதாவது 184 நூல்களில் 129 நூல்கள் சிற்றிலக்கிய வகைகளாகவே அமைந்து இந்நிலையினை உணர்த்து கின்றது.
- புதுவகையான சிற்றிலக்கியங்களையும் பருவ இதழ்கள் அறிமுகப்படுத்துகின்றன.
- இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் காண்பது போல், சில இலக்கியங்களின் இலக்கணங்களை மாற்றுவது போலவும், சில இலக்கியங்களுக்கு இலக்கணங்களை உருவாக்குவது போலவுமான நூல்கள் பருவ இதழ்களில் வெளிவந்திருப்பது தெரிகின்றது.
- இவற்றையெல்லாம் பார்க்கும்போது சுவடிப்பதிப்பு வரலாற்றில் பருவ இதழ்கள் ஓர் அங்கமாக விளங்கி வருகின்றன எனலாம்.

5. பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகளின் வகையும் வடிவும்

பல்வேறு நிலைகளில் தனிநூற்பதிப்பு பெற்று வெளிவந்த பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகள் பற்றி முன்னர் ஆராயப்பெற்றது. பருவ இதழ்களில் வெளிவந்து பருவ இதழ்களிலேயே நிலைத்துவிட்ட சுவடிப்பதிப்புகளின் வகையும் வடிவும் குறித்து இங்கு ஆராய்பெறுகின்றது.

வகையும் வடிவும்

தற்புலப்பாட்டு இலக்கியம், உலக மக்களின் வாழ்வையும் செயலையும் புலப்படுத்தும் இலக்கியம், வருணித்துக் கூறும் விரிவிலக்கியம் என்று இலக்கியங்களை முப்பெரும் பிரிவுகளாகப் பிரிப்பர் (தமிழ் இலக்கிய வகையும் வடிவும், பக்.10-11). இப்பிரிவுகளுக்குப் பொருளும் வடிவமும் அடிப்படையாக அமைகின்றன. வடிவம், அகவடிவம் புறவடிவம் என்றும், பொருள், அகப்பொருள் புறப்பொருள் என்றும் இரண்டிரண்டாகப் பிரிந்தமைகின்றன. இலக்கியத்தில் இடம்பெறும் கருத்து அல்லது பொருண்மை அகவடிவம் என்றும், இவற்றை வெளிப்படுத்த உதவும் யாப்பு புறவடிவம் என்றும் கூறுவர். ஆக, இலக்கியத்தைப் பொருள் அடிப்படையாகவும், வடிவ அடிப்படையாகவும் பாகுபடுத்தலாம் என்பது தெளிவு. பொருள் அடிப்படையிலான இலக்கியத்தை அக இலக்கியம், புற இலக்கியம் என இரண்டாகப் பிரிக்கலாம். இவை மேலும் தனிப்பாடல், காப்பியம், நீதி இலக்கியம், பக்தி இலக்கியம், சாத்திர இலக்கியம், சித்தர் இலக்கியம், சிற்றிலக்கியம், நாடகம், நாவல், சிறுகதை, கட்டுரை, பயண

இலக்கியம், வாழ்க்கை வரலாற்றிலக்கியம், நாட்டுப்புற இலக்கியம், புதுக்கவிதை, ஐக்கூ கவிதை போன்ற வகைகளாக விரிகின்றன. வடிவ அடிப்படையிலான இலக்கியத்தை யாப்பு இலக்கியம், உரைநடை இலக்கியம் என இரண்டாகப் பிரிக்கலாம். யாப்பு இலக்கியத்தை அகவல், ஆசிரியம், இன்னிசைப்பா, ஒருபோகு, கண்ணி, கலித்துறை, கட்டளைக் கலித்துறை, கலிப்பா, கொச்சகக் கலிப்பா, கழிநெடில், குறள், சிந்து, தாண்டகம், தாழிசை, பரிபாடல், மருட்பா, வகுப்பு, வண்ணம், விருத்தம், வெண்பா போன்ற பா வகைகளாகவும், அந்தாதி, கோவை, மாலை போன்ற செய்யுட்கூறு வகை களாகவும் பகுக்கலாம். எடுத்துக்காட்டாக, செய்யுட்கூறு அடிப்படையில் 'அந்தாதி' இலக்கியம் வெண்பா அந்தாதி, கலித்துறை அந்தாதி, ஒலியலந்தாதி, கலியலந்தாதி, யமக வந்தாதி, திரிபந்தாதி, சிலேடையந்தாதி, நீரோட்டக அந்தாதி, இதழகலந்தாதி என அமைவதைக் காணலாம். உரைநடை இலக்கியத்தை நாவல், நாடகம், சிறுகதை, பயண இலக்கியம், வாழ்க்கை வரலாறு, கட்டுரை போன்ற வகைகளாகக் காணலாம்.

'பொருளும் வடிவமும் உயிரும் மெய்யும் போல அமைந்திருக்கின்றன என்பர். அதாவது, பொருளின்றி வடிவத்தையும் வடிவமின்றி பொருளையும் தனித்துப் பார்க்கமுடியாது. இதனால், இலக்கியத்தையே வடிவாகக் கொள்கின்ற அகநிலைக் (பொருள்) கொள்கையும், இலக்கிய வடிவம் எனக் கூறியதுமே இலக்கிய வகைகளை நினைக்கும் இன்றைய எண்ணமும், யாப்பு வடிவத்தையே கொள்ளும் பிறிதொரு கோட்பாடும்' (தமிழ் இலக்கிய வகையும் வடிவும், ப.12) தெளிவாகத் தெரிகின்றன. இந்நிலையில் பருவ இதழ்களில் மட்டும் வெளிவந்திருக்கின்ற சுவடிப்பதிப்புகளை ஒன்பது வகைகளாகப் பாகுபடுத்திக் காணலாம். காப்பியம், புராணம், தத்துவம், நீதி இலக்கியம், சிற்றிலக்கியம், வாழ்க்கை வரலாற்றிலக்கியம், நாட்டுப்புற இலக்கியம், திரட்டு மற்றும் பல்வகை என்பதாக அவை பகுக்கப்பெற்றிருக்கின்றன.

அ. காப்பியம்

'நால்வகை உறுதிப்பொருளையும் (அறம், பொருள், இன்பம், வீடு) கூறுவதாய்க் கதை பற்றி வரும் தொடர்நிலைச் செய்யுள்' எனக் காப்பியத்திற்குச் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி வரையறை கூறுகின்றது. காப்பியங்கள் பழங்கதைகளைக் கூறுவனவாகும். இந்நிலையில் பாரதம், இராமாயணம், ஐம்பெருங்காப்பியம், ஐஞ்சிறுகாப்பியம் மற்றும் காலந்தோறும் தோன்றிய காப்பியங்கள் தமிழிலக்கியத்தில் தோன்றியுள்ளன. நீண்ட கதையமைப்பையும் பல கிளைக்கதைகளையும் கொண்ட காப்பியங்களைப் பருவ இதழில் தொடக்க முதல் இறுதி வரை வெளியிடுதல் என்பது இயலாத ஒன்றாகும். இதற்கென 'நூலிதழ்கள்' தோன்றி இப்பணிகளைச் செய்துள்ளன. இக்காப்பியங்களில், காப்பியத்திற்கு வளம் சேர்க்கும் குறிப்பிடத்தக்க பகுதியை மட்டும் பருவ இதழ்கள் வெளியிட்டுள்ளன. இம்முறையில் வில்லிபாரதம் 18 சருக்கங்களோடு முடிகின்றது. ஆனால் இதுவரை அச்சில் வராத 19ஆம் சருக்கத்தைப் பருவ இதழ் அறிமுகப்படுத்துகின்றது.

பாரதப்போர் முடிந்த பிறகு தருமருக்கு முடிசூட்டு வதைக் குறிக்கும் 19ஆம் சருக்கமாகச் சில சுவடிகளில் 'மௌளி சூட்டுச்சருக்கம்' இடம்பெற்றுள்ளது. இச்சருக்கத்தை 1949ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் தி. சந்திரசேகரன் வெளியிட்டுள்ளார். இச்சருக்கம் இன்றுவரை எந்தப் பதிப்பிலும் இடம்பெறவில்லை என்பது இங்குச் சுட்டத் தக்கதாகும்.

ஆ. புராணம்

பலருடைய வரலாற்றையோ, பல பொருள்களின் வரலாற்றையோ தொகுத்துக் கூறுவது 'புராணம்' ஆகும். "புராணம் என்பதைப் பழங்கதை (Ancient tale of legend) என்று கூறுவதைக் காட்டிலும், வழிவழி வந்த மரபு வரலாறு (Traditional History) என்று கூறுவதே மிகவும் பொருத்தமுடையதாகும்"

(தமிழில் தலபுராணங்கள் - பகுதி 1, ப.6) என்று புராணத்திற்கு வரையறை கூறுவர். மேலும் "வேதங்களில் உள்ள வேள்விகள், அத்தி முதல் எறும்பு ஈறான உயிர்களின் படைப்பு, உலக அமைப்பு, கிரகங்களின் மண்டலம், சுவர்க்கம், நரகம், தேவ ஆராதனை, உடலமைப்பு, வைத்தியமுறை, நாடிகள், யோக முறைகள், நோன்புகள், மந்திரம், துதி, சகுனம் முதலிய இம்மைக்கும் மறுமைக்கும் உதவக்கூடிய பல வழிமுறைகள் ஆகிய எல்லாச் செய்திகளும் புராணங்களில் கூறப்பெற்றுள்ளன" (தமிழில் தலபுராணங்கள் - பகுதி I, ப.11) என்பதால் எல்லா வகையான பொருள்களையும் புராணம் பெற்றிருக்கும் என்று கூறலாம். இந்நிலையில் இரண்டு வகையான புராணங்கள் பருவ இதழ்களில் வெளிவந்திருக்கின்றன.

அண்டத்திலுள்ள கொதுகின், மூட்டுப்பூச்சி, காபி, தேயிலை, புகையிலை, வெங்காயம், கலியுக மாந்தர் போன்ற பொருள்களைப் பற்றிக் கூறும் 'அண்டபுராணம்' எனும் நூலை 1929ஆம் ஆண்டு கலாநிலையம் இதழில் டி.எஸ். இராமச்சந்திர ஐயர் கிடைத்த குறைச்சுவடியைக் கொண்டு வெளியிட்டு உள்ளார்.

ஆழ்வார்திருநகரியில் கோயில் கொண்டு இருக்கும் எம்பெருமானுடைய வைபவத்தைக் கூறும் திருக்குருகைப் பெருமாள் கவிராயரின் 'குருகைமான்மியம் - பகுதி 2'யை 1947ஆம் ஆண்டு செந்தமிழ் இதழில் கி. இராமாநுஜ ஐயங்கார் வெளியிட்டுள்ளார். இதன் முதல் பகுதி 2624 பாடல்கள் வரை செந்தமிழ் இதழில் வெளிவந்து பின்னர் செந்தமிழ் வெளியீடாக வெளிவந்திருக்கின்றது என்பது நினைவு கூரத்தக்கதாகும்.

இ. தத்துவம்

'அசுத்த தத்துவம் 24ம், சுத்தாசுத்த தத்துவம் 7ம், சுத்த தத்துவம் 5ம் ஆகிய 36 மூலப்பொருள்கள்; அல்லது மேற்கூறிய 36ம், புறநிலைக்கருவி 60ம் ஆகிய 96 மூலப்பொருள்கள்' என்று சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி தத்துவத்திற்கு வரையறை கூறுகின்றது. தத்துவங்கள் 36ம், அவற்றின்

காரியங்கள் 60ம் சேர்த்துப் பொதுவாகத் தத்துவங்கள் 96 என்பர். உலகப் பொருள்களின் உண்மைப் பொருள்களையும், அவ்வவற்றின் உண்மையான குணங்களையும் எடுத்துக் கூறுவது 'தத்துவம்' என்றும், இவற்றை விளக்கும் நூல்கள் 'தத்துவ நூல்கள்' என்றும் கூறலாம். பருவ இதழ்களில் பின்வரும் தத்துவ நூல்கள் வெளிவந்திருக்கின்றன.

கௌமாரத்தின் பெருமைகளையும் சிறப்புகளையும் எடுத்துக்கூறும் வண்ணச்சரபரின் 'கௌமார வினோத நூல்' 1990ஆம் ஆண்டு 'மாதாந்திர அமுதம்' இதழில் வெளிவந்துள்ளது.

சைவ சித்தாந்த உண்மையினை விளக்கும் முகமாக அமைந்த 'சிவானந்த போதம்' எனும் நூலை 1924ஆம் ஆண்டு செந்தமிழ்ச் செல்வி இதழில் எல். உலகநாத பிள்ளை வெளியிட்டுள்ளார்.

கமலைஞானப்பிரகாசர், நஞ்சுண்ட மூர்த்தி சுவாமிகள், சிவசுந்தர தேசிகர் போன்றோர்களின் சிவானந்த போதங்களும் தமிழிலக்கியத்துள் காணப்படுகின்றன. பெரிய ஞானக்கோவை இரண்டாம் பாகத்தில் ஒரு சிவானந்த போதம் இடம்பெற்று உள்ளது. பருவ இதழில் வெளிவந்த சிவானந்த போதம் இவற்றினின்று வேறானது.

பதினாறு கலைகளின் யோகத் தன்மையைக் குறிப்பிடும் 'சோடசகலா பிராசாத யோகம்' எனும் நூலை 1911ஆம் ஆண்டு செந்தமிழ் இதழில் திருவாரூர் எஸ். சோமசுந்தர தேசிகர் வெளியிட்டுள்ளார்.

காரியங்கள் பத்துக்கும் பத்து அகவற் பாடலால் அமைந்த 'தசகாரியம்' எனும் நூலை 1939ஆம் ஆண்டு 'சித்தாந்தம்' இதழில் எஸ். அனவரத விநாயகம் பிள்ளை வெளியிட்டுள்ளார். களந்தை ஞானப்பிரகாசர், அம்பலவாண தேசிகர், தக்ஷிணாமூர்த்தி தேசிகர், சுவாமிநாத தேசிகர், சிதம்பரநாத தேசிகர் போன்றோரின் தசகாரியங்களில் இருந்து இந்நூல் வேறானது.

முப்பொருளுக்குரிய தசகாரியமும், ஆத்மாவுக்கு ஒரு காரியமும் சேர்த்து 11 காரியங்களையும், சுத்தியை ஒழித்துச் சிவயோகம், யோகம் இரண்டினையும் சுட்டிச் சிவனிடத்து 11 காரியங்களையும் விளக்கும் 'திரிபதார்த்த தசகாரியம்' எனும் நூலை 1912ஆம் ஆண்டு 'சித்தாந்தம்' இதழில் ஜெ.எம். நல்லசாமி வெளியிட்டுள்ளார்.

யோகம், ஞானம் பற்றிச் சுருக்கமாகக் கூறும் 'நெஞ்சறி விளக்கம் -1'யை 1950ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் தி. சந்திரசேகரன் வெளியிட்டு உள்ளார். கணபதிதாசரின் நெஞ்சறிவிளக்கத்தில் இருந்து இந்நூல் வேறானது.

முப்பொருளின் சைவ சித்தாந்த உண்மைகளை விளக்கும் மறைஞானசம்பந்தரின் 'பதிபசுபாசப் பனுவல்' எனும் நூலை 1928-30ஆம் ஆண்டு 'தமிழ்ப்பொழில்' இதழ்ப் பகுதிகளில் எல். உலகநாத பிள்ளை மூலப்பகுதியை மட்டும் வெளியிட்டு உள்ளார். அம்பலவாண தேசிக மூர்த்திகளின் 'பதிபசு பாசப்பனுவல்' ஒன்றுண்டு. இவ்விரண்டும் வேறுவேறானவை.

முப்பொருளுக்குரிய சுபாவம், வியாப்தி, வியாபகம், குணம், விசேடம், ரூபகம், ரூபம், சொரூபம், தரிசனம், சுத்தி ஆகிய பத்து வகையான காரியங்களை உரைநடையில் எடுத்துக்கூறும் 'பதிபசுபாசவகை'யை 1928ஆம் ஆண்டு 'தமிழ்ப்பொழில்' இதழில் எல். உலகநாத பிள்ளை வெளியிட்டு உள்ளார்.

சைவ சமயக் கருத்துக்களின் தொகுப்பாக அமைந்த கண்கட்டி மறைஞானசம்பந்தரின் 'பரமோபதேசம்' எனும் நூலை 1927ஆம் ஆண்டு 'தமிழ்ப்பொழில்' இதழில் எல். உலகநாத பிள்ளை வெளியிட்டுள்ளார்.

நித்திய கர்ம அநுஷ்டானம் முதல் சிவபூசை ஈறாக உள்ள முத்திரை அநுஷ்டானங்களை எடுத்துரைக்கும் சிதம்பரநாத தேசிகரின் 'முத்திரை'யை 1912ஆம் ஆண்டு

'செந்தமிழ்' இதழில் திருவாரூர் எஸ். சோமசுந்தர தேசிகர் வெளியிட்டுள்ளார்.

சிவஞான சித்தியாரைப் போன்று பரபக்கம், சுபக்கம் எனும் இரு கூறாய் அமைந்து சைவசித்தாந்த சாத்திர உண்மை களை உணர்த்துவதாக அமைந்த இளங்காரிகுடி மெய்ம்மொழித் தேவரின் 'மெய்ம்மொழிச் சரிதை'யை 1977ஆம் ஆண்டு 'தமிழாய்வு' இதழில் மு. சண்முகம் பிள்ளை சுபக்கம் 361, பரபக்கம் 42 ஆக 403 பாடல்களாக வெளியிட்டுள்ளார்.

ஈ. நீதி இலக்கியம்

மக்களை அறத்தொடு நிற்கச் செய்யும் நீதிகளை உணர்த்துவன 'நீதி இலக்கியம்' ஆகும். காதல் வீரம் கொடை முதலிய சிறந்த உணர்ச்சிகளிலும் இயற்கை இன்பத்திலும் ஈடுபட்டிருந்த மக்களின் அமைதி கெட்டபோது அவர்களை நிலைநிறுத்தப் பல நீதிகளைப் புலவர்கள் புகட்டத் தொடங்கினர். இவ்வகையில் பல நீதி நூல்கள் தமிழில் தோன்றின. 'பதினெண் கீழ்க்கணக்கு' தொடங்கித் தமிழிலக்கியத்தில் பல்வேறு வகையான நூல்கள் நீதிகளை உணர்த்துபவையாகத் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. கீழ்க்கணக்கு நூல்கள் பெரும்பாலான நீதி நூல்களாகத் திகழ்கின்றன. காலந்தோறும் மக்களின் தேவைக்கேற்பப் பல நீதி நூல்கள் தோன்றிக் கொண்டிருக்கின்றன. அந்நூல்களுக்கு உரைகளும் எழுதி அவற்றைச் சிறப்படையச் செய்துள்ளனர். மாணவர்களின் தொடக்க காலப் பயிற்சியாக நீதி நூல்கள் பயிற்றுவிக்கப் பெறுகின்றன. பல்வேறு நிலைகளில் தனிநூற் பதிப்பாக வெளிவந்த நீதி நூல்களுக்கிடையே பருவ இதழ்களிலும் நீதி நூல்கள் வெளிவந்திருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

அரசர்க்கும் மக்களுக்கும் உரியவான நீதிகளை எட்டு அதிகாரங்களில் விளக்கிக் கூறும் 'நீதிசாரக்கரு'வை 1952ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் வி.எஸ். கிருஷ்ணன் வெளியிட்டுள்ளார்.

ஔவையாரின் ஆத்திசூடியை ஒத்த கருத்துடைய, மொழிக்கு முதலில் வரும் வருக்க எழுத்துகளின் அடிப்படையில் அமைந்த ‘நீதி நூல்’ 1984-85ஆம் ஆண்டு ‘உயராய்வு’ இதழில் வெளிவந்துள்ளது. பல பதிப்புகளைக் கண்ட ச. வேதநாயகம் பிள்ளையின் நீதி நூலினின்றும் இது வேறானது.

மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் ஒவ்வொன்றினையும் முதல் எழுத்தாகக் கொண்டு அறக் கருத்துகளை உணர்த்துவதாக அமைந்த திருவண்ணநாதக் கவிராயரின் ‘நீதிமொழி’ 1904ஆம் ஆண்டு விவேகபாநு இதழில் வெளிவந்துள்ளது.

உ. இலக்கணம்

இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் கூறுவது மரபு. தமிழர்களின் மொழி, இலக்கியம் ஆகியவை பற்றிய எண்ணங்களைத் தொகுத்தும் வகுத்தும் கூறும் இலக்கண நூல் ‘தொல்காப்பியம்’ ஆகும். இதைத் தொடர்ந்து அவ்வக்கால இலக்கியத் தோற்றத்திற்கு ஒப்ப நிகண்டுகள், பாட்டியல் நூல்கள், இன்ன பிற இலக்கண நூல்கள் தோன்றலாயின. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி, புலமை ஆகிய ஆறு வகையான இலக்கணங்களுக்குப் பிறகும் காலத் தேவைக்கேற்பச் சில பொருண்மைகளுக்கும் இலக்கணங்கள் வகுக்கும் போக்கு தமிழுலகில் வளர்ந்துள்ளது. இவ்வகையில் தோன்றிய இலக்கண நூல்களைப் பருவ இதழ்கள் வெளியிட்டுச் சிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

எழுத்திலக்கணம் முதலாக அணியிலக்கணம் இறுதியாக உள்ள ஐந்திலக்கணங்களில் காணப்பெறும் பிரிவுகள் அனைத்தையும் விளக்கிக் கூறுவதாக அமைந்த ‘இலக்கண தீபம்’ என்பதை 1916ஆம் ஆண்டு ‘செந்தமிழ்’ இதழில் நாராயணையங்காரும், 1955ஆம் ஆண்டு ‘அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ்’ப் பகுதியில் வி.எஸ். கிருஷ்ணனும், 1981ஆம் ஆண்டு ‘புலமை’ இதழில் இ. சுந்தர மூர்த்தியும் வெளியிட்டுள்ளனர்.

பாதத்தைத் தொடக்கமாகவும் கேசத்தை இறுதியாகவும் கொண்டு உடலின் அங்க இலக்கணங்களைக் கூறும் திருவேங்கடையரின் 'பாதாதிகேச உவமானம்' (விருத்தம் 25) எனும் நூலை 1999ஆம் ஆண்டு 'அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ்'ப் பகுதியில் சு. சௌந்தரபாண்டியன் வெளியிட்டுள்ளார்.

இறையனார் களவியற் சூத்திரங்களை அடிப்படையாகக் கொண்டு அகப்பொருட்டுறைச் செய்திகளையும் பல அரிய நூல்கள் பற்றிப் பழைய உரையுடன் கூறும் 'களவியற்றுறை விளக்கம்' எனும் நூலை 1931ஆம் ஆண்டு 'கலாநிலையம்' இதழில் சம்பந்தன் வெளியிட்டுள்ளார்.

குருவின் குணங்கள், மாணாக்கரிடம் குருவும், குருவிடம் மாணாக்கரும் செயல்படும் விதிகள் குறித்த வண்ணச்சரபரின் 'குருமுதற் பாசுர நூல்' 1990ஆம் ஆண்டு 'மாதாந்திர அமுதம்' இதழில் வெளிவந்துள்ளது.

விண்ணவர்களின் வகையும், விண்ணின் வகையும் கூறும் தெய்வப்பெயர்த் தொகுதியையும், மண்களின் வகையும், மண்ணவர் வகையும் கூறும் இடப்பெயர்த் தொகுதியையும் கொண்ட 'கைலாச நிகண்டு சூளாமணி'யை 1939ஆம் ஆண்டு 'சக்தி' இதழில் எஸ். வையாபுரிப்பிள்ளை வெளியிட்டு உள்ளார்.

பொருள், குணம், கருமம், பொது, சிறப்பு, ஒற்றுமை, இன்மை ஆகிய ஏழு பொருள்களைப் பற்றியும் அவ்வவற்றின் வகைகளைப் பற்றியும் அமைந்த இலக்கணங்களை எடுத்துக்கூறும் 'தருக்க சூத்திரம்' எனும் நூலை 1902ஆம் ஆண்டு மற்றும் 1908ஆம் ஆண்டுகளில் ரா. இராகவையங்கார் வெளியிட்டுள்ளார்.

நூற்றெட்டு வகையான தாளப்பெயர்களையும் அவற்றிற்கான அமைப்பு முறைகளையும் எடுத்துக் கூறும் 'தாளவோத்து' எனும் நூலை 1923ஆம் ஆண்டு 'செந்தமிழ்ச் செல்வி' இதழில் எல். உலகநாத பிள்ளை வெளியிட்டுள்ளார்.

ஊ. சிற்றிலக்கியங்கள்

சிற்றிலக்கியங்கள் 96 என்ற கட்டுப்பாட்டிலிருந்து விலகி இன்று ஏறக்குறைய 350 சிற்றிலக்கிய வகைகள் தமிழிலக்கியத்தில் காணப்படுகின்றன. ந.வீ. செயராமன் 'சிற்றிலக்கியத் திறனாய்வு' எனும் நூலில் 331 வகையான சிற்றிலக்கியங்களைக் குறிப்பிடுகின்றார் (சிற்றிலக்கியத் திறனாய்வு, பக்.163-168). இச்சிற்றிலக்கியங்களை நான்கு வகையான பகுப்புக்குள் அடக்குவர். "சிற்றிலக்கியப் பெயர் அமைப்பில் உள்ள சொல்நிலையைக் கொண்டு பாகுபடுத்துதல், சிற்றிலக்கியங்களின் பொருண்மை நிலையைக் கொண்டு பாகுபடுத்துதல், சிற்றிலக்கிய வகைகளில் அமைந்த பாடல் எண்ணிக்கையைக் கொண்டு பாகுபடுத்துதல், சிற்றிலக்கியங்கள் அமைந்த யாப்பு வகையைக் கொண்டு பாகுபடுத்துதல்" (சிற்றிலக்கியத் திறனாய்வு, ப.82) எனத் திறனாய்வாளர் பகுத்து ஆராய்கின்றார். சிற்றிலக்கியப் பெயர்களில் அமைந்த சொல்முடிவுகள் சிற்றிலக்கியப் பாடுபொருண்மை, யாப்புவகை, பாடல் எண்ணிக்கை ஆகியவற்றுடன் கூடி அமைந்துள்ளன.

பருவ இதழ்களில் மட்டும் வெளிவந்துள்ள சுவடிப் பதிப்புச் சிற்றிலக்கியங்களில் பின்வரும் சொல்நிலை வகைப்பாடு அமைந்துள்ளதைக் காணமுடிகிறது. அகவல், அட்டகம், அட்டமங்கலம், அந்தாதி, அனுபூதி, ஆற்றுப்படை, ஆனந்தக் களிப்பு, உலா, ஊசல், ஊடல், கண்ணி, கலித்துறை, காதல், கும்மி, குறவஞ்சி, கோவை, சதகம், சிந்து, தாலாட்டு, திருவனந்தல், துதி, தூது, தோத்திரம், நலங்கு, நொண்டி நாடகம், பஞ்சகம், பதம், பதிகம், பத்து, பரணி, பள்ளு, பாட்டு, பிள்ளைத்தமிழ், மஞ்சரி, மடல், மாலை, வகுப்பு, வண்ணம், வாகனக்கவி, விண்ணப்பம், விருத்தம், வெண்பா போன்ற வகைகளில் இவை அமைகின்றன. பின்வரும் பகுதிகளில் நூற்பெயரினைத் தொடர்ந்து வரும் அடைப்புக் குறிக்குள் இடம்பெறும் எண் அந்நூலில் பாடல் எண்ணிக்கையைக் குறிப்பதாகும்.

அகவல்

"அகவல் என்பது ஆசிரி யம்மே"

(தொல்.பொருள்.செய்யுளியல், நூ.77)

எனும் தொல்காப்பியரின் கூற்றுப்படி ஆசிரியப்பா அகவல் இலக்கியத்திற்கு யாப்பு வகையாக அமைகிறது என்பது தெரிகின்றது. அகவல் தனி இலக்கியமாக அமைந்ததை மாணிக்கவாசகரின் கீர்த்தனைத் திருஅகவல், போற்றித் திருஅகவல் போன்றன காட்டுகின்றன. சங்க காலம் தொடங்கி இன்றுவரை பல்வேறு நிலைகளில் அகவல் இலக்கியம் வளர்ந்துள்ளது என்பது யாவரும் அறிந்த உண்மை. குறுகிய நிலையில் உருவான தனிப்பாடல்கள் தொடங்கி நீண்ட நெடும் பாடல்கள் வரை அகவல் இலக்கியங்கள் தோன்றியுள்ளன. வள்ளலாரின் அருட்பெருஞ்சோதி அகவல் 1596 அகவலடி களாலான நீண்ட அகவல் இலக்கியமாகத் திகழ்கின்றது.

திருமுறைகளில் இடம்பெற்றுள்ள பண்களின் வகைகளைக் கூறும் கொற்றவன்குடி உமாபதி சிவாசாரிய சுவாமிகளின் 'அகவல் பா' 1959ஆம் ஆண்டு 'குமரகுருபரன்' இதழில் வெளிவந்துள்ளது.

முப்பொருளுக்கும் தசகாரியங்களை விளக்கும் காவை அம்பலவாணத் தம்பிரானின் 'உருப சொரூப அகவல்' 1959ஆம் ஆண்டு ஞானசம்பந்தம் இதழில் வெளிவந்துள்ளது.

தில்லை சிவகாமியம்மையின் சிறப்பினைக் கூறும் 'சிவகாமியம்மன் பேரில் அகவல்' (297 அகவலடி) எனும் நூலை 1974ஆம் ஆண்டு சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழில் இராம. திலகம் வெளியிட்டுள்ளார்.

சுந்தரமூர்த்தி நாயனாரின் வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கமாகக் கூறும் கள்ளப்புலியூர் பர்வத சஞ்சீவி அய்யரின் இருவேறுபட்ட 'சுந்தரர் சரித்திரச் சுருக்க அகவல்' (139 + 231 அகவலடி) எனும் நூல்களை 1995ஆம் ஆண்டு சரஸ்வதி மகால் நூலகப் பருவ இதழில் ச. திலகம் வெளியிட்டுள்ளார்.

திருநாவுக்கரசு நாயனாரின் வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கிக் கூறும் கள்ளப்புலியூர் பர்வத சஞ்சீவி அய்யரின் 'திருநாவுக்கரசு சுவாமிகள் சரித்திரச் சுருக்க அகவல்' (102 அகவலடி) எனும் நூலை 1992ஆம் ஆண்டு சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழில் ச. திலகம் வெளியிட்டுள்ளார்.

பட்டினத்துப் பிள்ளையாரின் வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கிக் கூறும் 'பட்டினத்துப்பிள்ளை சரித்திரச் சுருக்க அகவல்' (196 அகவலடி) எனும் நூலை 1979ஆம் ஆண்டு சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழில் ச. திலகம் வெளியிட்டுள்ளார்.

தில்லை அம்பலவாணரின் மெய்க்கீர்த்திகளைப் புகழ்ந்து உரைக்கும் மாணிக்கவாசகரின் 'மாணிக்கவாசகர் திருமணி யகவல்' (241 அகவலடி) எனும் நூலை 1949ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் ந. வேங்கடாசார்யன் வெளியிட்டுள்ளார். இம்மாணிக்கவாசகர் திருவாசகம் யாத்த மாணிக்கவாசகரின் வேறானவர்.

அட்டகம்

அஷ்டகம் என்பதன் தமிழ் வடிவம் 'அட்டகம்' ஆகும். இது எட்டுப் பாடல்களைக் கொண்டு அமையும் இலக்கிய வகையைக் குறிக்கும். பெரும்பாலும் ஈறொப்புடைய எட்டுப் பாடல்களாலும் சிறுபான்மை ஒன்பது அல்லது பத்துப் பாடல்களாலும் இவ்விலக்கியம் அமைவதைக் காணமுடிகிறது. 16ஆம் நூற்றாண்டில் அதிவீரராம பாண்டியரின் காசி காண்டத்தின் 'சிவாட்டகம்' எட்டுப் பாடல்களால் அமைந்து இவ்விலக்கியத்தின் தோற்றுவாயாக அமைகிறது.

கணபதிப் பெருமானின் பெருமைகளைத் துதிப்பதாக அமைந்த எட்டுத் தோத்திரப் பாக்கள் கொண்ட 'விநாயகர் தோத்திராஷ்டகம்' எனும் நூலை 1990இல் மெய்கண்டார் இதழில் சீர்வளர்சீர் சுந்தரமூர்த்தித் தம்பிரான் சுவாமிகள் வெளியிட்டுள்ளார்.

அட்டமங்கலம்

பாட்டுடைத் தலைவனைக் காத்தல் வேண்டும் என்ற காப்புப் பொருண்மையைக் கருவாகக் கொண்டு எட்டு ஆசிரிய விருத்த யாப்பில் பாடப்பெறுவது 'அட்டமங்கலம்' ஆகும். மங்கலம் என்னும் சொல் முடிவு பெற்ற இலக்கிய வகைகளாக அட்டமங்கலம், பெருமங்கலம், நாண்மங்கலம், குடை மங்கலம் ஆகிய நான்கு மங்கல வகைகள் அமைந்து உள்ளன. இவை பாடல் எண்ணோடும் பொருண்மையோடும் இணைந்து மங்கலம் எனச் சொல் முடிவு பெற்றுள்ளதைக் காணமுடிகிறது. அட்டமங்கலம் பெரும்பான்மை எட்டுப் பாடல்களாலும் சிறுபான்மை ஒன்பது அல்லது பத்துப் பாடல்களாலும் அமைதல் உண்டு.

சிதம்பரம் சிவகாமசுந்தரி, காஞ்சி காமாட்சி, தஞ்சை ஆனந்தவல்லி, புள்ளிருக்குவேளூர் தையல்நாயகி ஆகிய இறைவிகளை முன்னிலைப்படுத்தித் தங்கள் மன்னனாகிய குருநாதபூபதியைக் காக்க வேண்டுவதாக அமைந்த 'குருநாத பூபதி பேரில் அட்டமங்கலம்' (10) எனும் நூலை 1984ஆம் ஆண்டு சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழில் ச. திலகம் வெளியிட்டுள்ளார்.

அந்தாதி

ஒரு செய்யுளின் இறுதி எழுத்தோ, அசையோ, சீரோ, அடியோ அடுத்த செய்யுளின் முதலாகத் தொடர்ந்து வருவது அந்தாதியின் இலக்கணம் ஆகும். 'அந்தாதி' என்ற இறுதிப் பெயரன்றிப் பொருள் வேற்றுமை, பா வகை, பாடல் தொகை முதலியவற்றால் வெவ்வேறு பெயர்களில் அமைந்த அந்தாதி அமைப்புடைய இலக்கிய வகைகளும் தமிழிலக்கியத்தில் பல உண்டு. அட்டமங்கலம், நவமணிமாலை, ஒருபா ஒருபஃது என்பன முறையே 8, 9, 10 பாடல்களையும், இரட்டைமணி மாலை, இணைமணிமாலை, இருபா இருபஃது என்பன இருபது பாடல்களையும், மும்மணிக்கோவை, மும்மணி மாலை, அலங்கார பஞ்சகம் என்பன முப்பது பாடல்களையும்,

நான்மணிமாலை என்பது நாற்பது பாடல்களையும், கலம்பகம், பன்மணிமாலை என்பன நூறு பாடல்களையும் கொண்ட அந்தாதி இலக்கியங்களாகும்.

'அந்தாதி' என்ற சொல் நிலையில் பதிற்றந்தாதி (10), பதிற்றுப்பத்தந்தாதி (100), நூற்றந்தாதி (100), வெண்பா அந்தாதி (100), கலித்துறையந்தாதி (100), ஒலியலந்தாதி (30), திரிபந்தாதி (100), யமகவந்தாதி (100), சிலேடையந்தாதி (100), நிரோட்டக யமகவந்தாதி (30), இதழகலந்தாதி (30), உயிரெழுத் தந்தாதி (100), ஓரெழுத்தந்தாதி (100), எட்டெட்டந்தாதி (64), ஏகபாதத்தந்தாதி (30), சதகத்தந்தாதி (110), மும்மணியந்தாதி (100) போன்றவை அமைந்துள்ளன. இவற்றினைப் பார்க்கும்போது இவ்வகையான அந்தாதிகளின் பா எண்ணிக்கை வேறுவேறாக அமைவதைப் பார்க்கமுடிகிறது. சில சமயம் ஒன்றிரண்டு பாடல்கள் கூடவும் குறையவும் செய்கின்றன. பருவ இதழ்களில் வெளிவந்த அந்தாதி இலக்கியங்களைச் சொல்நிலை அந்தாதி, இதழகல் அந்தாதி, பதிற்றுப்பத்தந்தாதி ஆகிய மூன்று நிலைக ளாகப் பகுத்துக் காணலாம்.

சொல்நிலை அந்தாதி

வேதபுரி எனும் திருவோத்தூரில் எழுந்தருளியிருக்கும் வேதபுரி ஈசுவரரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பெற்ற 'வேதபுரி ஈசுவர அந்தாதி'யை (104) அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் 1953ஆம் ஆண்டு மு. பசுபதி வெளியிட்டுள்ளார்.

காஞ்சி காமாட்சியின் சிறப்புகளை எண்வகைப் பாக்கள் முறையே மாறிமாறி விரவி வரப் பாடப்பெற்ற 'எட்டெட்டந்தாதி'யை (66) 1954ஆம் ஆண்டு அரசினர் கீழ்த் திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் மு. பசுபதி வெளியிட் டுள்ளார்.

கலைமகளின் பெருமைகளைக் கூறும் 'கலைமக ளந்தாதி'யை (26) 1931ஆம் ஆண்டு கலாநிலையம் இதழில் கி. வேங்கடசாமி வெளியிட்டுள்ளார்.

இறைவனை முன்னிலைப்படுத்தி உலக மக்களின் மனோநிலைகளைப் பலவாறாகக் கூறும் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் 'ஞானவந்தாதி' (32) 1990ஆம் ஆண்டு மாதாந்திர அமுதம் இதழில் வெளிவந்துள்ளது.

இராமாநுஜரின் வைபவத்தைக் கூறும் பிள்ளைப் பெருமாள் ஐயங்காரின் 'எதிராசரந்தாதி' (10) 1906ஆம் ஆண்டு செந்தமிழ் இதழில் மு. இராகவையங்காரும், 1929ஆம் ஆண்டு ஹரிசமய திவாகரன் இதழில் குறிப்புரையுடன் திருவாளர் ரெ. இராமையங்காரும் வெளியிட்டுள்ளனர்.

இதழகலந்தாதி

இதழ்கள் இணையும் படியுள்ள ப், ம, வ ஆகிய தமிழ் எழுத்துக்களில்லாமல் பாடப்பெற்ற அந்தாதி இலக்கியம் 'இதழகலந்தாதி' ஆகும். இது முப்பது கட்டளைக்கலித்துறை யாப்பினால் பாடப்பெறுவது. வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் தில்லை இதழகலந்தாதி, நெல்லை இதழக லந்தாதி, அரங்கத்திகழகலந்தாதி, ஏகாத்தாள் இதழகலந்தாதி, சென்னைக் கந்தரிதழகலந்தாதி என்பனவும், திருமாகறல் கார்த்திகேய முதலியாரின் கச்சி இதழகல் அந்தாதியும் இவ்விலக்கிய வகைக்குச் சான்றுகளாகத் திகழ்கின்றன.

திருநெல்வேலியில் கோயில் கொண்டு எழுந்தருளி யிருக்கும் சிவபெருமான் மீது பாடப்பெற்ற வண்ணச்சரபரின் 'நெல்லை இதழகலந்தாதி' 1985-86ஆம் ஆண்டு மாதாந்திர அமுதம் இதழில் வெளிவந்துள்ளது.

பதிற்றுப்பத்தந்தாதி

பத்துப் பாடற்கு ஒரு சந்தமாகப் பத்துச் சந்த பேதமுடைய நூறு பாடல்களில் அந்தாதியாகப் பாடப்பெறுவது 'பதிற்றுப்பத்தந்தாதி' ஆகும். பதிற்றுப்பத்து எனும் சொல், சேரமன்னர் வரலாறு கூறும் சங்க நூலைச் சுட்டி முன்பே ஆளப்பட்டபோதும், பத்துப் பத்துப் பாடல் ஒரு சந்தமாக நூறு பாடல் அமைதல் என்பது மாணிக்கவாசகரின்

திருச்சதகத்திலேயே தொடங்கப்பெற்றிருந்தாலும் தனி இலக்கியமாக 16ஆம் நூற்றாண்டின் 'மதுரைப் பதிற்றுப்பத் தந்தாதி'யில் தான் காணப்படுகிறது. இதைத் தொடர்ந்து தமிழிலக்கியத்தில் பல பதிற்றுப்பத்தந்தாதிகள் தோன்றி யுள்ளன.

திருச்சிராப்பள்ளியை அடுத்துள்ள வயலூர் முருகப் பெருமான் மீது பாடப்பெற்ற வயலூர் உபாத்தியாயர் சுந்தரம் பிள்ளையின் 'வயலூர் பதிற்றுப்பத்தந்தாதி'யை (115) 1978ஆம் ஆண்டு திருக்கோயில் இதழில் மு.கோ. இராமன் வெளியிட்டு உள்ளார்.

அனுபூதி

அனுபவ வெளியீடாக அமையும் இறைத்துதியே 'அனுபூதி' ஆகும். அனுபூதி வகையில் முதல் நூலாகக் கருதத் தக்கது அருணகிரிநாதரின் 'கந்தர் அனுபூதி' ஆகும். இது 51 கலிவிருத்தத்தாலானது. இவருக்குப் பிறகு இவ்விலக்கியம் பிற்காலப் புலவர்களால் பெரிதும் போற்றப்பெற்று வந்துள்ளது. கலிவிருத்தம் அன்றி வெண்பா மற்றும் ஆசிரிய விருத்தத்தா லான அனுபூதிகளும் உண்டு. சிவானந்த ஞானதேசிக சுவாமி களின் 'சற்குரு அனுபூதி மாலை' எனும் நூல் பெயர் நிலையில் சிறிது மாறுபடுவதோடு 125 வெண்பாவாலானதாகும். 'தியானானுபூதி' எனும் நூல் எண்சீர் ஆசிரிய விருத்தம் 36 கொண்டதாக விளங்குகின்றது.

இந்த நிலையில் வெண்பா யாப்பில் அமைந்த 'முருக ரனுபூதி'யை (103) 1962ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் கிருஷ்ணா சஞ்சீவி வெளியிட்டுள்ளார். இந்நூல் பழனி மலையில் கோயில் கொண்டிருக்கும் முருகப்பெருமான் மீது உமாபாரதியால் பாடப்பெற்றதாகும்.

திருவாசகம் படித்ததின் அனுபவமாக உருவான 'திருவாசக அனுபூதி' என்றொரு நூல் சீகாழித் தாண்டவராயர் உரையுடன் 1965-1969ஆம் ஆண்டு குமரகுருபரன் இதழ்ப்

பகுதிகளில் வெளிவந்துள்ளது. இறையனுபவத்தினைக் கொண்டு வெளிவரும் அனுபூதிகளுக்கு நடுவில் இறைநூல் தொடர்பான அனுபவத்தால் உருவான 'திருவாசக அனுபூதி' ஒரு புதுமையான இலக்கியப் போக்கிற்கு வழிவகுக்கின்றது எனலாம்.

ஆற்றுப்படை

பரிசில் கொண்டு மீளும் ஒருவன், இடைச்சுரத்து வறுமையுடன் வரும் பிறிதொருவனைக் கண்டு, தனக்குப் பரிசில் தந்த புரவலன் பால் வழிப்படுத்துவதே 'ஆற்றுப்படை' ஆகும். புறநானூறு மற்றும் பதிற்றுப்பத்தில் வரும் ஆற்றுப்படை சிறுபாடலாக அமையப் பத்துப்பாட்டில் வரும் ஆற்றுப்படை நெடும்பாடலாக அமைந்திருப்பதைக் காணலாம். ஆற்றுப்படுத்தப்படுவோராகக் கூத்தர், பாணர், பொருநர், விறலியர், புலவர் போன்றோரையே இலக்கண நூல்கள் குறிப்பிடுகின்றன. இவ்விலக்கியம் ஆசிரியத்தால் ஆக்கப் பெறுகின்றது.

சங்க காலத்திற்குப் பின் எழுந்த ஆற்றுப்படை நூல்கள் ஆற்றுப்படுத்தப்படுவோர் பற்றிய கோட்பாட்டிலும், பாட்டுடைத் தலைவர் பற்றிய எண்ணத்திலும் சில வேறுபாடுகள் காட்டுகின்றன. நக்கீரரின் திருமுருகாற்றுப்படை இம்மாற்றத்தின் தொடக்கமாகத் திகழ்கின்றது. இந்நிலையில் சான்றோர் ஆற்றுப்படை, இரவலராற்றுப்படை, இறையனா ராற்றுப்படை, மொழியாற்றுப்படை, ஊர் ஆற்றுப்படை, நெஞ்சாற்றுப்படை, தமிழ்மகள் ஆற்றுப்படை, மாணாக்கர் ஆற்றுப்படை, மன்பதை ஆற்றுப்படை, முருகாற்றுப்படை எனப் பரந்து விரிந்து செல்வதைக் காணமுடிகிறது. காலத்திற்கு ஏற்பப் பல்வகையாகப் பரந்தும் விரிந்தும் பெயர் மாறுபட்டும் அமைந்த இவ்விலக்கியம் யாப்பு நிலையில் ஆசிரியத்தையே கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

திருமுருகாற்றுப்படைக்குப் பிறகு முருகாற்றுப்படை நூல்கள் பல முகிழ்ந்துள்ளன. அணிமுருகாற்றுப்படை

(வெண்பா 1, அகவலடி 41), அருள் முருகாற்றுப்படை (வெண்பா 1, அகவலடி 69, வெண்பா 1), பொருள் முருகாற்றுப்படை (35 அகவலடி), வருமுருகாற்றுப்படை (வெண்பா 1, அகவலடி 64) போன்ற முருகாற்றுப்படைகள் அகவல் யாப்பில் அமைந்துள்ளன. இந்நான்கையும் சித்தாந்தம் இதழில் எம்.பி.எஸ். துரைசாமி முதலியார் 1937ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார். இவற்றில் வருமுருகாற்றுப்படை மட்டும் சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழிலும், சரஸ்வதிமகால் நூலகப் பதிப்பான 'முருகர் கதம்பம்' எனும் தொகுப்பு நூலிலும் 1963ஆம் ஆண்டு வெளிவந்திருக்கின்றது. ஏனைய மூன்று முருகாற்றுப்படைகளும் சித்தாந்தம் இதழிலேயே இருக்கின்றன.

ஆனந்தக்களிப்பு

மகிழ்ச்சியின் மிகுதியால் பாடப்பெறும் ஒருவகைப் பாடல் அமைப்பு 'ஆனந்தக்களிப்பு' ஆகும். திருவருளின் அனுபவத்தில் ஏற்படும் பெருமகிழ்ச்சியே இதன் பொருளாக அமைகின்றது. மாணிக்கவாசகரின் திருவம்மானைப் பாடலே பின்னாளில் 'ஆனந்தக்களிப்பு' என்றொரு புதுவகையாக உருவாகியுள்ளது. கடுவெளிச்சித்தர், தாயுமானவர், மாதவச் சிவஞான யோகிகள், தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர், சிவஞான முனிவர், இராமலிங்கம் பிள்ளை போன்றோர் 'ஆனந்தக்களிப்பு' யாத்தவர்களில் குறிப்பிடத் தக்கவர்களாவர்.

காழியம்பதியில் திருஞானசம்பந்தப் பெருமான் அவதாரம் செய்தது முதல் அவர்தம் வாழ்வில் நிகழ்த்திய திருவிளையாடல் வரை பலவற்றைக் கூறும் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் 'திருஞான சம்பந்த சுவாமிகள் ஆனந்தக்களிப்பு' (பல்லவி 1, தாழிசை 38) எனும் நூலை 1991ஆம் ஆண்டு மெய்கண்டார் இதழில் தி.சு. கோவிந்தசாமி பிள்ளை வெளியிட்டுள்ளார்.

மாணிக்கவாசக சுவாமிகளைத் துதிக்கின்ற முறையில் அமைந்த 'வாதவூரர் ஆனந்தக்களிப்பு' எனும் நூலை 1954ஆம்

ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் வி.எஸ். கிருஷ்ணன் வெளியிட்டுள்ளார்.

உலா

தலைவன் உலா வரும் தன்மையும் பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் ஆகிய ஏழு பருவ மகளிர்தம் காதலுரைகளும் அழகுற விரவிவரக் கலிவெண்பாவால் பாடப்பெறுவது 'உலா' ஆகும். பாட்டுடைத் தலைவன், ஊர், ஊர் மற்றும் பாட்டுடைத் தலைவன், தொகைப்பெயர் என்ற விதங்களில் உலாப்பெயர்கள் அமைந்து உள்ளன. இதன் வேறு பெயராகிய பவனி, பவனியுலா என்னும் பெயர்களாலும் சில நூல்கள் குறிக்கப்பெற்று இருக்கின்றன. தொடக்க காலத்தில் இறைவர், ஞானக்குரவர், அரசர் ஆகிய மூன்று நிலையினர் மீதும் உலா நூல்கள் பாடப்பெற்றுள்ளன. அதாவது, 'திருக்கயிலாய ஞான உலா' இறைவனைப் பற்றியும், 'ஆளுடைய பிள்ளையார் திருவுலா மாலை' இறையடியாரைப் பற்றியும், 'மூவருலா' சோழ வேந்தர்களைப் பற்றியும் எழுந்துள்ளன. இதன் பின்னர் தலைவர் பெயராலும், தலைவர் சார்ந்த தலப்பெயராலும், இரண்டின் இணைவாலும் உலா நூல்கள் பாடப்பெற்று வருகின்றன. ஏழு பருவ மகளிரோ, உலாவரும் தலைவனோ இன்றி அமைந்த உலா நூல்களும் உண்டு. இவ்வகையில் தத்துவதேசிக நாயனாரின் 'ஞான உலா'வும், வேதநாயக சாஸ்திரிகளின் 'ஞான உலா'வும் இடம்பெறும். ஆனால் பருவ இதழில் வெளிவந்த சங்கராசாரியரின் 'ஞான உலா' உலா இலக்கணத்தோடு அமையப்பெற்றிருப்பதைக் காணமுடிகிறது.

சங்கராசாரியாரின் 'ஞான உலா'வை (160) 1955ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் மு. பசுபதியும், 'தில்லையுலா'வை (244) 1937ஆம் ஆண்டு தமிழ்ப்பொழில் இதழில் எல். உலகநாத பிள்ளையும், மல்லைச் சிற்றம்பலக் கவிராயரின் 'மல்லைச் சிவந்தெழுந்த பல்லவராயன் பேரில் உலா'வை (623) 1975-76ஆம் ஆண்டு கல்வெட்டு இதழ்ப் பகுதிகளில் இரா. நாகசாமியும், சிதம்பரம் சிவப்பிரகாச

சுவாமிகளின் 'முப்பந்தொட்டியுலா'வை (216) 1934ஆம் ஆண்டு சித்தாந்தம் இதழிலும் வெளியிட்டுள்ளனர். இவற்றில் ஞான உலா, தில்லையுலா, முப்பந்தொட்டியுலா ஆகிய மூன்றும் சிவபெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பெற ஏனைய ஒன்று பல்லவக் குறுநில மன்னனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப் பெற்றுள்ளது.

ஊசல்

மகளிர் ஊஞ்சலாடிக்கொண்டே தலைவனின் பெருமைகளைப் பாடுவதாக அமைந்த இலக்கியமே 'ஊசல்' ஆகும். ஊஞ்சல், பொன்னூசல், ஊசல் திருநாமம், ஊஞ்சற் கவிதை போன்ற பெயர்களிலும் இது ஆளப்படுகின்றது. ஊசல்பாட்டு சிலப்பதிகாரத்திலேயே 'ஊசல்வரி' எனும் பெயரில் வாழ்த்துக்காதையில் மூன்று கலித்தாழிசைப் பாடல்களாக இடம்பெற்றுள்ளது (சிலப்பதிகாரம் - ஊசல்வரிப் பாடல்கள், 3:29:23-25). இவ்வூசல் கலம்பக உறுப்புகளில் ஒன்றாகவும், பெண்பாற் பிள்ளைத்தமிழ்ப் பருவங்களில் ஒன்றாகவும் அமைந்திருப்பதைக் காணலாம். சிலம்பில் கலித்தாழிசையாகவும், கலம்பக உறுப்பாக அமையும் போது கலித்தாழிசையுடன் ஆசிரிய விருத்தமும் சேர்ந்து இதன் யாப்பு நிலை அமைகிறது. ஒன்றின் உறுப்பாகவும், பருவமாகவும் இருந்த ஊசல் தனியோர் இலக்கியமாகப் பிற்காலத்தில் உருப்பெற்று வளர்ந்துள்ளது எனலாம். ஒன்பது கொச்சகக் கலிப்பாவினாலான மாணிக்கவாசகரின் 'திருப்பொன்னூசல்' காலத்தால் பழமையானதாகும்.

திருப்பரங்கிரியில் கோயில் கொண்டுள்ள முருகப் பெருமான் மீது பாடப்பெற்ற திருஎவ்வுளூர் இராமசாமி செட்டியாரின் 'திருப்பரங்கிரிக் குமரனூசல்' (12) 1901ஆம் ஆண்டு 'ஞானபோதினி' இதழில் வெளிவந்துள்ளது.

இராமாயணக்கதையின் சுருக்கத்தைத் திருப்புல்லாணிச் செகநாதரை முன்னிலைப்படுத்திக் கூறும் 'திருப்புல்லாணிச்

செகநாதர் பேரில் ஊசல்' (10) மற்றும் திருப்புல்லாணியில் கோயில் கொண்டுள்ள பதுமாசனித் தாயார் மீது பாடப்பெற்ற 'திருப்புல்லாணி பதுமாசனித் தாயார் பேரில் ஊசல்' (6) ஆகிய இவ்விரண்டு நூல்களை 1942ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழில் கி. இராமானுஜையங்காரும், நம்மாழ்வார் மீது பாடப்பெற்ற 'நம்மாழ்வார் ஊஞ்சற்கவிதை'யை (21) 1959ஆம் ஆண்டு 'அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ்'ப் பகுதியில் வி.எஸ். கிருஷ்ணனும் வெளியிட்டுள்ளனர்.

ஊடல்

ஊடலை, மருதநிலத்தின் உரிப்பொருளாகத் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. 'ஊடுதல் காமத்திற் கின்பம்' (திருக்குறள், பா.1330) எனத் திருக்குறள் ஊடுதலின் இனிமையைக் கூறுகின்றது. சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ள மருதநிலப் பாடல்கள் பல ஊடற்பாடலைத் தந்துள்ளன. சிலப்பதிகாரமும் 'ஊடற் கோலமோ டிருந்தோ னுவப்ப' (சிலப்பதிகாரம், 1:6:75) எனக் கோவலன் ஊடியதைக் குறிப்பிடுகின்றது. நாலாயிர திவ்விய பிரபந்தம் பெரிய திருமொழியிலும் (காதில் கடிப்பு 8:1-10), நம்மாழ்வார் திருவாய்மொழியிலும் (மின்னிடை மடவார் 2:1-11) ஊடல் பொருள் பொருந்திய பாசுரங்கள் இடம்பெற்றுள்ளன. இவ்வாறு ஓரிலக்கியத்திற்குள் இருந்த ஊடல் பிற்காலத்தில் தனியிலக்கியமாக வளர்ச்சியுற்றுள்ளது. திரிகூடராசப்பக் கவிராயர் யாத்த 'திருக்குற்றால ஊடற்பிரபந்தம்' இவ்வகைக்குத் தொடக்கமாக அமைகின்றது எனலாம்.

திருக்குற்றால நாதருக்கும் தேவிக்கும் நேர்ந்த ஊடலைக் கருப்பொருளாகக் கொண்டு அமைந்த திரிகூடராசப்பக் கவிராயரின் 'திருக்குற்றால ஊடற்பிரபந்தம்' (22) எனும் நூலை 1927ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழில் மே.சொ. சுப்பிரமணியக் கவிராயர் வெளியிட்டுள்ளார்.

மூவர் தேவாரத்தில் இடம்பெற்றுள்ள ஊடல் தொடர்பான பாடல்களின் தொகுப்பாக அமைந்த 'திருவூடல்'

(12) எனும் நூலை 1976ஆம் ஆண்டு சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழில் புலவர் இராம. திலகம் வெளியிட்டுள்ளார். க. அனந்தசுப்பையரின் 'திருவூடல்' ஒன்று உரையுடன் 1911ஆம் ஆண்டு வெளிவந்திருக்கின்றது. இவ்விரு திருவூடல்களும் வேறுவேறானவை.

கண்ணி

பல்லவி, அனுபல்லவி இன்றி கலிவெண்பா யாப்பில் பாடப்பெறும் ஒருவகை இசைப்பாட்டு 'கண்ணி' ஆகும். தொல்காப்பியம் முதல் இச்சொல்லின் ஆட்சி அமையினும் தாயுமானவரின் காலத்தில் தான் 'கண்ணி' இலக்கிய வகையாக மலர்ந்தது எனலாம். பராபரக்கண்ணி, பைங்கிளிக் கண்ணி, எந்நாட் கண்ணி, காண்பேனோ என் கண்ணி, ஆகாதோ என் கண்ணி, இல்லையோ என் கண்ணி, வேண்டாவோ என் கண்ணி, நல்லறிவே என் கண்ணி, பல்வகைக் கண்ணி ஆகிய ஒன்பது கண்ணிகளைத் தாயுமானவர் பாடியுள்ளார். இவரைத் தொடர்ந்து பலரின் கண்ணி இலக்கியங்கள் தமிழுலகில் வலம் வந்து கொண்டிருக்கின்றன.

உலக வாழ்க்கையில் அகப்பட்டு உழலும் அனைவரும் இறைவனை அடைந்து உய்யும் வகையினை வேதாந்தக் கருத்துக்களால் விளக்கும் 'எக்காலக் கண்ணி'யை (201) 1953ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் வி.எஸ். கிருஷ்ணன் வெளியிட்டுள்ளார். 1904, 1913ஆம் ஆண்டுகளில் வெளிவந்த செ. நாராயணசாமி முதலியாரின் 'எக்காலக் கண்ணி'யினின்றும் (158), மஸ்தான் சாகிபுவின் 'எக்காலக் கண்ணி'யினின்றும் இது வேறானது.

கிளியை முன்னிலைப்படுத்திக் கலிவெண்பா யாப்பில் பாடப்பெறுவது 'கிளிப்பாடல்' ஆகும். இது கிளிக்கண்ணியை ஒத்தது எனலாம். தாயுமானவரின் 'பைங்கிளிக் கண்ணி'யின் செல்வாக்கால் 'கிளிக்கண்ணி' நூல்கள் தோன்றலாயின. சுப்பிரமணியர் பேரில் கிளிக்கண்ணி 47 பாடல்களில் முருகனிடம் பெற்ற இன்பத்தைக் கிளியை

விளித்துக்கூறும் முறையில் தருகின்றது. கிளியை முன்னிலைப்படுத்திப் பாடப்பெற்ற 'கிளிக்கண்ணி'யைக் கிளிப்பாடல் என்றும் வழங்குவர் (தமிழ் இலக்கிய வகையும் வடிவம், ப.562) என்பதால் கிளிப்பாடல் கண்ணியின் வகையாகக் கருதப்படு கின்றது.

மதுரை மாநகரில் கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கும் மீனாட்சியம்மன் பேரிலான 'மீனாட்சியம்மன் கிளிப்பாடல்' (40) எனும் நூலை 1965ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் முத்தம்மாள் கௌரிநாதன் வெளியிட்டுள்ளார்.

கலித்துறை

கலிப்பாவின் இனம் அல்லது கட்டளைக்கலித்துறை யாப்பில் அமையும் இலக்கிய வகை 'கலித்துறை' ஆகும். "பாவினம் பற்றிய எண்ணம் ஏற்பட்ட போது கலிப்பாவின் மூவினங்களில் ஒன்றாக இது உருவாயிற்று" (தமிழ் இலக்கிய வகையும் வடிவம், ப.563) என்பர். சீகாழிச் சிற்றம்பலநாடிகள் கலித்துறை (15ஆம் நூற்றாண்டு) தொடங்கி இவ்விலக்கியம் வளர்ச்சியுறத் தொடங்கியது எனலாம்.

இராமநாதபுரம் மாவட்டம் - திருப்பத்தூருக்கு அருகே யுள்ள குன்றக்குடியில் கோயில் கொண்டுள்ள முருகப் பெருமானின் வீரதீரச் செயல்களை விளக்கும் 'பழனியாண்டவர் கலித்துறை' (100)யை 1963ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் த. பெரியாண்டவன் வெளியிட்டுள்ளார்.

முத்தியடைய ஞானம் ஒன்றே எனக் கூறும் மாணிக்க வாசகரின் 'மாணிக்கவாசகர் ஞானக்கலித்துறை'யை (61) 1958ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் மு. பசுபதி வெளியிட்டுள்ளார்.

காதல்

"கொண்டமயல் ஈரடிக்கண் ணியில்இசைகா தலுக்கே"
(சுவாமிநாதம், நூ.171)

எனும் சுவாமிநாத இலக்கணப்படி கண்ணி வகை யாப்பில் (கலிவெண்பா) காதல் இலக்கியம் அமைக்கப்பெறுகின்றது. சங்கப் பாடல்களில் குறிஞ்சித் திணைப் பாடல்கள் காதலை மையமாகக் கொண்ட அகப்பொருட் பாடல்களாகத் திகழ்கின்றன. பிற்காலத்தில் கோவை இலக்கியங்களும் அகப்பொருளை மையமாகக் கொண்டே எழுந்துள்ளன. என்றாலும் தலைவன் - தலைவி இணைவைக் காதல் இலக்கியம் விவரிக்கின்றது எனலாம். அதாவது, இயற்கைப் புணர்ச்சி நிகழ்ச்சியைப் பெருக்கியே பின்னாளில் கலிவெண்பாவினால் 'காதல்' என்னும் பெயரில் தனி இலக்கியம் பிறந்தது எனலாம். இது உலா இலக்கியத்தின் வளர்ச்சி நிலையைக் காட்டுகின்றது என்றும் கூறலாம். 'உலா இலக்கியம்' பாட்டுடைத் தலைவன் பவனி வருவதையும் ஏழு பருவ மங்கையர் காதல் கொள்வதையும் கூற 'காதல் இலக்கியம்' பாட்டுடைத் தலைவன் உலா வருவதையும் அவனைக் கண்ட தலைவி (இங்கு ஏழு பருவ மங்கையர் இல்லை) காதல் வயப்பட்டு இருவரும் கூடிப்பிரிந்த நிலையினையும் விளக்குகின்றது.

விராலிமலையில் வீற்றிருக்கும் முருகப்பெருமான் உலா வரும்போது அவன்மீது காதல்கொண்ட காமரசமாலை முருகப்பெருமானுடன் கூடிப்பிரிந்த நிலையினை விளக்கும் 'விராலிமலை வேலவர் காதல்' (442) எனும் நூலை 1964ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் முத்தம்மாள் கௌரிநாதன் வெளியிட்டுள்ளார்.

கும்மி

மகளிர் கை கொட்டிப் பாடியாடும் பண்டைய விளையாட்டு 'கும்மி' எனப்படும். இதைக் 'கொம்பி' என்றும் வழங்குவர். பழந்தமிழ் இலக்கியங்களில் குறிக்கப்பெறும் குரவைக்கூத்தை ஒத்ததே இக்கும்மியாகும். "கூற்றம் புறங்கொம்மை கொட்டினாரில்" (பழமொழி நானூறு, பா.291) என்று கொம்மை குறித்துக் கையாளப்பெற்றுள்ளதை அறியலாம். "குதித்தாடுதல் எனப் பொருள்படும் கும்மாளம் என்ற சொல்லிலிருந்து கும்மி வந்தது என்றும், கை கொட்டுதல்

எனும் பொருள் தரும் கும்முதலே கும்மிக்கு அடிப்படை என்றும், குழுமி ஆடல் கும்மி ஆயிற்று என்றும் பலவாறு எண்ணுவர். இவ் ஆடல் கொம்மாய், நன்னன்னா கொட்டுதல், தட்டியாங் கொட்டுதல், கொண்டான் கொட்டுதல் எனவும், கும்மியடித்தல், கும்மியாடுதல், கும்மி கொட்டுதல் எனவும் பலவாறு மக்களிடையே வழங்கப்படுவதாகக் கூறுவர்" (தமிழ் இலக்கிய வகையும் வடிவும், ப.495). கும்மியடியுங்கடி, ஞானப்பெண்ணே, பாடியடியுங்கடி, கொம்மியடி, கொம்மி யடியுங்கடி போன்ற தொடர்கள் பல்லவியாகவும், மகுட மாகவும் அமைந்து வரும். தெய்வங்களின் சிறப்புக்களைக் கூறும் சமயக் கும்மிகளும், புராணக் கதைகளைக் கூறும் புராணக் கும்மிகளும், சித்த மருத்துவம் பற்றிக் கூறும் மருத்துவக் கும்மிகளும் இவற்றின் வளர்ச்சி நிலையைக் காட்டுகின்றன. மேலும் வழிநடைக்கும்மி, நன்னெறிக்கும்மி, விலைமாதர் கும்மி, தென்னைமரக்கும்மி, காவேரியம்மன் கும்மி, ரெயில்வே ஸ்டேசன் கடைக்கால் கும்மி போன்ற கும்மிகளைக் காணும் போது எப்பொருளிலும் இவ்வகைப்பாட்டு அமையலாம் என்பது புலனாகின்றது.

பார்வதிதேவியின் நந்தவனக் காவலாளியாக இருந்த காத்தவராயன் இருவேறு சாதிப்பெண்களை மணந்து கொண்டதன் விளைவைக் காட்டும் பெரியசாமிக் கவியின் 'காத்தவராயன் சுவாமிபேரில் கும்மிப்பாடல்' (189) எனும் நூலை 1994ஆம் ஆண்டு சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழில் ச. திலகம் வெளியிட்டுள்ளார். 1885ஆம் ஆண்டு இருசப்ப முதலியார் பதிப்பித்த புகழேந்திப் புலவரின் 'காத்தவராய சுவாமி கும்மி'யினின்றும் இது வேறானது.

மகாபாரதப் போரில் அருச்சுனனுக்குக் கண்ணன் உபதேசம் செய்த பகுதியைக் 'கும்மி' யாப்பில் அமைந்த 'பகவத்கீதைக்கும்மி' (61) 1901-03ஆம் ஆண்டுகளில் முதல் அத்தியாயம் மட்டும் விவேகபாநு இதழில் வி.பி. சுப்பிரமணிய முதலியார் உரையுடன் வெளிவந்துள்ளது.

உயிர்கள் யோக நிலை அடைந்து உய்வதற்கான உண்மைகளை உணர்த்தும் பாலையானந்தரின் ‘பாலையானந்தர் ஞானக்கும்மி’யை (186) 1962ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் த. பெரியாண்டவன் வெளியிட்டுள்ளார்.

குறவஞ்சி

கலம்பக உறுப்புக்களில் ஒன்றான ‘குறம்’ என்பதன் வளர்நிலையே ‘குறவஞ்சி’ ஆகும். தலைவிக்குக் குறத்தி தலைவன் அமைவான் எனக் குறி கூறுவதே இவ்விலக்கியத்தின் பொருண்மையாக அமைகிறது. குறி சொல்லும் நிலையைத் தொல்காப்பியமும் (தொல். களவியல், நூ.24), குறுந்தொகையும் (குறுந்தொகை, பா.23) சுட்டிச் செல்கின்றன. நவநீதப் பாட்டியலின் மிகைச் செய்யுள்கள் சிலவற்றில் குறவஞ்சிக்கான இலக்கணம் அமைகின்றது. முத்தமிழும் விரவிய அமைப்புடன் குறவஞ்சி இலக்கியம் அமைந்துள்ளது. இறைவனையோ, அரசனையோ பாடற் தலைவனாகக் கொண்டு இவ்விலக்கியம் பாடப்பெறுவதியல்பு.

இரிஷிவிந்தம் எனும் தலத்தில் கோயில் கொண்டெழுந் தருளியுள்ள அர்த்தநாரீசுவரரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு இராசப்ப உபாத்தியாயரின் ‘இரிஷிவிந்தக் குறவஞ்சி’ அமைந்துள்ளது. இந்நூல் 1965 மற்றும் 1968ஆம் ஆண்டுகளில் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் ஆர்.கே. பார்த்தசாரதி மற்றும் பூ. சுப்பிரமணியம் ஆகியோரால் வெளியிடப்பெற்றுள்ளது.

கோவை

கோவை என்பது கோக்கை, வரிசை, கோத்தவடம், ஏற்பாடு, அகப்பொருட் கோவையாகிய இலக்கியம், ஒரு பழைய பொன்னாணயம், கொடிவகை, படர் கொடிவகை போன்ற பல பொருள்களைக் குறிக்கும் சொல்லாக அமைகிறது. தலைவனும் தலைவியும் தாமே கண்டும் தோழியின் துணைகொண்டும் காதலின்பம் துய்க்கும் களவொழுக்கம்

முதல், ஊரறிய மணந்து விருந்தோம்பி மகப்பேறு பெற்று வாழும் கற்பொழுக்கம் வரை ஒன்றன்பின் ஒன்றாக நிரல்பெற எல்லா நிகழ்ச்சிகளையும் ஒருங்கு கூறும் அமைப்பே கோவை இலக்கியமாகும். அகப்பொருளில் நானூறு கலித்துறைச் செய்யுள் கோவை இலக்கியத்துள் இடம்பெறுதல் இயல்பு என்றாலும் பெரும்பான்மையான கோவை இலக்கியங்கள் நானூறு செய்யுள்களுக்கும் மேல் செல்கின்றன. ஒரு துறைக்கு ஒரு பாடல் எனும் அமைப்பு விரிந்து இரண்டு, மூன்று என அமைதலும் உண்டு. ஒரு துறையையே பொருண்மையாகக் கொண்ட கோவை இலக்கியமும் உண்டு. 'நாணிக்கண் புதைத்தல்' என்னும் துறை பற்றி எழுந்த 'ஒருதுறைக் கோவை'யும் தமிழ் இலக்கியத்தில் உள்ளது. இரட்டைமணிக் கோவை, மும்மணிக்கோவை, நான்மணிக்கோவை, வருக்கக் கோவை போன்றனவும் இவ்விலக்கியத்தின் அடிப்படையில் தோன்றியனவே ஆகும்.

கோவை இலக்கியத்திற்குரிய இலக்கணம் சிறிதும் இல்லாமல் பெயர் அளவில் மட்டும் கோவை பெற்ற இலக்கியங்களையும் தமிழிலக்கிய உலகில் காணமுடிகிறது. கோக்கை, வரிசை என்ற அடிப்படையில் 'கோவை' என்பது பயன்படுத்தப்பெற்றுள்ளது. நாயன்மார் தேவாரம் பாடிய தலங்களையும், ஆழ்வார் மங்களாசாசனம் செய்தருளிய தலங்களையும் முறையாகத்தொகுத்துக் கூறுவதைத் 'திருப்பதிக் கோவை' என்பர். இவற்றை முறையே சைவ திருப்பதிக் கோவை, வைணவ திருப்பதிக்கோவை என இரண்டாகப் பிரிப்பர். திருமால் கோயில் கொண்டருளும் திருவரங்கம் முதலிய 108 வைணவத் திருப்பதிகளைக் கோவைப்படுத்திக் கூறும் 'திருப்பதிக்கோவை'யை (40) 1947ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழில் ரெ. இராமையங்கார் வெளியிட்டுள்ளார். இதேபோல் கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியாரின் 'திருப்பதிக்கோவை'யை 1899ஆம் ஆண்டு க. கிருஷ்ணசாமி உபாத்தியாயர் வெளியிட்டுள்ளார். இது தேவாரம் பாடல் பெற்ற தலங்கள் குறித்தது ஆகும்.

பொன்னின் மாற்று அறிவதற்குரிய உரையாணியின் வடிவும், பொன்னுரைக்கும் கட்டளைக் கல்லின் குணமும் உரைமெழுகின் பதமும் உரைக்கும் 'பொன்னாணிக் கோவை' யை (20) 1963ஆம் ஆண்டு 'செந்தமிழ்ச்செல்வி' இதழில் வே.ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் வெளியிட்டுள்ளார்.

'சிவபிரானைக் காண்பதெப்போ' என்ற சொற்பொருள் ஒவ்வொரு பாடலின் ஈற்றிலும் அமையுமாறு பாடப்பெற்ற 'மாணிக்கப் பவழக்கோவை'யை (12) 1959ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச்சுவடிகள் நூலகப் பருவ இதழில் மு. பசுபதி வெளியிட் டுள்ளார்.

மேற்கூறிய இம்மூன்று கோவைகளும் பெயரில் கோவையைப் பெற்றிருந்தாலும் அகப்பொருட் துறைக்கான எந்தவோர் இலக்கணமும் பெறாமல் சொல்நிலையை மட்டும் பெற்றுள்ளது விளங்கும்.

பழனிமலையில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் முருகப்பெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட 'பழனிக்கோவை'யை (400) 1937-38ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழ்ப் பகுதிகளில் கி. இராமானுஜையங்கார் வெளியிட்டு உள்ளார். இது கோவை இலக்கியத்திற்குரிய இலக்கணங் களுடன் அமைந்துள்ள நூலாகத் திகழ்கின்றது.

மும்மணிக்கோவை

ஆசிரியமும் வெண்பாவும் கலித்துறையும் முறையே மாறிவர அந்தாதித் தொடையாகப் பாடப்படும் முப்பது பாடல்கள் கொண்டது 'மும்மணிக்கோவை' ஆகும். சேரமான் பெருமான் நாயனாரின் 'திருவாரூர் மும்மணிக் கோவை' இவ்வகையின் தோற்றுவாயாக அமைகின்றது. ஆசிரியம் வெண்பா கலித்துறை என்ற முறையை மாற்றி வெண்பா ஆசிரியம் கலித்துறை எனச் சில நூல்களில் அமைந்திருப்பதும் உண்டு. முப்பது என்ற பாடல் எண்ணிக்கை சில நூல்களில் குறைபட்டும் காணப்படுகிறது. நக்கீரதேவ நாயனாரின் திருவலஞ்சுழி மும்மணிக்கோவை 15

பாடல்களையும், பட்டினத்துப் பிள்ளையின் திருக்கழுமல மும்மணிக்கோவை 12 பாடல்களையும் பெற்றுள்ளதைக் காணலாம்.

குமாரபுரியில் கோயில் கொண்டுள்ள முருகப் பெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப் பெற்ற வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் 'குமாரபுரி முருகன் மும்மணிக்கோவை'யை (32) 1957ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் மு. பசுபதி வெளியிட்டுள்ளார்.

சதகம்

அகப்பொருள் தொடர்பாகவோ புறப்பொருள் தொடர்பாகவோ நூறு பாடல்கள் கொண்ட நூல் 'சதகம்' ஆகும். ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம், கட்டளைக் கலித்துறை முதலிய பல்வேறு யாப்புகளில் இந்நூல் பாடப்பெறும். நூறு பாடல் எனும் வரையறை ஒவ்வொரு நூல்களில் சிறிது மிக்கும் குறைந்தும் அமைதல் உண்டு. திருவாசகத்தில் இடம் பெற்றிருக்கும் 'திருச்சதகம்' சதக இலக்கியத்திற்கு முன்னோடி யாகத் திகழ்கின்றது. இது தொடங்கிச் சதக இலக்கியங்கள் பலவாகத் தோன்றியுள்ளன. நூறு என்ற பாடலெண் ணிக்கையில் மாற்றமில்லாத சதக இலக்கியத்திற்குள் அரைச் சதத்திற்கும் குறைவான பாடல் எண்ணிக்கையிலும் சதக இலக்கியங்கள் பாடப்பெற்றிருக்கின்றன என்பதும் தெரியவரு கின்றது. சின்னசர்க்கரைப் புலவரின் 'மிழலைச் சதகம்' மட்டும் 45 பாடல்களால் பாடப் பெற்றிருக்கின்றது. இதன் முதற்பாடல்,

"பிதிராத கங்கைகுலஞ் சேர்மிழலைப் பெரும்பதிவாழ்
அதிரூபர் யோகரவர் மேற்சதகமுண் டாக்குதற்கே
கதிதேருமின் பக்குருந்தீசர் பாலெந்தக் காலமுமே
முதிராத பெய்பிளங்கொங்கை யோகாம்பிகை முன்னிற்பளே"

என்றும், இறுதிப்பாடல் (45) சிறப்புப் பாயிரமாக,

"தருதஞ்சை வாழும்ப்ரதாப சிங்கேந்த்ர தருமன்மெச்ச
வருமணிமா முத்திரை வேங்கடாசல மால்சம்ப்ரதி
நரதுங்க மாணிக்க வாசகவேள் சபைநாளையிலே
யுரைசெய் மிழலைச் சதகத்தைச் சக்கரை யோதினனே"

என்றும் அமைக்கப்பெற்றுள்ளதைக் காணும்போது இந்நூல் 45 பாடல்களை மட்டும் பெற்றுள்ளது விளங்குகின்றது. இந்நூல் செந்தமிழ் இதழில் 1925ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது.

சிந்து

அளவொத்த ஈரடிச் செய்யுளாகவும், ஈரடி கொள்ளாதும் இசைப்பாடலாகவும் அமைவது 'சிந்து' ஆகும். தொல்காப்பியம் இச்சொல்லை ஏழு முதல் ஒன்பது வரை எழுத்து வரும் நாற்சீரடியைக் குறிக்கின்றது. சிந்து, சிந்தடி, சிந்தியல் வெண்பா போன்ற சொல்லாக்கங்களில் 'சிந்து' என்பது இடம்பெற்றாலும் தனியாப்பு வகையாகச் சித்தர் காலத்தில் இருந்துதான் உருவாகியது என்பர். சிந்து யாப்பில் வந்த முதல் நல் திருவாழி பரப்பினான் சுத்தனின் 'சிந்துப் பிரபந்தம்' என்று கூறுகின்றார் அருணாசலம். இதனைத் தொடர்ந்து பல சிந்து இலக்கியங்கள் பல்வேறு நிலைகளில் யாக்கப் பெற்றிருக் கின்றன. ஓரடிச்சிந்து, காவடிச்சிந்து, வழிநடைச்சிந்து, வளையற்சிந்து, நொண்டிச் சிந்து, திருப்புகழ்ச்சிந்து, கப்பல் சிந்து, கும்மிச்சிந்து, சிங்காரச் சிந்து, ஞானச்சிந்து, தங்கச்சிந்து, திருப்பணிச்சிந்து, மிட்டாய்ச் சிந்து எனப் பொருள் - மெட்டு இவைக்கேற்ப இவ்விலக்கிய வகை பலவாகப் பிரிந்து பரந்து உள்ளது எனலாம்.

'சிந்து' என்பது ஒருவகைப் பாடல் வகை. இசையுடன் கலந்து பாடுதற்குத் தக்க முறையில் அமைந்தது. பல்லவி, அநுபல்லவி, மூன்று கண்ணிகள் அடங்கிய சரணம் ஆக ஐந்து உறுப்புகளைக் கொண்டு சிந்துப்பாடல்கள் பாடப்பெறும். இவற்றுள் பல்லவியும், அநுபல்லவியும் இன்றிச் சரணங்களுக் குரிய கண்ணிகளை மட்டும் பெற்றுவரும் பாடல்களும் சிந்து என்றே பெயர் பெற்றுள்ளன. இதில் பல வகையான

இசையமைதிகளும் சந்தங்களும் கலந்துவரும். ஆதலால் சிந்துப் பாடல்களைப் பண்ணுடைக் கவிதை என்றும் குறிப்பிடு கின்றனர்.

கண்டி - கதிர்காமத்தில் கோயில் கொண்டுள்ள முருகப் பெருமானின் சிறப்பையும், அவனுடைய ஆடிவேல் திருவிழாச் சிறப்பையும் கூறும் 'கதிர்காமச்சிந்து'வை (31) 1965ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் பூ. சுப்பிரமணியம் வெளியிட்டுள்ளார்.

அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான சிறுத் தொண்டநாயனாரின் வரலாற்றைக் கூறும் 'சிறுத்தொண்டன் சிந்து'வை (389) 1962ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் த. பெரியாண்டவன் வெளியிட்டுள்ளார்.

திருப்புல்லாணியில் கோயில் கொண்டுள்ள செகநாதரைப் பாட்டுடைத் தலைவராகவும் குப்பையர் என்பவருடைய மகனைக் கிளவித் தலைவனாகவும் கொண்டு தலைவனைப் பிரிந்து விரகமிக்க ஒரு தலைவி கூற்றாக அமைந்த 'திருப்புல் லாணிச் செகநாதர் பேரில் சிந்து'வை (16) 1942ஆம் ஆண்டு செந்தமிழ் இதழில் கி. இராமானுஜையங்கார் வெளியிட்டு உள்ளார்.

தாலாட்டு

நாட்டுப்பாடலாக, மக்கள் வாழ்வின் குழந்தைப் பருவத்தையும் தாய்மைப் பேற்றினையும் இணைக்கும் பாலமாக அமைவது 'தாலாட்டு' ஆகும். இது குழந்தைகளை உறங்கச் செய்யும் ஒருவகைப் பாட்டு, தாலேலோ, ஆராரோ போன்ற ஒலித்தொடர்களைப் பெற்றும் பெறாதும் வருத லுண்டு. கலித்தாழிசை அல்லது விருத்தத்தாலான யாப்பைக் கொண்டு அமைக்கப்பெறுவது. பிள்ளைத்தமிழ்ப் பருவம் பத்தில் 'தாலாட்டுப் பருவ'மும் ஒன்றாக அமைந்து இருப்பதைக் காணலாம். இத்தாலாட்டு பின்னாளில் தனித்ததொரு இலக்கிய வகையாகவே தோன்றலாயிற்று. குழந்தையைத் தாலாட்டித்

தூங்க வைப்பதற்காகத் தோன்றிய இத்தாலாட்டு பின்னாளில் இறைவனையும் தலைமை மாந்தர்களையும் குழந்தைகளாகப் பாவித்துப் பாடுவதாக அமையத் தொடங்கித் தனி இலக்கிய மாக உருவாயிற்று.

தணிகையம்பதியில் கோயில் கொண்டிருக்கும் முருகப் பெருமானின் பிறப்பு, அங்க அழகுகள், திருவிளையாடல்கள், வீரதீரச் செயல்கள், காதல் தன்மைகள் ஆகியவற்றைத் தாலாட்டு முறையில் கூறும் 'திருத்தணிகை முருகன் தாலாட்டு' (66) எனும் நூலை 1961ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் கிருஷ்ணா சஞ்சீவி வெளியிட் டுள்ளார்.

திருப்பரங்கிரியில் கோயில் கொண்டுள்ள குமரப் பெருமானின் சிறப்பியல்புகளையும் அவனைப் போற்றும் நூல் களையும் பற்றிக் கூறும் திருஎவ்வுளூர் இராமசாமி செட்டி யாரின் 'திருப்பரங்கிரிக் குமரன் தாலாட்டு' (50) 1900ஆம் ஆண்டு ஞானபோதினி இதழில் வெளிவந்துள்ளது.

திருப்புல்லாணியில் கோயில் கொண்டுள்ள செகநாதர் - பதுமாசனித் தாயார் ஆகியோரின் மணக்கோல நிகழ்ச்சியில் நடைபெறும் தாலாட்டைக் கூறும் செந்தமிழ் வீரராகவனின் 'திருப்புல்லாணி எம்பெருமான் மீது பாடிய தாலாட்டு' (21) எனும் நூலை 1961ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் மு. பசுபதி வெளியிட்டுள்ளார்.

திருவனந்தல்

'கடவுளின் திருப்பள்ளி யெழுச்சிப் பூசனை' என்று பொருள்படும் 'திருவனந்தல்' ஓர் இலக்கிய வகையாக உருப் பெற்றிருக்கின்றது. எண்சீர் ஆசிரியவிருத்தம், தாழிசை யாப்பால் இவ்விலக்கியம் பாடப்பெறுகின்றது. சங்க இலக்கியம் முதலாகத் துயிலெழுப்பிப் பாடும் முறை வழக்கத்தி லிருந்து வருகின்றது. இம்முறையில் துயிலெடைநிலை, திருப்பள்ளியெழுச்சி, திருவனந்தல் ஆகியன சிறப்பிடம் பெற்றுள்ளன.

நம்மாழ்வார் துயில்கொள்வதின் நிமித்தம், தோழியர்கள் கூடிநின்று பாடும் முறையில் அமைந்த 'ஆழ்வார் திருவனந்தல்' எனும் நூலை 1961ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் த. கிருட்டிண மூர்த்தி வெளியிட்டு உள்ளார்.

திருப்புல்லாணி எம்பெருமானைத் துயிலெழுப்புவதாக அமைந்த செந்தமிழ் வீரராகவனின் 'திருப்புல்லாணி எம்பெருமான் மீது பாடிய திருவனந்தல்' (11) எனும் நூலை 1961ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் மு. பசுபதி வெளியிட்டுள்ளார்.

துதி

இறைவனைத் துதித்துப் போற்றும் இலக்கிய வகை 'துதி' அல்லது 'தோத்திரம்' எனப்படும். இறைவனின் புகழ் பாடி அவனை ஏற்றி மொழியும் நிலையில் பல பக்திப் பாடல் களும் நூல்களும் 'துதி', 'தோத்திரம்' எனச் சொல் நிலையில் பெயர் பெற்று விளங்குகின்றன. பல்வேறு வகையான யாப்பு அமைப்புகளை இவ்விலக்கிய வகை பெற்றிருக்கின்றது. பெரும்பாலான நூல்கள் விருத்தப் பாடல்களிலேயே அமை கின்றன. இத்துதி நூல்கள் இறைவர் மீதும் இறையடியவர் மீதும் பாடப்பெறுவதுண்டு.

துதி என்னும் சொல்நிலையில், திருவாவடுதுறை யாதீனமாக விளங்கிய சீர்வளர்சீர் நெல்லைக் குமாரசாமி சுவாமிகள் மீது பாடப்பெற்ற 'நெல்லைக் குமரன் துதி' (13) எனும் நூலை 1965ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் பூ. சுப்பிரமணியம் வெளியிட்டுள்ளார்.

தோத்திரம் என்னும் சொல்நிலையில், சீகாழியம்பதியில் கோயில் கொண்டுள்ள சட்டைநாதரின் சிறப்பியல்புகளைக் கூறும் 'சட்டைநாதர் தோத்திரம்' (28) எனும் நூலை 1975ஆம் ஆண்டு சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழில் இராம. திலகம் வெளியிட்டுள்ளார்.

திருவையாற்றில் கோயில் கொண்டுள்ள பஞ்சநதீசுரர் மீது பாடப்பெற்ற 'பஞ்சநதீசுரர் தோத்திரம்' (2) 1966ஆம் ஆண்டு சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழில் வெளிவந்து உள்ளது.

பழனிமலை ஆறுமுகப் பெருமானின் திருநீற்றுப் பெருமையினை விளக்கும் 'விபூதி தோத்திரம்' (10) எனும் நூலை 1984ஆம் ஆண்டு சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழில் ச. திலகம் வெளியிட்டுள்ளார்.

தூது

தலைவன், தலைவி காதலைப் பாணன் முதலிய உயர்திணையோடும், கிள்ளை முதலிய அஃறிணையோடும் சொல்லித் தூது போய்வா எனக் கலிவெண்பாவால் கூறுவது 'தூது' இலக்கியமாகும். தலைவனைப் பிரிந்திருக்கும் நிலையில் தலைவி தன் ஆற்றாமையை,

> "எகினமயில் கிள்ளை யெழிலியொடு பூவை
> சகிகுயினெஞ் சார்தென்றல் வண்டு"
>
> (பிரபந்தத்திரட்டு. நூ.30)

போன்ற இப்பத்தில் ஒன்றினை முன்னிலையாக்கித் தலைவன் பால் தூது விடுவதாக அமைந்தவை தூது இலக்கியங்களாகும் என்று பிரபந்தத்திரட்டு குறிப்பிட்டாலும் பணம், தமிழ், மான், வனசம், ஆனை, சவ்வாது, நெல், புகையிலை, பொடி, துகில், காக்கை, கழுதை, செருப்பு, பழையது, அன்பு, விறலி, எலி முதலிய பிறவும் தூது செல்லலாம் என்பதைக் கிடைக்கும் தூது இலக்கியங்களால் அறியமுடிகின்றது.

பாண்டியனுக்கும் சோழனுக்கும் நடந்த போரில் எலிகள் பாண்டியனுக்கு உதவி செய்து சோழனைத் தோற்றோடச் செய்ததையும், எலிகளின் வகைகளையும் அவற்றின் இருப்பிடங்களையும் கூறுவதாக வெண்கலிப்பாவில் பாடப் பெற்ற 'எலிவிடுதூது' அமைந்துள்ளது. இந்நூல் தூதுப் பொருண்மையையோ தூது யாப்பின் நிலையையோ பெற்றிருக்கவில்லை. அதாவது இந்நூல் அகத்துறையைச் சாராத

நிலையிலும் 'தூது' என்ற சொல் நிலையைப் பெற்றிருக்கின்றது. இந்நூலை 1955ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் இ.பா. வேணுகோபால் வெளியிட்டு உள்ளார்.

நலங்கு

நாட்டுப்புறப் பாடல்களில் 'நலங்குப்பாடல்' என்றொரு வகையுண்டு. மணக்கோல நிகழ்ச்சியிலும் பூப்புச் சடங்கிலும் வளைகாப்புச் சடங்கிலும் இவ்வகைப் பாடல்கள் பாடப்பெறுவ தியல்பு. இப்பாடல் பிற்காலத்தில் தனித்ததோர் இலக்கிய வகையாக உருப்பெற்றிருக்கின்றது. கலித்தாழிசை யாப்பை இந்நூல் பெற்றிருக்கின்றது.

எம்பெருமானுக்கும் தாயாருக்கும் நடைபெற்ற மணக்கோல நிகழ்ச்சியில் இடம்பெற்ற 'நலங்கு'ப் பகுதியை விளக்கும் செந்தமிழ் வீரராகவனின் 'திருப்புல்லாணி எம்பெருமான் மீது பாடிய நலங்கு' (77) எனும் நூலை 1961ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் மு. பசுபதி வெளியிட்டுள்ளார்.

நொண்டி

'நொண்டி' என்பது நொண்டி நாடகத்தைக் குறிக்கும். நொண்டி நாடகம், சமூகத்தில் தீய வழிகளில் நடந்து இறுதியில் கால் இழந்து அல்லல்படும் நொண்டியின் வாழ்க்கையைச் சிந்து நடையில் பாடப்பெறுவதாகும். இதனை நொண்டிச் சிந்து என்றும் அழைப்பர். இவ்விலக்கியம் காப்பு, கடவுள் வாழ்த்து, பெரியோர் போற்றல், தலைவன் புகழ் கூறல் ஆகியவற்றை முகப்பாகக் கொண்டு அமைகிறது. இவ்விலக்கி யத்தின் இலக்கணத்தைப் பிரபந்தத்திரட்டு,

> ".. வலிக்காலிற்
> காலற்ற லேகாங் கிரிகல்வெண் பாச்சிந்தாய்க்
> கோஃலுற்றார் நொண்டியென்று கொண்டு"
>
> (பிரபந்தத்திரட்டு, நூ.14)

என்று குறிப்பிடுகின்றது. இந்நிலையில், சாத்தூரில் வாழ்ந்த

சாத்தூரப்பன் மீது பாடப்பெற்ற ‘சாத்தூர் நொண்டி’யை 1939ஆம் ஆண்டு ‘சக்தி’ இதழில் சம்பந்தம் வெளியிட்டுள்ளார்.

பஞ்சகம்

ஐந்து எனும் பொருள்படும் வடசொல் சார்ந்ததாக ‘பஞ்சகம்’ அமைந்திருக்கின்றது. இது ஐந்து பாடலாலான சிறு நூலைக் குறிக்கின்றது என்றோ, ஐவகைப் பொருள் பற்றிய நூலைச் சுட்டுகிறது என்றோ குறிப்பிடலாம். இது பெரும்பாலும் ஆசிரிய விருத்தப்பாவால் அமைக்கப்பெறுகிறது. சில கலித்துறையாலும், ஆசிரிய விருத்தத்தாலும், வெண்பாவாலும் அமைக்கப்பெற்றிருக்கின்றது.

ஸ்ரீகுமரகுருபரரின் வாழ்க்கை நிகழ்ச்சிகளின் சுருக்கத்தைக் கூறும் ‘குமரகுருபர சுவாமிகள் சரித்திர சார பஞ்சகம்’ (5 ஆசிரிய விருத்தம்) 1989ஆம் ஆண்டு ஸ்ரீகுமரகுருபரர் இதழில் வெளிவந் துள்ளது.

பதம்

‘பதம்’ எனும் சொல் இலக்கியத் தொடர்பு பெறும் நிலையில் செய்யுளடி, மொழி, இசைப்பாட்டுவகை எனும் பொருள்படுகின்றது. ‘பதம்’ எனும் பெயரில் சிறுசிறு நூல்கள் மிகவே காணப்படுகின்றன. கீர்த்தனை வடிவிற்கும் பதத்திற்கும் சில வேறுபாடுண்டு. இறைத்துதியாக அமைந்தவை ‘துதி’ என்றும், நாயகன் நாயகி பாவம் புலப்பட இசை அரங்குகளின் இறுதியில் பாடவும் மேடையில் அபிநயத்துடன் ஆடவும் ஏற்றதாக அமைந்தவை ‘பதம்’ என்றும் குறிப்பர்.

நம்மாழ்வாரின் பெருமைகளை விளக்குவதாக அமைந்த ‘நம்மாழ்வார் பதம்’ (5) எனும் நூலை 1961ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் த. கிருட்டின மூர்த்தி வெளியிட்டுள்ளார்.

பதிகம்

“ஆசிரி யத்துறை அதனது விருத்தம்
கலியின் விருத்தம் அவற்றின் நான்கடி

எட்டின் காலும் உயர்ந்த வெண்பா
மிசைவைத் தீரைந்து நாலைந் தென்னப்
பாட்டுவரத் தொடுப்பது பதிகம் ஆகும்"

(பன்னிரு பாட்டியல், நூ.3:111)

எனும் இலக்கணப்படி 10, 20 பாடல்களால் அமைவது பதிகம் ஆகும். பெரும்பாலும் ஒரு பொருளைக் குறித்த பத்துச் செய்யுள்களால் அமைவதைப் பதிகம் என்பர். ஆனால் தேவாரப் பதிகங்கள் பெரும்பாலும் 11 பாடல்களால் பாடப் பெற்றிருக்கின்றன. கந்தசாமி சுவாமிகள் 13 பாடல்களாலான பதிகங்களைப் பாடியுள்ளார். பதிகப் பாடல்தொகை அதிகப் படியான 20யையும் கடந்து 31 பாடல்களாலான பதிக நூல்களும் தமிழ் இலக்கியத்துள் இருப்பது தெரிகின்றது. 'திருநாதர் குன்றத்துப் பதிகம்' 31 பன்னிருசீர் கழிநெடியலடியாசிரிய விருத்தத்தால் பாடப்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இது பதிக விதிக்கு மீறிய செயலாகத் தெரிந்தாலும் புதுவகை புகுவது தமிழிலக்கியத்தில் புதுமையன்று.

தஞ்சைக்கு அருகேயுள்ள கரந்தை-கருந்திட்டையில் கோயில் கொண்டிருக்கும் சிவபெருமான் மீது பாடப்பெற்ற வண்ணச்சரபரின் 'கருந்திட்டைக்குடிப் பதிகம்' (11) எனும் நூலை 1950ஆம் ஆண்டு தமிழ்ப்பொழில் இதழில் தி.செ. முருகதாசப் பிள்ளை வெளியிட்டுள்ளார்.

செஞ்சிக் கோட்டையின் வடபாலுள்ளது திருநாதர் குன்றம். இங்குள்ள சைவ தீர்த்தங்கரர்களைப் பற்றிக் கூறும் 'திருநாதர் குன்றத்துப் பதிகம்' (31) எனும் நூலை 1960ஆம் ஆண்டு நல்லறம் இதழில் பிரத்யும்னன் வெளியிட்டுள்ளார்.

திருவான்மியூரில் கோயில் கொண்டுள்ள சிவபெருமான் மீது பாடப்பெற்ற வண்ணச்சரபரின் 'திருவான்மியூர் சிவபெருமான் பதிகம்' (12) 1966ஆம் ஆண்டு சித்தாந்தம் இதழில் வெளிவந்து உள்ளது.

முருகப்பெருமானிடம் பக்தி கொள்வதற்கான நெறி முறைகளை வகுத்துக் கூறும் வண்ணச்சரபரின் 'பக்திநெறிப் பதிகம்' (13) 1955ஆம் ஆண்டு குமரகுருபரன் இதழில் வெளிவந் துள்ளது.

பழனி மலையில் கோயில் கொண்டிருக்கும் முருகப் பெருமானின் பெருமைகளையும், அவனுக்கு எடுக்கப்பெறும் விழாக்களின் சிறப்புக்களையும் எடுத்துக்கூறும் 'பழனிமலை வடிவேலர் பதிகம்' (11) எனும் நூலை 1958ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் பத்மாவதி வெளியிட்டுள்ளார்.

பத்து

பத்துப் பாடல்கள் கொண்டது 'பத்து' ஆகும். சங்க காலந் தொடங்கி 'பத்து' தமிழிலக்கியத்தில் சிறந்து விளங்கு கின்றது. பதிற்றுப்பத்திலும், ஐங்குறுநூற்றிலும் பத்துப் பத்தாகப் பாடல்களை அமைத்த நிலை காணப்படுகிறது. திருக்குறள், நாலடியார் போன்ற அற இலக்கியங்களிலும் பத்துப் பத்தாகப் பாடல்களை அமைத்த நிலை காணப்படுகிறது. மாணிக்க வாசகரின் காலத்திலிருந்து 'பத்து' தனி இலக்கியமாகத் தோன்றத் தொடங்கியுள்ளது எனலாம். அதிகமாக 'பத்து'க்களைப் பாடியவராக வண்ணச்சரபர் விளங்குகின்றார். பத்துப் பாடல்கள் இணைதல் என்னும் ஒரே பொருளில் இவ்வகையை அமைக்கின்றார். பத்து என்ற எண்ணிகைப் பெயரால் சில சிற்றிலக்கிய வகைகள் சொல்நிலை பெற்றுள்ளன. அதாவது, நயனப்பத்து, பயோதரப்பத்து என்பன பொருண்மையுடன் சேர்ந்தும், ஒருபா ஒருபஃது, இருபா இருபஃது என்பன யாப்பு வகையின் எண்ணிக்கையுடன் சேர்ந்தும், நாற்பது, பத்து என்பன எண்ணிக்கையை மட்டும் உணர்த்தியும் அமைந்து உள்ளதைக் காணலாம்.

திருமாலின் பத்து அவதாரங்களையும் முறைப்படுத்திக் கூறும் 'தசாவதாரப் பத்து' (10) எனும் நூலை 1961ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் த. கிருட்டிணமூர்த்தி வெளியிட்டுள்ளார்.

திருமயிலாபுரியில் வீற்றிருக்கும் அருகக் கடவுளைப் போற்றித் துதிக்கும் 'திருமயிலாபுரிப் பத்து' (10) மற்றும் பெருமண்டூர் எனும் வீரபுரத்தில் வீற்றிருக்கும் அருகக் கடவுளைப் போற்றித் துதிக்கும் 'வீரபுரப் பத்து' (8) ஆகிய இவ்விரண்டு நூல்களையும் 1979ஆம் ஆண்டு முக்குடை இதழில் மு.கோ. இராமன் வெளியிட்டுள்ளார்.

பரணி

போர் முகத்து ஆயிரம் களிற்றியானையைக் கொன்ற வீரனைத் தலைவனாகக் கொண்டு கடவுள் வாழ்த்தும், கடை திறப்பும், பாலை நிலமும், காளி கோயிலும், பேய்களோடு காளியும், தலைவன் கீர்த்தியும், அவன் வழியாகப் புறப்பொருள் தோன்றுதலும் வெம்போர் வழங்க விரும்புதலும் ஆகியன வெல்லாம் 'ஈரடிப் பஃறாழிசையால் பாடுவது பரணி" (முத்து வீரியம், யா.ஒ.79) ஆகும்.

திருச்செந்தூரில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் செந்தில் வேலவன் சூரனைச் சங்காரம் செய்த நிகழ்ச்சியை மையமாகக் கொண்டு அமைந்த 'திருச்செந்தூர்ப் பரணி' (1200 தாழிசை) 1930ஆம் ஆண்டு செந்தமிழ் இதழில் வெளிவந்து உள்ளது.

பள்ளு

உழவர்களாகிய பள்ளர்களின் வாழ்வியல் நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டது 'பள்ளு' ஆகும். இதனைப் பள்ளேசல் என்றும் வழங்குவர். மருத நிலம் பற்றியும் அந் நிலத்தில் வாழும் மக்களின் ஒழுக்கம் பற்றியும் கூறுவதாக அமைந்த பள்ளு இலக்கியத்தைத் தொல்காப்பியம் முதலாகவே காணலாம். பின்னர் சிலப்பதிகாரத்தில் ஆங்காங்கு வெளிப் பட்டிருக்க, கச்சியப்ப முனிவரின் பேரூர்ப் புராணத்தில் ஒரு படலமாகவே உருப்பெற்று இருக்கின்றது. இதற்கும் பிறகு கலம்பக உறுப்புகளில் ஒன்றாகவும் பள்ளு இடம்பெற்றது. கி.பி.16ஆம் நூற்றாண்டில் கமலை ஞானப்பிரகாசரின்

திருவாரூர்ப் பள்ளு எனும் ஞானப்பள்ளே இவ்விலக்கியத்தின் முதல் நூலாக அறியப்படுகிறது.

குறவஞ்சியைப் போன்றே பள்ளையும் முத்தமிழ் நூல் எனக் குறிக்கலாம். இசைப்பாடல்களான கீர்த்தனை, சிந்து ஆகியவை இசையினிமையையும், பாத்திர வரவு அறிமுகம் போன்றன நாடக உணர்வையும் இணைக்கின்றன. விருத்தம், சந்த விருத்தம், கலித்துறை, கலிப்பா, வெண்பா போன்ற யாப்புகள் இவ்விலக்கிய வடிவமாக அமைகின்றன (தமிழ் இலக்கிய வகையும் வடிவும், ப.391). இவற்றைப் பள்ளு, பள்ளேசல், பள்ளிசை எனவும் வழங்குவர்.

பருவ இதழ்களில் பல பள்ளு இலக்கியங்கள் அறிமுக மாகி இருக்கின்றன. பள்ளு எனப் பெயர் பெற்றும் முழுமையாகப் பள்ளு இலக்கிய அமைப்பைப் பெறாத 'மன்னார் மோகனப் பள்ளு' என்றோர் இலக்கியமும் பருவ இதழில் வெளிவந்துள்ளதைக் காணமுடிகிறது. இந்நூலை 1985ஆம் ஆண்டு சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழில் ச. திலகம் வெளியிட்டுள்ளார்.

கட்டிபூபாலன், கட்டியண்ணன் என்று அழைக்கப்படும் கட்டிமகிபனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட 'கட்டி மகிபன் பள்ளு' எனும் நூலை 1960ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் வி.எஸ். கிருஷ்ணன் வெளியிட்டுள்ளார்.

கொங்கு நாட்டில் சிவமலை என்னும் சிவசயிலத்தில் கோயில் கொண்டுள்ள முருகப்பெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பெற்ற இராமநாதக் கவிராயரின் 'சிவசயிலப் பள்ளு'வை (54 குறை) 1961-62ஆம் ஆண்டு ஞானசம்பந்தம் இதழ்ப் பகுதிகளில் கு. அருணாசலக் கவுண்டர் வெளியிட்டுள்ளார்.

திருவாரூர் தியாகராசப் பெருமானைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பெற்ற ஞானப்பிரகாசனின் 'தியாகராசர் பள்ளேசல்' (67) எனும் நூலை 1937ஆம் ஆண்டு தமிழ்ப்பொழில் இதழில் எல். உலகநாத பிள்ளை வெளியிட்டு உள்ளார்.

அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான திருநீலகண்டரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பெற்ற 'திருநீலகண்டப் பள்ளு'வை (16) 1977ஆம் ஆண்டு தேனோலை இதழில் கொடுமுடி சண்முகப்பிரகதம் வெளியிட்டுள்ளார்.

பாட்டு

குறிப்பிட்ட பொருண்மை பற்றி யாதானும் ஒரு யாப்பு வகையில் பாடப்பெறுவது 'பாட்டு' ஆகும். இது, சொல் நிலையால் பெயர் பெற்று விளங்குகின்றது. பெரும்பாலான பாட்டுகள் மக்களிடையே வழக்கத்தில் இருந்து இலக்கிய வகையாகப் பரிணமித்திருக்கின்றன. இவ்வகையில் உழத்திப் பாட்டு, குறத்திப்பாட்டு, வில்லுப்பாட்டு, கப்பற்பாட்டு (ஓடப் பாட்டு, ஏலப்பாட்டு), கிளிப்பாட்டு, சவால்பாட்டு, மிட்டாய்ப் பாட்டு, முத்தப்பாட்டு போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவை யல்லாமல் பருவ இதழ்களில் கிளைப்பாட்டு, முளைப் பாட்டு ஆகிய இரண்டு வகையான பாட்டுகள் அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கின்றன.

பாட்டுடைத் தலைவனின் பிறப்பு முதல் மணக்கோலக் காட்சி வரை நிகழ்ந்த நிகழ்வுகள் கலித்தாழிசையால் பாடப் பெறுவது 'கிளைப்பாட்டு' ஆகும். திருப்புல்லாணியில் கோயில் கொண்டிருக்கும் எம்பெருமான் தெய்வச்சிலை யாருக்கும் தாயார் பதுமாசனிக்கும் நிகழ்ந்த மணக்கோலக் காட்சியில் பதுமாசனித் தாயாரின் பிறப்பு முதல் மணச்சீர் செய்தல் வரை கூறப்பெற்ற 'திருப்புல்லாணி எம்பெருமான் மீதும் பதுமாசனித் தாயார் மீதும் பாடிய கிளைப்பாட்டு' (79 தாழிசை) எனும் நூலை 1961ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் மு. பசுபதி வெளியிட்டு உள்ளார்.

நாட்டுப்புற மக்களிடையே முளைப்பாலிகை மங்கலப் பொருளாகப் பயன்படுத்தப்பெறுகின்றது. பெரும்பாலும் இறைவிழாக் காலங்களில் முளைப்பாலிகையை வைத்து வழிபாடு செய்யும் வழக்கம் மக்களிடையே இன்றும் உள்ளதாகும். விழா நாயகர் தெருவில் உலா வரும்போது

பெண்கள் முளைப்பாலிகை வைத்து வழிபாடு செய்து அவ்விழா நாயகரையே கணவனாக அடையவேண்டும் என்று பாடும் பாட்டு 'முளைப்பாட்டு' ஆகும். இவ்வகை உலா இலக்கியத்தை ஒத்ததாகத் திகழ்கின்றது.

விசயராகவ நாயக்கர் உலா வரும்போது பெண்கள் முளைப்பாலிகையை வைத்து அம்மன்னனையே கணவனாக அடையவேண்டும் என்று அம்முளைப்பாலி நாச்சியாரைப் பணிந்து பாடுவதாக அமைந்துள்ள 'விசயராகவ நாயக்கர் அய்யன் பேரில் முளைப்பாட்டு' (81 அகவலடி) எனும் நூலை 1984ஆம் ஆண்டு சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழில் ச. திலகம் வெளியிட்டுள்ளார்.

பிள்ளைத்தமிழ்

பிள்ளைப்பாட்டு, பிள்ளைக்கவி, பிள்ளைத்திருநாமம், பிள்ளைமை இன்பம் என்ச் சுட்டப்பெறுவது 'பிள்ளைத்தமிழ்' ஆகும். இது ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இரண்டு வகைப்படும். காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, சிறுபறை, சிற்றில், சிறுதேர் இவற்றை ஆண்பாற் பிள்ளைத்தமிழ் உறுப்புகள் என்றும், இப்பத்து உறுப்பினுள் இறுதி மூன்று ஒழித்து கழங்கு, அம்மானை, ஊசல் ஆகியவற்றைச் சேர்த்துப் பெண்பாற் பிள்ளைத்தமிழ் உறுப்புகள் என்றும் அமையப் பெற்றிருக்கும். இவை ஒவ்வொன்றும் பத்துப் பாடல்களால் ஆனதாக யாப்பு வரையறை கூறப்பெற்று இருக்கின்றது. தொல்காப்பியம் முதலாகப் பிள்ளைத்தமிழ்க் கூறுகள் பல இலக்கியங்களில் இடம்பெற்றாலும் ஒட்டக் கூத்தரின் 'குலோத்துங்கசோழன் பிள்ளைத்தமிழ்' இவ்வகையில் தனி இலக்கியமாக அமைகிறது எனலாம்.

"யாப்பு வகை பற்றிய பாட்டியல் குறிப்புக்களை நோக்குங்கால், கொச்சகக்கலி, பஃறொடைவெண்பா, கட்டளைக்கலித்துறை, கலிவிருத்தம், ஆசிரியவிருத்தம் என்ற பல்வேறு யாப்பு வகைகளால் தொடக்க காலத்தில்

பிள்ளைத்தமிழ் இலக்கியங்கள் படைக்கப்பெற்றிருந்தன என்றும், பிற்காலத்தில் ஆசிரிய விருத்தம் ஒன்றே பிள்ளைத்தமிழில் செல்வாக்குப் பெற்ற யாப்பு வகையாக வளர்ச்சி பெற்றது என்றும்" (பாட்டியலும் இலக்கிய வகைகளும், ப.68) கூறுவர்.

பருவத்திற்குப் பத்துப் பாடல்களாக நூறு பாடல்கள் பாடப்படுவதே பிள்ளைத்தமிழ் நூல்களின் பெருவழக்கு. ஆயினும் பத்தினும் குறைவான எண்ணிக்கை பெற்ற நூல்களும் காணப்படுகின்றன. மல்லையூர்ச் சிற்றம்பலக் கவிராயரின் 'சிவந்தெழுந்த பல்லவன் பிள்ளைத்தமிழ்' பருவத்திற்கு ஏழு பாடல்களையும், சிவஞான முனிவரின் 'கலைசைச் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ்' பருவத்திற்கு ஐந்து பாடல்களையும், சின்னப்ப நாயக்கரின் 'பழனிப் பிள்ளைத்தமிழ்' பருவத்திற்கு மூன்று பாடல்களையும், மு.கோ. இராமனின் 'திருநாவுக்கரசர் பிள்ளைத்தமிழ்' வ.சு. செங்கல்வராய பிள்ளையின் 'திருஞான சம்பந்தர் பிள்ளைத்தமிழ்', நா. கனகராசையரின் 'சுந்தரர் பிள்ளைத்தமிழ்', திராவிடக் கவிமணி முத்துசாமி ஐயரின் 'மாணிக்கவாசகர் பிள்ளைத்தமிழ்' போன்றன பருவத்திற்கு ஒரு பாடலையும் பெற்றுள்ளதைக் காணலாம். சதகமாய் நூறு பாடல்களைக் கொண்டிருந்த பிள்ளைத்தமிழ் இன்று பத்துப் பாடல்கள் கொண்ட ஒரு பதிகம் போன்று சுருங்கியுள்ளமை யைக் காணமுடிகிறது. "இறைவனைப் பாட்டுடைத் தலைவ னாகக் கொண்டு பாடப்பெறுங்கால், சிவபெருமானைப் பிள்ளைப் பருவத்தினனாக உருவகித்து அவனைப் பாட்டுடைத் தலைவனாக வைத்துப் பிள்ளைத்தமிழ் இலக்கியம் பாடப் பெறுதல் இல்லை" (பாட்டியலும் இலக்கிய வகைகளும், ப.55) என்பதால் சிவபெருமான் மீது பிள்ளைத்தமிழ் நூல்கள் பாடப்பெறவில்லை என்பது தெரிகின்றது.

பருவ இதழ்களில் பல பிள்ளைத்தமிழ் நூல்கள் வெளிவந்திருக்கின்றன. திருக்குறுங்குடியில் கோயில் கொண்டு இருக்கும் அழகியநம்பி மீது பாடப்பெற்ற 'திருக்குறுங்குடி அழகியநம்பி பிள்ளைத்தமிழ்' (115) எனும் நூலை 1950-51ஆம் ஆண்டு செந்தமிழ் இதழ்ப் பகுதிகளில் கி. இராமாநுஜ ஐயங்கார் வெளியிட்டுள்ளார்.

திருஞானசம்பந்தப் பெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பெற்ற 'திருஞானசம்பந்தர் பிள்ளைத்தமிழ்' (100) எனும் நூலை 1964-65ஆம் ஆண்டு திருக்கோயில் இதழ்ப் பகுதிகளில் ந.ரா. முருகவேள் வெளியிட் டுள்ளார்.

திருவள்ளுவரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பெற்ற 'திருவள்ளுவர் பிள்ளைத்தமிழ்' (106) எனும் நூலை 1968 மற்றும் 1969ஆம் ஆண்டுகளில் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் ஆர்.கே. பார்த்தசாரதி, பூ. சுப்பிரமணியம் ஆகியோர் வெளியிட்டு உள்ளார்.

திருவெண்ணெய் நல்லூரில் கோயில் கொண்டெழுந் தருளியுள்ள ஸ்ரீவைகுந்தநாதப் பெருமானைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பெற்ற 'ஸ்ரீவைகுந்தநாதர் பிள்ளைத்தமிழ்' (101) எனும் நூலை 1932ஆம் ஆண்டு கலாநிலையம் இதழில் கி. வேங்கிடசாமி ரெட்டியார் வெளியிட்டுள்ளார்.

மஞ்சரி

பொருள், இடம், காலம், தொழில் என்னும் நான்கும் பற்றி வெண்பா அல்லது கலித்துறைப் பாவினால் பாடப்படுவது 'மஞ்சரி' ஆகும். தலைவன் மேல் காதல் கொண்ட தலைவி ஒருத்தி, தலைவனுடைய மார்பில் விளங்கும் பூமாலையை இரந்து பெற்று, அவனையே நாயகனாக அடைந்து இன்பம் துய்த்து வாழ்வதனை 'மஞ்சரி' விவரிக்கின்றது. மஞ்சரி, திரிபு மஞ்சரி, யமக மஞ்சரி, க்ஷேத்திர மஞ்சரி, தியான மஞ்சரி, நவரச மஞ்சரி (ரச மஞ்சரி), மரகத மஞ்சரி, விவாத மஞ்சரி, தல மஞ்சரி, வண்ண மஞ்சரி என இவற்றின் வகைகள் அமைந்திருக்கின்றன. 'ரச மஞ்சரி' என்பது ஒன்பது வகையான சுவைகள் கொண்டதாகும். வீரம், அருவெறுப்பு, பெருநகை, அச்சம், கோரம், கருணை, சாந்தம், அற்புதம், சிங்காரம் ஆகிய ஒன்பது சுவைகளையும் பெற்றது ரச மஞ்சரி ஆகும். இதனை

'நவரச மஞ்சரி' என்றும் அழைப்பர் (தமிழ் இலக்கிய வகையும் வடிவும், ப.517). இவ்வகைகளில் தளவாய் திருமலையப்ப முதலியாரின் வீரம் முதலிய ஒன்பது சுவைகளையும் சுவைபடக் கூறும் 'அமுதரஸ மஞ்சரி' (370 கண்ணி) எனும் நூலை 1976-77ஆம் ஆண்டு கல்வெட்டு இதழ்ப் பகுதிகளில் இரா. நாகசாமி வெளியிட்டுள்ளனர்.

மடல்

தொல்காப்பியர் காலத்தில் அகப்பொருளில் ஒரு துறையாக இருந்த மடல் பிற்காலத்தில் தனி இலக்கியமாக வளர்ச்சியுற்றது. கனவில் ஒரு பெண்ணைக் கண்டு கலவியின்பம் நுகர்ந்தோன் விழித்தபின் அவள் பொருட்டு மடலூர்வேன் என்பதைக் கலிவெண்பாவால் கூறுவது 'மடல்' இலக்கியம். இதை 'உலா மடல்' என்றும் கூறுவர். காதலியை அடைய முடியாமல் தடை நேர்ந்தபோது தலைவன் மடலேறுவ தாகப் பாடப்படுவது பழைய மரபு. இந்த மரபைச் சிறிய திருமடல், பெரியதிருமடல் ஆகிய இரண்டும் மாற்றுகின்றன. திருமாலிடம் பக்திக் காதல் கொண்ட பெண் மடலேறத் துணிவதாகப் பாடப்பெற்றதாகும். பின்னாளில் பாடப்பெற்ற மடல் இலக்கியங்கள் பழைய மரபையே பின்பற்றிக் கலி வெண்பாவால் ஆடவர் மடல் ஏறுவனவாய்ப் பாடப்பெற்றிருக் கின்றன. இவ்வகையில் வளமடல், கலிமடல், சித்திரமடல் ஆகியன தோன்றியுள்ளன. இவ்வகைப்பட்ட மடல் இலக்கியங் களில் நல்லபிள்ளை என்பானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பொன்னம்பலராச பூபாலனின் 'நல்லபிள்ளை சித்திரமடல்' (251) எனும் நூலை 1968ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் ஆர்.கே. பார்த்தசாரதி வெளியிட்டுள்ளார்.

மாலை

ஒரு பொருள் பற்றிப் பல பாடல்கள் தொடர்ந்து அமைவதை 'மாலை' என்பர். இது 10 பாடல்கள் முதல் 100 பாடல்கள் வரை அமையப்பெறும். என்றாலும் சில மாலைகள்

100க்கும் மேற்பட்ட பாடல்களையும் பெற்றிருக்கின்றன. அங்க மாலை, மணி மாலை, ஏகாதச மாலை, உலா மாலை, நாம மாலை, புகழ்ச்சி மாலை, பெருமகிழ்ச்சி மாலை, வெட்சி மாலை, தாரகை மாலை, செந்தமிழ் மாலை, தானை மாலை, அனுராக மாலை, கரந்தை மாலை, வஞ்சி மாலை, நொச்சி மாலை, உழிஞை மாலை, தும்பை மாலை, வாகை மாலை, வெண்புணர்ச்சி மாலை, இணைமணி மாலை, இரட்டைமணி மாலை, மும்மணி மாலை, நான்மணி மாலை, பஞ்சரத்தின மாலை, நவமணி மாலை, சதமணி மாலை, பல்சந்த மாலை, கலம்பக மாலை, வருக்க மாலை, கதை மாலை, சிலேடை மாலை, அந்தாதி மாலை, சித்திரக்கவி மாலை, ஐங்கர மாலை, பயகர மாலை, சோடச மாலை, சந்திரகலா மாலை, நட்சத்திர மாலை, அனுபூதி மாலை, உபதேச மாலை, அகராதி மாலை, அனுராக மாலை, அக்ஷர மாலை போன்றன மாலை என்னும் அடைவைப் பெற்ற மாலை இலக்கியங்களாகத் திகழ்கின்றன. இவ்வகைகளல்லாமல் பருவ இதழ்களில் அருட்பா மாலை, திருப்பணி மாலை, கலித்துறை மாலை, தமிழ் மாலை போன்ற மாலை வகைகளும் வெளிவந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். பொருண்மை அடிப்படையில் 'கண்ணிநுண்சிறு தாம்பு' எனும் மாலை வகையும் வெளிவந்திருக்கின்றது.

திருவிசயநல்லூர் ஸ்ரீதரவெங்கடேசாசார்யர் மீது கோமதி ராஜாங்கம் பாடிய இரங்கற்பாவான 'அநுபோக ரத்ன மாலை' (287 அகவலடி) 1966ஆம் ஆண்டு ஸ்ரீசங்கர க்ருபா இதழில் வெளிவந்துள்ளது.

திருவாரூரிலே வாழ்ந்த சிதம்பரநாத தேசிகரை முன்னிலைப்படுத்திச் சைவர்கள் செய்யும் பூஜாக்கிரமத்தின் ஒரு பகுதியைக் கூறும் 'ஆன்மலிங்க மாலை'யை (1) 1929-30ஆம் ஆண்டு செந்தமிழ் இதழில் திருவாரூர் எஸ். சோமசுந்தரதேசிகர் வெளியிட்டுள்ளார்.

வரவரமுனிவர் மீது ஆசார்ய நிஷ்டையாய் கோயிற் கந்தாடையண்ணன் பாடிய 'கண்ணிநுண் சிறுதாம்பு' (14) எனும் நூலை 1931ஆம் ஆண்டு ஹரிசமய திவாகரன் இதழில்

ரெ. இராமையங்கார் வெளியிட்டுள்ளார். இது நம்மாழ்வார் மீதுபாடிய (மதுரகவிகளின்) 'கண்ணிநுண் சிறுதாம்பு' எனும் நூலினின்று வேறானது.

அவிநாசியில் கோயில் கொண்டுள்ள கருணாம்பிகையம்மன் மீது தோத்திரப் பிரபந்தமாகப் பாடப்பெற்ற முத்துப் புலவனின் 'கருணாகர மாலை'யை (31) 1956ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் மு. பசுபதி வெளியிட்டுள்ளார்.

கலிகாலத்தில் நடக்கும் அநீதிகள் பலவற்றைத் தொகுத்துக் கூறும் 'கலியுக மாலை'யை (26) 1925ஆம் ஆண்டு பஞ்சாமிர்தம் இதழில் அ. மாதவையர் வெளியிட்டுள்ளார்.

'சங்கரா சிவக்கொழுந்தே' எனும் பாடல் ஈறு பெற்று விளங்கும் பனங்குடி கந்தசாமி பிள்ளையின் 'சங்கர சிவக்கொழுந்து மாலை'யை (33) 1962ஆம் ஆண்டு 'ஞானசம்பந்தம்' இதழில் சொ. சிங்காரவேலன் வெளியிட்டுள்ளார்.

திருக்கழுக்குன்றத்தில் கோயில் கொண்டிருக்கும் சிவபெருமானின் சிறப்புகளையும் ஊர்ச் சிறப்புகளையும் எடுத்துரைக்கும் 'திருக்கழுக்குன்ற மாலை'யை (100) 1951ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் பி.எஸ். சுலோசனா வெளியிட்டுள்ளார்.

திருமூலரின் திருமந்திரம் - மூன்றாந் தந்திரத்தில் ஏழாம் தியானப் பகுதியை விளக்கும் 'திருமூலர் தியானக் குறிப்பு (திருமந்திர மாலை)' (28) எனும் நூலை 1949ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் வ.ரா. கல்யாணசுந்தரம் வெளியிட்டுள்ளார்.

திருவாரூரில் கோயில் கொண்டுள்ள கமலைப்பராசக்தி மீது பாடப்பெற்ற 'திருவாரூர்க் கமலைப் பராசக்திமாலை'யை (31) 1979ஆம் ஆண்டு திருக்கோயில் இதழில் ந.ரா. முருகவேள் வெளியிட்டுள்ளார்.

தென்சேரி முருகப்பெருமான் மீது பாடப்பெற்ற கருவூர்ப் பழனிமலை வாத்தியாரின் 'தென்சேரி மாலை'யில் (100) கிடைத்த 7 பாடல்கள் 1936ஆம் ஆண்டு கொங்கு மலர் இதழில் வெளிவந்துள்ளன.

மருதப்பன் என்னும் குறுநில மன்னனுக்கு மன்மதனின் லீலைகளையும் அவனது அறச்செயல்களையும் கூறும் கடிகை முத்துப் புலவ ் ர் 'பட்டமதன வித்தார மாலை'யை (1, 98 அகவலடி - குறை) 1930ஆம் ஆண்டு தமிழ்ப்பொழில் இதழில் பண்டிதர் நாராயணசாமி வெளியிட்டுள்ளார்.

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று சொல்லப் பட்ட நான்கு வகையுள் யோகம் என்பது மனத்தை அடக்கிப் பயிற்சி செய்வதனால் ஏற்படும் இன்பத்தைக் கூறும் 'யோக மாலை'யை (150) 1961ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் த. கிருட்டிணமூர்த்தி வெளியிட்டுள்ளார்.

புறச்சந்தானக் குரவர்கள் நால்வரில் முதலாமவராக விளங்கும் மெய்கண்டாரை முன்னிலைப்படுத்தி அவர்தம் பெருமைகளையும் சிறப்புக்களையும் பேசுவதாக அமைந்த சீர்வளர்சீர் வேலூர் சுப்பிரமணிய தேசிக மூர்த்திகளின் 'ஸ்ரீமெய்கண்ட தேசிகர் மாலை'யை (10) 1996ஆம் ஆண்டு மெய்கண்டார் இதழில் சுயம்புநாதத் தம்பிரான் சுவாமிகள் வெளியிட்டுள்ளார்.

தமிழ்மாலை

புதுக்கோட்டை இராமச்சந்திர சேதுபதி மற்றும் நாயக்கர்கள் நலத்துடன் வாழ இறைவனைப் பணிந்து வேண்டிப் பாடுவதாகக் கீர்த்தனை, கும்மி, துதி எனப் பல்வகைப் பாவகைகளில் பாடப்பெற்ற 'வேங்கடேசப் பெருமாள் தமிழ்மாலை'யை 1963ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் த. கிருட்டினமூர்த்தி வெளியிட்டுள்ளார்.

கலித்துறை மாலை

கலித்துறை யாப்பில் அமைந்ததே 'கலித்துறை மாலை' ஆகும். ஏற்கெனவே கலித்துறையில் பல மாலைகள் இருந்தாலும் சொல் நிலையில் அவை கலித்துறை எனப் பெயர் கொள்ளவில்லை. பழனிமலையில் கோயில் கொண்டிருக்கும் முருகப்பெருமானின் சிறப்புகளையும், திருமால் - வள்ளி - தெய்வயானை ஆகியோரின் சிறப்புகளையும், பழனிமலையின் சிறப்புகளையும் எடுத்துக்கூறும் 'பழனிமலைக் கந்தசுவாமி கலித்துறைமாலை'யை (31) 1979ஆம் ஆண்டு திருக்கோயில் இதழில் மு.கோ. இராமன் வெளியிட்டுள்ளார்.

திருப்பணி மாலை

கோயில் திருப்பணி குறித்து எழுந்தது 'திருப்பணி மாலை' ஆகும். திருக்குருகூர்த் திருப்பணிகளை விளக்குவதாக அமைந்த 'திருக்குருகூர்த் திருப்பணி மாலை'யை (118) 1949-50ஆம் ஆண்டு செந்தமிழ் இதழ்ப் பகுதிகளில் கி. இராமாநுஜ ஐயங்கார் மற்றும் ஆதிநாதப் பிள்ளை ஆகியோர் வெளியிட்டு உள்ளார்.

அருட்பா மாலை

இறையருள் பெறவேண்டிப் பாடிய மாலைப்பாடல் 'அருட்பா மாலை' என்று அழைக்கப்படும். அழகிய சிற்றம்பல தேசிகர் பல அருட்பா மாலைகளைப் பாடியுள்ளார். விநாயகர் அருட்பா மாலை, முருகர் அருட்பா மாலை, இலந்துறை அருட்பா மாலை, கூந்தலூர் அருட்பா மாலை, சிறுவேளூர் அருட்பா மாலை, திருக்குணமங்கலம் அருட்பா மாலை, திருப்புகலூர் அருட்பா மாலை, திருவிடைமருதூர் அருட்பா மாலை ஆகிய எட்டு அருட்பா மாலைகளைப் பாடியுள்ளார். இவ்வருட்பா மாலைகளை 1938ஆம் ஆண்டு சித்தாந்தம் இதழில் திருவாரூர் எஸ். சோமசுந்தர தேசிகர் வெளியிட்டுள்ளார்.

இரட்டைமணி மாலை

வெண்பாவும் கலித்துறையும் முறையே இருபது அந்தாதித் தொடையான் வருவது 'இரட்டைமணி மாலை' ஆகும். இது பொருள் வரையறை கூறப்படாது யாப்பு, பாடலெண் வரையறையையே கொண்டது. வெண்பாவும் அகவல் விருத்தமாகவும் சில இரட்டைமணி மாலைகள் அமைதலுமுண்டு. இவ்விலக்கிய வகையில் முதல் நூலாக விளங்குவது காரைக்காலம்மையாரின் 'திருவிரட்டைமணி மாலை' ஆகும். இவ்வகையில், திருவாரூர்க்கண் கோயில் கொண்டு இருக்கும் எம்பெருமான் மீது பாடப்பெற்ற திருவாரூர் சதாசிவ தேசிகரின் 'திருவாரூர் இரட்டைமணி மாலை'யை (21) 1919ஆம் ஆண்டு செந்தமிழ் இதழில் திருவாரூர் எஸ். சோமசுந்தர தேசிகர் வெளியிட்டுள்ளார்.

நவமணிமாலை

வெண்பா முதலாக வேறுபட்ட பாவும் பாவினமுமாக ஒன்பது செய்யுள் அந்தாதித்துப் பாடப்பெறுவது 'நவமணிமாலை' ஆகும். அந்தாதியாக வராத நவமணிமாலையும் உண்டு. சிவப்பிரகாசரின் 'பிட்சாடன நவமணிமாலை' ஒன்பது கலித்துறைச் செய்யுள்களால் அந்தாதி இன்றி அமைந்தது. தண்டபாணி சுவாமிகளின் பழனித் திருவாயிரமும் திருவரங்கத் திருவாயிரமும் தரும் நவமணிமாலைகள் வேறுபட்டன. இவை ஒன்பது பாடல்களாலல்லாமல் அவற்றின் ஒன்பது மடங்கான 81 பாடல்களாலானவை. ஒன்பது வகைப் பாக்கள் மீண்டும் மீண்டும் முறையே அந்தாதித்ததைக் கூறலாம். இவ்வகைக்குள் அம்பிகையின் புகழை ஒன்பது பாடல்களால் அந்தாதித்துப் பாடப்பெற்றுள்ள 'அம்பிகை நவமணிமாலை'யை 1950ஆம் ஆண்டு செந்தமிழ் இதழில் த.ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை வெளியிட்டுள்ளார்.

வகுப்பு

முருகன் அருட்பெருமைகளையும் அடியார் சிறப்பு களையும் சந்தப் பாடல்களால் வகுத்துக் கூறுவது 'வகுப்பு'

ஆகும். சந்தச் செய்யுளில் அமையும் அருணகிரிநாதரின் திருவகுப்பு, சீர்பாத வகுப்பு, தேவேந்திரசங்க வகுப்பு, வேல் வகுப்பு, திருவேளைக்காரன் வகுப்பு, புய வகுப்பு, கடைக் கண்ணியல் வகுப்பு போன்றவற்றில் இவ்விலக்கிய வகையின் தோற்றுவாய் அமைகின்றது. அருணகிரிநாதருக்குப் பிறகு வண்ணச்சரபர் இவ்விலக்கிய வகையைப் பரவச்செய்தார். மேலும் கர வகுப்பு, கள வகுப்பு, சக்தி வகுப்பு, சொரூப வகுப்பு ஆகிய நான்கு வகுப்புகளையும் எம்.பி.எஸ். துரைசாமி முதலியார் சித்தாந்தம் இதழில் 1937ஆம் ஆண்டு வெளியிட்டு உள்ளார்.

இந்நான்கில் திருமலைராயன் பொருகளத்தின் வெற்றிச் சிறப்பைக் கூறும் 'கள வகுப்பு' மட்டும் சந்தப் பாடலில் பாடப் பெற்றிருக்கின்றது. ஏனைய மூன்றில் 'சக்தி வகுப்பு' மார்க்க சகாயதேவரின் திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழில் காப்புப் பருவத்துத் தேவி துதியாகத் திகழ்கின்றது. 'கர வகுப்பு' மற்றும் 'சொரூப வகுப்பு' ஆகிய இரண்டும் அகவற் பாடலால் ஆனதாகும். இவை பெயரளவில் வகுப்பு என்றிருக்கின்றன. இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் காண்பது போல் வகுப்பிற்குச் சந்தப் பாடலும் அகவலும் கொள்ளுதல் சாலும் என்று கூறலாம்.

வண்ணம்

அகப்பொருள் தழுவித் தலைவனின் புகழ் பாடுவதை நோக்கமாகக் கொண்டது 'வண்ணம்' ஆகும். இது ஒருவகை இசைப்பாட்டு. எட்டு கலையாய்ப் பொழிப்பெதுகை வாய்ந்து, ஒவ்வொரு கலையிலும் மும்மூன்று கண்ணியும், ஒவ்வொரு கலைமுடிவிலும் ஒவ்வொரு தொங்கலும் பெற்றுவரும் தொங்கல்கள் எட்டினையும் முறையே கூட்ட வேறொரு செய்யுளாகத் தோன்றும். முதற் கலையில் பாட்டுடைத் தலைவனது தெய்வத் திறமும், இரண்டாம் கலையில் அவனது கிளையும் கொடையும் விருதும், மூன்றாங் கலையில் அவனது புகழும் வெற்றியும், நான்காம் கலையில் அவனுடைய நாடும்

நகரும் கூறிப் பிற்பாதியில் தன்னேரில்லாளொரு தலைவன்பாற் காமமிக்க தலைவி ஒருத்தி அத்தலைவனைப் பிரிந்து தனியிருத்தற்காற்றாது பிறரறியாதவாறு அவனுடன் போயின ளாக, அஃதறிந்து மகட்போக்கிய நற்றாய் இரங்குதல் போல் இந்நூல் அமையும்.

பருவ இதழ்களில் மூன்று வண்ணங்கள் இடம்பெற்று உள்ளன. சே.ரா. சுப்பிரமணியக் கவிராயர் செந்தமிழ் இதழில் 1918ஆம் ஆண்டு வெளியிட்ட 'தளவாய் ரெகுநாத சேதுபதி யவர்கள் மீது வண்ணம்' மற்றும் 'நம்மாழ்வார் வண்ணம்' ஆகியனவும், கி. இராமாநுஜையங்கார் செந்தமிழ் இதழில் 1942ஆம் ஆண்டு வெளியிட்ட 'திருப்புல்லாணிச் செகநாதர் பேரில் வண்ண'மும் இடம்பெற்றிருக்கின்றதைக் குறிப்பிடலாம்.

வாகனக்கவி

இறைவன் உலா வரும் ஊர்தியை 'வாகனம்' என்பர். இவ்வாகனத்தில் உலா வரும்போது பாடப்பெறும் பாடல்வகை 'வாகனக்கவி' எனப்படுகிறது. கோவில் திருவிழாவின் ஒவ்வொரு நாளும் இறைவன் உலா வரும்போது உற்சவ மூர்த்தியின் வேறுபட்ட அலங்காரத்தை ஒன்று அல்லது இரண்டு பாடல்களால் பாடுவர். இது விருத்தப் பாடலால் அமையும். இதை வாகனமாலை எனவும், திருக்கோலக்கவி எனவும் குறிப்பர். பருவ இதழில் இரண்டு வாகனக்கவிகள் வெளிவந்திருக்கின்றன.

திருக்கோட்டியூரில் கோயில் கொண்டுள்ள சௌமிய நாராயணப் பெருமாளுக்கு ஆண்டுதோறும் நடக்கும் பதினொருநாள் திருவிழாவில் இறைவன் தினமும் உலா வரும்போது பாடப்பெற்ற 'சௌமியநாராயணப் பெருமாள் திருநாள் வாகனக்கவி' (12)யை 1942ஆம் ஆண்டு செந்தமிழ் இதழில் அருணாசலம் வெளியிட்டுள்ளார்.

திருக்குருகூரில் நடக்கும் நம்மாழ்வாரின் பத்துநாள் திருவிழாவில் நம்மாழ்வார் உலா வரும்போது நம்மாழ்வாரின்

திருவுலாக் காட்சியைக் குறிக்கும் 'நம்மாழ்வார் திருக்கோலக் கவி'யை (22) 1961ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் த. கிருட்டிணமூர்த்தி வெளியிட்டு உள்ளார். .

விண்ணப்பம்

பெரியோர் முன் பணிந்து கூறும் அறிவிப்பு, கடவுள் முன்பு ஓதும் பாசுரம், மனு முதலிய பொருள்களைக் கொண்டது 'விண்ணப்பம்' ஆகும். மாணிக்கவாசகரின் நீத்தல் விண்ணப்பம் இவ்வகையின் தோற்றுவாயாக அமைகின்றது. இவ்வகையில் திருப்புல்லாணித் தலப்பெருமை, இறைவன் மகிமை, இறையருள் பெற்றோர் நிலைமை ஆகியன விவரிக்கப்பெற்றுள்ள 'திருப்புல்லாணிச் செகநாதர் பேரில் விண்ணப்பம்' (129) எனும் நூலை 1942ஆம் ஆண்டு செந்தமிழ் இதழில் கி. இராமாநுஜையங்கார் வெளியிட்டுள்ளார்.

விருத்தம்

விருத்த யாப்பில் அமைத்துப் பாடும் இலக்கியம் 'விருத்தம்' ஆகும். ஏதேனும் ஒரு பொருள் மேல் பாடப்பெறும் விருத்தங்கள் அவ்வப்பொருள்களின் பெயரால் அமையும். நரி விருத்தம், மயில் விருத்தம், கோம்பி விருத்தம், அரசன் விருத்தம், ஐவகை விருத்தம், திருச்சந்த விருத்தம், திருவிருத்தம், வேல் விருத்தம், சேவல் விருத்தம் என விருத்தப் பெயர்கள் அமைதலைக் காணலாம். இவ்வகையில் இரண்டு விருத்தங்கள் பருவ இதழில் வெளிவந்திருக்கின்றன.

பதினாறு கலைகளுக்கும் வடிவும் மலநிலையும் யோனி பேதமும் மாத்திரையும் குறித்து ஏழு விருத்தங்களாலான 'சோடசகலா பிராசாத விருத்தம்' எனும் நூலை 1930ஆம் ஆண்டு செந்தமிழ் இதழில் திருவாரூர் சோமசுந்தர தேசிகர் வெளியிட்டுள்ளார்.

திருவிளையாடற் புராணக் கருத்துக்களைச் சுருக்கிப் 1௦ விருத்தப் பாவாலான 'திருவிளையாடற் கருணைத்

திருவிருத்தம்' எனும் நூலை 1935ஆம் ஆண்டு சித்தாந்தம் மற்றும் கலாநிலையம் ஆகிய இரண்டு இதழ்களிலும் எஸ். வையாபுரிப் பிள்ளை வெளியிட்டுள்ளார்.

வெண்பா

வெண்பா யாப்பில் அமைத்துப் பாடும் இலக்கியம் 'வெண்பா' ஆகும். பதினெண்கீழ்க்கணக்கு வெண்பாவைத் தனியிலக்கியமாகத் தருகின்றது. என்றாலும் முழுநிலையில் பதினோராம் திருமுறையில் ஐயடிகள் காடவர்கோன் பாடிய க்ஷேத்திரத் திருவெண்பாவைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். ஊர் நேரிசை, ஊரின்னிசை, ஊர் வெண்பா, கடிகை வெண்பா, பெயர் நேரிசை, பெயரின்னிசை, உபாயநிட்டை வெண்பா, உவமை வெண்பா, முதுமொழி வெண்பா, ஆத்திசூடி வெண்பா, வினா வெண்பா, தசாங்க வெண்பா, யமக வெண்பா, நேரிசை வெண்பா, சிலேடை வெண்பா போன்ற பல வெண்பா வகைகள் தோன்றியுள்ளன. பருவ இதழ்களில் ஆறு வெண்பா நூல்கள் வெளிவந்திருக்கின்றன.

ஞானயோகத்தைப் பற்றிக் கூறும் சட்டைமுனி நாயனாரின் 'ஆத்திசூடி வெண்பா' (30)வை 1950ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் வ.ரா. கல்யாணசுந்தரம் வெளியிட்டுள்ளார்.

திருமகளின் பல்வேறு வகையான சிறப்புக்களைக் கூறும் 'இலக்குமி வெண்பா'வை (224) 1956ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் இ.பா. வேணுகோபால் வெளியிட்டுள்ளார். இதில் 141 பாடல்களே வெளிவந்திருக்கின்றன.

தென்காசி நகரில் கோயில் கொண்டுள்ள காசி விசுவேசுவரர் மீது பாடப்பெற்ற 'தோத்திர வெண்பா'வை (11) 1899ஆம் ஆண்டு ஞானபோதினி இதழில் பூர்ணலிங்கம் பிள்ளை வெளியிட்டுள்ளார்.

ஆழ்வார்களால் பாடப்பெற்ற நூற்றெட்டுத் திருமால் திருப்பதிகள் பற்றிக் கூறும் 'நூற்றெட்டுத் திருப்பதி வெண்பா'வை (138) 1957ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் வி.எஸ். கிருஷ்ணன் வெளியிட்டுள்ளார்.

சொற்சுவை, பொருட்சுவையோடு ஞானவழியையும் அறிவுறுத்தும் பட்டினத்தாரின் 'பட்டினத்தார் வெண்பா'வை (100) 1943ஆம் ஆண்டு சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழில் வி.எஸ். பரமசிவன் வெளியிட்டுள்ளார்.

சிலேடை வெண்பா

"ஒருவகைச் சொற்றொடர் பல்பொருட் பெற்றி
தெரிதர வருவது சிலேடை யாகும்"

(தண்டியலங்காரம், நூ76)

எனும் இலக்கணப்படி ஒரு தொடர் ஒன்றிற்கும் மேற்பட்ட பொருண்மையைத் தரும்போது அது சிலேடையாகிறது. இரட்டுற மொழிதல் என்பது சிலேடையைக் குறிக்கும் தனித்தமிழ்ச்சொல் எனலாம். வெண்பா யாப்புப் பற்றி, இதன்கண் 'சிலேடை வெண்பா' எனும் வகை உருவாகியுள்ளது. "16ஆம் நூற்றாண்டுத் தொடக்கமாக ஊர் பற்றிய வெண்பாக் களும் சிலேடை வெண்பாக்களும் நூறு பாடல்கள் கொண்டன வாய்ப் பலப்பல தோன்றியுள்ளன. இருபொருள் சிலேடை அமைப்பதோடு முப்பொருள், நாற்பொருள் பற்றிய சிலேடை வெண்பாக்களையும் கலந்து பாடுவாராயினர். இவ்வகைப் பிரபந்தங்கள் அண்ணாமலை வெண்பா, நல்லை வெண்பா, புலியூர் வெண்பா, மருதூர் வெண்பா என்றோ, கலசைச் சிலேடை வெண்பா, சிங்கைச் சிலேடை வெண்பா, குற்றாலச் சிலேடை வெண்பா, நெல்லைச் சிலேடை வெண்பா என்றோ, ஊர்ப்பெயருடன் வெண்பா என்றோ; சிலேடை வெண்பா என்றோ பெயர் பெற்று விளங்குதல் காணலாம். இவ்விருவகை நூல்களுக்குள்ளும் ஒரு சிறு வேறுபாடு உண்டு. சிலேடை வெண்பா வகை நூல்களில் நூறு பாடல்களிலும் சிலேடை அமைந்திருக்கும். வெண்பா நூல்களில் அவ்வாறல்லாமல்

முழுமையும் சிலேடை கலவாமலும் ஒரு பகுதி சிலேடைகளைக் கொண்டும் பாடப்பட்டிருத்தல் காணலாம்" (சிற்றிலக்கிய வகைகள், ப.136). இவ்வகையில் ஊர்ப்பெயரோடு அமைந்த சிலேடை வெண்பாவாகச் செங்கோட்டை- திருக்குற்றாலத்திற்கு அருகில் உள்ள திருமலையில் கோயில் கொண்டுள்ள முருகப் பெருமான் மீது பாடப்பெற்ற 'திருஉருமாமலைச் சிலேடை வெண்பா' 1907ஆம்ஆண்டு விவேகபாநு இதழில் வெளிவந்து உள்ளது. தி.சு. ஆறுமுகத்தின் 'திருஉருமாமலைச் சிலேடை வெண்பா' 1974ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. இவ்விரு சிலேடை வெண்பாக்களும் வேறுவேறானவை.

எ. வாழ்க்கை வரலாற்றிலக்கியம்

கலை, அறிவியல், அரசியல், இலக்கியம் என எவ் வகைப்பட்ட துறையாயினும் அதில் சிறப்படைந்தவர்களின் வாழ்க்கை நிகழ்வுகளை, அவர்களின் அனுபவங்களைச் சுவைபடவோ, நிரல்படுத்தியோ, சுருக்கமாகவோ தொகுத் தளிப்பது 'வாழ்க்கை வரலாற்றிலக்கியம்' ஆகும். "வாழ்க்கை வரலாற்றில் இடம்பெறும் மனிதன் யார், அவன் பிறப்பு, இறப்பு பற்றிய செய்திகள் என்ன என்பதை விட அவன் என்ன செய்தான், எப்படிச் செய்தான் அதன் சிறப்புகள் என்ன, குறிப்பிட்ட துறையில் அவன் முன்னேற்றம் எப்படி இருந்தது என்பன போன்ற செய்திகளே வேண்டற்பாலனவாய், இன்றி யமையாதனவாய் உள்ளன. எனவே இங்கே, வரலாற்றுத் தலைவனின் இறப்புப் பற்றிய செய்திகளும் இடம் பெற்றிருத்தல் வேண்டும் எனும் நியதி தேவை இல்லை" (தமிழ் இலக்கிய வகையும் வடிவும், ப.638) என்பதால் வாழ்க்கை வரலாற்றிலக்கி யத்தின் பொருண்மை தெளிவுபெறுகிறது.

பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த இரட்டைப் புலவர்களான முதுசூரியர், இளஞ்சூரியர் ஆகிய இருவரின் வாழ்க்கை வரலாற்றை அம்மானை முறையில் எடுத்துக் கூறும் 'இரட்டையர் அம்மானை' 1930-31ஆம் ஆண்டு 'செங்குந்த மித்திரன்' இதழ்ப் பகுதிகளில் வெளிவந்துள்ளது.

திருத்தொண்டர் புராணச் சுருக்கத்தின் ஒரு பகுதியாக அமைந்துள்ள 'காரைக்காலம்மையார் வாழ்க்கை வரலாறு' 24சீர் கழிநெடிலடியாசிரிய விருத்தத்தாலானது. இந்நூலை 1949ஆம் ஆண்டு ஞானசம்பந்தம் இதழில் வே.ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் வெளியிட்டுள்ளார்.

ஸ்ரீகுமரகுருபரரின் வாழ்க்கை வரலாற்றைக் கூறும் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் 'ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் சரித்திரம்' 1975ஆம் ஆண்டு குமரகுருபரன் இதழில் அ. நாராயணசாமி தம்முடைய குறிப்புரையுடன் வெளியிட்டு உள்ளார்.

வைணவ ஆழ்வார்கள் ஆசாரியர்களின் வைபவங்களை ஆளவந்தார் வைபவம், எம்பெருமானார் வைபவம் ஆகிய இரண்டு காண்டங்களில் அமைந்த 'குருபரம்பரை'யை (4000) 1927-30ஆம் ஆண்டு செந்தமிழ் இதழ்ப் பகுதிகளில் கி. இராமாநுஜையங்கார் வெளியிட்டுள்ளார். 1902ஆம் ஆண்டு வேங்கடகிருஷ்ண நாயுடு பதிப்பித்த குருபரம்பரையி னின்றும், திருமலை திருப்பதி தேவஸ்தான செய்தி மடலில் 1960-62ஆம் ஆண்டுப் பகுதிகளில் கே. பாலசுந்தரநாயகர் வெளியிட்ட அழகியநம்பிதாசரின் குருபரம்பரையினின்றும் இது வேறானது.

சேலம் செழியதரையன் எனும் குறுநில மன்னனுக்காக முகம்மதிய மன்னனிடம் பிணையாகச் சென்ற அருணாசலக் கவிஞனின் வரலாற்றைக் கூறும் 'புலவர் பிணைபோன வரலாறு' (54) எனும் நூலை 1952ஆம் ஆண்டு தமிழ்ப்பொழில் இதழில் அடிகளாசிரியர் வெளியிட்டுள்ளார்.

வீரபோக வசந்தராயரின் வரலாற்றினை உரைநடையில் கூறும் 'ஸ்ரீவீரபோக வசந்தராயர் வரலாறு' எனும் நூலை 1988ஆம் ஆண்டு சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழில் ச. திலகம் வெளியிட்டுள்ளார்.

ஏ. நாட்டுப்புற இலக்கியம்

தமிழில் காப்பிய இலக்கியம் எழும்முன் மக்களிடையே வாய்மொழியாக வழங்கி வந்தவை 'நாட்டுப்புற இலக்கியம் அல்லது வாய்மொழி இலக்கியம்' ஆகும். புராண இதிகாசக் கதைகளும், புனைகதைகளும், கற்பனைக் கதைகளும், வழிவழி யாக வாய்மொழியாகவே வழங்கி வரும் கதைகளும் இவற்றின் வகைகளாகக் கருதலாம். பழங்கதைகளையும், பழங்கதை களுக்கு விளக்கம் தருவதாகவும், ஒரு காப்பியத்தின் ஒரு பகுதியை மட்டும் விரித்துக் கூறுவதாகவும், காலத்தின் தேவைக் கேற்பப் புதுப்புது கதைகள் கூறுவதாகவும் நாட்டுப்புறக் கதைகள் அமைகின்றன. இவை செய்யுளாகவும் உரைநடை யாகவும் அமைகின்றன. பருவ இதழ்களில் 15 கதைகள் வெளிவந்திருக் கின்றன.

அருவியன் - உருதேசி ஆகிய இருவரின் வாழ்க்கை வரலாற்றைக் கூறும் 'அருவியன் கதை'யை (123) 1913-15ஆம் ஆண்டு தமிழன் (திருவனந்தபுரம்) இதழ்ப் பகுதிகளிலும், 1922-23ம் ஆண்டு செந்தமிழ் இதழ்ப் பகுதிகளிலும் கே.என். சிவராஜ பிள்ளை வெளியிட்டுள்ளார்.

சிங்கம்பட்டிச் ஜமீனில் பணியாற்றிய ஈனமுத்துவின் கள்ளக் காதலைக் கூறும் 'ஈனமுத்துப் பாண்டியன் கதை'யை (826 அகவலடி) 1974ஆம் ஆண்டு சண்முகசுந்தரம் தமிழாய்வு இதழில் வெளியிட்டுள்ளார்.

இரட்டைக் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலையில் இடம்பெற்று இருக்கும் உதயகுமாரன் பாத்திரத்தின் கதையை தனித்துக் கூறும் 'உதயகுமார காவியம்' (120) எனும் நூலை 1930ஆம் ஆண்டு தமிழ்ப்பொழில் இதழில் வீ. சண்முகம் வெளியிட்டுள்ளார்.

பாண்டிய நாட்டில் உதயத்தூர்ப் பகுதியில் வாழ்ந்த கரையர்கள் என்ற இனத்தாரின் வாழ்க்கை வரலாற்றைக் கூறும்

'உதயத்தூர் புலைமாடத்தி வரத்து'வை (257 அகவலடி) 1994ஆம் ஆண்டு தமிழ்க்கலையில் மோ.கோ. கோவைமணி வெளியிட்டுள்ளார்.

வரம்கொடுத்த சிவன் தலையிலேயே கை வைக்கத் துணிந்த அரக்கன் பஸ்மாசூரனின் கதையை வில்லுப்பாட்டு முறையில் அமைந்த 'ஐயனார் கதை'யை (831 அகவலடி) 2000ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் சு. சௌந்தரபாண்டியன் வெளியிட்டுள்ளார்.

கம்பராமாயணத்தின் அருமை பெருமைகளை எடுத்துக் கூறும் கே.என். சிவராஜ பிள்ளையின் 'கம்பராமாயணக் கௌஸ்துபம் அல்லது கம்பராமாயணக் கவுத்துவமணிமாலை' (461) 1927ஆம் ஆண்டு குமரன் இதழில் முதல் பன்னிரு பாடல்கள் ஆசிரியரால் அறிமுகம் செய்யப்பெற்றுள்ளது. பின்னர் 1928-29ஆம் ஆண்டு செந்தமிழ் இதழ்ப் பகுதிகளில் முதல் 16 பாடல்களுக்கு விளக்க உரையுடனும் அடுத்த 89 பாடல்கள் மூலத்துடனும் வெளிவந்துள்ளன. 1979ஆம் ஆண்டு தமிழாய்வு இதழில் நூல் முழுமையும் மு. சண்முகம்பிள்ளை தம்முடைய அடிக்குறிப்புடன் வெளியிட்டுள்ளார்.

சிவனையன்றி வேறு யாரையும் வணங்காத அமராபதிச் செட்டிச்சியின் சிவபக்தியையும் முப்பத்திரண்டு தானங்களையும் அவ்ளது வாழ்க்கை நிகழ்ச்சிகளோடு இணைத்துக் கூறும் 'செட்டிச்சியம்மாள் கதை'யை (593 அகவலடி) 1999ஆம் ஆண்டு சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழில் ச. திலகம் வெளியிட்டு உள்ளார்.

நாட்டுப்புறத்தாரின் வாழ்வியலை உணர்த்தும் நாட்டுப் புறப்பாடல்களின் தொகுப்பான 'நாடோடிப் பாடல்கள்' (75) எனும் நூலை 1995ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் எஸ். தியாகராஜன் வெளியிட்டுள்ளார்.

அளகாபுரி என்னும் ஊரினை ஆண்ட அழகேந்திரனின் போதவாதித்தன், போதவிபூஷணன், போதவியாகரன்,

போதசந்திரன் ஆகிய நான்கு அமைச்சர்களுக்குள் நடந்த தலைமைப் பீடப் போட்டியில் நிகழ்ந்த சூழ்ச்சிக்கதையினை மையமாகக் கொண்ட சின்னத்தம்பியின் 'நாலுமந்திரி கதை'யை (469) 1962ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் த. கிருட்டினமூர்த்தி வெளியிட்டுள்ளார். இதனின்றும் வேறான நாலுமந்திரி கதைகள் பல உண்டு.

சந்திரகுல திலகனாகிய புரூரவ சக்கரவர்த்தியின் வாழ்க்கையைக் கூறும் 'புரூரவ சரிதை'யை (845) 1922-25ஆம் ஆண்டு செந்தமிழ் இதழ்ப் பகுதிகளில் மு. இராகவையங்கார் வெளியிட்டுள்ளார்.

சூரிய குலத்தில் தோன்றிய பூர்வச்சக்கரவர்த்தி எனும் மன்னனுக்குச் சனி தோசத்தால் நிகழ்ந்த இன்னல்களையும் அதனால் அம்மன்னன் நாடு, நகரம் அனைத்தும் இழந்து அல்லல் பட்டதையும், ஏழரை ஆண்டு கழித்து மீண்டும் பழைய நிலைக்கு வந்ததையும் விளக்கும் கருப்பனேந்திரனின் 'பூர்வச்சக்கரவர்த்தி நாடகம்' (267) எனும் நூலை 1974ஆம் ஆண்டு தேனோலை இதழில் கொடிமுடி சண்முகப்பிரகதம் வெளியிட்டுள்ளார்.

திருநெல்வேலி - கோபாலசமுத்திரத்தில் வாழ்ந்த மெச்சும்பெருமாள் பாண்டியனின் வாழ்க்கை வரலாற்றைக் கூறும் 'மெச்சும்பெருமாள் பாண்டியன் கதை'யை (2527 அகவலடி) 1975ஆம் ஆண்டு தேனோலை இதழில் சு. சண்முக சுந்தரம் தம்முடைய குறிப்புரை மற்றும் ஆய்வுரையுடன் வெளியிட்டுள்ளார்.

ஸ்ரீவாமனந்தாச்சாரியாரின் மேருமந்தரர் சரித்திரத்தின் சுருக்கமாக அமைந்த பார்சுவநாதனின் 'மேருமந்தரமாலை'யை (994 அகவலடி) 1978ஆம் ஆண்டு தமிழாய்வு இதழில் மு. சண்முகம்பிள்ளை வெளியிட்டுள்ளார்.

இராமபிரானுடைய கதையைப் பல்வகை விருத்தங்களில் படலம் படலமாக வகுத்து அந்தாதித் தொடையால் அமைந்த 'ராமசரிதப்பாட்டு' (21 குறை) முதலிரு படலங்களை 1915ஆம்

ஆண்டு செந்தமிழ் இதழில் து.அ. கோபிநாதராவ் வெளியிட்டு உள்ளார். இதற்குமுன் இந்நூல் பாஷா போஷிணீ எனும் மலையாள மாத இதழில் பிரும்மஸ்ரீ எஸ். பரமேசுவர ஐயர் நூல் முழுமையும் வெளியிட்டுள்ளார்.

தஞ்சையை ஆண்ட சோழ மன்னர்களுள் மனுநீதிச் சோழன் நீதி தவறாமல் வாழ்ந்தவன். அவனுடைய கதையை மையமாகக் கொண்டு ஒரு மன்னன் செய்யக் கூடாதன, செய்யக் கூடியன என்பனவற்றைத் தெளிவுபடுத்தும் விதமாக உரைநடையில் அமைந்த 'தேரூர்ந்த சோழன் கதை'யை 1989ஆம் ஆண்டு சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழில் ச. திலகம் வெளியிட்டுள்ளார்.

ஐ. திரட்டு நூல்கள்

வெவ்வேறு நூலாசிரியர்களின் ஒருபொருள் குறித்த நூல்கள்/பாடல்களையோ, ஒரே நூலாசிரியரின் வெவ்வேறு பொருள் குறித்த நூல்கள்/பாடல்களையோ, ஒரே வகையான யாப்பும் பொருண்மையும் கொண்ட நூல்கள்/பாடல்களையோ ஒன்றாகத் திரட்டுவதைத் 'திரட்டு' நூல்கள் என்பர். சங்க இலக்கியந் தொடங்கி இவற்றின் அமைப்பு காணப்படுகின்றது. இவ்வகையில் இரண்டு திரட்டு நூல்கள் பருவ இதழ்களில் வெளிவந்திருக்கின்றன.

சரஸ்வதிமகால் நூலகச் சுவடிகளிலுள்ள தனிப்பாடல்களின் தொகுப்பாக அமைந்த 'பழைய பாடற்றிரட்டு' (93) எனும் நூலை 1937ஆம் ஆண்டு தமிழ்ப்பொழில் இதழில் எல். உலகநாத பிள்ளை வெளியிட்டுள்ளார்.

புறத்திரட்டில் பல இடங்களில் குறிப்பிடப்பெற்ற 41 பாடல்கள் மற்றும் நச்சினார்க்கினியர் உரைகளில் காட்டிய 79 பாடல்கள் ஆக 120 பாடல்களைப் 'பெரும்பொருள் விளக்கப் பாடல்கள்' என்று செந்தமிழ் வெளியிட்டுள்ளது.

ஒ. பல்வகை நூல்கள்

குறிப்பிட்ட வகைக்குள் உட்படுத்த முடியாத ஏனைய வற்றைப் பல்வகை நூல்கள் என்பர். இவ்வகையில் இன்ன

பொருண்மை என்று உறுதியாகக் கூற முடியாதனவெல்லாம் இடம்பெறும். பருவ இதழ்களில் ஐந்து நூல்கள் இவ்வகையில் வெளிவந்திருக்கின்றன.

கதையின்றி, மாந்தரின்றி, மன்மதன் இயல்புகளையும் தோற்றத்தையும் அவனால் ஏற்படும் தாக்கங்களையும் சுருக்க மாகக் கூறும் 'அலங்கார நூல்' (15) 1997ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் வெளிவந்துள்ளது.

சதுரங்க விளையாட்டைச் சித்திரக் கவிகளில் உணர்த்தும் 'சதுரங்க நூல்' எனும் நூலை 1926ஆம் ஆண்டு செந்தமிழ் இதழில் கி. இராமாநுஜையங்கார் வெளியிட்டு உள்ளார்.

'நாராயணன் திருவடிகளை அடைந்து உய்வாயாக' என்று மனதுக்கு உபதேசம் செய்வதாக அமைந்த 'நெஞ்சுபதேசக் கீர்த்தனங்கள்' (34) எனும் நூலை 1952ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் வி.எஸ். கிருஷ்ணன் வெளியிட்டுள்ளார்.

இறைப்பெருமைகளை மக்களின் செயற்பாடுகளோடு ஒப்பிட்டு மக்களை வழிநடைப்படுத்துவதாக அமைந்த வண்ணச்சரபரின் 'பதிக உந்தி நூல்' (13) 1990ஆம் ஆண்டு மாதாந்திர அமுதம் இதழில் வெளிவந்துள்ளது.

நித்திய அநித்தியப் பொருட்களைப் பகுத்தறிதல், இம்மை மறுமை இன்பங்களின் இச்சையறுத்தல் போன்ற பல பொருள்களைப் பற்றிக் கூறும் பரிபூரணரின் 'பரிபூரண சித்தி'யை (156) 1965ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் பூ. சுப்பிரமணியம் வெளியிட் டுள்ளார்.

இதுவரை அச்சில் வராததாகக் கருதப்பெறும் 'பன்னி லூறும் பழத்தினு மின்சுவை' எனும் அப்பர் பாடலைச் சித்தாந்தம் இதழில் 1961ஆம் ஆண்டு ந.ரா. முருகவேள் வெளியிட்டுள்ளார்.

இதுவரை அச்சில்வராத 'பூரி சம்பக மாலா பூதர்', 'தினமொரு கவிதை யேனு'ம் எனத் தொடங்கும் அருணகிரி யாரின் இரண்டு திருப்புகழ்ப் பாடல்கள் 1937ஆம் ஆண்டு சித்தாந்தம் இதழில் வெளிவந்துள்ளன.

தொகுப்புரை

- ஆய்வுக்குப் பயன்படுத்தப்பெற்ற 408 பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகளில் 184 பருவ இதழ்ச் சுவடிப் பதிப்புகள் பருவ இதழ்களிலேயே நிலைத்துவிட்டவை யாக அறியமுடிகின்றது.
- புகழ்பெற்ற சுவடிப்பதிப்பாசிரியர்களின் குறைப் பதிப்புகளும், ஏனையோரின் பதிப்புகளும் இவற்றில் இடம்பெற்றுள்ளன என்பது தெரிகிறது.
- தமிழிலக்கியத்திற்கு வளம் சேர்க்கும் விதத்தில் பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகள் அமைந்திருப்பதைக் காணும்போது சுவடிப்பதிப்பு வரலாற்றில் பருவ இதழின் பங்கு தெளிவாகத் தெரிகின்றது.
- பருவ இதழ்களில் நிலைத்துவிட்ட சுவடிப்பதிப்புகளை வெளிக்கொணரும் போது பல பதிப்பாசிரியர்கள் தமிழுலகிற்கு அறிமுகமாகின்றனர்.
- சுவடிகள் அழிந்த நிலையில் அச்சுவடிகளை வெளி யிட்ட பருவ இதழ்களே இன்று சுவடிகளாக மாறி யுள்ளன.
- பருவ இதழ்களில் நிலைத்துவிட்ட சுவடிப்பதிப்புகளில் பெரும்பான்மை குறையுடையனவாகவும், சிறியன வாகவும் இருப்பது தெரிகின்றது.
- இரண்டு பாடல்கள் கொண்ட 'பஞ்சநதீசுரர் தோத்திரம்' முதல் 4000 பாடல்கள் கொண்ட 'குருபரம்பரை' வரை பருவ இதழ்களில் வெளிவந்து இருப்பதைப் பார்க்கும்போது சிறிய/பெரிய நூல் என்று பாகுபாடு காட்டாமல் பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகள் வெளிவந் திருப்பது தெரிகிறது.

- இன்ன வகை இலக்கியந்தான் பருவ இதழ்களில் வெளிவரவேண்டும் என்ற நியதி இல்லை. பருவ இதழ்களில் நிலைத்துவிட்ட சுவடிப்பதிப்புகளின் வகைகளைக் காணும்போது இந்நிலை புலப்படுகின்றது. அதாவது காப்பியம், புராணம், தத்துவம், நீதி இலக்கியம், இலக்கணம், சிற்றிலக்கியம் (51 வகைகள்), வாழ்க்கை வரலாற்றிலக்கியம், நாட்டுப்புற இலக்கியம், திரட்டு நூல்கள், பல்வகை நூல்கள் போன்ற பத்து வகைகள் அமைந்திருப்பதைக் காணமுடிகிறது.

- இவ் இயலில் கையாளப்பெற்ற 184 நூல்களில் பெரும்பான்மை தமிழ் இலக்கிய வரலாற்றில் இடம் பெறாதவை. இவற்றையும் தமிழிலக்கிய வரலாற்றில் உட்படுத்தினால் தமிழிலக்கியத்தின் எண்ணிக்கை பெருகுவதோடு அதன் வரலாற்றுப் பரப்பும் விரியும். குறிப்பாக, சிற்றிலக்கிய வரலாறு விரிவடைகின்றது. அதாவது 184 நூல்களில் 129 நூல்கள் சிற்றிலக்கிய வகைகளாகவே அமைந்து இந்நிலையினை உணர்த்துகின்றது.

- புதுவகையான சிற்றிலக்கியங்களையும் பருவ இதழ்கள் அறிமுகப்படுத்துகின்றன.

- இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் காண்பது போல், சில இலக்கியங்களின் இலக்கணங்களை மாற்றுவது போலவும், சில இலக்கியங்களுக்கு இலக்கணங்களை உருவாக்குவது போலவுமான நூல்கள் பருவ இதழ்களில் வெளிவந்திருப்பது தெரிகின்றது.

- இவற்றையெல்லாம் பார்க்கும்போது சுவடிப்பதிப்பு வரலாற்றில் பருவ இதழ்கள் ஓர் அங்கமாக விளங்கி வருகின்றது என்பதை உணரலாம்.

6. பருவ இதழ்ச் சுவடிப்பதிப்பு வரலாறு

தமிழகத்தில் வெளிவந்த இலக்கியப் பருவ இதழ்களில் வெளியிடப்பெற்ற நூல்களில் சுவடிப்பதிப்பு நூல்கள் சிறப்பிடம் பெறுகின்றன. இச்சுவடிப் பதிப்புகளைப் பருவ இதழ்ச் சுவடிப்பதிப்பிற்கு முன்-பின் தனிநூற்பதிப்புகள் என்றும், தனிநூற்பதிப்பிற்குப் பின் பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகள் என்றும், பருவ இதழ்ச் சுவடிப்பதிப்பிற்குப் பின் தனிநூற் பதிப்புகள் என்றும், பருவ இதழ்ச் சுவடிப்பதிப்பின் தனிநூற் பதிப்புகள் என்றும், பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகள் என்றும் பாகுபாடு செய்து காணலாம். இந்நிலைகளில் எல்லாம் வெளிவந்த சுவடிப்பதிப்புகளுக்குப் பதிப்பு வரலாறு கூறும் முகத்தான் இப்பகுதி அமைகிறது.

அகப்பொருள் விளக்கம்

நாற்கவிராச நம்பியின் ‘அகப்பொருள் விளக்கம்’ எனும் இலக்கண நூல் அகத்திணையியல், களவியல், வரைவியல், கற்பியல், ஒழிபியல் ஆகிய ஐந்து இயல்களும் முறையே 115, 54, 29, 10, 43 சூத்திரங்களையும் பாயிரம் ஒன்றும் ஆக 252 சூத்திரங்களாலானது. இந்நூலுக்கு ஆசிரியரே உரையும் வரைந்துள்ளார். இவ்வுரையுடன் பொ. பாண்டித்துரைத் தேவர் தம்முடைய உதாரணச் செய்யுள்களையும் சேர்த்து 1910-13ஆம் ஆண்டு ‘செந்தமிழ்’ இதழ்ப் பகுதிகளில் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1913ஆம் ஆண்டு செந்தமிழ் வெளியீடாக வெளிவந்துள்ளது. இதற்கு முன்னர் இந்நூல் யாழ்ப்பாணம் வல்வை வைத்தியலிங்கம் பிள்ளை (1878), யாழ்ப்பாணம் சிவானந்தையர் (1907), சுன்னாகம் குமாரசாமிப் புலவர் மற்றும் திருக்கோணமலை கனகசுந்தரம் பிள்ளை (1912)

போன்றோரின் உரையுடன் வெளிவந்துள்ளது. இவ்வுரைகளுக்குப் பிறகு கா.ர. கோவிந்தராச முதலியாரின் குறிப்புரை (1943, 1947, 1951, 1956, 1966, 1973, 1979)யும், இராமம. கோவிந்தசாமிப் பிள்ளையின் விளக்கவுரை (சரஸ்வதிமகால் நூலகம், 1962)யும், அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடும் (1977) வெளிவந்துள்ளன. பல்வேறு உரைகளுடன் இந்நூல் இதுவரை பதிப்பிக்கப் பெற்றிருந்தாலும் நூலாசிரியரின் உரை பருவ இதழில் அறிமுகமாகித் தனிநூலானது இங்குச் சுட்டத்தகும்.

அகராதி நிகண்டு

'சூத்திர அகராதி', 'ரேவண சித்தியார் சூத்திரம்' என்று வழங்கப்பெறும் 'அகராதி நிகண்டு' 3368 சூத்திரங்களாலானது. தமிழில் மொழிக்கு முதலாக வரக்கூடிய உயிர் வருக்கங்களான அ, க, ச, ஞ, த, ந, ப, ம, ய, வ ஆகிய பத்தும் பத்துத் தொகுதிகளாக அமைந்துள்ளன. இதனுள் ஒரு பெயரை எடுத்து அதற்கு ஒருபொருள் முதல் 46 பொருள்கள் வரை உள்ளவற்றை அம்முதல் ஒருபெயர், அம்முதல் இருபெயர், அம்முதல் முப்பெயர்.... என்று முறையாக 46 அம்முதல் சொற்களைச் சொல்வதோடு பொருளை எண்ணிட்டும் சொல்லும் இந்நூலாசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலைத் திரு. நாராயணனையங்கார் 1920ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழ்ப் பகுதிகளில் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1921ஆம் ஆண்டு செந்தமிழ் வெளியீடு 42ஆக வெளிவந்துள்ளது. இதே பெயரில் வேறொரு 'அகராதி நிகண்டு' உள்ளது. இதை இரா. நாகசாமி 1983ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார்.

அகவல் பா

கொற்றவன்குடி உமாபதி சிவாசாரிய சுவாமிகளின் 'அகவல் பா' 38 அகவல் வரிகளாலானது. திருமுறைகளில் இடம்பெற்றுள்ள பண்களையும் அவற்றின் பெயர்களையும் இந்நூல் குறிப்பிடுகின்றது. திருமுறைகளில் இடம்பெற்றுள்ள பண்களின் வகைகளைக் கூறும் இந்நூல் 1959ஆம் ஆண்டு 'குமரகுருபரன்' இதழில் வெளிவந்துள்ளது.

அசதிக்கோவை

ஔவையாரின் 'அசதிக்கோவை' எனும் நூல் ஔவையார் பசித்து இருந்தபோது ஐவேலியைச் சேர்ந்த அசதி என்பவன் தமக்காக வைத்திருந்த பழங்கஞ்சியை ஔவைக்குக் கொடுத்துத் தாம் பட்டினியாகக் கிடந்தான். இவனது பெருமையை எண்ணி ஔவையார் 'அசதிக்கோவை'யைப் பாடினார். இந்நூல் முழுதும் கிடைக்கவில்லை. இதுவரை இந்நூலின் பத்துப் பாடல்களே கிடைத்துள்ளன. இவற்றில் முதல் ஒன்பது பாடல்கள் மாத்ருபூதமையரின் நந்தமண்டலச் சதகத்தின் உரையாசிரியர் ப. திருவேங்கடம் உரையின் இறுதியிலும், குருசாமிக்கோனாரின் கோகுல சதகத்தின் (1914) இறுதியிலும் இடம்பெற்றுள்ளன. இவ் அசதிக்கோவைப் பாடல்களைப் பு. சிதம்பர புன்னைவனநாதன் 1922ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழில் பதிப்பித்துள்ளார். மயிலை சீனி. வேங்கடசாமியின் 'மறைந்துபோன தமிழ் நூல்கள்' (1959) எனும் நூலிலும் இவ்வொன்பது பாடல்களே இடம்பெற்றுள்ளன. இவ்வொன்பது பாடல்களல்லாமல் கொங்கு மண்டல சதகவுரை மேற்கோளாக ஒரு பாடல் வந்துள்ளதையும் இணைத்து மு. அருணாசலம் தம்முடைய 'தமிழ் இலக்கிய வரலாறு - 12ஆம் நூற்றாண்டு' (1973) எனும் நூலில் பத்துப் பாடல்களாகக் காட்டியுள்ளார்.

அச்சில் விடுபட்ட அப்பர் பாடல்

அப்பர் சுவாமிகள் என்று போற்றப்படும் திருநாவுக்கரசரின் தேவாரத் திருமுறை (4,5,6)களில் 312 திருப்பதிகங்கள் 3066 பாடல்கள் இடம்பெற்றிருக்கின்றன. இப்பாடல்களில் இடம்பெறாதது,

"பன்னி லூறும் பழத்தினு மின்சுவை
யென்னி லூறி யெனக்கே களிதரு
முன்னி லுன்னுமுன் னாவிடில் விட்டிடு
மென்னு ளீச னிருந்த வியற்கையே"

எனும் பாடலாகும். இது அப்பர் பாடல் அன்று. அவர் பாடல் போன்று விளங்கும் பிறிதொருவர் பாடல் என்று

கூறுவாருமுளர். இப்பாடலைச் சித்தாந்தம் இதழில் 1961ஆம் ஆண்டு ந.ரா. முருகவேள் வெளியிட்டுள்ளார்.

அடிமதிக்குடி அய்யனார் பிள்ளைத்தமிழ்

தென்னார்க்காடு மாவட்டத்தில் திருக்கோவலூர் வட்டத்தில் அடிமதிக்குடி என்னும் ஊர் உள்ளது. இவ்வூரில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அய்யனாரின் மீது பாடப்பெற்ற இந்நூல் அவர்தம் பெருமைகளையும் புகழையும் இனிய எளிய நடையில் கூறுகின்றது. பருவத்திற்கு ஐந்து பாடல்கள் வீதம் ஐம்பது பாடல்களாலான இந்நூல் 'யோகி சாத்தையர் பிள்ளைத்தமிழ்' என்றும் பதிப்பாகியுள்ளது. இந்நூலாசிரியர் பெயர் தெரியவில்லை. சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலக வெளியீடான 'பிள்ளைத்தமிழ்க் கொத்து - இரண்டாம் பாகம்' (1959) எனும் தொகுப்பு நூலில் ஐந்தாவதாக 'யோகி சாத்தையர் பிள்ளைத்தமிழ்' இடம்பெற்று உள்ளது. இதுவொரு குறைப்பதிப்பாகத் திகழ்கின்றது. இந்நூலின் முற்பகுதிகள் கிடைக்காமையால் நூற்பெயர் தவறுதலாக அச்சிடப்பெற்றுள்ளது என்பார் மு. சண்முகம் பிள்ளை. பேரா. மு. சண்முகம் பிள்ளை 1975ஆம் ஆண்டு 'தமிழாய்வு' இதழில் 'அடிமதிக்குடி அய்யனார் பிள்ளைத்தமிழ்' எனப் பதிப்பித்திருக்கின்றார். இவ்விரு நூற்பதிப்புகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது அடிமதிக்குடி அய்யனார் பிள்ளைத் தமிழின் பிற்பகுதியாக யோகி சாத்தையர் பிள்ளைத்தமிழ் அமைந்துள்ளமை தெரிகின்றது.

அட்டாங்க யோகக் குறள்

இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியா காரம், தாரணை, தியானம், சமாதி ஆகிய எட்டு யோக உறுப்புக்களைப் பற்றிக் கூறுவது 'அட்டாங்க யோகக் குறள்'. இது 65 குறட்பாக்களாலானது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலைச் சே.ரா. சுப்பிரமணியக் கவிராயர் 1904ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழ்ப் பகுதிகளில் வெளியிட்டு உள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1905ஆம் ஆண்டு

'செந்தமிழ்' வெளியீடு 10ஆவதாக வெளிவந்துள்ளது. இதன் இரண்டாவது பதிப்பு 'வருத்தமறவுய்யும்வழி' யுடன் 1923ஆம் ஆண்டு 'செந்தமிழ்' வெளியீடு 10ஆவதாக வெளிவந்துள்ளது.

அணிமுருகாற்றுப்படை

"பரங்குன்றிற் பன்னிருகைக் கோமான்றன் பாதங்
கரங்கூப்பிக் கண்குளிரக் கண்டு - சுருங்காமல்
ஆசையால் நெஞ்சே அணிமுருகாற் றுப்படையைப்
பூசையாக் கொண்டே புகல்"

எனும் வெண்பாவுடன் இந்நூல் 41 அகவலடிகளாலானது. முருகப்பெருமானின் வடிவழகும் அவன் திருமேனியலங்கார அமைப்பும், வள்ளி-தெய்வயானை ஆகியோரின் இருப்பிட அமைப்பும், மயில்-வேல் ஆகியவற்றின் வனப்பும் இதில் அழகுற எடுத்துக்காட்டப் பெற்றுள்ளன. இந்நூலாசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை (வெண்பா 1, அகவலடி 41) சித்தாந்தம் இதழில் எம்.பி.எஸ். துரைசாமி முதலியார் 1937ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார்.

அண்டபுராணம்

அண்டத்திலுள்ள பொருள்களைப் பற்றிக் கூறுகின்ற 'அண்டபுராணம்' முழுமையும் கிடைக்கவில்லை. பல படலங்களின் வழியே இந்நூல் அமைக்கப்பெற்று ஒவ்வொரு படலமும் இருபது முதல் முப்பது விருத்தங்களைக் கொண்டு உள்ளது. இந்நூலில் கொதுகின் சிறப்புப் படலம், மூட்டுப் பூச்சியின் சிறப்புப் படலம், காபிச் சிறப்புப் படலம், தேயிலைச் சிறப்புப் படலம், புகையிலைச் சிறப்புப் படலம், வெங்காய விசயப் படலம், கலியுக மாந்தர் சிறப்புப் படலம் போன்ற படலங்களே இதுவரை கிடைத்துள்ளன. இந்நூலை 1929ஆம் ஆண்டு கலாநிலையம் இதழில் டி.எஸ். இராமச்சந்திர ஐயர் கிடைத்த குறைச்சுவடியைக் கொண்டு வெளியிட்டுள்ளார்.

அநுபோக ரத்னமாலை

இதுவொரு 'இரங்கற்பா'. ஸ்ரீஆவுடையக்காள் என்கிற ஸ்ரீமதி கோமதிராஜாங்கம் என்பாரால் பாடப்பெற்ற இந்நூல்

287 அகவலடிகளாலானது. திருவிசயநல்லூர் அய்யா என்ற ஸ்ரீதரவெங்கடேசாசார்யர் மீது பாடப்பெற்ற இந்நூலில், குருதேவர் மீதுள்ள ஆழ்ந்த பக்தியும், அவரது அனுபூதியும், பெருமையும், உயர்ந்த வேதாந்தக் கருத்துக்களும் இடம்பெற்றுள்ளன. இந்நூல் 1966ஆம் ஆண்டு ஸ்ரீசங்கர க்ருபா இதழில் வெளிவந்துள்ளது.

அப்பாண்டைநாதர் உலா

அனந்தவிசயரின் 'அப்பாண்டைநாதர் உலா' 620 கலிவெண்பாவும், 2 காப்பு வெண்பாவும், 3 நூற்பயன் உரைக்கும் வெண்பாவும் ஆக 625 பாடல்களாலானது. தென்னார்க்காடு மாவட்டத்தில் திருநறுங்கொண்டை எனும் ஊரின் மலைத் தொடரில் உள்ள பாறையில் பகவான் பாரிசுவநாதரின் திருவுருவம் பொறிக்கப்பட்டுள்ளது. இவரை 'அப்பாண்டை நாதர்' எனவும் வழுங்குவர். அப்பாண்டை நாதரைத் தரிசித்த பருவ மங்கையர் அவருடைய தெய்வீக ஒளியில் ஈடுபட்டு அவருடைய பெருமையைப் பலவாறு போற்றித் துதிப்பதாக இந்நூல் அமைந்துள்ளது. இந்நூல், மயிலை சீனி. வேங்கட சாமியால் 1961ஆம் ஆண்டு 'நல்லறம்' இதழில் முதல் 47 கண்ணிகள் வரை வெளியிடப்பெற்றுள்ளது. இதனையடுத்து மு. சண்முகம் பிள்ளை 1974ஆம் ஆண்டு 'தமிழாய்வு' இதழில் வெளியிட்டுள்ளார். இந்நூல் தமிழாய்வில் வெளிவருவதற்கு முன்பே 1972ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழக வெளியீடாக மு. சண்முகம் பிள்ளையால் வெளியிடப்பெற்றுள்ளது. 1972ஆம் ஆண்டுப் பதிப்பைக் கண்ட தமிழறிஞர் பலர் தெரிவித்துதவிய மூலபாடத் திருத்தங்கள் பல பெற்று 1974ஆம் ஆண்டு தமிழாய்வுப் பதிப்பு வெளிவந்து உள்ளது.

அமுதரஸ மஞ்சரி

அழகிய சிற்றம்பல முதலியாரின் 'அமுதரஸ மஞ்சரி' 370 கண்ணிகளாலானது. இந்நூல் தளவாய் திருமலையப்ப முதலியாரின் வீரம், தானம், குணங்கள், சிறப்புகள் போன்ற

வற்றை நயம்பட உரைக்கின்றது. இந்நூலை 1976-77ஆம் ஆண்டு கல்வெட்டு இதழ்ப் பகுதிகளில் இரா. நாகசாமி வெளியிட்டுள்ளார்.

அம்பிகை நவமணிமாலை

அம்பிகையின் புகழைப் பாடும் இந்நூல் ஒன்பது பாடல்களாலானது. பாராயணம் செய்யும் விதமாக அமைந்த இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை 1950ஆம் ஆண்டு செந்தமிழ் இதழில் த.ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை வெளியிட்டுள்ளார்.

அருங்கலச்செப்பு

சைவ சமயத்தில் இல்லற ஒழுக்கங்களைக் கூறும் இந்நூல் 180 குறள் வெண்பாவாலானது. வரை பாய்தல், தீப்புகுதல், ஆறாடல் ஆகியவற்றில் ஈடுபடும் உலக மயக்கம், மயக்கமும் ஆர்வமும் செற்றமும் உடையாரை ஏத்துகின்ற தெய்வ மயக்கம், பிற மயக்கங்கள், எண்வகை மதங்கள், தீ நெறிகள், அவை யறுக்கப்பெறும் வழிகள் போன்றவற்றையும்; நற்காட்சி பெற்றார் அடையும் பெருமைகளையும் எடுத்தியம்புவதாக இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலாசிரியர் பெயர் தெரிய வில்லை.

பாகுபலி நயினார் 1883ஆம் ஆண்டு திருக்கலம் பகத்துடனும் (காஞ்சிபுரம் இயற்றமிழ் விளக்க அச்சுக்கூடம்), 1941ஆம் ஆண்டு எஸ். ஜெயராமையாவும், எஸ். இராஜம் 1959ஆம் ஆண்டு பொருள் தலைப்புடன் கொண்ட ஒரு திருத்தமான பதிப்பை அறநெறிச்சாரத்துடனும், 1960ஆம் ஆண்டு க.சுகுமாரனின் உரைப்பதிப்பும் என அருங்கலச் செப்பு வெளிவந்துள்ளது. இப்பதிப்புகளைத் தொடர்ந்து பூ. சுப்பிர மணியம் 1972ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ்ப் பகுதிகளில் பொழிப்புரை யுடன் வெளியிட்டுள்ளார். பின்னர் க.ப. அறவாணனின் உரையுடன் 1977ஆம் ஆண்டு சென்னை ஜைன இளைஞர் மன்றத்தினர் வெளியிட்டுள்ளனர்.

அருட்பா மாலை

அழகிய சிற்றம்பல தேசிகரின் 'அருட்பா மாலை' 20 விருத்தங்களாலானது. முதல் பத்து விருத்தங்கள் விநாயகப் பெருமான் மீதும், அடுத்த பத்து விருத்தங்கள் முருகப் பெருமான் மீதும் பாடப்பெற்றுள்ளன. 'அச்சந் தீர்த்த விநாயகனே', 'அருளு மறுமுகத் திருவருட் கடலே' ஆகிய ஈற்றடிகள் முறையே விநாயகருக்கும் முருகருக்கும் என அமைந்துள்ளன. விநாயகர் அருட்பா மாலையில் விநாயகப் பெருமானின் பெருமைகளும் சிறப்புகளும்; முருகப்பெருமானின் அருட்பா மாலையில் முருகப்பெருமானின் பெருமைகளும் சிறப்புகளும் கூறப்பெற்று உள்ளன. விநாயகர் அருட்பா மாலை, முருகர் அருட்பா மாலை ஆகிய மாலைகளை 1938ஆம் ஆண்டு சிந்ததாந்தம் இதழில் திருவாரூர் எஸ். சோமசுந்தர தேசிகர் வெளியிட்டுள்ளார்.

அரும்பொருள் விளக்க நிகண்டு

அருமருந்தைய தேசிகரின் 'அரும்பொருள் விளக்க நிகண்டு' 700 செய்யுள்களாலானது. சூடாமணி நிகண்டு பதினோராம் தொகுதியின் முறைமையைப் பின்பற்றி இந்நூல் அமைந்துள்ளது. இந்நூல் ககர வெதுகை முதல் னகர வெதுகை ஈறாகப் பதினெட்டு எழுத்துகளுக்கும் தனித்தனியே தலைப்பு கொடுத்து எழுதப்பெற்று உள்ளது. இந்நூலை எஸ். வையாபுரிப்பிள்ளை 1929-32ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழ்ப் பகுதிகளில் பதிப்பித்துள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1931ஆம் ஆண்டு செந்தமிழ் வெளியீடு 54ஆவதாக வெளிவந்து உள்ளது.

அருவியன் காதை

அருவியனின் வாழ்க்கை வரலாற்றைக் கூறும் இந்நூல் 123 பாடல்களாலானது. அருவியன், உருதேசி, புலுதன் ஆகிய மூவரைச் சுற்றி இக்கதை அமைந்துள்ளது. அருவியனும் உருதேசியும் கணவன் மனைவியர். அருவியன் ஓர் இசைப் புலவன். ஒருநாள் வனவளங் கண்டு கொண்டிருந்த அருவியன்,

உருதேசி ஆகிய இருவரில் பாதலத்து அரசன் புலுதனின் சூழ்ச்சியால் உருதேசி மாள்கிறாள். உருதேசியை மீட்க பாதலம் சென்ற அருவியன் புலுதன் முன் இசைப்பாடல்கள் பல பாடுகின்றான். இதனைக் கேட்ட புலுதன் 'மனமிறங்கி உருதேசிக்கு உயிரளித்தேன். அவள் நின்னைப் பின் தொடர்ந்து வரக்கடவள். ஆனால் இப்பாதலம் நீங்கிப் பூமியில் அவள் அடியெடுத்து வைத்த பின் தான் நீ அவளைப் பார்க்கவேண்டும். அதற்குமுன் திரும்பிப் பார்ப்பாயாயின் நீ அவளை இழந்து விடுவது திண்ணம்' என்று கூறி விடுவிக்கின்றான். இதன்படி அருவியன் பாதல இருளைவிட்டு வெளிவந்ததும் உருதேசியைத் திரும்பிப் பார்க்கின்றான். அப்போது உருதேசி பாதல இருளை விட்டு வெளிவராதிருந்தாள். இதனால் உருதேசி மீண்டும் மாண்டுவிடுகிறாள் என்பதே இக்கதை. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை 1913-15ஆம் ஆண்டு தமிழன் (திருவனந்தபுரம்) இதழ்ப் பகுதிகளிலும், 1922-23ம் ஆண்டு செந்தமிழ் இதழ்ப் பகுதிகளிலும் கே.என். சிவராஜ பிள்ளை வெளியிட்டுள்ளார்.

அருள்முருகாற்றுப்படை

> "என்னுடைய நாத னெழுத்தாறு பாவாறு
> மின்னுந் தலந்தாமு மீராறு - மன்னுமுக
> மோராறு வேதத்தி னுள்ளாறு பொன்னெடுந்தோ
> ளீராறு கண்ணா றிரண்டு"

என்ற தொடக்க வெண்பாவையும்,

> "பாலைப் பதியுறைவாய் பன்னிரண்டு தோளுடையாய்
> மாலைக் கடம்புபடர் மார்புடையாய் - காலையினுஞ்
> செய்யாய் வரைகிழியச் செவ்வேல் விடுத்தருளுங்
> கையா கடைபோகக் கா"

என்ற இறுதி வெண்பாவையும் கொண்ட இந்நூல் 69 அகவலடிகளாலானது. இது முருகப் பெருமானின் அருள் உருவச் சிறப்பை எடுத்துக் கூறுகின்றது. முருகப் பெருமானின் தெய்வயானை-வள்ளி ஆகியோருடனான திருமணக்கோலமும், அவனது பன்னிரு தோள்களின் சிறப்பும், ஆறுமுகத்தின்

பெருமையும், பன்னிரு கைகளின் நிலையும் பற்றிச் சுருக்கமாக இந்நூல் எடுத்துக் கூறுகிறது. இந்நூலைச் சித்தாந்தம் இதழில் எம்.பி.எஸ். துரைசாமி முதலியார் 1937ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார்.

அருள்முறைத் திரட்டு

தேவாரத்திற்கு இரண்டு திரட்டு நூல்கள் இருக்கின்றன. ஒன்று, அருள்முறைத் திரட்டு; மற்றொன்று, அகத்தியர் தேவாரத் திரட்டு ஆகும். அருள்முறைத் திரட்டு உமாபதி சிவாச்சாரியாரால் திரட்டப்பெற்றது. இதில் 99 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இத்திரட்டு இன்று வழக்கத்தில் இல்லை. இத்திரட்டு சொர்க்கபுரம் ஆதீன நித்திய பாராயணமாக இருந்திருக்கின்றது. இன்று இவ்வாதீனம் இல்லை. இம் மடத்தைச் சேர்ந்த ஒருவரிடம் இருந்த சுவடியைக் கொண்டு இந்நூல் பதிப்பாகியிருக்கின்றது. இந்நூலை எஸ். சோமசுந்தர தேசிகர் 1930ஆம் ஆண்டு 'சித்தாந்தம்' இதழ்ப் பகுதிகளில் மூலம் மட்டும் வெளியிட்டுள்ளார். இப்பதிப்பை அடிப்படையாகக் கொண்டு மா.வே. நெல்லையப்பப் பிள்ளை தம்முடைய உரையுடன் 1932-33ஆம் ஆண்டு 'சித்தாந்தம்' இதழ்ப் பகுதிகளில் வெளியிட்டுள்ளார். இவ்விதழ்ப் பதிப்பு சமாஜ வெளியீடாக 1933, 1939ஆம் ஆண்டுகளில் முறையே முதல் மற்றும் இரண்டாம் பதிப்பாக வெளிவந்துள்ளது. பின்னர் இந்நூலைத் திருநெல்வேலி அருள்நந்திசிவம் அருட்பணி மன்றமும் (1986), திருவாவடுதுறையாதீனமும் (1993) வெளியிட்டுள்ளன.

அலங்கார நூல்

மன்மதன் இயல்புகளையும், தோற்றத்தையும், அவனால் ஏற்படும் தாக்கங்களையும் சுருக்கமாகக் கூறும் இந்நூல் குறள்வெண்பா, வெண்பா, எண்சீர் ஆசிரியவிருத்தம் என்று 15 பாடல்களைக் கொண்டுள்ளது. இதனை 'மன்மதன் அலங்காரம்' என்றும் கூறுவர். மன்மதன் கிளிக்குதிரை ஏறும் போதும் சேனைகளைக் கண்ணுறும் போதும் உடைவாள் உருவும் போதும் பெண்டிற்கு ஏற்படும் விளைவுகளைக்

குறிப்பிடுவது இந்நூலின் தனிச் சிறப்பாகும். இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. கதையின்றி, மாந்தரின்றி, மன்மதன் இயல்புகளையும் தோற்றத்தையும் அவனால் ஏற்படும் தாக்கங்களையும் சுருக்கமாகக் கூறும் இந்நூல் 1997ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் வெளிவந்துள்ளது.

அல்லி கதை

அல்லியரசாணி மாலையின் சுருக்கமான கதையமைப்பைக்கொண்ட இந்நூல் 2538 அகவலடிகளாலானது. அல்லியரசாணி மாலையில் கூறப்பட்ட முன்பகுதிகள் (சோழநாட்டு வறுமை, சொக்கரின் திருவிளையாடல், நீர்க் காக்கை, நீள்முகன் தோற்றம், போர்) பலவும் நீக்கப்பெற்ற அருச்சுனனின் பெருமையோடும் நாக கன்னியோடு வாழ்கின்ற இன்ப வாழ்வோடும் இக்கதை தொடங்குகின்றது. இதில் அல்லியின் வீரம், தன்முனைப்பு, அருச்சுனனின் காதல் உணர்வு, கண்ணனின் தந்திரம் ஆகிய பகுதிகள் நன்கு விளக்கப் பெற்றுள்ளன. இந்நூலை இ. சுந்தரமூர்த்தி 1984-90ஆம் ஆண்டு 'தமிழாய்வு' இதழில் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1989ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழக வெளியீடாக வெளிவந்துள்ளது.

அறநெறி வெண்பா

கந்தசாமி சுவாமிகளின் 'அறநெறி வெண்பா' 20 வெண்பாக்களால் ஆனது. அறம்புரிவார் மேன்மையும், அறம்புரியாதார் கீழ்மையும் குறிப்பிடப்பெற்றுள்ள இந்நூலில் அவ்வறத்தின் பயனையும் சுட்டுகின்றது. இந்நூலின் ஒவ்வொரு பாடலும் ஓர் அறத்தினை வலியுறுத்துவதாக அமைந்துள்ளது. பொதுவாக, இந்நூல் புறநெறி இன்ப - துன்பங்களை எடுத்துக் கூறுகின்றது. இந்நூல் செ.ரா. கணபதி சுப்பிரமணிய ஐயரால் 1939ஆம் ஆண்டு வெளியிடப்பெற்றுள்ளது. 1964ஆம் ஆண்டு கௌமார சபை வெளியிட்ட 'தவத்திரு கந்தசாமி சுவாமிகள் தோத்திரத்

திரட்டு'ள் ஒன்றாகவும் இந்நூல் இடம்பெற்றுள்ளது. பின்னர் இந்நூல் 1992ஆம் ஆண்டு 'மாதாந்திர அமுதம்' இதழில் வெளிவந்துள்ளது. இந்நூலின் மூலத்தில் தனிச்சீர் இல்லை. ஆனால் மாதாந்திர அமுதத்தில் பதிப்பாசிரியரால் தனிச்சீர் சேர்க்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஆசிரியமாலைச் செய்யுட்கள்

புறத்திரட்டிலிருந்து தொகுக்கப்பெற்ற நூல்களுள் 'ஆசிரியமாலை'யும் ஒன்று. இதில் 17 பாடல்கள் தொகுக்கப் பெற்றுள்ளன. இந்நூல் எதனைக் கூறுகின்றது என்று தெளிவாகக் கூறமுடியவில்லை. என்றாலும், இராமபிரானைக் குறித்தும் நீதிகள் பலவற்றையும் பொதுவாகக் குறிப்பிடுகின்றது. இந் நூலாசிரியர் பெயர் தெரியவில்லை.

புறத்திரட்டில் கிடைக்கக் கூடிய 'ஆசிரியமாலைச் செய்யுட்கள்' 16ஐ ரா. இராகவையங்கார் 1907ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழ்ப் பகுதியில் வெளியிட்டுள்ளார். இதைத் தொடர்ந்து மயிலை சீனி. வேங்கடசாமியின் 'மறைந்துபோன தமிழ் நூல்கள்' எனும் நூலில் தொல்காப்பியம் பொருளதிகாரம் புறத்திணையியல் நச்சினார்க்கினியத்தின் 21ஆம் நூற்பா மேற்கோளாக உள்ள 'கடலு மலையுந் நேர்படக் கிடந்த' எனும் பாடலையும் சேர்த்து 17 பாடல்களாகக் காட்டியுள்ளார். ச. பார்த்தசாரதியின் 'ஆசிரிய மாலை' 1977ஆம் ஆண்டு திண்டிவனம் புதுவெள்ளம் வெளியீடாக வெளிவந்துள்ளது. இதில் இந்நூற் பாடல்கள் 30 எனக் காட்டப்பெற்றுள்ளது.

ஆத்திசூடித் திறவுகோல்

குறுமுனியின் 'ஆத்திசூடித் திறவுகோல்' 13 விருத்தங்க ளாலானது. ஆத்திசூடி 'அறஞ்செய விரும்பு' முதல் 'அஃகம் சுருக்கேல்' வரையுள்ள 13 தொடர்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விருத்தங்களால் இந்நூல் அமைந்துள்ளது. அதாவது, அகரம் முதலாய் அஃகேனம் இறுதியான பதின்மூன்று எழுத்துக்களான் தொடங்கப்பெறும் பதின்மூன்று நீதிவாக்கியங்களையும்

தனித்தனியே ஒவ்வொரு செய்யுளினுள்ளும் அமைத்துப் பாடப்பெற்றுள்ளது. இந்நூலைத் தி. சந்திரசேகரன் 1949ஆம் ஆண்டு 'அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ்'ப் பகுதியில் வெளியிட்டுள்ளார். பின்னர் இந்நூல் இந்நூலக அனுமதியுடன் தி. பட்டுச்சாமி ஓதுவாரால் திருப்பனந்தாள் காசித் திருமடம் சீர்வளர்சீர் காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகளின் விருப்பத்திற்கிணங்க, சீர்வளர்சீர் காசிவாசி சாமிநாத சுவாமிகளின் 6ஆவது ஆண்டு நினைவு வெளியீடாக 1950ஆம் ஆண்டு வெளியிடப்பெற்றுள்ளது.

ஆத்திசூடி - பரிமேலழகர் உரை

ஔவையாரின் 'ஆத்திசூடி' 109 நூற்பாக்களாலானது. பரிமேலழகர் 107 நூற்பாக்களுக்கு மட்டும் உரை வரைந்துள்ளார். 'கௌ' மற்றும் 'வே' ஆகிய எழுத்துக்களுக்கான தொடர்களுக்குப் பரிமேலழகரின் உரை இல்லை. உயிரெழுத்து, உயிர்மெய் யெழுத்து ஆகியவற்றை நிரலே முதலெழுத்தாகத் தொடங்கும் அடிகளாக இந்நூல் அமைந்துள்ளது. இது, உயிர் (ஃ உள்பட) 13, அகரமேறிய மெய் 18, ககர வருக்கம் 11, சகர வருக்கம் 11, தகர வருக்கம் 11, நகர வருக்கம் 11, பகர வருக்கம் 11, மகர வருக்கம் 11, வகர வருக்கம் 10 என உள்ளது.

ஆத்திசூடி வெண்பா

சட்டைமுனி நாயனாரின் 'ஆத்திசூடி வெண்பா' 30 வெண்பாக்களாலானது. ஞான யோகத்தைப் பற்றிக் கூறும் இந்நூலில் ஔவையாரின் ஆத்திசூடித் தொடர்கள் சில விரவி வந்துள்ளன. இந்நூலை 1950ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் வ.ரா. கல்யாணசுந்தரம் வெளியிட்டுள்ளார்.

ஆழ்வார் திருவனந்தல்

'செண்பகச் சடகோபனே திருவனந்தலோ' என்பதை மகுடமாக வைத்துப் பாடப்பெற்ற ஐந்து எண்சீர் ஆசிரிய விருத்தத்தாலான இந்நூலில் நம்மாழ்வார் துயில்கொள்வதின்

நிமித்தம், தோழியர்கள் கூடிநின்று பாடும் முறை, அரியை வணங்கும் வைணவ அடியார்கள், அவர்களின் பெருமைகள் போன்றன கூறப்பெற்றுள்ளன. இந்நூல் தாலாட்டு வகையைச் சார்ந்ததாகத் திகழ்கின்றது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை 1961ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் த. கிருட்டிணமூர்த்தி வெளியிட்டுள்ளார்.

ஆழ்வார் பிள்ளைத்தமிழ்

நம்மாழ்வாரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு இந்நூல் பாடப்பெற்றுள்ளது. இந்நூல் முழுமையும் கிடைக்க வில்லை. பாயிரம் 5, காப்பு 1, காப்புப் பருவம் 11, செங்கீரைப் பருவம் 6 ஆக 28 பாடல்களே கிடைத்துள்ளன. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இது, அழகர் பிள்ளைத்தமிழ் போல இனிய நடையும் சந்த அமைப்பும் கொண்டு அமைந்து உள்ளது. இந்நூலை இராமாநுஜையங்கார் 1920ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழில் முதல் 23 பாடல்கள் வரை வெளியிட்டு உள்ளார். பின்னர் உ.வே. ஸ்ரீநிவாஸ ஐயங்காரால் 1931-32ஆம் ஆண்டு 'ஸ்ரீவைஷ்ணவன்' இதழ்ப் பகுதிகளில் முதல் 65 பாடல்கள் வரை வெளியிடப் பெற்றிருக்கின்றன. பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 'நம்மாழ்வார் பிள்ளைத்தமிழ்' என்ற பெயரில் 1932ஆம் ஆண்டு தனிநூலாக 'வெளிவந்துள்ளது.

ஆனந்தரங்கன் கோவை

தியாகராய தேசிகரின் 'ஆனந்தரங்கன் கோவை' 402 கட்டளைக்கலித்துறையாலானது. இந்நூல் தொண்டை மண்டலம் - புதுச்சேரி என்னும் புதுவையில் சிறப்பொடு வாழ்ந்து வந்த ஆனந்தரங்கம்பிள்ளை (கி.பி.1709) எனும் வள்ளலைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப் பெற்றுள்ளது. இதில் ஆனந்தரங்கம் பிள்ளை அவர்களின் பெருமைகள் - கொடைகள் - வளங்கள் போன்றன சிறப்பாகப் பேசப்பெற்றுள்ளன. ந. பலராம ஐயர் தம்முடைய குறிப்புரை யுடன் 1936-37ஆம் ஆண்டு 'கொங்குமலர்' இதழ்ப் பகுதிகளில் முதல் 261 பாடல்களை வெளியிட்டுள்ளார். பின்னர்

ந. சுப்பிரமணியன் ந. பலராம ஐயர் குறிப்புரையுடன் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலக வெளியீடாக 1955ஆம் ஆண்டு நூல் முழுமையும் வெளியிட்டுள்ளார்.

ஆன்மலிங்க மாலை

திருவாரூரிலே வாழ்ந்த சிதம்பரநாத தேசிகரை முன்னிலைப்படுத்திக் கூறும் 'ஆன்மலிங்க மாலை' 11 பதினான்குசீர் கழிநெடிலடியாசிரிய விருத்தம் கொண்டது. சைவர்களின் பூசை முறைகளைக் கூறுவதாக அமைந்துள்ள இந்நூலில் பூத சுத்தி, ஸ்தான சுத்தி, திரவிய சுத்தி, மந்திர சுத்தி, லிங்க சுத்தி ஆகிய ஐந்து சுத்திகளையும், சிவாலய தரிசனம், சாத்திர உபாய நிட்டை, சிவனடியார் திருவடி வண்ணம், சீவன் முத்தியனுபோகம், பாச முத்தி விரும்பல் ஆகியனவும் கூறும் இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை 1929-30ஆம் ஆண்டு செந்தமிழ் இதழில் திருவாரூர் எஸ். சோமசுந்தரதேசிகர் வெளியிட்டுள்ளார்.

இரட்டையர் அம்மானை

திருவேகம்பநாதர் உலா, திருவாமாத்தூர்க் கலம்பகம், தில்லைக் கலம்பகம் ஆகிய சிற்றிலக்கியங்களை இயற்றிய இளஞ்சூரியர், முதுசூரியர் என்ற இரட்டைப் புலவர்கள் 15ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள். இவர்களில் ஒருவர் முடவர், மற்றொருவர் குருடர். இவர்கள் இருவரையும் தமிழிலக்கிய உலகம் பெரிதும் போற்றி வந்துள்ளது. இவர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் சிலவற்றை அடிப்படையாகக் கொண்டு பாடப் பெற்றதே 'இரட்டையர் அம்மானை' ஆகும். இந்நூல் முழுமையும் கிடைக்கவில்லை. இந்நூலின் ஆசிரியர் பெயர் இன்னாரென்று தெரியவில்லை. இந்நூல் 1930-31ஆம் ஆண்டு 'செங்குந்தமித்திரன்' இதழ்ப் பகுதிகளில் வெளிவந்துள்ளது.

இரணியன்வதைப்பரணி

திருமால் நரசிங்க அவதாரமாகத் தூணிலிருந்து எழுந்தருளி இரணியனை வதைக்கின்ற புராணக் கதையைப்

பொருளாகக் கொண்ட ‘இரணியன்வதைப்பரணி’ 643 பாடல்களாலானது. இந்நூல் இரணியன் வதையையும் திருமாலின் சிறப்பையும் கூறுகின்றது. மேலும் இரணியன் வரலாறு, தேவர்கள் முறையீடு, பிரகலாதன் பிறப்பு, கல்வி, இரணியன் சீற்றம், நரசிங்க மூர்த்தி தோன்றுதல், போர், இரணியவதம், பிரகலாதனுக்கு அருள் ஆகியவற்றை வீரச்சுவையுடனும் பக்திச் சுவையுடனும் இந்நூல் கூறுகின்றது. இந்நூலைச் சு. நல்லசிவன் பிள்ளை 1916-18ஆம் ஆண்டு ‘செந்தமிழ்’ இதழ்ப் பகுதிகளில் வெளியிட்டுள்ளார். பின்னர் இந்நூல் நா. வரதராஜுலு நாயுடுவின் குறிப்புரையுடன் 1974ஆம் ஆண்டு பொள்ளாச்சி சாந்தி ட்ரஸ்ட் வெளியீடாக வெளிவந்துள்ளது.

இராமசெயம் (இராமாயணத் திருப்புகழ்)

காவடிச்சிந்து மெட்டில் யாக்கப்பெற்றுள்ள பாலபாரதியின் ‘இராமசெயம்’ 58 பாடல்களாலானது. இராமாயணத்தில் வரும் நிகழ்ச்சிகளைக் கொண்டு இராமகதையை இந்நூல் சுருக்கமாகக் கூறுகின்றது. இதை, ‘இராமாயணத் திருப்புகழ்’ என்றும் கூறுவர். இந்நூலை 1910ஆம் ஆண்டு துறையூர் கோவிந்தசாமிப் பிள்ளையும், 1924ஆம் ஆண்டு இராமசாமிக் கோனும் இந்நூலின் ஏழு காண்டங்களையும் சேர்த்தே வெளியிட்டிருக்கின்றனர். அதன்பிறகு 1925ஆம் ஆண்டு ‘ஹரிசமய திவாகரன்’ இதழ்ப் பகுதிகளில் பத்திராசிரியரின் குறிப்புரையுடன் ‘பாலகாண்டம்’ மட்டும் வெளிவந்துள்ளது. இதனை அடுத்துக் கி. இராமாநுஜையங்காரால் ஏட்டுப் பிரதியில் உள்ளவாறு 1938-42ஆம் ஆண்டு ‘செந்தமிழ்’ இதழ்ப் பகுதிகளில் வெளியிடப்பெற்றுள்ளது. ‘இராமசெயத் திருப்புகழ்’ என்ற பெயரில் கோ. பாலசுந்தர நாயகரின் திருத்தவுரைப் பதிப்பாக 1954ஆம் ஆண்டு திருப்பதி - திருமலை தேவஸ்தான அச்சுக்கூட வெளியீடாக பகுதி 1, பகுதி 2 என ஏழு காண்டங்களும் வெளிவந்துள்ளன. இப்பதிப்புகளுக்கு எல்லாம் முன்னோடியாக வேணுகோபால நாயுடுவின் பதிப்பு அமைந்திருப்பது தெரிகின்றது. அதாவது, “ஏறக்குறைய

ஐம்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் கோவையிலிருந்த வேணுகோபால நாயுடு என்பார் இந்நூலின் ஐந்து காண்டங்களை மட்டும் அச்சிட்டார்'' என்பதைப் பார்க்கும் போது இந்நூலை 1900க்கும் முன் அச்சிட்டதாகத் தெரிகின்றது.

இராமானந்தத் திரட்டு

இராமானந்த சுவாமிகளின் 'இராமானந்தத் திரட்டு' 457 பாடல்களாலானது. இந்நூல் ஆறு சமயங்களைப் பற்றியும் 'கௌமார'த்தையும் விளக்குவதாக அமைந்துள்ளது. அதாவது, சூரியனைப் பரம்பொருளாக வழிபடுவது சௌர சமயம், சிவபெருமானைப் பரம்பொருளாக வழிபடுவது சைவ சமயம், சக்தியைப் பரம்பொருளாக வழிபடுவது சாத்தேய சமயம், விஷ்ணுவைப் பரம்பொருளாக வழிபடுவது வைணவ சமயம், கணபதியைப் பரம்பொருளாக வழிபடுவது காணாபத்தியம், குமாரக் கடவுளைப் பரம்பொருளாக வழிபடுவது கௌமாரம் ஆகும். இந்த ஆறு சமயங்களையும் சமயாதீதமாக வழிபட்ட இராமானந்தரின் நூல்கள் இத்திரட்டில் இடம்பெற்றுள்ளன. அவையடக்கம், சௌர சமயம் (சூரிய மூர்த்திப்பதிகம்), சைவ சமயம், சாத்தேய சமயம், வைணவ சமயம், காணாபத்தியம் (விநாயகர் பதிகம், மெய்ஞ்ஞானக் காதல், பஞ்சகம், கீர்த்தனை), கௌமார சமயம் (பதிக அந்தாதி, பிடித்தபதிகம், கீர்த்தனைகள், தனிப்பாடல்கள், சற்குரு பதிகம், சற்குரு அந்தாதி மாலை, சந்தப் பதிகம், தயாநிதிக் கண்ணி, அடைக்கலப் பதிகம், பெரியோர் வணக்கம், குருகீத ரசம், சபரிமலை ஐயப்பசாமி பதிகம், சண்முகமாலை, திருவுந்தியார் போன்றவை இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

இந்நூல் கௌமார வெளியீடாக 1921- துன்மதி ஆண்டு வெளிவந்துள்ளது. இதில் சண்முகமாலை இடம்பெறவில்லை. 1908ஆம் ஆண்டே 'சண்முகமாலை' தனிநூலாக வெளிவந்துள்ளது. அதன் பிறகு சுவடியை ஆதாரமாகக் கொண்டு இந்நூல் பகுதிகள் 1993-94ஆம் ஆண்டு 'மாதாந்திர அமுதம்' இதழ்ப் பகுதிகளில் சண்முகமாலை இன்றி இராமானந்தத் திரட்டு வெளிவந்து

உள்ளது. இதற்குமுன் இந்நூல் 1935ஆம் ஆண்டு 3ம் பதிப்பும், 1978ஆம் ஆண்டு 4ம் பதிப்புமாக வெளிவந்துள்ளது.

இராஜராஜ தேவருலா

ஒட்டக்கூத்தரின் 'இராஜராஜ தேவருலா' 391 கண்ணிகளாலானது. 'அனபாயச் சோழன்' என்று வழங்கும் 'இரண்டாம் இராஜராஜ சோழன்' மீது இந்நூல் பாடப்பெற்றுள்ளது. ஒட்டக்கூத்தரின் 'மூவருலா'வில் இவ்வுலா மூன்றாவதாக இடம்பெற்றுள்ளது. இரண்டாம் இராஜராஜ சோழனின் மரபு, மாண்பு, செங்கோண்மை, பகைநீக்கி நகைவளா ஆகும் ஆண்மை, ஆண்மை மிகுதியால் போரெழாக் கேண்மை, முழுமுதல்வன் வழிபாடு, உலக ஒழுக்கம், ஒற்றுமை, குற்ற மின்மை, குணநலன் போன்றனவும் பிறவும் நன்குணருமாறு இந்நூல் அமைந்துள்ளது. இதை 'இராஜராஜ சோழனுலா' என்றும் கூறுவர். இந்நூலை எஸ். வையாபுரிப் பிள்ளை 1925ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழில் வெளியிட்டுள்ளார். இது மூவருலாப் பாடல்கள் முறைபிறழ்ந்த சுவடிப்பதிப்பாகத் திகழ்கின்றது. அதன்பிறகு பண்டித அ. கோபாலையர் 1936ஆம் ஆண்டு வெளியிட்ட மூவருலாவில் இந்நூல் பாடல்கள் திருத்தமுடன் வெளியிடப்பெற்றுள்ளன. அடுத்து, உ.வே. சாமிநாதையரின் குறிப்புரையுடன் 1946ஆம் ஆண்டும், சங்குப் புலவரின் உரையுடன் (சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்) 1967ஆம் ஆண்டும் வெளிவந்துள்ளது.

இரிஷிவிந்தக் குறவஞ்சி

இராசப்ப உபாத்தியாயரின் 'இரிஷிவிந்தக் குறவஞ்சி' அர்த்தநாரீசுவரரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பெற்றதாகும். தென்னார்க்காடு மாவட்டம் - கள்ளக் குறிச்சி வட்டம் - கெடிலம் நதி உற்பத்தியாகும் இடத்தருகே அமைந்துள்ளது இரிஷிவிந்தம். இத்தலத்தை ரிஷிவந்தியம் என்றும் அழைப்பர். இத்தலத்தில் கோயில் கொண்டுள்ள அர்த்தநாரீசுவரர் தலைவராகவும் வசந்தமோகினி நாயகியாகவும் விளங்குகின்றனர். அர்த்தநாரீசுவரன் சேவடி நினைந்து,

திருநீறணிந்து, திலகம் தீட்டி, சேலை நன்குடுத்து, மலிவுறுகுன்று மணிவடம் பூண்டு, இடையினிற் கூடையிடுக்கி, ஒர் குழந்தை மடியினிற் கட்டி, மாத்திரைக்கோல் கொண்டு குறத்தி தோன்றுவதாக இந்நூலில் சிறப்பாக வருணிக்கப்பெற்றுள்ளது. தோழியாக அம்சவல்லியும், குறவனாகச் சிங்கனும், தோழனாகக் காடனும் தோன்றியுள்ளனர். பல்வேறு வகையான பண்களில் இந்நூல் 1965 மற்றும் 1968ஆம் ஆண்டுகளில் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் ஆர்.கே. பார்த்த சாரதி மற்றும் பூ. சுப்பிரமணியம் ஆகியோரால் வெளியிடப் பெற்றுள்ளது.

இருபுராண விருத்தம்

திருவிளையாடற் புராணம், திருத்தொண்டர் புராணம் ஆகிய இரு புராணங்களையும் ஒன்றுபடுத்திய 'இருபுராண விருத்தம்' 66 விருத்தங்களாலானது. இந்நூலின் ஒவ்வொரு பாடலும் மூன்று நிலைகளில் அமைந்துள்ளது. முதல் நிலையில், திருத்தொண்டர் புராணத்தில் விதந்தோதப்பெறும் அடியார்களின் வரலாறும், இறைவன்பால் அவர்கள் கொண்ட பக்தியும், அவர்களின் அருள் வேட்டலும், இரண்டாம் நிலையில், திருவிளையாடற் புராணத்தில் வரக்கூடிய இறைவனின் திருவிளையாடல்களும், அடியார்கள் உள்ளத்தில் வீற்றிருக்கின்ற அவனது பெருமைகளும், மூன்றாவது நிலையில், திருச்செந்திலின் பெருமைகளும், அங்குறையும் செந்தில் வடிவேலனை அழைக்கும் விதங்களும் இந்நூலில் எடுத்தோதப் பெற்றுள்ளன. இந்நூலின் ஒவ்வொரு பாடலிறுதியிலும்,

"வளைவிந்து தரணங்கள் உயர்சந்த வரையின்கண்
வளர்செந்தில் வடிவே லனே"

எனும் தொடர் மகுடமாக அமைந்துள்ளது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை இ. சுந்தரமூர்த்தி தம்முடைய அரும்பொருள் குறிப்புரையுடன் 1984-85ஆம் ஆண்டு 'உயராய்வு' இதழில் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பை 1985ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ளது.

இலக்கண தீபம்

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்திலக்கணங்களிலும் காணப்பெறும் பிரிவுகள் அனைத்தும் விளங்கக் கூறும் 'இலக்கண தீபம்' 15 பன்னிருசீர் கழிநெடிலடி யாசிரிய விருத்தத்தாலானது. இதில் தலைச்சங்கம், இடைச் சங்கம், கடைச்சங்கம் ஆகிய மூன்றும் இருந்த இடங்கள், அவ்வவற்றின் காலம், அவ்வக்காலத்தில் வாழ்ந்த தமிழ்ப் புலவர் களின் பெயர்கள், அரங்கேற்றப்பெற்ற நூல்கள் முதலியனவும் கூறப்பெற்றுள்ளன. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரிய வில்லை. இந்நூலை 1916ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழில் நாராயணையங்காரும், 1955ஆம் ஆண்டு 'அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ்'ப் பகுதியில் வி.எஸ். கிருஷ்ணனும், 1981ஆம் ஆண்டு 'புலமை' இதழில் இ. சுந்தரமூர்த்தியும் வெளியிட்டுள்ளனர்.

இலக்குமி வெண்பா

திருமகளின் சிறப்பினை 218 வெண்பாக்களால் கூறும் 'இலக்குமி வெண்பா'வை 'மகாலட்சுமி திருவாராதனக் கிரமக்கவி' என்றும் கூறுவர். இந்நூலுள் திருவாராதன மாலைக்கவி, மந்திராசனக்கவி, ஸ்நாநாஸனக்கவி, அலங்கா ராசனக்கவி, போச்சியாசனக்கவி, புனர்மந்திராசனக் கவி, பர்யங்காசனக்கவி, பக்தனைச் சார்ந்தகவி ஆகியன இடம்பெற்று உள்ளன. இந்நூலை 1956ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் இ.பா. வேணுகோபால் வெளியிட்டுள்ளார். இதில் 141 பாடல்களே வெளிவந்திருக் கின்றன.

இலந்துறை அருட்பா மாலை

அழகிய சிற்றம்பல தேசிகரின் 'இலந்துறை அருட்பா மாலை' 7 செய்யுள்களால் ஆனது. இலந்துறையில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் இறைவனின் பெருமைகளை இந்நூல் சுட்டுகின்றது. 'இலந்துறைக் கிறைவரே' என்ற ஈற்றுத்

தொடர் ஒவ்வொரு பாடலிலும் மகுடமாக அமைந்துள்ளது. இந்நூலை 1938ஆம் ஆண்டு சிந்ததாந்தம் இதழில் திருவாரூர் எஸ். சோமசுந்தர தேசிகர் வெளியிட்டுள்ளார்.

இளசை ஒருபாவொருபஃது

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 'இளசை ஒருபா வொருபஃது' 12 பாடல்களாலானது. இளசை என்னும் எட்டயபுரத்தில் எழுந்தருளியுள்ள அட்டமூர்த்தீசுவரரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு இந்நூல் பாடப்பெற்று உள்ளது. இந்நூலைத் தொ.மு.சி. ரகுநாதன் 'சாந்தி' இதழில் 1955ஆம் ஆண்டும், 'செந்தமிழ்ச்செல்வி' இதழில் 1969ஆம் ஆண்டும் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் 1987ஆம் ஆண்டு வெளியிட்ட 'பாரதி பாடல்கள் - ஆய்வுப் பதிப்பு' எனும் பதிப்பில் இடம் பெற்றுள்ளது.

இனியது நாற்பது

பூதஞ்சேந்தனாரின் 'இனியது நாற்பது' 41 பாடல்களா லானது. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் பத்தாவது நூலாக வைத்துப் போற்றப்படும் இந்நூலை இனியவை நாற்பது, இனிது நாற்பது, இனிய நாற்பது எனப் பலவாறாக அழைப்பர். நான்கு இனிய பொருள்களை எடுத்துக்கூறும் பாடல்கள் நான்கும் (1, 3, 4, 5); எஞ்சியவை மும்மூன்று இனிய பொருள்களை எடுத்துக்கூறும் பாடல்களாகவும் அமைந்து உள்ளது இந்நூல். இந்நூலுக்குப் பழையவுரை ஒன்று உண்டு. இவ்வுரையுடன் இராமாநுஜக் கவிராயர் 1845ஆம் ஆண்டும், க.வே. சுப்பராய முதலியார் 1863ஆம் ஆண்டும் (சென்னை இயற்றமிழ் விளக்க அச்சுக்கூடம்), ரா. இராகவையங்கார் 1903ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழிலும், பின்னர் செந்தமிழ் வெளியீடாகவும் இந்நூல் பதிப்பாகி இருக்கின்றது. பின்னர் இந்நூல் சென்னை சுப்பன் பிரஸ் வெளியீடு 1918ஆம் ஆண்டும், வா. மகாதேவ முதலியாரின் விளக்கவுரையுடன் 1922, 1942, 1945ஆம் ஆண்டுகளில் சென்னை சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடாகவும், எஸ். வையாபுரிப் பிள்ளையின்

உரைப்பதிப்பு 1949ஆம் ஆண்டு ஆசிரியர் நூற்பதிப்புக் கழகத்தின் வெளியீடாகவும், 1957ஆம் ஆண்டு எஸ். இராஜம் வெளியீடாகவும், 1981ஆம் ஆண்டு என்.சி.பி.எச். நிறுவனத்தின் வெளியீடாகவும் (இராஜம் பதிப்பின் மறுபதிப்பு) வெளிவந்துள்ளது.

ஈச்சநாரி விநாயகர் பதிகம்

கந்தசாமி சுவாமிகளின் 'ஈச்சநாரி விநாயகர் பதிகம்' 14 பாடல்களாலானது. கோவை - ஈச்சநாரி என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள விநாயகப் பெருமான் மீது இந்நூல் பாடப் பெற்றுள்ளது. இதில் விநாயகப் பெருமானின் சிறப்புகள் வெகுவாகப் பேசப்பெற்றுள்ளன. மேலும், இவ்வகைச் சிறப்பு மிக்க விநாயகப்பெருமானே என்னை இவ்வாறு ஆக்குவீராக என்று ஒவ்வொரு பாடலிலும் ஆசிரியர் வேண்டுவதாக இந்நூல் அமைந்துள்ளது. இந்நூல் 1964ஆம் ஆண்டு கௌமார சபை வெளியிட்ட 'தவத்திரு கந்தசாமி சுவாமிகள் தோத்திரத் திரட்டு'ள் ஒன்றாக இடம்பெற்றுள்ளது. பின்னர் இந்நூல் ப.வெ. நாகராஜனின் பொழிப்புரை மற்றும் குறிப்புரையுடன் பழைய காகிதக் கையெழுத்துப் பிரதியைக் கொண்டு 1998ஆம் ஆண்டு 'மாதாந்திர அமுதம்' இதழில் வெளிவந்துள்ளது.

ஈச்சநாரி விநாயகர் பதிற்றுப்பத்தந்தாதி

கந்தசாமி சுவாமிகளின் 'ஈச்சநாரி விநாயகர் பதிற்றுப் பத்தந்தாதி' கலிவிருத்தத்தாலான காப்பு ஒன்றும், எண்சீர் கழிநெடிலடியாசிரிய விருத்தத்தாலான 100 பாடல்களாலும் ஆனது. கோவை - பேரூருக்கு அருகிலுள்ள ஈச்சநாரி எனும் தலத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள விநாயகப் பெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு இந்நூல் பாடப்பெற்றுள்ளது. இதில் விநாயகப் பெருமானின் பெருமைகள் பலவாறாகப் பேசப்பெற்றுள்ளன. இந்நூல் 1964ஆம் ஆண்டு கௌமார சபை வெளியீடாகிய 'தவத்திரு கந்தசாமி சுவாமிகள் தோத்திரத் திரட்டு' என்னும் தொகுப்பு நூலில் இடம்பெற்றுள்ளது. பின்னர் இந்நூல் மாதாந்திர அமுதம் இதழில் 1992ஆம் ஆண்டு வெளியிடப்பெற்று, அதே

ஆண்டு இவ்விதழ்ப் பதிப்பு தனிநூலாகவும் வெளியிடப் பெற்றுள்ளது.

ஈனமுத்துப்பாண்டியன் கதை

ஈனமுத்து (கி.பி.1800-1832)வின் வாழ்க்கையைக் கூறும் இக்கதைப்பாடல் 826 வரிகளாலானது. சிங்கம்பட்டி ஜமீனில் ஈனமுத்து பணிபுரிந்து வந்த காலத்தில் ஜமீன் மனைவியுடன் அவனுக்குக் கள்ளத்தொடர்பு ஏற்படுகின்றது. சிறுவயதிலேயே தம்முடைய திறமையால் ஜமீனில் பதவி உயர்வு பெறுகின்றான். இவன் வளர்ச்சியை ஏனையோரால் தாங்கிக்கொள்ள முடிய வில்லை. தக்க தருணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். ஈனமுத்து - ஜமீன் மனைவி உறவு நல்ல சந்தர்ப்பமாக அமைந்தது. இதைக் கொண்டு ஜமீனின் வெறுப்பைச் சம்பாதித்தான் ஈனமுத்து. மறைந்திருந்த ஈனமுத்துவைப் பூதத்தேவன் காட்டிக் கொடுக்க ஜமீன் ஆணையால் கொலை யுறுகின்றான் என்பதே இக்கதை. இக்கதையை வில்லுப்பாட்டு முறையில் பாடிய நூலாசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை 1974ஆம் ஆண்டு சண்முகசுந்தரம் தமிழாய்வு இதழில் வெளியிட்டுள்ளார்.

உதயகுமார காவியம்

காவிரிப்பூம்பட்டினத்தை ஆண்ட நெடுமுடிக்கிள்ளியின் புதல்வனாகிய உதயகுமாரனின் வாழ்க்கை வரலாற்றினைக் கூறுவது "உதயகுமார காவியம்" ஆகும். இது, 120 விருத்தங் களைக் கொண்டுள்ளது. மணிமேகலை மீது ஆசை கொண்டு அவளை மணக்க விரும்பினான் உதயகுமாரன். மணிமேகலையோ காயசண்டிகையாக உருக்கொள்கின்றாள். காயசண்டிகையாக உள்ள மணிமேகலையைத் தன் மனைவி என்று எண்ணிய காஞ்சனன் உதயகுமாரனைக் கொலை செய்கின்றான் என்பதே இக்கதை. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை 1930ஆம் ஆண்டு தமிழ்ப்பொழில் இதழில் வீ. சண்முகம் வெளியிட்டுள்ளார்.

உதயணகுமார காவியம்

உதயணன் வரலாற்றைக் கூறும் பெருங்கதையின் சுருக்கமாக 'உதயணகுமார காவியம்' அமைந்துள்ளது. இது 369 விருத்தப் பாக்களாலானது. இந்நூல் பெருங்கதை போலவே உஞ்சை, இலாவணம், மகதம், வத்தவம், நரவாகனம், துறவு என்ற ஆறு காண்டங்களைக் கொண்டுள்ளது. இந்நூல் பெருங்கதையை அடியொற்றிச் சென்றாலும் முடிவில் சைவ சம்பிரதாயப்படி கதாபாத்திரங்கள் துறவு பூண்டு இருவினை எரித்துச் சித்திகள் பெற்றுச் சிவகதியடைந்ததாகக் கூறுகின்றது. இந்நுலின் ஆசிரியர் பெயர் சரியாகத் தெரியவில்லை. என்றாலும் உ.வே. சாமிநாதையர் 'கந்தியார்' என்கின்றார். சிலர் கொங்குவேளிர் என்றும் கூறுகின்றனர். இந்நூலை உ.வே. சாமிநாதையர் 1935ஆம் ஆண்டு 'கலைமகள்' இதழில் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1935ஆம் ஆண்டு கலைமகள் வெளியீடாக வெளிவந்துள்ளது. அதன் பிறகு சந்தானம் 1998ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார். இதற்கிடையே பொ.வே. சோமசுந்தரனாரின் உரையுடன் சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் ஒரு பதிப்பை வெளியிட்டுள்ளது.

உதயத்தூர் புலைமாடத்தி வரத்து

உதயத்தூர் புலைமாடத்தியின் வரலாற்றைக் கூறும் இந்நூல் 257 அகவலடிகளாலானது. பாண்டி நாட்டில் உதயத்தூர் என்னும் ஊரில் கரையர்கள் என்னும் இனத்தினர் வாழ்ந்து வந்தனர். இவர்களில் விசையாபதி என்பவரின் குமாரர்களும்; விசையாபதியின் சிற்றன்னைக் குமாரர்களும் என இருபிரிவினர் அடங்குவர். இவ்விருவகை குமாரர்களுக் கிடையே நீண்ட காலமாகப் பகை இருந்து வந்தது. கரையாளர்கள் என்று அழைக்கப்பெற்ற விசையாபதியின் குமாரர்கள் தங்களுடைய சிற்றன்னையின் குமாரர்களுட னிருந்து தங்களைக் காத்துக்கொள்ளத் தங்கள் இனத்திலிருந்து ஒருவனைத் தேர்ந்தெடுத்து மந்திரவாதம் படிக்க மலையாள நாட்டிற்கு அனுப்பிவைக்கின்றனர். அவன் மந்திரவாதம்

படித்துவந்து அவன் வகையினர் மகிழ்வுடன் வாழ்ந்த கதையை இந்நூல் சுட்டுகின்றது. இந்நூலை 1994ஆம் ஆண்டு தமிழ்க் கலை இதழில் மோ.கோ. கோவைமணி வெளியிட்டுள்ளார்.

உருப சொரூப அகவல்

காவை. அம்பலவாணத் தம்பிரானின் 'உருப சொரூப அகவல்' 104 அகவலடிகளாலானது. பதி, பசு, பாசம் ஆகிய மூன்று பொருள்களுக்கும் உருவம், சொரூபம், சுபாவம், விசேடம், வியாத்தி, வியாபகம், குணம், வன்னம், தரிசனம், சுத்தி ஆகிய பத்தையும் கூறுவதாக இந்நூல் அமைந்துள்ளது. இந்நூல் 1959ஆம் ஆண்டு ஞானசம்பந்தம் இதழில் வெளிவந்து உள்ளது.

உவமான சங்கிரகம் (விருத்தம்)

பெண்களின் அங்க வருணனைகளை எடுத்துக்கூறும் நூல் 'உவமான சங்கிரகம்' ஆகும். பாதாதிகேச முறையில் அமைந்த இந்நூல் 37 விருத்தங்களாலானது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை நாராயணையங்கார் 1911ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழில் வெளியிட்டுள்ளார். இது விருத்தத்தாலான பாதாதிகேச உவமானத்தைக் கூறுகின்றது. இந்நூலை இ. சுந்தரமூர்த்தி 1981ஆம் ஆண்டு பதிப்பித்து 'உவமான சங்கிரகம் - அணியிலக்கண ஆராய்ச்சி' எனும் நூலில் மூன்றாவதாக அமைத்துள்ளார்.

உவமான சங்கிரகம் (நூற்பா)

பெண்களின் அங்க வருணனைகளை எடுத்துக்கூறும் நூல் 'உவமான சங்கிரகம்' ஆகும். பாதாதிகேச முறையில் அமைந்த இந்நூல் 31 நூற்பாவாலானது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூல் உள்ளங்கால் தொடங்கிக் கூந்தல் முடிய, பெரும்பான்மை அடைமொழி இன்றியே உவமைகளைக் கொண்டுள்ளது. நூலின் இறுதியில் பெண் களுக்குரிய சில பொது உவமைகளும் இடம்பெற்று உள்ளன.

இந்நூலை எ.எம். சடகோபராமாநுஜாசாரியர் 1916ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழில் வெளியிட்டுள்ளார். இது நூற்பாவாலான பாதாதிகேச உவமானத்தைக் கூறுகின்றது. இந்நூல் இ. சுந்தரமூர்த்தி 1981ஆம் ஆண்டு பதிப்பித்து 'உவமான சங்கிரகம் - அணியிலக்கண ஆராய்ச்சி' என்னும் நூலில் முதலாவதாக அமைத்துள்ளார்.

எக்காலக்கண்ணி

'எக்காலம்' என்று முடியும் 201 கண்ணிகளாலான இந்நூல் அரிய பெரிய வேதாந்தக் கருத்துக்களையெல்லாம் மக்கள் அனைவரும் உணருமாறு தெளிவாகக் கூறுகின்றது. உலக வாழ்க்கையில் அகப்பட்டு உழலும் அனைவரும் இறைவன் இணையடி நிழலையடைந்து உய்யும் வகையினை இந்நூல் நன்கு எடுத்துக் கூறுகின்றது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை 1953ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் வி.எஸ். கிருஷ்ணன் வெளியிட்டுள்ளார். 1904, 1913ஆம் ஆண்டுகளில் வெளிவந்த செ. நாராயணசாமி முதலியாரின் 'எக்காலக் கண்ணி' (158)யினின்றும்; மஸ்தான் சாகிபுவின் 'எக்காலக் கண்ணி'யினின்றும் இது வேறானது.

எட்டெட்டந்தாதி

காஞ்சி காமாட்சியம்மன் மீது அந்தாதி முறையில் பாடப்பெற்ற 'எட்டெட்டந்தாதி' காப்பு, நூற்பயன் உள்பட 66 பாடல்களாலானது. கலிவிருத்தம், வெண்பா, இன்னிசை வெண்பா, கலிப்பா, கழிநெடில் விருத்தம், பன்னிருசீர் ஆசிரிய விருத்தம், அறுசீர் ஆசிரிய விருத்தம், குரு விருத்தம் ஆகிய எட்டு வகைகளில் வகைக்கு எட்டுப் பாடல்கள் வீதம் இந்நூல் அமைக்கப்பெற்றுள்ளது. ஏகாம்பரநாதர், காமாட்சியம்மை ஆகியோர் சிறப்புக்கள் அழகுபடக் கூறப்பெற்றுள்ளன. பிறவி எடுத்ததன் பயன் காஞ்சியில் கோயில் கொண்டு எழுந்தருளி யிருக்கும் காமாட்சி அம்மையை அடைக்கலமடைந்து உய்தலே சிறந்தவழி என்று ஒவ்வொரு பாடலிலும் வலியுறுத்திக் கூறும்

இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை 1954ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் மு. பசுபதி வெளியிட்டுள்ளார்.

எதிராசரந்தாதி

பிள்ளைப்பெருமாள் ஐயங்காரின் 'எதிராசரந்தாதி' 10 கலித்துறைப் பாடல்களாலானது. இந்நூல் உடையவ ரென்றும், எம்பெருமானாரென்றும் வழங்கும் இராமாநுஜரது வைபவத்தைக் குறிப்பதாக அமைந்துள்ளது. இந்நூலை 1906ஆம் ஆண்டு செந்தமிழ் இதழில் மு. இராகவையங்காரும், 1929ஆம் ஆண்டு ஹரிசமய திவாகரன் இதழில் குறிப்புரை யுடன் ரெ. இராமையங்காரும் வெளியிட்டுள்ளனர்.

எலிவிடுதூது

நல்லபெருமாளின் 'எலிவிடுதூது' வெண்கலிப்பா, விருத்தப்பா, பல்வேறு வகையான தளைகள் கலந்ததொரு நூலாகும். தூதுப் பிரபந்தங்கள் கலிவெண்பாவில் அமையவேண்டும் என்பது விதி. ஆனால் இந்நூல், இவ்விதிக்கு மாறுபட்டு அமைந்துள்ளது. இந்நூல் பாண்டியனுக்கும் சோழனுக்கும் நடந்த போரில் எலிகள் பாண்டியனுக்கு உதவி செய்து சோழனைத் தோற்றோடச் செய்ததாக உள்ள கற்பனைக் கதையை மையமாகக் கொண்டுள்ளது. எலிகளின் வகைகளும் அவற்றின் இருப்பிடங்களும் இந்நூலில் கூறப்பெற்றுள்ளன. இந்நூல் அகத்துறையைச் சாராத நிலையிலும் 'தூது' என்ற சொல் நிலையைப் பெற்றிருக்கின்றது. இந்நூலை 1955ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் இ.பா. வேணுகோபால் வெளியிட்டுள்ளார்.

ஐந்திணையெழுபது

மூவாதியரின் 'ஐந்திணையெழுபது' 70 பாடல்களா லானது. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் பதின்மூன்றாவ தாக வைத்துப் போற்றப்படுவது. குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் ஆகிய ஐந்திணைகளும் முறையே 14 பாடல்களைக் கொண்டது. முல்லைத் திணையில் 25, 26ஆம்

பாடல்களும், நெய்தல் திணையில் 69,70ஆம் பாடல்களும் இறந்துபட எஞ்சிய 66 பாடல்களே இந்நூற் பாடல்களாகக் கிடைத்துள்ளன. இது ஐந்திணை ஒழுக்கங்களைக் குறிப்பிடு கின்றது. இந்நூலுக்கு நச்சினார்க்கினியரின் உரை ஒன்றுண்டு. இவ்வுரை இன்று 24 பாடல்களுக்கு மட்டும் கிடைத்துள்ளது. இவ்வுரை கொண்ட பகுதியை மட்டும் ரா. இராகவையங்கார் 1906ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழில் வெளியிட்டுள்ளார். நச்சினார்க்கினியரின் உரைப்பதிப்பு இன்னும் தனிநூலாக வில்லை. என்றாலும் எஸ். சோமசுந்தர தேசிகர் (1926), அனந்தராமையர் (1931), ந.கீ. கோபாலகிருஷ்ணப் பிள்ளை (1963) போன்றோரின் உரைப்பதிப்புகளை இந்நூல் பெற்றுள்ளது.

ஐந்திணையம்பது

மாறன்பொறையனாரின் 'ஐந்திணையைம்பது' 50 பாடல்களாலானது. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் பதினான்காவதாக வைத்துப் போற்றப்படுவது. முல்லை, குறிஞ்சி, மருதம், பாலை, நெய்தல் ஆகிய ஐந்திணைகளும் முறையே பத்துப் பாடல்களைப் பெற்றுள்ளன. இந்நூலுக்குப் பழைய உரை ஒன்றுண்டு. இவ்வுரையுடன் தம்முடைய பொழிப்புரையையும் சேர்த்து ரா. இராகவையங்கார் 1902ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழ்ப் பகுதிகளில் பதிப்பித்திருக்கின்றார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1903, 1912, 1935ஆம் ஆண்டுகளில் முறையே முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பதிப்பு எனச் செந்தமிழ் வெளியீடு 1ஆவதாக வெளிவந்துள்ளது. அதன் பிறகு மூலமும் பழைய உரையும் தம்முடைய விளக்கவுரையும் சேர்த்து நடராஜ பிள்ளை 1935ஆம் ஆண்டு சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழக வெளியீடாக வெளியிட்டுள்ளார்.

ஐயனார் கதை - வில்லுப்பாட்டு

'ஐயனார் கதை - வில்லுப்பாட்டு' 831 அகவலடிகளா லானது. இதை 'சாஸ்தா கையனார் கதை - வில்லுப்பாட்டு' என்றும் கூறுவர். இந்நூல் அரக்கனின் பிறப்பு, அவனின் தவம், நந்திதேவருடன் கயிலாயம் செல்லல், அரக்கனுக்குச் சிவன் வரம் கொடுத்தல், வரம் கொடுத்த சிவன் தலையிலேயே

கையை வைத்துச் சோதிக்க நினைத்தல், அரக்கனுக்குப் பயந்து சிவன் ஓடுவதும் இதைக் கண்ட விஷ்ணு பெண் உரு தாங்கி அரக்கனை மயக்கித் தன் தலையிலேயே கையை வைத்து மாளச் செய்வதும் ஆகிய இக்கதையினை இந்நூல் வில்லுப் பாட்டில் கூறுகின்றது. இதன் ஆசிரியர் பெயர் தெரிய வில்லை. இந்நூலை 2000ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் சு. சௌந்தரபாண்டியன் வெளியிட்டுள்ளார்.

கடம்பர்கோயில் உலா

சோழநாடு-காவிரியின் தென்கரையில் உள்ள கடம்பர் கோயில் எனும் தலத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமானைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு இந்நூல் அமைந்துள்ளது. இது சித்திவிநாயகர் காப்பு 1, அவையடக்கம் 1, நூல் 383 கலிவெண்பாக்களாலானது. இத்தலத்து மூர்த்தியைக் கடம்ப வனநாதர், சுந்தரேசர், சௌந்தரர் என்றெல்லாம் வழங்குவர். பாட்டுடைத் தலைவனான கடம்பவனநாதர் வீதி உலா வரும்போது அவ்வீதியின் கண்ணுள்ள பேதை முதல் பேரிளம் பெண் ஈறாகிய ஏழு பருவ மகளிரும் அவனைக் கண்டு காதல் கொள்வதையும், ஏழு பருவ மகளிர்களின் இயல்புகளையும், அவர்களின் விளையாட்டுக்களையும் இந்நூல் குறிப்பிடு கின்றது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூல் உ.வே. சாமிநாதையர் குறிப்புரையுடன் 1932ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழ்ப் பகுதிகளில் வெளிவந்துள்ளது. பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1932ஆம் ஆண்டு செந்தமிழ் வெளியீடு 59ஆவதாக வெளிவந்துள்ளது. அதன்பிறகு 1994ஆம் ஆண்டு வெளிவந்த உ.வே. சாமிநாதையர் நூல் நிலைய 'உலாப் பிரபந்தங்கள்' தொகுதி ஒன்றில் முதலாவதாக இந்நூல் இடம்பெற்றுள்ளது.

கட்டிமகிபன் பள்ளு

கட்டிமகிபனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட இந்நூல் 208 பாடல்களாலானது. கட்டிமகிபனைக் கட்டி

பூபாலன் என்றும், கட்டியண்ணன் என்றும் அழைப்பர். இந்நூலில் கூறப்பெறுகின்ற ஏழூர்க் குடும்பனுக்கு இரண்டு மனைவியர். ஏமூரைச் சேர்ந்த மூத்தபள்ளி வைணவ சமயத்தைச் சார்ந்தவர். கலிசை எனும் ஊரைச் சேர்ந்த இளையபள்ளி சைவ சமயத்தைச் சார்ந்தவர். மூத்தபள்ளி திருமாலே உயர்ந்தவர் என்றும், இளையபள்ளி சிவபெருமானே உயர்ந்தவர் என்றும் வாதிடுகின்றனர். இறுதியில், தாங்கள் இவ்வாறு வாதிடுதல் அறியாமை என்றுணர்ந்து ஒற்றுமையாவதை இந்நூல் கூறுகின்றது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை 1960ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் வி.எஸ். கிருஷ்ணன் வெளியிட்டுள்ளார்.

கண்ணிநுண் சிறுதாம்பு

'கண்ணிநுண் சிறுதாம்பு' தனியன் 1, நூல் 13 கட்டளைக் கலித்துறையாலானது. கோயிற் கந்தாடையண்ணன் தமது ஆசாரியராகிய வரவர முனிவர் மீது செய்த ஆசார்ய நிஷ்டையை இந்நூல் வெளிப்படுத்துகின்றது. நம்மாழ்வாரைக் குறித்த மதுரகவியின் 'கண்ணிநுண் சிறுதாம்பு' போன்றது. இந்நூலை 1931ஆம் ஆண்டு ஹரிசமய திவாகரன் இதழில் ரெ. இராமையங்கார் வெளியிட்டுள்ளார். இது நம்மாழ்வார் மீதுபாடிய (மதுரகவிகளின்) 'கண்ணிநுண் சிறுதாம்பு' எனும் நூலினின்று வேறானது.

கதிர்காமச் சிந்து

ஈழநாட்டு முருகன் தலங்களுள் 'கதிர்காமம்' ஒன்று. இத்தலத்தில் அமர்ந்துள்ள முருகப்பெருமானின் ஆடிவேல் விழாவின் சிறப்பினை இந்நூல் சிறப்பித்துக் கூறுகின்றது. இது காப்பு வெண்பா 1, நூல் 31 பாடல்களாலானது. ஆசிரியர் தன்னைத் தலைவியாகக் கருதி முருகனிடம் ஊடும் வகையால் அமைந்த கருத்துகள் இந்நூலில் அமைந்துள்ளன. ஆண்டுதோறும் நடைபெறும் ஆடிவேல் விழாவினைக் கண்ட இந்நூலாசிரியர் 'தாம்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற உயரிய நோக்கோடு இந்நூலை யாத்துள்ளார். இதில்

முருகப்பெருமானின் எழில், எளிமை, மறன், திறன், வடிவு, வரலாறு, பெருமை ஆகியன குறிப்பிடப்பெற்றுள்ளன. இந்நூலின் ஆசிரியர் பெயர் இன்னதெனத் தெரியவில்லை. இந்நூலை 1965ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் பூ. சுப்பிரமணியம் வெளியிட்டுள்ளார்.

கதிர்காம வேலவன் தோத்திரம்

ஈழநாட்டில் - கதிர்காமத்தில் வீற்றிருக்கும் வேலாயுதப் பெருமானின் தோத்திர நூலே 'கதிர்காம வேலவன் தோத்திரம்' ஆகும். இது 40 கட்டளைக் கலித்துறையால் ஆனது. கதிர்காம வேலாயுதப்பெருமானின் சிறப்பியல்புகளை இனிதாக விளக்கும் இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் 'கதிரார் கடாசலனே' என்ற மகுடம் அமைந்துள்ளது. இந்நூலை வீ. சொக்கலிங்கம் 1963ஆம் ஆண்டு 'சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ்'ப் பகுதியில் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1966ஆம் ஆண்டு வெளிவந்த 'முருகர் கதம்பம்' எனும் இந்நூலக வெளியீட்டில் இரண்டாவதாக இடம்பெற்றுள்ளது.

கந்தர் காதல்

கந்தப்பெருமான் மீது காதல் கொண்ட பாட்டுடைத் தலைவியின் காதலைக் கூறும் இந்நூல் காப்பு வெண்பா 1, நூல் 283 அகவலடிகளாலானது. முருகப் பெருமானைச் சோலையில் சந்தித்துப் பிரிந்த வருத்தத்தைத் தலைவி தோழிக்குச் சொல்ல, தோழியின் உதவியால் தலைவனுடன் மீண்டும் கூடி இன்புறுவதை மையமாகக் கொண்டு இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை வீ. சொக்கலிங்கம் 1965ஆம் ஆண்டு 'சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ்'ப் பகுதியில் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1966ஆம் ஆண்டு வெளிவந்த 'முருகர் கதம்பம்' எனும் இந்நூலக வெளியீட்டில் ஆறாவதாக இடம்பெற்றுள்ளது.

கமலாலய அம்மன் பிள்ளைத்தமிழ்

வைத்தியநாத தேசிகரின் 'கமலாலய அம்மன் பிள்ளைத்தமிழ்' 101 பன்னிருசீர் கழிநெடிலடியாசிரிய விருத்தத்தாலானது. திருவாரூரிலே கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் தியாகேசப் பெருமானின் அருகிலிருக்கும் 'கமலாம்பிகை அம்மன்' மீது இப்பிள்ளைத்தமிழ் பாடப்பெற்று உள்ளது. திருவாரூரைக் கமலாலயம் என்றும் அழைப்பர். இந்நூலை வீ. சொக்கலிங்கம் 1968-69ஆம் ஆண்டு 'சரஸ்வதி மகால் நூலகப் பருவ இதழ்'ப் பகுதிகளில் தனிப்பக்க எண்ணுடன் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1969ஆம் ஆண்டு சரஸ்வதிமகால் நூலக வெளியீடாக வெளிவந்துள்ளது.

கம்பராமாயணக் கவுத்துவமணிமாலை

நா.ரா. சிவராஜப்பிள்ளையின் 'கம்பராமாயணக் கவுத்துவமணிமாலை' 461 விருத்தங்களாலானது. இதனைக் 'கம்பராமாயணக் கௌஸ்துபம்' என்றும் அழைப்பர். இந்நூல், கம்பராமாயணம் போலவே விருத்தப்பாடல்களால் அமைக்கப் பெற்றுள்ளது. கம்பராமாயணத்தில் உள்ள படல அமைப்பு இந்நூலிலும் அமைந்துள்ளது. முன்னுரைப் படலம் முதலாக கவி இலக்கணப் படலம் ஈறாகப் பத்துப் பாடல்களை இந்நூல் கொண்டுள்ளது. கம்பராமாயணத்தின் அருமை பெருமைகளை எடுத்துரைத்து, அதன் ஒப்பற்ற பெரும் புகழை உலகிற்கு எடுத்துக்காட்டுவதாக இந்நூல் அமைந்துள்ளது. இந்நூல் 1927ஆம் ஆண்டு குமரன் இதழில் முதல் பன்னிரு பாடல்கள் ஆசிரியரால் அறிமுகம் செய்யப்பெற்றுள்ளது. பின்னர் 1928-29ஆம் ஆண்டு செந்தமிழ் இதழ்ப் பகுதிகளில் முதல் 16 பாடல்களுக்கு விளக்க உரையுடனும் அடுத்த 89 பாடல்கள் மூலத்துடனும் வெளிவந்துள்ள இந்நூல் 1979ஆம் ஆண்டு தமிழாய்வு இதழில் நூல் முழுமையும் மு. சண்முகம் பிள்ளை தம்முடைய அடிக்குறிப்புடன் வெளியிட்டுள்ளார்.

கர வகுப்பு

முருகப்பெருமானின் அருட்பெருமைகளையும், அடியார் சிறப்புகளையும் எடுத்துக் கூறும் 'கர வகுப்பு' 98 அகவலடிக

ளாலும் ஒரு பன்னிருசீர் கழிநெடிலடியாசிரிய விருத்தத்தாலும் ஆனது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை எம்.பி.எஸ். துரைசாமி முதலியார் சித்தாந்தம் இதழில் 1937ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார்.

கரவை வேலன் கோவை

யாழ்ப்பாணம் நல்லூர் சின்னத்தம்பிப் புலவரின் 'கரவை வேலன் கோவை' 50 கட்டளைக் கலித்துறையா லானது. இது, யாழ்ப்பாணத்தில் கரவெட்டி என்னும் இடத்திலே பெருஞ்செல்வரும் பெருங்கொடையாளருமாய் வாழ்ந்த வேலாயுதப் பிள்ளை என்பாரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு அகப்பொருளின் துறைவகை அமைத்துப் பாடப்பெற்றுள்ளது. இந்நூலை அ. குமாரசாமிப் பிள்ளை 1910ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழில் (முதல் 50 பாடல்கள்) உரையுடன் பதிப்பித்திருக்கின்றார். 1935ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் அரும்பதவுரையோடு நூல் முழுமையையும் வெளியிட் டுள்ளது. இச்சங்கம் நடத்தும் தேர்வுக்கு இந்நூல் ஒரு பாடமாக வைக்கப்பெற்றிருக்கின்றது. பின்னர் சி. ஆழ்வார் பிள்ளை உபாத்தியாயரின் உரையுடன் நூல் முழுமையும் கலாநிதி யந்திரசாலை வெளியீடாக 1956ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது.

கருணாகர மாலை

முத்துப் புலவரின் 'கருணாகர மாலை' 31 கலித்துறையா லானது. அவிநாசி என்னும் தலத்தில் அமர்ந்துள்ள கருணாம்பிகை அம்மன் மீது இந்நூல் பாடப்பெற்றுள்ளது. இந்நூலை 1956ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் மு. பசுபதி வெளியிட்டுள்ளார்.

கருணாம்பிகை யமக அந்தாதி

கந்தசாமி சுவாமிகளின் 'கருணாம்பிகை யமக அந்தாதி', 30 பாடல்களால் ஆனது. திருப்புக்கொளியூர் - அவிநாசியில்

கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அருள்மிகு கருணாம்பிகை அம்மையின் புகழைப் பேசுவதாக இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலைப் ப.வெ. நாகராஜன் தம்முடைய உரையுடன் 188ஆம் ஆண்டு 'மாதாந்திர அமுதம்' இதழ்ப் பகுதிகளில் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1988ஆம் ஆண்டு கௌமார சபை வெளியீடாக வெளிவந்து உள்ளது.

கருணையந்தாதி

முத்துச்சாமிக் கவிராயர் என்னும் கருணைதாசரின் 'கருணையந்தாதி' 101 கலித்துறையாலானது. கொங்கு நாட்டில் புக்கொளியூர் எனும் அவிநாசியில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அவிநாசிலிங்கத்தின் வலப் பக்கத்தில் அருளே வடிவாய் அமர்ந்திருக்கும் பெருங்கருணாலயச் செல்வியின் பெருமையைக் கூறுவதாக இந்நூல் அமைந்துள்ளது. இதில் பெருங்கருணாலயச் செல்வியின் திருவுருவச் சிறப்பு, தியானிப்போர் பெறும் பயன்கள், தலச்செய்திகள் முதலியன கூறப்பெற்றுள்ளன. இந்நூலை வே.ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் 1970ஆம் ஆண்டு 'சித்தாந்தம்' இதழில் மூலம் மட்டும் வெளியிட்டுள்ளார். பின்னர் இந்நூலை வே.ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் உரையுடன் 1975ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார்.

கருந்திட்டைக்குடிப் பதிகம்

வெண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் 'கருந்திட்டைக் குடிப் பதிகம்' 11 கலிவிருத்தத்தாலானது. கருந்திட்டைக்குடி என்று வழங்கும் தஞ்சைக்கு அருகே உள்ள கரந்தையில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள சிவபெருமான் மீது இந்நூல் பாடப்பெற்றுள்ளது. 'கருந்திட்டைக் குடிவளர் கண்ணுதலே' என்று ஒவ்வொரு பாடலின் ஈறும் மகுடமாகப் பெற்றுள்ளது. இந்நூலை 1950ஆம் ஆண்டு தமிழ்ப்பொழில் இதழில் தி.செ. முருகதாசப் பிள்ளை வெளியிட்டுள்ளார்.

கலியுக மாலை

கலி காலத்தில் நடக்கும் அநீதிகள் பலவற்றை நிரல்படத் தொகுத்து விளக்கும் இந்நூல் 26 பாடல்களாலானது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை 1925ஆம் ஆண்டு பஞ்சாமிர்தம் இதழில் அ. மாதவையர் வெளியிட்டுள்ளார்.

கலைசைக் கோவை

தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவரின் 'கலைசைக் கோவை' 458 பாடல்களாலானது. இந்நூல் தொண்டை நாட்டில் உள்ள தொட்டிக்கலை எனும் கலைசைத் (சென்னை - ஆவடிக்கு அருகே உள்ளது) தலத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள சிதம்பரேசுரரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பெற்றுள்ளது. இந்நூலை உ.வே. சாமிநாதையர் தம்முடைய குறிப்புரையுடன் 1933-34ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழ்ப் பகுதிகளில் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1935ஆம் ஆண்டு செந்தமிழ் வெளியீடு 61ஆவதாக வெளிவந்துள்ளது. அதன் பிறகு இந்நூலின் மறுபதிப்பை 1995ஆம் ஆண்டு உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம் வெளியிட்டுள்ளது.

கலைமகளந்தாதி

கலைமகளின் பெருமைகளைக் கூறும் 'கலைமக ளந்தாதி' 26 வெண்பாக்களால் ஆனது. கலைமகளை நாமகள் என்றும் கூறுவர். கலைமகளின் பல்வேறு வடிவங்களையும் பெயர்களையும் செயல்களையும் இந்நூல் கூறுகின்றது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை 1931ஆம் ஆண்டு கலாநிலையம் இதழில் கி. வேங்கடசாமி வெளியிட்டுள்ளார்.

களக்காட்டுச் சத்தியவாசகர் இரட்டைமணிமாலை

'களக்காட்டுச் சத்தியவாசகர் இரட்டைமணிமாலை' 21 பாடல்களாலானது. நாங்குநேரி வட்டத்தில் களக்காடு எனும் தலம் உள்ளது. இதைச் சோராரணியம் என்றும்,

புன்னைவனம் என்றும் அழைப்பர். இத்தலத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள சத்தியவாசகர் மீது இந்நூல் பாடப்பெற்றுள்ளது. இவரைப் பொய்யாமொழியார் என்றும் அழைப்பர். இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

சந்திரசேகர கவிராஜ பண்டிதரால் 1882ஆம் ஆண்டு அச்சிடப்பெற்ற 'தனிப்பாடற்றிரட்டு' நூலில் 'களக்காட்டுச் சத்தியவாசகர் இரட்டைமணிமாலை'ப் பாடல்கள் ஐந்து இடம் பெற்றுள்ளன. அதன் பிறகு நூல் முழுமையும் உ.வே. சாமிநாதையர் குறிப்புரையுடன் 1932ஆம் ஆண்டு 'கலைமகள்' இதழில் வெளிவந்துள்ளது. பின்னர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலைய 125ஆவது வெளியீடான 'மாலை ஐந்து' (1995) என்னும் தொகுப்பு நூலில் இந்நூல் இரண்டாவதாக இடம் பெற்றுள்ளது.

கள வகுப்பு

திருமலைராயன் பொருகளத்தின் வெற்றிச் சிறப்பைக் கூறும் இந்நூல் அறுபத்து நான்கு சீர் கழிநெடிலடியாசிரிய விருத்தத்தாலான ஒரு சந்தப் பாவால் அமைந்துள்ளது. இந்நூலின் இறுதி அடியில்,

"படிதிகழ் சக்ரக் கிரியுல கத்தைப்
பருமதி வட்டத் தவள விசித்ரக்
குடைநிழ லாளுந் திரிபுவ னேசன்
தனம்ப டைத்துத் தழைக்கு நரபதி
பரிமளி தப்பொற் சததள பற்பத்
திருவரை கட்கக் கலிசன வெற்றித்
திருமலை ராயன் றாணிய ராகன்
செயங்கொ ளுக்ர களத்தின் வகையே"

என்பதால் திருமலைராயன் மீது பல பாடல்கள் பாடிய காளமேகமே இந்நூலைப் பாடியிருத்தல் கூடும் என்கின்றார் மு அருணாசலம். இந்நூலை எம்.பி.எஸ். துரைசாமி முதலியார் சித்தாந்தம் இதழில் 1937ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார்.

களவியற்றுறை விளக்கம்

இறையனார் களவியற் சூத்திரங்களை அடிப்படையாகக் கொண்டு பரந்துபட்ட அகப்பொருட் செய்திகட்கெல்லாம் அரிய மேற்கோள்கள் காட்டியுள்ள இந்நூலின் ஆசிரியர் பெயர் மற்றும் உரையாசிரியர் பெயர் தெரியவில்லை. கலித்துறைச் செய்யுள்களில் அமைந்துள்ள இந்நூலின் உரையால் பாண்டிக் கோவை, திருவரங்கக்கோவை, வங்கர்கோவை, தில்லை யந்தாதி, கோயிலந்தாதி, பொருளியல், கிளவிமாலை, கண்ட னலங்காரம், பல்சந்த மாலை, கிளவித்தெளிவு, இன்னிசை மாலை, தமிழ்நெறி விளக்கம் முதலிய பல அரிய நூல்கள் புலனாகின்றன. இந்நூலை 1931ஆம் ஆண்டு 'கலாநிலையம்' இதழில் சம்பந்தன் வெளியிட்டுள்ளார்.

கனா நூல்

பொன்னவனாரின் 'கனா நூல்' 30 கட்டளைக் கலித்துறையாலானது. இதிலுள்ள ஒவ்வொரு பாடலும் மண்டலித்து வரும் அந்தாதியாக அமைந்துள்ளது. கனவு இன்ன யாமத்தில் கண்டால் இன்ன காலத்துக்குள் இன்ன பலன் என்றும், இன்ன வகைக் கனவுக்கு இன்ன பலன் என்றும் இந்நூல் நிரல்படுத்திக் கூறுகிறது. ரா. இராகவையங்கார் இந்நூலை 1903ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழில் வெளியிட்டு உள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு செந்தமிழ் வெளியீடு 2ஆவதாக 1903ஆம் ஆண்டு முதற் பதிப்பும், 1920ஆம் ஆண்டு இரண்டாம் பதிப்பும் என வெளிவந்துள்ளது.

காஞ்சி மன்னன் அம்மானை

காஞ்சி மாநகரை ஆண்ட மன்னன் ஒருவனின் (பூங்குறிச்சி ஊரைச் சேர்ந்த தேசிகன்) திருமணச் செய்திகளைக் கூறும் இந்நூல் நீண்ட அகவல் அடியாலானது. காஞ்சி மன்னன், பாண்டியன் மகள் மீது காதல் கொள்கிறான். பாண்டியன் பெண் கொடுக்க மறுக்கவே, மாறுவேடத்தில் காஞ்சி மன்னன் சென்று, பாண்டியன் மகளை மணக்கும் பகுதி இந்நூலின் முதற் பகுதியாக அமைகிறது. காஞ்சி மன்னனின்

காதல் மனைவி மசக்கையினால் மலைமிதுக்கம் பழம் வேண்டுகின்றாள். அதுபோது, மலைக்குச் செல்லும் காஞ்சி மன்னன் குறவர்களிடம் அகப்பட்டுக் கொள்கின்றான். அப்போது குறமாது ஒருத்தியின் உறவு உண்டாகின்றது. இவ்வுறவு இடையில் முறியடிக்கப்பட்டுச் சோகத்தில் முடியும் பகுதி இந்நூலின் பிற்பகுதியாக அமைந்துள்ளது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை ம. சீராளன் 1969-71ஆம் ஆண்டு 'சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ்'ப் பகுதிகளில் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1971ஆம் ஆண்டு இந்நூலக வெளியீடாக வெளிவந்துள்ளது.

காத்தவராயன் சுவாமி பேரில் கும்மிப்பாடல்

பெரியசாமிக் கவியின் 'காத்தவராயன் சுவாமி பேரில் கும்மிப்பாடல்' விநாயகர், தாயுமானவர், சிவபெருமான், சபை வணக்கம் ஆகியவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பாடலாலும், நூல் 184 கண்ணிகளாலும் ஆனது. இந்நூலின் இறுதியில் அறுசீர் விருத்தம் ஒன்றும் உள்ளது. ஆக இந்நூல் 189 பாடல்களாலானது. சேப்பிளையானின் வளர்ப்பு மகனாக வளர்ந்த காத்தவராயன் ஆரியமாலை என்னும் பிராமணப் பெண்ணையும், ஒந்தாயி என்னும் தன்குலப் பெண்ணையும் மணந்தவன். பார்வதிதேவி எறும்பிற்குச் செய்த துன்பத்தின் பாவத்தைப் போக்க உருவாக்கின நந்தவனத்தில் காவலனாகப் பணிபுரிந்தவன் காத்தவராயன். பூவாயி என்பவளுடைய மதுக்கடையில் இருந்த காத்தவராயனைச் சேப்பிளையான் சிறைப்படுத்தி, அரசன் விசாரணை செய்து கழுவில் ஏற்றப்படக் காத்தவராயன் இறந்துவிடுகின்றான். இதனைக் கேட்ட ஆரியமாலையும் மடிந்துவிடுகின்றாள். இரு மனைவியர் வாழ்வால் உண்டாகும் இன்னல்களை இந்நூல் சுட்டிக்காட்டு கின்றது. இந்நூலை 1994ஆம் ஆண்டு சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழில் ச. திலகம் வெளியிட்டுள்ளார். 1885ஆம் ஆண்டு இருசப்ப முதலியார் பதிப்பித்த புகழேந்திப் புலவரின் 'காத்தவராய சுவாமி கும்மி'யினின்றும் இது வேறானது.

காரமடை ஆண்டாள் பதிகம்

கந்தசாமி சுவாமிகளின் 'காரமடை ஆண்டாள் பதிகம்' காப்பு வெண்பா 1, நூல் 11 அறுசீர் ஆசிரிய விருத்தத்தாலானது. காரமடையில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள ஆண்டாளின் சிறப்பியல்புகளை இந்நூல் சுட்டுகின்றது. மேலும், தாம்பெற்ற இன்பம் தனக்கும் பெற அருள் செய்வாயாக என்று ஆசிரியர் இறைஞ்சுவதாகவும் இந்நூல் அமைந்துள்ளது. இந்நூல் 1964ஆம் ஆண்டு கௌமார சபை வெளியிட்ட 'தவத்திரு கந்தசாமி சுவாமிகள் தோத்திரத் திரட்டு'ள் ஒன்றாக இடம்பெற்றுள்ளது. பின்னர் இந்நூல் ப.வெ. நாகராஜனின் உரையுடன் 1997-98ஆம் ஆண்டு 'மாதாந்திர அமுதம்' இதழில் வெளிவந்துள்ளது.

காரியார் நாரியார் பாப்பகுந்துகொண்ட திருவிளையாடல்

பெரும்பற்றப்புலியூர் நம்பியின் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தில் ஒன்றானது. பரஞ்சோதி திருவிளையாடற் புராணத்துள் வராதது. 14 பாடல்களாலான இந்நூல் பரஞ்சோதி திருவிளையாடற் புராணத்துள் வரும் 'வருணன்விட்ட கடலை வற்றச் செய்த திருவிளையாட'லுக்கு மாற்றாக இடம்பெற்றுள்ளது. காரியார் நாரியார் எனும் வடநாட்டுப் புலவர்கள் கவியால் பலரையும் அடிமை கொண்டு வரும் வேளையில் ஒரு நாள் மதுரை மாநகருக்கு வருகின்றனர். அங்குச் சிவபெருமானே மாடுமேய்ப்போனாக வேடங்கொண்டு பாடின பாட்டால் தோல்வியுறச் செய்த திருவிளையாடலை இந்நூல் சுட்டுகின்றது.

பெரும்பற்றப்புலியூர் நம்பி இயற்றிய பழைய திருவிளை யாடற் புராணத்தில் இடம்பெற்றுள்ள 'காரியார் நாரியார் பாப்பகுந்துகொண்ட திருவிளையாடல்' எனும் பகுதியைச் சௌந்தரபாரதி 1903ஆம் ஆண்டு 'விவேகபாநு' இதழில் வெளியிட்டுள்ளார். பின்னர் உ.வே. சாமிநாதையர் பதிப்பித்த 'திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராண'ப் பதிப்பில் (1906, 1927, 1972) இப்பகுதியும் இடம்பெற்றுள்ளது. திருவால

வாயுடையார் திருவிளையாடற் புராணத்தைப் பழைய திருவிளையாடற் புராணம் என்றும் அழைப்பர்.

காரைக்காலம்மையார் சரித்திரம்

காரைக்காலம்மையாரின் வாழ்க்கை வரலாற்றை இருபத்துநான்கு சீர் கழிநெடிலடியாசிரிய விருத்தம் ஒன்றால் இந்நூல் அமைந்துள்ளது. இது 'திருத்தொண்டர் புராணச் சுருக்கம்' எனும் நூலின் ஒரு பகுதியாகும். இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை 1949ஆம் ஆண்டு ஞானசம்பந்தம் இதழில் வே.ரா. தெய்வசிகாமணி கவுண்டர் வெளியிட்டுள்ளார்.

காழியந்தாதி

சீர்காழி அருணாசலக் கவிராயரின் 'காழியந்தாதி' 101 பாடல்களாலானது. இது, சட்டைநாதர் மீது பாடப்பெற்றது. இந்நூல் வாமதேவ முருகபட்டாரகரால் சென்னை வித்தியாநுபாலன யந்திரசாலை வழியாக 1880ஆம் ஆண்டு (விக்கிரம வருடம்) வெளியிடப்பெற்றுள்ளது. அதன் பிறகு திருவாரூர் எஸ். சோமசுந்தர தேசிகரால் 1911ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

கீரநத்தம் விநாயகர் திருப்புகழ்

கந்தசாமி சுவாமிகளின் 'கீரநத்தம் விநாயகர் திருப்புகழ்' பதினான்கு சீர் கழிநெடிலடியாசிரிய விருத்தத்தா லானது. கீரநத்தம் என்னும் தலத்தில் கோயில் கொண்டு இருக்கும் விநாயகப் பெருமான் மீது இந்நூல் பாடப்பெற்று உள்ளது. இதில் விநாயகப் பெருமானின் பெருமைகள் பலவாகக் கூறப்பெற்றுள்ளன. இந்நூலில் ஆசிரியர், 'எளியேனின் உள்ளத்தில் உம்திருவடிகள் தஞ்சம் அடையுமாறு அருள் புரிவீராக' என்று வேண்டுகின்றார். இந்நூல் 1932ஆம் ஆண்டு கௌமார சபை வெளியிட்ட 'கீரநத்தம் தோத்திரத் திரட்டு'ள் ஒன்றாகவும், 1964ஆம் ஆண்டு வெளியிட்ட 'தவத்திரு கந்தசாமி சுவாமிகள் தோத்திரத் திரட்டு'ள்

ஒன்றாகவும் இடம்பெற்றுள்ளது. பின்னர் இந்நூல் ப.வெ. நாகராஜனின் உரையுடன் 1998ஆம் ஆண்டு 'மாதாந்திர அமுதம்' இதழில் வெளிவந்துள்ளது.

கீரநத்தம் விநாயகர் பதிகம்

கந்தசாமி சுவாமிகளின் 'கீரநத்தம் விநாயகர் பதிகம்' காப்பு வெண்பா 1, நூல் 13 விருத்தங்கள் ஆக 14 பாடல்களா லானது. கீரநத்தம் எனும் பதியில் கோயில் கொண்டுள்ள விநாயகப் பெருமானைப் போற்றிப் பாடுவது இந்நூல். விநாயகப் பெருமானின் அங்க வடிவங்களின் அழகும், அவர் அமர்ந்தி ருக்கும் கோலமும் இந்நூலில் சிறப்பாக வருணிக்கப் பெற்று உள்ளன. 'தம்முடைய பல்வேறு வகையான துயரங்களைத் தீர்த்து அருள்வீராக' என்று ஆசிரியர் வேண்டுவதாக இந்நூல் அமைந்துள்ளது. இந்நூல் 1932ஆம் ஆண்டு கௌமார சபை வெளியிட்ட 'கீரநத்தம் தோத்திரத் திரட்டு'ள் ஒன்றாகவும், 1964ஆம் ஆண்டு வெளியிட்ட 'தவத்திரு கந்தசாமி சுவாமிகள் தோத்திரத் திரட்டு'ள் ஒன்றாகவும் இடம்பெற்றுள்ளது. பின்னர் இந்நூல் ப.வெ. நாகராஜனின் உரையுடன் 1998ஆம் ஆண்டு 'மாதாந்திர அமுதம்' இதழில் வெளிவந்துள்ளது.

கீழ்வேளூர் உலா

அந்தகக்கவி வீரராகவ முதலியாரின் 'கீழ்வேளூர் உலா' 405 பாடல்களாலானது. திருவாரூருக்கு அண்மையிலுள்ளது கீழ்வேளூர். இங்கு ஆளுங்கோ, கேடிலி, இலந்தை வனநாதர், அட்சயலிங்கம் என்று பல திருப்பெயர்களைக் கொண்டு எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் மீது இந்நூல் பாடப்பெற்று உள்ளது. இந்நூலைத் திருவாரூர் எஸ். சோமசுந்தர தேசிகர் 1916ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழில் பதிப்பித்திருக்கின்றார். அதன் பிறகு அ. இராசேந்திரன் தொல்பொருள் ஆய்வுத் துறையின் 82ஆவது வெளியீடாக 1981ஆம் ஆண்டு 'திருக்கீழ் வேளூர் உலா' என இந்நூலை வெளியிட்டுள்ளார். இவ்விரு பதிப்புகளும் குறைப்பதிப்பாகவே அமைந்துள்ளன.

குமரகுருபர சுவாமிகள் சரித்திர சார பஞ்சகம்

பதினான்கு சீர் கழிநெடிலடியாசிரிய விருத்தங்கள் ஐந்து கொண்ட இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. குமரகுருபரரின் பிறப்பு முதல் அவர்தம் வாழ்வில் நிகழ்ந்த சில குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் வரையும், அவர் யாத்த நூல்களின் முறை வைப்பும் இந்நூலில் விளக்கப்பெற்றுள்ளன. இந்நூல் 1989ஆம் ஆண்டு ஸ்ரீகுமரகுருபரர் இதழில் வெளிவந்துள்ளது.

குமரகுருபர சுவாமிகள் சரித்திரம்

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் 'குமர குருபர சுவாமிகள் சரித்திரம்' எனும் நூல் குமரகுருபரரின் பிறப்பு முதல் இறப்பு வரையுள்ள நிகழ்ச்சிகளை ஒருசேரத் தொகுத்துக் கூறுவதாக அமைந்துள்ளது. கவியமைப்பில் வாழ்க்கை வரலாற்றைக் கூறும் நூல்களுள் இதுவும் ஒன்று. இந்நூலை 1975ஆம் ஆண்டு குமரகுருபரன் இதழில் அ. நாராயணசாமி தம்முடைய குறிப்புரையுடன் வெளியிட்டு உள்ளார்.

குமாரபுரி முருகன் மும்மணிக்கோவை

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் 'குமாரபுரி முருகன் மும்மணிக்கோவை' காப்பு வெண்பா 1, நூல் 30, நூற்பயன் வெண்பா 1 ஆக 32 பாடல்களாலானது. குமார புரியில் கோயில் கொண்டுள்ள முருகப்பெருமான் மீது இந்நூல் பாடப்பெற்றுள்ளது. முத்தியடைய விரும்புவோர் முருகப் பெருமானை வணங்கில் எளிதில் முத்தியடையலாம் என்றும், முருகப்பெருமானே மற்றக் கடவுளர்களைக் காட்டிலும் உயர்ந்தவர் என்றும், இயற்கைத் தெய்வம் என்றும், ஆதி முதல் தெய்வம் என்றும், குமாரபுரி முருகனை வணங்கில் பிறவிக்கடல் நீத்து முத்தி இன்பத்தைப் பெறலாம் எனறெல்லாம் இந்நூலில் கூறப்பெற்றுள்ளன. இந்நூலை 1957ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் மு. பசுபதி வெளியிட்டுள்ளார்.

குயில்ராமாயணம்

அமிர்த கவிராயரின் 'குயில்ராமாயணம்' 128 எண்சீர் ஆசிரிய விருத்தத்தால் ஆனது. இராமாயணக் கதையைக் 'கூவாய் குயிலே' என்ற சொல்லை மகுடமாக வைத்து இந்நூல் பாடப்பெற்றுள்ளது. இந்நூலைக் 'கோகில ராமாயணம்' என்றும் கூறுவர். கம்பராமாயணக் கதையைப் பின்பற்றி இந்நூல் அமைக்கப்பெற்றுள்ளது. இந்நூலை ம. சீராளன் 1969ஆம் ஆண்டு 'சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ்'ப் பகுதியில் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1969ஆம் ஆண்டு இந்நூலக வெளியீடாக வெளிவந்துள்ளது.

குருகைமான்மியம் - பகுதி 1

திருக்குருகைப்பெருமாள் கவிராயரின் 'குருகைமான்மியம் - பகுதி 1' 2624 பாடல்களாலானது. திருக்குருகூர் என்ற ஆழ்வார் திருநகரியில் கோயில் கொண்டு இருக்கும் எம்பெருமானுடைய வைபவத்தைக் கூறுவதாக இந்நூல் அமைந்துள்ளது. இது பதிகம், நாடு, வாழ்த்துச் சருக்கம், புறநகர் வாழ்த்துச் சருக்கம், அகநகர் வாழ்த்துச் சருக்கம், கோயில் வருணனைச் சருக்கம், கெந்தமாதன வருணனைச் சருக்கம், பரமபத வருணனைச் சருக்கம், அண்டவுற்பத்திச் சருக்கம், மார்க்கண்டேயன் தோத்திரச் சருக்கம், பிரமனருந்தவச் சருக்கம், பிரமன் தோத்திரச் சருக்கம், திருவாராதனச் சருக்கம், வேட வருணனைச் சருக்கம், வேழ வருணனைச் சருக்கம், துணைப்படை வதைப்படு சருக்கம், வேடனும் வேழனும் வதைப்படு சருக்கம் முதலாய பல சருக்கங் களைக் கொண்டுள்ளது. இந்நூலைக் கி. இராமானுஜையங்கார் 1931-42ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழ்ப் பகுதிகளில் தனிப்பக்க எண்ணுடன் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1942ஆம் ஆண்டு செந்தமிழ் வெளியீடாக வெளிவந்துள்ளது.

குருகைமான்மியம் - பகுதி 2

திருக்குருகைப் பெருமாள் கவிராயரின் 'குருகைமான்மியம் பகுதி 2' பகுதி 1இன் தொடர்ச்சியாக 2672 பாடல்கள் வரை வெளிவந்துள்ளது. இதுவொரு குறைப்பிரதி யாகத் தோன்று

கின்றது. இந்நூலை 1947ஆம் ஆண்டு செந்தமிழ் இதழில் கி. இராமானுஜையங்கார் வெளியிட்டுள்ளார்.

குருநாதபூபதி பேரில் அட்டமங்கலம்

குருநாதபூபதி என்ற குறுநில மன்னனைத் தலைவனாகக் கொண்டு இந்நூல் பாடப்பெற்றுள்ளது. இதில் பத்து விருத்தப் பாடல்கள் உள்ளன. குருநாதபூபதியைக் காத்தருள வேண்டுவதாக இப்பாடல்கள் அமைக்கப்பெற்றுள்ளன. மாவை என்னும் ஊரைச் சேர்ந்த குருநாதபூபதியின் தலத்தைக் குறிப்பிட்டு அத்தலத்திலுள்ள இறைவியின் திருநாமத்தைச் சொல்லி, என் தலைவனைக் காக்க எனச் சிதம்பரத்தில் உள்ள சிவகாமசுந்தரியையும், காஞ்சி காமாட்சியையும், தஞ்சை ஆனந்த வல்லியையும், புள்ளிருக்குவேளூர் தையல்நாயகி யையும், கமலையம்பதி கமலாம்பிகையையும் வேண்டுவதாக இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை 1984ஆம் ஆண்டு சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழில் ச. திலகம் வெளியிட்டுள்ளார்.

குருந்தமலை ஸ்ரீகுழந்தை வேலாயுதசாமி பிள்ளைத்தமிழ்

கந்தசாமி சுவாமிகளின் 'குருந்தமலை ஸ்ரீகுழந்தை வேலாயுதசாமி பிள்ளைத்தமிழ்' 101 பாடல்களாலானது. குருந்தமலை உச்சியில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள குழந்தை வேலாயுதரைப் பாட்டுடைத் தலைவராய்க் கொண்டு இந்நூல் பாடப்பெற்றுள்ளது. இது, பருவத்திற்குப் பத்துப் பாடல்கள் வீதம் அமைந்த ஆண்பாற் பிள்ளைத்தமிழ் ஆகும். இதில் பதினான்குசீர் கழிநெடிலடியாசிரிய விருத்தம் தொடங்கி 128சீர் கழிநெடிலடியாசிரிய விருத்தம் வரையிலான பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இந்நூல் 1942ஆம் ஆண்டு கௌமார சபை வெளியிட்ட 'குருந்தமலைப் பிரபந்தத் திரட்டு'ள் ஒன்றாக உள்ளது. அதன்பிறகு இந்த நூல் 1948ஆம் ஆண்டு கௌமார சபை வெளியீடாக வெளிவந்துள்ளது. பின்னர் மருதாசலசாமி என்னும் தம்பிசாமியின் உரையுடன் மாதாந்திர அமுதம் இதழில் 1995-96ஆம் ஆண்டுப் பகுதிகளில்

வெளிவந்துள்ளது. பிறகு இவ்விதழ்ப் பதிப்பு 1996ஆம் ஆண்டு கௌமார சபை வெளியீடாக வெளிவந்துள்ளது.

குருபரம்பரை

ஆளவந்தார் வைபவம், எம்பெருமானார் வைபவம் என்ற இரண்டு பகுதிகளால் அமைந்த 'குருபரம்பரை' ஏறத்தாழ 4000 பாடல்களால் ஆனது. வைணவ ஆழ்வார்கள், ஆசாரியார்கள் ஆகியோரின் வைபவங்களைப் பல வகையான பாவகைகளைக் கொண்டு இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை 1927-30ஆம் ஆண்டு செந்தமிழ் இதழ்ப் பகுதிகளில் கி. இராமானுஜையங்கார் வெளியிட்டுள்ளார். 1902ஆம் ஆண்டு வேங்கடகிருஷ்ண நாயுடு பதிப்பித்த குருபரம்பரையினின்றும், திருமலை திருப்பதி தேவஸ்தான செய்தி மடலில் 1960-62ஆம் ஆண்டுப் பகுதிகளில் கே. பாலசுந்தர நாயகர் வெளியிட்ட அழகியநம்பிதாசரின் குருபரம்பரையினின்றும் இது வேறானது.

குருபரம்பரை அகவல்

திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் 'குருபரம்பரை அகவல்' 53 அகவலடிகளாலானது. திருவாவடுதுறை ஆதீனப் புறச்சந்தானக் குரவர்கள் நான்கு பேர்களும், அபிடேக குருமூர்த்திகள் முதல் பதினான்கு பேர்களும் ஆகப் பதினெட்டு பேர்களுக்கும் குருபூசை தினத்தையும், மாதம் மற்றும் நட்சத்திரங்களையும் நிரல்படுத்திக் கூறுவதாக இந்நூல் அமைந்துள்ளது. இந்நூல் உ.வே. சாமிநாதையர் பதிப்பித்த 'மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களின் பிரபந்தத்திரட்டு'ள் (1910, 1926) 1049ஆம் பாடலாக இடம் பெற்றுள்ளது. பின்னர் இந்நூலை மு. அப்பாவுப் பிள்ளை 1925ஆம் ஆண்டு 'செந்தமிழ்ச் செல்வி' இதழிலும், மோ.கோ. கோவைமணி 2000ஆம் ஆண்டு 'மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை ஆய்வுமாலை'யிலும் வெளியிட்டு உள்ளனர்.

குருமுதற் பாசுர நூல்

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் 'குருமுதற் பாசுர நூல்' 14 நேரிசை வெண்பாக்களாலானது. மாதா,

பிதா, குரு, தெய்வம் எனும் நான்கு வகைப் பிரிவில் இந்நூல் குருவைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. குருவின் குணங்கள், குரு எப்படி இருக்கவேண்டும், குருவிடம் நாம் பெறவேண்டுவது என்ன? குருவிடம் நாம் எப்படி இருக்கவேண்டும்? போன்றவை பற்றி இந்நூல் விளக்கிச் செல்கின்றது. இந்நூல் 1990ஆம் ஆண்டு 'மாதாந்திர அமுதம்' இதழில் வெளிவந்து உள்ளது.

குருக்ஷேத்திர மாலை

பாரதக் கதையில் வரும் குருக்ஷேத்திரன் கதையே 'குருக்ஷேத்திர மாலை'யாக உருவாக்கப்பெற்றுள்ளது. இந்நூல் 1074 அகவலடிகளால் ஆனது. குருக்ஷேத்திரன் என்பவன் பூசை முடித்துப் பூந்தேரில் புறப்பட்டுப் போகும்போது மரகதத்தை உமிழ்கின்றான். அது தவம் புரிந்துகொண்டு இருந்த கண்ணன் கையில் விழுகிறது. அதனால் மாயனின் சீற்றத்திற்குக் குருக்ஷேத்திரன் ஆளாகின்றான். இச்செயலிலிருந்து தன்னைக் காத்துக்கொள்ள சிவன் - நான்முகன், எமன் ஆகியோரிடம் குருக்ஷேத்திரன் அடைக்கலம் வேண்டுகின்றான். அவர்கள் காரணம் கேட்டு அபயமளிக்க மறுத்துவிடுகின்றனர். பின் வேட்டைக்குச் சென்றுகொண்டு இருந்த அருச்சுனனிடம் அபயம் வேண்ட, அவன் காரணம் கேட்காது அபயமளித்துக் காரணம் கேட்கிறான். இருவரும் தவறுக்கு வருந்துகின்றனர். மாயன் நாரதரைத் தூதனுப்புகின்றார். நாரதரும் குருக்ஷேத்திரனுக்கு அபயமளித்தல் முறையன்று என்பதை பஞ்சவர்களுக்கு உணர்த்தி, பயனின்றி மீள்கின்றான். மாயன் படை திரட்டிட உத்தரவு இடுகின்றான். அருச்சுனன் மனைவி களில் ஒருத்தியான சுபத்திரை மாயனிடம் முறையிட்டுத் தடுக்க முயன்று அதற்காகப் பாண்டவர்களிடம் தூது போகிறாள். தூது பயனற்றதாகப் போகவே போர் மூள்கின்றது. போரில் அருச்சுனனைத் தவிர அனைவரும் மாள்கின்றனர். பின் அருச்சுனனுக்கும் கண்ணனுக்கும் வாக்குவாதம் நிகழ்கின்றது. 'அழியக்கூடிய உயிர் பெரிதன்று, அபயம் கொடுத்தவனை உயிர்

கொடுத்தேனும் காக்கவேண்டும்' என அருச்சுனன் கூற, மாயன் மகிழ்ந்து காண்டீபனாகுமென்று அருச்சுனனுக்கு ஆசி கூறி மாண்டவர்களை உயிர்ப்பித்து, குருக்ஷேத்திரனையும் மன்னிப்ப தாக இக்கதை அமைந்துள்ளது. இந்நூலை ம. சீராளன் 1974-75ஆம் ஆண்டு 'சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ்'ப் பகுதிகளில் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1975ஆம் ஆண்டு இந்நூலக வெளியீடாக வெளிவந்துள்ளது.

குலோத்துங்க சோழன் கோவை

ஒட்டக்கூத்தரின் 'குலோத்துங்க சோழன் கோவை' 510 பாடல்களால் ஆனதாகும். இந்நூலில் மூன்றாம் குலோத்துங்க சோழனின் வரலாற்றுச் செய்திகளும், குலோத்துங்கனின் இயல்புகளும், சோழர்தம் வம்ச வரலாற்றுக் குறிப்புகளும் இடம்பெற்றுள்ளன. இந்நூல் மு.ரா. அருணாசலக் கவிராயரின் உரையுடன் 1900ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. அதற்குப் பிறகு வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியால் 1903ஆம் ஆண்டு 'ஞானபோதினி' இதழ்ப் பகுதிகளில் வெளியிடப்பெற்றுள்ளது. பின்னர் மு.ரா. அருணாசலக் கவிராயரின் துறைக்குறிப்புகள், அரும்பதவுரையுடன் 1910ஆம் ஆண்டு செந்தமிழ் வெளியீடாக வெளிவந்துள்ளது.

குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ்

ஒட்டக்கூத்தரின் 'குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ்' 103 பாடல்களாலானது. இந்நூலில் குலோத்துங்கனுடைய முன்னோர் வெற்றிச் செயல்களும், இவனுடைய வெற்றிச் செயல்களும், மிகச் சிறப்பாக விவரிக்கப்பெற்றுள்ளன. இந்நூல் சிறுபறை, சிறுதேர் ஆகிய பருவங்கள் ஒவ்வொன்றும் ஏழு பாடல்களையும், அம்புலிப் பருவம் 12 பாடல்களையும், ஏனைய பருவங்கள் ஒவ்வொன்றும் 11 பாடல்களையும் பெற்றுள்ளது. இந்நூலை எல். உலகநாத பிள்ளை 1928-29ஆம் ஆண்டு 'தமிழ்ப்பொழில்' இதழ்ப் பகுதிகளில் மூலம் மட்டும் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1933ஆம் ஆண்டு கரந்தைத் தமிழ்ச்சங்க வெளியீடாக வெளிவந்துள்ளது.

அதன் பிறகு டி.எஸ். கங்காதரன் 1974ஆம் ஆண்டு ஆராய்ச்சி உரையுடன் சரஸ்வதிமகால் நூலக வெளியீடு 154ஆவதாக வெளியிட்டுள்ளார். 1983ஆம் ஆண்டு 'குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ்' என்று ஒரு பதிப்பு வெளிவந்துள்ளது.

கூடற்புராணம்

மதுரையில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள கூடலழகர் கோயிலுக்குரிய புராணம் 'கூடற்புராணம்' ஆகும். இது பாயிரப்பகுதி, கிருத காண்டம், திரேத காண்டம், துவாபர காண்டம், கலி காண்டம் என ஐந்து பகுதிகள் - 757 பாடல்களால் ஆனது. இதில் திருமால், ஈசனுக்குத் திருமணம் முடித்ததும், காசிபன் முதலானோர்க்கு வரமளித்ததும், புலத்தியனுக்குப் புதல்வரை அளித்ததும், அம்பரீடனுக்கு அருள் புரிந்ததும், ஊர்வசியின் சாபம் நீக்கியதும், மலையத்துவசன் முதலியோரால் வழிபாடு பெற்றதும், பட்டர்பிரான் மெய்ப் பொருள் கூறிப் பொற்கிழி பெற அருளியதும் ஆகிய வரலாறுகள் விளக்கப்பெற்றுள்ளன. இந்நூலைக் கி. இராமாநுஜ ஐயங்கார் 1922-28ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழ்ப் பகுதிகளில் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1929ஆம் ஆண்டு செந்தமிழ் வெளியீடு 52ஆவதாக வெளிவந்துள்ளது.

கூந்தலூர் அருட்பா மாலை

அழகிய சிற்றம்பல தேசிகரின் 'கூந்தலூர் அருட்பா மாலை' 10 அறுசீர் ஆசிரிய விருத்தத்தாலானது. கூந்தலூரின் பெருமைகளையும் சிறப்புக்களையும் விளக்குவதாக இந்நூல் அமைந்துள்ளது. ஒவ்வொரு பாடலின் ஈற்றிலும் 'கூந்தலூரே' என்ற சொல் மகுடமாக அமைந்துள்ளது. இந்நூலை 1938ஆம் ஆண்டு சித்தாந்தம் இதழில் திருவாரூர் எஸ். சோமசுந்தர தேசிகர் வெளியிட்டுள்ளார்.

கைலாச நிகண்டு சூளாமணி

நிகண்டு நூல்களில் 'கைலாச நிகண்டு சூளாமணி'யும் ஒன்று. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலில்

தெய்வப்பெயர்த் தொகுதி மற்றும் இடப்பெயர்த் தொகுதி மட்டும் வெளியாகியிருக்கின்றன. இவ்விரு தொகுதிகளும் 506 நூற்பாக்களாலானவை. தெய்வப்பெயர்த் தொகுதியில்' விண்ணவர்களின் வகைகள், விண்ணின் வகை போன்றனவும், இடப்பெயர்த் தொகுதியில் மண்ணின் வகை (மலை வகை, கடல் வகை), மண்ணவர் வகை (மாதவர், மறையோர்; வேந்தர், வைசியர், சூத்திரர்) போன்றனவும் இடம்பெற்றுள்ளன. ஏனைய தொகுதிகள் வெளியானதாகத் தெரியவில்லை. இந்நூலை 1939ஆம் ஆண்டு 'சக்தி' இதழில் எஸ். வையாபுரிப்பிள்ளை வெளியிட்டுள்ளார்.

கோதை நாய்ச்சியார் தாலாட்டு

கோதை நாய்ச்சியாரின் (ஆண்டாள்) வரலாற்றினைக் கூறும் இந்நூல் 316 அகவலடிகளாலானது. இந்நூலின் தொடக்கத்தில் சேனையர்கோன், திருவரங்கப் பெருமான் ஆகியோர் மீது பாடப்பெற்ற இரண்டு காப்புப் பாடல்கள் உள்ளன. மேலும் இதில் திருவில்லிப்புத்தூரைப் பற்றிய வருணனைகள், கோதையார் வரலாறு முதலியவை அழகுபடக் கூறப்பெற்றுள்ளன. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரிய வில்லை. ஆழ்வார்திருநகரி திருஞானமுத்திரைப் பிரசுராலயத்தின் மூலம் பெரியன் ஸ்ரீநிவாஸன் 'கோதைநாய்ச்சியார் தாலாட்டு' எனும் தாழிசை யாப்பிலமைந்த நூலை வெளியிட்டுள்ளார். இப்பதிப்பில் சிதிலம் அடைந்த இடங்கள் கோடிட்டுக் காட்டப் பெற்றுள்ளன. 1953ஆம் ஆண்டு 'அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ்'ப் பகுதியில் வி.எஸ். கிருஷ்ணனால் தாழிசை யாப்பை அகவலாக்கியும் விடுபாடுகளைப் புள்ளி/கோடு இட்டுக்காட்டாமல் தொடர்ச்சியாகவும் வெளியிடப்பெற்றுள்ளது.

கோமதி அந்தாதி

காவடிச்சிந்து அண்ணாமலை ரெட்டியாரின் 'கோமதி அந்தாதி' விநாயகர் காப்பு 1, நூல் 100 கட்டளைக்கலித்துறையா லானது. இந்நூல் பாண்டி நாட்டிலுள்ள சங்கரநயினார் கோயிலில் கொளுவீற்று மக்களுக்கு அருட்சக்தியை பாலித்துக்

கொண்டிருக்கும் கோமதி அம்மையைப் பற்றியதாகும். இவ் அம்பிகையை ஆவுடை, ஆவுடைநாயகி, ஆவுடைத்தோகை, ஆவுடைமாது, ஆவுடையம்மை, கோமதி, புன்னைவனி, மனோன்மணி, சங்கரரி அம்பாலிகை, புராதனி முதலிய பல பெயர்களால் அழைப்பர். அம்பை இரா. சங்கரன் இந்நூலின் முதல் 44 பாடல்களைச் 'சித்தாந்தம்' இதழில் 1955ஆம் ஆண்டும், இதே பகுதியை மீண்டும் 'சித்தாந்தம்' இதழில் 1976ஆம் ஆண்டும் வெளியிட்டுள்ளார். பின்னர் இக்குறை நூல் யாங்கனும் முழுமையும் கிட்டாமையால் அம்பை இரா. சங்கரன் தம்முடைய அம்பை நூலகத்தின் நான்காவது வெளியீடாக 1976ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார்.

கோவை இராமநாதபுரம் விநாயகர் பதிகம்

கந்தசாமி சுவாமிகளின் 'கோவை இராமநாதபுரம் விநாயகர் பதிகம்' காப்பு வெண்பா 1, நூல் 11 எழுசீர் ஆசிரிய விருத்தத்தாலானது. கோவை - இராமநாதபுரத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள விநாயகப் பெருமான் மீது இந்நூல் பாடப்பெற்றுள்ளது. இதில் விநாயகப் பெருமானின் வடிவழகும் அருளிச் செயல்களும் விதந்தோதப்பெற்றுள்ளன. இந்நூல் 1964ஆம் ஆண்டு கௌமார சபை வெளியிட்ட 'தவத்திரு கந்தசாமி சுவாமிகள் தோத்திரத் திரட்டு'ள் ஒன்றாக இடம்பெற்றுள்ளது. பின்னர் இந்நூல் ப.வெ. நாகராஜனின் உரையுடன் 1997ஆம் ஆண்டு 'மாதாந்திர அமுதம்' இதழில் வெளிவந்துள்ளது.

கௌமார விநோத நூல்

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் 'கௌமார விநோத நூல்' 25 பாடல்களாலானது. கௌமாரத்தின் பெருமைகளையும் சிறப்புக்களையும் இந்நூல் எடுத்துக் கூறுகின்றது. மேலும் இறைவன் ஒருவனே என்றும், அவன் வழியே உலகச் செயற்பாடுகள் நிகழ்கின்றன என்றும், பெயரளவில் கடவுளர்கள் பலர் இருந்தாலும் அவர்கள் எல்லோரும் உறவுடையோரே என்றும், அவர்களின் ஞான குருவானவன் குமாரக்கடவுளே என்றும் ஆசிரியர் தம் கருத்தை

நயமாக இந்நூலில் எடுத்துரைக்கின்றார். இந்நூல் 1990ஆம் ஆண்டு 'மாதாந்திர அமுதம்' இதழில் வெளிவந்துள்ளது.

சக்தி வகுப்பு

மார்க்கசகாய தேவரின் 'சக்தி வகுப்பு' 28சீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தாலானது. இது, திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழ் காப்புப் பருவத்துத் தேவி துதியாக இடம்பெற் றிருக்கின்றது. இதில் தேவியின் வடிவழகும் பெருமைகளும் சிறப்புகளும் எடுத்துக் கூறப்பெற்றுள்ளன. இந்நூலை எம்.பி.எஸ். துரைசாமி முதலியார் சித்தாந்தம் இதழில் 1937ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார்.

சங்கர சிவக்கொழுந்து மாலை

பனங்குடி கந்தசாமி பிள்ளையின் 'சங்கர சிவக்கொழுந்து மாலை' 33 விருத்தங்களாலானது. 'சங்கர சிவக்கொழுந்தே' எனும் சொற்றொடர் ஒவ்வொரு பாடலின் ஈற்றிலும் மகுடமாக விளங்குகின்றது. ஒவ்வொரு பாடலிலும் கவிஞர், தமக்குத் திருவடிப்பேறு வேண்டும் எனக் கேட்கும் விழுப்பம் காணப்படும் முறையில் இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலை 1962ஆம் ஆண்டு 'ஞானசம்பந்தம்' இதழில் சொ. சிங்காரவேலன் வெளியிட்டு உள்ளார்.

சங்கரசோழனுலா

சங்கமனின் மூன்று மகன்களில் இளையவனான சங்கரன் மீது பாடப்பெற்றது இவ்வுலா. இந்நூல் 366 கண்ணி களாலானது. இதனாசிரியர் பெயர் தெரியவில்லை. விக்கிரம சோழனுலா அமைப்பிலேயே இவ்வுலாவும் அமைக்கப்பெற்று உள்ளது. இதில் சோழகுலத் தொன்மை, தலைவனுடைய பெருமை, அவனுடைய அலங்காரம், அவன் பவனி வருதல், குழாங்கள் கூற்று, பேதை முதலான பருவப் பெண்களின் நிலைகள் போன்றன சிறப்பாக அமைந்துள்ளன. இந்நூலை நாராயணையங்கார் 1909ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழில் வெளியிட்டுள்ளார். அதன் பின்னர் கி.வா. ஜகந்நாதனின் குறிப்புரையுடன் உ.வே. சாமிநாதையர் நூல்நிலைய வெளியீ

டாக 1977ஆம் ஆண்டு, 'சங்கரராசேந்திர சோழன் உலா' என்ற பெயரில் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

சங்கரநயினார் கோயில் அந்தாதி

பாண்டி நாட்டிலுள்ள சங்கரநயினார் கோயிலில் எழுந்தருளியுள்ள சங்கரநாராயணப் பெருமாள் மீது பாடப் பெற்ற இந்நூல் 100 பாடல்களால் ஆனது. இது கூழையந்தாதி என்றும், வரராசையந்தாதி என்றும் வழங்கப்பெறும். கூழை என்பதும், வரராசை என்பதும் சங்கரநயினார் கோயிலின் திருநாமங்களாகும். இத்தலத்தில், ஒரு புற்றிற் பாம்பின் திருவுருவங் கொண்டு எழுந்தருளியிருந்த கருணைக் கடலாகிய சிவபெருமானைக் காடு செப்பஞ் செய்வதாக வந்த மணிக்கிரீவ னால் வெட்டப்பெற்று வாலற்றுக் கூழையுருவத்தோடு அவனுக்குக் காட்சி அளித்தமையின் கூழைபிரான் என்னும் பெயர் பெறுகின்றார். பின்னர் இக்கூழை, இத்தலப் பெயராயும் ஆயிற்று என்பர். இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை உ.வே. சாமிநாதையர் 1932-33ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழ்ப் பகுதிகளில் பதிப்பித்திருக்கின்றார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1934ஆம் ஆண்டு செந்தமிழ் வெளியீடு 60ஆவதாக வெளிவந்துள்ளது. அதன் பிறகு த.ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் உரையுடன் 1969ஆம் ஆண்டு திருவிடைமருதூர் மகாலிங்கசுவாமி தேவஸ்தானம் வெளியிட்டுள்ளது.

சங்கரலிங்க உலா

பாண்டி நாட்டுச் சிவத்தலங்களுள் ஒன்றாகிய சங்கரநயினார் கோயிலில் எழுந்தருளியிருக்கும் சங்கரலிங்கர் மீது பாடப்பெற்றதே 'சங்கரலிங்க உலா' ஆகும். இதை வரராசை உலா என்றும் வழங்குவர். 312 கண்ணிகளாலான இந்நூலில் காவை. வடமலையப்பப் பிள்ளை செய்த திருப்பணிகள், தல வரலாறுகள் இடம்பெற்றுள்ளன. இத்தலத்தில் சிவபிரான் சங்கரநாராயணனாக எழுந்தருளி இருக்கின்றார். இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை உ.வே

சாமிநாதையர் 1933ஆம் ஆண்டு 'சிவநேசன்' இதழில் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1933ஆம் ஆண்டு சிவநேசன் வெளியீடாக வெளிவந்துள்ளது. அதன் பிறகு 1994ஆம் ஆண்டு வெளிவந்த உ.வே. சாமிநாதையர் நூல் நிலைய 'உலாப்பிரபந்தங்கள்' தொகுதி ஒன்றில் இந்நூல் நான்காவதாக இடம்பெற்றுள்ளது.

சட்டைநாதர் தோத்திரம்

காழியம்பதியில் கோயில் கொண்டுள்ள சட்டைநாதர் மீது இந்நூல் பாடப்பெற்றுள்ளது. இதில் 28 பாடல்கள் உள்ளன. விருத்தம், வெண்பா, கலித்துறை என்னும் மூவகைப் பாக்களும் இந்நூலுள் விரவி வந்துள்ளன. நரசிம்மத்தைக் கொன்ற நரசிம்மத் தலையினைத் தனது தலைமாலையின் நாகமணி யாகவும், தோலைச் சட்டையாகவும் போர்த்திக் கொண்ட சட்டைநாதரின் சிறப்பியல்புகள் கூறும் இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை 1975ஆம் ஆண்டு சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழில் இராம. திலகம் வெளியிட்டுள்ளார்.

சதுரங்க நூல்

சித்திரக்கவிகளில் சதுரங்க பந்தமும் ஒன்று. சதுரங்கம் என்பது ஒருவகையான விளையாட்டு. வெண்பாவாலான இரண்டு பாயிரங்களையும், நூல் முழுமையும் பாடலெண் குறிப்பிடாமல் அகவலும் வெண்பாவுமாக இந்நூல் அமைந்து உள்ளது. இந்நூலில் சதுரங்க அறைகள் அறுபத்து நான்கின் பெயர்களும் படைவகுப்பின் பெயர்களும் விவரமாகக் கூறப்பெற்றுள்ளன. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை 1926ஆம் ஆண்டு செந்தமிழ் இதழில் கி. இராமாநுஜ ஐயங்கார் வெளியிட்டுள்ளார்.

சரப புராணம்

திருமலைநாயனாரின் 'சரப புராணம்' 431 விருத்தங் களாலானது. 'சரபம்' என்பது 'எண்காற்புள்' எனவும், 'சிம்புள்' எனவும் வழங்கப்பெறும். திருமால், இரணியனை அழிக்க

எடுத்த நரசிம்ம அவதாரம். இரணியனைக் கொன்றதும் உலகை அழிக்கத் தொடங்கியது. இதையழிக்கச் சிவபெருமான் பாதி மிருக உடலும் பாதி பறவை உடலும் மனித மார்பும் தோள்களும் நான்கு திருக்கரங்களும் சிம்மத் தலையும் கொண்ட சரப உரு எடுத்தார். இச்சரபம் நரசிங்கத்தைக் கிழித்தழித்ததை இந்நூல் சுட்டுகின்றது. இந்நூலை வீ. சொக்கலிங்கம் 1971-72ஆம் ஆண்டு 'சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ்ப் பகுதிகளில் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1972ஆம் ஆண்டு இந்நூலக வெளியீடாக வெளிவந்துள்ளது.

சரித்திர சார வண்ணம்

கந்தசாமி சுவாமிகளின் 'சரித்திர சார வண்ணம்' வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் மீது பாடப் பெற்றதாகும். இதில் வண்ணச்சரபரின் வாழ்க்கை வரலாறு சுருக்கமாக இடம்பெற்றுள்ளது. மேலும் அவர்தம் நூல்கள் பதிப்பிக்குந் தன்மையும் எடுத்தோதப்பெற்றுள்ளன. இந்நூல் சிரவணபுரம் கௌமார சபை வெளியீடான 'வண்ணத்திரட்டு'ள் (1929 - சுக்கில ஆண்டு) ஒன்றாக இடம்பெற்றுள்ளது. பின்னர் இந்நூல் இல. பழனிச்சாமியின் உரையுடன் 1989-90ஆம் ஆண்டு 'மாதாந்திர அமுதம்' இதழ்ப் பகுதிகளில் வெளிவந்துள்ளது.

சனிபகவான் தோத்திரம்

'சனியனே காகமேறும் தம்பிரானே' எனும் தொடரை ஒவ்வொரு பாடலின் ஈற்றிலும் மகுடமாகக் கொண்டுள்ள இந்நூல் 11 எண்சீர் விருத்தங்களாலும் ஒரு காப்புச் செய்யுளாலுமானது. நவக்கிரகங்களுள் ஒன்றாகிய சனிபகவானைப் பற்றியது. யாவரையும் பிடித்துத் துன்புறுத்த வல்லோய், நின்னைத் தொழுகின்றேன். என்னைத் தொடராது ஒழிவாயாக என்று வேண்டுவதாக இந்நூல் அமைந்துள்ளது. இதனுள் பழங்காலத்தில் சனியினால் பிடிக்கப்பட்டோர்களின் பெயர்கள் கூறப்பெற்றுள்ளன. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை ஆறுமுக சுவாமிகள் (1878), அ. சபாபதி பிள்ளை (1880), இட்டா பார்த்தசாரதி நாயுடு (1899), எம். வடிவேலு

முதலியார் (1934), சென்னை கலைமகள் விலாசம் (1938), பி.நா.சி. பிரதர்ஸ் (1938), ஆ.ஜி. பதி (1948) போன்றோர் வெளியிட்டு உள்ளனர். இப்பதிப்பினைத் தொடர்ந்து சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் மு. பசுபதி 1954ஆம் ஆண்டு சுவடியை ஆதாரமாகக் கொண்டு வெளியிட்டுள்ளார்.

சாத்தூர் நொண்டி

சாத்தூரப்பனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பெற்றதே 'சாத்தூர் நொண்டி' ஆகும். இதனைச் சாத்தூர் நொண்டிச்சிந்து என்றும், சாத்தூர் நொண்டி நாடகம் என்றும் அழைப்பர். நொண்டி நாடகங்களுள் இது காலத்தால் முந்தியது என்பர். கள்வனொருவன் படையிலுள்ள குதிரையொன்றைத் திருட முயன்றபோது கால் தறியுண்டு பின் நல்வழி பெற்ற செய்தியைச் சிந்துச் செய்யுளாற் புனைந்து கூறும் நாடக நூலை நொண்டி நாடகம் என்பர். இம்முறையில் இந்நூலும் அமைந்து உள்ளது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை 1939ஆம் ஆண்டு 'சக்தி' இதழில் சம்பந்தம் வெளியிட்டுள்ளார்.

சிதம்பரச் செய்யுட்கோவை

ஸ்ரீகுமரகுருபரரின் 'சிதம்பரச் செய்யுட்கோவை' 84 பாடல்களால் ஆனது. வெண்பா விகற்பம், வெண்பாவினம், ஆசிரியப்பா விகற்பம், ஆசிரியப்பாவினம், கலிப்பா விகற்பம், கலியினம், வஞ்சிப்பா, வஞ்சியினம், மருட்பா ஆகிய ஒன்பது பகுப்புகளை இந்நூல் கொண்டுள்ளது. இந்நூல் 1886ஆம் ஆண்டு முதன் முதலாக அச்சேறியுள்ளது. 1939, 1988ஆம் ஆண்டுகளில் வெளிவந்த உ.வே. சாமிநாதையரின் 'ஸ்ரீகுமர குருபரர் பிரபந்தத் திரட்டு'ப் பதிப்பில் இந்நூல் இடம்பெற்று உள்ளது. அதன் பிறகு இராமசாமி முதலியார் 1916ஆம ஆண்டும், ப.அ. முத்துத்தாண்டவராய பிள்ளையின் அரும்பொருள் விளக்கத்துடன் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் 1932ஆம் ஆண்டும், வித்துவான் மு. சண்முக தேசிகரின் உரையை தருமையாதீனம் 1937ஆம் ஆண்டும், உ.வே.

சாமிநாதையரின் உரையுடன் திருப்பனந்தாள் காசித் திருமடம் 1947ஆம் ஆண்டும், 'சிதம்பர மும்மணிக்கோவை, தில்லைச் சிவகாமியம்மை இரட்டைமணிமாலை' ஆகியவற்றுடன் இணைந்த பதிப்பாகக் காசிமடம் 1952ஆம் ஆண்டும் எனப் பல பதிப்புகள் வெளிவந்திருக்கின்றன. முன்பதிப்புகளையும் சரஸ்வதிமகால் நூல்நிலையத்தில் உள்ள சுவடியையும் கொண்டு திருத்தப் பதிப்பாக ய. மணிகண்டன் சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழில் 1999ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு சரஸ்வதிமகால் நூலக வெளியீடாக 1999ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது.

சிதம்பரப் பாட்டியல்

பரஞ்சோதியாரின் 'சிதம்பரப் பாட்டியல்' 52 பாடல்களாலானது. உறுப்பியல், செய்யுளியல், மொழியியல், பொருத்தவியல், மரபியல் என்ற ஐந்து இயல்களில் 57 வகையான சிற்றிலக்கியங்களுக்கான இலக்கணங்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இந்நூலுக்குப் பழையவுரை ஒன்றுண்டு. இவ்வுரையுடன் மு. இராகவையங்கார் 1907-08ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழ்ப் பகுதிகளில் தனிப்பக்க எண்ணுடன் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1911ஆம் ஆண்டு செந்தமிழ் வெளியீடு 20ஆவதாக வெளிவந்துள்ளது. இதன் இரண்டாவது பதிப்பைக் கி. இராமாநுஜையங்கார் 1932ஆம் ஆண்டு சில திருத்தங்களுடன் செந்தமிழ் வெளியீடு 20ஆவதாக வெளியிட்டுள்ளார்.

சிதம்பர விலாசம்

சிதம்பரத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள ஆடல்வல்லானாகிய நடராசப் பெருமானின் அருள்வடிவ உட்பொருள்களையும், அவன் அண்மையில் அமைந்திருக்கும் ஏனைய தெய்வங்களின் குணவிசேடங்களையும் நுண்ணிதாக எடுத்துச் சொல்லும் இந்நூல் 145 நிலைமண்டில ஆசிரியப்பாவாலானது. நடராசப் பெருமானின் அருள் தத்துவத்தை, எவனொருவன் எள்பொழுதாயினும் உளமுருகி நினைந்து, அன்பு கொண்டு வாழ்த்தி, செவி நிறையக் கேட்கின்றானோ,

அவனே 'பிறவியாகிய பெருங்கடலை எளிதில் கடக்கவும், நிலைபேறான வீட்டின்பத்தை அடையவும் முடியும்' என்ற கருத்தினை இந்நூல் வலியுறுத்துகின்றது. இதனுள் சிற்சபை, கனக சபை, பஞ்சாக்கரப்படி முதலியவற்றின் அமைப்பும்; தாண்டவமூர்த்தி, சோமாஸ்கந்தமூர்த்தி, திருமூலநாதர், உமை, பரிவார தேவர்கள் முதலியோர் எழுந்தருளிய இடமும்; குணவிசேடமும், நடராசப் பெருமானின் அருள் தத்துவமும், அருள் வடிவத்தின் உட்பொருளும் நுண்ணிதாக விளக்கப் பெற்றுள்ளன. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை மு. பசுபதி 1952ஆம் ஆண்டு 'அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ்'ப் பகுதியில் வெளியிட்டுள்ளார். அதன்பிறகு தி. பட்டுச்சாமி ஓதுவார் தம்முடைய குறிப்புரையுடன் 1952ஆம் ஆண்டு 'குமரகுருபரன்' இதழில் வெளியிட்டு உள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1952ஆம் ஆண்டு திருப்பனந்தாள் காசிமட வெளியீடாக வெளிவந்து உள்ளது.

சித்தரந்தாதி

சித்தரின் 'சித்தரந்தாதி' 22 கலித்துறைகளாலானது. திருவானைக்காவில் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள அகிலாண்டநாயகி அம்மை மீது இந்நூல் பாடப்பெற்றுள்ளது. அம்மையின் தோற்ற அழகும், சிறப்பும், பெருமைகளும் இதில் கூறப்பெற்றுள்ளன. இந்நூலை எல். உலகநாத பிள்ளை 1936ஆம் ஆண்டு பழைய உரையுடன் 'தமிழ்ப்பொழில்' இதழ்ப் பகுதிகளில் தனிப் பக்கவெண்ணுடன் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பை 1936ஆம் ஆண்டு தஞ்சைக் கூட்டுறவுப் பதிப்பகம் வெளியிட்டுள்ளது. இப்பழைய உரை அன்றி வேறொரு உரையுடன் 1956ஆம் ஆண்டு வெளிவந்த அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலக 'அந்தாதிக் கொத்து' எனும் தொகுப்பில் 11ஆவதாக இந்நூல் இடம்பெற்றுள்ளது.

சிரவை சற்குரு பதிகம்

கந்தசாமி சுவாமிகளின் 'சிரவை சற்குரு பதிகம்' 13 பாடல்களாலானது. சிரவையாதீன கர்த்தர் இராமானந்தர் மீது இப்பதிகம் பாடப்பெற்றுள்ளது. 'ராமானந்த சற்குருவே' என்று

ஒவ்வொரு பாடலின் ஈறும் மகுடமாக அமைக்கப்பெற்றுள்ளது. இராமானந்தர் தன்னை ஆட்கொண்ட எழில் நிலையை ஆசிரியர் இதில் பலவாறாகப் பாராட்டியுள்ளார். இந்நூல் 1964ஆம் ஆண்டு கௌமார சபை வெளியிட்ட 'தவத்திரு கந்தசாமி சுவாமிகள் தோத்திரத் திரட்டு'ள் ஒன்றாக இடம்பெற்றுள்ளது. பின்னர் 'மாதாந்திர அமுதம்' இதழில் 1992ஆம் ஆண்டு வெளிவந்து உள்ளது. இவ்விதழ்ப் பதிப்பு 1992ஆம் ஆண்டு ஈச்சநாரி விநாயகர் பதிற்றுப்பத்தந்தாதி மற்றும் மகாலட்சுமி பதிகத்துடன் கௌமார சபை வெளியீடாக வெளிவந்துள்ளது.

சிராமலைக்கோவை

திருச்சிராப்பள்ளி மலைக்கோயிலில் கோயில் கொண்டு எழுந்தருளி உள்ள தாயுமானவர் மீது இந்நூல் பாடப்பெற்று உள்ளது. இதல் 459 கட்டளைக் கலித்துறைகள் உள்ளன. தாயுமானவருடைய சிறப்பியல்புகள் பலவாறாகப் பாராட்டப் பெற்றுள்ள இந்நூலில் சைவ சாத்திரக் கருத்துக்கள் அங்கங்கே அழகாகப் பொருத்தமான இடங்களில் இடம்பெற்றிருக் கின்றன. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூல் 1929ஆம் ஆண்டு திரிசிரபுரம் சதர்ன் ஸ்டார் பிரஸ்ஸில் அச்சிடப் பெற்றுள்ளது. உ.வே. சாமிநாதையரின் குறிப்புரை யுடன் 'சிராமலைக்கோவை (458 பாடல்கள்) 'செந்தமிழ்' இதழ் 1934-35ஆம் ஆண்டுப் பகுதிகளில் வெளிவந்துள்ளது. பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1937ஆம் ஆண்டு செந்தமிழ் வெளியீடு 64ஆவதாக வெளிவந்துள்ளது.

சிராமலையந்தாதி

வேம்பையர்க்கோன் நாராயணனின் 'சிராமலையந்தாதி' 102 கட்டளைக் கலித்துறையாலானது. திருச்சிராமலை பற்றி இந்நூல் கூறுகிறது. திருச்சி மலைக்குன்றின் மேல் பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் அமைத்த குடைவரைக் கோயில் மதில் சுவரில் இந்நூல் பொறிக்கப்பெற்றுள்ளது. திருச்சிரா மலையின் வரலாறு, அமைப்பு, சிறப்பு, பெருமை பற்றிக் கூறுவ தாக இந்நூல் அமைந்துள்ளது. இந்நூல், "திருச்சிராமலைக்

குன்றின் மேல் பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் அமைத்த குடைவரைக்கோயில் மதிலில் பொறிக்கப்பட்டு, கல்வெட்டு இலாகாவினரால் 1888இல் படிசெய்து 1923இல் வெளியிடப்பட்டது". அதன்பிறகு இந்நூல் டி.வி. சதாசிவ பண்டாரத்தாரால் 1935ஆம் ஆண்டு 'தமிழ்ப்பொழில்' இதழில் வெளியிடப்பெற்றுள்ளது. பிறகு மு. இராகவையங்காரின் பொழிப்புரை, விளக்கவுரையுடன் 1953ஆம் ஆண்டு தருமை யாதீன வெளியீடாக 'திரிசிராமலை யந்தாதி' என வெளிவந்து உள்ளது.

சிவகாமியம்மன் பேரில் அகவல்

தில்லையில் கோயில் கொண்டு அருள் பாலித்துக் கொண்டிருக்கும் சிவகாமசுந்தரி அம்மை மீது பாடப்பெற்ற இந்நூல் 297 அகவலடிகளால் ஆனது. இதில் அம்மையின் சிறப்பியல்புகள் விதந்தோதப் பெற்றுள்ளன. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை 1974ஆம் ஆண்டு சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழில் இராம. திலகம் வெளியிட்டுள்ளார்.

சிவசயிலப் பள்ளு

இராமநாதக் கவிராயரின் 'சிவசயிலப் பள்ளு' கொங்கு நாட்டில் உள்ள சிவசயிலம் எனும் மலையின் மீது கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள முருகப்பெருமான் மீது பாடப் பெற்றதாகும். பள்ளு வகையில் அமைந்த இந்நூலின் முதல் 54 பாடல்கள் மட்டுமே வெளிவந்திருக்கின்றன. நூல் முழுமையும் கிடைக்கவில்லை. இந்நூலை 1961-62ஆம் ஆண்டு ஞானசம்பந்தம் இதழ்ப் பகுதிகளில் கு. அருணாசலக் கவுண்டர் வெளியிட்டு உள்ளார்.

சிவசிவ வெண்பா

சிதம்பரம் பச்சைகந்தையர் மடத்து வீரசைவராகிய சென்ன மல்லையரின் 'சிவசிவ வெண்பா' காப்பு 1, அவையடக்கம் 1, நூல் 133 நேரிசை வெண்பாக்களால் ஆனது. திருக்குறளின் வழி

நூலாக இது அமைந்துள்ளது. திருக்குறளின் அதிகார வரிசையில் ஒவ்வோர் அதிகாரத்திற்கும் ஒவ்வோர் செய்யுளாக இந்நூல் அமைக்கப்பெற்றுள்ளது. ஒவ்வொரு செய்யுளினுள்ளும் 'சிவசிவ' என்று அமைந்து இறுதி இரு வரிகள் ஒரு திருக்குறளைப் பெற்றுள்ளது. இந்நூல் பல அரிய நீதிகளையும் உதாரண நீதிக்கதைகளையும் குறளின் அதிகார முறையில் அவற்றின் செய்யுள்களையும் கொண்டதாக அமைந்துள்ளது. இந்நூலை 1901ஆம் ஆண்டு சிதம்பரம் அ. இரத்தினசபாபதி முதலியார் சோமேசர் முதுமொழி வெண்பாவோடு சேர்த்து (மூலம் மட்டும்) வெளியிட்டுள்ளார். மதராஸ் ரிப்பன் அச்சியந்திர சாலை 1920ஆம் ஆண்டு 'சோமேசர் முதுமொழி வெண்பா, முருகேசர் முதுநெறி வெண்பா' ஆகியவற்றோடு 'சிவசிவ வெண்பா'வையும் வெளியிட்டுள்ளது. சோமேசர் முதுமொழி வெண்பாவும், சிவசிவ வெண்பாவும் இணைந்த பதிப்புகள் பல உண்டு. சிவசிவ வெண்பாவிற்குப் பழைய உரை ஒன்றுண்டு. இவ்வுரையுடன் உ.வே. சாமிநாதையர் 1937ஆம் ஆண்டு 'கலைமகள்' இதழ்ப் பகுதிகளில் வெளியிட்டுள்ளார். இவை யல்லாமல் 'திருத்தொண்டர் மாலை'யுடன் சிவசிவ வெண்பா வையும் இணைத்து சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் ஒரு பதிப்பை வெளியிட்டுள்ளது.

சிவபாரத சரித்திரம்

கவீந்திர பரமானந்தரின் வடமொழியிலான 'சிவபாரத சரித்திரம்' எனும் நூலின் தமிழ்மொழிபெயர்ப்பே இந்நூல். உரைநடையாலமைந்த இது 32 அத்தியாயங்களைக் கொண்டு உள்ளது. மராத்திய சாம்ராஜ்ஜியத்தை நிறுவிப் புகழ்கொண்ட ஆதிசிவாஜியின் வரலாற்று நிகழ்ச்சிகளைக் கூறுவதாக இந்நூல் அமைந்துள்ளது. இதனுள் சம்போ மகாதேவருடைய மகிமையும், துளஜாதேவி அம்மனுடைய மகிமையும், தர்மார்த்த காம மோஷங்களுடைய மகிமையும், தீர்த்தங்களுடைய மகிமையும், துலுக்கர்களோடு யுத்தம் பண்ணியதும், அந்தத் துலுக்கர்களை நாசம் பண்ணுவதற்கு இவர் ஜென்மம் எடுத்ததும், பல ராஜாக்களுடைய வரலாறுகளும், யானை குதிரைகளுடைய

இலட்சணங்களும், கோட்டைக் கொத்தலங்களுடைய இலட்சணங்களும், ராஜாக்களுடைய நீதிமுறைகளும், சூரிய வம்சத்திலே உதித்தவர்களுடைய கதைகளும் விரிவாகக் கூறப்பெற்றுள்ளன. இந்நூலின் மொழிபெயர்ப்பாளர் பெயர் தெரியவில்லை. இந்நூலை ம. சீராளன் 1971-72ஆம் ஆண்டு 'சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ்'ப் பகுதிகளில் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1972ஆம் ஆண்டு இந்நூலக வெளியீடாக வெளிவந்துள்ளது.

சிவானந்த போதம்

சைவ சித்தாந்த உண்மைகளைக் கூறும் இந்நூல் 70 அகவலடிகளால் ஆனது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. என்றாலும் கமலை ஞானப்பிரகாசர், நஞ்சுண்ட மூர்த்தி சுவாமிகள், சிவசுந்தர தேசிகர் ஆகியோர்களின் சிவானந்த போதங்களும், பெரிய ஞானக்கோவையில் இடம் பெற்ற சிவானந்த போதமும் இவற்றிலிருந்து வேறானவையாகத் தெரிகின்றன. இந்நூலை 1924ஆம் ஆண்டு செந்தமிழ்ச் செல்வி இதழில் எல். உலகநாத பிள்ளை வெளியிட்டுள்ளார். கமலை ஞானப்பிரகாசர், நஞ்சுண்ட மூர்த்தி சுவாமிகள், சிவசுந்தர தேசிகர் போன்றோர்களின் சிவானந்த போதங்களும் தமிழிலக்கியத்துள் காணப்படுகின்றன. பெரிய ஞானக்கோவை இரண்டாம் பாகத்தில் ஒரு சிவானந்த போதம் இடம்பெற்று உள்ளது. பருவ இதழில் வெளிவந்த சிவானந்த போதம் இவற்றினின்று வேறானது.

சிறுத்தொண்டன் சிந்து

சிறுத்தொண்ட நாயனாரின் வரலாற்றைக் கூறும் இந்நூல் 389 கண்ணிகளால் ஆனது. எளிய, இனிய நடையில் பாமரரும் படித்துணரும் பொருட்டு 'சிந்து' வகையில் இந்நூல் பாடப்பெற்றுள்ளது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை 1962ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் த. பெரியாண்டவன் வெளியிட்டுள்ளார்.

சிறுவேளூர் அருட்பா மாலை

அழகிய சிற்றம்பல தேசிகரின் 'சிறுவேளூர் அருட்பா மாலை' 10 பாடல்களாலானது. சிறுவேளூரின் பெருமைகளையும் சிறப்புக்களையும் கூறுவதாக இந்நூல் அமைந்து உள்ளது. 'வருந் தென்சிறு வேளூரே' என்ற ஈற்றுத் தொடர் ஒவ்வொரு பாடலிலும் மகுடமாக அமைந்துள்ளது. இந்நூலை 1938ஆம் ஆண்டு சித்தாந்தம் இதழில் திருவாரூர் எஸ். சோமசுந்தர தேசிகர் வெளியிட்டுள்ளார்.

சிறைவிடந்தாதி

கோனேரிப் புலவரின் 'சிறைவிடந்தாதி' 100 விருத்தங்களாலானது. வெவ்வேறு சந்தங்களில் அந்தாதித் தொடராக அமைந்துள்ளது. திருச்செந்தூர் முருகப்பெருமான் மீது பாடப்பெற்றுள்ளது. பாண்டியனின் சிறையில் அகப்பட்டுக் கொண்டிருந்த கோனேரிப் புலவன், பாண்டியனின் கொடுங் கோல் ஆட்சியைப் பற்றியும், சிறைக்கொடுமை பற்றியும் பாடிய பாடல்கள் இந்நூலின் தொடக்கப் பகுதியாகவும்; கோனேரிப் புலவனின் நிலையறிந்த பாண்டியன் புலவரை விடுவித்துக் கௌரவித்த போது பாண்டியனின் சிறப்பைக் குறித்துப் பாடிய பாடல்கள் இந்நூலின் இறுதிப் பகுதியாகவும் அமைந்துள்ளன. இந்நூல் சு. நல்லசிவன் பிள்ளையால் 1921ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழில் வெளியிடப்பெற்று உள்ளது. இந்நூல் செந்தமிழில் வெளிவருவதற்குப் பல்லாண்டுகளுக்கு முன்னரே ஒரு புதிப்பு வெளிவந்திருப்பதாக சு. நல்லசிவன் பிள்ளை குறிப்பிடுகின்றார். அடுத்து, இனியன் கருப்பக்கிளாரால் 'குமரகுருபரன்' இதழில் 1954ஆம் ஆண்டு அரும்பதவுரை, ஆசிரியர் வரலாறு ஆகியவற்றுடன் வெளியிடப்பெற்றுள்ளது.

சுந்தரர் சரித்திரச் சுருக்க அகவல்

கள்ளப்புலியூர் பர்வத சஞ்சீவி அய்யரின் 'சுந்தரர் சரித்திரச் சுருக்க அகவல்' 139 மற்றும் 231 நிலைமண்டில ஆசிரியப்பாவாலான இரண்டு நூல்களாகும். முதல் நூல் சுருக்கமாகவும், இரண்டாம் நூல் அதன் விரிவாகவும்

அமைந்துள்ளன. சுந்தரமூர்த்தி நாயனாரின் வரலாற்றுச் சுருக்கமாக இந்நூல் விளங்குகின்றது. இந்நூல்களை 1995ஆம் ஆண்டு சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழில் ச. திலகம் வெளியிட்டுள்ளார்.

சுமிருதி சந்திரிகை

மக்கள் வாழ்வதற்கு வேண்டிய ஒழுக்க நெறிகளை இந்நூல் கூறுகின்றது. உரைநடையில் அமைந்த இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. 'சுமிருதி சந்திரிகை' என்பது வேதக் கருத்துக்களை எளிய இனிய முறையில் அறிவுறுத்துவதைக் குறிப்பிடுவதாகும். இன்ன இன்னார் இப்படி இப்படி நடக்கவேண்டும். இப்படி நடக்கத் தவறினால் இன்ன இன்ன தண்டனைகள் கொடுக்கப்படல் வேண்டும் போன்றவை இந்நூலில் கூறப்பெற்றுள்ளன. இந்நூலை வீ. சொக்கலிங்கம் 1970-71ம் ஆண்டு 'சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ்'ப் பகுதிகளில் தனிப்பக்க எண்ணுடன் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1971ஆம் ஆண்டு இந்நூலக வெளியீடாக வெளிவந்துள்ளது.

சுவாமிநாதம்

கல்லிடையூர் சாமிகவிராசனின் 'சுவாமிநாதம்' 213 பாடல்களால் ஆனது. ஐந்திலக்கணப் பகுதியை உணர்த்தும் இந்நூல் அந்தாதித் தொடையால் அமைந்த எண்சீர் கழிநெடிலடியாசிரிய விருத்தத்தாலானது. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்ததிகாரங்களும் முறையே மும்மூன்று இயல்களைக் கொண்டனவாக விளங்குகின்றன. இந்நூலை இரா. கோவிந்தசாமிப் பிள்ளை 1928ஆம் ஆண்டு 'தமிழ்ப் பொழில்' இதழில் (முதல் 30 பாடல்கள்) வெளியிட்டுள்ளார். பின்னர் செ.வை. சண்முகம் தம்முடைய விருத்தியுரையுடன் முழுமையாக 1975ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடாக வெளியிட்டுள்ளார். அதன் பிறகு 'தமிழ்ப் பொழில்' இதழ்ப் பிரதியையும், 1975ஆம் ஆண்டு வெளிவந்த பதிப்புக்கு ஆதாரமான லண்டன் - பிரிட்டிஷ் பொருட்காட்சிச்

சாலை ஏடும், கேரளப் பல்கலைக்கழகச் சுவடித்துறைப் பிரதியும், இவற்றுக்குள்ள பழைய உரையுடனும் ஒப்புநோக்கித் திருத்தப் பதிப்பாக மீண்டும் செ.வை. சண்முகம் 1976ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடாக வெளியிட்டு உள்ளார்.

செட்டிச்சியம்மாள் கதை

அமராபதிச் செட்டிச்சியின் வரலாற்றைக் கூறும் இந்நாட்டுப்புறக் கதைப்பாடல் காப்பு விருத்தம் 1, நூற்பயன் 2, நூல் 593 அகவலடிகளாலானது. செட்டிச்சியின் சிவபக்தியையும் 32 தானங்களையும் இந்நூல் எடுத்துக் கூறுகின்றது. இந்திரனையும் சித்திரபுத்திரனையும் வணங்காத அமராபதியை எமலோகம் அழைத்துவர எமன் வருகின்றான். சிவ பக்தியால் எமனால் அவளை நெருங்க முடியவில்லை. பிறகு தீயவர்கள் அவளை எமலோகம் அழைத்துச் செல்ல, அங்குப் பல சித்திரவதைக்கு உள்ளாக்கியும் சிவபக்தியால் தப்பித்துக்கொள்ள சிவகணங்கள் உதவிபுரிகின்றன. மனம் மாறி அனைவரையும் துதிக்க எண்ணுகின்றாள். இந்நிலையில் மீண்டும் பூலோகம் வந்து உயிர் மீண்டு வாழ்கின்றாள் என்பதே இக்கதை. இறுதியாக இந்நூலுள் சித்திரபுத்திரன் வரலாறும் கூறப்பெற்றுள்ளது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரிய வில்லை. இந்நூலை 1999ஆம் ஆண்டு சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழில் ச. திலகம் வெளியிட்டுள்ளார்.

செந்தில் வேலவன் தோத்திரம்

இது, திருச்செந்தூரில் கோயில் கொண்டு எழுந்தருளி யிருக்கும் செந்தில் வேலவன் மீது பாடப்பெற்றுள்ளது. ஒன்பது பதினான்குசீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தாலான ஒரு தோத்திர நூலாகும். ஒவ்வொரு செய்யுளின் முன்னிரண்டடிகள் வேண்டுகோளாகவும், பின்னிரண்டடிகள் இராமாயணக் கதையை எடுத்துரைப்பதாகவும் இந்நூற் பாடல்கள் அமைந்து உள்ளன. மேலும் எல்லாச் செய்யுள்களின் இறுதியிலும்,

"செங்கண் மால்மருகா! செந்தில்வாழ் முருகா!!
தேவனே! அமரர் தேசிகனே!!"

என்ற தொடர் மகுடமாக அமைந்துள்ளது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை வீ. சொக்கலிங்கம் 1964ஆம் ஆண்டு 'சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ்'ப் பகுதியில் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1966ஆம் ஆண்டு சரஸ்வதிமகால் நூலகம் வெளியிட்ட 'முருகர் கதம்பம்' எனும் தொகுப்பில் மூன்றாவதாக இடம்பெற்று உள்ளது.

சேலம் தாலந்தீர்த்த செழியன் மஞ்சரி

17ஆம் நூற்றாண்டில் சேலம் - சின்னசேலம் பகுதியில் வாழ்ந்த அந்தாலந் தீர்த்தானின் புகழைப் பாடும் இந்நூல் 395 கண்ணிகளாலானது. அந்தாலந் தீர்த்தான் மேல்கொண்ட காதலால் அதிரூபவல்லி என்பவள் அந்தாலந் தீர்த்தானின் மார்பில் விளங்கும் பூமாலையை இரந்துபெற்று, அவனையே நாயகனாக அடைந்து இன்பம் துய்த்து வாழ்வதனை இந்நூல் விவரிக்கின்றது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை மு. சண்முகம் பிள்ளை 1978ஆம் ஆண்டு 'தமிழாய்வு' இதழில் தனிப் பக்கவெண்ணுடன் வெளியிட்டு உள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1978ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழக வெளியீடாக வெளிவந்துள்ளது. அதன் பிறகு மு. சண்முகம் பிள்ளையைப் பதிப்பாசிரியராகக் கொண்டு 1986ஆம் ஆண்டு தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியிட்ட 'செழியதரையன் பிரபந்தங்கள்' எனும் தொகுப்பு நூலில் இந்நூல் 'அந்தாலந்தீர்த்த செழியன் மஞ்சரி' எனப் பதிப்பிக்கப்பெற்றுள்ளது.

சொரூப வகுப்பு

முருகப்பெருமானின் சொரூபச் சிறப்பை இந்நூல் விளக்குகின்றது. 46 அகவலடியாலான இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இது பெயரளவில் வகுப்பு என்றிருக்

கின்றது. இந்நூலை எம்.பி.எஸ். துரைசாமி முதலியார் சித்தாந்தம் இதழில் 1937ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார்.

சோடசகலா பிராசாத யோகம்

பிராசாதம் என்பது திரிகலை, பஞ்சகலை, அஷ்டகலை, நவகலை, தசகலை, துவாதசகலை, சோடசகலை, விம்சதிகலை என்று பலவகைப்படும். இவற்றில் ஒன்றான சோடச கலையைப் பற்றி இந்நூல் அமைந்துள்ளது. 12 விருத்தங்களாலான இந்நூல் பதினாறு வகையான கலைகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை 1911ஆம் ஆண்டு செந்தமிழ் இதழில் திருவாரூர் எஸ். சோமசுந்தர தேசிகர் வெளியிட்டுள்ளார்.

சோடசகலா பிராசாத விருத்தம்

கமலை ஞானப்பிரகாசரது சீடரும் திருக்கயிலாய பரம்பரை தருமையாதீன ஸ்தாபகருமான சீர்வளர்சீர் குருஞானசம்பந்த சுவாமிகளின் 'சோடசகலா பிராசாத விருத்தம்' எனும் நூல் ஏழு விருத்தங்களானது. இந்நூலில் கலைகளின் வன்னமும், தானமும், அகர முதலான கலை பதினாறுக்கு வடிவும், ஆதார நிராதாரங்களுக்கும் கலைகளுக்கும் மலநிலை பற்றியும், அம்மலங்களுடனே எண்பத்து நூறாயிரம் யோனிபேதம் பற்றியும், எல்லாக் கலைகளுக்கான மாத்திரை பற்றியும் கூறப்பெற்றுள்ளன. இந்நூலை 1930ஆம் ஆண்டு செந்தமிழ் இதழில் திருவாரூர் சோமசுந்தர தேசிகர் வெளியிட்டுள்ளார்.

சௌமியநாராயணப்பெருமாள் திருநாள் வாகனக்கவி

அரிதாசரின் 'சௌமியநாராயணப்பெருமாள் திருநாள் வாகனக்கவி' 12 அறுசீர் விருத்தத்தாலானது. திருக்கோட்டியூரில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சௌமியநாராயணப் பெருமாளுக்கு ஆண்டுக்கு ஒருமுறை பதினொருநாள் திருவிழா நடைபெறுகின்றது. இத்திருவிழாவின் போது பெருமாள் பதினொருநாளும் பவனி வருகின்றார். இப்பவனி வரும்

காட்சியை எடுத்தியம்புவதாக இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலை 1942ஆம் ஆண்டு செந்தமிழ் இதழில் அருணாசலம் வெளியிட்டுள்ளார்.

ஞான உலா

சங்கராசாரியாரின் 'ஞான உலா' 160 நேரிசைக் கலிவெண்பாவாலானது. தலைவன் பவனி வரக்கண்ட ஏழு பருவ மங்கையர்களும் காதல் கொண்டு தொழுத நிலையை இவ்வுலா கூறினும், மனித உடல் எவ்வாறு ஏற்பட்டது? உயிர்களை ஆக்கிக் காத்து, இறுதியில் வீட்டுலகத்தை அடைவிக்க செய்வது எது? எந்தெந்தத் தொழில்கள் யார்யாரால் இயற்றப்படுகின்றன? யோக வழியில் ஞான நிலையை அடைவது எப்படி? போன்றவற்றைச் சுருங்கிய முறையில் இந்நூல் விளக்கிச் செல்கின்றது. சங்கராசாரியம் யாத்த சங்கராசாரியரினும் இந்நூலாசிரியர் வேறானவர். இந்நூலை 1955ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் மு. பசுபதி வெளியிட்டுள்ளார்.

ஞானக்குறவஞ்சி

குறவஞ்சி நடையில் ஞானத்தினை எளிமையாகக் கூறும் இந்நூல் மூன்று பகுதிகளால் அமைந்துள்ளது. முதலிரு பகுதியைக் குமரகுருபரனும் மூன்றாம் பகுதியைப் பீருமுகம்மதுவும் இயற்றியிருக்கின்றனர். இப்பகுதிகள் முறையே 37, 27, 43 பாடல்களால் அமைந்துள்ளன. இந்நூலில் தலைவன் உலாவரல் முதலானவை இல்லாமல் குறவன் வருகை, குறவன் தன் பெருமை கூறல், குறவன் பறவை வரவு கூறுதல், அமைதி வேண்டல், மெய்ஞ்ஞானப்புள் போகாதிருத்தல், கண்ணி கொண்டு வருதல், கண்ணிகளைத் திருத்திவைத்தல், குறவன் ஞானப்புள்ளைப் பிடித்தல், வாழ்த்து ஆகியவை முதற்பகுதி யிலும், குறவன் தோற்றம், குறவன் தன் சொந்தமலை கூறுதல், சிவபட்சி வருவதைக் கூறுதல், அமைதி வேண்டல், சிவ பட்சி களைச் சுற்றி வளைத்தல், அவை போகாமற் காத்தல், அவை இரை மேய்தல், கண்ணி கொண்டு வருதல், சிவ பட்சிகளைப்

பிடித்தல், வாழ்த்து ஆகியவை இரண்டாம் பகுதியிலும், சிங்கன் - சிங்கி தருக்கம் மூன்றாம் பகுதியிலும் இடம்பெற்றுள்ளன. முதற் பகுதியில் ஞானத்தைப் பற்றுதல் போலவும், இரண்டாம் பகுதியில் சிவத்தினைப் பற்றுதல் போலவும், மூன்றாம் பகுதியில் வினாவிடை வாயிலாகத் தத்துவங்களைப் பற்றுதல் போலவும் இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலை வீ. சொக்கலிங்கம் 1973-74ஆம் ஆண்டு ''சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ்'ப் பகுதிகளில் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1974ஆம் ஆண்டு இந்நூலக வெளியீடாக வெளிவந்துள்ளது.

ஞானசாரம்

காழிக்கண்ணுடைய வள்ளலாரின் 'ஞானசாரம்' 118 கட்டளைக் கலித்துறையால் ஆனது. தொடக்கத்தில் விநாயகர் காப்பு, நடராசர் - அம்பிகை - நால்வர் - தொண்டர் ஆகியோர் களுக்குத் தோத்திரம் கூறும் இந்நூல் சிவப்பிரகாசரின் நூல் அமைதியை ஒட்டிச் சித்தாந்தப் பொருளை முறையாக உணர்த்துகின்றது. ஞானசாரம் என்ற பெயரில் பல நூல்கள் தோன்றியிருக்கின்றன. இந்நூலை இராம. கோவிந்தசாமிப் பிள்ளை 1959ஆம் ஆண்டு சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழில் வெளியிட்டுள்ளார். 1959ஆம் ஆண்டு சரஸ்வதிமகால் நூலகம் வெளியிட்ட 'வள்ளலார் பிரபந்தங்கள்' எனும் தொகுப்பில் இந்நூல் முதலாவதாக இடம்பெற்றுள்ளது. இதன் இரண்டாம் பதிப்பு 1980ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. இராம. கோவிந்தசாமிப் பிள்ளையின் உரையுடன் சரஸ்வதி மகால் நூலக வெளியீடாக 1962, 1990ஆம் ஆண்டுகளில் முறையே முதல் மற்றும் இரண்டாம் பதிப்புகள் வெளிவந்து உள்ளன. 'வள்ளல் ஞானசாரம்' என்று 1961ஆம் ஆண்டு 'சித்தாந்தம்' இதழில் இந்நூல் வெளிவந்துள்ளது. ந.ரா. முருகவேளின் உரையுடன் 1976ஆம் ஆண்டு 'திருக்கோயில்' இதழ்ப் பகுதிகளில் ஒரு பதிப்பு வெளிவந்துள்ளது.

ஞானவந்தாதி

வெண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் 'ஞான வந்தாதி' காப்பு ஒரு நேரிசை வெண்பாவும், நூல் 30 கட்டளைக்

கலித்துறையாலும், நூற்பயன் ஒன்றும் ஆக 32 பாடல்களா லானது. உலகில் வாழக்கூடிய மானிடர்களில் மனோநிலை களைப் பலவாறாகக் கூறும் இந்நூல் மெய்ஞ்ஞானப் பொருளான இறைவனை முன்னிறுத்திப் பாடப்பெற்றுள்ளது. வாழ்வின் உண்மைப் பொருள் உணர்ந்தோரே சிறந்தவர் என்ற கருத்து ஒவ்வொரு பாடலிலும் வெளிப்படுகின்றது. இந்நூல் 1990ஆம் ஆண்டு மாதாந்திர அமுதம் இதழில் வெளிவந்துள்ளது.

ஞானவம்மானை

குமாரதேவரின் 'ஞானவம்மானை' 31 அம்மானைப் பாடல்களாலானது. ஞானத்தை விளக்கும் முகமாக அமைந்து உள்ள இந்நூல் மூன்று பெண்கள் பாடுவதாக உள்ளது. அதாவது, முதற்பெண் ஒரு செய்தியைச் சொல்ல, இரண்டாவது பெண் ஒரு வினாவை எழுப்புவாள். மூன்றாவது பெண் அதற்குத் தக்க பதிலளிப்பாள். உலகில் மனிதன் உடல், உயிர் முதலியவற்றையே தானென்று எண்ணியும், உலகப் பொருள்களை உண்மைப் பொருள்கள் என்று கருதியும், அவற்றில் விருப்பு வெறுப்பு கொள்வதால்தான் உலகத் துன்பங்கள் ஏற்படுகின்றன என்றும், இவ்வறியாமையை ஞானத்தால் போக்கினால் ஆனந்தமான வாழ்வு மேற்கொள்ள லாம் என்றும் இந்நூல் உணர்த்துகின்றது. இந்நூல் கோ. வடிவேலு செட்டியார் பதிப்பித்த 'குமாரதேவர் சாஸ்திரக் கோவை' (1904)யில் ஆறாவதாக இடம்பெற்றுள்ளது. பின்னர் இந்நூல் பி.என். சிதம்பர முதலியார் & பிரதர்ஸால் 1923ஆம் ஆண்டு வெளியிடப்பெற்றுள்ளது. இவ்விரு பதிப்புகளுக்குப் பிறகு சரஸ்வதிமகால் நூலகச் சுவடியை மட்டும் ஆதாரமாகக் கொண்டு ம. சீராளன் 1967ஆம் ஆண்டு 'சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ்'ப் பகுதியில் வெளியிட்டுள்ளார்.

ஞானாமிர்தம்

வாகீசரின் 'ஞானாமிர்தம்' நான்கடிச் சிற்றெல்லையும் ஐம்பத்தாறடிப் பேரெல்லையும் கொண்ட 75 அகவற்பாக்களா லானது. பாயிரப் பகுதியானது கடவுள் வாழ்த்து, விநாயகர் துதி, கலைமகள் துதி, ஆசிரியர் துதி, அவையடக்கம்,

நூற்பெயர், நால்வகை நூற்பாகுபாடுகளையும் (ஞானம், யோகம், கிரியை, சரியை); சம்மியஞானம், சம்மிய தரிசனம், பாசபந்தம், தேகாந்தரம், பாசனாதித்துவம், பாசச்சேதம், பதிநிச்சயம், பாசமோசனம் என எட்டு இயல்களையும் இந்நூல் கொண்டுள்ளது. இந்நூலுக்குப் பழைய உரை ஒன்றுண்டு. இவ்வுரையைச் சே.ரா. சுப்பிரமணியக் கவிராயர் 1904ஆம் ஆண்டு செந்தமிழ் வெளியீடாக வெளியிட்டுள்ளார். பிறகு ஔவை சு. துரைசாமிப் பிள்ளை பல உரைப் பிரதிகளையும் ஒப்பிட்டு 1935-38ஆம் ஆண்டு 'சித்தாந்தம்' இதழ்ப் பகுதிகளில் வெளியிட்டுள்ளார். இவ்விதழ்ப் பதிப்பை அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 1954, 1987ஆம் ஆண்டுகளில் முறையே முதல் மற்றும் இரண்டாம் பதிப்பு வெளியிட்டுள்ளது. இதனை யடுத்து மூலமும் உரையுமாக அம்பை இரா. சங்கரன் பதிப்பாக 1984ஆம் ஆண்டு சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழக வெளியீடும், பழைய உரையுடன் கு. சுந்தரமூர்த்தியின் நுண்பொருள் விளக்கத்துடன் 1986ஆம் ஆண்டு முதல் ஸ்ரீகுமரகுருபரர் இதழ்ப் பகுதிகளில் தொடர்ந்து வெளியிடப்பெற்றுள்ளது.

தசகாரியம்

தத்துவ ரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி, ஆன்ம ரூபம், ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, பர ரூபம், பர தரிசனம், பர யோகம், பர போகம் ஆகிய பத்துக் காரியங்களைப் பற்றிக் கூறுவது இந்நூல். தமிழில் தசகாரியங்கள் பல எழுந்துள்ளன. பதிபசுபாச விளக்கம், உபதேசமாலை, ஞானாமிர்தக்கட்டளை, சிவப்பிரகாசக் கட்டளை ஆகியவற்றுள்ளும் தசகாரியம் பற்றிக் கூறப்பெற்றுள்ளது. இதுவன்றிக் களந்தை ஞானப்பிரகாசர், அம்பலவாண தேசிகர், தக்ஷிணாமூர்த்தி தேசிகர், சுவாமிநாத தேசிகர், சிதம்பரநாத தேசிகர் போன்றோரும் தனித்தனியாகத் தசகாரியம் இயற்றியுள்ளனர். ஆசிரியர் பெயர் தெரியாத இத்தசகாரியம் பத்து அகவற்பாவாலானது. ஒவ்வொரு பாடலும் ஒரு காரியத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. இந்நூலை 1939ஆம் ஆண்டு 'சித்தாந்தம்' இதழில் எஸ். அனவரத விநாயகம் பிள்ளை வெளியிட்டுள்ளார். களந்தை ஞானப்பிரகாசர்,

அம்பலவாண தேசிகர், தக்ஷிணாமூர்த்தி தேசிகர், சுவாமிநாத தேசிகர், சிதம்பரநாத தேசிகர் போன்றோரின் தசகாரியங்களில் இருந்து இந்நூல் வேறானது.

தசாவதாரப் பத்து

இந்நூல், திருமாலின் மச்சாவதாரம், கூர்மாவதாரம், வராகாவதாரம், நரசிங்காவதாரம், வாமனாவதாரம், பரசுராமாவதாரம், இராமாவதாரம், பலராமாவதாரம், கிருஷ்ணாவதாரம், கல்கியவதாரம் ஆகிய பத்து அவதாரங்களின் வரலாற்றைக் கூறுகின்றது. ஒவ்வோர் அவதாரத்தையும் ஒவ்வொரு பாடல் வழிச் சுருக்கமாக எடுத்துரைக்கும் இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை **1961**ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் த. கிருட்டிணமூர்த்தி வெளியிட்டுள்ளார்.

தஞ்சை வெள்ளைப்பிள்ளையார் குறவஞ்சி

தஞ்சையிலுள்ள வெள்ளைப்பிள்ளையாரை மையமாகக் கொண்டு இந்நூல் பாடப்பெற்றுள்ளது. இக்குறவஞ்சி குற்றாலக்குறவஞ்சி, சரபேந்திர பூபாலக் குறவஞ்சி போலல்லாமல் மதுரை மீனாட்சியம்மை குறம் போன்ற தெனலாம். இந்நூலில் தலைவன் பவனி வருதல் போன்றன இடம்பெறவில்லை. கடவுள் வாழ்த்து முடிந்ததும் குறத்தி வந்துவிடுகின்றாள். தன்னுடைய வரலாறு, குலப்பெருமை முதலானவற்றைக் கூறுகின்றாள். பின்னர் தலைவிக்குக் குறி கூறுகின்றாள். பிள்ளையில்லாத காரணத்தால் தலைவன் மறுமணம் புரிந்து இளையாளுடன் வாழ, ஊர் ஏசுகின்றனர். அப்போது குறத்தி தஞ்சை வெள்ளைப்பிள்ளையாரை நினைவில் நிறுத்தி 'பிரிந்த கணவனை மீண்டும் வரப்பெற்று, மக்களைப் பெறுவாய், நிந்தித்தவர்கள் வாயடைக்கும்படி வாழ்வாய்' என்று குறி கூறுகின்றாள். ஒவ்வொரு செய்யுளின் ஈற்றடியிலும் வெள்ளைப்பிள்ளையாரின் புகழும் செயலும் பேசப்படுகின்றன. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை **வீ.** சொக்கலிங்கம் **1962**ஆம் ஆண்டு 'சரஸ்வதிமகால் நூலகப் பருவ

இதழ்'ப் பகுதியில் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1962ஆம் ஆண்டு இந்நூலக வெளியீடாக வெளிவந்து உள்ளது.

தணிகைவெண்பா

திருத்தணிகைக் கந்தப்பையரின் 'தணிகை வெண்பா' தொடைவிகற்பமான திருகுவெண்பா நாற்பதும், தனிச்சொற் சிலேடையும் திருகும் பெற்ற வெண்பா அறுபதும் ஆக 100 பாடல்களாலானது. இந்நூலின் ஒவ்வொரு பாடலும் முன்னிரண்டடிகளில் தணிகைமலையின் சிறப்பும், பின்னிரண்டடிகளில் முருகப்பெருமானின் சிறப்பும் கூறுவதாக அமைந்துள்ளது. மேலும் இந்நூல் ஒருபொருட் பாடலும், இருபொருட் சிலேடையும், முப்பொருட் சிலேடையும், நாற்பொருட் சிலேடையும் அமையுமாறு பாடப்பெற்றுள்ளது. இந்நூலுக்குப் பழையவுரை ஒன்றுண்டு. இவ்வுரை ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூல் 1867ஆம் ஆண்டு 'திருத்தணிகைச் சிலேடை வெண்பா' என்ற பெயரில் மூலம் மட்டும் வெளிவந்துள்ளது. இந்நூலுக்குப் பழைய உரை ஒன்றுண்டு. இவ்வுரையுடன் வே.ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் 1970-71ஆம் ஆண்டு 'சித்தாந்தம்' இதழ்ப் பகுதிகளில் வெளியிட்டுள்ளார். அதற்குப் பிறகு மு. சண்முகம்பிள்ளை மூலமும் பழைய உரையுமாக 1980ஆம் ஆண்டு ஒரு பதிப்பை வெளியிட்டுள்ளார்.

தண்டபாணிமாலை

கந்தசாமி சுவாமிகளின் 'தண்டபாணிமாலை' காப்பு வெண்பா 1, நூல் 15 எழுசீர் ஆசிரிய விருத்தத்தாலானது. 'கந்தபுராண சாரசங்கிரக தண்டபாணிமாலை' என்பது இந்நூலின் முழுப்பெயராகும். கோவை - சிரவையாதீன வளாகத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள தண்டபாணிக் கடவுள் மீது இந்நூல் பாடப்பெற்றுள்ளது. இதில் முருகப்பெருமானின் புராணம் சுருக்கிக் கூறப்பெற்றுள்ளது. இதைக் 'கந்தபுராணச் சாரம்' என்றும் சொல்லலாம். 'சிரவை, சார்தளித் தண்டபா

ணியனே' எனும் ஈற்றடியை மகுடமாக வைத்து ஒவ்வொரு பாடலும் பாடப்பெற்றுள்ளது. இந்நூல் 1964ஆம் ஆண்டு 'தவத்திரு கந்தசாமி சுவாமிகள் தோத்திரத் திரட்டு'ள் ஒன்றாக இடம்பெற்று உள்ளது. பின்னர் 'மாதாந்திர அமுதம்' இதழில் 1993ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. அதன்பிறகு 'குமரகுருபரக் கடவுள் மாலை' என்னும் நூலுடன் கௌமார சபை வெளியீடாக 1993ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது.

தண்டலையார் சதகம்

படிக்காசுப்புலவரின் 'தண்டலையார் சதகம்' காப்பு 2, அவையடக்கம் 1, நூல் 100 ஆக 103 பாடல்களாலானது. இதற்குப் பழமொழி விளக்கம் என்றொரு பெயருமுண்டு. தண்டலை என்னும் தலத்தில் கோயில் கொண்டு எழுந்தருளி யுள்ள சிவபெருமானை முன்னிலைப்படுத்தி இந்நூல் பாடப் பெற்றுள்ளது. இந்நூலின் ஒவ்வொரு பாடலிலும் ஒரு பழமொழியைக் கூறி, அதனை விளக்கும் சரிதம் முதலியவற்றை எடுத்துரைப்பதாக அமைந்துள்ளது. இந்நூல் மழவை மகாலிங்கையர் (1838), முத்துச்சாமி முதலியார் (1865), தி. பரசுராம முதலியார் (1877-2ம் பதிப்பு), ஆறுமுக சுவாமிகள் (1880), குமாரசாமி ஐயர் (1887), சிதம்பரம் இரத்தினகிரி முதலியார் (1893), ஊ. புஷ்பரதச் செட்டியார் (1902), ரெங்கைய செட்டியார் (1913), மனோன்மணி விலாச வெளியீடு (1916), பி. நாராயணசாமி பிள்ளை (1922-2ம் பதிப்பு) போன்றோரின் பதிப்புகளைப் பெற்றுள்ளது. இவ்வளவு பதிப்புகள் வெளிவந்த பிறகு சே.ரா. சுப்பிரமணியக் கவிராயர் சுவடியை ஆதாரமாகக் கொண்டு விளக்கக் குறிப்புரையுடன் 1921ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழில் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு செந்தமிழ் வெளியீடு 45ஆவதாக 1921, 1924ஆம் ஆண்டுகளில் முறையே முதல் மற்றும் இரண்டாம் பதிப்பு வெளிவந்துள்ளது. பிறகு அ. நடராஜப்பிள்ளை (1925), ஏ. ரங்கசாமி முதலி & சன்ஸ். (1929, 1935), தருமையாதீனம் (1966), ச. சாம்பசிவனார் (1972), மு. சண்முகம் பிள்ளை (1995), வ.த.

இராமசுப்பிரமணியம் (1997) போன்றோரின் பதிப்புகளும் வெளிவந்துள்ளன. படிக்காசுப் புலவரின் தண்டலையார் சதகம் போலவே சாந்தலிங்கக் கவிராயர் அவர்களும் 'தண்டலையார் சதகம்' பாடியிருக்கின்றார். இந்நூல் வீரபத்திரச் செட்டியார் (1862), திருவெண்காடு ஆறுமுக நாவலர் (1871), திரிசிரபுரம் மகாவித்துவான் சபாபதிப் பிள்ளை, சண்முக ஐயர் போன்றோரின் பதிப்புகளைப் பெற்றுள்ளது.

தத்துவ விளக்கம்

சம்பந்த சரணாலயர் என்கிற காழிக் கண்ணுடைய வள்ளலாரின் 'தத்துவ விளக்கம்' 51 கட்டளைக் கலித்துறையா லானது. இந்நூல் பதி விகாரம், பசு விகாரம், பாச விகாரம் ஆகிய மூன்று பகுதிகளாக அமைந்துள்ளது. இந்நூலை ஸ்ரீகாசிவாசி செந்திநாதையரின் உரையுடன் 1918ஆம் ஆண்டு ஆவி.பழ. சிதம்பரஞ் செட்டியார் அவர்கள் பதிப்பித்திருக் கின்றார். எல். உலகநாத பிள்ளை 1924ஆம் ஆண்டு 'செந்தமிழ்ச் செல்வி' இதழிலும், 1929ஆம் ஆண்டு 'தமிழ்ப்பொழில்' இதழிலும் வெளியிட்டுள்ளார். இராம. கோவிந்தசாமிப்பிள்ளை 1959ஆம் ஆண்டு பதிப்பித்த சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழில் 'வள்ளலார் பிரபந்தங்கள்' என்னும் தொகுப்புப் பகுதியிலும் இந்நூல் இடம்பெற்றுள்ளது. இப்பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகள் எல்லாம் மூலம் மட்டும் கொண்டுள்ளன. சரஸ்வதிமகால் நூலக வெளியீடான 'வள்ளலார் பிரபந்தங்கள்' (1959, 1990) எனும் தொகுப்பு நூலில் ஒன்றாகவும் இடம்பெற்று உள்ளது. மேலும், இராம. கோவிந்தசாமிப் பிள்ளையின் உரையுடன் தனிநூலாக 1963ஆம் ஆண்டு சரஸ்வதிமகால் நூலக வெளியீடாக வெளிவந்துள்ளது.

தமிழ்நெறி விளக்கம்

தமிழின் ஒழுகலாற்றை விளக்கும் இந்நூல் எழுத்தியல், மொழியியல், பொருளியல் என்ற மூன்று பிரிவுகளுடையது. இதில் எழுத்தியல் மற்றும் மொழியியல் முற்றும் கிடைக்க வில்லை. பொருளியலில் 25 சூத்திரங்களே இதுவரை கிடைத்து உள்ளன. பொருளியலை அகம், புறம், அகப்புறம் என

மூன்றாகப் பகுத்துப் பின் அகப்பொருளின் வகையாகிய முதல் கரு உரி என்னும் மூன்றையும் உணர்த்தும் இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. தமிழ்நெறி விளக்கத்தின் அகப்பொருட் பகுதிக்கும் வேறு அகப்பொருள் இலக்கண நூல்களுக்கும் வேறுபாடுகள் பல உண்டு. இந்நூல் களவுக்கு முன் கைக்கிளை யைக் கூறாமல் களவின் பகுதியாகப் பெரும்பாலோரால் அமைக்கப்படும் அறத்தொடு நிலை, உடன்போக்கு என்னும் இரண்டையும் கற்பினுள் அமைக்கின்றது. இந்நூலை உ.வே. சாமிநாதையர் 1936-37ஆம் ஆண்டு 'கலைமகள்' இதழ்ப் பகுதிகளில் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1937ஆம் ஆண்டு கலைமகள் வெளியீடு 7ஆவதாக வெளிவந்து உள்ளது. 1994ஆம் ஆண்டு உ.வே. சாமிநாதையர் நூல் நிலைய வெளியீடாக இதன் மூன்றாம் பதிப்பு வெளிவந்துள்ளது.

தருக்க சூத்திரம்

பொருள் தொடர்பான இலக்கண நூலே 'தருக்க சூத்திரம்' ஆகும். 20 நூற்பாவாலான இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. பொருள், குணம், கருமம், பொது, சிறப்பு, ஒற்றுமை, இன்மை ஆகிய ஏழு பொருள்களைப் பற்றியும் இவ்வேழு பொருள்களின் வகைகளைப் பற்றியும் இந்நூல் குறிப்பிடுகின்றது. மேலும் பொருளை மெய்ப்பொருள், நித்தியப் பொருள் எனப் பகுத்து அவ்வவற்றின் வகைப்பாடு களையும் தன்மைகளையும் எடுத்துரைக்கின்றது. இந்நூலை 1902ஆம் ஆண்டு மற்றும் 1908ஆம் ஆண்டுகளில் ரா. இராகவையங்கார் வெளியிட்டுள்ளார்.

தளசிங்க மாலை

மிதிலைப்பட்டி சிற்றம்பலக் கவிராயர் இராமநாதபுரம் சமஸ்தானத்தை ஆண்ட இரகுநாதசேதுபதி மீது பாடப்பெற்றதே 'தளசிங்க மாலை'. இந்நூல் முழுமையும் கிடைக்கவில்லை. 25 பாடல்களே கிடைத்துள்ளன. இதில் இரகுநாத சேதுபதியின் தானம், திருப்புல்லாணிக் கோபுரம் எழுப்பியது, இராமேசருக்கு

முன்மண்டபம் எழுப்பியது, மதுரை மற்றும் தனுக்கோடி காத்தது போன்ற செயல்கள் கூறப்பெற்றுள்ளன. இந்நூலை எஸ். சோமசுந்தர தேசிகர் 1907ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழில் (முதல் 25 பாடல்கள்) வெளியிட்டுள்ளார். அதன் பின்னர் 1910ஆம் ஆண்டு நூல் முழுமையையும் மதுரை விவேகபாநு பிரஸ் வெளியீடாக வெளிவந்துள்ளது.

தளவாய் ரெகுநாத சேதுபதியவர்கள் மீது வண்ணம்

தளவாய் ரெகுநாத சேதுபதி மீது இவ்வண்ணம் பாடப்பெற்றுள்ளது. சேதுபதியின் கொடை, வீரம், குணநலன் போன்றன இந்நூலில் விளக்கப்பெற்றுள்ளன. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலைச் சே.ரா. சுப்பிரமணியக் கவிராயர் செந்தமிழ் இதழில் 1918ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார்.

தனிப்பாடற்றிரட்டு

பல புலவர் பெருமக்களின் தனிப்பாடல்களைக் கொண்ட இந்நூலில் 58 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. 'தனிப்பாடற்றிரட்டு' எனும் தலைப்பில் அ. மாதவையர் 1925ஆம் ஆண்டு 'பஞ்சாமிர்தம்' இதழில் சரஸ்வதிமகால் நூலகச் சுவடியிலுள்ள 58 பாடல்களை வெளியிட்டுள்ளார். பின்னர் இந்நூல் இதே சுவடியில் உள்ள ஏனைய பாடல்களையும் சேர்த்து ச. பாலசுந்தரம் 1967ஆம் ஆண்டு சரஸ்வதிமகால் நூலக வெளியீடாக வெளியிட்டுள்ளார்.

தாயுமானவர் மடல்

திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டையில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள தாயுமான சுவாமிகள் மீது பாடப்பெற்ற உலா மடலே 'தாயுமானவர் மடல்' ஆகும். உலா மடலாவது நனவில் கண்டு தழுவிய ஒருத்தியைச் சொப்பனத்தில் கண்டு கலவி யின்பம் நுகர்ந்த ஒருவன், விழித்தபின் அவளைப் பெறுதற்கு மடலூர்வேன் என்று கலிவெண்பாவாற் பாடப் பெறுவதாகும். இந்நூல் காப்பு வெண்பா ஒன்றும், நூல் 285

கலிவெண்பாவாலும் ஆனது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை வே.ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் தம்முடைய குறிப்புரையுடன் 1948-49ஆம் ஆண்டு 'ஞானசம்பந்தம்' இதழ்ப் பகுதிகளில் தனிப்பக்க எண்ணுடன் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1949ஆம் ஆண்டு ஞானசம்பந்தம் வெளியீடு 1ஆவதாகவும், தருமை யாதீன வெளியீடு 191ஆவதாகவும் வெளிவந்துள்ளது.

தாள சமுத்திரம்

பரதசூடாமணியின் 'தாள சமுத்திரம்' 90 வெண்பாக்க ளாலானது. தாள இலக்கணம் கூறும் நூல்களுள் இதுவும் ஒன்று. இதனைச் சொக்கர் பரதத்தின் வழி நூல் என்றும் கூறுவர். தாள விதிகள், கால வடிவின் பெயர்கள், அந்த வடிவத்தின் அளவு, அவ்வடிவினுருவங்கள், அவற்றிற்கு அதிதேவதைகள், அந்தச் சொரூபங்கள் நிற்கும் குணாகுணங்கள், அச்சொரூபங்களை யொத்து மங்குலப் பிரமாணங்கள், அஷ்டகணம், பிரமக்ஷத்திரிய வைசிய சூத்திரரென்கிற நாலு சாதிகள், சதுர்மேருப் பிரஸ்தாரமாகிய துரிதாதிப் பிரஸ்தாரம், சண்மேருப் பிரஸ்தாரமாகிய விராமாதிப் பிரஸ்தாரம், லயம், யதிமார்க்கங்கள், ஏகமாத்திரா லக்ஷணவிதி, சமம், அதீதம் அனாகதமென்று சொல்லப்பட்ட கிரகத்திரயங்கள், ஒத்தப்பட்ட கஞ்சதாளப் பிரமாணம், மணிக்கட்டுக்கும் விரற்கும் அதிதேவதைகள், தாள வியத்தாதி ஆவாயுதிக்கு வகை, சச்சபுட முதலாய் நூற்றெட்டுத் தாளவடிவு, நிலப்பேதத்து வருகிற புட்பவுட பிரபந்தம் ஆகிய இந்த இருபது கருமங்களையும் இந்நூல் கூறுகின்றது. உரையுடன் இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலை எல். உலகநாத பிள்ளை 1923ஆம் ஆண்டு 'செந்தமிழ்ச்செல்வி' இதழில் (முதல் 57 பாடல்களும் அதற்கான உரையுமாக) வெளியிட்டுள்ளார். அதன்பிறகு கே. வாசுதேவ சாஸ்திரிகள் இந்நூலின் 90 பாடல்களையும் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகச் சுவடியில் உள்ள மிகைப்பாடல்களைப் பின்னிணைப்பாகவும் கொண்டு 1955ஆம் ஆண்டு சரஸ்வதி மகால் நூலக வெளியீடு 50ஆவதாக வெளியிட்டுள்ளார்.

தாளவோத்து

தாள இலக்கணம் கூறும் நூல்களுள் இதுவும் ஒன்று. 108 நூற்பாக்களாலான இந்நூல் நூற்றெட்டுத் தாளப் பெயர்களையும் அவற்றிற்கான அமைப்பு முறைகளையும் விளக்கமாகக் கூறுகின்றது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை 1923ஆம் ஆண்டு 'செந்தமிழ்ச் செல்வி' இதழில் எல். உலகநாத பிள்ளை வெளியிட்டுள்ளார்.

திணைமாலை நூற்றைம்பது

கணிமேதாவியாரின் 'திணைமாலை நூற்றைம்பது' 153 பாடல்களால் ஆனது. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் பன்னிரண்டாவதாக வைத்துப் போற்றப்பெறுவது. இது குறிஞ்சி, நெய்தல், பாலை, முல்லை, மருதம் ஆகிய ஐந்திணை ஒழுக்கங்களையும் முறையே 31, 31, 30, 31, 30 பாடல்களால் விளக்குகின்றது. இந்நூலுக்குப் பழைய உரை (முதல் 127 பாடல்களுக்கு மட்டும்) ஒன்றுண்டு. குறைவாக உள்ள இவ்வுரையை ரா. இராகவையங்கார் 1904-08ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழ்ப் பகுதிகளில் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1908, 1927ஆம் ஆண்டுகளில் முறையே முதல் மற்றும் இரண்டாம் பதிப்புகள் செந்தமிழ் வெளியீடு 8ஆவதாக வெளிவந்துள்ளது. அதன்பிறகு டி. நாராயண ஐயங்காரின் விளக்கக் குறிப்புடன் 1928ஆம் ஆண்டு நூல் முழுமையும் வெளிவந்துள்ளது. மூலமும் பழைய உரையும் கொண்ட பதிப்பாக 1936ஆம் ஆண்டு சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் வெளியிட்டுள்ளது. இதே கழகம் பின்னர் அ. நடராசப்பிள்ளையின் உரையுடன் 1961, 1979ஆம் ஆண்டுகளில் முறையே முதல் மற்றும் இரண்டாம் பதிப்பை வெளியிட்டுள்ளது.

தியாகராசர் பள்ளேசல்

ஞானப்பிரகாசரின் 'தியாகராசர் பள்ளேசல்' கலித்துறை, விருத்தம், வெண்பா, கலிப்பா, சிந்து, சந்தத் தாழிசை போன்ற பா வகைகள் அமைந்த 67 பாடல்களாலானது.

அகப்பொருட்டுறையாக விளங்கும் இந்நூலில் குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய முறைவைப்பில் ஐவகை நிலவருணனைகள் இடம்பெற்றுள்ளன. இது திருவாரூர்த் தியாகராசப் பெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பெற்றுள்ளது. இதில் பண்ணைத் தலைவன் வரவு, பண்ணைத் தலைவனைப் பள்ளிகள் கண்டு தொழுதல், பண்ணைச் செயல் விளம்பல், நெல் வர்க்கம், பள்ளனைப் பண்ணைக்காரன் விதை தெளிக்கச் சொல்லல், பள்ளன் புலம்பல், பள்ளத்தியர் பள்ளனை ஏசுதல் போன்றன இடம் பெற்றுள்ளன. இந்நூலை 1937ஆம் ஆண்டு தமிழ்ப்பொழில் இதழில் எல். உலகநாத பிள்ளை வெளியிட்டு உள்ளார்.

திரிபதார்த்த தசகாரியம்

138 அகவலடியாலான இந்நூலில் முப்பொருளுக்கும் சுபாவம் - வியாக்தி (வியாப்தி) - வியாபகம் - குணம் - விசேடம் - ரூபகம் - ரூபம் - சொரூபம் - தரிசனம் - சுத்தி எனப் பாசத்துக்குத் தசகாரியமும், இத்துடன் ஆத்மலாபமென்ற ஒன்றைச் சேர்த்து ஆன்மாவுக்கு 11 காரியங்களும் சுத்தியை ஒழித்துச் சிவயோகம், போகம் என்ற இரண்டினையும் கூட்டிச் சிவனிடத்து 11 காரியங்களும் விரித்துரைக்கப் பெற்றுள்ளன. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை 1912ஆம் ஆண்டு 'சித்தாந்தம்' இதழில் ஜெ.எம். நல்லசாமி வெளியிட்டுள்ளார்.

திருஇலஞ்சி முருகன் உலா

பண்டாரக் கவிராயரின் 'திருஇலஞ்சி முருகன் உலா' காப்பு வெண்பா 1, நூல் 460 தாழிசை, வாழ்த்து வெண்பா 1 ஆக 463 பாடல்களாலானது. இது, திருநெல்வேலியைச் சார்ந்த திருக்குற்றாலத்துக்கு வடக்கேயுள்ள சுப்பிரமணியர் தலம் 'இலஞ்சி' என்பது. இத்தலத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள முருகப் பெருமான் மீது இந்நூல் பாடப் பெற்றுள்ளது. திருக்குற்றாலப் புராணத்திலுள்ள வரலாறுகள் பல இந்நூலுள் சுருக்கமாகக் கூறுப்பெற்றுள்ளன. இந்நூலை

உ.வே. சாமிநாதையர் தம்முடைய குறிப்புரையுடன் 1934ஆம் ஆண்டு 'கலைமகள்' இதழ்ப் பகுதிகளில் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1935ஆம் ஆண்டு கலைமகள் வெளியீடு 4ஆவதாக வெளிவந்துள்ளது. பின்பு இவற்றின் 2ம் பதிப்பை 1956ஆம் ஆண்டு சென்னை கபீர் அச்சுக்கூடம் வெளியிட்டுள்ளது.

திருஈங்கோய்மலை எழுபது

நக்கீரதேவனாரின் 'திருஈங்கோய்மலை எழுபது' 70 வெண்பாக்களாலானது. பாடல்தோறும் மலை, குன்று, சிலம்பு, வெற்பு, கடறு, பொருப்பு என்ற முடிபை உடையது. பாடல்களின் முதல் எழுத்துக்கள் அகர வரிசையில் அமைந்துள்ளன. நயமான பல வருணனைகளைச் சொல்லு கின்ற ஆசிரியர் ஒவ்வொரு பாடலிலும் சிவபெருமானின் இயல்பையும் கருணைத் திறத்தையும் நன்கு விளக்கியுள்ளார். சுப்பராயச் செட்டியார், ஆறுமுக நாவலர், காசிமட முதற்பதிப்பு போன்ற பதிப்புகளில் 42-62ஆம் வரையிலான இந்நூலின் 21 பாடல்கள் இல்லை. திரு.வி. உலகநாத முதலியாரின் மணிவிழா மலரில் (1942) தமக்குக் கிடைத்த சுவடியைக் கொண்டு விடுபட்ட பாடல்களை மு. அருணாசலம் வெளியிட்டுள்ளார். அதன்பிறகு காசிமடத்து இரண்டாம் பதிப்பில் (1963) இப்பாடல்கள் சேர்த்துப் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றன. காசிமட இரண்டாம் பதிப்பிற்கு முன் இந்நூல் 1961ஆம் ஆண்டு 'சித்தாந்தம்' இதழில் மு. அருணாசலம் முழுமையும் வெளியிட் டுள்ளார். இந்நூலுக்குப் பாலூர் கண்ணப்ப முதலியாரின் உரைவிளக்கம் ஒன்றுண்டு. இவ்வுரை விளக்கத்தைத் தமிழ்ப் புத்தகாலயம் 1962, 1977, 1980ஆம் ஆண்டுகளில் முறையே முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பதிப்பு எனப் பதிப்பித் திருக்கின்றது.

திருஉருமாமலைச் சிலேடை வெண்பா

செங்கோட்டை - திருக்குற்றாலத்திற்கு அருகிலுள்ள திருமலையில் கோயில் கொண்டுள்ள முருகப்பெருமான் மீது

பாடப்பெற்றதே 'திருஉருமாமலைச் சிலேடை வெண்பா' ஆகும். இந்நூலின் ஆசிரியர் பெயரும் பாடல் எண்ணிக்கையும் தெரியவில்லை. இம்மலையில் வீற்றிருக்கும் முருகப் பெருமானின் பெருமைகளும் சிறப்புக்களும் தலப்பெருமை களும் இதில் பேசப்பெற்றுள்ளன. இந்நூல் 1907ஆம் ஆண்டு விவேகபாநு இதழில் வெளிவந்துள்ளது. தி.சு. ஆறுமுகத்தின் 'திருஉருமாமலைச் சிலேடை வெண்பா' 1974ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. இவ்விரு சிலேடை வெண்பாக்களும் வேறு வேறானவை.

திருக்கயிலாய ஞான உலா

பதினோராம் திருமுறையில் இடம்பெற்றுள்ள சேரமான் பெருமாள் நாயனாரின் 'திருக்கயிலாய ஞான உலா' கலிவெண்பா 197, நூற்பயன் 1 ஆக 198 பாடல்களால் ஆனது. இந்நூல் திருக்கயிலாயத்தில் எழுந்தருளியுள்ள அமலன் மீது பாடப்பெற்றது ஆகும். இந்நூலை ஆதி உலா என்றும், ஞான உலா என்றும் அழைப்பர். பெருமானின் பவனி, ஏழு பருவ மகளிர் காதல் கொள்ளுதல் போன்ற உலா உறுப்புக்கள் அனைத்தும் இதனுள் இடம்பெற்றுள்ளன. சதாசிவச் செட்டி யாரின் குறிப்புரையுடன் சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம் 1925ஆம் ஆண்டு இந்நூலின் முதற்பதிப்பையும், 1974ஆம் ஆண்டு இரண்டாம் பதிப்பையும் வெளியிட்டுள்ளது. பா.ல. முருகேச நாயகர் விருத்திரையுடன் 1936ஆம் ஆண்டு சென்னை மாடல் அச்சுக்கூடம் வெளியிட்டுள்ளது. பின்னர் வை. சுந்தரேச வாண்டையாரால் 1948ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழ்ப் பகுதிகளில் வெளியிடப்பெற்றுள்ளது. பிறகு சண்முகம் பிள்ளையின் உரையுடன் 1952ஆம் ஆண்டு திருப்பனந்தாள் காசித் திருமடமும், 1960ஆம் ஆண்டு தருமையாதீனமும், 1962ஆம் ஆண்டு திருவிடைமருதூர் மகாலிங்க தேவஸ்தானமும் வெளியிட்டுள்ளன. இத்தனிநூற் பதிப்பன்றிப் பதினோராம் திருமுறைப் பதிப்புகளிலும் இந்நூல் இடம்பெற்றுள்ளது.

திருக்கலகம்பகம்

உதீசித் தேவரின் 'திருக்கலம்பகம்' 110 பாடல்களாலானது. அருகக் கடவுளை வழிபடும் இந்நூல் கலம்பக இலக்கணங்களையும், சமண சமயக் கோட்பாடுகளையும் எடுத்தியம்புகின்றது. இந்நூலின் மூலம் மட்டும் திருவேங்கட முதலியாரால் 1883ஆம் ஆண்டு பாகுபலி நயினாரின் இயற்றமிழ் விளக்க அச்சுக்கூடத்தில் அச்சிடப்பெற்றுள்ளது. இந்நூலுக்கு அனந்தகவி என்பார் பொழிப்புரை, பதவுரை என இருவேறு உரைகள் செய்திருக்கின்றார். இவற்றில் பொழிப்புரையை மு. இராகவையங்கார் 1907-08ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழ்ப் பகுதிகளில் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ் இதழ்ப்பதிப்பு செந்தமிழ் வெளியீடாக 1911, 1951ஆம் ஆண்டுகளில் முறையே முதல் மற்றும் இரண்டாம் பதிப்பு வெளிவந்துள்ளது. திண்டிவனம் திரு.ஆ. பழனிச்சாமி சிவாசாரியார் 1951ஆம் ஆண்டுக்குப் பிறகு ஒரு பதிப்பைக் கொணர்ந்துள்ளார். 1955ஆம் ஆண்டு தஞ்சை ஆ. சக்ரவர்த்தி நயினாரின் மகள் திருமண வெளியீடாகவும், 1995ஆம் ஆண்டு தன்யகுமாரின் உரையுடனும் இந்நூல் பதிப்பாகியிருக்கின்றது.

திருக்கழுக்குன்றச் சிலேடை வெண்பா

காஞ்சிபுரம் மகாவித்துவான் சபாபதி முதலியாரின் 'திருக்கழுக்குன்ற சிலேடை வெண்பா' காப்பு 2, வாழ்த்து 1, நூல் 100 ஆக 103 பாடல்களாலானது. தொண்டை நாட்டில் தேவாரம் பாடல்பெற்ற 32 தலங்களுள் திருக்கழுக்குன்றமும் ஒன்று. இந்நூல் திருக்கழுக்குன்றத்து வெண்பா மாலை என்றும், திருக்கழுக்குன்றமாலை என்றும் வழங்கப்பெறும். திருக்கழுக் குன்றத்தைச் சிறப்பித்துக் கூறும் இந்நூலில் திருக்கழுக்குன்றத் தல வரலாற்றுச் செய்திகள் அங்கங்கே விரவி வந்துள்ளன. இந்நூலை உ.வே. சாமிநாதையர் தம்முடைய குறிப்புரையுடன் 1933ஆம் ஆண்டு 'சிவநேசன்' இதழ்ப் பகுதிகளில் வெளியிட்டு உள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1933, 1953ஆம்

ஆண்டுகளில் முறையே முதல் மற்றும் இரண்டாம் பதிப்பு என சிவநேசன் வெளியீடாக வெளிவந்துள்ளது. அதன்பிறகு சங்குப் புலவரின் உரையுடன் 1964ஆம் ஆண்டு சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் ஒரு பதிப்பை வெளியிட்டுள்ளது.

திருக்கழுக்குன்ற மாலை

அந்தகக்கவி வீரராகவ முதலியாரின் 'திருக்கழுக்குன்ற மாலை' 100 பாடல்களாலானது. இது, திருக்கழுக்குன்றத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள சிவபெருமான் மீது பாடப்பெற்றதாகும். ஒவ்வொரு பாடலின் முதலிரண்டடிகள் சிவபெருமானின் புகழையும், பின்னிரண்டடிகள் திருக்கழுக் குன்ற வளமும் அமையுமாறு பாடப்பெற்றுள்ளது. திருக்கழுக் குன்றச் சிலேடை வெண்பா (சபாபதி முதலியார் எழுதியது) வைத் 'திருக்கழுக்குன்ற மாலை' என்று வழங்கும் நூலிலிருந்து இது வேறானது. இந்நூலை 1951ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் பி.எஸ். சுலோசனா வெளியிட்டுள்ளார்.

திருக்காளத்தி இட்டகாமிய மாலை

'இட்டகாமியம்' என்பது விரும்பிப் பெற்ற பொருளைக் குறிக்கும். நோய்வாய்ப்பட்ட பக்தர் ஒருவர் திருக்காளத்தி யப்பரிடம் தம் குறைகளைக் களைந்தருள வேண்டுமென்று வேண்டிப் பாடியதால் இந்நூல் 'திருக்காளத்தி இட்டகாமிய மாலை' என்று பெயர் பெறுவதாயிற்று. இந்நூலின் ஆசிரியர் பெயரும் நூலின் பாடல் தொகையும் தெரியவில்லை. என்றாலும் முதல் 49 பாடல்கள் வரையே கிடைத்துள்ளன. இந்நூல் சொ. சொக்கலிங்கச் செட்டியார், நா. இராமநாதச் செட்டியார் ஆகியோர்களால் 1917ஆம் ஆண்டு வெளியிடப் பெற்றுள்ளது. பின்னர் இந்நூல் உ.வே. சாமிநாதையர் குறிப்புரையுடன் 1938ஆம் ஆண்டு 'கலைமகள்' இதழில் வெளிவந்துள்ளது. நீண்ட காலத்திற்குப் பிறகு உ.வே. சாமிநாதையர் நூல்நிலைய 125ஆவது வெளியீடான 'மாலை

ஐந்து' (1995) என்னும் தொகுப்பு நூலில் இந்நூல் மூன்றாவதாக இடம்பெற்றுள்ளது.

திருக்குணமங்கலம் அருட்பா மாலை

அழகிய சிற்றம்பல தேசிகரின் 'திருக்குணமங்கலம் அருட்பா மாலை' 10 பாடல்களாலானது. திருக்குண மங்கலத்தில் கோயில் கொண்டிருக்கும் இறைவனின் பெருமைகளைக் கூறுவதாக இந்நூல் அமைந்துள்ளது. இதிலுள்ள ஒவ்வொரு பாடலின் முதலிரண்டடிகள் இறைவனின் சிறப்பைக் கூற, பின்னிரண்டடிகள் ஒவ்வொரு பாடலிலும்,

"திருக்குண மங்கலத்தான் றீவினை தீர்த்திடுவான்
உருக்குணம் போக்கியெனக் குள்ளன் பருளுவனே"

என்று அமைக்கப்பெற்றுள்ளது. இந்நூலை 1938ஆம் ஆண்டு சித்தாந்தம் இதழில் திருவாரூர் எஸ். சோமசுந்தர தேசிகர் வெளியிட்டுள்ளார்.

திருக்குருகூர்த் திருப்பணிமாலை

திருமால் திருப்பதி நூற்றெட்டுள் பாண்டி நாட்டுப் பொருநையாற்றின் தென்கரையில் 'திருக்குருகூர்' எனும் தலம் உள்ளது. இத்தலம் இன்று ஆழ்வார் திருநகரி என்று அழைக்கப்படுகின்றது. இத்தலத் திருப்பணிகள் பலவற்றையும் இந்நூல் 118 பாடல்களால் விரித்துரைக்கின்றது. இந்நூலை 1949-50ஆம் ஆண்டு செந்தமிழ் இதழ்ப் பகுதிகளில் திரு.கி. இராமாநுஜையங்கார் மற்றும் ஆதிநாதப் பிள்ளை ஆகியோர் வெளியிட்டுள்ளனர்.

திருக்குறள் அதிகார சாரமாகிய திருத்தாலாட்டு

யாழ்ப்பாணம் வல்லை சோதிடரும் வைத்தியருமாகிய வ.ஞா. கணேச பண்டிதரின் 'திருக்குறள் அதிகார சாரமாகிய திருத்தாலாட்டு' எனும் நூல் திருக்குறள் 133 அதிகாரத்திற்கும் ஒன்று முதல் மூன்று பாடல்கள் வரை ஒவ்வோர் அதிகாரமும் பாடல்களைப் பெற்றுள்ளது. இந்நூல் 'திருக்குறள் அதிகார

சாரமாகிய நன்னெறித் தாலாட்டு' என்ற பெயரில் மதுரை ஸ்ரீராமச்சந்திர விலாச அச்சியந்திரசாலையில் 1919ஆம் ஆண்டு அச்சிடப்பெற்றுள்ளது. பின்னர் இந்நூல் 'திருக்குறள் அதிகார சாரமாகிய திருத்தாலாட்டு' என்ற பெயரில் ஆர்.எஸ். பதி 1926ஆம் ஆண்டு 'செல்வக்களஞ்சியம்' இதழில் வெளியிட்டு உள்ளார்.

திருக்குறுங்குடி அழகியநம்பி பிள்ளைத்தமிழ்

திருக்குறுங்குடியில் கோயில் கொண்டு எழுந்தருளி யிருக்கும் அழகியநம்பி மீது பாடப்பெற்ற இந்நூல் 105 பாடல்களாலானது. காப்புப் பருவம் 15 பாடல்களும், ஏனைய ஒன்பது பருவங்கள் பத்துப் பத்துப் பாடல்களும் கொண்டதாக இந்நூல் அமைக்கப்பெற்றுள்ளது. இந்நூலாசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலின் முதல் 55 பாடல்களே இதுவரை கிடைத்துள்ளன. இந்நூலை 1950-51ஆம் ஆண்டு செந்தமிழ் இதழ்ப் பகுதிகளில் கி. இராமாநுஜையங்கார் வெளியிட்டு உள்ளார்.

திருக்குற்றால ஊடற்பிரபந்தம்

திரிகூடராசப்பக் கவிராயரின் 'திருக்குற்றால ஊடற் பிரபந்தம்' காப்பு 1, நூல் 20, வாழ்த்து 1 என 22 அறுசீர் ஆசிரிய விருத்தத்தாலானது. திருக்குற்றால நாதருக்கும் தேவிக்கும் நேர்ந்த ஊடல் தீர்ந்த நிகழ்ச்சியை இந்நூல் கருப்பொருளாகக் கொண்டுள்ளது. இந்நூலை 1927ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழில் மே.சொ. சுப்பிரமணியக் கவிராயர் வெளியிட்டு உள்ளார்.

திருக்குற்றாலக் குறவஞ்சி

திரிகூடராசப்பக் கவிராயரின் 'திருக்குற்றாலக் குறவஞ்சி' 119 பாடல்களால் ஆனது. அகவல், வெண்பா, கொச்சகம், கலித்துறை, கழிநெடில் விருத்தம் இவற்றினிடையே சிந்து முதலியவை அமைத்துப் பாடப்பெற்றுள்ளது. இந்நூல் திரிகூடநாதரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்

பெற்றுள்ளது. குறவஞ்சிக்கான அனைத்து உறுப்புக்களையும் இந்நூல் பெற்றுள்ளது. இந்நூல், வீராசாமி நாயுடு (1870), சரவணபுரம் சண்முக முதலியார் (1883), மதுரை முதலியார் (1890), இராமசாமி நாயுடு (1900), மணிமங்கலம் வடிவேலு முதலியார் (1903, 1907, 1912), சென்னை பத்மநாபசுவாமி யந்திரசாலை வெளியீடு (1912), மு.ரா. அருணாசலக் கவிராயரின் அரும்பத உரையுடன் மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு (1912, 1927), கற்பக விநாயகம் பிள்ளை (1912, 1927), நரசை சரவண முதலியார் (1929) போன்றோரால் பதிப்பிக்கப்பெற்றிருக்கின்றது. இப்பதிப்புகளைத் தொடர்ந்து உ.வே. சாமிநாதையர் 1934-35ஆம் ஆண்டு 'கலைமகள்' இதழ்ப் பகுதிகளில் வெளியிட்டு உள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1935ஆம் ஆண்டு கலைமகள் வெளியீடாக வெளிவந்துள்ளது. இப்பதிப்பிற்குப் பிறகு திருக்குற்றால தேவஸ்தானப் பதிப்பும் (1938, 1945, 1963), எஸ். கல்யாணசுந்தர ஐயர் பதிப்பும் (1945, 1963), தென்காசி மீனாக்ஷி பிரஸ் பதிப்பும் (1953 - 5ம் பதிப்பு), எஸ். இராஜம் பதிப்பும் (1960), சென்னை சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் ரெ. இராமசாமிப் பிள்ளை உரைப்பதிப்பும் (1972, 1980) வெளிவந்து இருக்கின்றன.

திருக்குற்றாலச் சிலேடை வெண்பா

திரிகூடராசப்பக் கவிராயரின் 'திருக்குற்றாலச் சிலேடை வெண்பா' காப்பு முதல் அவையடக்கம் இறுதியாக உள்ள ஐந்து வெண்பாக்களோடு 105 வெண்பாக்களால் ஆனது. இந்நூல், திருக்குற்றாலச் சிறப்புக்களையும், பிற தலப்பெயர்களையும், அத்தலச் செய்திகளையும், நாயன்மார்களின் பெருமைகளையும் சிறப்பித்துக் கூறுகின்றது. இந்நூலை உ.வே. சாமிநாதையர் தம்முடைய குறிப்புரையுடன் 1939-40ஆம் ஆண்டு 'கலைமகள்' இதழ்ப் பகுதிகளில் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1940ஆம் ஆண்டு கலைமகள் வெளியீடாக வெளிவந்து உள்ளது. அதன் பிறகு வெ.ப. சுப்பிரமணிய முதலியார் 1939ஆம் ஆண்டு 'திருக்குற்றால யமகவந்தாதி, திருக்குற்றால உலா' ஆகியவற்றுடன் இந்நூலையும் சேர்த்து வெளியிட்டு

உள்ளார். இப்பதிப்பு திருக்குற்றாலநாத சுவாமி தேவஸ்தான வெளியீடாக வெளிவந்துள்ளது.

திருக்குற்றால மாலை

திரிகூடராசப்பக் கவிராயரின் 'திருக்குற்றால மாலை' திரிகூடநாதர் மீது பாடப்பெற்றதாகும். இந்நூல் காப்பு வெண்பா 1, நூல் 100 கட்டளைக்கலித்துறையால் ஆனது. சுவாமியைக் குறும்பலாவீசர், குற்றாலநாதர், திரிகூடநாதர் என்றெல்லாம் அழைப்பர். இந்நூல் திருநாவுக்கரசு பத்திரிகையில் முதன் முதலாக வெளிவந்துள்ளது. இப்பத்திரிகை பற்றிய தகவல் எதுவும் தெரியவில்லை. திருநாவுக்கரசு பத்திரிகையில் வெளியானதை உணர்ந்த டி.எஸ்.பி. சுப்பிரமணியப் பிள்ளை 1912ஆம் ஆண்டு திருநெல்வேலி ஆரியப்பிரகாசினி அச்சுக் கூடத்தில் திருக்குற்றால மாலையைப் பதிப்பித்துள்ளார். இப் பதிப்பினைக் கொண்டு இப்பத்திரிகையைப் பற்றி அறிந்து கொள்ள முடிகிறது. இதன் பிறகு இராமாநுஜையங்கார் 1921ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழ்ப் பகுதிகளில் இந்நூலை வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1921ஆம் ஆண்டு செந்தமிழ் வெளியீடு 44ஆவதாக வெளிவந்துள்ளது.

திருச்சிறுபுலியூர் உலா

வடமலையப்பன் கவிராயரின் 'திருச்சிறுபுலியூர் உலா' காப்பு வெண்பா1, நூல் 420 கண்ணிகளாலானது. சோழநாட்டுத் திருமால் திருப்பதி 40இல் திருச்சிறுபுலியூரும் ஒன்று. இந்நூலில் திருமாலின் பெருமைகளும் தலமான்மியமும் ஒருசேர அமைந்துள்ளது. இத்தலத்துப் பெருமான் உலா செல்லுங்கால் நிகழ்ந்த நிகழ்வுகளை இந்நூல் தெளிவுபட விளக்குகிறது. இந்நூலைக் கி. இராமாநுஜையங்கர் தம்முடைய குறிப்புரை யுடன் 1949-50ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழ்ப் பகுதிகளில் தனிப்பக்க எண்ணுடன் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1951ஆம் ஆண்டு செந்தமிழ் வெளியீடு 70ஆவதாக வெளிவந்துள்ளது.

திருச்செங்கோட்டகவல்

சேலம் மாவட்டத்திலுள்ள திருச்செங்கோட்டில் கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் முருகக்கடவுள் மீது பாடப்பெற்றதே 'திருச்செங்கோட்டகவல்' ஆகும். இது 74 அகவலடிகளாலானது. திருச்செங்கோட்டில் பாம்பின் படம் போல் உள்ள மலையின் மீது முருகப்பெருமான் எழுந்தருளி இருக்கின்றார். இத்திருச்செங்கோட்டில் ஒரு புலவர் முருகப்பெருமான் மீது அன்பு பூண்டு இருந்தார். அப்போது வெளிமாநிலத்தில் இருந்து ஒரு புலவன், தான் பாடும் பாடலின் இரண்டு அடிகளுக்கு மேல் தொடர்ந்து இரண்டடிபாட முடியாத புலவர்களைத் தனது அடிமையாக்கிக் கொண்டு வருவானாயினான். அத்தகையவன் திருச்செங்கோடு வர நேர்ந்தது. வந்தவன் திருச்செங்கோட்டுப் புலவரையும் அடிமை கொள்ளக் கருதினான். இதனையறிந்த செங்கோட்டுப் புலவர் முருகப்பெருமானை வேண்டுவதாக இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை வீ. சொக்கலிங்கம் 1966ஆம் ஆண்டு 'சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ்'ப் பகுதியில் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1966ஆம் ஆண்டு இந்நூலகம் வெளியிட்ட 'முருகர் கதம்பம்' எனும் தொகுப்பு நூலில் ஏழாவதாக இடம்பெற்று உள்ளது.

திருச்செந்திற் கலம்பகம்

திருவாவடுதுறை யாதீனத்துச் சுவாமிநாத தேசிகரின் 'திருச்செந்திற் கலம்பகம்' பல்வேறு பா வகைகளாலான 100 பாடல்களாலானது. திருச்செந்தூரில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள முருகப்பெருமான் மீது இந்நூல் பாடப்பெற்று உள்ளது. இந்நூலைச் சே.ரா. சுப்பிரமணியக் கவிராயர் 1904ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழ்ப் பகுதிகளில் தனிப்பக்க எண்ணுடன் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1905ஆம் ஆண்டு செந்தமிழ் வெளியீடு 15ஆவதாக வெளிவந்துள்ளது. அதன்பிறகு மு.ரா. அருணாசலக் கவிராயர் 1911ஆம் ஆண்டு பதிப்பித்த 'திருச்செந்தூர்ப் பிரபந்தத்திரட்டு' எனும் தொகுப்பு

நூலிலும் இந்நூலை வெளிட்டுள்ளார். இதற்குப் பிறகு 1924ஆம் ஆண்டு சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் ஒரு பதிப்பை வெளியிட்டுள்ளது.

திருச்செந்தூர்ப்பரணி

திருச்செந்தூரில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள செந்தில் வேலவன் சூரனைச் சம்காரம் செய்த நிகழ்ச்சியை மையமாகக் கொண்டுள்ள இந்நூல் 1200 தாழிசைகளாலானது. இந்நூலாசிரியர் பெயர் தெரியவில்லை. இரணியனைச் சம்காரம் செய்ததை 'இரணியன்வதைப்பரணி' என்று கூறுவது போல, சூரனைச் சம்காரம் செய்ததால் இதைச் 'சூரன்வதைப் பரணி' என்றும் சுட்டுவர். இந்நூல் 1930ஆம் ஆண்டு செந்தமிழ் இதழில் வெளிவந்துள்ளது.

திருச்செந்தூர் முருகக்கடவுள் நற்றாய் இரங்கல் வண்ணம்

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் 'திருச்செந்தூர் முருகக்கடவுள் நற்றாய் இரங்கல் வண்ணம்' எனும் நூல் திருச்செந்தூரில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள முருகப் பெருமான் மீது பாடப்பெற்றுள்ளது. முருகப்பெருமானின் வரலாற்றுச் சிறப்புமிக்க செய்திகள் பல இதில் விளக்கப்பெற்றுள்ளன. இந்நூல் 1929ஆம் ஆண்டு முத்தமிழ் ஆராய்ச்சிக் கூட வெளியீடாகத் தவத்திரு கந்தசாமி சுவாமிகள் பதிப்பித்த 'வண்ணத்திரட்டு' எனும் திரட்டு நூலில் இந்நூல் (மூலம் மட்டும்) இடம்பெற்றுள்ளது. அதன் பின்னர் இல. பழனிச்சாமியின் உரையுடன் 1998ஆம் ஆண்டு 'மாதாந்திர அமுதம்' இதழில் வெளிவந்துள்ளது.

திருச்சோற்றுத்துறை தலபுராணம்

திருவிடைமருதூர் அம்பலவாண தேசிகரின் 'திருச்சோற்றுத்துறை தலபுராணம்' 448 பாடல்களாலானது. சோழநாட்டுக் காவிரியின் தென்கரையில் 'திருச்சோற்றுத்துறை' எனும் திருத்தலம் உள்ளது. சிவபக்தனான அருளாளன் (மறையவன்) பசிப்பிணியால் வருந்தும்போது அவனுக்கு எடுக்க எடுக்கக் குறையாத சோறு அளித்தருளிய தலம் இது என்பது

கர்ண பரம்பரை வழக்கு. இந்நூல், பாயிரம், புராண வரலாறு, நாட்டுச் சிறப்பு, நகரச் சிறப்பு, தலச்சருக்கம், தீர்த்தச் சருக்கம், மாகநானச் சருக்கம், துலாநரானச் சருக்கம், சேடச் சருக்கம், கவுதமச் சருக்கம், சூரியச் சருக்கம், கசன்மச் சருக்கம், கேதார விரதச் சருக்கம், சோமவார விரதச் சருக்கம், சிவராத்திரி விரதச் சருக்கம் போன்ற பகுதிகளாலானது. இப்புராணம் திருச்சோற்றுத்துறைத் தலத்தின் எழில்மிகு தோற்றத்தினையும், இந்திரன் சூரியன் கௌதமர் ஆகியோர் எம்பெருமானுக்கும் இத்தலத்திற்கும் உள்ள வரலாறுகள் பலவற்றையும் பல கதைகளுடன் ஒப்பிட்டு விளக்குகிறது. இந்நூலை இராம. கோவிந்தசாமி பிள்ளை 1958-60ஆம் ஆண்டு 'சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ்'ப் பகுதிகளில் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1960ஆம் ஆண்டு இந்நூலக வெளியீடாக வெளிவந்துள்ளது.

திருஞானசம்பந்த சுவாமிகள் ஆனந்தக்களிப்பு

திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் 'திருஞானசம்பந்த சுவாமிகள் ஆனந்தக் களிப்பு' பல்லவி ஒன்றும், தாழிசை 38ம் கொண்டுள்ளது. காழியம் பதியில் ஞானசம்பந்தப் பெருமான் அவதரித்தது முதல் அவர்தம் வாழ்வில் நிகழ்த்திய திருவிளையாடல்கள் பலவற்றை இந்நூல் குறிப்பிடுகின்றது. ஆசிரியர், தோழியை முன்னிலைப் படுத்திப் பாடியுள்ளார்.

"ஆனந்த மானந்தத் தோழி - திரு
வாளர்சம் பந்த ரருள்விளை யாடல்
ஆனந்த மானந்தந் தோழி"

என்ற பல்லவி எல்லா பாடல்களுக்கும் இறுதியில் அமையுமாறு பாடப்பெற்றுள்ளது. இந்நூல் உ.வே. சாமிநாதையர் பதிப்பித்த 'மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களின் பிரபந்தத் திரட்டு'ள் (1910, 1926) ஒன்றாக இடம்பெற்றுள்ளது. பின்னர் இந்நூலைத் தி.ச. கோவிந்தசாமிப் பிள்ளை 1991ஆம் ஆண்டு 'மெய்கண்டார்' இதழில் வெளியிட்டுள்ளார்.

திருஞானசம்பந்த சுவாமிகள் திருத்தாலாட்டு

காழிக்கண்ணுடைய வள்ளலாரின் 'திருஞானசம்பந்த சுவாமிகள் திருத்தாலாட்டு' காப்பு 1, நூல் 30 கண்ணிகளா லானது. இது, திருஞானசம்பந்த சுவாமிகளின் வாழ்க்கை வரலாற்றைத் தாலாட்டு முறையில் சுருக்கமாகக் கூறுகின்றது. இந்நூல் சென்னை, மதராஸ் ரிப்பன் அச்சுக்கூடம் வெளியிட்ட 'தாலாட்டுப் பிரபந்தங்கள்' (1909) எனும் தொகுப்பு நூலில் 12ஆவதாக இடம் பெற்றுள்ளது. பின்னர் ப.அ. முத்துத் தாண்டவராய பிள்ளை ஏட்டுப் பிரதிகளைக் கொண்டு 1930ஆம் ஆண்டு 'செந்தமிழ்ச்செல்வி' இதழில் வெளியிட்டு உள்ளார்.

திருஞானசம்பந்த சுவாமிகள் பிள்ளைத்தமிழ்

துறைசை ஸ்ரீமாசிலாமணி தேசிக சுவாமிகளின் 'திருஞானசம்பந்த சுவாமிகள் பிள்ளைத்தமிழ்' திருஞான சம்பந்தப் பெருமானைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பெற்ற இந்நூல் 100 பதினாண்குசீர் கழிநெடிலடியாசிரிய விருத்தத்தாலானது. பருவத்திற்குப் பத்துப் பாடல்கள் கொண்டது. திருஞானசம்பந்தரின் வாழ்க்கையில் அருளிச் செய்த நிகழ்ச்சிகள் இந்நூலில் தொகுக்கப்பெற்றுள்ளன. ஆடல்வல்லானான தியாகேசப் பெருமானது திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் ஞானசம்பந்தப் பெருமானுக்குத் தைப்பூசத்துக்கு முந்தைய பத்து நாள்களிலும் திருவுலா செய்வித்துச் சுவாமி நடைவானத்து வரும்போது இப்பிள்ளைத் தமிழையும் பாடுகின்றனர். இம்முறை இன்றும் நடைமுறையில் இருந்து வருகின்றது. இந்நூலை எஸ். சோமசுந்தர தேசிகர் 1918ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழ்ப் பகுதிகளில் சில பாடல்கள் மட்டும் வெளியிட்டுள்ளார். அதன் பின்னர் ம. சீராளன் 1966ஆம் ஆண்டு 'சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ்'ப் பகுதியில் நூல் முழுமையும் தனிப்பக்க எண்ணுடன் வெளியிட் டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1966ஆம் ஆண்டு இந்நூலக வெளியீடாக வெளிவந்துள்ளது. இவ்விதழ்ப்

பதிப்பிற்கு முன் இந்நூலைத் திருவாவடுதுறையாதீனம் 1953ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளது.

திருஞானசம்பந்தர் பிள்ளைத்தமிழ்

கூனம்பட்டி மாணிக்கவாசக தேசிக சுவாமிகளின் 'திருஞானசம்பந்தர் பிள்ளைத்தமிழ்' 100 பதினான்குசீர் கழிநெடிலடியாசிரிய விருத்தத்தாலானது. திருஞானசம்பந்தப் பெருமானைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பெற்றுள்ளது. செந்தமிழ் மற்றும் சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ்களில் வெளிவந்ததினும், சொக்கலிங்கச் செட்டியார், வ.சு. செங்கல்வராய பிள்ளை போன்றோரின் நூல்களினின்றும் இது வேறானது. இந்நூலை 1964-65ஆம் ஆண்டு திருக்கோயில் இதழ்ப் பகுதி

ன் கையெழுத்துப்படியை ஆதாரமாகக் கொண்டு 1949ஆம் ஆண்டு 'செந்தமிழ்ச் செல்வி' இதழில் வெளிவந்துள்ளது.

திருத்தணிகைத் திருவிருத்தம்

தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவரின் 'திருத்தணிகைத் திருவிருத்தம்' 10 பன்னிருசீர் கழிநெடிலடியாசிரிய விருத்தத்தாலானது. திருத்தணி முருகப்பெருமான் மீது பாடப்பெற்றதொரு தோத்திரம். மிக நோயால் வருந்தி நன்மை அடைந்த ஒருவருடைய வேண்டுகோளின்படி இந்நூலாசிரியர் இந்நூலைப் பாடியருளினார் என்பர். திருத்தணிகை முருகப்பெருமானை நாள்தோறும் தியானித்து பாராயணஞ் செய்துவரும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது. இந்நூல், முனுசாமி முதலியார் பதிப்பித்த 'தொட்டிக்கலைச் சுப்பிரமணியர் பிரபந்தங்கள்' (1892) எனும் தொகுப்பில் ஒன்றாக இடம்பெற்றுள்ளது. அடுத்து, சுந்தரலிங்க சுவாமியால் (1898) தனிநூலாக வெளியிடப்பெற்று உள்ளது. பின்னர் உ.வே. சாமிநாதையரால் 1906ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழில் வெளியிடப்பெற்றுள்ளது. பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1914ஆம் ஆண்டு மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடாக வெளிவந்துள்ளது. இப்பதிப்புகளுக்குப் பிறகு சுப்பிரமணிய பிள்ளை 'திருக்குற்றால சித்திரசபைத்

திருவிருத்தம்' எனும் நூலுடன் சேர்த்து இந்நூலை 1936ஆம் ஆண்டு வெளியிட்டு உள்ளார். பிறகு எஸ்.கல்யாணசுந்தரத்தின் குறிப்புரையுடன் 1949ஆம் ஆண்டும், திருவாவடுதுறை யாதீனம் வெளியிட்ட 'தொட்டிக்கலை மதுரகவி ஸ்ரீசுப்பிரமணிய முனிவர் பிரபந்தங்கள் - முதற்பகுதி' (1953)யிலும் இந்நூல் இடம்பெற்று உள்ளது.

திருத்தணிகை முருகன் தாலாட்டு

முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் ஒன்று திருத்தணிகை. இத்தலத்தில் கோயில் கொண்டுள்ள முருகப்பெருமான் மீது இந்நூல் பாடப்பெற்றுள்ளது. தமிழ் உணர்வும் பக்தி உணர்வும் மிக்க நூலாகத் திகழ்கின்றது. இந்நூல் முருகப்பெருமானின் பிறப்பு, அங்க அழகுகள், முருகனின் திருவிளையாடல்கள், வீரச் செயல்கள், முருகனின் காதல் தன்மைகள் எனப் பலவாறு அமைந்துள்ளது. காப்பு வெண்பா 1, கலித்தாழிசை 1, நூல் கலித்தாழிசை 64 ஆக 66 பாடல்களா லான முருகனின் தாலாட்டு நூலாக இது அமைந்துள்ளது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை 1961ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் கிருஷ்ணா சஞ்சீவி வெளியிட்டுள்ளார்.

திருத்தொட்டிக்கலைக் கேசவப்பெருமாள் வண்ணம்

தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவரின் 'திருத் தொட்டிக்கலை கேசவப் பெருமாள் வண்ணம்' எனும் நூல் திருத்தொட்டிக்கலையில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள கேசவப்பெருமாள் மீது பாடப்பெற்றுள்ளது. இந்நூல் முனுசாமி முதலியார் பதிப்பித்த 'தொட்டிக்கலைச் சுப்பிரமணியர் பிரபந்தங்கள்' (1892) எனும் தொகுப்பில் ஒன்றாக வெளிவந்து உள்ளது. அடுத்து, இந்நூல் மதுரைத் தமிழ்ச்சங்கச் சுவடியை ஆதாரமாகக் கொண்டு கி. இராமாநுஜையங்காரால் 'செந்தமிழ்' இதழில் 1921ஆம் ஆண்டு வெளியிடப்பெற்று உள்ளது. இதனை அடுத்து 1953ஆம் ஆண்டு திருவாவடுதுறை ஆதீனம் வெளியிட்ட 'தொட்டிக்கலை மதுரகவி ஸ்ரீசுப்பிரமணிய

முனிவர் பிரபந்தங்கள்' எனும் தொகுப்பு நூலிலும் இந்நூல் இடம்பெற்றுள்ளது.

திருத்தொண்டர் மாலை

குமாரபாரதியின் 'திருத்தொண்டர் மாலை' பாயிரம் 3, சிறப்புப் பாயிரம் 1, நூல் 100 ஆக 104 பாடல்களாலானது. இந்நூல் திருத்தொண்டர் தொகையின் பொருளைத் தன்னகத்தே கொண்டு தில்லை மூவாயிரவர் முதலாகச் சேரமான் பெருமாள் நாயனார் இறுவாயாக இடையில் பல நாயன்மாரது வரலாற்றினைக் குறிப்பாக எடுத்துக்காட்டுகின்றது. இதிலுள்ள ஒவ்வொரு வெண்பாவிலும் முதல் இரண்டடிகளில் ஒவ்வொரு நாயன்மாரது வரலாற்றுக் குறிப்பும், பின்னிரண்டடிகளில் அதற்கிசைந்ததொரு திருவள்ளுவ நாயனாரின் திருக்குறளையும் பொருத்திக் காட்டிப் பல்வேறு நீதிகளை உணர்த்துகின்றது. இந்நூல் க. சுப்பிரமணிய முதலியார் (1890), வா. மகாதேவ முதலியார் (உரைப்பதிப்பு 1911), பழனியப்ப செட்டியார் (1912) போன்றோரின் பதிப்புகளைப் பெற்றுள்ளது. வா. மகாதேவ முதலியாரின் உரையுடன் மெ.அரு.ந. இராமநாத செட்டியார் 1912, 1917ஆம் ஆண்டுகளில் முறையே முதல் மற்றும் இரண்டாம் பதிப்பு வெளியிட்டுள்ளார். பின்னர் 1913ஆம் ஆண்டு மூலமும் உரையுமாக மதுரை விவேகபாநு அச்சியந்திரசாலை வெளியிட்டுள்ளது. அதன் பிறகு அம்பை இரா. சங்கரனாரின் பதிப்பையும் இந்நூல் பெற்றுள்ளது. இவ்வளவு பதிப்புகள் வெளிவந்த பிறகு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகச் சுவடியை ஆதாரமாகக் கொண்டு நடாத்தூர் வேங்கடாசார்யர் 1950ஆம் ஆண்டு 'அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ்'ப் பகுதியில் வெளியிட்டிருக் கின்றார். இவ்விதழ்ப் பதிப்பினை அடுத்து த.ச. மீனாட்சி சுந்தரம் பிள்ளை 1957ஆம் ஆண்டு பரிசோதித்து நூதனமாக எழுதிய நாயன்மார் கதைக்குறிப்பு, முன்னுரை முதலிய வற்றுடன் திருவாவடுதுறையாதீன வெளியீடு 108ஆவதாக வெளிவந்து உள்ளது.

திருநறையூர்நம்பி மேகவிடுதூது

பிள்ளைப்பெருமாளையங்காரின் 'திருநறையூர்நம்பி மேகவிடுதூது' தனியன் வெண்பா 1, காப்பு வெண்பா 2, நூல் 200 கலிவெண்பா, நூற்பயன் 1 ஆக 204 பாடல்களாலானது. திருநறையூரில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள நம்பியிடத்து மால்கொண்ட ஒரு தலைவி, அவரிடத்தே தன்னாற்றாமையைத் தெரிவித்து அவரணிந்த திருத்துழாய் மாலையை வாங்கி வரும்படி மேகத்தைத் தூதுவிடும் தன்மையதாக இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலை இராமானுஜையங்கார் 1921ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழ்ப் பகுதிகளில் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1921ஆம் ஆண்டு செந்தமிழ் வெளியீடு 43ஆவதாக வெளிவந்துள்ளது.

திருநாதர் குன்றத்துப் பதிகம்

சைன தீர்த்தங்கரர்களின் பெருமைகளைக் கூறும் 'திருநாதர் குன்றத்துப் பதிகம்' 31 பன்னிருசீர் கழிநெடிலடி யாசிரிய விருத்தத்தாலானது. வரலாற்றுச் சிறப்புடைய செஞ்சிக்கோட்டையின் வடபாலுள்ளது திருநாதர் குன்றம். அக்குன்றத்தின்கண் சைன தீர்த்தங்கரர்களின் உருவங்கள் இருபத்து நான்கு பொறிக்கப்பட்டுள்ளன. இவ்வுருவங்கள் சுமார் பதினைந்து அடி உயரத்தில் செதுக்கப்பட்டுள்ளன. அத்தீர்த்தங்கரர்களையும் குன்றையும் இந்நூல் சிறப்பித்துப் பாடுகின்றது. இந்நூலில் இடம்பெற்றுள்ள ஒவ்வொரு பாடலும் ஒவ்வொரு தீர்த்தங்கரருடைய பிறப்பு வரலாற்றையும் அவர்தம் பெருமைகளையும் விளக்குகின்றது.

> "ஆசிரி யத்துறை அதனது விருத்தம்
> கலியின் விருத்தம் அவற்றின் நான்கடி
> எட்டின் காலும் உயர்ந்த வெண்பா
> மிசைவைத் தீரைந்து நாலைந் தென்னப்
> பாட்டுவரத் தொடுப்பது பதிகம் ஆகும்"

எனும் இலக்கணப்படி 10, 20 பாடல்களால் அமைவது பதிகம் ஆகும். பெரும்பாலும் ஒரு பொருளைக் குறித்த பத்துச் செய்யுள்களால் அமைவதைப் பதிகம் என்பர். ஆனால் தேவாரப் பதிகங்கள் பெரும்பாலும் 11 பாடல்களால் பாடப் பெற்றிருக்கின்றன. கந்தசாமி சுவாமிகள் 13 பாடல்களாலான பதிகங்களைப் பாடியுள்ளார். பதிகப் பாடல்தொகை அதிகப் படியான 20யையும் கடந்து 31 பாடல்களாலான பதிக நூல்களும் தமிழ் இலக்கியத்துள் இருப்பது தெரிகின்றது. 'திருநாதர் குன்றத்துப் பதிகம்' 31 பன்னிருசீர் கழிநெடியலடி யாசிரிய விருத்தத்தால் பாடப்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்க தாகும். இது பதிக விதிக்கு மீறிய செயலாகத் தெரிந்தாலும் புதுவகை புகுவது தமிழிலக்கியத்தில் புதுமை ஒன்றுமில்லை. இந்நூலை 1960ஆம் ஆண்டு நல்லறம் இதழில் திரு. பிரத்யும்னன் வெளியிட்டுள்ளார்.

திருநாவுக்கரசு சுவாமிகள் சரித்திரச் சுருக்க அகவல்

பர்வத சஞ்சீவி அய்யரின் 'திருநாவுக்கரசு சுவாமிகள் சரித்திரச் சுருக்க அகவல்' 102 அகவலடிகளாலானது. இந்நூல் திருநாவுக்கரசரின் வாழ்க்கை வரலாற்றில் நிகழ்ந்த சிறப்புமிக்க சில நிகழ்ச்சிகளை நினைவுபடுத்தும் வகையில் அமைந்துள்ளது. இந்நூலை 1992ஆம் ஆண்டு சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழில் ச. திலகம் வெளியிட்டுள்ளார்.

திருநீலகண்டர் பள்ளு

அறுபத்து நான்கு நாயன்மார்களில் ஒருவரான திருநீலகண்டரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு 'திருநீலகண்டர் பள்ளு' அமைந்துள்ளது. இது 16 பதினான்குசீர் கழிநெடிலடியாசிரிய விருத்தத்தாலானது. ஒவ்வொரு பாடலின் ஈற்றிலும் 'பள்ளீரே' என்ற சொல் மகுடமாக அமைந்துள்ளது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை 1977ஆம் ஆண்டு தேனோலை இதழில் கொடுமுடி சண்முகப் பிரகதம் வெளியிட்டுள்ளார்.

திருநூற்றந்தாதி

அவிரோதியாழ்வாரின் 'திருநூற்றந்தாதி' 100 கட்டளைக் கலித்துறையாலானது. இதுவொரு அருகக்கடவுள் துதியாகும். இதில் சொல் நயமும், தொடை நயமும், பொருள் நயமும் மிகச் சிறந்துள்ளது. இந்நூலுக்குப் பழையவுரை ஒன்றுண்டு. இந்நூல் சைனர்களால் பெரிதும் போற்றப்படுகிறது. இந்நூல் மூலப் பதிப்பாக 1883ஆம் ஆண்டு காஞ்சிபுரம் இயற்றமிழ் விளக்க அச்சுக்கூடம் வெளியிட்டுள்ளது. இந்நூல் பழையவுரை ஒன்று பெற்றுள்ளது. இவ்வுரையுடன் ரா. இராகவையங்கார் 1903ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழ்ப் பகுதிகளில் வெளியிட்டு உள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு செந்தமிழ் வெளியீடு 7ஆவதாக 1905, 1935ஆம் ஆண்டுகளில் முறையே முதல் மற்றும் இரண்டாம் பதிப்பு வெளிவந்துள்ளது. 1955ஆம் ஆண்டு சென்னை, ஜைன சித்தாந்த நூல் நிலையம் மூலமும் உரையு மாக ஒரு பதிப்பை வெளியிட்டுள்ளது.

திருநெறி விளக்கம்

சம்பந்த சரணாலயர் என்கின்ற காழிக் கண்ணுடைய வள்ளலாரின் மாணாக்கர் ஒருவரால் இயற்றப்பெற்ற 'திருநெறி விளக்கம்' 177 விருத்தத்தாலானது. சிவப்பிரகாசரின் பாடல் களில் வரும் சொற்களையும் தொடர்களையும் இந்நூலாசிரியர் பலவிடங்களில் அப்படியே பயன்படுத்தி யுள்ளார். இந்நூலைத் தி.கி. நாராயணசாமி நாயுடு 1959-60ஆம் ஆண்டு 'சித்தாந்தம்' இதழ்ப் பகுதிகளில் வெளியிட்டுள்ளார். இதன்பிறகு இராம. கோவிந்தசாமிப் பிள்ளை தம்முடைய உரையுடன் 1959ஆம் ஆண்டு 'சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ்'ப் பகுதிகளில் வெளியிட்டுள்ளார். இவ்விதழ்ப் பதிப்பு 1963, 1980ஆம் ஆண்டுகளில் சரஸ்வதிமகால் நூலகம் வெளியிட்ட 'வள்ளலார் பிரபந்தங்கள்' எனும் தொகுப்பு நூலில் இடம்பெற்றுள்ளது. இதற்குப் பிறகு 1963ஆம் ஆண்டு இராம. கோவிந்தசாமிப் பிள்ளையின் உரையைச் சரஸ்வதிமகால் நூலகம் தனிநூற் பதிப்பாக வெளியிட்டுள்ளது.

திருப்பணிமாலை

ஞானதேசிகம் பிள்ளையின் 'திருப்பணிமாலை' 106 பாடல்களைக் கொண்டு குறையுடையதாகத் திகழ்கின்றது. மதுரையிலுள்ள திருவாலவாயுடையார் கோயிலில் நடந்த திருப்பணிகள் குறித்து இந்நூல் கூறுகின்றது. இதைத் 'திருவாலவாயுடையார் திருப்பணிமாலை' என்றும் கூறுவர். திருவாலவாயர் திருக்கோயில், திருக்கோபுரம், மண்டபம், பொய்கை, வாகனம் முதலிய சிவதர்மங்கள் இன்ன காலத்து இன்ன இன்னாரால் இவ்வாறு இயற்றப்பெற்றன என்பதை முறைப்படத் தொகுத்துரைப்பதாக இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலைப் பொ. பாண்டித்துரை தேவர் தம்முடைய குறிப்புரையுடன் 1908-09ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழ்ப் பகுதிகளில் தனிப்பக்க எண்ணுடன் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1909ஆம் ஆண்டு செந்தமிழ் வெளியீடு 27ஆவதாக முதற்பதிப்பும், 1929ஆம் ஆண்டு மூன்றாம் பதிப்பும் என வெளிவந்துள்ளது.

திருப்பதிக்கோவை

திருவரங்கத்தமுதனாரின் 'திருப்பதிக்கோவை' 40 கலிவெண்பாவாலானது. திருமால் கோயில் கொண்டருளும் திருவரங்கம் முதலிய வைணவத் திருப்பதிகள் நூற்றெட்டையும் இந்நூல் கோவைப்படுத்திக் கூறுகின்றது. கோவை இலக்கியத்திற்குரிய இலக்கணம் சிறிதும் இல்லாமல் பெயர் அளவில் மட்டும் கோவை பெற்ற இலக்கியங்களையும் தமிழிலக்கிய உலகில் காணமுடிகிறது. கோக்கை, வரிசை என்ற அடிப்படையில் 'கோவை' என்பது பயன்படுத்தப்பெற்றுள்ளது. நாயன்மார் தேவாரம் பாடிய தலங்களையும், ஆழ்வார் மங்களாசாசனம் செய்தருளிய தலங்களையும் முறையாகத் தொகுத்துக் கூறுவதைத் 'திருப்பதிக்கோவை' என்பர். இவற்றை முறையே சைவ திருப்பதிக்கோவை, வைணவ திருப்பதிக்கோவை என இரண்டாகப் பிரிப்பர். திருமால் கோயில் கொண்டருளும் திருவரங்கம் முதலிய 108 வைணவத் திருப்பதிகளைக் கோவைப்படுத்திக் கூறும் 'திருப்பதிக்கோவை' (40)யை 1947ஆம்

ஆண்டு 'செந்தமிழ்' இதழில் ரெ. இராம ஐயங்கார் வெளியிட்டுள்ளார். இதேபோல் கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியாரின் 'திருப்பதிக் கோவை'யை 1899ஆம் ஆண்டு க. கிருஷ்ணசாமி உபாத்தியாயர் வெளியிட்டுள்ளார். இது தேவாரம் பாடல்பெற்ற தலங்கள் குறித்தது ஆகும்.

திருப்பரங்கிரிக் குமரனூசல்

திருஎவ்வுளூர் இராமசாமி செட்டியாரின் 'திருப்பரங் கிரிக் குமரனூசல்' காப்பு வெண்பா 1, நூல் 11 எண்சீர் விருத்தத்தாலானது. திருப்பரங்கிரியில் கோயில் கொண்டிருக்கும் முருகப் பெருமான் மீது இந்நூல் பாடப்பெற்றுள்ளது. 'திருப்பரங்கிரிக்கரசே யாடிரூசல்' என்ற ஈற்றுத்தொடரை ஒவ்வொரு பாடலும் மகுடமாகப் பெற்றுள்ளது. முருகப் பெருமானின் திருவிளையாடல்கள், பெருமைகள், சிறப்புகள் எனப் பலவற்றைக் கூறி ஊஞ்சல் ஆட்டுவதாக இந்நூல் அமைக்கப்பெற்றுள்ளது. இந்நூல் 1901ஆம் ஆண்டு 'ஞான போதினி' இதழில் வெளிவந்துள்ளது.

திருப்பரங்கிரிக் குமரன் தாலாட்டு

திருஎவ்வுளூர் இராமசாமிச் செட்டியாரின் 'திருப்பரங்கிரிக் குமரன் தாலாட்டு' 50 கலித்தாழிசையாலானது. திருப்பரங்கிரியில் கோயில் கொண்டுள்ள குமரப் பெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பெற்றுள்ளது. இதில் முருகப் பெருமானின் சிறப்பியல்புகளையும் அவனைப் போற்றும் நூல்களையும் சிறப்பித்துக் கூறுகின்றது. இந்நூல் 1900ஆம் ஆண்டு ஞானபோதினி இதழில் வெளிவந்துள்ளது.

திருப்பழனி முருகக்கடவுள் கலவி மகிழ்தல் வண்ணம்

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் 'திருப்பழனி முருகக்கடவுள் கலவி மகிழ்தல் வண்ணம்' எனும் நூல் முருகனைத் தலைவியாகவும், தன்னைத் தலைவனாகவும் கொண்டு பேரின்ப அனுபவத்தைக் கூறுவதாகவும், முருகப் பெருமானின் பெருமைகளைக் கூறுவதாகவும் (ஆசிரியர்

கூற்றாக) அமைந்துள்ளது. இந்நூல் முத்தமிழ் ஆராய்ச்சிக்கூட வெளியீடாக 1929ஆம் ஆண்டு தவத்திரு கந்தசாமி சுவாமிகள் பதிப்பித்த 'வண்ணத்திரட்டு' எனும் திரட்டு நூலில் (மூலம் மட்டும்) இடம்பெற்றுள்ளது. பின்னர் இல. பழனிச்சாமியின் உரையுடன் 1998-99ஆம் ஆண்டு 'மாதாந்திர அமுதம்' இதழ்ப் பகுதிகளில் வெளிவந்துள்ளது.

திருப்புகலூர் அருட்பா மாலை

அழகிய சிற்றம்பல தேசிகரின் 'திருப்புகலூர் அருட்பா மாலை' 10 பாடல்களாலானது. திருப்புகலூரில் கோயில் கொண்டுள்ள பெருமான் மீது இந்நூல் பாடப்பெற்றுள்ளது. 'எனக் கருடந்தது மெவ்வணமே' என்ற ஈற்றுத் தொடர் ஒவ்வொரு பாடலிலும் மகுடமாக அமைந்துள்ளது. திருப்புக லூரின் சிறப்பும் அங்கு வீற்றிருக்கும் இறைவனின் பெருமையும் சிறப்பாக இந்நூலில் சுட்டப்பெற்றுள்ளது. இந்நூலை 1938ஆம் ஆண்டு சித்தாந்தம் இதழில் திருவாரூர் எஸ். சோமசுந்தர தேசிகர் வெளியிட்டுள்ளார்.

திருப்புகழ் - வெளிவராத இருபாடல்கள்

அருணகிரிநாதரின் 'திருப்புகழ்' 16 ஆயிரம் பாடல்கள் கொண்டது என்பர். ஆனால் வ.சு. செங்கல்வராய பிள்ளை உரைப்பதிப்பில் 1304 பாடல்களும், சமாஜப் பதிப்பில் 1361 பாடல்களும் இடம்பெற்றிருக்கின்றன. இவையல்லாமல் ஏடுகளில் இன்னும் அச்சிடப்பெறாத பாடல்கள் பல இருக்கின்றன. அவற்றுள் இருபாடல்கள் பின்வருமாறு:-

"பூரி சம்பக மாலா பூதர
லோல குந்தள பாணீ கோபித
பூக தண்ட சுரேசா சாயகு முதுபால
போக கெந்துர சாலீ தூசர
சாரி சந்தன தூணீ பூஷித
வாச குங்கும கோலா மோதுர சககோச

பார பண்பத வேதா பாஷண
சீல சம்பட லாவீ சாலிம
பாவ சஞ்சய நாநா லோசன நவரேக
பார்மதஞ் செயுந் தாரா சாதுர
சாலி துன்பது காமா னாமற
பாஷணஞ் செய யாயா மாமிகக் கர்மதேவ
சூர கண்டன வேலா லாலிச
பாணி பங்கச நீகா ராசல
சூத புங்கவை யானா சேர்விட
சோடி சந்திர நீர்நா டோசக
டோம குண்டலி யுதாரா பாடண
சூர நந்திமி கேதா கோமள பதநீச
வீர சம்புகு தேவா நீகவி
வேணு குண்டகு ரோரோ பாடல
மேதை யந்த்ரச காயா ராயதர் சுகராய
வேத பண்டித சேதோ மாவென
பாவை கண்டிக லோதா காதிப
வீர பங்கதி ராதீ நாயக பெருமாளே"
"தினமொரு கவிதை யேனு
மனதொடு பகர்கி லாத
சிறியனு மடிமை யாக எளிதோதான்
இனமொரு சிறிது நீயு
வருள் செய்தே புவியின்மீதி
லினிதுறு மடிமை யாக வருள்கூர்வாய்
கனதன வெயினர் பாவை
நலமுறை மருவு நாத
கடிகமழ் குரவ மாலை புனைமார்பா
முனமொரு தரணி சாய
வசுரர்கள் கிளைகள் சாய
முனையயில் கடவு வீர முருகோனே"

இதுவரை அச்சில்வராத 'பூரி சம்பக மாலா பூதர', 'தினமொரு கவிதை யேனு'ம் எனத் தொடங்கும் அருணகிரி

யாரின் இரண்டு திருப்புகழ்ப் பாடல்கள் 1937ஆம் ஆண்டு சித்தாந்தம் இதழில் வெளிவந்துள்ளன.

திருப்புல்லாணி எம்பெருமான் மீது பாடிய தாலாட்டு

செந்தமிழ் வீரராகவனின் 'திருப்புல்லாணி எம்பெருமான் மீது பாடிய தாலாட்டு' 21 கலித்தாழிசைகளாலானது. திருப்புல்லாணியில் திருக்கோயில் கொண்டிருக்கும் எம்பெருமானின் மணக்கோல நிகழ்ச்சியில் நடைபெறும் 'தாலாட்டே' இந்நூல். இதில் எம்பெருமானின் பெருமைகள் சிறப்பாகக் கூறப்பெற்றுள்ளன. இந்நூலை 1961ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் மு. பசுபதி வெளியிட்டுள்ளார்.

திருப்புல்லாணி எம்பெருமான் மீது பாடிய திருவனந்தல்

செந்தமிழ் வீரராகவனின் 'திருப்புல்லாணி எம்பெருமான் மீது பாடிய திருவனந்தல்' 11 பாடல்களாலானது. திருப்புல்லாணியில் கோயில் கொண்டு இருக்கும் எம்பெருமானைத் துயிலெழுப்பப் பாடுவதாக இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலை 1961ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் மு. பசுபதி வெளியிட்டுள்ளார்.

திருப்புல்லாணி எம்பெருமான் மீது பாடிய நலங்கு

செந்தமிழ் வீரராகவனின் 'திருப்புல்லாணி எம்பெருமான் மீது பாடிய நலங்கு' 77 கலித்தாழிசைகளாலானது. திருப்புல்லாணியில் வீற்றிருக்கும் எம்பெருமானுக்கும் தாயாருக்கும் நடைபெற்ற மணக்கோல நிகழ்ச்சியில் இடம் பெற்ற 'நலங்கு'ப் பகுதியை விளக்குவதாக இந்நூல் அமைந்து உள்ளது. இந்நூலை 1961ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் மு. பசுபதி வெளியிட்டு உள்ளார்.

திருப்புல்லாணி எம்பெருமான் மீதும் பதுமாசனித் தாயார் மீதும் பாடிய கிளைப்பாட்டு

செந்தமிழ் வீரராகவனின் 'திருப்புல்லாணி எம்பெருமான் மீதும் பதுமாசனித் தாயார் மீதும் பாடிய கிளைப்பாட்டு' 79 கலித்தாழிசைகளாலானது. இதில் பதுமாசனித் தாயாரின் பிறப்பு, வளர்ப்பு, மணம் முடித்தல், மணச்சீர் செய்தல், மணப்பந்தலில் வந்திருந்தோர் வருணனைகள் போன்றன சுட்டப்பெற்றுள்ளன.

பாட்டுடைத் தலைவனின் பிறப்பு முதல் மணக்கோலக் காட்சி வரை நிகழ்ந்த நிகழ்வுகளைக் கலித்தாழிசையால் பாடுவது 'கிளைப்பாட்டு' ஆகும். திருப்புல்லாணியில் கோயில் கொண்டிருக்கும் எம்பெருமான் தெய்வச்சிலையாருக்கும் தாயார் பதுமாசனிக்கும் நிகழ்ந்த மணக்கோலக் காட்சியில் பதுமாசனித் தாயாரின் பிறப்பு முதல் மணச்சீர் செய்தல் வரை கூறப்பெற்ற 'திருப்புல்லாணி எம்பெருமான் மீதும் பதுமாசனித் தாயார் மீதும் பாடிய கிளைப்பாட்டு' (79 தாழிசை) எனும் நூலை 1961ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் மு. பசுபதி வெளியிட்டு உள்ளார்.

திருப்புல்லாணி செகநாதர் பேரில் ஊசல்

'திருப்புல்லாணி செகநாதர் பேரில் ஊசல்' எனும் இந்நூல் பத்து எண்சீர் ஆசிரிய விருத்தத்தாலானது. இராமாயணக் கதையின் சுருக்கமாக இந்நூல் அமைக்கப் பெற்றுள்ளது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை 1942ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழில் கி. இராமாநுஜையங்கார் வெளியிட்டுள்ளார்.

திருப்புல்லாணி செகநாதர் பேரில் சிந்து

16 சந்தக் குழிப்புகளுடன் அமைந்துள்ள இந்நூல் திருப்புல்லாணியில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள செகநாதரைப் பாட்டுடைத் தலைவராகவும், குப்பையர் என்பவருடைய மகளைக் கிளவித் தலைவராகவும் கொண்டு,

தலைவனைப் பிரிந்து விரகதாபமிக்க ஒரு தலைவி கூற்றாக இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை 1942ஆம் ஆண்டு செந்தமிழ் இதழில் கி. இராமாநுஜையங்கார் வெளியிட்டுள்ளார்.

திருப்புல்லாணி செகநாதர் பேரில் வண்ணம்

'திருப்புல்லாணி செகநாதர் பேரில் வண்ணம்' எனும் இந்நூல் திருப்புல்லாணியில் கோயில் கொண்டிருக்கும் செகநாதப் பெருமான் மீது பாடப்பெற்றது ஆகும். இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலைக் கி. இராமாநுஜ ஐயங்கார் செந்தமிழ் இதழில் 1942ஆம் ஆண்டு வெளியிட்டு உள்ளார்.

திருப்புல்லாணி செகநாதர் பேரில் விண்ணப்பம்

'திருப்புல்லாணி செகநாதர் பேரில் விண்ணப்பம்' எனும் இந்நூல் கட்டளைக் கலித்துறையாலான காப்பு 1, நூல் 128 கலிவெண்பா ஆக 129 பாடல்களாலானது. திருப்புல்லாணித் தலத்தின் பெருமைகளும், இங்குள்ள தீர்த்த விசேடங்களும், இத்தலத்து இறைவனை வணங்கி அருள் பெற்றோர் பெயர் முதலிய விவரங்களும் இந்நூலில் விரித்துரைக்கப்பெற்றுள்ளன. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை 1942ஆம் ஆண்டு செந்தமிழ் இதழில் கி. இராமாநுஜையங்கார் வெளியிட்டுள்ளார்.

திருப்புல்லாணி நொண்டி நாடகம்

செந்தமிழ் வீரராகவனின் 'திருப்புல்லாணி நொண்டி நாடகம்' செய்யுள் நடையாலானது. திருப்புல்லாணியில் கோயில் கொண்டுள்ள கோதண்டராமனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு இந்நூல் பாடப்பெற்றுள்ளது. இந்நூலைக் கி. இராமாநுஜையங்கார் தம்முடைய குறிப்புரையுடன் 1951ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழ்ப் பகுதிகளில் தனிப்பக்க எண்ணுடன் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1952ஆம் ஆண்டு செந்தமிழ் வெளியீடாக வெளிவந்துள்ளது.

இப்பதிப்பினைத் தொடர்ந்து கி. இராமானுஜையங்காரின் மறுபதிப்பு 1968ஆம் ஆண்டு திருநெல்வேலி திருஞாந முத்திரைக்கோவையின் 30ஆவது வெளியீடாக வெளிவந்து உள்ளது.

திருப்புல்லாணி பதுமாசனித் தாயார் பேரில் ஊசல்

திருப்புல்லாணியில் கோயில் கொண்டு எழுந்தருளி யுள்ள பதுமாசனித் தாயார் மீது பாடப்பெற்றுள்ள இந்நூல் ஆறு எண்சீர் விருத்தத்தாலானது. இதில் பதுமாசனித் தாயாரின் பெருமைகள், அவரை ஊஞ்சலாட்டியவர்கள் யார்யார்? போன்ற விவரங்களை இந்நூல் சிறப்பித்துக் கூறுகின்றது. இந்நூலை 1942ஆம் ஆண்டு ‘செந்தமிழ்’ இதழில் கி. இராமானுஜையங்கார் வெளியிட்டுள்ளார்.

திருப்புல்லாணி மாலை

திருப்புல்லாணியில் கோயில் கொண்டுள்ள தெய்வச் சிலையார் மீது பாடப்பெற்றுள்ளதே ‘திருப்புல்லாணி மாலை’ ஆகும். இது, காப்பு 1, அவையடக்கம் 1, நூல் 133 கட்டளைக் கலித்துறையாலானது. திருக்குறளில் உள்ள ஒவ்வோர் அதிகாரத்திலிருந்தும் ஒரு திருக்குறளை மேற்கோளாக எடுத்துக் கொண்டு அதற்கிசைய இந்நூல் பாடப்பெற்றுள்ளது. இந்நூலை நாராயணையங்கார் 1915ஆம் ஆண்டு ‘செந்தமிழ்’ இதழ்ப் பகுதிகளில் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1915ஆம் ஆண்டு செந்தமிழ் வெளியீடு 38ஆவதாக வெளிவந்து உள்ளது.

திருமயிலாபுரிப்பத்து

திருமயிலாபுரியில் வீற்றிருக்கும் அருகக்கடவுளைப் போற்றித் துதிக்கும் இந்நூல் 10 பாடல்களாலானது. ‘அப்பனை யடைந்தே னருந்துய ரிடும்பையில் வருந்தி யடையேனே’ என்ற ஈற்றுத் தொடர் ஒவ்வொரு பாடலிலும் மகுடமாக அமைக்கப் பெற்றுள்ளது. திருமயிலாபுரியில் இருக்கும் கடவுளை யார் அடைக்கலம் புரிவரோ அவர் துயரிலிருந்து நீங்குவர் என்ற

கருத்து ஒவ்வொரு பாடலிலும் அமையுமாறு இந்நூல் அமைக்கப் பெற்றுள்ளது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை 1979ஆம் ஆண்டு முக்குடை இதழில் மு.கோ. இராமன் வெளியிட்டுள்ளார்.

திருமயிலை உவமை வெண்பா

திருநெல்வேலி நடலிங்க கவிராயரின் 'திருமயிலை உவமை வெண்பா' காப்பு 1, நூல் 129 வெண்பாக்களாலானது. மயிலைப் பதிக்கும், மன்மதன், தாமரைப் பூ, வேதம் முதலான பல பொருள்களுக்கும் உவமை அமையுமாறு இந்நூல் பாடப்பெற்றுள்ளது. இந்நூல் 1953ஆம் ஆண்டு சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகக் காப்பாட்சியர் தி. சந்திரசேகரன் 'திருமயிலைப் பிரபந்தங்கள்' எனும் தொகுப்பு நூல் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலக வெளியீடாக வெளியிட்டுள்ளார். இத்தொகுப்பு நூலில் ஒன்றாக இந்நூல் இடம்பெற்றுள்ளது. பிறகு இந்நூலக அனுமதியுடன் இந்நூல் 1954-55ஆம் ஆண்டு 'குமரகுருபரன்' இதழ்ப் பகுதிகளில் வெளிவந்துள்ளது.

திருமயிலை யமகவந்தாதி

தாண்டவராய கவிராயரின் 'திருமயிலை' யமகவந்தாதி' காப்பு 1, நூல் 100, வாழ்த்து 1 ஆக 102 பாடல்களாலானது. இது, தொண்டை நாட்டிலுள்ள தேவாரம் பாடல்பெற்ற சிவதலங்களுள் ஒன்றாகிய மயிலாப்பூரில் கோயில் கொண்டுள்ள ஸ்ரீகபாலீசுவரர் மீது பாடப்பெற்றது. இந்நூலில் தலச்செய்திகள் பல அங்கங்கே இடம்பெற்றுள்ளன. மேலும் மூவர், சோமாசிமாறர், சிறுத்தொண்டர், அரிவாட்டாயர், நமிநந்தி, இயற்பகையார், கண்ணப்பர், மூர்க்கர், காரைக்காலம்மையார் ஆகியோர் பற்றிய செய்திகளும் இடையிடையே இந்நூலுள் இடம்பெற்றுள்ளன. இந்நூலை 1932ஆம் ஆண்டு (மூலம் மட்டும்) சென்னை சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியிட்டுள்ளது. இந்நூலுக்கு நூலாசிரியர் எழுதிய உரை

ஒன்றுண்டு. இவ்வுரையுடன் உ.வே. சாமிநாதையர் 1935-36ஆம் ஆண்டு 'சிவநேசன்' இதழ்ப் பகுதிகளில் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு சிவநேசன் வெளியீடாக 1936ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது.

திருமலையாண்டவர் குறவஞ்சி

திருநெல்வேலி - பண்புளிப்பட்டிணத்தில் திருமலை என்னும் குன்றின் மீது எழுந்தருளியிருக்கும் முருகப்பெருமான் மீது 'திருமலையாண்டவர் குறவஞ்சி' பாடப்பெற்றுள்ளது. இதில் சிந்து, விருத்தம் ஆகிய பா வகைகள் இடம்பெற்றுள்ளன. வழக்குச் சொற்கள் பலவும் இதனுள் விரவி வந்துள்ளன. இந்நூல் முற்றும் கிடைக்கவில்லை. சிங்கனும் சிங்கியும் உரையாடும் 90ஆம் பாடலின் முற்பகுதி வரையே இதுவரை கிடைத்துள்ளது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை உ.வே. சாமிநாதையர் தம்முடைய குறிப்புரையுடன் 1937-38ஆம் ஆண்டு 'கலைமகள்' இதழ்ப் பகுதிகளில் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1938ஆம் ஆண்டு கலைமகள் வெளியீடு 9ஆவதாக வெளிவந்துள்ளது.

திருமலை வெண்பா

புறத்திரட்டில் காணப்பெறக் கூடிய 'திருமலை வெண்பா'வில் 26 பாடல்களே கிடைத்துள்ளன. இந்நூல் கடவுள் வாழ்த்து, புதல்வரைப் பெறுதல், அன்புடைமை, விருந்தோம்பல், இனியவை கூறல், செய்ந்நன்றி அறிதல், நடுவுநிலைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, பிறனில் விழையாமை, அழுக்காறாமை, வெஃகாமை, தீவினையச்சம், புலால் மறுத்தல், வெகுளாமை, கொல்லாமை, தெரிந்து செயல்வகை, இடனறிதல், ஒற்றாடல், ஆள்வினையுடைமை, மன்னரைச் சேர்ந்தொழுகல், பொருள் செயல்வகை, நட்பிற் பிழைபொறுத்தல், கூடாநட்பு, பகைத்திறந்தெரிதல், படைச் செருக்கு ஆகிய தலைப்பு ஒவ்வொன்றும் ஒரு வெண்பாவைப் பெற்று அமைந்துள்ளது. ஒவ்வொரு வெண்பாவும் இரண்டு பகுதிகளாக அமைந்துள்ளது. முதல் இரண்டு அடிகள்

தலைப்புக்கு உகந்த திருமலை எண்பாணின் செய்தியாக அமைத்து தனிச்சொற்கு முன் சீரானது 'திருமலைக் கொழுந்தே' என்ற மகுடத்தை ஒவ்வொரு பாடலும் பெற்றுள்ளது. இரண்டாவது பகுதியான 3,4 அடிகள் தனிச்சீர் பெற்று முன்னதன் செய்திக்குகந்த திருக்குறள் காட்டப்பெற்று உள்ளது. இந்நூலை டி.வி. சதாசிவப் பண்டாரத்தார் 1929ஆம் ஆண்டு 'தமிழ்ப் பொழில்' இதழில் வெளியிட்டுள்ளார். பின்னர் இந்நூல் எஸ். வையாபுரிப்பிள்ளை தொகுத்துச் சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்ட புறத்திரட்டிலும் (1939), இரா. இளங்குமரனைப் பதிப்பாசிரியராகக் கொண்டு சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் வெளியிட்ட புறத்திரட்டிலும் (1972) இடம்பெற்றுள்ளது.

திருமாலிருஞ்சோலைமலை அழகர் பிள்ளைத்தமிழ்

வேம்பத்தூர்ச்சங்கப் புலவர் பாடியருளிய 'திருமாலிருஞ் சோலைமலை அழகர் பிள்ளைத்தமிழ்' பாயிரம் 19, நூல் 112 ஆக 131 பாடல்களாலானது. திருமாலிருஞ்சோலைமலையில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அழகர் பெருமான் மீது இப்பிள்ளைத்தமிழ் பாடப்பெற்றுள்ளது. இந்நூல், வேங்கடாசல முதலியாரால் பல பிரதிகளைக் கொண்டு ஆராய்ந்து பிழைகளைத் திருத்தித் தமது சரஸ்வதி அச்சுக் கூடத்தில் சாலிவாகன சகாப்தம் 1759 துர்முகி வருடம்(கி.பி.1837) பதிப்பிக்கப்பெற்றுள்ளது. அதன் பிறகு நாராயணையங்காரால் 1919ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழ்ப் பகுதிகளில் வெளியிடப்பெற்றுள்ளது. பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1919ஆம் ஆண்டு செந்தமிழ் வெளியீடு 40ஆவதாக வெளிவந்துள்ளது. இந்நூல் 1920ஆம் ஆண்டு வேங்கடசாமி முதலியாரால் 'அழகர் பிள்ளைத்தமிழ்' என்று வெளியிடப் பெற்றுள்ளது.

திருமுருகாற்றுப்படை

நக்கீரரின் 'திருமுருகாற்றுப்படை' 317 அகவலடிகளா லானது. இந்நூல் ஆறு பகுதிகளாக அமைக்கப்பெற்றுள்ளது. முதற் பகுதியில் திருப்பரங்குன்ற மலைக்கோயில், முருகன் திருக்கோலம், சூரனுடன் மிடற்றிய போர் ஆகியன விளக்கப் பெற்றுள்ளன. இரண்டாம் பகுதியில் முருகனின் ஆறுமுகங்களின்

குறிப்பும், பன்னிரு கைகளின் செயலும், திருச்செந்தூர்த் தலச்சிறப்பும் அமைக்கப்பெற்றுள்ளன. மூன்றாம் பகுதியில் முருகனை வழிபடும் முனிவர் பெருமையும், பழனியில் வழிபட வரும் மகளிர் இயல்பும் கூறப்பெற்றுள்ளன. நான்காம் பகுதியில் ஏரகத்தில் வழிபடுவோரைப் பாடவும், ஐந்தாம் பகுதியில் மலைநாட்டு மக்கள் குரவைக் கூத்தாடி இறையை வழிபடுவதையும், இறுதிப் பகுதியில் முருகப்பெருமான் எழுந்தருளி அருள்பாலிக்கும் இடங்கள், அவனிடம் அருள் பெறும் முறை, பழமுதிர்ச் சோலையின் சிறப்பு ஆகியவற்றைப் பற்றியும் விளக்கப் பெற்றுள்ளன. இந்நூலுக்கு 50க்கும் மேற்பட்டோர் உரை வரைந்திருக்கின்றனர். நச்சினார்க்கினியர், பரிமேலழகர், உரையாசிரியர், கவிப்பெருமாள், பரிதியார் போன்றோரின் உரைகள் சுவடிகளில் உள்ளன.

இந்நூலுக்குப் பழைய மற்றும் புத்துரைகள் பல உண்டு. நச்சினார்க்கினியர் (1889), பரிமேலழகர் (1924, 1945), உரையாசிரியர் (1933, 1946 - 4ம் பதிப்பு), கவிப்பெருமாள் (1987), பரிதியார் (1987) போன்றோரின் பழைய உரைப்பதிப்புகளும், ஆறுமுக நாவலர் தொடங்கி இந்நூலுக்கு நூறுக்கும் மேற்பட்ட புத்துரைகளும் உண்டு. பழைய உரைகாரரர் ஐவர் உரைத் தொகுப்பாகக் கு. சுந்தரமூர்த்தி 1987ஆம் ஆண்டு ஒரு பதிப்பு கொண்டு வந்துள்ளார். இத்தனிநூற் உரைப்பதிப்புகளல்லாமல் பருவ இதழ்களில் பழைய உரைகளும் புத்துரைகளும் வெளிவந்திருக்கின்றன. 1975ஆம் ஆண்டு 'குமரகுருபரன்' இதழ்ப் பகுதிகளில் சிக்கல் சி. சானகிராமனின் புத்துரை வெளிவந்துள்ளது. உரையாசிரியரின் உரையை 1933ஆம் ஆண்டு எஸ். வையாபுரிப் பிள்ளை 1940-43ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழ்ப் பகுதிகளில் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1943ஆம் ஆண்டு செந்தமிழ் வெளியீடு 68ஆவதாக வெளிவந்து உள்ளது. இத்தனிநூற் உரைப்பதிப்பன்றி மூலப் பதிப்புகளாக 50க்கும் மேற்பட்ட பதிப்புகள் வெளிவந்திருக்கின்றன. மேலும் பதினோராந் திருமுறை மற்றும் பத்துப்பாட்டுப் பதிப்புகளிலும் இந்நூல் இடம்பெற்றிருக்கின்றது.

திருமூலர் தியானக் குறிப்பு

திருமூல நாயனாரின் 'தியானக் குறிப்பு' 28 பாடல்களாலானது. இதைத் 'திருமந்திரமாலை' என்றும் அழைப்பர். இதுவரை இப்பகுதி திருமந்திரத்தில் அச்சில் வெளிவரவில்லை. இதில் 'நாட்டமிரண்டு நடுமூக்கில்' எனத் தொடங்கும் முதற் பாடல் மட்டும் திருமந்திரம் மூன்றாந் தந்திரத்தில் ஏழாவதாகத் தியானப் பகுதியில் ஏழாம் பாடலாக இடம்பெற்றுள்ளது. ஏனைய பாடல்கள் திருமந்திரத்தில் இடம்பெறவில்லை என்றே தெரிகிறது. இந்நூல் சைவக் கொள்கையைச் சார்ந்ததாய்த் தியானத்தின் முறையினையும் அதனாலடையும் பயனையும் குறிப்பாய் எடுத்துக் கூறுகின்றது. இந்நூலை 1949ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் வ.ரா. கல்யாணசுந்தரம் வெளியிட்டு உள்ளார்.

திருமேற்றிசையந்தாதி

திருமேற்றிசை என்பது திருநறுங்கொண்டை எனும் தலத்தைக் குறிக்கும். இது தீபங்குடிக்கு அருகிலுள்ளது. இத்திருப்பதியில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள அருகப்பெருமான் மீது அந்தாதித் தொடையாக 'திருமேற்றிசை அந்தாதி' பாடப்பெற்று உள்ளது. இது காப்புச் செய்யுள் நீங்கலாக 101 கட்டளைக் கலித்துறையாலானதாகும். இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை மயிலை. சீனி. வேங்கடசாமி 1960ஆம் ஆண்டு 'நல்லறம்' இதழில் வெளியிட்டு உள்ளார். பின்னர் இந்நூலை 38 ஆண்டுகள் கழித்து, கோ. ஜம்புகுமாரன் 1998ஆம் ஆண்டு ஜைன இளைஞர் மன்ற வெளியீடாக வெளியிட்டுள்ளார்.

திருவள்ளுவர் பிள்ளைத்தமிழ்

திரு.நா. கனகராஜையரின் 'திருவள்ளுவர் பிள்ளைத் தமிழ்' விநாயகர் வணக்கம், கலைமகள் வணக்கம், குரு வணக்கம், அவையடக்கம், உலகப் புலவர் குழு வணக்கம், வாழ்த்துப்பாடல் ஆகியன முறையே ஒவ்வொரு பாடலாலும், நூல் 101 பாடல்களாலுமானது. பொய்யாமொழிப் புலவன்

வள்ளுவனைப் பற்றிய இப்பிள்ளைத்தமிழில் வள்ளுவப் பெருந்தகை கையாண்ட சொற்கள் பலவிடங்களில் அப்படியே கையாளப்பெற்றுள்ளன. இந்நூலை 1968 மற்றும் 1969ஆம் ஆண்டுகளில் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் ஆர்.கே. பார்த்தசாரதி & பூ. சுப்பிரமணியம் ஆகியோர் வெளியிட்டுள்ளனர்.

திருவாசக அனுபூதி

மாணிக்கவாசகப் பெருமானின் 'திருவாசக'த்தை அனுபவித்துப் படித்தவர், அவ்வனுபவத்தை 'அனுபூதி'யாகப் பாடியுள்ளார். இதுவே 'திருவாசக அனுபூதி' ஆகும். இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலுக்குச் சீர்காழி தாண்டவராயர் உரை ஒன்று வரைந்துள்ளார். இந்நூல் சீகாழித் த்தாண்டவராயர் உரையுடன் 1965-1969ஆம் ஆண்டு குமரகுருபரன் இதழ்ப் பகுதிகளில் வெளிவந்துள்ளது. இறையனுபவத்தினைக் கொண்டு வெளிவரும் அனுபூதிகளுக்கு நடுவில் இறைநூல் தொடர்பான அனுபவத்தால் உருவான 'திருவாசக அனுபூதி' ஒரு புதுமையான இலக்கியப் போக்கிற்கு வழிவகுக்கின்றது எனலாம்.

திருவாரூருலா

அந்தகக்கவி வீரராகவ முதலியாரின் 'திருவாரூருலா' காப்பு வெண்பா 2, அவையடக்கம் வெண்பா 1, நூல் கண்ணிகள் 528, இறுதியில் நேரிசை வெண்பா 1, நூற்பயன் 1, சிறப்புப்பாயிரங்கள் 2 ஆக 532 பாடல்களாலானது. பாட்டுடைத் தலைவராகிய திருவாரூர்ப் புற்றிடங்கொண்ட பெருமானுடைய பெருங்கருணைத் திறமும் தியாகேசரது அருமைத் திருவிளையாடல்களும் தீர்த்த விசேடங்களும், இங்கே வழிபட்டுப் பேறுபெற்ற சிவகணங்கள், பெருந்தேவர், இந்திரன் முதலிய திக்குப் பாலகர்கள், பிற தேவர்கள், முனிவர்கள், முசுகுந்த சக்ரவர்த்தி முதலிய அரசர்கள், ஏனைய அடியார்கள் என்னும் இவர்களால் பிரதிட்டிக்கப்பெற்ற மூர்த்திகளின் விசேடங்களும், வேறு தலபுராணங்களிலும் பிற நூல்களிலும் கூறப்பட்ட இத்தல சரிதங்களும் தேவார திருவாசக முதலிய

அருட்பாக்களிலுள்ள அருமைப் பிரயோகங்களும் வேறுள்ள தமிழ்நூற் பிரயோகங்களும், நாயன்மார்களுடைய அருமைச் செயல்களும், பலவகையான மடக்கணிகள் சிலேடைகள் கேட்டோர் வியத்தற்குரிய தொனி முதலியவையும், பண்டைக் காலத்தில் இத்தலத்திலிருந்த பரகர வகையார் இன்னார் இன்னார் என்பதும், இன்னும் எத்தனையோ பல அரியவையும் இந்நூலில் காணப்படுகின்றன. இந்நூலை உ.வே. சாமிநாதையர் தம்முடைய குறிப்புரையுடன் 1905ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழ்ப் பகுதிகளில் வெளியிட்டுள்ளார். பின்னர் இந்நூலை உ.வே. சாமிநாதையர் பல பிரதி ரூபங்களைக் கொண்டு பரிசோதித்து நூதனமாக எழுதிய அரும்பதவுரையுடன் 1910ஆம் ஆண்டு செந்தமிழ் வெளியீடாக வெளியிட்டுள்ளார். இவற்றின் இரண்டாம் பதிப்பு 1925ஆம் ஆண்டு வெளிவந்து உள்ளது.

திருவாரூர் இரட்டைமணிமாலை

இலக்கண விளக்க பரம்பரை திருவாரூர் சதாசிவ தேசிகரின் 'திருவாரூர் இரட்டைமணிமாலை' காப்பு - குறள் வெண்பா 1, நூல் 20 பாடல்களாலானது. திருவாரூரின் கண் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் மீது இந்நூல் பாடப்பெற்றுள்ளது. இதில் தியாகராசப் பெருமானின் சிறப்புகளும் பெருமைகளும் சுட்டப்பெற்று உள்ளன. இந்நூலை 1919ஆம் ஆண்டு செந்தமிழ் இதழில் திருவாரூர் எஸ். சோமசுந்தர தேசிகர் வெளியிட்டுள்ளார்.

திருவாரூர்க் கமலைப் பராசக்தி மாலை

திருவாரூரில் கோயில் கொண்டுள்ள கமலைப் பராசக்தி மீது பாடப்பெற்றதே 'திருவாரூர்க் கமலைப் பராசக்தி மாலை' என்னும் தோத்திர நூலாகும். இது காப்பு 1, நூல் 30 கலிவிருத்தத்தாலானது. பராசக்தியின் பெருமைகள் இந்நூலில் சிறப்பித்துக் கூறப்பெற்றுள்ளன. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை 1979ஆம் ஆண்டு திருக்கோயில் இதழில் ந.ரா. முருகவேள் வெளியிட்டுள்ளார்.

திருவாரூர் மும்மணிக்கோவை

11ஆம் திருமுறையில் இடம்பெற்றிருக்கும் சேரமான் பெருமாள் நாயனாரின் 'திருவாரூர் மும்மணிக்கோவை' 30 பாடல்களாலானது. ஆசிரியர், வெண்பா, கட்டளைக் கலித்துறை என்ற மூவகைப் பாடல்களால் அந்தாதித் தொடையிலமைந்த இந்நூல் திருவாரூர்ப் பெருமானைப் போற்றுகின்றது. இந்நூல் சி.கே. சுப்பிரமணிய முதலியாரின் விரிவுரையுடன் 1949-50ஆம் ஆண்டு 'ஞானசம்பந்தம்' இதழ்ப் பகுதிகளில் வெளிவந்துள்ளது. அதன் பிறகு இவ்விதழ்ப் பதிப்பு 1950ஆம் ஆண்டு ஞானசம்பந்தம் வெளியீடு 2ஆவதாக வெளிவந்துள்ளது. இவையல்லாமல் இந்நூல் பதினோராம் திருமுறைப் பதிப்புகளிலும் இடம்பெற்றுள்ளது.

திருவாவடுதுறைக் குருபரம்பரை

பூஜை. சுப்பிரமணியத் தம்பிரானின் 'திருவாவடுதுறைக் குருபரம்பரை' 151 அகவலடிகளாலானது. இந்நூல் திருவாவடுதுறையாதீன வரலாற்றை அறிவிப்பதாக அமைந்து உள்ளது. திருவாவடுதுறையாதீன குருமகா சந்நிதானங்கள் முதல் 14 பேருடைய வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் அவர்தம் நூல்களைப் பற்றியும் சுருக்கமாக இந்நூல் விளக்குகின்றது. இந்நூலை எஸ். அனவரத விநாயகம் பிள்ளை தம்முடைய குறிப்போடு 1939ஆம் ஆண்டு 'சித்தாந்தம்' இதழில் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பை அடியொற்றி மோ.கோ. கோவைமணி 'மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை ஆய்வுமாலை' (2000)யில் வெளியிட்டுள்ளார்.

திருவானைக்காவுலா

காளமேகப்புலவரின் 'திருவானைக்காவுலா' 461 கண்ணிகள், 2 வெண்பாக்கள் ஆக 463 பாடல்களாலானது. இந்நூல் சோழநாட்டில் காவேரி நதியின் கரையிலமைந்த ஆனைக்கா என்ற தலத்தில் எழுந்தருளியுள்ள ஜம்புநாதர், ஜம்புலிங்கம் என்று பெயர் பெற்றுள்ள வெண்ணாவலீசர் மீது பாடப்பெற்றுள்ளது. இது ஆனைக்காவுரை அண்ணலின் புகழ்

பேசுகின்றது. இறைவன் பவனி வருகையையும் பருவ மங்கையர் காதல் நிலையையும் சித்தரிப்பதாக இந்நூல் அமைந்துள்ளது. இந்நூல், பூவை.எஸ். கலியாணசுந்தர முதலியார் பார்வையில் ஓ. முத்தையா பிள்ளையால் 1890ஆம் ஆண்டு பதிப்பிக்கப் பெற்றுள்ளது. இப்பதிப்பின் குறையினைச் சுட்டி 1897ஆம் ஆண்டு 'உண்மை விளக்கம் எனும் சித்தாந்த தீபிகை' இதழ்ப் பகுதிகளில் வெளிவந்துள்ளது. 1890ஆம் ஆண்டு வெளியான பதிப்பினை ஆதாரமாகக் கொண்டு மு. அருணாசலம் குறிப்புரை, நூன்முகம், பொருளகராதி ஆகியவற்றுடன் 1944ஆம் ஆண்டு செந்தமிழ்க்கழக வெளியீடாக வெளியிட்டு உள்ளார்.

திருவான்மியூர் சிவபெருமான் பதிகம்

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் 'திருவான்மியூர் சிவபெருமான் பதிகம்' காப்பு வெண்பா 1, நூல் 11 கொச்சகக் கலிப்பாவாலானது. இது, சென்னைக்கு அருகேயுள்ள திருவான்மியூரில் கோயில் கொண்டிருக்கும் சிவபெருமான் மீது பாடப்பெற்றதாகும். தாம் என்னவாக இருக்கவேண்டும் என்ற எண்ணத்தை ஆசிரியர் இந்நூல் வழி வெளிப்படுத்துகின்றார். அந்த எண்ணம் ஈடேற எனக்கு அருள்தரவேண்டும் என்று வேண்டும் முறையில் இந்நூலை அமைத்துள்ளார். இந்நூல் 1966ஆம் ஆண்டு சித்தாந்தம் இதழில் வெளிவந்துள்ளது.

திருவிசைப்பாவுடையார் துவாதச மாலை

ஒன்பதாம் திருமுறையை ஆக்கியோரது பெரும்புகழைப் பன்னிரண்டு பாடல்களால் கூறுவது 'திருவிசைப்பாவுடையார் துவாதச மாலை' ஆகும். இந்நூல் திருவிசைப்பா பாடிய புலவர்கள் யார்யார்? அவர்கள் யாத்த பதிகங்களின் தொகை என்ன? மறைந்து போன பாடல்கள் எத்தனை? என்றெல்லாம் முதல் மூன்று பாடல்களில் விளக்கிப் பின்னர் அமைந்த ஒன்பது பாடல்களில் திருமாளிகைத்தேவர் தொடங்கிச் சேதிராயர் வரையுள்ள ஒன்பதின்மருக்கும் ஒவ்வொரு விருத்தத்தில் அவர்தம் வாழ்க்கை வரலாற்றினைக் கூறுவதாக அமைந்துள்ளது.

இந்நூலின் ஆசிரியர் பெயரும் உரையாசிரியர் பெயரும் தெரியவில்லை. இந்நூலைச் சீர்காழி ப.அ. முத்துத் தாண்டவராய பிள்ளை 1931-32ஆம் ஆண்டு 'செந்தமிழ்ச்செல்வி' இதழ்ப் பகுதிகளில் மூலமும் உரையும் புராணச் சாரமும் என வெளியிட்டுள்ளார். பின்னர் பொன். சுப்பிரமணிய பிள்ளை 1977ஆம் ஆண்டு விரிந்த உரையுடன் திருவாவடுதுறை யாதீனத்தின் 298ஆவது வெளியீடாக வெளியிட்டுள்ளார்.

திருவிடைமருதூர் அருட்பா மாலை

அழகிய சிற்றம்பல தேசிகரின் 'திருவிடைமருதூர் அருட்பா மாலை' 10 கலிப்பாவாலானது. திருவிடைமருதூரில் கோயில் கொண்டிருக்கும் சிவபெருமானின் பெருமைகளையும் அவ்வூரின் சிறப்பினையும் எடுத்துக் கூறும் ஆசிரியர் சிலவிடங்களில் தம்முள்ளக்கிடக்கையையும் வெளிப்படுத்தித் தன்னை ஆட்கொள்ள வேண்டும் என்று இறைஞ்சுகின்றார். இந்நூலை 1938ஆம் ஆண்டு சித்தாந்தம் இதழில் திருவாரூர் எஸ். சோமசுந்தர தேசிகர் வெளியிட்டுள்ளார்.

திருவிளையாடற் கருணைத் திருவிருத்தம்

திருவிளையாடற்புராணக் கருத்துக்கள் சுருக்கமாக 13 விருத்தங்களால் அமைக்கப்பெற்றதே 'திருவிளையாடற் கருணைத் திருவிருத்தம்' ஆகும். இதில் சிவபெருமானின் சில திருவிளையாடல்கள் சிறப்புற எடுத்துக் காட்டப்பெற்றுள்ளன. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை 1935ஆம் ஆண்டு சித்தாந்தம் மற்றும் கலாநிலையம் ஆகிய இரண்டு இதழ்களிலும் எஸ். வையாபுரிப் பிள்ளை வெளியிட்டுள்ளார்.

திருவிளையாடற் பயகரமாலை

திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தின் சுருக்கமாகத் 'திருவிளையாடற் பயகரமாலை' அமைந்துள்ளது. திருவிளையாடற் புராணம் அறுபத்து நான்கிற்கும் ஒவ்வொரு பாடல் வீதம் அறுபத்து நான்கு பாடல்களில் இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூல் 'திருவாலவாயுடையார் திருவிளையாடற்

புராணத்தின் பிற்பகுதியில் உ.வே. சாமிநாதையரால் நூல் முழுமையும் (1906, 1927, 1972) வெளியிடப்பெற்றுள்ளது. இப்பதிப்பிற்கு முன் 'மதுரைச் சொக்கநாதரது அறுபத்துநான்கு திருவிளையாடற் பயங்கரமாலை' (1868, 1887, 1907) எனவும், ம.தி. பாநுகவியால் 'திருவிளையாடற் பயங்கரமாலை' (1898) எனவும் இந்நூல் பதிப்பிக்கப்பெற்று இருக்கின்றது. இப்பதிப்புகளுக்குப் பின்னர் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகச் சுவடியை மட்டும் ஆதாரமாகக் கொண்டு சு. சௌந்தரபாண்டியன் பழைய உரையுடன் முதல் 39 திருவிளையாடல்களை மட்டும் 1998ஆம் ஆண்டு 'அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ்'ப் பகுதிகளில் வெளியிட்டுள்ளார்.

திருவூடல்

இறைவனும் இறைவியும் ஊடிக் கொண்டதை உணர்த்துவது 'திருவூடல்' ஆகும். அப்பர், சுந்தரர், சம்பந்தர் ஆகியோரின் தேவாரத் திருமுறைப் பாடல்களில் இறைவன் - இறைவி ஊடல் தொடர்பான நிகழ்ச்சிகளின் தொகுப்பாக இந்நூல் அமைந்துள்ளது. இதில் 12 பாடல்கள் இடம்பெற்று உள்ளன. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை 1976ஆம் ஆண்டு சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழில் புலவர் இராம. திலகம் வெளியிட்டுள்ளார். க. அனந்த சுப்பையரின் 'திருவூடல்' ஒன்று உரையுடன் 1911ஆம் ஆண்டு வெளிவந்திருக்கின்றது. இவ்விரு திருவூடல்களும் வேறு வேறானவை.

திருவையாற்றுக் தருமசம்வர்த்தனி மாலை

சிவஞானனின் 'திருவையாற்றுத் தருமசம்வர்த்தனி மாலை' காப்பு 1, நூல் 30 கலிவிருத்தத்தாலானது. ஐயாறு என்று போற்றப்படும் திருவையாற்றில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் இறைவியான தர்மசம்வர்த்தினி எனும் தருமாம்பாள் மீது இந்நூல் பாடப்பெற்றுள்ளது. இந்நூலை மு.கோ. இராமன் தம்முடைய குறிப்புரையுடன் 1979ஆம் ஆண்டு 'ஞானசம்பந்தம்' இதழ்ப் பகுதிகளில் வெளியிட்டு

உள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1979ஆம் ஆண்டு ஞானசம்பந்தம் வெளியீடாக வெளிவந்துள்ளது.

திருவையாற்றுப் பதிற்றுப்பத்தந்தாதி

திருவையாறு ஸ்ரீமுத்துச்சாமி பாரதி என்கிற நடேச தாசரின் 'திருவையாற்றுப் பதிற்றுப்பத்தந்தாதி' 100 அறுசீர் கழிநெடிலடியாசிரிய விருத்தத்தாலானது. திருவையாற்றில் கோயில் கொண்டுள்ள சிவபிரான் மீது பாடப்பெற்றதே இந்நூல். இதில் திருவையாற்றுத் தலப் பெருமையும், நாயகர் சிறப்பும் பலவாறாக விதந்தோதப் பெற்றுள்ளன. இந்நூலைப் பு. ஏழுமலைப் பிள்ளை சென்னை - விவேக விளக்க அச்சுக் கூடத்தில் 1870ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார். பின்னர் இந்நூல் இராம. கோவிந்தசாமிப் பிள்ளையின் உரையுடன் 1970-73ஆம் ஆண்டு 'ஞானசம்பந்தம்' இதழ்ப் பகுதிகளில் வெளிவந்துள்ளது.

தில்லை இதழகல் அந்தாதி

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் 'தில்லை இதழகல் அந்தாதி' 32 கட்டளைக் கலித்துறையாலானது. தில்லைத் திருவாயிரம் (1008 பாடல்கள்) வண்ணச்சரபம் பாடி முடித்த போது திருவாசகத்துக்கு அடுத்தது இந்நூல் என்று கூறுவர். அதற்கொப்பத் தில்லை இதழகல் அந்தாதியும் தில்லை நடராசப் பெருமானைப் புகழ்ந்தே பாடப்பெற்றுள்ளது. வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் 'தில்லை இதழகல் அந்தாதி' சிவகுருநாத மூர்த்தியின் நெல்லை இதழகல் அந்தாதியையும் சேர்த்து 1880ஆம் ஆண்டு ஊ. புஷ்பரதச் செட்டியாரின் கலாரத்நாகரம் அச்சுக்கூடத்திலிருந்து வெளியிட்டுள்ளார். இதே ஆண்டு அமரம்பேடு சுப்பராய செட்டியார் 'தில்லை இதழகல் அந்தாதி'யை மட்டும் தனித்து வெளியிட்டுள்ளார். இந்நூலுக்குத் தவத்திரு கந்தசாமி சுவாமிகளின் சொற்பொருளுரை ஒன்றுண்டு. இவ்வுரையுடன் இந்நூல் 1983-85ஆம் ஆண்டு 'மாதாந்திர அமுதம்' இதழ்ப் பகுதிகளில் வெளிவந்துள்ளது.

தில்லையுலா

தில்லையில் கோயில் கொண்டுள்ள நடராசப் பெருமான் மீது இவ்வுலா பாடப்பெற்றுள்ளது. இவ்வுலாவில் 244 கலிவெண்பாக்களே கிடைத்துள்ளன. அதாவது நூலின் தொடக்கத்திலிருந்து அரிவைப் பருவத் தொடக்கம் வரையே கிடைத்துள்ளது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை 1937ஆம் ஆண்டு தமிழ்ப்பொழில் இதழில் எல். உலகநாத பிள்ளை வெளியிட்டுள்ளார்.

தினகர வெண்பா

வள்ளுவப்பெருமானின் திருக்குறளைப் போற்றும் வகையில் அமைந்த சோமேசர் முதுமொழி வெண்பா, சிவசிவ வெண்பா, இரங்கேச வெண்பா, வடமலைவெண்பா, திருமலைவெண்பா, திருப்புல்லாணி மாலை, முருகேசர் முதுமொழி வெண்பா, திருத்தொண்டர் வெண்பா, குமரேச வெண்பா போன்றவற்றில் ஒன்றாக வைத்துப் போற்றத்தக்கது 'தினகர வெண்பா'வாகும். காப்பு வெண்பா 1, நூல் 138 வெண்பாக்களாலானது. வள்ளுவப் பெருந்தகையின் நூற்கண் ணுள்ள ஒவ்வோரதிகாரத்தில் இருந்தும் ஒவ்வொரு திருக்குறளைத் தேர்ந்தெடுத்து அதனைப் பிற்பாதியாகக் கொண்டு இந்நூல் அமைந்துள்ளது.

யாழ்ப்பாணத்து வித்துவான் திருவாளர் அ. குமாரசாமிப் பிள்ளை வெளியிட்டுள்ள 'கீதாசாரக் கவித்திரட்டு' என்ற நூலிலும், புதுக்கோட்டை ஸ்ரீ.எஸ். இராதாகிருஷ்ண ஐயரவர்கள் வெளியிட்ட வாசக புத்தகம் ஒன்றிலும் இந்நூற் பாடல்கள் சில இடம்பெற்றுள்ளன. இவ்விரு நூல்களுக்கான பதிப்பாண்டு தெரியவில்லை. என்றாலும் 1932ஆம் ஆண்டுக்கு முற்பட்ட பதிப்பு என்று கூறலாம். இவ்விரு நூல்களிலிருந்து 'தினகர வெண்பா'ப் பாடல்களைத் தொகுத்து எஸ். வையாபுரிப்பிள்ளை 1932ஆம் ஆண்டு 'கலாநிலையம்' இதழில் வெளியிட்டுள்ளார். பின்னர் இந்நூல் எஸ். வையாபுரிப் பிள்ளையாலேயே தனிநூலாக 1932ஆம் ஆண்டு வெளியிடப் பெற்றுள்ளது.

தீபங்குடிப்பத்து

தீபங்குடியில் கோயில் கொண்டுள்ள அருகப்பெருமான் மீது இந்நூல் பாடப்பெற்றுள்ளது. இதில் 7 பாடல்கள் உள்ளன. தீபங்குடியின் சிறப்பும் அருகப்பெருமானின் பெருமையும் இதனுள் விதந்தோதப்பெற்றுள்ளன. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை மு.கோ. இராமன் 1979ஆம் ஆண்டு 'முக்குடை' இதழில் வெளியிட்டுள்ளார். பின்னர் இந்நூல் பிறிதொருவரால் தனிநூலாக வெளியிடப் பெற்றுள்ளது.

தென்சேரி மாலை

ஒட்டபாளையம் நஞ்சையபிள்ளை மகன் குப்ப யண்ணன் என்கிற குருவூர்ப் பழனிமலை வாத்தியாரின் 'தென்சேரி மாலை' 100 கட்டளைக் கலித்துறையாலானது. இதைச் 'செஞ்சேரி மாலை' எனவும் வழங்குவர். இந்நூல் தென்சேரியில் எழுந்தருளி இருக்கும் முருகப்பெருமான் மீது பாடப்பெற்றுள்ளது. இந்நூலில் கிடைத்த 7 பாடல்கள் 1936ஆம் ஆண்டு கொங்கு மலர் இதழில் வெளிவந்துள்ளன.

தேரூர்ந்த சோழன் கதை

தஞ்சையை ஆண்ட சோழ மன்னர்களுள் மனுநீதிச் சோழனும் ஒருவன். அவன், நீதி தவறாது வாழ்ந்த கதையை உரைநடையில் எழுதப்பெற்றதே 'தேரூர்ந்த சோழன் கதை' ஆகும். ஒரு மன்னன் செய்யக் கூடாதவை எவையெவை என்பதைத் தொகுத்துக் கூறும் வகையில் இந்நூல் அமைந்து உள்ளது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை 1989ஆம் ஆண்டு சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழில் ச. திலகம் வெளியிட்டுள்ளார்.

தேவிகாலோத்தர ஆகமம்

வடமொழியிலுள்ள 'தேவிகாலோத்ர ஆகமம்' ஸ்ரீகண்ட பரமேசுவரன் உமாதேவியாருக்கு உபதேசித்தார் என்பர். இந்நூலின் தமிழ்மொழிபெயர்ப்பாசிரியர் பெயர் தெரிய

வில்லை. கடவுள் வணக்கம் 3, நூல் 69 விருத்தத்தாலானது. இந்நூலுக்குப் பழையவுரை ஒன்றுண்டு. இவ்வுரை 1848 முதல் 1906 வரை பல பதிப்புகளைக் கொண்டு மக்களால் பரவலாகப் பேசப்பட்டு வந்துள்ளது. இவ்வுரை மாயாவாதம் என்ற காரணத்தால், சைவ சித்தாந்தப் பேராசிரியர் பொ. முத்தையப் பிள்ளை தாம் சைவசித்தாந்த பரமாகச் 'சித்தாந்த ரத்ன விருத்தி' ஒன்றை எழுதியிருக்கின்றார். இந்நூலுக்குப் பழையவுரை ஒன்றுண்டு. இவ்வுரை 1848 முதல் 1906ஆம் ஆண்டு வரை பல பதிப்புகளைப் பெற்றுள்ளது. இவ் விருத்தியுடன் இந்நூல் 1934-35ஆம் ஆண்டு 'சிவநேசன்' இதழ்ப் பகுதிகளில் தனிப் பக்கவெண் பெற்று வெளிவந்துள்ளது. பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு சிவநேசன் வெளியீடாக 1935ம் ஆண்டு வெளிவந்து உள்ளது.

தேவிமான்மியம்

நல்லதம்பிப் பிள்ளையின் 'தேவிமான்மியம்' 395 பாடல்களாலானது. இது மார்க்கண்டேய புராணத்தின் ஒரு பகுதியாகும். இந்நூல் மதுகைடவர்கள் வதை, மகிடாசுரன் சேனை வதை, மகிடாசுரன் வதை, தேவர்கள் தேவியைத் தோத்திரஞ் செய்தது, சும்பன் சுக்ரீவனைத் தூதுவிட்டதுரைத்தது, தூமிரக்கண்ணன் வதை, சண்டமுண்டர் வதை, இரத்தபீசன் வதை, நிசும்பன் வதை, சும்பன் வதை, தேவர்கள் நாராயணி தோத்திர முரைத்தது, தேவி தேவர்களுக்கு வரங்கொடுத்தது, தேவி சுரத வைசியர்களுக்கு வரங்கொடுத்தது ஆகிய பதின்மூன்று அத்தியாயங்களைக் கொண்டுள்ளது. இந்நூலை வே.ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் தம்முடைய உரையுடன் 1949-52ஆம் ஆண்டு 'ஞானசம்பந்தம்' இதழ்ப் பகுதிகளில் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பை 1952ஆம் ஆண்டு ஞானசம்பந்தம் வெளியீடு 3ஆவதாக தருமையாதீனம் வெளியிட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து 1955ஆம் ஆண்டு பொள்ளாச்சி மகாலிங்கம் பொருளுதவியோடு வே.ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் மீண்டும் ஒரு பதிப்பு வெளியிட்டுள்ளார்.

தேவையுலா

பலபட்டடை சொக்கநாத கவிராயரின் 'தேவையுலா' காப்பு வெண்பா 1, நூல் 360 கண்ணிகளாலானது. இது, இராமேசுவரத்துக்கு அருகில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள இராமநாதர் மீது பாடப்பெற்றுள்ளது. இதில் இராமநாதருடைய பெருங்கருணைத் திறமும் இராமேசுவரத் தலவிசேடங்களும் தீர்த்த விசேடங்களும் வேறு தலபுராணக் கதைகளும் பழைய சிவபுராணங்களில் காணப்படும் அரிய சரித்திரங்களும் நாயன்மார்களுடைய அருமைச் செயல்களும் பலவாறாகக் கூறப்பெற்றுள்ளன. இந்நூலை உ.வே. சாமிநாதையர் தம்முடைய அரும்பதவுரையுடன் 1907ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழ்ப் பகுதிகளில் தனிப்பக்க எண்ணுடன் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ் இதழ்ப் பதிப்பு 1911ஆம் ஆண்டு செந்தமிழ் வெளியீடு 11ஆவதாக முதற் பதிப்பும், 1925ஆம் ஆண்டு இரண்டாம் பதிப்பும் என வெளிவந்துள்ளது.

தையல்நாயகி அந்தாதி

சாமி. பொன்னுபாத்தியாயரின் 'தையல்நாயகி அந்தாதி' காப்பு 1, நூல் 100 வெண்பாக்களாலானது. இது, புள்ளிருக்கு வேளூரில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் தயிலம்மை அம்பிகை மீது பாடப்பெற்றதாகும். இந்நூல் 'புள்ளிருக்கு வேளூர் தையல்நாயகி அந்தாதி' என்று ஆறுமுகம் பிள்ளை 1884ஆம் ஆண்டு பதிப்பித்திருக்கின்றார். பின்னர் இந்நூல் இராம. கோவிந்தசாமிப் பிள்ளையின் உரையுடன் 1965-68ஆம் ஆண்டு 'ஞானசம்பந்தம்' இதழ்ப் பகுதிகளில் வெளிவந்து உள்ளது.

தொட்டிக்கலைக் கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை

தொட்டிக்கலை ஸ்ரீசுப்பிரமணிய முனிவரின் 'தொட்டிக்கலைக் கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை' காப்பு 1, நூல் 20 (வெண்பா, கலித்துறை) பாடல்களாலானது. இது, தொட்டிக்கலையில் கோயில் கொண்டிருக்கும் கேசவப்

பெருமாள் மீது பாடப்பெற்றதாகும். இந்நூல் முனுசாமி முதலியார் பதிப்பித்த 'தொட்டிக்கலைச் சுப்பிரமணியர் பிரபந்தங்கள்' (1892) எனும் தொகுப்பு நூலில் ஒன்றாகத் திகழ்கின்றது. அடுத்து மு. இராகவையங்காரால் 1906ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழில் வெளியிடப்பெற்றுள்ளது. பின்னர் இவ்விதழ்ப்பதிப்பு செந்தமிழ் வெளியீடு 25ஆவதாக 1906, 1929ஆம் ஆண்டுகளில் முறையே முதல் மற்றும் இரண்டாம் பதிப்பு வெளிவந்துள்ளது. அடுத்து, 1953ஆம் ஆண்டு திருவாவடுதுறையாதீனம் வெளியிட்ட 'தொட்டிக்கலை மதுரகவி ஸ்ரீசுப்பிரமணிய முனிவர் பிரபந்தங்கள்' எனும் தொகுப்பு நூலிலும் இந்நூல் இடம்பெற்றுள்ளது.

தொல்காப்பியம் சொல்லதிகாரம் கல்லாடர் விருத்தியுரை

தொல்காப்பியரின் தொல்காப்பிய சொல்லதிகாரம் கிளவியாக்கம், வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு, பெயரியல், வினையியல், இடையியல், உரியியல், எச்சவியல் ஆகிய ஒன்பது இயல்கள் 468 நூற்பாக்களாலானது. சொல்லதிகாரத்திற்கு இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார், கல்லாடனார், பழைய வுரை என அறுவர் உரை எழுதியுள்ளனர். இந்நூலைக் கு. சுந்தரமூர்த்தி 1950-63ஆம் ஆண்டு 'ஞானசம்பந்தம்' இதழ்ப் பகுதிகளில் தனிப்பக்க எண்ணுடன் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1964ஆம் ஆண்டு ஞானசம்பந்தம் வெளியீடாக வெளிவந்துள்ளது. அதன்பிறகு தெ.பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை பல சுவடிகளையும் ஞானசம்பந்தம் இதழ்ப் பதிப்பையும் ஒப்புநோக்கி 1971ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலக வெளியீடாக வெளியிட்டுள்ளார்.

தொல்காப்பியம் பொருளதிகாரம் செய்யுளியல் நச்சினார்க்கினியம்

தொல்காப்பியரின் தொல்காப்பிய பொருளதிகார ஒன்பது இயல்களில் செய்யுளியலும் ஒன்று. இதற்குப் பலர் (பழைய உரைகாரர்கள்) உரை வரைந்துள்ளனர். அவர்களில் நச்சினார்க்கினியரும் ஒருவராவார். இந்நூலை நச்சினார்க்கினியர்

மற்றும் பேராசிரியரின் உரைப்பதிப்பாக 1885ஆம் ஆண்டு சி.வை. தாமோதரம் பிள்ளை வெளியிட்டுள்ளார். அதன்பிறகு பவானந்தம் பிள்ளை 1916ஆம் ஆண்டு பொருளதிகார முதல் ஐந்து இயல்களை இரண்டு தொகுதிகளாக வெளியிட்டுள்ளார். பின்னர் செய்யுளியலுக்கான நச்சினார்க்கினியரின் உரை ரா. இராகவையங்காரால் 1903-1916ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழ்ப் பகுதிகளில் வெளியிடப்பெற்றுள்ளது. பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1917ஆம் ஆண்டு செந்தமிழ் வெளியீடு 10ஆவதாக வெளிவந்துள்ளது. இப்பதிப்பினைத் தொடர்ந்து எஸ். கனகசபாபதிப் பிள்ளை (1934), சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் (1947 - 1,2 இயல்கள்), கணேசையர் (1948), சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் (1950 - 3 முதல் 5 இயல்கள்), கு. சுந்தரமூர்த்தி (1965 - செய்யுளியல்), கு. சுந்தரமூர்த்தி (1986) போன்றோரின் நச்சினார்க்கினியரின் தொல்காப்பியப் பொருளதிகாரப் பதிப்புகள் வெளிவந்துள்ளன. செய்யுளியலுக்கு மட்டும் தனித்த பதிப்பாக ரா. இராகவையங்கார் மற்றும் கு. சுந்தரமூர்த்தி ஆகியோரின் நச்சினார்க்கினியர் உரைப்பதிப்பு வெளிவந்திருப்பது தெரிகின்றது.

தோத்திர வெண்பா

தென்காசி நகரில் கோயில் கொண்டுள்ள ஸ்ரீகாசி விசுவேசர் மீது பாடப்பெற்றதே 'தோத்திரவெண்பா' ஆகும். இது காப்பு 1, நூல் 10 வெண்பாக்களால் ஆனது. இந்நூல், தென்காசியின் சிறப்புக்களையும் ஸ்ரீகாசி விசுவேசுவரர் பெருமைகளையும் சிறப்பித்துக் கூறுகின்றது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை 1899ஆம் ஆண்டு ஞானபோதினி இதழில் பூர்ணலிங்கம் பிள்ளை வெளியிட்டு உள்ளார்.

நந்திக்கலம்பகம்

காஞ்சியில் அரசாண்ட மூன்றாம் நந்திவர்மன் (கி.பி.825-850) என்ற பல்லவ மன்னன் மீது பாடப்பெற்றதே 'நந்திக் கலம்பகம்'. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

இந்நூலின் பாடல் எண்ணிக்கையைப் பலரும் பலவாறாகக் குறிப்பிடுகின்றனர். 1872இல் வெளியான விவேக விளக்க அச்சுக்கூடப் பதிப்பு 110 பாடல்களையும், 1927இல் வெளியான செந்தமிழ் வெளியீடான அ. கோபாலையரின் பதிப்பு 88 பாடல்களையும், இவரே செந்தமிழ் இதழில் 1926ஆம் ஆண்டு சில பிரதிகளில் அதிகமாகக் காணப்பட்ட 23 பாடல்களையும் இந்நூல் இதுவரை பெற்றுள்ளது. இந்நூல் 1872ஆம் ஆண்டு வெளிவந்த விவேக விளக்க அச்சுக்கூடப் பதிப்பில் 110 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் இடம்பெற்றுள்ள 23 மிகைப்பாடல்களைச் 'செந்தமிழ்' இதழில் இனங்கண்டு 1926ஆம் ஆண்டு அ. கோபாலையர் வெளியிட்டுள்ளார். பிறகு இந்நூற் பாடல்களை மட்டும் அ. கோபாலையர் 1927ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழில் தனித்தெடுத்து வெளியிட்டு உள்ளார். இதில் 88 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இந்நூல் 90 பாடல்களைப் பெற்றிருக்கவேண்டும் என்றும், இவற்றில் 89 மற்றும் 90ஆம் பாடல்கள் கிடைக்கவில்லை என்றும் கோபாலையர் குறிப்பிடுகின்றார். மேலும் அவர் பழைய பதிப்பிலும் கையெழுத்துப் பிரதிகளிலும் மிகைப்பாடல்கள் சேர்ந்தே இருக்கின்றன என்றும் கூறுகின்றார். இப்பதிப்புகளைத் தொடர்ந்து வெளிவந்த பதிப்புகள் எல்லாம் மிகைப்பாடல் களையும் சேர்த்தே வெளியிட்டு வந்துள்ளன. சோ. அருணாசல தேசிகரின் உரைப்பதிப்பு 1955ஆம் ஆண்டும், ல.சண்முகசுந்தரம் (1955), எஸ். இராஜம் (1955), நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ் (1985), வே. கபிலனின் விரிவுரை (1997 - 4ம் பதிப்பு), பு.சி. புன்னைவன நாதன், செ.ரெ. இராமசாமிப் பிள்ளை (1930 - கழகம்) ஆகியோரின் உரைகள் வெளிவந்துள்ளன.

நம்மாழ்வார் ஊஞ்சற் கவிதை

இந்நூல், திருமால் அடியார்களாகிய ஆழ்வார்கள் பன்னிருவரில் 'நம்மாழ்வார்' என்பாரைப் பற்றிய இருபது ஊஞ்சற் பாடல்களாலானது. இதுவன்றிக் காப்புப் பாடல் ஒன்றும் இந்நூலின் முன் இடம்பெற்றுள்ளது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. நூலின் முதற் பாடல்,

திருக்குருகூரில் கோயில் கொண்டுள்ள ஆதிநாதப் பெருமானைப் பற்றியது; மற்றையவை ஆழ்வாரைக் குறித்தன. திருக்குருகூர்ப் பெருமை, ஆழ்வார் சிறப்பு, அன்னார் அருளிச்செய்த பிரபந்தங் களின் பிரபாவம், ஊஞ்சற் பலகைச் சிறப்பு, வடம், அங்குச் செய்யப்பட்டுள்ள அலங்காரங்கள் முதலிய பலவும் பற்றி அழகுறப் பாடப்பெற்றுள்ளன. இந்நூலை 1959ஆம் ஆண்டு 'அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ்'ப் பகுதியில் வி.எஸ். கிருஷ்ணன் வெளியிட்டுள்ளனர்.

நம்மாழ்வார் திருக்கோலக்கவி

திருக்குருகூரின் கண்ணே நடக்கும் நம்மாழ்வாருடைய பத்து நாள்களின் திருவிழாச் சிறப்புக்களைப் பற்றி விரிவுபட எடுத்துக் கூறும் நூல் 'நம்மாழ்வார் திருக்கோலக்கவி' ஆகும். கடவுள் வாழ்த்துப் பாடல் ஒன்றுடன் 22 பாடல்களாலானது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. நம்மாழ்வார் திருவிழாவில் ஒவ்வொரு நாள் திருவிழாவிற்கும் ஆழ்வார் எழுந்தருளுகின்ற கோலச் சிறப்பை இந்நூல் நன்கு விளக்கிச் செல்கின்றது. இந்நூலாசிரியர் நம்மாழ்வாரைத் திருமாலின் அவதாரமாகக் கருதாமல் திருமாலாகவே கருதிப் பாடியிருப்பது இந்நூலுக்குரிய தனிச்சிறப்பு எனலாம். இந்நூலை 1961ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் த. கிருட்டினமூர்த்தி வெளியிட்டுள்ளார்.

நம்மாழ்வார் பதம்

நம்மாழ்வார் பெருமையை ஐந்து இசைப்பாடல்களின் வாயிலாக வெளிப்படுத்தும் நூல் 'நம்மாழ்வார் பதம்' ஆகும். இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. மோகனம், கல்யாணி ராகங்களில் இரு பாடல்கள் பாடப்பெற்றுள்ளன. 'மன்னு மிசைத்தமிழ் வண்சடகோப'ரின் பாதபங்கயமே தமக்குத் தஞ்சமென்றும், கருக்குள் புகுந்து வந்து தம்மைக் காக்கவேண்டும் என்றும், பிறவி வினை போக்க வேண்டும் என்றும் ஆசிரியர் வேண்டிக் கூறுவதாக இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலை 1961ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் த. கிருட்டினமூர்த்தி வெளியிட்டுள்ளார்.

நம்மாழ்வார் வண்ணம்

நல்லகுற்றாலக் கவிராயரின் 'நம்மாழ்வார் வண்ணம்' எனும் நூல் ஆழ்வார்கள் பன்னிருவரில் ஒருவராகிய நம்மாழ்வார் மீது பாடப்பெற்றதாகும். இந்நூலைச் சே.ரா. சுப்பிரமணியக் கவிராயர் செந்தமிழ் இதழில் 1918ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார்.

நரி விருத்தம்

சீவகசிந்தாமணியின் ஆசிரியராகிய திருத்தக்கதேவரின் 'நரி விருத்தம்' காப்பு 1, நூல் 50 ஆக 51 பாடல்களாலானது. இவற்றுள் நரியின் கதையைக் கூறும் பாடல்கள் எட்டே. ஏனையவற்றில், இக்கதையை ஆதாரமாகக் கொண்டு நீதிகளும் அந்நீதிகட்கேற்ற பல கதைகளும் கூறப்பெற்றுள்ளன. இந்நூலுள் பதினெட்டு நீதிக் கதைகள் இடம்பெற்றுள்ளன. அவை முழுவதும் சைவ மதம் தொடர்பானவையாகும். யாக்கைச் செல்வங்களது நிலையாமையும், பொய் கொலை களவு கட்காமம் என்பவற்றால் அழிந்தவர் கதைகளும், அவை யல்லாமல் யுயர்ந்தோர் கதைகளும், யதி தர்ம சிராவக தர்மங்களது பெருமையும், பிற தர்ம விஷயங்களும் இதனுள் அடங்கியுள்ளன.

நரி விருத்தம் என்பது நரியைப் பற்றிய பாடல்களா லானதொரு நூல் எனப் பொருள்படும். இக்கதை, "தினைப் புனத்தை யழித்த யானையும் யானையை யெய்த வேடனும் வேடனைக் கடித்த பாம்பும் ஒருசேர இறந்து கிடந்ததனில் பக்கத்தே கண்டிருந்த ஒரு நரி மிக்க மகிழ்ச்சியுடன் 'ஆ, நமக்கு நிரம்பவும் உணவு குவிந்துவிட்டன. யானை ஆறு மாதத்துக்கும் வேடன் ஏழு நாட்கும் நாகம் ஒரு நாட்கும் ஆகாரமாகும்' என்று பலவாறு நினைந்து அப்பிணங்களின் அருகே வந்து, முதலில் வீழ்ந்துகிடக்கும் வேடன் கை வில்லின் குதைவாரைக் கடித்துண்ணத் தொடங்கவும் அவ்வாரறுந்துபோக வில்லு விசையாக நிமிர்ந்து, கடித்த நரியின் வாய்க்குட் கோத்துக் கொண்டமையால் நரியும் விரைவிற் செத்தது" என்பர்.

இந்நூலை மு. இராகவையங்கார் 1907ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழ்ப் பகுதிகளில் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு செந்தமிழ் வெளியீடு 21ஆவதாக 1907, 1920ஆம் ஆண்டுகளில் முறையே முதல் மற்றும் இரண்டாம் பதிப்பாக வெளிவந்துள்ளது. இதற்குப் பிறகு ஆறுமுகஞ் சேர்வையின் விளக்க உரையுடன் 1983ஆம் ஆண்டு ஜைன இளைஞர் மன்ற வெளியீடு வெளிவந்துள்ளது.

நல்லபிள்ளை சித்திர மடல்

பொன்னம்பலராச பூபாலனின் 'நல்லபிள்ளை சித்திர மடல்' காப்பு வெண்பா 1, நூல் 250 கண்ணிகளாலானது. பொதியாசத்தான், பொருணையாற்றினான், பாண்டி வள நாட்டான், கரந்தை நகரைக் காப்போன் ஆகிய நல்லபிள்ளை என்னும் மன்னன், ஒரு பெண்ணைக் கண்டு காமுற்று அப்பெண்ணை அடைய முடியாத நிலையில் பனை மடலால் குதிரை செய்து, அப்பெண்ணின் வடிவினை எழுதிய கொடி தாங்கி, உடல் முழுமையும் நீறுபூசி, எருக்கம்பூ, எலும்பு ஆகியவற்றாலான மாலைகளைத் தரித்து, நாணம் துறந்து, பித்துப் பிடித்தவன் போலப் பாடிக்கொண்டு மடல் ஏறுவதை இந்த நூல் குறிப்பிடுகின்றது. இந்நூலில் நல்லபிள்ளையின் பெருமைகள் பலவாறாகப் பாராட்டிப் பேசப்பெற்றுள்ளன. இந்நூலை 1968ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் ஆர்.கே. பார்த்தசாரதி வெளியிட்டு உள்ளார்.

நல்வழிப் பாடல்கள்

ஔவையாரின் 'நல்வழி' 40 வெண்பாக்களாலானது. வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாத அறிவுரைகளும், நன்னெறி விளக்கங்களும் இந்நூலில் விளக்கப்பெற்றுள்ளன. இதை 'நல்வழிப் பாடல்கள்' என்று அச்சிட்டிருக்கின்றனர். அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ்ப் பதிப்பில் மிகைப்பாடல்கள் 18ஐ வெளியிட்டு இந்நூல் எண்ணிக்கையை 58ஆக உயர்த்தி இருக்கின்றனர்.

நவக்கிரக தோத்திரம்

நவக்கிரகங்களின் மீது பாடப்பெற்ற இந்நூல் 10 அறுசீர் விருத்தம் கொண்டது. ஒவ்வொரு கிரகத்திற்கும் ஒவ்வொரு பாடலாகவும், நூற்பயன் ஒரு பாடலாகவும் இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூல் சென்னை பூமகள் விலாச அச்சுக்கூடம் 1923, 1927ஆம் ஆண்டுகளில் முறையே முதல் மற்றும் இரண்டாம் பதிப்புக ளாக வெளியிட்டுள்ளது. இதன் பிறகு மு. பசுபதி 1954ஆம் ஆண்டு 'அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ்'ப் பகுதியில் வெளியிட்டுள்ளார். இதே பெயரில் வேறொரு நூலுமுண்டு.

நண்ணாவூர் சங்கமேசுவரசுவாமி வேதநாயகி அம்மன் பேரில் விறலிவிடுதூது

'நண்ணாவூர் சங்கமேசுவரசுவாமி வேதநாயகி அம்மன் பேரில் விறலிவிடுதூது' எனும் இந்நூல் 954 கண்ணிகளாலான குறையுடையது. நூலின் இறுதிப் பகுதி சுவடியில் இல்லை. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இஃதோர் உயர்திணைத் தூதாகும். அதாவது விறலி தூது செல்கின்றாள். சோடசவுதானி என்னும் தலைவன் காமரசக் குளிகை கண்ணாடி என்னும் பரத்தைபாற் சிக்குண்டு வான்பொருளிழந்து, நொந்து, வருந்தி, நண்ணாவூர் சங்கமேசுவரர், வேதநாயகியம்மன் கோயிலடைந்து அவ்விறைவர் அருளால் பொருள்பெற்றுத் திரும்பவும், மனையடைந்த போது மனையாள் கதவுதாளிட அவ்வூடலைத் தீர்க்குமாறு விறலியினைத் தூது விட்டதாக இந்நூல் கூறுகின்றது. இந்நூலை வீ. சொக்கலிங்கம் 1967-69ஆம் ஆண்டு 'சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ்'ப் பகுதிகளில் தனிப்பக்க எண்ணுடன் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு இந்நூலக வெளியீடாக 1969, 1979ஆம் ஆண்டுகளில் முறையே முதல் மற்றும் இரண்டாம் பதிப்பு வெளிவந்துள்ளது.

நாககுமார காவியம்

ஐஞ்சிறு காவியங்களில் ஒன்றான 'நாககுமார காவியம்' காப்பு 1, நூல் ஐந்து சருக்கங்களில் 170 விருத்தத்தாலானது. இதை 'நாகபஞ்சமி கதை' என்றும் கூறுவர். முதல் நான்கு சருக்கம் வரையில் நாககுமாரனின் வீரதீரச் செயல்களும், காதல் களியாட்டங்களும் சிறப்பிக்கப்படுகின்றன. ஐந்தாம் சருக்கம் நாககுமாரனின் முற்பிறப்பு வரலாற்றையும், பஞ்சமி விரத நோன்பையும் அதனால் விளையும் பெரும்பயனையும், துறவு நிலையையும் எடுத்துரைக்கின்றது. இந்நூல் 1933ஆம் ஆண்டு கிரிலால் ஜெயினால் ஆங்கில ஆராய்ச்சி முன்னுரையுடன் பதிப்பிக்கப்பெற்றுள்ளது. அதன் பிறகு மு. சண்முகம் பிள்ளையின் பொழிப்புரையுடன் 1973ஆம் ஆண்டு 'தமிழாய்வு' இதழில் அச்சில்வாரா அருந்தமிழின் இரண்டாம் வெளியீடாக வெளிவந்துள்ளது. பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு சென்னைப் பல்கலைக்கழக வெளியீடாக 1973ஆம் ஆண்டு வெளிவந்து உள்ளது.

நாசிகேது புராணம்

நாசிகேது என்பவனுடைய வாழ்க்கை நிகழ்ச்சியை எடுத்துக் கூறும் 'நாசிகேது புராணம்' உரைநடையாலானது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. திவ்வியாங்கன் என்னும் மகரிஷி தன்மகன் நாசிகேதுவைப் பூசைக்குப் பூ கொண்டுவரப் பணிக்கின்றான். நாசிகேது மற்ற ரிஷி குமாரர்களுடன் விளையாடிவிட்டுக் காலங்கடந்து பூ கொண்டு வர மகரிஷி சாபமிடுகின்றார். அதாவது, நீ எமராசன் அறியாமல் எமலோகம் புகுவாய் என்கின்றார். தன்நிலை உயர்ந்த மகரிஷி, நீ எமலோகம் சென்று நிகழ்காலச் சம்பவங்களை அறிந்து உன் கூடு அழிவது முன்னே உன் கூட்டில் புகுந்து பிராணனுடன் எழுந்திருப்பாய்' என்று சாப விமோசனமும் தருகிறார். இக்கூற்றுப்படி நாசிகேது எமலோகம் சென்று அங்கு நடப்பவற்றையெல்லாம் நேரில் பார்த்துவிட்டு மீண்டும் தம்முடலில் புகுந்து உயிர்த்தெழுந்து தாம்

எமலோகத்தில் கண்டவற்றை இங்குள்ளோர் அறியுமாறு கூறுவதே இக்கதை. இந்நூலை ஏ. ரங்கசாமி முதலி & சன்ஸ் வெளியீடாக 1926, 1934ஆம் ஆண்டுகளில் முதல் மற்றும் இரண்டாம் பதிப்புகளாக வெளியிட்டுள்ளனர். பின்னர் என். சரவண முதலியார் 1929ஆம் ஆண்டு மீண்டும் இந்நூலைப் பதிப்பித்திருக்கின்றார். இத்தனிநூல் பதிப்பினைத் தொடர்ந்து ம. சீராளன் சரஸ்வதிமகால் நூலகச் சுவடியை ஆதாரமாகக் கொண்டு 1973ஆம் ஆண்டு 'சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ்'ப் பகுதியில் தனிப் பக்கவெண் கொடுத்துப் பதிப்பித்து இருக்கின்றார். இவ்விதழ்ப் பதிப்பு சரஸ்வதிமகால் நூலக வெளியீடாக 1973ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. அடுத்து இந்நூல் திருவனந்தபுரம் கேரளப் பல்கலைக்கழக வெளியீடான 'ப்ராசீன கைரளி' எனும் இதழில் ப. பத்மநாபன் தம்பி 1994ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார்.

நாடோடிப் பாடல்கள்

பாமர மக்களின் நினைவில் வாழ்ந்து மரபாக, வாய்மொழியினின்று எடுத்துரைக்கப்பட்டு வரும் நாட்டுப்புறப் பாடல்கள் சில இன்றும் சுவடிகளில் காணக்கிடக்கின்றன. அவற்றுள் 75 பாடல்கள் கொண்டதே இந்நூல். இந்நூலை 1995ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் எஸ். தியாகராஜன் வெளியிட்டுள்ளார்.

நாலடியார்

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் திருக்குறளுக்கு அடுத்தபடியாக எண்ணத் தக்கது 'நாலடியார்' ஆகும். இது, கடவுள் வாழ்த்து 1, நூல் 40 அதிகாரங்களில் அதிகாரத்திற்குப் பத்துப் பாடல்கள் வீதம் 400 பாடல்கள் கொண்டது. பலர் பாடிய பாடல்களின் தொகுப்பாக இந்நூலமைந்துள்ளது. இதை 'நாலடி' என்றும், 'நாலடியார்' என்றும், 'நாலடி நானூறு' என்றும் அழைப்பர். இதனைத் தொகுத்தவர் 'பதுமனார்' ஆவார். திருக்குறளும் நாலடியாரும் நூல் அமைப்பில் மிகுந்த ஒற்றுமை காணப்படுகின்றது. திருக்குறள் சூத்திரம் போன்று

இரண்டு அடிகளில் கருதிய பொருளைச் சுருங்கச் சொல்லி விளங்கவைக்கிறது. நாலடியாரோ, பொருள்களைத் தக்க உதாரணம் காட்டி விளக்குகின்றது. இந்நூலுக்குப் பதுமனார், தருமர், உரையாசிரியர் பெயர் தெரியாத ஓர் உரை என மூன்று பழைய உரைகள் உண்டு. இவையல்லாமல் புதுவை நயனப்ப முதலியார் (1844), களத்தூர் வேதகிரி முதலியார் (1855), கந்தசாமி முதலியார் (1860, 1863), சிதம்பரம் கருணானந்த சுவாமிகள் (1869), திருமயிலை முருகேச முதலியார் (1873), வை.மு. சடகோபராமாநுஜாசாரியார், கிருஷ்ணமாசாரியார் போன்றோரின் உரைப்பதிப்புகளும் வெளிவந்திருக்கின்றன. இவற்றில் வை.மு. சடகோபராமாநுஜாசாரியார், கிருஷ்ணமா சாரியார் ஆகிய இருவரின் உரைகள் மக்களால் பெரிதும் போற்றப்பட்டு வந்துள்ளன. இவ்விரு உரைகளிலும் மேற்கொள்ளவேண்டிய திருத்தப்பதிப்பாகச் சத்தியவாகீசு வையரின் புத்துரை ஒன்று 1950-52ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழ்ப் பகுதிகளில் வெளிவந்துள்ளது. இப்பதிப்புகளல்லாமல் நாலடியார் மூலப் பதிப்புகள் பலவுண்டு.

நாலுமந்திரி கதை

சின்னத்தம்பியின் 'நாலுமந்திரி கதை' காப்பு வெண்பா 1, நூல் 468 கண்ணிகளாலானது. அளகாபுரி என்னும் ஊரினை ஆளும் அழகேந்திரன் என்னும் அரசன், தென்மதுரா புரியிலிருந்து வந்த போதவாதித்தன், போத விபூஷணன், போத வியாகரன், போத சந்திரன் என்னும் நான்கு பேர்களின் அறிவுத்திறனை அறிந்து, அவர்களைத் தன் அமைச்சர்களுக் குள்ளும் பெரியவனாகிய போத வாதித்தன் என்பானுடைய நடத்தையின் மேல் ஐயங்கொண்டு, அதனை மற்ற அமைச்சர் களிடம் எல்லாம் கூற, அதற்கு அவர்கள், 'ஆராய்ந்து பாராமல் ஒருவர் மீது குற்றஞ்சுமத்தலாகாது; அவ்விதஞ் செய்யின் நம்மைப் பழிவந்து அடையும்' என்று கூறி, அதனை விளக்கு வதற்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு கதையை எடுத்துக் கூறினர். இறுதியில் போதவாதித்தனை நேரில் வரவழைத்து, அவன் வாய்மொழி மூலம் அவன் நடத்தைக்குரிய உண்மைக்

காரணங்களை அறிந்து, பின்னர் அவன் குற்றமற்றவன் என்பதை அறிந்து, அவனுக்கும் அவனைச் சேர்ந்த மற்ற மூன்று அமைச்சர்களுக்கும் மேலும் பல சிறப்புகளைச் செய்தான் அழகேந்திரராசன் என்பதே இந்நூலின் கதை. இந்நூலை 1962ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் த. கிருட்டிணமூர்த்தி வெளியிட்டுள்ளார். இதனின்றும் வேறான நாலுமந்திரி கதைகள் பல உண்டு.

நான்மணிக்கடிகை

விளம்பி நாகனாரின் 'நான்மணிக்கடிகை' கடவுள் வாழ்த்து 2, நூல் 99 ஆக 101 பாடல்களாலானது. இது, பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் நான்காவதாக வைத்துப் போற்றத்தக்கதாகும். ஒவ்வொரு பாடலிலும் ஒத்த நான்கு சிறந்த கருத்துக்களைத் தேர்ந்தெடுத்துப் பிணைத்து, அழகிய சொற்கோவைகளில் இந்நூலை ஆசிரியர் அமைத்துள்ளார். இந்நூலுக்குப் பழையவுரை ஒன்றுண்டு. இவ்வுரையினை ரா. இராகவையங்கார் 1904ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழில் தனிப் பக்கவெண் கொடுத்துப் பதிப்பித்திருக்கின்றார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு செந்தமிழ் வெளியீடு 13ஆவதாக 1904, 1911ஆம் ஆண்டுகளில் முறையே முதல் மற்றும் இரண்டாம் பதிப்பு வெளிவந்துள்ளது. இப்பதிப்புகளுக்கு முன்னோடியாகத் தி.ஈ. ஸ்ரீநிவாச ராகவாசாரியாரின் உரைப்பதிப்பு 1872ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. அடுத்து, வே. இராஜகோபாலையர் (1924), எஸ். வையாபுரிப்பிள்ளை (1944), இளவழகனார் (1985), சாமி சிதம்பரனார் (1985), கி.ஆ.பெ. விசுவநாதன் (1980), வே.இரா. மாதவன் (2001) போன்றோரின் பதிப்புகளும் இந்நூலுக்குண்டு. இத்தனி நூற்பதிப்பன்றிப் பதினெண்கீழ்க் கணக்குப் பதிப்புகளிலும் இந்நூல் இடம்பெற்றிருக்கின்றது.

நியதிப்பயன்

காழிக்கண்ணுடைய வள்ளலாரின் 'நியதிப்பயன்' 103 கட்டளைக்கலித்துறையாலானது. திருஞானசம்பந்தரை

முன்னிலைப்படுத்திப் பாடிய இந்நூல் வினாவும் விடையுமாக அமைக்கப்பெற்றுள்ளது. நித்திய கரும நியதிகள் ஒவ்வொன்றையும் குறிப்பிட்டு, ஏன் இவ்வாறு செய்யவேண்டும் என்று முதல் 23 பாடல்களில் ஆசிரியர் திருஞானசம்பந்தரைக் 'காழிக் கண்ணுடைச் சம்பந்தனே' என்று விளித்து வினாவுகின்றார். மற்ற பாடல்களில் அவற்றுக்கு விடையாகக் குருவின் கூற்றாக்கிக் கூறுகின்றார். இந்நூலைப் ப.அ. முத்துத் தாண்டவராய பிள்ளை 1932ஆம் ஆண்டு 'செந்தமிழ்ச் செல்வி' இதழ்ப் பகுதிகளில் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1932ஆம் ஆண்டு சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடாக வெளிவந்துள்ளது.

நீதிசாரக் கரு

மக்களுக்கும் சிறப்பாக அரசர்களுக்கும் உரியனவாய்ப் பல்வேறு நீதிகளைத் தெரிவிக்கும் 'நீதிசாரக் கரு' கடவுள் வாழ்த்து 1, நூல் 66 விருத்தங்களாலானது. இந்நூல் நூல்களினது திறமும் வலமும், நால்வகை மனிதர் குணாகுணத்தினது திறமும் வலமும், நீதியினது திறமும் வலமும், அரசினது திறமும் வலமும், ஆலோசனையினது திறமும் வலமும், துணிவினது திறமும் வலமும், செய்கையினது திறமும் வலமும், சொல்லினது திறமும் வலமும் ஆகிய எட்டு அதிகாரங்களைக் கொண்டு உள்ளது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை 1952ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் வி.எஸ். கிருஷ்ணன் வெளியிட்டுள்ளார்.

நீதி நூல்

ஔவையாரின் ஆத்திசூடியைப் போல் பெயரறியப் பெறாத ஒரு புலவரால் இயற்றப்பெற்றது 'நீதிநூல்' ஆகும். இது, ககர வருக்கம் 12ம், சகர வருக்கம் 11ம், ஞகர வருக்கம் 1ம், தகர வருக்கம் 11ம், நகர வருக்கம் 10ம், பகர வருக்கம் 3ம் ஆக 48 வருக்கங்களில் இந்நூல் அமைந்துள்ளது. ஏனைய பகுதிகள் கிடைக்கவில்லை. காட்டாக,

"கடன்படு வழக்கம் கண்ணியம் குறைக்கும்"
"கொடுப்பதைத் தடுப்பது கொடும் பாவமது"
"சுருக்கி யெழுதிப் பெருக்கிப் போதி"
"நோக்க மறிந்து நுவல்வது நன்று"

போன்றவற்றைக் காட்டலாம்.

ஔவையாரின் ஆத்திசூடியை ஒத்த கருத்துடைய, மொழிக்கு முதலில் வரும் வருக்க எழுத்துகளின் அடிப்படையில் அமைந்த இந்நூல் 1984-85ஆம் ஆண்டு 'உயராய்வு' இதழில் வெளிவந்துள்ளது. பல பதிப்புகளைக் கண்ட ச. வேதநாயகம் பிள்ளையின் நீதி நூலினின்றும் இது வேறானது.

நீதிமொழி

எட்டயபுரம் சமஸ்தானம் சம்புலிங்கபுரம் வீரராகவக் கவிராயர் குமாரர் திருவண்ணநாதக் கவிராயரின் 'நீதிமொழி' 111 அகவலடிகளாலானது. மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள் ஒவ்வொன்றினையும் முதல் எழுத்தாகக் கொண்டு எழுதப்பெற்ற நீதிமொழிகள் அகரவரிசைப்படி அமைக்கப் பெற்றுள்ளன. ஒவ்வோரடியும் ஒரு நீதியை வலியுறுத்து கின்றது. குறிப்பாக,

"அறிவை உயிரினும் அரிதென ஓம்புக
ஆகும் பொருளை அழிக்கினும் அழியா"

என்ற வரிகளைச் சுட்டலாம். இந்நூல் 1904ஆம் ஆண்டு விவேகபாநு இதழில் வெளிவந்துள்ளது.

நீதிவெண்பா

நீதிக் கருத்துக்களை விளக்கும் 'நீதிவெண்பா' காப்பு 1, நூல் 100 ஆக 101 பாடல்களாலானது. இது, நீதியோடு உலகியலையும் எளிய நடையில் எல்லோரும் உணரும் வகையில் உதாரணங்களுடன் அமைக்கப் பெற்றுள்ளது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூல், களத்தூர் வேதகிரி முதலியாரின் உரை (1838), காஞ்சி சபாபதி முதலியார்

உரைபாடம் (1862, 1891), பிரபாகர அச்சுக்கூடப் பதிப்பு (1869), பரப்பிரம்ம முத்திராசாலைப் பதிப்பு (1874 - 2ம் பதிப்பு), விவேக விளக்க அச்சுக்கூடப் பதிப்பு (1876), கலாசாலை அச்சுக்கூடப் பதிப்பு (1880), தஞ்சை திருவருட்பிரகாச அச்சுக்கூடப் பதிப்பு (1881), சகலகலாநிலைய அச்சுக்கூடப் பதிப்பு (1888), பத்மநாப விலாச அச்சுக்கூடப் பதிப்பு (1891), ஆறுமுக நாவலர் (1903, 1908, 1913, 1916, 1920, 1921, 1923, 1927, 1932), காஞ்சி சபாபதி முதலியாரின் உரையைக் கருணானந்த சுவாமிகள் (1918), யாழ்ப்பாணம் அருணாசல உபாத்தியாயரின் புத்துரை (1904, 1908) போன்றோரின் பதிப்புகளைப் பெற்றுள்ளது. இப்பதிப்புகளைத் தொடர்ந்து மு. மாணிக்கவாசகம் பிள்ளையின் விளக்கவுரையை 1923-25ஆம் ஆண்டு 'பைந்தமிழ்' இதழ்ப் பகுதிகளில் வெளியிட்டுள்ளது. பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1925ஆம் ஆண்டு தனிநூலாகவும் வெளிவந்துள்ளது. இதைத் தொடர்ந்து தி.சு. பாலசுந்தரம் பிள்ளையின் (இளவழகனார்) உரையுடன் சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம் (1941-2ம் பதிப்பு, 1947-4ம் பதிப்பு, 1962-6ம் பதிப்பு), ச. பொன்னுசாமிப் பிள்ளையைப் பதிப்பாசிரியராகக் கொண்டு சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் 'அறநெறிச் சாரம், நீதிநெறி விளக்கம்' ஆகியவற்றுடன் 'நீதிவெண்பா'வையும் சேர்த்து 1962ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளது. அடுத்து, ஸ்ரீகுமரகுருபரனில் குறிப்புரையுடன் 1998ஆம் ஆண்டு இந்நூல் வெளியிடப் பெற்றுள்ளது.

நுண்பொருண் மாலை

ஆழ்வார் திருநகரித் திருமேனி - இரத்தினக் கவிராயரின் 'நுண்பொருண் மாலை' திருக்குறள் பரிமேலழகர் உரைக்கு உரையாக அமைந்துள்ளது. திருக்குறளில் உள்ள 639 குறட்பாக்களுக்கு இவ்வுரை அமைந்திருக்கின்றது. இந்நூலை நாராயணையங்கார் 1908-11ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழ்ப் பகுதிகளில் வெளியிட்டுள்ளார். இவ்விதழ்ப் பதிப்பை நீண்ட கால இடைவெளிக்குப் பிறகு 1980ஆம் ஆண்டு இ. சுந்தரமூர்த்தி சென்னை தேன்மொழி நூலக வெளியீடாக வெளியிட்டு உள்ளார்.

நூற்றெட்டுத் திருப்பதி வெண்பா

திருமால் திருப்பதிகள் நூற்றெட்டைப் பற்றிக் கூறும் 'நூற்றெட்டுத் திருப்பதி வெண்பா' காப்பு 25, நூல் 113 ஆக 138 வெண்பாக்களாலானது. இந்நூற்றெட்டுத் தலங்களுள் ஒன்று பரமபதமான வைகுந்தமே. மற்றவற்றுள் சோழநாட்டுள் நாற்பதும், பாண்டி மண்டலத்துள் பதினெட்டும், தொண்டை மண்டலத்துள் இருபத்திரண்டும், மலைநாட்டுள் பதின்மூன்றும், நடுநாட்டில் இரண்டும், வடநாட்டில் பன்னிரண்டும் அடங்கியுள்ளன. நடுநாட்டுள் இரண்டு திருப்பதிகள் உள்ளன என்று மற்றைய நூல்களில் கூறப்பட்டிருப்பதனை இந்நூலாசிரியர் சோழமண்டலத்தில் ஒன்றும், தொண்டை மண்டலத்தில் ஒன்றுமாகச் சேர்த்துள்ளார். இந்நூலை 1957ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் வி.எஸ். கிருஷ்ணன் வெளியிட்டுள்ளார்.

நெஞ்சறி விளக்கம் -1

கணபதிதாசரின் 'நெஞ்சறிவிளக்கம்' எனும் நூலிலிருந்து வேறான இந்நூல் 12 வெண்பாக்களாலானது. யோகம், ஞானம் பற்றிச் சுருக்கமாகக் கூறும் இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை 1950ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் தி. சந்திரசேகரன் வெளியிட்டுள்ளார். கணபதிதாசரின் நெஞ்சறிவிளக்கத்தில் இருந்து இந்நூல் வேறானது.

நெஞ்சறி விளக்கம் - 2

கணபதிதாசரின் 'நெஞ்சறி விளக்கம்' 100 அறுசீர் விருத்தத்தாலானது. இந்நூல் மனத்தை நோக்கி 'நாகநாதரை வணங்கு' என்று கூறுவதாக அமைந்துள்ளது. மக்கட்கு இன்றியமையாத ஒழுக்கத்தையும், கடவுள் பக்தியையும் வளர்ப்பதற்குச் சிறந்த சாதனமாக இந்நூல் அமைந்துள்ளது. நெஞ்சை விளித்து அதற்கு அறிவுரை கூறும் முறையில் தத்துவ உண்மைகளை இந்நூல் கூறுகின்றது. உவவேத விலாச அச்சுக்கூடப் பதிப்பு (1868), தண்டலம் சுப்பராய முதலியார் (1871), விவேக விளக்க அச்சுக்கூடப் பதிப்பு (1871), மாணிக்க

முதலியார் (1873), புரசைபாக்கம் ஏழுமலைப்பிள்ளை (1880, 1884), இலக்கணக் களஞ்சிய அச்சுக்கூடப் பதிப்பு (1884), பரப்பிரம்ம முத்திராசாலைப் பதிப்பு (1896), மா. வடிவேலு முதலியாரின் உரைப்பதிப்பு (1906, 1925), ரெங்கசாமி முதலியார் & சன்ஸ் பதிப்பு (1907) போன்ற பல பதிப்புகளை இந்நூல் பெற்றுள்ளது. பி.எஸ். சுலோசனா 1951ஆம் ஆண்டு 'அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ்'ப் பகுதியில் இந் நூலை வெளியிட்டுள்ளார். பின்னர் இந்நூலக அனுமதியுடன் தி. பட்டுச்சாமி ஓதுவாரின் குறிப்புரையுடன் 1953ஆம் ஆண்டு 'குமரகுருபரன்' இதழ் வெளியிட்டுள்ளது.

நெஞ்சுபதேசக் கீர்த்தனங்கள்

'நாராயணன் திருவடிகளை யடைந்து உய்வாயாக' என்று மனத்துக்கு உபதேசம் செய்வதாக அமைந்துள்ள 'நெஞ்சுபதேசக் கீர்த்தனங்கள்' 34 பாடல்களாலானது. பிறவி எடுத்து அடையும் துன்பங்கள், உலக வாழ்வின் நிலையற்ற தன்மை முதலியவற்றை விளக்கித் திருமாலின் திருவடிகளில் சரணடைந்தால் எல்லாவிதத் துன்பங்களினின்றும் நீங்கிப் பேரின்பம் பெறலாம் என்பதை இந்நூல் வலியுறுத்துகின்றது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை 1952ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் வி.எஸ். கிருஷ்ணன் வெளியிட்டுள்ளார்.

நெல்லை இதழகல் அந்தாதி

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் 'நெல்லை இதழகல் அந்தாதி' 33 கட்டளைக்கலித்துறையாலானது. இது, திருநெல்வேலியில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள சிவபெருமானின் புகழைப் பேசுவது. இந்நூல் 1985-86ஆம் ஆண்டு மாதாந்திர அமுதம் இதழில் வெளிவந்துள்ளது.

நெல்லைக் குமரன் துதி

'திருவாவடுதுறை யாதீனம்' ஆறாவது குருமகா சந்நிதானமாக விளங்கிய சீர்வளர்சீர் நெல்லைக் குமாரசாமி

சுவாமிகள் மீது பாடப்பெற்ற 'நெல்லைக் குமரன் துதி' 13 பாடல்களாலானது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரிய வில்லை. இதில் சீர்வளர்சீர் குமாரசாமி சுவாமிகளின் சீரிய பணிகள் குறிப்பிடப்பெற்றுள்ளன. அவர்தம் சைவப் பற்று, நமச்சிவாய மூர்த்திகளின் புகழைப் பரப்பும் விதம், நீக்கமற நிறைகின்ற தன்மை, நியதியிற் பிறழாத தன்மை போன்றன இந்நூலில் நயமுற விளக்கப்பெற்றுள்ளன. இந்நூலை 1965ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் பூ. சுப்பிரமணியம் வெளியிட்டுள்ளார்.

நெல்லை வருக்கக் கோவை

அம்பிகாபதியின் 'நெல்லை வருக்கக் கோவை' காப்பு மற்றும் சிறப்புப் பாயிரம் உள்பட 100 பாடல்களாலானது. இது, திருநெல்வேலியில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள நெல்லைநாதர் மீது பாடப்பெற்றுள்ளது. அகப்பொருட் துறைகளமைய மொழிக்கு முதலாக வரும் எழுத்துக்கள் ஒவ்வொரு காரிகையின் மொழி முதற்கண் முறையே வரத் தொடுக்கப் பெற்றிருக்கும் இந்நூலில் 'தொ' என்ற எழுத்திற்கு மட்டும் இரண்டு பாடல்கள் அமைந்துள்ளன. இதை 'நெல்லை மாலை' என்றும் அழைப்பர். இந்நூலை மு.ரா. அருணாசலக் கவிராயர் வெளியிட்ட வேணுவனபுராணம், காந்திமதியம்மைப் பிள்ளைத்தமிழ் ஆகியவற்றோடு சேர்த்து சிறுகுறிப்புரையோடு மதுரை விவேகபாநு அச்சியந்திரசாலையில் 1914ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார். அதன் பின்னர் நெல்லை வருக்கக் கோவையை எல். உலகநாதப் பிள்ளை 1936ஆம் ஆண்டு 'தமிழ்ப் பொழில்' இதழில் தனிப்பக்கவெண் கொடுத்து வெளியிட்டு உள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு தஞ்சைக் கூட்டுறவுப் பதிப்பகத்தின் 11ஆவது வெளியீடாக 1936ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது.

நேமிநாதம்

குணவீரபண்டிதரின் 'நேமிநாதம்' எனும் இலக்கண நூல் 97 வெண்பாக்களாலானது. இருவேறு சிறப்புப்

பாயிரங்களையும் இந்நூல் பெற்றுள்ளது. தொல்காப்பியம் - எழுத்து, சொல், பொருள் என்று விரித்துக் கூறியதை இந்நூல் சுருக்கிக் கூறுகின்றது. இதைச் 'சின்னூல்' என்றும் அழைப்பர். இந்நூல், திருவேங்கட முதலியாரால் 1835ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பெற்றிருக்கின்றது. இந்நூலுக்குப் பழையவுரை ஒன்று உண்டு. இவ்வுரையுடன் ரா. இராகவையங்கார் 1902-03ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழ்ப் பகுதிகளில் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ் இதழ்ப் பதிப்பு செந்தமிழ் வெளியீடாக 1903, 1923ஆம் ஆண்டுகளில் முறையே முதல் மற்றும் இரண்டாம் பதிப்பு வெளிவந்துள்ளது. இதைத் தொடர்ந்து மணி. திருநாவுக்கரசு முதலியார் 1927ஆம் ஆண்டு ஓர் பதிப்பைக் கொண்டு வந்துள்ளார். ரா. இராகவையங்கார் பதிப்பித்த பழைய உரையையும் தம்முடைய உரையையும் சேர்த்து கா.ர. கோவிந்தராச முதலியார் சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழக வெளியீடாக 1945, 1973ஆம் ஆண்டுகளில் முறையே முதல் மற்றும் இரண்டாம் பதிப்பு வெளியிட்டுள்ளார்.

பகவத்கீதைக் கும்மி

மகாபாரதப் போரில் கண்ணபிரான் அருச்சுனனுக்கு உபதேசம் செய்த 'பகவத்கீதை'யைத் தமிழ்மொழியில் தமிழ்ப் பிரபந்த வகைகளில் ஒன்றாக 'கும்மி'யில் அமைக்கப்பெற்றதே 'பகவத்கீதைக் கும்மி' ஆகும். தெய்வ வணக்கம், நூற்பெயர், நூற்பெருமை, நூற்பயன், நூலின் அவிரோத நிலைமை, அவையடக்கம் போன்றன 14 பாடல்கள், நூல் 47 பாடல்கள் ஆக 51 பாடல்களாலானது. பல அத்தியாயங்களுடன் அமைந்து உள்ள இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூல் 1901-03ஆம் ஆண்டுகளில் முதல் அத்தியாயம் மட்டும் விவேக பாநு இதழில் வி.பி. சுப்பிரமணிய முதலியார் உரையுடன் வெளிவந்துள்ளது.

பஞ்சநதீசுரர் தோத்திரம்

திருவையாற்றில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள சிவபெருமானாகிய 'பஞ்சநதீசுரர்' மீது இந்நூல் பாடப் பெற்று

உள்ளது. இரண்டு பன்னிருசீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தாலான இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூல் 1966ஆம் ஆண்டு சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழில் வெளிவந்துள்ளது.

பஞ்ச மரபு - முதற் பகுதி

அறிவனாரின் 'பஞ்ச மரபு' எனும் நூல் 249 வெண்பாக்களால் ஆனது. இந்நூலின் முதற் பகுதி 124 பாடல்களையும், இரண்டாம் பகுதி 116 பாடல்களையும் பெற்றுள்ளன. இசைக்கலையின் மரபினை இசைமரபு, வாச்சிய மரபு, நிருத்த மரபு, அபிநய மரபு, தாள மரபு என்று ஐந்து வகையாகக் கொண்டு பஞ்சமரபு எனப் பெயர் பெறுவதாயிற்று. இந்நூலில் இசை மரபு, நரம்புக்கருவி, யாழ், கண்டமரபு, நிருத்த மரபு, வகையொழிபு மரபு, வாச்சிய மரபு, பிண்ட மரபு, எழுத்து மரபு பற்றிக் கூறப்பெற்றுள்ளன. இந்நூலின் முதற் பகுதியை வே.ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் தம்முடைய உரையுடன் 1961-62ஆம் ஆண்டு 'செந்தமிழ்ச்செல்வி' இதழ்ப் பகுதிகளில் வெளியிட்டுள்ளார். அடுத்து 1973ஆம் ஆண்டு நூல் முழுமைக்கும் ப. சுந்தரேசனாரின் உரை வெளிவந்திருக்கின்றது. பிறகு வே.ரா. தெய்வசிகாமணிக் கவுண்டரின் இரண்டாம் பகுதிக்கான உரை 1975ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. இதே ஆண்டு இரு பகுதிகளும் இணைந்த மறுபதிப்பும் வெளிவந்திருக்கின்றது.

பஞ்சாக்கர மாலை

காழிக்கண்ணுடைய வள்ளலாரின் 'பஞ்சாக்கர மாலை' காப்பு உள்பட 60 வெண்பாக்களாலானது. இந்நூல் தூல பஞ்சாக்கரம், சூக்கும பஞ்சாக்கரம், சீவன்முத்தர் ஞானபூசைக் கிரமம் என்ற மூன்று பிரிவினையுடையது. தூல பஞ்சாக்கரத்தில் பஞ்சாக்கரம் தோன்றிய முறை, சிவலிங்கத்தில் அவ்வக்கரங்கள் நிற்கும் முறை, சத்திகளை அதிட்டிக்கும் முறை போன்றனவும் சூக்கும பஞ்சாக்கரத்தில் சிவானுபவம் அடையும்

விதம், சிவானுபவம் போன்றனவும் இந்நூலின் முற்பகுதியாக அமைந்துள்ளன. ஞானபாதத்தில் செய்யும் பூசைக்கிரமம் பற்றிப் பிற்பகுதியாக அமைந்துள்ளது. இந்நூலை 1898ஆம் ஆண்டு (மூலம் மட்டும்) மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை வெளியிட்டுள்ளது. பிறகு பல சுவடிகளையும் ஆய்ந்து திருவாரூர் எஸ். சோமசுந்தர தேசிகரால் பழையவுரையுடன் 1932ஆம் ஆண்டு 'சித்தாந்தம்' இதழில் வெளியிடப்பெற்று உள்ளது. பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு சமாஜ வெளியீடாக 1932ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது.

பட்டமதன வித்தார மாலை

கடிகைமுத்துப் புலவரின் 'பட்டமதன வித்தார மாலை' காப்பு வெண்பா 1, நூல் 98 அகவலடியாலான குறை நூலாகத் திகழ்கின்றது. மருதப்பன் என்னும் மன்னனுக்கு மன்மதனின் லீலைகளை இந்நூல் மாலையாகக் கூறுகின்றது. இதனுள் மன்மதனின் செயல்களில் அறச்செயல்கள் பல சிறப்பாக விளக்கப்பெற்றுள்ளன. இந்நூலை 1930ஆம் ஆண்டு தமிழ்ப்பொழில் இதழில் பண்டிதர் நாராயணசாமி வெளியிட்டுள்ளார்.

பட்டினத்தார் வெண்பா

திருவெண்காடர் என்னும் பட்டினத்தடிகளின் 'பட்டினத்தார் வெண்பா' 100 வெண்பாக்களாலானது. இந்நூல் சொற்சுவை, பொருட் சுவையோடு கூடி ஞானவழியை நெஞ்சறிவுறுத்துவதுமாக அமைந்துள்ளது. மேலும் இல்லறமே பல்லறங்களிலும் சாலச் சிறந்தது என்றும், அவ்வில்லறத்தை இனியதாக நடத்திப் பின்னர் துறவு கோடல் இனிது என்றும் இந்நூல் விளக்குகின்றது. இந்நூலை 1943ஆம் ஆண்டு சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழில் வி.எஸ். பரமசிவன் வெளியிட்டுள்ளார்.

பட்டினத்துப்பிள்ளை சரித்திரச் சுருக்கம் (அகவல்)

திருவள்ளுவர், திருமூலர், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர், தாயுமானவர்

போன்றோரின் திருக்கூட்ட மரபில் பட்டினத்துப் பிள்ளையும் ஒருவராகக் கருதப்படுபவர். இவர்தம் வாழ்க்கை வரலாற்றை 196 அகவலடியாக அமைந்ததே 'பட்டினத்துப் பிள்ளை சரித்திரச் சுருக்கம்' ஆகும். பட்டினத்துப்பிள்ளையின் இளமைப் பருவம் முதல் இறுதி வரையிலான வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கமாக இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை 1979ஆம் ஆண்டு சரஸ்வதி மகால் நூலகப் பருவ இதழில் ச. திலகம் வெளியிட்டுள்ளார்.

பதிக உந்தி நூல்

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் 'பதிக உந்தி நூல்' காப்பு நேரிசை வெண்பா 1, நூல் 11, நூற்பயன் 1 ஆக 13 பாடல்களாலானது. மனிதனின் செயல்களைக் கடவுளின் பெருமைகளோடு ஒப்பிட்டு மனிதனை வழிப்படுத்துவதாக இந்நூல் அமைந்துள்ளது. ஒவ்வொரு பாடலின் ஈற்றிலும் 'உந்தீபற' எனும் தொடர் மகுடமாக அமைக்கப்பெற்றுள்ளது. இந்நூல் 1990ஆம் ஆண்டு மாதாந்திர அமுதம் இதழில் வெளிவந்துள்ளது.

பதிபசுபாசத் தொகை

மறைஞானதேசிகரின் 'பதிபசுபாசத் தொகை' 25 குறள் வெண்பா கொண்டதாகத் திகழ்கின்றது. திரிபதார்த்தங்களின் உண்மை உணர்வு தோன்ற உபதேச முறையில் தொகுத்துச் சொல்லப்பட்ட நூல் 'பதிபசுபாசத் தொகை' ஆகும். இந்நூல் காப்பு, சிவசக்தி, நந்தி முதலியோர் வணக்கத்தோடு பதி தரிசனம், பசு தரிசனம், பாச தரிசனம், அனுக்கிரகம், பலன் ஆகிய ஐந்து இயல்களில் அமைந்துள்ளது. இந்நூல், பால்வண்ண முதலியாரின் உரையுடன் 1903ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. இவ்வுரைப் பதிப்பு பால்வண்ண முதலியாரால் 1906ஆம் ஆண்டு 'விவேகபாநு' இதழில் வெளியிடப்பெற்றுள்ளது. பின்னர் இவராலேயே சில திருத்தங்களுடன் 1913ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழில் வெளியிடப்பெற்றுள்ளது. இதற்குப் பிறகு பால்வண்ண முதலியாரின் திருத்தவுரை ஜே.எம். நல்லசாமியால்

1913ஆம் ஆண்டு 'சித்தாந்தம்' இதழில் வெளியிடப்பெற்று உள்ளது. இப்பதிப்புகளுக்குப் பிறகு கே. சோமசுந்தரனார் சுவடிகளை ஆய்ந்து 1929ஆம் ஆண்டு 'தமிழ்ப்பொழில்' இதழில் வெளியிட்டிருக்கின்றார். இது 'செந்தமிழ்' இதழ்ப் பதிப்பின் மறுபதிப்பாகத் தோன்றுகின்றது. அடுத்து, தருமையாதீனம் 1940ஆம் ஆண்டு ஒரு பதிப்பைக் கொண்டுவந்துள்ளது.

பதிபசுபாசப் பனுவல்

மறைஞானசம்பந்தரின் 'பதிபசுபாசப் பனுவல்' 337 குறள்வெண்பாவாலானது. பாயிரம், பிரமாணம், பதி சாதனம், பசு சாதனம், பாச சாதனம், பொது, போதகம் ஆகிய ஏழு இயல்களையுடைய இந்நூல் சைவ சித்தாந்த சாத்திரமாகத் திகழ்கின்றது. இந்நூலுக்குச் சிதம்பரநாத தேசிகர் உரை ஒன்று வரைந்திருக்கின்றார். 1928-30ஆம் ஆண்டு 'தமிழ்ப்பொழில்' இதழ்ப் பகுதிகளில் எல். உலகநாத பிள்ளை இந்நூலின் மூலப்பகுதியை மட்டும் வெளியிட்டுள்ளார். அம்பலவாண தேசிக மூர்த்திகளின் 'பதிபசுபாசப்பனுவல்' ஒன்றுண்டு. இவ்விரண்டும் வேறுவேறானவை.

பதிபசுபாச வகை

திரிபதார்த்தங்களான பதி, பசு, பாசம் ஆகிய மூன்றின் வகைப்பாடே 'பதிபசுபாச வகை' ஆகும். உரைநடையில் அமைந்த இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. பதிபசுபாசங்களுக்குரிய சுபாவம், வியாப்தி, வியாபகம், குணம், விசேடம், ரூபகம், ரூபம், சொரூபம், தரிசனம், சுத்தி ஆகிய பத்து வகைகளை இந்நூல் பிரித்துக்காட்டுகின்றது. இவையல்லாமல் 'பசு' வகையானது மேற்கூறிய பத்து வகைகளுடன் 'லாபம்' ஒன்றைப் பெற்று பதினொன்றாக்கப் பெற்றுள்ளது. 'பதி' வகையானது முன் சுட்டிய பத்து வகைகளில் 'சுத்தி' வகைக்கு யோகம், போகம் என்ற இரண்டு வகைகள் சேர்த்துப் பதினொன்றாக்கப் பெற்றுள்ளது. ஆகப் பதிபசுபாச வகைப் பாட்டில் 32 வகைகள் இடம்பெற்றுள்ளன. இந்நூலை 1928ஆம் ஆண்டு 'தமிழ்ப்பொழில்' இதழில் எல். உலகநாத பிள்ளை வெளியிட்டுள்ளார்.

பத்திநெறிப் பதிகம்

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் 'பத்தி நெறிப் பதிகம்' காப்பு வெண்பா 1, நூல் 12 எண்சீர் விருத்தத்தா லானது. பக்தி கொள்வதற்குரிய நெறிமுறைகள் எவையெவை, முருகப்பெருமானிடம் பக்தி கொள்ளும் முறைகள் போன்றன இந்நூலில் விளக்கப்பெற்றுள்ளன. இந்நூல் 1955ஆம் ஆண்டு குமரகுருபரன் இதழில் வெளிவந்துள்ளது.

பத்மகிரிநாதர் தென்றல்விடுதூது

பலபட்டடைச் சொக்கநாத பிள்ளையின் 'பத்மகிரிநாதர் தென்றல்விடுதூது' காப்பு 1, நூல் 123 கண்ணிகளாலானது. இந்நூல் பத்மகிரி (திண்டுக்கல்) எனும் தலத்தில் கோயில் கொண்டுள்ள ஸ்ரீபத்மகிரிநாதர் பவனி வரும்போது அவரைத் தரிசித்து அவர்பால் அன்பு கொண்ட தலைவி ஒருத்தி, தென்றலை அவர்பால் தூது விட்டதாக அமைந்துள்ளது. இந்நூலை உ.வே. சாமிநாதையர் தம்முடைய குறிப்புரையுடன் 1932ஆம் ஆண்டு 'கலைமகள்' இதழ்ப் பகுதிகளில் வெளியிட்டு உள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1932ஆம் ஆண்டு கலைமகள் வெளியீடாகவும், இவற்றின் நான்காம் பதிப்பை 1952ஆம் ஆண்டு தியாகராச விலாசமும் வெளியிட்டுள்ளன.

பரத சாத்திரம்

அரபத்த நாவலரின் 'பரத சாத்திரம்' பாயிரம் உள்பட 298 பாடல்களால் ஆனது. இந்நூல் பாயிரம், பாவவியல், இராகவியல், தாளவியல், ஒழிபியல் என்னும் பகுதிகளைக் கொண்டுள்ளது. இது பெரும்பாலும் நூற்பாவால் இயன்று இடையிடையே பிற பாக்களும் விரவப்பெற்றுப் பழைய உரையுடன் விளங்குகின்றது. இதற்கு உரையெழுதியவர் இன்னாரெனத் தெரியவில்லை. இந்நூலில் 32 இராகங்களுக்கு இலக்கணம் கூறப்பெற்றுள்ளது. இந்நூலுக்குப் பழைய உரை ஒன்றுண்டு. இப்பழைய உரையுடன் பல ஆண்டுகளுக்கு முன்பு இந்நூலின் ஒரு பதிப்பு வெளிவந்திருக்கின்றது. அதாவது, "இப்பரத சாஸ்திரம் நெடு நாளைக்கு முன்பே

அச்சிட்டு வெளிப்படுத்தப்பெற்றுள்ளது. அச்சுப்படிகள் இந்நாளிற் கிடைக்காமையால் இந்நூற் பொருளைத் தமிழ்மக்கள் அறிந்து மகிழ்தற்கு இயலாது போயிற்று. இந்நூலின் அச்சுப்படியொன்று நம் கரந்தைத் தமிழ்ச்சங்கச் சுவடி நிலையத்திற் சேகரிக்கப்பெற்றிருந்தது" என்பதால் இந்நூல் க. வெள்ளைவாரணனாரால் பழைய உரையுடன் 1947-51ஆம் ஆண்டு 'தமிழ்ப் பொழில்' இதழ்ப் பகுதிகளில் வெளியிடுவதற்கு முன்பே வெளிவந்திருப்பது தெரிகிறது. பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு கரந்தை தமிழ்ச்சங்க வெளியீடாக 1952ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது.

பரமோபதேசம்

கண்கட்டி மறைஞானசம்பந்தரின் 'பரமோபதேசம்' 41 குறள்வெண்பாவாலானது. மறைஞானசம்பந்தரின் சைவ சமயக் கருத்துக்களைக் கூறுவதாக இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலை 1927ஆம் ஆண்டு 'தமிழ்ப்பொழில்' இதழில் எல். உலகநாத பிள்ளை வெளியிட்டுள்ளார்.

பரிபூரண சித்தி

பரிபூரணரின் 'பரிபூரண சித்தி' 156 பாடல்களாலானது. இந்நூல் நித்திய, அநித்தியப் பொருள்களைப் பகுத்தறிதல், இம்மை, மறுமை இன்பங்களின் இச்சையறுத்தல், உளம், புலன் இவற்றையடக்கல், இல்லற நிவர்த்தி, இன்பதுன்ப சகிப்பு, உயர் வாக்கியப் பற்று, மனவொருமையினை உட்கொளல், இறையடியடைய மாயா விவேகம், மாபூதாய குணம், புறநிலைப் பஞ்சகோசம், பஞ்சவத்தை, அட்டதாது, தாது விளைவு, விகார மெட்டு, நவத்துவாரம், தசநாடி, தசவாயு, சடாதார மும்மண்டலம், மும்மலம், முக்குணம், முப்பிணி, இருவினை, தத்துவத் திரட்டு, ஆத்தும தத்துவம், வித்தியா தத்துவம், சிவ தத்துவம், தத்துவம் 36, வேதாந்த தத்துவம், மகாவாக்கியம், அவாந்தர வாக்கியம், பதபதார்த்தம், முக்கியவிலக்கியம், தொம்பதவிலக்கியம், தற்பதவிலக்கியம், இலக்கண வாக்கியம், ஊனுயிர் வேறுபாடு போன்ற பல பொருள்களைப் பற்றி விளக்குகின்றது. இந்நூலை 1965ஆம் ஆண்டு அரசினர்

கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் பூ. சுப்பிரமணியம் வெளியிட்டுள்ளார்.

பர்த்ருஹரி சிருங்கார சதகம்

வடமொழியில் பர்த்ருஹரி எழுதிய 'சதகத்ரயம்' எனும் நூலின் மூன்று பகுதிகளில் ஒன்றின் தமிழ்மொழி பெயர்ப்பே 'பர்த்ருஹரி சிருங்கார சதகம்' ஆகும். பாயிரம் 3 உள்பட 104 பாடல்களாலானது. இந்நூலின் தமிழ்மொழி பெயர்ப்பை நமச்சிவாயப் புலவர், மு. மாணிக்கவாசகம் பிள்ளை ஆகியோர் செய்திருக்கின்றனர். நமச்சிவாயப் புலவரின் மொழி பெயர்ப்பில் வநிதையர் சரித பத்ததி, சம்போக பத்ததி, காமிநீகர்ஹண பத்ததி, சுவிரத்த துர்விரத்த பத்ததி, இருது வர்ணன பத்ததி என ஐந்து பத்ததிகள் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு பத்ததிக்கும் இருபது பாடல் வீதம் 100 பாடல்களும், அதிகப்படியான பாடல் ஒன்றும் இந்நூல் பெற்றுள்ளது. நமச்சிவாயப் புலவர், மு. மாணிக்கவாசகம் பிள்ளை ஆகியோரின் மொழிபெயர்ப்புகள் இந்நூலுக்குண்டு. நமச்சிவாயப் புலவரின் மொழிபெயர்ப்பைக் கொண்டு கிருஷ்ணசாமி ஐயர் 1878ஆம் ஆண்டு பதிப்பித்திருக்கின்றார். மு. மாணிக்கவாசகம் பிள்ளையின் மொழிபெயர்ப்பை அவர்தம் உரையுடன் மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை 1925ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளது. இவ்விரு மொழிபெயர்ப்புகளில் நமச்சிவாயப் புலவரின் மொழிபெயர்ப்பு மட்டும் சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் சுவடியாக உள்ளது. இச்சுவடியை ஆதாரமாகக் கொண்டு வ.ரா. கல்யாணசுந்தரம் 1950ஆம் ஆண்டு 'அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ்'ப் பகுதியில் மூலம் மட்டும் வெளியிட்டுள்ளார்.

பர்த்ருஹரி நீதிசதகம்

வடமொழியில் பர்த்ருஹரி எழுதிய 'சதகத்ரயம்' எனும் நூலின் மூன்று பகுதிகளில் ஒன்றின் தமிழ்மொழிபெயர்ப்பே 'பர்த்ருஹரி நீதிசதகம்' ஆகும். பாயிரம் 5 உள்பட 110 பாடல்களாலானது. இந்நூலின் தமிழ்மொழிபெயர்ப்பை

நமச்சிவாயப் புலவர், மு. மாணிக்கவாசகம் பிள்ளை ஆகியோர் செய்திருக்கின்றனர். நமச்சிவாயப் புலவரின் மொழிபெயர்ப்பில் அவிவேக பத்ததி, வித்தியா பத்ததி, மானசௌரிய பத்ததி, அர்த்த பத்ததி, துச்சன பத்ததி, சஜ்ஜன பத்ததி, பரோபகார பத்ததி, தயிரிய பத்ததி, தெய்வ பத்ததி, கன்ம பத்ததி ஆகப் பத்துப் பத்ததிகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. நமச்சிவாயப் புலவரின் மொழிபெயர்ப்பைக் கிருஷ்ணசாமி ஐயர் 1878ஆம் ஆண்டு பதிப்பித்திருக்கின்றார். இந்நூலுக்கு ஆர். சேதுநாராயண சர்மா உரை வரைந்திருக்கின்றார். . இவ்வுரைப் பகுதி மட்டும் 1909 - 10 ஆம் ஆண்டு 'வித்தியாபாநு' இதழ்ப் பகுதிகளில் வெளிவந்துள்ளது. பின்னர் இந்நூலின் மூலப் பகுதி மட்டும் சாமிநாத சாஸ்திரியால் 1912ஆம் ஆண்டு வெளியிடப்பெற்று உள்ளது. கா. கோபாலாசாரியாரின் மொழிபெயர்ப்பை ஸி. குமாரசாமி நாயுடு & சன்ஸ் நிறுவனம் 1921ஆம் ஆண்டு மூலத்துடன் மட்டும் வெளியிட்டுள்ளது. மு. மாணிக்கவாசகம் பிள்ளையின் மொழிபெயர்ப்பும் அவரின் உரையும் சேர்ந்த பதிப்பாக மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை 1925ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளது. இப்பதிப்புகளைத் தொடர்ந்து அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகச் சுவடியில் உள்ள நமச்சிவாயப் புலவரின் மொழிபெயர்ப்பின் மூலப் பகுதியை வ.ரா. கல்யாண சுந்தரம் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் 1964ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார். இப்பதிப்புகளையடுத்து 1964ஆம் ஆண்டு நாராயணசாமியால் ஒரு பதிப்பு வெளியிடப் பெற்றுள்ளது. இப்பதிப்பு யாருடைய மொழிபெயர்ப்பு என்று துணிய முடியவில்லை.

பழமலைக்கோவை

துறைமங்கலம் சாமிநாத தேசிகரின் 'பழமலைக் கோவை' காப்பு 1, நூல் 427 கட்டளைக்கலித்துறையாலானது. பழமலையில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள பழமலைநாதரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு இந்நூல் பாடப்பெற்றுள்ளது. பழமலையென்பது நடுநாட்டில் மணிமுத்தா நதிக்கரையில் உள்ளதொரு சிவதலம். இது

விருத்தாசலம், விருத்தகாசி, சிவகிரி, முதுகுன்று, குன்றை முதலிய திருநாமங்களால் வழங்கப்பெறும். பாதளத்தைங் கரனை வாழ்த்தி இந்நூல் தொடங்குகின்றது. சிவபெருமான் பெருமைகளையும் பழமலையின் சிறப்புக்களையும் இந்நூல் விளக்கிச் செல்கின்றது. இந்நூலை உ.வே. சாமிநாதையர் தம்முடைய குறிப்புரையுடன் 1934ஆம் ஆண்டு 'சிவநேசன்' இதழ்ப் பகுதிகளில் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு சிவநேசன் வெளியீடாக 1935, 1937ஆம் ஆண்டுகளில் முறையே முதல் மற்றும் இரண்டாம் பதிப்பாக வெளிவந்து உள்ளது.

பழமொழி

மூன்றுறை அரையனாரின் 'பழமொழி' 400 பாடல் களாலானது. இதைப் 'பழமொழி நானூறு' என்றும் வழங்குவர். பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் மூன்றாவதாக வைத்துப் போற்றத்தக்கது. இந்நூற் பாடல்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பழமொழியைப் பெற்று அதற்கு விளக்கம் கூறும் வகையில் அமைந்துள்ளது. இந்நூலுக்குப் பழையவுரை ஒன்றுண்டு. இவ்வுரையுடன் இலக்கணக் குறிப்பும் விளக்க வுரையும் சேர்த்துச் சோடசாவதானம் டி. சுப்பராயச் செட்டியார் 1874ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார். இதில் 390 பாடல்களே இடம்பெற்று உள்ளன. 1904ஆம் ஆண்டு ச. ஆறுமுக நயினாரின் மூலப் பதிப்பில் முதற் பாடலுக்குப் பழையவுரை மட்டும் அச்சிட்டு பதிப்பிக்கப் பெற்றுள்ளது. உ.வே. சாமிநாதையரின் அரிய முயற்சியால் முதற்பாடல் கிடைத்துள்ளது. அதன் பிறகு நாராயண ஐயங்கார் பழைய உரையுடனும் தம்முடைய விளக்கக் குறிப்புரையுடனும் உ.வே. சாமிநாதையர் கண்டெடுத்த முதற்பாடலையும் சேர்த்து 1915ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழில் முதல் நூறு பாடல்களையும், 1921ஆம் ஆண்டு இரண்டாம் நூறு பாடல்களையும் வெளியிட்டுள்ளார். இவ் இதழ்ப் பதிப்புகள் முறையே 1918, 1922ஆம் ஆண்டுகளில் செந்தமிழ் வெளியீடாக வெளிவந்துள்ளன. தி. செல்வக் கேசவராய முதலியார் தம்முடைய பொழிப்புரை, பதவுரை,

கருத்துரை ஆகியவற்றுடன் பழையவுரையையும் சேர்த்து 1917, 1929ஆம் ஆண்டுகளில் முறையே முதல் மற்றும் இரண்டாம் பதிப்பாக வெளியிட்டுள்ளார். ம. இராசமாணிக்கம் பிள்ளையின் உரையுடன் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் 1948, 1954, 1974ஆம் ஆண்டுகளில் முறையே முதல், இரண்டு மற்றும் மூன்றாம் பதிப்புகளை வெளியிட்டுள்ளது. இப்பதிப்புக எல்லாமல் புலியூர்கேசிகன், ஆ.பா. வீரராகவன் போன்றோரின் புத்துரைப் பதிப்புகளும், மூலப் பதிப்புகள் பலவும் இந்நூலுக் குண்டு. மேலும் இந்நூல் பதினெண்கீழ்க்கணக்குப் பதிப்புகளில் ஒன்றாகவும் இடம்பெற்றிருக்கின்றது.

பழனி இரட்டைமணிமாலை

ஆறுபடை வீடுகளில் ஒன்றும் திருவாவினன்குடி என்று கூறப்படுவதுமாகிய பழனியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள முருகப்பெருமான் மீது இந்நூல் பாடப்பெற்று உள்ளது. வெண்பா, கட்டளைக் கலித்துறை ஆகிய பாடல் வகைகள் அந்தாதியாகத் தொடுத்த இருபது பாடல்களாலான இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை உ.வே. சாமிநாதையர் 1932ஆம் ஆண்டு 'கலைமகள்' இதழில் வெளியிட்டுள்ளார். பின்னர் உ.வே. சாமிநாதையர் நூல் நிலைய 125ஆம் வெளியீடான 'மாலை ஐந்து' (1995) எனும் தொகுப்பு நூலில் நான்காவதாக இந்நூல் இடம்பெற்றுள்ளது. இந்நூலன்றி அரங்கசாமி ஐயரின் 'பழனி இரட்டைமணி மாலை' (1913) என்றொரு நூலுமுண்டு.

பழனிக்கோவை

'இறையனார் பொருள்விளக்கம்' என்ற உட்தலைப்பினைப் பெற்ற 'பழனிக்கோவை' 400 பாடல்களாலானது. இந்நூல் பழனிமலையில் அமர்ந்து விளங்கும் முருகப்பெருமான் மீது பாடப்பெற்றுள்ளது. திருச்சிற்றம்பலக் கோவையை அடியொற்றி இந்நூல் செய்யப்பட்டுள்ளது என்பர். ஒவ்வொரு பாடலிலும் ஒரு பழமொழி இடம்பெறுமாறு அமைந்த இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை 1937-38ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழ்ப் பகுதிகளில் சி. இராமாநுஜ

ஐயங்கார் வெளியிட்டுள்ளார். இது கோவை இலக்கியத்திற்கு உரிய இலக்கணங்களுடன் அமைந்துள்ள நூலாகத் திகழ்கின்றது.

பழனிப் பிள்ளைத்தமிழ்

சின்னப்ப நாயக்கரின் 'பழனிப் பிள்ளைத்தமிழ்' சிவனடியார் வணக்கம் வெண்பா 1, நூல் 30 ஆசிரிய விருத்தத்தா லானது. பருவத்திற்கு மூன்று பாடல்களைப் பெற்றுள்ள இந்நூல் பழனியில் திருக்கோயில் கொண்டுள்ள முருகப் பெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டுள்ளது. இந்நூலில் பழனி பற்றிய பலவகைச் செய்திகள் அமைந்துள்ளன. பழனி வைகாவூர் நாட்டில் உள்ளது என்பதும், அதற்கு ஆவினன்குடி, வைகாவூர் என்னும் பெயர்கள் உண்டு என்பதும், பழனிமலை சிவகிரி என வழங்கப்படும் என்பதும், பழனியைச் சார்ந்த ஊர்களாக எட்டு மங்கலங்களும் பன்னிரண்டு பள்ளிகளும் நூறூர்களும் உள்ளன என்பதும் அறியப்படுகின்றன. முருகப்பெருமான் சிவபெருமானுக்கு உபதேசித்தது, அவர் அகத்தியருக்கு உபதேசித்தது, அவர் சங்கத் தலைவர் பதவியில் இருந்தது, அவருக்கு யானைவாகனமுண்டு என்பது, அவர் ஆட்டுக்கிடாயை ஊர்ந்தது, வெட்சியும் கடம்பும் அவர் மாலைகளென்பது, மயில் பிரணவ உருவமென்பது முதலிய செய்திகள் இதில் அமைந்துள்ளன. இந்நூலை உ.வே. சாமிநாதையர் தம்முடைய குறிப்புரையுடன் 1932ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழ்ப் பகுதிகளில் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1932ஆம் ஆண்டு செந்தமிழ் வெளியீடு 58ஆவதாக வெளிவந்துள்ளது. அதன்பிறகு முகுந்தன் அவர்கள் சென்னையிலிருந்து 1940ஆம் ஆண்டு ஒரு பதிப்பை வெளியிட்டுள்ளார். பழனி தண்டாயுத பாணி தேவஸ்தானம் 1960, 1963ஆம் ஆண்டுகளில் முறையே முதல் மற்றும் இரண்டாம் பதிப்பை வெளியிட்டுள்ளது.

பழனிமலைக் கந்தசாமி கலித்துறைமாலை

பழனிமலையில் வீற்றிருக்கும் முருகப்பெருமான் மீது இந்நூல் பாடப்பெற்றுள்ளது. காப்பு 1, நூல் 30 கலிவிருத்தத்தா

லானது. சிவபெருமான், திருமால், வள்ளி, தெய்வயானை, முருகன் போன்றோர் சிறப்புக்களும், பழனிமலையின் சிறப்புக்களும் நயமாகவும் எளிமையாகவும் இந்நூலில் கூறப்பட்டுள்ளன. கலித்துறை யாப்பில் அமைந்ததே 'கலித்துறை மாலை' ஆகும். ஏற்கெனவே கலித்துறையில் பல மாலைகள் இருந்தாலும் சொல் நிலையில் அவை கலித்துறை எனப் பெயர் கொள்ளவில்லை. பழனிமலையில் கோயில் கொண்டிருக்கும் முருகப்பெருமானின் சிறப்புகளையும், திருமால் - வள்ளி - தெய்வயானை ஆகியோரின் சிறப்பு களையும், பழனிமலையின் சிறப்புகளையும் எடுத்துக்கூறும் 'பழனிமலைக் கந்தசுவாமி கலித்துறைமாலை'யை (31) 1979ஆம் ஆண்டு திருக்கோயில் இதழில் மு.கோ. இராமன் வெளியிட்டு உள்ளார்.

பழனிமலை வடிவேலர் பதிகம்

பழனிமலையின் மீது வீற்றிருக்கும் முருகப்பெருமானின் பெருமைகளை 11 பன்னிருசீர் கழிநெடிலடியாசிரிய விருத்தத்தால் பாடியதே 'பழனிமலை வடிவேலர் பதிகம்' ஆகும். முருகப் பெருமானுக்குக் கொண்டாடப்பெறும் விழாக்களைக் குறிப்பிடும் இந்நூல், பாராயணம் செய்வதற்கு ஏற்றவாறும், முருகனுக்குக் காவடி எடுக்கும்போது பாடித்துதிப்பதற்கு ஏற்றவாறும் அமைந்துள்ளது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை 1958ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் பத்மாவதி வெளியிட்டுள்ளார்.

பழனிமாலை

பழனிமலையில் கோயில் கொண்டுள்ள முருகப் பெருமான் மீது சிருங்கார ரசமாகப் பாடப்பெற்ற 30 கலித்துறையாலானது. ஒவ்வொரு பாடலின் ஈற்றிலும் 'பழனிக் கதிபதியே' என்ற தொடர் மகுடமாக அமைந்துள்ள இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை வீ. சொக்கலிங்கம் 1965ஆம் ஆண்டு 'சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ்'ப்

பகுதியில் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1966ஆம் ஆண்டு இந்நூலகம் வெளியிட்ட 'முருகர் கதம்பம்' எனும் தொகுப்பில் ஐந்தாவதாக இடம்பெற்றுள்ளது.

பழனியாண்டவர் கலித்துறை

அழகிய சிற்றம்பலக் கவிராயரின் 'பழனியாண்டவர் கலித்துறை' 100 கலித்துறையாலானது. இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த திருப்பத்தூருக்கு அண்மையில் குமரன் குடிகொண்டுள்ள குன்றக்குடி உள்ளது. இதனைச் சிகண்டிமலை, செகண்டிமலை எனவும் அழைப்பர். இங்குக் கோயில் கொண்டுள்ள முருகப்பெருமான் விண்புவி அனைத்திலும் நீக்கமற நிலைபெற்றுச் சச்சிதானந்தமாய் நின்றுள்ளார் என்பதும், நாரதரால் வள்ளியின் இயல்புகள் அறிந்து தினைப்புனஞ் சென்று மணந்தார் என்பதும், மறை முடிவை ஈசர்க்கு உரைத்தார் என்பதும், நான்முகனைச் சிறைவைத்தார் என்பதும், பூதத்தால் சிறைவைக்கப்பட்ட நக்கீரரைச் சிறை மீட்டார் என்பதும், சூரரைத் தடிந்தார் என்பதும் இந்நூலில் விளக்கப்பெற்றுள்ளன. இந்நூலை 1963ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் த. பெரியாண்டவன் வெளியிட்டுள்ளார்.

பழனிவேலவன் தோத்திரம்

பழனிமலையில் கோயில் கொண்டு எழுந்தருளி யிருக்கும் 'பழனிவேலவ'னைப் பற்றிய தோத்திர நூலே 'பழனிவேலவன் தோத்திரம்' ஆகும். இந்நூல் 10 பதினான்குசீர் கழிநெடிலடியாசிரிய விருத்தத்தாலானது. இந்நூல் 'பழனிவாழ் முருகா! தேவனே! அமரர் தேசிகனே!' எனும் ஈற்றடி ஒவ்வொரு பாடலுக்கும் மகுடமாக அமைந்துள்ளது. முன்னிரண் டடிகளில் வேண்டுகோளும், பின்னிரண்டடிகளில் இராமாயணக் கதையும் அமையுமாறு இந்நூற் பாடல்கள் அமைந்துள்ளன. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை வீ. சொக்கலிங்கம் 1964ஆம் ஆண்டு 'சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ்'ப் பகுதியில் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப்

பதிப்பு 1966ஆம் ஆண்டு இந்நூலகம் வெளியிட்ட 'முருகர் கதம்பம்' எனும் தொகுப்பில் நான்காவதாக இடம்பெற்று உள்ளது.

பழைய பாடற்றிரட்டு

சரஸ்வதிமகால் நூலகத்தில் திரட்டிச் சேகரித்து வைக்கப் பெற்றுள்ள சுவடிகளில் வெளிவராத சில தனிப்பாடல்களின் தொகுப்பாக 'பழைய பாடற்றிரட்டு' எனும் நூல் திகழ்கின்றது. இதில் 93 பாடல்கள் இடம்பெற்றிருக்கின்றன. இதனைத் தொகுத்தவர் எல். உலகநாத பிள்ளை ஆவார். இந்நூலை 1937ஆம் ஆண்டு தமிழ்ப்பொழில் இதழில் எல். உலகநாத பிள்ளை வெளியிட்டுள்ளார்.

பன்னிருபாட்டியல்

பன்னிருபாட்டியல் 360 சூத்திரங்களைக் கொண்டது. அவற்றுள் 359 சூத்திரங்கள் நூற்பாவாகவும், 204ஆம் சூத்திரம் மட்டும் நேரிசை வெண்பாவாகவும் அமைந்துள்ள இந்நூல் எழுத்தியல், சொல்லியல், இனவியல் என்னும் மூன்றியல் களுடையதாகும். எழுத்தியலில் எழுத்தின் பிறப்பு, வருணம், கதி, உண்டி, பால், தானம், கன்னல், புள், நாள் என்னும் ஒன்பதனையும், சொல்லியலில் சீர்க்கணம், மங்கலச்சொல், பெயர்ப்பொருத்தம் என்னும் மூன்றனையும், இனவியலில் பாப்பொருத்தம், பாவினம் என்னும் இரண்டனையும் விளம்பு கின்ற இந்நூல் பாவினம் சாதகம் முதல் கையறுநிலை இறுதியாக அறுபத்தாறாகக் கூறப்பட்டுள்ளது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை ரா. இராகவையங்கார் 1903-04ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழ்ப் பகுதிகளில் வெளியிட்டு உள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1904ஆம் ஆண்டு செந்தமிழ் வெளியீடு 12ஆவதாக வெளிவந்துள்ளது. இதன் திருத்தமான இரண்டாம் பதிப்பை கி. இராமாநுஜையங்கார் 1951ஆம் ஆண்டு செந்தமிழ் வெளியீடு 12இன் மறுபதிப்பாக வெளியிட்டுள்ளார். அடுத்து கா.ர. கோவிந்தராச முதலியாரின்

உரைப்பதிப்பினைச் சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் 1943ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளது.

பாசவதைப் பரணி

திருவாரூர் வைத்தியநாத தேசிகரின் 'பாசவதைப் பரணி' காப்பு வெண்பா 1, நூல் 10 உறுப்புக்களில் 737 தாழிசைகளாலானது. பாசத்தைப் பாசமன்னனாகவும்; புல்லறிவைத் துன்மதியென்னும் மந்திரியாகவும், காமம், கோபம், உலோபம், மோகம், அகங்காரம், மாற்சரியம் என்னும் உட்பகை ஆறையும் பாசமன்னனின் படைத்தலைவர்களாகவும், ஞானத்தைச் சிவஞான தேசிகருடைய தண்ட நாயகராகவும், நிரூபகம், பொறை, சந்தோடம், விவகார பராமுகம், சாந்தம், சீலம் முதலியவற்றை அந்தத் தண்ட நாயகருக்கு அடங்கிய படைத் தலைவர்களாகவும், ஞானத்தால் பாசம் நீங்கியதை ஞான விநோதன் சேனைகளால் பாசமன்னன் அழித்ததாகவும் உருவகம் செய்து அதற்கேற்ப வரலாற்றைத் தொடர்புபடுத்திக் கூறுவதாக இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலை உ.வே. சாமிநாதையர் தம்முடைய குறிப்புரையுடன் 1932-33ஆம் ஆண்டு 'கலைமகள்' இதழ்ப் பகுதிகளில் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1933ஆம் ஆண்டு கலைமகள் வெளியீடு 2ஆவதாக வெளிவந்துள்ளது.

பாண்டிமண்டல சதகம்

மதுரை ஐயம்பெருமாளின் 'பாண்டிமண்டல சதகம்' காப்பு 2, அவையடக்கம் 1, நூல் 100 கட்டளைக் கலித்துறையாலானது. இந்நூல் முழுமையும் கிடைக்கவில்லை. பாண்டி மண்டலத்தின் வைபவத்தைக் கூறுவதாக இந்நூல் அமைந்து உள்ளது. இந்நூலை மு. இராகவையங்கார் 1921ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழில் இந்நூலின் தெளிவான 36 பாடல்களுடன் வெளியிட்டுள்ளார். அதன்பிறகு நூல் முழுமையையும் காழிக்கண்ணுடைய வள்ளல் சந்தானத்து முத்துச்சட்டைநாத வள்ளலின் பல பிரதிகளைக் கொண்டு பரிசோதித்துத் தர ப.அ.

முத்துத்தாண்டவராய பிள்ளை 1932ஆம் ஆண்டு சீர்காழி ஸ்ரீஅம்மாள் பிரஸ்ஸில் பதிப்பித்திருக்கின்றார்.

பாதாதிகேச உவமானம்

உவமான சங்கிரகம் எனும் நூல் பாதாதிகேச உவமானம், கேசாதிபாத உவமானம் என்ற இரு பிரிவுக ளுடையது. பாதாதிகேச உவமானம் நூற்பா (31)வில் ஒன்றும், விருத்தப்பா (37, 25)வில் இரண்டும், கேசாதிபாத உவமானம் வெண்பா (15)வில் ஒன்றும் என நான்கு உவமான சங்கிரகங்கள் உள்ளன. பாதாதிகேச உவமான சங்கிரகத்தின் உள்தலைப்புகள் பின்வருமாறு அமைந்துள்ளன. உள்ளடிக்கும் பாதத்துக்கும் விரல்களுக்கும் உவமானம், அவ்விரல் நகங்களுக்கும் புறங்காலுக்கும் உவமானம், குதியுங்காலுக்குங் கணுக்காலுக்கும் உவமானம், முழங்காலுக்கும் தொடைக்கும் உவமானம், அல்குலுக்குவமானம், இடைக்கும் வயிற்று மடிப்புக்கும் உந்திக்கும் வயிற்றின் ரோமத்தொழுங்கினுக்கும் உவமானம், தனியத்துக்குவமானம், மூணு கவியும் ஒரு தொடர்பு, இரு கை விரல்களுக்கும் அவ்விரல் நகங்களுக்கும் உவமானம், உள்ளங்கைக்கும், முன் கைக்கும் தோளுக்கும் உவமானம், கழுத்துக்கும் முகத்துக்கும் முகத்தின் வேர்வைக்கும் உவமானம், இரண்டிதழுக்கும் உவமானம், பல்லுக்கும் எகிருக்கும் நகைக்கும் உவமானம், சொல்லுக்கு உவமானம், கன்னத்துக்கும் நாசிக்கும் உவமானம், கண்ணுக்கு உவமானம், காதுக்கும் புருவத்துக்கும் உவமானம், நுதலுக்கும் நுதலிலிருக்கின்ற திலதத்துக்கும் உவமானம், கூந்தலுக்குவமானம், கூந்தல் பின்னலுக்கு உவமானம் எனப் பாதாதிகேச உவமானங்கள் அமைந்துள்ளன. இந்நூலை 1999ஆம் ஆண்டு 'அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ்'ப் பகுதியில் சு. சௌந்தரபாண்டியன் வெளியிட்டுள்ளார்.

பாப்பாவினம்

திருக்குருகைப் பெருமாள் கவிராயரின் 'பாப்பாவினம்' 140 பாடல்களாலானது. இதை, 'மாறன் பாப்பாவினம்'

என்றும் அழைப்பர். பாவும் பாவினமுமாக அமைந்த இந்நூல் பாவின் வகைகளையும் பாவினங்களின் வகைகளையும் கூறுகின்றது. வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, அவ்வவற்றின் இனங்கள் நான்கு, மருட்பா, பரிபாடல் எனப் பத்துப் பிரிவுகளைக் கொண்டுள்ள இந்நூல் செய்யுளியலைக் கூறுவதாகும். முதலில் ஒரு செய்யுளைக் கூறி அச்செய்யுளின் அலங்காரம், பகுதி, துறை முதலியவற்றைக் கூறுகின்றது. இந்நூல் டி.என். சேஷாசலம் 'மாறன் பாப்பாவினம்' என்று 1929ஆம் ஆண்டு 'கலாநிலையம்' இதழ்ப் பகுதிகளில் வெளியிட்டுள்ளார். பின்னர் கி. இராமாநுஜையங்கார் 'பாப்பாவினம்' என்று 1931ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழ்ப் பகுதிகளில் வெளியிட்டுள்ளார். இவ்விதழ்ப் பதிப்பு 1932ஆம் ஆண்டு செந்தமிழ் வெளியீடு 56ஆவதாக வெளிவந்துள்ளது. அரங்க சீனிவாசன் அவர்களின் விளக்கத்துடன் 1989ஆம் ஆண்டு மாறன் பாப்பாவினத்தை ஐந்திணைப் பதிப்பகம் வெளியிட்டு உள்ளது.

பாரதி தீபம்

திருவேங்கடபாரதியின் 'பாரதி தீபம்' 665 கட்டளைக் கலித்துறையாலானது. திவாகரம், கயாதரம் போன்று இதுவும் ஒரு நிகண்டு நூல். திவாகரத்தை ஒட்டியே இந்நூல் அமைந்து உள்ளது. திவாகரத்தில் ஒவ்வொரு தொகுதி இறுதியிலும் ஆசிரியர் தம்மைப் பற்றி வெளிப்படுத்தும் வரலாற்றுப் பாடல்கள் அமைந்துள்ளது போலவே இந்நிகண்டிலும் அமைந்துள்ளது. தெய்வப் பெயர்த்தொகுதி, மக்கட் பெயர்த்தொகுதி, விலங்கின் பெயர்த்தொகுதி, மரப் பெயர்த்தொகுதி, இடப்பெயர்த்தொகுதி, பல்பொருட்பெயர்த் தொகுதி, செயற்கை வடிவப் பெயர்த்தொகுதி, பண்பு பற்றிய பெயர்த்தொகுதி, செயல் பற்றிய பெயர்த்தொகுதி, ஒலி பற்றிய பெயர்த்தொகுதி, ஒருசொற் பொருட் பெயர்த்தொகுதி, பலபெயர்க் கூட்டத்தியற் பெயர்த்தொகுதி ஆகிய பன்னிரண்டு தொகுதிகளால் இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலை மு. சண்முகம் பிள்ளை தம்முடைய அடிக்குறிப்புடன் 1980ஆம்

ஆண்டு 'தமிழாய்வு' இதழில் தனிப்பக்க எண்ணுடன் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1980ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழக வெளியீடாக வெளிவந்து உள்ளது.

பாலையானந்தர் ஞானக்கும்மி

பாலையானந்தரின் 'பாலையானந்தர் ஞானக்கும்மி' 186 பாடல்களாலானது. இந்நூல் உயிர்கள் வினைவயத்தாற் தோன்றி, அழிந்து தோன்றுகின்ற நிகழ்ச்சியை உழவுத் தொழிலுடன் உருவகித்து, பிறப்பெடுத்தலால் ஏற்படும் இன்னல்களை எடுத்தியம்பி, அவற்றைத் தடுக்க இறைவன் அடிநீழல் அடையவேண்டும் என்றும், இறைவன் திருவடிக்கீழ் அடைய முடியாமல் அடைத்துள்ள பாசமாகிய பூட்டை, மோனநிலையாம் திறவுகோல் கொண்டு திறக்க வேண்டும் என்றும், மோனநிலை கைவரப்பெறுவதற்கு யோகநிலை இன்றியமையாதது என்றும்; யோகநிலை எய்துதற்குச் சுவாசத்தைக் கட்டுப்படுத்தப் பழக வேண்டும் என்றும், யோகத்திற்கு முதன்மையானது உமைதீட்சை என்றும் கூறப்பெறுவதுடன், மோனநிலை எய்துதற்கான பல்வேறு படிகளையும், விரிவாகவும் தெளிவாகவும் விளக்குகின்றது. இந்நூலை 1962ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் த. பெரியாண்டவன் வெளியிட்டுள்ளார்.

பிரபந்த தீபிகை

வேம்பத்தூர் முத்துவேங்கடசுப்பைய நாவலரின் 'பிரபந்த தீபிகை' எனும் இலக்கண நூல் 100 பாடல்களாலானது. பன்னிருசீர் கழிநெடிலடியாசிரிய விருத்தம் முதல் இருபத்து நான்குசீர் கழிநெடிலடியாசிரிய விருத்தம் வரையிலான பாடல்கள் இதில் இடம்பெற்றுள்ளன. இந்நூல் பிரபந்தங்கள் தொண்ணூற்றாறுக்கான பட்டியலையும் அதற்கான இலக்கண விளக்கங்களையும் சுட்டிச்செல்கின்றது. இந்நூலை வேம்பத்தூர் பி. பாஸ்கரையர் 1918ஆம் ஆண்டு மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் இருந்த மூலச் சுவடியைக் கொண்டு

முதல் 26 பாடல்களைச் 'செந்தமிழ்' இதழில் வெளியிட்டுள்ளார். அதன்பிறகு மதுரைத் தமிழ்ச் சங்கச் சுவடிக்குப் படிச்சுவடியானது சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் ஒன்றிருப்பதைக் கொண்டு ச.வே. சுப்பிரமணியன் & அன்னிதாமசு ஆகியோரால் 1982ஆம் ஆண்டு நூல் முழுமையையும் உரையுடன் பதிப்பிக்கப்பெற்றுள்ளது.

பிரபந்த மரபியல்

தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களின் இலக்கணம் கூறும் நூல்களுள் 'பிரபந்த மரபியல்' ஒன்று. இது 35 நூற்பாக்களில் 311 அடிகள் கொண்டது. இந்நூற்பாக்கள் இரண்டடிச் சிறுமையும் பதினைந்தடிப் பெருமையும் உடையன. இதிலுள்ள 35 நூற்பாக்களில் முதல் 21 நூற்பாக்கள் பிரபந்தங்களின் வகைகளையும், பிற 14 நூற்பாக்கள் பொதுப்பொருள்களையும் கூறுகின்றன. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. பிரபந்தங்களின் வகைகளைக் கூறும் இவ்விலக்கண நூல் 1974ஆம் ஆண்டு தி.வே. கோபாலையர் பதிப்பித்த 'இலக்கண விளக்கம் - பாட்டியல்' (சரஸ்வதிமகால் வெளியீடு) எனும் நூலில் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகச் சுவடியை ஆதாரமாகக் கொண்டு 'பிரபந்த மரபியல்' பின்னிணைப்பாக இடம்பெற்றுள்ளது. பின்னர் இந்நூல் அதே சுவடியை அடிப்படையாகக் கொண்டு மு. அருணாசலத்தின் விரிவான உரையுடன் 1976ஆம் ஆண்டு 'அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ்'ப் பகுதியில் வெளிவந்துள்ளது. இப்பருவ இதழ்ப் பகுதி இந்நூற்பதிப்பை மட்டும் கொண்டு உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

பிராசாத அகவல்

காவை, அம்பலவாணத் தம்பிரானின் 'பிராசாத அகவல்' 159 அடிகள் கொண்ட நீண்ட ஆசிரியப்பாவாலானது. இது, யோக நெறியைப் பற்றிக் கூறுகின்றது. இவ்வகவலுக்கு இந்நூலாசிரியரின் மாணாக்கரான மதுரை ஞானப்பிரகாசர் ஓர் சிறப்பான உரையொன்று செய்திருக்கின்றார். இந்நூலைத்

திருவாரூர் எஸ். சோமசுந்தர தேசிகர் 1930ஆம் ஆண்டு மூலப்பகுதி மட்டும் 'செந்தமிழ்' இதழில் வெளியிட்டுள்ளார். பின்னர் மதுரை ஞானப்பிரகாசரின் உரையோடு திருவாரூர் எஸ். சோமசுந்தர தேசிகர் 1934ஆம் ஆண்டு ஒரு பதிப்பைக் கொணர்ந்துள்ளார். இவ்வுரைப் பதிப்பை 1935ஆம் ஆண்டு 'சித்தாந்தம்' இதழிலும் வெளியிட்டுள்ளார். இப்பதிப்புகளை யடுத்துத் தருமையாதீனம் வெளியிட்ட 'பிராசாத நான்மணிகள்' (1992) எனும் தொகுப்பு நூலில் இந்நூலும் இடம்பெற்றுள்ளது.

பிராசாத தீபம்

சிவஞான கதியாகிய முத்தியைக் கொடுக்கும் பிராசாதம் ஒரு யோக நெறியாகும். யோக நெறியை விளக்கும் 'பிராசாத தீபம்' காப்பு 1, குருவணக்கம் 1, நூல் 37 ஆக 39 விருத்தங்களா லானது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூல் சுப்பிரமணியக் கவிராயரால் 1923ஆம் ஆண்டு பதிப்பிக்கப் பெற்றுள்ளது. பின்னர் திருவாரூர் எஸ். சோமசுந்தரதேசிகரால் 1930ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழில் வெளியிடப்பெற்று உள்ளது. இதனையடுத்து அச்சுவேலி ச. குமாரசுவாமிக் குருக்களின் உரையுடன் யாழ்ப்பாணத்திலிருந்து 1933ஆம் ஆண்டு ஒரு பதிப்பு வெளிவந்துள்ளது. தருமையாதீன வெளியீடான 'பிராசாத நான்மணிகள்' (1972) எனும் தொகுப்பு நூலில் இந்நூலும் ஒன்றாக இடம்பெற்றுள்ளது.

பிராசாத மாலை

கமலை ஞானப்பிரகாசரின் 'பிராசாத மாலை' 11 எண்சீர் விருத்தங்களும் ஒரு காப்பும் கொண்டது. இந்நூலின் ஒவ்வொரு பாடலிலும் 16 கலைகளுக்கும் உரிய நாமம், மாத்திரை, வியாபகம், அளவு, சூனியம், வடிவு, தேவதை, தத்துவம், ஒளி ஆகிய பொருள்கள் அமைந்துள்ளன. இந்நூல் சுப்பிரமணியக் கவிராயரால் 1923ஆம் ஆண்டு பதிப்பிக்கப் பெற்றுள்ளது. பின்னர் திருவாரூர் எஸ். சோமசுந்தர தேசிகரால் 1930ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழில் வெளியிடப்பெற்று

உள்ளது. அடுத்து தருமையாதீன வெளியீடான 'பிராசாத நான்மணிகள்' (1972) என்னும் தொகுப்பு நூலில் இந்நூலும் ஒன்றாக இடம்பெற்றுள்ளது.

புகையிலைவிடுதூது

சீனிச்சர்க்கரைப் புலவரின் 'புகையிலைவிடுதூது' 59 கண்ணிகளால் ஆனது. பழனிமலையில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள பாலசுப்பிரமணியக் கடவுள் மீது இந்நூல் பாடப்பெற்றுள்ளது. பாட்டுடைத் தலைவரான பழனியாண்டவருக்குப் புகையிலைச்சுருட்டு நிவேதனமும் உண்டென்பர். இதில் புகையிலையின் பெருமையும், புகையிலையினாற் செய்யப்படும் சுருட்டு, சாராயம், பொடி என்னும் பொருள்களைப் பற்றியும் கூறப்பெற்றுள்ளன. மேலும், புகையிலைக்குத் திருமாலும் சிவனும் பிரமதேவரும் தமிழும் முருகக் கடவுளும் சிலேடை வகையில் உவமையாகவும், புகையிலையின் காரமும், பித்தந்தரும் இயல்பும், மலர்வித்து என்பவற்றை உடைமையும், பாடஞ்செய்யப்படுதலும், தாகத்தைத் தீர்க்க உதவுதலும், வியாபாரத்தால் லாபம் உண்டாக்குதலும் போன்றன அங்கங்கே சொல்லப்பெற்றுள்ளன. இந்நூலை உ.வே. சாமிநாதையர் தம்முடைய குறிப்புரையுடன் 1939ஆம் ஆண்டு 'கலைமகள்' இதழ்ப் பகுதிகளில் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு கலைமகள் வெளியீடு 12ஆவதாக 1939, 1956ஆம் ஆண்டுகளில் முறையே முதல் மற்றும் இரண்டாம் பதிப்புகள் வெளிவந்துள்ளன.

புரூரவ சரிதை

ஐயம்பெருமாள் சிவந்த கவிராயரின் 'புரூரவ சரிதை' 26 படலங்கள் 845 பாடல்களாலானது. இதில் புரூரவா உற்பத்திப் படலம் முதல் தேவிசேர் படலம் ஈறாக 26 படலங்கள் இடம்பெற்றுள்ளன. இந்நூல் சந்திரகுல திலகனாகிய புரூரவ சக்கரவர்த்தியின் வரலாற்றைக் கூறுகின்றது. இந்நூலை 1922-25ஆம் ஆண்டு செந்தமிழ் இதழ்ப் பகுதிகளில் மு. இராகவையங்கார் வெளியிட்டுள்ளார்.

புலவராற்றுப்படை

சிறிய இரத்தினக் கவிராயரின் 'புலவராற்றுப்படை' காப்பு வெண்பா 2, பாயிரம் 1, நூல் 542 அகவல் வரிகளைக் கொண்டுள்ளது. சொற்சுவை, பொருட்சுவையுடன் கூடிய இப்புலவராற்றுப்படையானது கல்வியுஞ் செல்வமும் ஒருங்கெய்தி விளங்கிய வள்ளலும், மச்சபுராணம், நீடூர்த்தல புராணம் முதலிய பல நூல்கள் இயற்றியவருமான இரசை வடமலை யப்பப்பிள்ளை மீது இந்நூல் பாடப்பெற்றுள்ளது. இந்நூலை ரா. இராகவையங்கார் 1903, 1969ஆம் ஆண்டுகளில் 'செந்தமிழ்' இதழில் தனித்தனியே இருமுறை வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1903ஆம் ஆண்டு ரா. இராகவையங்கா ராலும், 1918ஆம் ஆண்டு திரு. நாராயணையங்காராலும் பதிப்பிக்கப்பெற்றுள்ளது. இந்நூலன்றி இதே பெயரில் 1903ஆம் ஆண்டு வெளிவந்த 'மதுரைத் தமிழ்ச்சங்கத்துப் புலவராற்றுப் படை' மூலமும் உரையும் மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் குலாம் காதிறு நாவலரால் அரங்கேற்றப்பட்டு வெளியிடப்பெற்ற தாகும். இவையல்லாமல், சுந்தரநாதப்பிள்ளை இயற்றிய 'புலவராற்றுப்படை' 1916) என்ற ஒரு நூலும் உண்டு.

புலவர் பிணைபோன வரலாறு

அருணாசலக் கவிஞரின் 'புலவர் பிணைபோன வரலாறு' 54 கண்ணிகளாலானது. இந்நூல் ஆசிரியர் கூற்றாக அமைந்துள்ளது. சேலம் பகுதியை ஆண்டு வந்த செழியதரையன் என்னும் குறுநில மன்னனுக்கு முகம்மதிய மன்னன் ஒருவரால் வந்த ஆபத்தைத் தடுக்க, செழியதரையன் செலுத்தவேண்டிய பாக்கித் தொகைக்குப் பிணையாக அருணாசலக்கவிஞன் என்பவன் செல்கிறான். இரண்டு ஆண்டுகள் ஆகியும் செழியதரையன் பாக்கிப் பணம் செலுத்தாததனால் ஆத்திரமடைந்த முகம்மதிய மன்னன் புலவர்க்குப் பல இன்னல்கள் இழைக்கிறான். பின்னர் செழியதரையனிடம் பணம் பெற்றுத்தரப் புலவரை அனுப்பிவைக்கின்றான். புலவர் தான்பெற்ற இன்னல்களைச்

செழியதரையனிடம் கூறியும் அவன் பணம் தர மறுத்துவிடுகின்றான். 'இது உன்னுடைய கடன் நீயே பிச்சையெடுத்தாகிலும் செலுத்திக்கொள்' என்கிறான். பிச்சையெடுக்கும் முகமாக இக்கதையை மக்களிடம் தெரிவித்து உதவி கேட்பதாக இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலை 1952ஆம் ஆண்டு தமிழ்ப்பொழில் இதழில் அடிகளாசிரியர் வெளியிட்டுள்ளார்.

புலிமுலை புல்வாய்க்கருளிய திருவிளையாடல்

பெரும்பற்றப்புலியூர் நம்பியின் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தில் 'புலிமுலை புல்வாய்க்கருளிய திருவிளையாடல்' 16 பாடல்களாலானது. இந்நூலின் மொத்தப் பாடல் 1753 ஆகும். பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராணத்துள் வரும் 'மாயப்பசுவை வதைத்த திருவிளையாடல்'லுக்கு மாற்றாக இந்நூல் இதில் இடம்பெற்றுள்ளது. கடம்பவனத்தின் கண் புலிமுலையை புல்வாய்க்கு வழங்கிக் காத்த திருவிளையாடலாக இந்நூல் அமைந்துள்ளது. இப்பகுதியைச் சௌந்தரபாரதி 1903ஆம் ஆண்டு 'விவேகபாநு' இதழில் வெளியிட்டுள்ளார். பின்னர் இத்திருவிளையாடல் உ.வே. சாமிநாதையர் பதிப்பித்த 'திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம்' (1906, 1927, 1972) எனும் பதிப்புகளில் இடம்பெற்றுள்ளது.

புல்லையந்தாதி

திருப்புல்லாணி தொடர்பான பதிற்றுப்பத்தந்தாதியே 'புல்லையந்தாதி'. இதில் காப்பு 2, நூல் 100 ஆக 102 விருத்தங்கள் இடம்பெற்றுள்ளன. திருப்புல்லாணியில் கோயில் கொண்டிருக்கும் திருமால் மீது அந்தாதித் தொடையால் புனையப்பட்ட இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. ரெ. இராமையங்கார் 1936ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழில் முதல் 30 பாடல்களை வெளியிட்டுள்ளார். பின்னர் இந்நூல் முழுமையும் கி. கோதண்டபாணியின் பொழிப்புரையுடன் 1967ஆம் ஆண்டு சரஸ்வதிமகால் நூலக வெளியீடாக வெளிவந்துள்ளது.

பூதர விலாசம்

தெய்வநாயகக் கவிராயரின் 'பூதர விலாசம்' 100 பாடல்களால் ஆனது. காளையார் மற்றும் சிவசாமிப்பிள்ளை ஆகியோரின் சாத்துக்கவிகளையும் இந்நூல் பெற்றுள்ளது. இந்நூலானது பாண்டிய நாட்டின் கண்ணுள்ள 'எட்டயபுரம்' என்னும் இடத்தைச் சார்ந்த 'இளசை' எனப்படும் நகரில் அரசு செலுத்திவந்த வேங்கடேசுவரனெட்டன் என வழங்குகின்ற மன்னனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு அகப் பொருளை விளக்குகின்றது. அதாவது, அம்மன்னன் ஒரு சமயம் வேழமேறி வீதியிற் பவனி வர அதுகண்ட நங்கையொருத்தி அவன்பால் மையற்கொண்டு ஊடலுற்றதான இச்செய்தியினை உணர்த்தும் வாயிலாக அம்மன்னனது அருமை பெருமைகளை எடுத்துக்கூறும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது. இந்நூல், மதுரை ஹரிசமய திவாகர முத்திராசாலை வெளியீடாக 1934ஆம் ஆண்டு (100 செய்யுள்கள்) வெளிவந்துள்ளது. இப்பதிப்பினை அடுத்து அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் நூலகச் சுவடியை மட்டும் ஆதாரமாகக் கொண்டு வ.ரா. கல்யாணசுந்தரம் 1948ஆம் ஆண்டு சில பாடல்களை விடுத்து (16. 17. 20, 21, 24, 25, 30, 31, 42, 43, 52, 53, 76, 84, 85, 90, 91 ஆகிய எண்கொண்ட பாடல்கள் போக) மீதமுள்ள 77 பாடல்களைப் பதிப்பித்திருக்கின்றார்.

பூர்வச்சக்கரவர்த்தி நாடகம்

கருப்பனேந்திரனின் 'பூர்வச்சக்கரவர்த்தி நாடகம்' விருத்தம், தருவு, வசனம் என்ற மூன்று நிலைகளில் அமைந்து உள்ளது. விருத்தம் மட்டும் 267 பாடல்களால் ஆக்கப்பட்டு இடையிடையே வசனப்பகுதி இடம்பெற்றுள்ளது. சூரிய குலத்தில் தோன்றிய பூர்வச்சக்கரவர்த்தி என்னும் மன்னன், மனைவி - குழந்தைகளுடன் வாழ்ந்திருக்கும் வேளையில், சனி தோசத்தால் நாடு நகரம் பெண்டு பிள்ளைகள் அத்தனையும் விட்டுப் பரம ஏழையாகிக் கானகத்தில் வாழும் நாளில், கை - கால்களை வெட்டி சரஸ்வதிக்குக் காவு கொடுத்துத் தவம் புரிகின்றார். விட்ட பொருள்களை மீண்டும் பெற்று அரசாள்

கின்றான். இதுவே கதை என்றாலும் அவன் அடைந்த துன்பங்கள் ஏழரை ஆண்டு; ஏழரை நாட்டுச் சனியனின் ஆட்சியை விளக்குவதாக அமைந்த இந்நாடகம் பூர்வச் சக்கரவர்த்தியின் வாழ்வோடு ஒப்பிடப்பெற்றுள்ளது எனலாம். இந்நூலை 1974ஆம் ஆண்டு தேனோலை இதழில் கொடிமுடி சண்முகப்பிரகதம் வெளியிட்டுள்ளார்.

பெருந்தொகை

மு. இராகவையங்காரின் தொகுப்பு நூலே 'பெருந்தொகை' ஆகும். இது கடவுள் வாழ்த்து, அறவியல், பொருளியல், இன்பவியல், ஒழிபியல் என்ற ஐந்தியல்கள் 2215 பாடல்களாலானது. இத்தொகையுள் தொல்காப்பியம், யாப்பருங்கலம், காரிகை, வீரசோழியம் முதலான இலக்கண நூல்களின் பழைய உரைகளினின்றும், முற்காலத்தவும் பிற்காலத்தவுமான இலக்கிய உரைகளினின்றும் தனிப் பாடல்களாக ஏட்டுப் பிரதிகளாலும் பத்திரிகைகளாலும் வாய்மொழியாலும் தெரிந்தவற்றினின்றும் சில தாமிர சாஸனங் களினின்றும் தேர்ந்தெடுக்கப்பெற்ற பாடல்கள் இடம்பெற்று உள்ளன. இந்நூலை, 1923-36ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழ்ப் பகுதிகளில் தனிப்பக்க எண்ணுடன் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1935-36ஆம் ஆண்டு செந்தமிழ் வெளியீடு 62ஆவதாக வெளிவந்துள்ளது. இதனையடுத்து இதிலுள்ள முதல் ஐம்பது பாடல்களுக்குச் சீ. ஆழ்வாரையங்கார் உரையைச் செந்தமிழ் வெளியீடாக 1969ஆம் ஆண்டும், அதே ஐம்பது பாடல்களுக்கு இரா. இளங்குமரன் உரையைச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் 1974ஆம் ஆண்டும் வெளியிட்டு உள்ளன.

பெரும்பொருள் விளக்கப் பாடல்கள்

புறத்துறைகளின் விளக்கமாக, முறையாக எழுதப்பட்ட வெண்பாக்களைக் கொண்ட நூல் 'பெரும்பொருள் விளக்கம்' ஆகும். இந்நூல் இன்று முழுமையும் கிடைக்கவில்லை.

இந்நூலின் ஆசிரியர் பெயரும் தெரியவில்லை. இந்நூற் பெயரைப் புறத்திரட்டு பல இடங்களில் குறிப்பிடுகின்றது. இவ்வகையில் பெரும்பொருள் விளக்கப் பாடல்களாக 41 கிடைத்துள்ளன. புறத்திரட்டில் காட்டப்பெற்ற ஈகை, அறிவுடைமை, தானை, மறம், களம், வாழ்த்து ஆகிய அதிகாரங்களில் முறையே ஒரு பாடலும்; குடிமரபு, பாசறை, அமர், யானை, மறம் ஆகிய அதிகாரங்களில் முறையே மூன்று பாடல்களும், பகைவயிற் சேறலில் இரண்டு பாடல்களும், நிரைகோடல், எயில் காத்தலில் முறையே ஐந்து பாடல்களும், நிரைமீட்சி, எயில் கோடலில் முறையே ஆறு பாடல்களும் என இப்பாடல்கள் அமைந்துள்ளன. உரையாசிரியரான நச்சினார்க்கினியர் 'பெரும்பொருள் விளக்கப் பாடல்களாக' மேலும் 79 பாடல்களைக் குறிப்பிடுகின்றார். அத்துடன் இந்நூல் 120 பாடல்களாக இன்று விளங்குகின்றது. புறத்திரட்டில் பல இடங்களில் குறிப்பிடப்பெற்ற 41 பாடல்கள் மற்றும் நச்சினார்க்கினியர் உரைகளில் காட்டிய 79 பாடல்கள் ஆக 120 பாடல்களை ரா. இராகவையங்கார் செந்தமிழ் இதழில் 1908ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார்.

பேரூர் ஸ்ரீஅகிலாண்டநாயகி பதிகம்

கந்தசாமி சுவாமிகளின் 'பேரூர் ஸ்ரீஅகிலாண்டநாயகி பதிகம்' காப்பு 1, கட்டளைக் கலித்துறை, நூல் 11 எழுசீர் விருத்தத்தாலானது. கோவைக்கு அருகேயுள்ள பேரூர் எனும் தலத்தில் கோயில் கொண்டுள்ள அகிலாண்டநாயகி மீது இந்நூல் பாடப்பெற்றுள்ளது. அம்மையின் வடிவும் சிறப்பும் செயற்பாடுகளும் பாடல்தோறும் கூறப்பெற்று அம்மையின் செயல்வடிவைச் சுட்டிச் செல்கின்றார் ஆசிரியர். அம்மையின் கருணையுள்ளமும் அப்பதிவாழ் மக்களுக்குப் பயன்படும் விதமும் சிறப்புற எடுத்துக்காட்டப்பெற்றுள்ளன. இந்நூல் 1941ஆம் ஆண்டு கௌமார சபை வெளியிட்ட 'பேரூர் தோத்திரப் பிரபந்தத் திரட்டு'ள்ளும், 1964ஆம் ஆண்டு வெளியிட்ட 'தவத்திரு கந்தசாமி சுவாமிகள் தோத்திரத்

திரட்டு'ள்ளும் வெளிவந்துள்ளது. பின்னர் ப.வெ. நாகராஜனின் உரையுடன் 1997ஆம் ஆண்டு 'மாதாந்திர அமுதம்' இதழில் வெளிவந்துள்ளது.

பொதிகை நிகண்டு (விருத்தம்)

சாமிநாதக் கவிராயரின் 'பொதிகை நிகண்டு' (விருத்தம்) சிறப்புப்பாயிரம் 1, நூல் 491 அந்தாதித் தொடையாலமைந்த விருத்தத்தாலான குறையுடைய நூலாகும். இந்நூலாசிரியர் நாமதீப நிகண்டின் ஆசிரியராகிய சிவசுப்பிரமணியக் கவிராயரின் தந்தையாவார். திவாகரம் முதலிய பல கருவி நூல்களையும் ஆராய்ந்து இந்நூல் இயற்றப்பெற்றதாகத் திகழ்கின்றது. இந்நூலை எஸ். வையாபுரிப் பிள்ளை 1932ஆம் ஆண்டு 'கலாநிலையம்' இதழில் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு எஸ். வையாபுரிப்பிள்ளை வெளியிட்ட 'தமிழகராதியின் ஆதார நூற்றொகுதி'யில் (1934) மூன்றாவதாக இடம்பெற்றுள்ளது.

பொதிகை நிகண்டு (நூற்பா)

சாமிநாதக் கவிராயரின் 'பொதிகை நிகண்டு' (நூற்பா) எனும் நூல் 2228 நூற்பாக்களாலானது. ஏனைய நிகண்டுகளில் காணப்பெறாதனவும் பிற்காலத்து வழக்கில் புகுந்தனவுமாய் உள்ள சொற்கள் பல இந்நிகண்டில் தரப்பெற்றுள்ளன. இந் நூலை எஸ்.வையாபுரிப்பிள்ளை 1932ம் ஆண்டு 'கலாநிலையம்' இதழில் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு எஸ். வையாபுரிப் பிள்ளை வெளியிட்ட 'தமிழகராதியின் ஆதார நூற்றொகுதி'யில் (1934) இடம்பெற்று உள்ளது.

பொருட்டொகை நிகண்டு

புதுக்கோட்டைச் சமஸ்தானத்தைச் சார்ந்த குடுமியான் மலை வைத்தீசுவர தீக்ஷிதர் குமாரர் சுப்பிரமணிய பாரதியின் 'பொருட்டொகை நிகண்டு' 978 சூத்திரங்களாலானது. சே.ரா. சுப்பிரமணியக் கவிராயர் சில பொருட்டொகைகள் (122) சேர்த்து அவற்றைத் திருத்தியும் விளக்கியும் கூட்டியுஞ் செய்து 1000 சூத்திரங்களைச் செந்தமிழ் வெளியீடாக வெளியிட்டு

உள்ளார். இந்நூலைச் சே.ரா. சுப்பிரமணியக் கவிராயர் 1919ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழ்ப் பகுதிகளில் வெளியிட்டு உள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1920ஆம் ஆண்டு செந்தமிழ் வெளியீடு 41ஆவதாக வெளிவந்துள்ளது.

பொருள்முருகாற்றுப்படை

'சாற்றுவே னின்றாள் தந்தரு ளெனக்கே' என்ற அருள்வேட்டலை வேண்டும் இந்நூல் 35 அகவலடிகளா லானது. இந்நூலாசிரியர் பெயர் தெரியவில்லை. இது முருகப்பெருமானின் பெருமைகள், அவன் வீற்றிருக்கும் மலைகளின் சிறப்புகள், அணிகலச் சிறப்புகள், வீரம் போன்றவற்றைச் சுட்டிச்செல்கின்றது. இந்நூலைச் சித்தாந்தம் இதழில் எம்.பி.எஸ். துரைசாமி முதலியார் 1937ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார்.

பொன்வண்ணத்தந்தாதி

சேரமான் பெருமாள் நாயனாரின் 'பொன்வண்ணத் தந்தாதி' 100 கட்டளைக் கலித்துறையாலானது. அகப்பொருட் டுறைகள் நிரம்பியது. 'பொன்வண்ணம்' என்னும் சொற்றொடரை முதலிலேயே கொண்டமையால் முதற் குறிப்புப் பெயரால் பெயர் பெற்றதாக இந்நூல் அமைந்து உள்ளது. இந்நூல் சுப்பராய உபாத்தியாயர் (1868), வேலு முதலியார் (1891) போன்றோரின் பதிப்புகளைப் பெற்றுள்ளது. இதனைத் தொடர்ந்து திருமயிலை சண்முகம் பிள்ளையின் உரையுடன் சே.வெ. ஜம்புலிங்கம் பிள்ளை 1949ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழில் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ் இதழ்ப்பதிப்பு செந்தமிழ் வெளியீடு 69ஆவதாக 1949ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. இப்பதிப்பினையடுத்துத் திருவிடைமருதூர் மகாலிங்கசுவாமி தேவஸ்தான வெளியீடாக 1963ஆம் ஆண்டும், குறிப்புரையுடன் தருமையாதீன வெளியீடாக 1968ஆம் ஆண்டும் வெளிவந்துள்ளது. இவையல்லாமல் பதினோராம் திருமுறைப் பதிப்புகளிலும் இந்நூல் இடம்பெற் றிருக்கின்றது.

பொன்னாணிக்கோவை

18 கண்ணிகளாலும் 2 வெண்பாவாலும் 'பொன்னாணிக் கோவை' அமைந்துள்ளது. இந்நூல் பொன்னின் மாற்று அறிவதற்குரிய உரையாணியின் வடிவும், பொன்னுரைக்கும் கட்டளைக் கல்லின் குணமும், உரை மெழுகின் பதமும், இவற்றின் இலக்கணங் கூறும் இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இது பொற்றொழில் செய்வார்க்கும் பொன் வணிகர்க்கும் பயன்படும் வகையில் அமைந்துள்ளது. இந்நூலை 1963ஆம் ஆண்டு 'செந்தமிழ்ச் செல்வி' இதழில் வே.ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் வெளியிட்டுள்ளார்.

மகரநெடுங்குழைக்காதர் பாமாலை

நாராயண தீக்ஷிதரின் 'மகரநெடுங்குழைக்காதர் பாமாலை' நம்மாழ்வார் காப்பு 1, பெரிய திருவடிகளின் வணக்கம் 1, வாழ்த்து 1, நூல் 100 கட்டளைக் கலித்துறையால் ஆனது. திருமால் திருப்பதி நூற்றெட்டுள் தென்பாண்டி நாட்டிலுள்ள தென்திருப்பேரையும் ஒன்று. இங்குக் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள மகரநெடுங்குழைக்காதர் மீது இந்நூல் ஆசிரியர் அதிகாரிகளால் சிறைப்படுத்தப்பட்டார். சிறைத்துன்பம் குறித்து அவர் பெருமாளிடம் இறைஞ்சுவதாக இந்நூல் அமைந்துள்ளது. புலவர்களுக்கு உதவும் வடமலையப்பப் பிள்ளையின் ஆட்சியில் இந்நிகழ்ச்சி நடந்திருக்கின்றது. சிறையில் புலவர்கள் இருக்கிறார்கள் என்று கேள்வியுற்ற வடமலையப்பப் பிள்ளை தாமே சிறைக்கு வந்து புலவர்களை மீட்டுக் கௌரவித்தவர். சிறையில் 65 பாடல்களையும் சிறையிலிருந்து மீண்ட பின் 35 பாடல்களையும் இந்நூலாசிரியர் பாடியிருப்பது தெரிகின்றது. இந்நூலை உ.வே. சாமிநாதையர் தம்முடைய குறிப்புரை மற்றும் நூலாசிரியர் வரலாற்றுடன் 1939ஆம் ஆண்டு 'கலைமகள்' இதழ்ப் பகுதிகளில் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு எஸ். கல்யாணசுந்தரம் ஐயரால் உ.வே. சாமிநாதையர் குறிப்புரையுடன் 1947ஆம் ஆண்டு சென்னை வித்தியாநுபாலன அச்சியந்திர சாலையில் இரண்டாம் பதிப்பு வெளிவந்துள்ளது.

இதன் பிறகு 1995ஆம் ஆண்டு உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம் வெளியிட்ட 'மாலை ஐந்து' எனும் தொகுப்பு நூலில் இந்நூல் ஐந்தாவதாக இடம்பெற்றுள்ளது.

மகாமக அந்தாதிக் கும்மி

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வரும் மாசிமகம் 'மகாமகம்' எனப்படுகின்றது. தமிழ்நாட்டிலுள்ள கும்பகோணம் மகாமகத்தால் பிரசித்திபெற்றது. காப்பு 1, கடவுள் வாழ்த்து 4, நூல் 50 அந்தாதிப் பாடல்களாலான இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. கன்னியா தீர்த்தம், அமிர்தசரஸ் போன்றவற்றிற்கு விவரமும், ஞானவான் சரித்திரமும் கும்பகோணம் என்பதற்கும் கும்பேசரென்பதற்கும் விளக்கம், ஏமவாகு மனைவி வேதாளம் நீங்கியது, சுதாமாவும் வீரவர்மாவும் புத்திரனையடைதல், அஸ்தி என்பவள் பரிசுத்தமான கதை போன்றனவும் இதில் இடம்பெற்றுள்ளன. இந்நூல் ஆண்டு அறியப்படாத ஒரு பதிப்பைப் பெற்றுள்ளது. இப்பதிப்பின் அருமை கருதியும், அழியும் நிலையில் உள்ள புத்தகத்தைக் காக்கக் கருதியும் ம. சீராளன் 1991ஆம் ஆண்டு 'சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ்'ப் பகுதியில் வெளியிட்டு உள்ளார்.

மகாலக்குமி பதிகம்

கந்தசாமி சுவாமிகளின் 'மகாலக்குமி பதிகம்' காப்பு வெண்பா 1, நூல் 11 கட்டளைக் கலித்துறையாலானது.

> "கம்பங்கை பெற்றவிர் மாலுரத் தோடு கனகமணிச்
> செம்பங் கயத்திருக் கோயில்கொண் டோங்குந் திருமகளே"

என மகாலக்குமியைச் சிறப்பித்து இப்பதிகம் அமைந்துள்ளது. மகாலக்குமியின் பெருமைகள் பலவாறு பேசப்படுவதை இந்நூலுள் காணலாம். இந்நூல் 1964ஆம் ஆண்டு கௌமார சபை வெளியிட்ட 'தவத்திரு கந்தசாமி சுவாமிகள் தோத்திரத் திரட்டு'ள் ஒன்றாக உள்ளது. அதன் பிறகு 1992ஆம் ஆண்டு 'மாதாந்திர அமுதம்' இதழில் வெளிவந்துள்ளது. இவ்விதழ்ப்

பதிப்பு பின்னர் ஈச்சநாரி விநாயகர் பதிற்றுப்பத்தந்தாதி மற்றும் சிரவை சற்குரு பதிகம் ஆகியவற்றுடன் 1992ஆம் ஆண்டு கௌமார சபை வெளியீடாக வெளிவந்துள்ளது.

மதுரைக்கோவை

நிம்பை. சங்கரநாரணனின் 'மதுரைக்கோவை' 403 பாடல்களாலானது. இது மதுரையில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள சொக்கேசப் பெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பெற்றுள்ளது. இதைக் 'கூடற்கோவை' என்றும் அழைப்பர். இந்நூலை எஸ். வையாபுரிப் பிள்ளை 1934ஆம் ஆண்டு 'கலாநிலையம்' இதழில் வெளியிட்டுள்ளார். பின்னர் இந்நூலை 1934ஆம் ஆண்டு தனிநூலாகவும் வெளியிட்டுள்ளார். இதே பெயரில் குலாம் காதிறு நாவலரின் நூல் ஒன்றுண்டு.

மதுரை மும்மணிக்கோவை

பலபட்டடைச் சொக்கநாத பிள்ளையின் 'மதுரை மும்மணிக்கோவை' காப்பு 1, நூல் 30 ஆக 31 பாடல்களாலானது. இந்நூல் மதுரையில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள சொக்கநாதரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு, அவருடைய திருவிளையாடல்களைச் சிறப்பித்து, சொல்லணி பொருளணி போன்றவை விளங்க அமைக்கப்பெற்றுள்ளது. ஆசிரியப்பா, வெண்பா, கட்டளைக் கலித்துறை என்பவை அந்தாதியாக அமைந்துள்ளன. இந்நூலில் சொக்கநாதக் கடவுளின் திருவிளையாடல்கள் பலவற்றை ஆசிரியர் எடுத்தாளுகின்றார். பாண்டியன் கூன் நீங்கியது, இந்திரன் பழிதீர்த்தது, வெள்ளையானை சாபந்தீர்த்தது, யானையெய்தது, கரிக் குருவிக்கு உபதேசம் செய்தது, மண்சுமந்தது, எழுகடலழைத்தது, சுந்தரபாண்டியராகி வந்தது, கால் மாறியாடியது, பன்றிக்குட்டிக்கு அருள் செய்தது, நாரைக்கு முத்தி கொடுத்தது, நான்மாடக்கூடலானது, கடல் சுவற வேல்விட்டது, சமணர் விட்ட பசுவை மாய்த்தது, மதுரையாக்கியது, புலிமுலை புல்வாய்க்குதவியது, கல்லானைக்குக் கரும்படுத்தியது

போன்றன கூறப்பெற்றுள்ளன. இந்நூலை உ.வே. சாமிநாதையர் தம்முடைய குறிப்புரையுடன் 1932ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழ்ப் பகுதிகளில் தனிப்பக்க எண்ணுடன் வெளியிட்டு உள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1932ஆம் ஆண்டு செந்தமிழ் வெளியீடு 57ஆவதாக வெளிவந்து உள்ளது.

மல்லைச் சிவந்தெழுந்த பல்லவராயன் பேரில் உலா

மல்லைச் சிற்றம்பலக் கவிராயரின் 'மல்லைச் சிவந்தெழுந்த பல்லவராயன் பேரில் உலா' காப்பு வெண்பா 2, நூல் 621 கண்ணிகளாலானது. ·பல்லவர் வழி வந்த பல்லவராயன் வழியைப் பற்றிய பல சிறந்த வரலாற்றுச் செய்திகள் இதில் உள்ளன. எழுவகைப் பருவ மங்கையரின் மனத்தே தோன்றும் காதல் எழுச்சிகளை இவ்வுலா சித்தரிக்கின்றது. இந்நூலை 1975-76ஆம் ஆண்டு கல்வெட்டு இதழ்ப் பகுதிகளில் இரா. நாகசாமி வெளியிட்டுள்ளார்.

மன்னார் மோகனப் பள்ளு

இராசமன்னார் கோயில் எழுந்தருளியுள்ள விஷ்ணுவைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பெற்ற 'மன்னார் மோகனப் பள்ளு' அறுசீர் விருத்தத்தாலான காப்பு 1, நூல் பதினான்குசீர் கழிநெடிலடியாசிரிய விருத்தத்தாலான 11 பாடல்களாலானது. பள்ளு இலக்கணத்திற்குரிய எவ்வித இலக்கண அமைப்பும் இதில் இல்லை. ஆயினும் நூற்பெயரில் மட்டுமே பள்ளு என்றுள்ளது. இந்நூல் பள்ளு இலக்கியத்திற்கு உரிய சில பகுதிகளை மட்டும் பெற்று, ஒவ்வொரு பாடலும் 'பள்ளீரே' என்ற ஈற்றுத் தொடரைப் பெற்று விளங்குகின்றது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலைச் ச. திலகம் 1985ஆம் ஆண்டு சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழில் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பைக் குடவாயில் பாலசுப்பிரமணியம் 1995ஆம் ஆண்டு 'மன்னார்குடி இராஜ கோபாலசுவாமி திருக்கோயில் கும்பாபிஷேக மல'ரில் திருத்தப் பதிப்பாக வெளியிட்டுள்ளார்.

மாணிக்கப்பவழக் கோவை

'சிவபிரானைக் காண்பதெப்போ' என்ற சொற்பொருள் ஒவ்வொரு பாடலின் ஈற்றிலும் அமையுமாறு பாடப்பெற்றுள்ள இந்நூல் கோவைப் பிரபந்த இலக்கணம் பெற்றிருக்கவில்லை. எனவே, இது கோவை வகைச் சிற்றிலக்கியமன்று. இதில் பன்னிரண்டு பாடல்கள் இடம்பெற்றுள்ளன. திருவாசகம் இயற்றிய மாணிக்கவாசகருக்குப் பின்வந்த ஒருவர் ஞானக்கலித்துறை, ஞானத்தாழிசை, திருமணி அகவல், வெண்பா போன்ற நூல்களை இயற்றியதைப் போன்று 'பவழக் கோவை'யையும் இயற்றியுள்ளார். பவழக்கோவை என்ற பெயர் வைத்தமைக்குக் காரணம், பவழம் போன்ற கருத்துச் செறிவு கொண்ட செஞ்சொற்களால் கோவையாகப் புனையப்பட்ட காரணமாக இருக்கலாம் என்பர். இந்நூல், 'எவ்வுருவில் யாரொருவர் உள்ளுவார் உள்ளத்து அவ்வுருளில் தோன்றி அருள்கொடுப்பான்' எம்மீசன்; 'எல்லா வுலகமு மவனாகி, எங்கும் நிறைந்த ஒளியாகி, எவ்வுயிரினும் கலந்து மிளிர்கிறான்' எம்மீசன் என்ற மெய்ப்பொருளை எடுத்தியம்ப வல்லதாக அமைந்துள்ளது. இந்நூலை 1959ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் மு. பசுபதி வெளியிட்டுள்ளார்.

மாணிக்கவாசகர் ஞானக்கலித்துறை

மாணிக்கவாசகரின் 'மாணிக்கவாசகர் ஞானக் கலித்துறை' 61 கலித்துறையால் ஆனது. இவர் திருவாசக மாணிக்கவாசகரின் வேறானவர். இந்நூல், ஞானத்தாலன்றிச் சரியை கிரியை முதலியவற்றால் முத்தியடைய முடியா தென்பதனை, நெஞ்சினை விளித்துக் கூறும் முகத்தான் பாடப்பட்டிருக்கிறது. இறைவன் நம் உள்ளத்தினுள்ளேயே நிறைந்துள்ளான். நீங்கள் அவனையறிய வகையறியாது, அவனுக்குப் போக்கும் வரத்தும் கற்பித்துக்கொண்டு ஏன் உழலுகின்றீர்? எல்லை அளவிடமுடியாத சுவாமியை,

அதுஇதுவென்று எல்லையைக் குறிப்பது ஏன்? என்பன முதலாகிய பல வினாக்களை இந்நூல் ஆசிரியர் எழுப்புகின்றார். இந்நூலை 1958ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் மு. பசுபதி வெளியிட்டுள்ளார்.

மாணிக்கவாசகர் திருமணியகவல்

மாணிக்கவாசகரின் (திருவாசக மாணிக்கவாசகரின் வேறானவர்) 'மாணிக்கவாசகர் திருமணியகவல்' 241 அகவலடியாலானது. இது திருவாசக நூலில் உள்ள 'கீர்த்தித்திருவகவல்' போன்று உள்ளதாகவும், தில்லையம்பலவாணரைத் தலைவராகக் கொண்டு அவரது மெய்க்கீர்த்தியினைப் புகழ்ந்து கூறுவதாகவும், ஆசிரியர் தமக்குத் தில்லையம்பலவாணர் காட்சி தந்தருள விண்ணப்பிப்பதாயும் அமைந்துள்ளது. சொற்சுவை, பொருட்சுவை நிரம்பி மிக்க சிறப்பான நடையுடையதாய் இந்நூல் அமைந்திருக்கின்றது. இந்நூலை 1949ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் ந. வேங்கடாசார்யன் வெளியிட்டுள்ளார். இம்மாணிக்கவாசகர் திருவாசகம் யாத்த மாணிக்கவாசகரின் வேறானவர்.

மாயாப் பிரலாபம்

காழிக்கண்ணுடைய வள்ளலாரின் 'மாயாப் பிரலாபம்' 84 வெண்பாவாலானது. மாயையாகிய பெண், போதனையிழந்து புலம்புதல் பற்றி இந்நூல் அமைந்துள்ளது. இந்நூல் திருஞானசம்பந்தப் பெருமானைப் போற்றுகின்றது. இந்நூல், திருமயிலை சண்முகம் பிள்ளையின் உரையுடன் நமச்சிவாயப் பிள்ளையால் 1869ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பெற்றுள்ளது. பின்னர் இந்நூலின் பல பதிப்புகள் வெளிவந்ததாகத் தெரிகிறது. என்றாலும் முழுமையான பதிப்பு விவரம் தெரியவில்லை. 1933ஆம் ஆண்டு 'செந்தமிழ்ச் செல்வி' இதழில் வெளியிடப்பெற்றுள்ளது. இவ்விதழ்ப் பதிப்பு சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழக வெளியீடாக 1934ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது.

மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும்

திருக்குருகைப் பெருமாள் கவிராயரின் 'மாறனகப் பொருளும் திருப்பதிக் கோவையும்' என்பது இரண்டு நூல்களாலானது. மாறனகப்பொருள் எனும் பகுதி அகத்திணை யியல், களவியல், வரைவியல், கற்பியல், ஒழிபியல் ஆகிய ஐந்து இயல்களாலானது. இந்நூலின் அகத்திணையியலும் ஒழிபியலும் கிடைக்கவில்லை. மற்ற மூன்று இயல்களும் முறையே 62, 34, 10 ஆக 106 நூற்பாக்களைப் பெற்றுள்ளன. திருப்பதிக்கோவை எனும் பகுதி மேற்கூறிய மாறனகப்பொருளிற் களவியல் வரைவியல் கற்பியல் சூத்திரங்களுக்கு இலக்கியமாகத் திருமாலுகந்தருளிய நிலங்கள் தொடர்பாய்ச் சற்றேறத்தாழ 455 துறைகளமைந்த 527 கட்டளைக் கலித்துறைகளாலானது. இலக்கண நூலாகிய மாறனகப் பொருளும், இலக்கிய நூலாகிய திருப்பதிக்கோவையும் கலந்ததொரு நூலாக இது திகழ்கின்றது. இந்நூலைக் கி. இராமாநுஜையங்கார் 1928-31ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழ்ப் பகுதிகளில் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1932ஆம் ஆண்டு செந்தமிழ் வெளியீடு 55ஆவதாக வெளிவந்துள்ளது.

மாறனலங்காரம்

மாறன், வகுளாபரணன், சடகோபன், நாவீறன் என்றெல்லாம் பெயர் பெற்றிருந்த நம்மாழ்வார் பெயரை வைத்துத் திருக்குருகைப்பெருமாள் கவிராயர் மாறனகப் பொருள், மாறனலங்காரம், மாறன் பாப்பாவினம் ஆகிய மூன்று இலக்கண நூல்களைப் பாடியுள்ளார். இவற்றில் மாறனலங்காரம் 327 நூற்பாக்களாலானது. பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல், எச்சவியல் ஆகிய நான்கு இயல்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இந்நூலுக்குக் காரிரத்னக் கவிராயரின் பழையவுரை ஒன்றுண்டு. இந்நூலை நாராயண ஐயங்கார் காரிரத்னக் கவிராயரின் உரையுடன் 1912-13ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழ்ப் பகுதிகளில் வெளியிட்டு உள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு செந்தமிழ் வெளியீடு

37ஆவதாக 1915, 1929, 1969ஆம் ஆண்டுகளில் முறையே முதல், இரண்டு மற்றும் மூன்றாம் பதிப்புகளாக வெளிவந்துள்ளது. இதன்பிறகு இரா. இளங்குமரன் காரிரத்னக் கவிராயரின் உரையுடன் 1974ஆம் ஆண்டு சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழக வெளியீடாக வெளியிட்டுள்ளார்.

மான்விடுதூது

மிதிலைப்பட்டிக் குழந்தைக் கவிராயரின் 'மான்விடு தூது' காப்பு வெண்பா 1, நூல் 301 கண்ணிகள், வாழ்த்து 1 கட்டளைக் கலித்துறை ஆக 303 பாடல்களாலானது. சிவகங்கை சமஸ்தானத்தில் பிரதானியாகவிருந்த முல்லையூர்த் தாண்டவராயபிள்ளை என்னும் வேளாளகுல திலகர் மீது இந்நூல் பாடப்பெற்றுள்ளது. மானின் பெருமையை இது விரிவாக முதலில் விளக்குகின்றது; பின்பு முற்காலத்துத் தூது சென்றார் இன்னார் இன்னார் என்பதையும், தூதுக்குரிய பத்துப் பொருள்கள் விடாமைக்குக் காரணத்தையும் தெரிவிக்கின்றது. அதன்பிறகு சிவகங்கை சமஸ்தானாதிபதியாகவிருந்த வடுகநாததுரையின் பெருமையையும், பாட்டுடைத் தலைவராகிய தாண்டவராய பிள்ளையின் சிறப்பையும், அவர் செய்த தர்மங்களையும் அவருடைய அவயவச் சிறப்பையும் அவருடைய தந்தை தமையன்மார் தம்பியர் பிள்ளைகள் முதலியோரைப் பற்றிய செய்திகளையும் விளக்குகின்றது. அதற்குப் பிறகு அவர் பவனி வந்த சிறப்பும், அப்போது பல மகளிர் அவரைக் கண்டு, மையல் கொண்டு வருந்தியதும், தலைவி சென்று பவனி கண்டு, ஆசைகொண்டு வருந்தியதும் கூறப்படுகின்றது. மேலும் தலைவி தூது அனுப்பப்படும் மானுக்கு இன்ன இன்ன வேளைகளிற் போதல் கூடா தென்பதையும் இன்ன சமயத்திற்போய் மாலை வாங்கி வரவேண்டும் என்பதையும் அறிவுறுத்தும் பகுதியும் அமைந்துள்ளது. இந்நூலை உ.வே. சாமிநாதையர் தம்முடைய குறிப்புரையுடன் 1935-36ஆம் ஆண்டு 'கலைமகள்' இதழ்ப் பகுதிகளில் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு

கலைமகள் வெளியீடாக 1936, 1956ஆம் ஆண்டுகளில் முதல் மற்றும் இரண்டாம் பதிப்பாக வெளிவந்துள்ளது.

மிழலைச் சதகம்

சீனிச்சர்க்கரைப் புலவரின் 'மிழலைச் சதகம்' சிறப்புப் பாயிரம் 1 உள்பட 45 பாடல்களாலானது. இது, தஞ்சைப் பிரதாபசிங்கன் காலத்தில், மிழலை வேளாளரைச் சிறப்பித்துப் பாடப்பெற்றுள்ளது. நூறு என்ற பாடலெண்ணிக்கையில் மாற்றமில்லாத சதக இலக்கியத்திற்குள் அரைச் சதத்திற்கும் குறைவான பாடல் எண்ணிக்கையிலும் சதக இலக்கியங்கள் பாடப்பெற்றிருக்கின்றன என்பதும் தெரியவருகின்றது. சீனிச்சர்க்கரைப் புலவரின் 'மிழலைச் சதகம்' மட்டும் 45 பாடல்களால் பாடப்பெற்றிருக்கின்றது. இதன் முதற்பாடல்,

"மதிராத கங்கைகுலஞ் சேர்மிழலைப் பெரும்பதிவாழ்
அதிரூபர் யோகரவர் மேற்சதகமுண் டாக்குதற்கே
கதிதேருமின் பக்குருந்தீசர் பாலெந்தக் காலமுமே
முதிராத பெய்பிளங்கொங்கை யோகாம்பிகை முன்னிற்பளே"

என்றும், இறுதிப்பாடல் (45) சிறப்புப் பாயிரமாக,

"தருதஞ்சை வாழும்ப்ரதாப சிங்கேந்த்ர தருமன்மெச்ச
வருமணிமா முத்திரை வேங்கடாசல மால்சம்ப்ரதி
நரதுங்க மாணிக்க வாசகவேள் சபைநாளையிலே
யுரைசெய் மிழலைச் சதகத்தைச் சக்கரை யோதினனே"

என்றும் அமைக்கப்பெற்றுள்ளதைக் காணும்போது இந்நூல் 45 பாடல்களை மட்டும் பெற்றுள்ளது விளங்குகின்றது. இந்நூல் செந்தமிழ் இதழில் 1925ஆம் ஆண்டு வெளிவந்து உள்ளது.

மீனாட்சியம்மன் கிளிப்பாடல்

மதுரை மாநகரில் கோயில் கொண்டிருக்கும் மீனாட்சியம்மன் மீது இந்நூல் பாடப்பெற்றுள்ளது. இதில் 40 கண்ணிகள் உள்ளன. இந்நூல் தில்லைநாதனின் தொன்மையையும், ஐம்பெரும்பூதங்களையும், உலக இன்ப

துன்பங்களையும், நாம் பெறவேண்டுவனவற்றையும் கூறி, இறுதியில் மதுரை மீனாட்சியம்மாள் உரைத்த தமிழை இதமாய்ப் படிப்போர்க்கு எல்லா வகையான இன்பமும் கிடைக்கும் என்கிறார் ஆசிரியர். இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

கிளியை முன்னிலைப்படுத்திக் கலிவெண்பா யாப்பில் பாடப்பெறுவது 'கிளிப்பாடல்' ஆகும். இது கிளிக்கண்ணியை ஒத்தது எனலாம். தாயுமானவரின் 'பைங்கிளிக் கண்ணி'யின் செல்வாக்கால் 'கிளிக்கண்ணி' நூல்கள் தோன்றலாயின. சுப்பிரமணியர் பேரில் கிளிக்கண்ணி 47 பாடல்களில் முருகனிடம் பெற்ற இன்பத்தைக் கிளியை விளித்துக்கூறும் முறையில் தருகின்றது. கிளியை முன்னிலைப்படுத்திப் பாடப்பெற்ற 'கிளிக்கண்ணி'யைக் கிளிப்பாடல் என்றும் வழங்குவர் என்பதால் கிளிப்பாடல் கண்ணியின் வகையாகக் கருதப்படுகின்றது. இந்நூலை 1965ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் முத்தம்மாள் கௌரிநாதன் வெளியிட்டுள்ளார்.

முத்தி நிச்சயம்

குருஞானசம்பந்தரின் 'முத்தி நிச்சயம்' 22 வெண்பாக்களாலானது. இதுவன்றி ஆறு வெண்பாக்கள் நூலின் இடையிடையே உள்ளன. இவற்றுக்கு வெள்ளியம்பலவாணத் தம்பிரான் உரை எழுதாமையால், இவை மிகைப்பாடல்கள் என்று தனியே அச்சிடப்பெற்றுள்ளன. சித்தாந்த முத்தியை நிச்சயிக்கின்ற ஆசிரியர், மாணாக்கன் கேட்கின்ற வினாக்களுக்கு ஆசாரியன் விடை சொல்வதாக முதலில் இருந்து இறுதி வரை இந்நூல் அமைக்கப்பெற்றுள்ளது. இந்நூலுக்கு வெள்ளியம்பலவாணத் தம்பிரானின் சிற்றுரை மற்றும் பேருரை என இரண்டு உரைகளுண்டு. வெள்ளியம்பலவாணத் தம்பிரானின் சிற்றுரையோடு 'செந்தமிழ்ச் செல்வி' இதழில் 1925ஆம் ஆண்டும், 'ஞானசம்பந்தம்' இதழில் 1963ஆம் ஆண்டும் வெளியிடப்பெற்றுள்ளது. இவரின் சிற்றுரை 1934ம் ஆண்டும், பேருரை 1946ஆம் ஆண்டும் தனிநூலாக வெளிவந்திருக்கின்றது.

முத்திரை

சிதம்பரநாத தேசிகரின் 'முத்திரை' 33 கண்ணிகளாலானது. சைவ சமயத்தைச் சார்ந்தவர்கள் கடைப்பிடிக்கும் அனுஷ்டானங்களுள் ஒன்று முத்திரை. நித்திய கர்ம அனுஷ்டானம் முதல் சிவபூசை ஈறாக உள்ள அனுஷ்டானங்கள் இந்நூலில் விளக்கப்பெற்றுள்ளன. இந்நூலை 1912ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழில் திருவாரூர் எஸ். சோமசுந்தர தேசிகர் வெளியிட்டுள்ளார்.

முத்தொள்ளாயிரச் செய்யுட்கள்

புறத்திரட்டிலிருந்து தொகுக்கப்பெற்ற 'முத்தொள்ளாயிரச் செய்யுட்கள்' 108 வெண்பாக்களையும், மிகைப்பாடல்கள் 22யையும் சேர்த்து 130 பாடல்களைப் பெற்றுள்ளது. இந்நூல் முழுமையும் கிடைக்கவில்லை. இது சோழர், சேரர், பாண்டியர் ஆகிய பண்டைத் தமிழ் மூவேந்தர்களையும் தனித்தனியே சிறப்பித்துப் பாடும் நூலாக அமைந்துள்ளது. அதாவது, சோழனைப் பற்றித் தொள்ளாயிரம் பாடலும், சேரனைப் பற்றித் தொள்ளாயிரம் பாடலும், பாண்டியனைப் பற்றித் தொள்ளாயிரம் பாடலும் ஆக இரண்டாயிரத்து எழுநூறு பாடல்களைக் கொண்டது இந்நூல். ஆகவே மூன்று தொள்ளாயிரம் பாடல்களால் அமைந்ததால் இதை 'முத்தொள்ளாயிரம்' என்பர். இந்நூல் முழுக்க முழுக்க வெண்பா யாப்பில் அமைத்த ஆசிரியரின் பெயர் தெரியவில்லை. இதன்கண் மன்னர்கள், நாடு, நகர், யானை, குதிரை, களம், கொடை, புகழ் என்பன போன்ற தலைப்புகள் இடம் பெற்றுள்ளன. இந்நூலை ரா. இராகவையங்கார் தம்முடைய குறிப்புரையுடன் (105 வெண்பாக்கள்) 1905ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழ்ப் பகுதிகளில் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு செந்தமிழ் வெளியீடு 14ஆவதாக 1905, 1935 (108 வெண்பாக்கள்)ஆம் ஆண்டுகளில் முறையே முதல் மற்றும் இரண்டாம் பதிப்பாக வெளிவந்துள்ளது. அதன்பிறகு எஸ். வையாபுரிப் பிள்ளையின் புறத்திரட்டிலும் (1938), இரா. இளங்குமரனின் புறத்திரட்டிலும் (1972) இந்நூற் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இந்நூற் பாடல்களுக்குப் பலர் உரை

வரைந்திருக்கின்றனர். ந. சேதுரகுநாதனின் உரையைச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம் 1946, 1952, 1958, 1964, 1970, 1973, 1975, 1981ஆம் ஆண்டுகளில் முறையே வெளியிட்டு உள்ளது. ரெ. முத்துகணேசனின் உரையைப் பாரிநிலையம் 1957, 1965, 1997 (4ம் பதிப்பு) ஆகிய ஆண்டுகளிலும், கந்தசாமி முதலியாரின் உரையைப் பொதிகைமலைப் பதிப்பகம் 1957ஆம் ஆண்டும், வே. கபிலனின் உரை விளக்கம் 1958ஆம் ஆண்டும், ந. சுப்புரெட்டியார் உரை 1965ஆம் ஆண்டும், கண்ணதாசனின் உரை 1978ஆம் ஆண்டும், ஆ. நாராயணவேலுப் பிள்ளையின் உரை 1992ஆம் ஆண்டும், ராஜேந்திரனின் உரை 1998ஆம் ஆண்டும் வெளிவந்திருக்கின்றன. கழகப் பதிப்பிலும் அதற்குப் பிறகு வெளிவந்த பதிப்புகளிலும் 130 பாடல்கள் இடம்பெற்றிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

முப்பந்தொட்டியுலா

சிதம்பரம் சிவப்பிரகாச சுவாமிகளின் 'முப்பந்தொட்டியுலா' காப்பு வெண்பா 1, நூல் 430 அகவலடியாலானது. தொண்டை நாட்டில் ஆர்க்காடு எனும் நகரின் ஒரு பகுதியான பாலாற்றங்கரையில் உள்ள சிவதலம் 'முப்பந்தொட்டி' ஆகும். இதனை முப்பதப்புரம், அழிபடைதாங்கி, சோமநாதபுரம் என்றெல்லாம் அழைப்பர். இத்தலத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள சிவபிரானைச் சோமநாதர் என்றும், அம்பிகை சௌந்தர வாலாம்பிகை என்றும் அழைப்பர். இந்நூலில் இத்தலவரலாறு, மூர்த்தியின் பெருமை, உலாச் சிறப்பு, குழாங்கள், ஏழு பருவ மங்கையர் நிலை போன்றன அழகுபடச் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்நூலை 1934ஆம் ஆண்டு சித்தாந்தம் இதழில் வெளியிட்டுள்ளனர்.

முருகரனுபூதி

உமாபதி இயற்றிய 'முருகரனுபூதி' காப்பு 1, நூல் 102 பாடல்களாலானது. இது, பழனிமலையில் கோயில் கொண்டுள்ள முருகப்பெருமான் மீது பாடப்பெற்றுள்ளது. இந்நூலை 1962ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள்

நூலகப் பருவ இதழில் கிருஷ்ணா சஞ்சீவி வெளியிட்டுள்ளார். இந்நூல் பழனி மலையில் கோயில் கொண்டிருக்கும் முருகப் பெருமான் மீது உமாபாரதி பாடப்பெற்றதாகும்.

முனிமொழி

'முனிமொழி முப்பது' எனும் 'முனிமொழி' 30 அறுசீர் விருத்தத்தாலானது. இந்நூல் யோக நெறியைப் பற்றியும், அட்டமா சித்திகளைப் பற்றியும் கூறி, இவற்றின் மூலம் முயன்றால் கடவுளை அடையலாம் என்றும் கூறுகின்றது. ஆறாதாரங்கள், மூன்று மண்டலங்கள் ஆகியவற்றைப் பற்றியும் விரிவாகக் கூறும் இந்நூலின் ஆசிரியர் பெயர் தெளிவாகத் தெரியவில்லை. இந்நூல் வே.ரா. தெய்வசிகாமணிக் கவுண்டரால் ஈரோடு ஸ்ரீவாணிவிலாஸ் பிரஸ் வெளியீடாக 1937ஆம் ஆண்டு மூலம் மட்டும் வெளியிடப்பெற்றுள்ளது. பின்னர் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகச் சுவடியைக் கொண்டு வி.எஸ். கிருஷ்ணன் 1956ஆம் ஆண்டு அந்நூலகப் பருவ இதழில் மூலம் மட்டும் வெளியிட்டுள்ளார்.

மூதுரை

ஔவையாரின் 'மூதுரை' கடவுள் வாழ்த்து 1, நூல் 30 வெண்பாக்களாலானது. இதனை வாக்குண்டாம் என்றும் கூறுவர். இந்நூல் இதுவரை இருநூறுக்கும் மேற்பட்ட பதிப்புகளைப் பெற்றிருக்கிறது. ய. மணிகண்டன் சரஸ்வதி மகால் நூலகச் சுவடியை ஆதாரமாகக் கொண்டு சில குறிப்பிட்ட அச்சுப் பிரதிகளை அவற்றோடு ஒப்பீடு செய்து திருத்தப் பதிப்பாக 1995ஆம் ஆண்டு 'சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ்'ப் பகுதியில் வெளியிட்டுள்ளார்.

மூர்த்திநாயனார்க்கரசளித்த திருவிளையாடல்

பெரும்பற்றப்புலியூர் நம்பியின் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தில் 'மூர்த்திநாயனார்க்கரசளித்த திருவிளையாடல்'லும் ஒன்று. இந்நூல் 15 பாடல்களாலானது. பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராணத்துள் வரும் திருநகரங்கொண்ட திருவிளையாடலுக்கு மாற்றாக இந்நூல்

இதில் இடம்பெற்றுள்ளது. வணிகனாகிய மூர்த்திநாயனாரின் சிவபக்தி சிறப்பால் அரசாளும் வாய்ப்பு வந்ததன் கதையே இந்நூல். இப்பகுதியைச் சௌந்தரபாரதி 1903ஆம் ஆண்டு 'விவேகபாநு' இதழில் வெளியிட்டுள்ளார். பின்னர் உ.வே. சாமிநாதையர் பதிப்பித்த 'திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம்' (1906, 1927, 1972) எனும் பதிப்புகளில் இந்நூல் இடம் பெற்றுள்ளது.

மூவர் அம்மானை

பாட்டு ஒவ்வொன்றும் ஐந்தடி; இடைமடக்காய் ஈற்றடி மிக்குவந்த கலித்தாழிசை யாப்பில் அமைந்த 'மூவர் அம்மானை' 96 பாடல்களாலானது. முதலில் ஒருவர் விடுகவி போன்ற ஒரு கேள்வியை முன்னிரு வரிகளில் கேட்பதாயும், அதையே மடக்கிப் பின்னர், அதிலுள்ள முரனை எடுத்துக் காட்டுவதாயும், மீண்டும் முதலாமவர் சிலேடையாகவே விடை கூறி முரணை ஒற்றுமைப்படுத்துவதாயும் இந்நூற் பாடல் ஒவ்வொன்றும் அமைந்துள்ளன. ஒவ்வொருவர் கூற்றும் அம்மானை என்று முடியும். சிவன், திருமால், அம்பிகை, விநாயகர், முருகன் இவர்கள் ஐவரைப் பற்றியும் இடம்பெற்று உள்ளன என்றாலும் முதல் மூவரே சிறப்புடையவராகக் கருதி 'மூவர் அம்மானை' எனப் பெயரிடப் பெற்றுள்ளது. மேற்கூறிய இவ் ஐவரின் திருவிளையாடல்களையும் அவர்களின் அருமை பெருமைகளையும் பேசும் போது 'விநாயகர், முருகர்' ஆகிய இருவரும் தொடர்பு கொண்டுவிடுவதால் இந்நூலை 'மூவர் அம்மானை' என்று கூறுகின்றனர். இந்நூலை மு. பசுபதி 1953ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் வெளியிட்டுள்ளார். இவ்விதழ்ப் பதிப்பு இந்நூலக அனுமதியுடன் வேங்கடராமையா 1953ஆம் ஆண்டு 'குமர குருபரன்' இதழ்ப் பகுதிகளில் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு திருப்பனந்தாள் காசிமட வெளியீடாக 1953, 1958ஆம் ஆண்டுகளில் முறையே முதல் மற்றும் இரண்டாம் பதிப்பாகவும், சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியாரின் குறிப்புரையுடன் 1956ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலக வெளியீடாகவும் வெளிவந்துள்ளது.

மெச்சும்பெருமாள் பாண்டியன் கதை

மெச்சும்பெருமாள் பாண்டியன் வரலாற்றை உணர்த்தும் இவ்வில்லுப்பாட்டு 2527 அம்மானை வரிகளாலானது. இதில் 'மெச்சும்பெருமாளின் பிறப்பு, ஊர்ப்பஞ்சத்தால் பெற்றோர் குழந்தையிலேயே பிரிவு, வண்ணாத்தியிடம் வளர்ந்தது, வண்ணாத்தியின் மருமகளிடம் கள்ள உறவு வைத்தது, பாண்டியன் அரசவையில் ஊர்க்காவல் பதவி, கொள்ளையர்களை விரட்டியது, பெற்றோர் மறைவிற்குப் பிறகு தமக்கையர் வரவு, தமக்கையர் திருமணம், தப்பித்த ஒரு கொள்ளையரால் கொலைபடுதல், உடன் இருந்த நாய்களும் மெச்சும்பெருமாளின் உடலோடு உடன்கட்டை ஏறுதல்' என்று இக்கதைப் போக்கு அமைந்துள்ளது. இக்கதையை இன்றும் இக்கதைத்தலைவன் வாழ்ந்த திருநெல்வேலியிலிருந்து சுமார் 15கி.மீ. தொலைவில் உள்ள கோபாலசமுத்திரம் எனும் ஊரில் விழா நாள்களில் பாடலாகப் பாடிவருகின்றனர். இந்நூலை 1975ஆம் ஆண்டு தேனோலை இதழில் சு. சண்முகசுந்தரம் தம்முடைய குறிப்புரை மற்றும் ஆய்வுரையுடன் வெளியிட்டு உள்ளார்.

மெய்ஞ்ஞானத்தங்கம்

தட்சிணாமூர்த்தியாரின் 'மெய்ஞ்ஞானத் தங்கம்' காப்பு வெண்பா 1, நூல் 47 கண்ணிகளாலானது. ஒவ்வொரு கண்ணியின் ஈற்றிலும் 'தங்கமே' என்றும், 'ஞானத்தங்கமே' என்றும் விளித்துக் கூறப்பெற்றுள்ளது. மானிடப் பிறப்பினையும் உலக வாழ்க்கையில் மக்கள் உழலுவதையும் கூறி, யமனது வருகையை எடுத்துக்காட்டி, வாழ்வின் நிலையாமையை முதலில் அறிவுறுத்தி அடுத்தபடியாக எல்லாப் பிறப்பினும் அரிதான மானிட தேகம் எடுத்தோர் ஒற்றைச்சாண் வயிற்றை வளர்ப்பதோடு மட்டில் அமைந்துவிடாமலும், கற்றதும் கேட்டதும் ஏட்டுச் சுரைக்காயாய்ப் போகாமலும், உண்மையை ஊன்றி உணரவேண்டும் என்று தூண்டுவதாகவும் இந்நூல் அமைந்துள்ளது. இந்நூல், சச்சிதானந்த யந்திரசாலை (1910), பி. முனிரத்தினம் (1916), அய்யாசாமிப் பிள்ளை (1924),

கே. இராமசாமி (1927), எஸ். மாணிக்க நாயக்கர் (1928), கே.ஏ. மதுரை முதலியார் (1932) போன்றோரின் பதிப்பினைப் பெற்றுள்ளது. இப்பதிப்புகளைத் தொடர்ந்து மு. சண்முகம் பிள்ளை 1965ஆம் ஆண்டு 'ஸ்ரீகாமகோடி ப்ரதீபம்' இதழில் வெளியிட்டுள்ளார்.

மெய்ம்மொழிச் சரிதை

இளங்காரிகுடி மெய்ம்மொழித் தேவரின் 'மெய்ம்மொழிச் சரிதை' பரபக்கம் (124), சுபக்கம் (361) ஆகிய இருபெரும் பிரிவுகளில் 485 பாடல்களாலானது. சமய உண்மைகளை உணர்த்துவதாக இந்நூலமைந்துள்ளது. சிவஞான சித்தியாரைப் போன்றே இந்நூலும் பரபக்கம், சுபக்கம் என்னும் இரு கூறாய் அமைந்த சைவ சாத்திரமாகத் திகழ்கின்றது. இந்நூலின் பகுதிகள் சீடன் வினாவும்- குரு விடையும் அளிப்பதாக அமைந்துள்ளன. இந்நூலை 1977ஆம் ஆண்டு 'தமிழாய்வு' இதழில் மு. சண்முகம் பிள்ளை சுபக்கம் 361, பரபக்கம் 42 ஆக 403 பாடல்களை வெளியிட்டுள்ளார்.

மேருமந்தர மாலை

ஸ்ரீவாமனந்தாச்சாரியாரின் 1406 பாடல்களில் வழங்கிய மேருமந்தரர் சரித்திரத்தைச் சுருக்கிப் பாரீசுவநாதன் அவர்கள் 'மேருமந்தரமாலை'யைத் தந்துள்ளார். மேருமந்தர புராணத்தின் வழி நூலாய் அமைந்த மேருமந்தர மாலை 994 அடிகள் கொண்ட ஓர் அம்மானைப் பாடலாகத் திகழ்கின்றது. மேருமந்தர புராணம் 13 சருக்கங்கள் கொண்டது. இவற்றுள் முதல் ஆறு சருக்கப் பிரிவுகளை மாலையாசிரியர் அப்படியே கொண்டு பாடியுள்ளார். அதன்பின் சருக்கப் பிரிவு குறிப்பிடாமல் ஒருசேரத் தொகுத்துப் பாடியுள்ளார். இந்நூலை 1978ஆம் ஆண்டு தமிழாய்வு இதழில் மு. சண்முகம்பிள்ளை வெளியிட்டுள்ளார்.

யாப்பருங்கலம்

அமிதசாகரரின் 'யாப்பருங்கலம்' எனும் இலக்கண நூல் உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல் ஆகிய மூன்று இயல்கள் 96 நூற்பாக்களாலானது. எழுத்து, அசை, தளை,

அடி, தொடை ஆகிய பாவுறுப்புக்களின் இலக்கணமும் நால்வகைப் பாக்கள், தாழிசை, துறை, விருத்தம் எனும் அவற்றின் மும்மூன்றினங்கள் ஆகியவற்றின் இலக்கணமும் இந்நூலில் இடம்பெற்றிருக்கின்றன. இந்நூலுக்கு நரசிங்கபுரம் வீராசாமி முதலியார் (மூலம் மட்டும் 1864), இராவ்பகதூர் ச. பவானந்தம் பிள்ளையின் பழைய விருத்தியுரைப் பதிப்பு (1917), மே.வீ. வேணுகோபாலப் பிள்ளையின் பழைய விருத்தியுரைப் பதிப்பு (1960, மறுபதிப்பு, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் - 1998), இரா. இளங்குமரனின் பழைய விருத்தியுரைப் பதிப்பு (1976) போன்ற பதிப்புகள் வெளிவந்திருக்கின்றன. இப்பதிப்புகளை அடுத்து ய. மணிகண்டன் முன்பதிப்புகளையும் சரஸ்வதிமகால் நூலகச் சுவடியையும் ஒப்பிட்டுத் திருத்தப் பதிப்பாக 2000ஆம் ஆண்டு சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழில் வெளியிட்டுள்ளார்.

யோக மாலை

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று சொல்லப் பட்ட நான்கனுள் யோகம் என்பது மனத்தை அடக்கிப் பயிற்சி செய்வதனால் ஏற்படும் இன்பத்தைப் பற்றிக் கூறுவதாகும். இதனை விளக்கும் ‘யோக மாலை’ 150 விருத்தங்களாலானது. மனிதன் தன் துன்பம் நீங்கி இன்பம் துய்க்கவல்ல வழிவகை களும், ஐம்பூதங்களின் தோற்றமும், அவற்றைப் பொருத்தி வாழும் பல்லுயிரின் சாதமும், அவற்றுள் தலைவராய மனிதர்தம் சன்னமும், சரீரமும் சமய போதமும் இந்நூலில் விளக்கப்பட்டு இருக்கின்றன. தாமத குணத்தின் தன்மைகளையும் புருடனுக் குரிய இலட்சணங்களையும் மனிதன் தோற்றம் பற்றிய விளக்கத்தையும் இந்நூல் நன்கு விளக்குகின்றது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை 1961ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் த. கிருட்டிணமூர்த்தி வெளியிட்டுள்ளார்.

ராமசரிதப் பாட்டு

இராம கதையைப் பலவகை விருத்தங்களிலும் படலப் படலமாக வகுக்கப்பெற்ற அந்தாதித் தொடையாய் இயற்றப்

பெற்றதே இந்நூல். இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரிய வில்லை. இதன் ஒவ்வொரு படலமும் 10, 11, 12 பாடல்கள் உடையதாயுள்ளது. இது தமிழ்க் காவியமோ மலையாளக் காவியமோ என்று நிர்ணயிக்க முடியாதவாறு இதன் மொழி யமைப்பு அமைந்துள்ளது. இந்நூலின் முதலிரு படலங்களை (21 பாடல்கள்) 1915ஆம் ஆண்டு செந்தமிழ் இதழில் து.அ. கோபிநாதராவ் வெளியிட்டுள்ளார். இதற்குமுன் 'பாஷா போஷணீ' எனும் மலையாள மாத இதழில் பிரும்மஸ்ரீ எஸ். பரமேசுவர ஐயர் நூல் முழுமையும் வெளியிட்டுள்ளார்.

வசந்தன் உயிர்வரு படலம்

'வசந்தன் உயிர்வரு படலம்' 27 பாடல்களாலானது. வசந்தன் என்னும் வானரவீரன் நிமித்தமாக இராமபிரான் யமன் மீது பாணத்தைவிட்டு வசந்தனை மீட்டதாக கம்பராமா யணத்தில் ஒரு கதை உண்டு. இதுவரை வெளிவந்த கம்ப ராமாயணப் பதிப்புகளில் இப்படலம் வெளிவராதது. வசந்தன் என்னும் வானரவீரன் நிமித்தமாக இராமபிரான் எமன் மீது பாணம்விட்டு வசந்தனை மீட்டதை இப்படலம் குறிப்பிடு கின்றது. 27 விருத்தங்களாலான இப்படலம் கம்பராமாயண அச்சுநூல்களில் இதுவரை இடம்பெறாதது. (மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் ஏட்டுப் பிரதியில் உள்ளதை) 1917ஆம் ஆண்டு அ. அரங்கசாமி மூப்பனார் சென்னை கார்டியன் அச்சுக்கூடத்தின் வழி இப்படலத்தை மட்டும் தனியே அச்சிட்டுள்ளார். என்றாலும் இவ்வச்சுப் பிரதிக்குப் பிறகு வெளிவந்த கம்பராமாயணப் பதிப்புகளில் இப்படலம் இடம்பெறவில்லை. இதனைத் தொடர்ந்து இப்படலப் பாடல்களை 1952ஆம் ஆண்டு அ. அரங்கசாமி மூப்பனார் 'தமிழ்ப்பொழில்' இதழில் வெளியிட்டுள்ளார்.

வண்ணத்தியல்பு நூல்

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் 'வண்ணத் தியல்பு நூல்' 100 சூத்திரங்களாலானது. தமிழ் மொழியின் கண் உள்ள கவிதை வகைகள் பலவற்றிலும் வண்ணம் என்பது

மிகவும் அருமையும் பெருமையும் வாய்ந்தது. வண்ணத்தின் இயல்புகளை இந்நூல் விளக்குகின்றது. இந்நூல், முத்தமிழ் ஆராய்ச்சி கண்ட வெளியீடாக 1867ஆம் ஆண்டும், வை. சண்முகம் பிள்ளையால் சென்னை ஸ்ரீநிலைய அச்சுக்கூட வெளியீடாக 1879ஆம் ஆண்டும் வெளிவந்துள்ளது. இந்நூலுக்கு உரையாசிரியர் பெயர் தெரியாத ஓர் உரையுண்டு. இவ்வுரையுடன் ந.ரா. முருகவேள் 1965ஆம் ஆண்டு 'திருக்கோயில்' இதழில் வெளியிட்டுள்ளார். பேரூர் சாந்தலிங்க அடிகளார் திருமடம் 1976ஆம் ஆண்டு ஒரு பதிப்பைக் கொண்டு வந்துள்ளது. இந்நூலின் ஒரு பகுதியை எஸ். சௌந்தர பாண்டியன் 'வண்ணக் குழிப்பு' என்ற பெயரில் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் 1997ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார்.

வயலூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி

வயலூர் உபாத்தியாயர் சுந்தரம் பிள்ளையின் 'வயலூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி' சிறப்புப் பாயிரங்கள் 5, காப்பு 10, நூல் 100 ஆக 115 பாடல்களாலானது. திருச்சிக்கு அடுத்துள்ள வயலூரில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள முருகப் பெருமான் மீது இந்நூல் பாடப்பெற்றுள்ளது. இந்நூலை 1978ஆம் ஆண்டு திருக்கோயில் இதழில் மு.கோ. இராமன் வெளியிட்டுள்ளார்.

வருகைப்பத்து

பழனிமலையில் வீற்றிருக்கும் முருகப்பெருமானின் பெருமைகளைக் கூறும் 11 பாடல்களாலானது இந்நூல். முருகப்பெருமானின் சிறப்புக்களை ஒவ்வொரு பாடலிலும் கூறி, "... மயில்மீதி லேறி வரவேணு மெந்தனருகே" என்ற ஈற்றுத் தொடர் மகுடமாக அமைத்து அவர்தம் வருகையை வேண்டுவதாக இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூல் கே.டி. சுந்தரம் செட்டியாரால் 1935ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பெற்றிருக் கின்றது. பின்னர் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகச்

சுவடியை ஆதாரமாகக் கொண்டு பூ. சுப்பிரமணியம் 1965ஆம் ஆண்டு அந்நூல் நிலையப் பருவ இதழில் வெளியிட்டுள்ளார்.

வருத்தமறவுய்யும் வழி

அந்தரியாக பூசை, ஓமம், தியானம் முதலியவற்றைக் கூறும் இந்நூல் 25 குறள் பாக்களாலானது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. ஆயினும் அட்டாங்க யோகக் குறளின் ஆசிரியரே இந்நூலையும் எழுதினார் என்பர். அட்டாங்க யோகக் குறளில் 'நின்றுமிருந்து' என்னும் முதற்குறிப்பு உடைய குறளை மீண்டும் இந்நூலிலும் குறிப்பிடுவதால் இத்துணிபு ஏற்படுகின்றது. இந்நூலைச் சே.ரா. சுப்பிரமணியக் கவிராயர் 1904ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழ்ப் பகுதிகளில் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1905, 1923ஆம் ஆண்டுகளில் செந்தமிழ் வெளியீடாக முறையே முதல் மற்றும் இரண்டாம் பதிப்புகள் வெளிவந்துள்ளன.

வருமுருகாற்றுப்படை

அருணகிரிநாதரின் 'வருமுருகாற்றுப்படை' காப்பு 1 கட்டளைக்கலித்துறை, நூல் 64 அகவலடிகளாலானது. முருகப் பெருமானின் பெருமைகளையும், சிறப்புக்களையும் எடுத்துக் கூறி பல்வகைச் சிறப்புக்களையெல்லாம் பெற்றவனே! உன்னை ஏத்துவார் முன் இமைப்பொழுதில் வந்து அருள்தருக! என வேண்டுவதாக இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலை எம்.பி.எஸ். துரைசாமி முதலியார் 1937ஆம் ஆண்டு 'சித்தாந்தம்' இதழ்ப் பகுதியில் வெளியிட்டுள்ளார். பிறகு வீ. சொக்கலிங்கம் 1963ஆம் ஆண்டு 'சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ்'ப் பகுதியில் வெளியிட்டுள்ளார். பின்னர் சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ்ப் பதிப்பு 1966ஆம் ஆண்டு இந்நூலகம் வெளியிட்ட 'முருகர் கதம்பம்' எனும் தொகுப்பில் இடம்பெற்று உள்ளது.

வலிவல மும்மணிக்கோவை

திருவலிவலம் என்ற சோழநாட்டுப் பாடல்பெற்ற தலத்தில் எழுந்தருளியுள்ள மனத்துணை நாதருடைய புகழைப்

போற்றும் இந்நூல் ஆசிரியம், வெண்பா, கட்டளைக் கலித்துறை என்ற முறையில் யண்டலித்து அந்தாதியாக வரும் 30 பாடல்களும் காப்பு வெண்பா 1ம் உடையது. ஆசிரியம் 140 அடிப்பெருமையுடையது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை உ.வே. சாமிநாதையர் 1934ஆம் ஆண்டு 'கலைமகள்' இதழ்ப் பகுதிகளில் தனிப்பக்க எண்ணுடன் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1934ஆம் ஆண்டு கலைமகள் வெளியீடு 3ஆவதாக வெளிவந்துள்ளது.

வலைவீசு புராணம்

மதுரைச் சொக்கநாதர் திருவிளையாடல்கள் 64இல் வலைவீசிய திருவிளையாடலும் ஒன்று. இத்திருவிளை யாடலைக் காங்கேயன் என்பார் 254 பாடல்கள் கொண்ட புராணமாக யாத்துள்ளார். சிவபெருமான் கயிலையில் வீற்றிருந்து பருப்பதன் மகளாகிய பார்வதி தேவிக்கு ஞானகோசத்தை உபதேசித்துக் கொண்டிருந்தார். அப்போது ஆறுமுகக் கடவுள் ஒரு கருவண்டின் உருக்கொண்டு பார்வதி தேவியாரின் கூந்தலில் மறைந்திருந்து கேட்டார். அதனையறிந்த சிவபெருமான் ஒட்டுகேட்ட குற்றத்திற்காக முருகனை முனிந்து ஆழியில் 'மகரமீன்' ஆகுமாறு சபித்தார். பின்னர் உரையாடலில் உமாதேவியார் சிவத்தினும் சக்தியே பெரிதென்று வாதிட்ட குற்றத்திற்காக, உடை கையிலிருந்த ஞானகோசத்தினை வாங்கிக் கடலில் எறிந்துவிட்டு, அங்கயற்கண்ணியாம் பார்வதியைப் பரதவர் மகளாகுமாறு சபித்தார். உண்மையுணர்ந்த உமை சாபநீக்கம் கேட்டாள். சிவபெருமான் 'நாமே உன்னை வந்து மணப்போம்' என்று கூறினார். பார்வதி தேவியார் பரதவர் மகளானார். முருகன் மகரமீனானார். சிவனார் உமை கையினின்றும் வாங்கி எறிந்த ஞானகோசத்தை முருகனாகிய மரகமீன் விழுங்கிக் கடலைக் கலக்கி மீனவர்களையும் துன்புறுத்தியது. அதுகண்ட பரதவர் தலைவன் 'இம்மீனைப் பிடிப்பவர்க்கு என் மகளைத் தருவேன்' என்று கூறினான். சில காலம் செல்ல எல்லாம் வல்ல எம்பெருமான் வலைஞனாகச் சென்று வலைவீசி அம்மகர மீனைப் பிடித்து மலையன் மகளை

மணம்புரிந்தார் என்பதே இப்புராணக் கதை. இந்நூலை வீ. சொக்கலிங்கம் 1975-80ஆம் ஆண்டு 'சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ்'ப் பகுதிகளில் தனிப் பக்கவெண்ணுடன் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு 1980ஆம் ஆண்டு இந்நூலக வெளியீடாக வெளிவந்துள்ளது.

வளையாபதிச் செய்யுட்கள்

ஐம்பெருங்காப்பியங்களில் வளையாபதியும் ஒன்று. இந்நூல் இன்று முழுமையும் கிடைக்கவில்லை. என்றாலும் உரையாசிரியர்களின் குறிப்புக்களில் இருந்தும் புறத்திரட்டில் இருந்தும் ஒருசில பாடல்கள் கிடைத்துள்ளன. புறத்திரட்டி லிருந்து 66 பாடல்கள் பல்வேறு அதிகாரங்களிலிருந்து தொகுக்கப் பெற்றிருக்கின்றன. இவையல்லாமல், அடியார்க்கு நல்லாரின் சிலப்பதிகார உரையில் 3 பாடல்களும், வேறு பலர் உரைகளிலிருந்து 3 பாடல்களும் ஆக இந்நூலின் 72 பாடல்கள் இதுவரை கிடைத்துள்ளன.

ரா. இராகவையங்கார் பல சுவடிகளிலிருந்து 58 வளையாபதிச் செய்யுள்களைத் தொகுத்து 1903ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழ்ப் பகுதிகளில் வெளியிட்டுள்ளார். இவ்விதழ்ப் பதிப்பு செந்தமிழ் வெளியீடு 3ஆவதாக 1903ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. அதன்பிறகு 1938ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்ட எஸ். வையாபுரிப் பிள்ளையின் 'புறத்திரட்டு'ள் 66 பாடல்கள் இடம்பெற்று உள்ளன. பண்டைக்கால உரையாசிரியர்கள் மேற்கோளாக எடுத்தாண்ட கவிகள் ஆறையும் சேர்த்துப் பொ.வே. சோமசுந்தரனாரின் விளக்கவுரையுடன் குண்டலகேசியையும் சேர்த்து 1964ஆம் ஆண்டு சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் ஒரு பதிப்பை வெளியிட்டுள்ளது. இரா. இளங்குமரன் 1972ஆம் ஆண்டு சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் வெளியிட்ட புறத்திரட்டில் இந்நூலின் 72 பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

வாதவூரர் ஆனந்தக்களிப்பு

திருவாதவூரில் அவதரித்தவரும், சைவ சமயக் குரவர் நால்வருள் ஒருவருமாகிய மாணிக்கவாசக சுவாமிகளைத்

துதிக்கின்ற முறையில் ஆண்டியப்பன் இயற்றிய 'வாதவூரர் ஆனந்தக்களிப்பு' ஒருவகை இசைப்பாவினாலானது. 'வாதவூரான் சரணத்தை உண்மைகொள் மனமே' என்று மணத்தை அழைத்து, இந்த நிலையற்ற உடலை நிலையானது என்று நம்பாதே என உபதேசிக்கும் இந்நூல் செல்வ நிலையாமையும், இறைவன் திருவருளுக்கு ஆளாக வேண்டியதன் இன்றியமையாமையும், மோனநிலை முதலிய பல அரிய செய்திகளும் இந்நூலில் உள்ளன. இந்நூலை 1954ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் வி.எஸ். கிருஷ்ணன் வெளியிட்டுள்ளார்.

விக்கிரம சோழனுலா

ஒட்டக்கூத்தரின் 'விக்கிரம சோழனுலா' 342 கண்ணிகள் மற்றும் நூற்பயன் 1 வெண்பா ஆக 343 பாடலகளாலானது. விக்கிரம சோழன் உலாச் சிறப்பை விவரிக்கும் இந்நூல் கலிவெண்பாவாலாகியது. இது, அரசன் உலாவைக் கண்ட பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்னும் எழுவகை மகளிர் நிலைகளை விளக்கு கின்றது. எழுவகை மகளிர் உருவ அழகையும் அவர்தம் உள்ளத்தில் எழுந்த காதலுணர்ச்சிகளையும் இவ்வுலா சித்திரிக்கின்றது. இந்நூலை மு. இராகவையங்கார் 1909ஆம் ஆண்டு 'செந்தமிழ்' இதழ்ப் பகுதிகளில் தனிப் பக்க எண்ணுடன் வெளியிட்டுள்ளார். பின்னர் இவ்விதழ்ப் பதிப்பு செந்தமிழ் வெளியீடு 23ஆவதாக 1914, 1951ஆம் ஆண்டுகளில் முறையே முதல் மற்றும் இரண்டாம் பதிப்பு வெளிவந்துள்ளது. இந்நூல் மூவருலாப் பதிப்புகளிலும் இடம்பெற்றுள்ளது. பண்டித அ. கோபாலையர் (1926), அடையாறு கலாக்ஷேத்திர வெளியீடாக பழைய உரைக்குறிப்புடனான எஸ். கல்யாணசுந்தர ஐயர் (1946) பதிப்பும், திருமதி ருக்மணிதேவி (1952) வெளியிட்ட இரண்டாம் பதிப்பும் என மூவருலாப் பதிப்புகள் வெளிவந்தி ருக்கின்றன. இப்பதிப்புகளுக்குப் பிறகு சங்குப்புலவரின் உரையுடன் 1971ஆம் ஆண்டு சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் இந்நூலைத் தனியாக வெளியிட்டுள்ளது.

விசயராகவ நாயக்கர் அய்யன் பேரில் முளைப்பாட்டு

தஞ்சையை ஆண்ட இரகுநாதநாயக்கருக்கும் (கி.பி. 1600-1631), அவருடைய மனைவியான கலாவதி என்பவருக்கும் மூன்றாவது மகனாக விசயராகவ நாயக்கர் பிறந்தார். இவர், கி.பி.1633-1673 முடிய நாற்பத்தோராண்டுகள் ஆட்சி செய்தார். இவ்விசயராகவ நாயக்கர் மீது பாடப்பெற்ற முளைப்பாலிகைப் பாட்டே இந்நூல். இது 81 அகவல் வரிகள் கொண்டது. விசயராகவ நாயக்கர் பவனி வரும்பொழுது பெண்கள் முளைப் பாலிகையை மங்கலப் பொருளாக வைத்து, அதைத் தெய்வ மாகக் கருதி, அவர்கள் அம்மன்னனையே கணவனாக அடையவேண்டுமென்று அம்முளைப்பாலி நாச்சியாரைப் பணிந்து பாடுவதாக இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

நாட்டுப்புற மக்களிடையே முளைப்பாலிகை மங்கலப் பொருளாகப் பயன்படுத்தப்பெறுகின்றது. பெரும்பாலும் இறைவிழாக் காலங்களில் முளைப்பாலிகையை வைத்து வழிபாடு செய்யும் வழக்கம் மக்களிடையே இன்றும் உள்ளதாகும். விழா நாயகர் தெருவில் உலா வரும்போது பெண்கள் முளைப்பாலிகை வைத்து வழிபாடு செய்து அவ்விழா நாயகரையே கணவனாக அடையவேண்டும் என்று பாடும் பாட்டு 'முளைப்பாட்டு' ஆகும். இவ்வகை உலா இலக்கியத்தை ஒத்ததாகத் திகழ்கின்றது. இந்நூலை 1984ஆம் ஆண்டு சரஸ்வதி மகால் நூலகப் பருவ இதழில் ச. திலகம் வெளியிட்டுள்ளார்.

விநாயக மான்மியம்

சதாசிவப்பிள்ளை பூபாலப்பிள்ளையின் 'விநாயக மான்மியம்' 37 கண்ணிகளால் ஆனது. முழுமுதற் கடவுளாம் விநாயகப் பெருமானின் சில லீலைகளைக் கூறுவதாக இந்நூல் அமைந்துள்ளது. இராவணன் விநாயகரைப் பூசித்த கதை இதில் விவரிக்கப்பட்டுள்ளது. இந்நூலை, நூலாசிரியரின் குமாரரர் பூ.செ. இராசரத்தினம் கொழும்பு மீனாம்பாள் அச்சியந்திரசாலையில் 1905ஆம் ஆண்டு பதிப்பித்திருக்கின்றார். இப்பதிப்பினை ஆதாரமாகக் கொண்டு 1968ஆம் ஆண்டு

'குமரகுருபரன்' இதழ்ப் பகுதியில் இந்நூல் வெளிவந்துள்ளது. இதே பெயரில் 5840 கண்ணிகள் கொண்ட விநாயக மான்மியம் ஒன்றுண்டு. இது 1925ஆம் ஆண்டு வெளியிடப்பெற்று இருக்கின்றது.

விநாயகர் தோத்திராஷ்டகம்

திருவாவடுதுறையாதீனம் கவிராட்சச கச்சியப்ப முனிவரின் 'விநாயகர் தோத்திராஷ்டகம்' 8 கலிவிருத்ததாலானது. 'சரணம் அடைகின்றோம்' என்ற ஈற்றுத் தொடரை ஒவ்வொரு பாடலிலும் இந்நூல் மகுடமாகக் கொண்டுள்ளது. எட்டுத் தோத்திரப் பாடல்களைக் கொண்டதால் இதனைத் 'தோத்திராஷ்டகம்' என்பர். ஒவ்வொரு பாடலிலும் கணபதியின் பெருமைகள் கூறி அவ்வகைப்பட்டோனைச் சரண் அடைகின்றோம் என்று துதிப்பதாக இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலை 1990ஆம் ஆண்டு மெய்கண்டார் இதழில் சீர்வளர்சீர் சுந்தரமூர்த்தித் தம்பிரான் சுவாமிகள் வெளியிட்டுள்ளார்.

விபூதி தோத்திரம்

பழனிமலை ஆறுமுகப் பெருமானின் திருநீற்றுப் பெருமையினைக் கூறும் 'விபூதி தோத்திரம்' 10 பதினான்குசீர் கழிநெடிலடியாசிரிய விருத்தத்தாலானது. திருநீற்றினால் பெருமை பெற்ற பிற வரலாறுகளையும் இந்நூல் சுட்டிக்காட்டுகின்றது. ஒவ்வொரு பாடலின் ஈற்றிலும்,

"அடியவர்க் கருள்தரு கிருமைசெய் பழநிமலை
அறுமுகவர் தருதிருவெண் ணீறே"

என்ற அடியை மகுடமாகக் கொண்ட இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை 1984ஆம் ஆண்டு சரஸ்வதி மகால் நூலகப் பருவ இதழில் ச. திலகம் வெளியிட்டுள்ளார்.

விராலிமலை வேலவர் காதல்

திருச்சிக்கு அருகேயுள்ள விராலிமலையில் கோயில் கொண்டிருக்கும் முருகப்பெருமான் மீது காமரசமாலை எனும் நங்கை அன்பு கொண்டதைக் கூறும் இந்நூல் காப்பு வெண்பா

1, நூல் 442 கண்ணிகளாலானது. முருகப்பெருமான் பவனி வந்த காட்சி, இக்காட்சியைக் கண்ட காமரசமாலை காதல் வயப்பட்டு ஒருவரையொருவர் கண்டு இன்புறுதல், இருவரும் கூடிப் பிரிந்த நிலையில் அவளது நிலை கண்ட தோழியர் கூற்று, செய்தி அறிந்த தாய் மகிழ்வுற்று வாழ்த்துதல் போன்ற பல இன்சுவை நிகழ்ச்சிகளைக் கொண்டுள்ள இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலை 1964ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் முத்தம்மாள் கௌரிநாதன் வெளியிட்டுள்ளார்.

விராலிமலை வேலவர் குறவஞ்சி நாடகம்

பிள்ளைப்பெருமாள் கவிராயரின் 'விராலிமலை வேலவர் குறவஞ்சி நாடகம்' விருத்தம், அகவல், தரு, வசனம், கலித்துறை எனப் பல்வேறு நிலைகளிலமைந்துள்ளது. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த விராலிமலை எனும் தலத்தில் அமைந்துள்ள முருகவேளைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு இந்நூல் பாடப்பெற்றுள்ளது. விராலிமலை முருகவேள் உலா வருகின்றார். அவர் உலாவைக் கண்ட வாலமோகினி மயங்கிக் காதலாற் சோர்வுறுகிறாள். அன்னம் மறுக்க, தனது நண்புறு சகியை வேண்ட, அவளோ விராலிமலைக் குறத்தியைக் குறி சொல்ல அழைத்து வருகிறாள். குறத்தியின் பெருமையை உணர்ந்த வாலமோகினிப் பெண் தனக்குக் குறி பார்த்துச் சொல்லும்படி வேண்டுகிறாள். மோகினிப்பெண் விராலிமலை வேலவரைக் கண்டு காதலித்ததையும், அவர் அருள்வார் என்பதையும் குறி கூறுகிறாள் குறத்தி. மகிழ்ந்த மோகினிப்பெண் குறத்திக்கு நல்ல பரிசு தருகிறாள். இந்த நிலையிலே சிங்கன் சிங்கியைத் தேடி வரச் சிங்கி சென்று வந்த நிகழ்ச்சியைக் கூறுகிறாள். இருவரும் விராலிமலை வேலவர் பெருமையை நினைந்து வாழ்த்துவதாக இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலை மு. பசுபதி 1959ஆம் ஆண்டு 'அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ்'ப் பகுதியில் வெளியிட்டுள்ளார். பின்னர் இந்நூலை வே. இரா. மாதவன் 1983ஆம் ஆண்டு மெய்யம்மை பதிப்பக வெளியீடாக வெளியிட்டுள்ளார்.

வில்லிபாரதம் மௌளி சூட்டுச் சருக்கம்

வில்லிபாரதம் சௌப்திக பருவம் பதினெட்டாம் போர்ச்சருக்கம் முடிந்த பின்னர் பத்தொன்பதாம் சருக்கமாக அமைந்திருப்பது 'மௌளி சூட்டுச் சருக்கம்' ஆகும். இதில் 54 விருத்தங்கள் இடம்பெற்றுள்ளன. பாரதப்போர் முடிந்த பிறகு தருமருக்கு முடிசூட்டுவதை இச்சருக்கப் பாடல்கள் விளக்குகின்றன. இதனை,

> "ஆதிமறை வேதனுட னாகுலமுந் தீர
> மோதிபதி னெட்டுதினப் பாரத முடித்த
> நீதிவளர் தருமருட நீண்முடியின் மீது
> சோதிபெரு நன்மௌளி சூட்டினர் வியாதர்" (53)

எனும் பாடல் உணர்த்தும். இச்சருக்கப் பாடல்கள் வில்லிபாரதப் பதிப்பு எதிலும் இதுவரை இடம்பெறாததாகும். இச்சருக்கத்தை 1949ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் தி. சந்திரசேகரன் வெளியிட்டுள்ளார். இச்சருக்கம் இன்றுவரை எந்தப் பதிப்பிலும் இடம்பெறவில்லை என்பது இங்குச் சுட்டத்தக்கதாகும்.

வீரபுரப்பத்து

திண்டிவனம் அருகே பெருமண்டூர் என்னும் வீரபுரத்தில் கோயில் கொண்டுள்ள அருகப்பெருமான் மீது பாடப்பெற்ற இந்நூலில் எட்டுப் பாடல்களே கிடைத்துள்ளன. ஒவ்வொரு பாடலின் ஈறும் 'வீரபுரமே' என்று முடிவதாக அமைந்துள்ளது. வீரபுரச் சிறப்பும் பெருமையும் இதனுள் பலவாறாகக் கூறப்பெற்றுள்ளன. இந்நூலை 1979ஆம் ஆண்டு முக்குடை இதழில் மு.கோ. இராமன் வெளியிட்டுள்ளார்.

வெள்ளக்கிணற்று வள்ளிநாயகன் பதிகம்

கந்தசாமி சுவாமிகளின் 'வெள்ளக்கிணற்று வள்ளி நாயகன் பதிகம்' காப்பு வெண்பா 1, நூல் 13 எழுசீர் ஆசிரிய விருத்தத்தாலானது. வெள்ளக்கிணறு என்னும் தலத்தில் வள்ளிநாயகி, தெய்வயானையாரோடு கோயில் கொண்டுள்ள முருகப்பெருமானைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு

பாடப்பெற்றுள்ளது இந்நூல். இந்நூல் 1964ஆம் ஆண்டு கௌமார சபை வெளியிட்ட 'தவத்திரு கந்தசாமி சுவாமிகள் தோத்திரத் திரட்டு'ள் ஒன்றாக இடம்பெற்றுள்ளது. பின்னர் ப.வெ. நாகராஜனின் உரையுடன் 1997ஆம் ஆண்டு 'மாதாந்திர அமுதம்' இதழில் வெளிவந்துள்ளது.

வேங்கடேசப்பெருமாள் தமிழ்மாலை

குன்றைப்பதி, மானாங்குடி ஆகிய இடங்களில் கோயில் கொண்டுள்ள வேங்கடேசப் பெருமாள் மீது இந்நூல் பாடப்பெற்றுள்ளது. கீர்த்தனை, கும்மி, துதி முதலிய பலவகைப் பா வகைகளாலான இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூல் அக்காலத்திருந்த புதுக்கோட்டை இராமச்சந்திர சேதுபதி, நாயக்கமார்கள் முதலியோர் நலமுற வாழ்வதற்கும், வேண்டுவன பெறுவதற்கும் உதவுமாறு மானாங்குடி, குன்றைப்பதியில் வாழும் கடவுளர்களை வேண்டிப் பாடப்பெற்றதாகும். திருமாலைத் துதிப்பவர்க்குக் கலிகொடுமை, யம பயம், மனிதர் கண்ணேறு போன்றன வாராதென்றும், செல்வம், யோகம் தாமே வந்து சேருமென்றும் இந்நூல் வலியுறுத்துகின்றது. இந்நூலை 1963ஆம் ஆண்டு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் த. கிருட்டினமூர்த்தி வெளியிட்டுள்ளார்.

வேதபுரி ஈசுவரர் அந்தாதி

வேதபுரி என்னும் திருவோத்தூரில் எழுந்தருளி இருக்கும் வேதபுரி ஈசுவரரைப் பற்றிய 'வேதபுரி ஈசுவரர் அந்தாதி' கடவுள் வாழ்த்து 2, நூல் 102 வெண்பாக்களாலானது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. வேதபுரி ஈசுவரரைப் பற்றியும், வேதபுரியின் நீர்வளம், நிலவளம் பற்றியும் இந்நூல் இனிய எளிய நடையில் கூறுகின்றது. இறைவனை வாழ்த்தித் துதிக்கும் பலவகை முறைகளும் இந்நூலுள் இடம்பெற்றுள்ளன. இந்நூலை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் 1953ஆம் ஆண்டு மு. பசுபதி வெளியிட்டுள்ளார்.

ஸ்ரீமெய்கண்டதேசிகர் மாலை

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் 14ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீவேளூர் சுப்பிரமணிய தேசிக மூர்த்திகளின் 'ஸ்ரீமெய்கண்டதேசிகர் மாலை' 10 கட்டளைக்கலித்துறையாலானது. இந்நூல் புறச்சந்தானக் குரவர்கள் நால்வரில் முதலாமவரான மெய்கண்டாரை முன்னிலைப்படுத்தி அவர்தம் பெருமைகளைப் பேசுவதாக அமைந்துள்ளது. மேலும், 'மெய்கண்ட நாதமெய்த் தேசிகனே' என்ற தொடர் ஒவ்வொரு பாடலின் ஈற்றிலும் மகுடமாக அமைந்துள்ளது. இந்நூலை 1996ஆம் ஆண்டு மெய்கண்டார் இதழில் சுயம்புநாதத் தம்பிரான் சுவாமிகள் வெளியிட்டு உள்ளார்.

ஸ்ரீவீரபோக வசந்தராயர் வரலாறு

ஸ்ரீவீரபோக வசந்தராயரின் வரலாற்றினை உரைநடையில் கூறும் இந்நூலுள் வீரபோக வசந்தராயரின் மகிமைகள் கூறப்பெற்றுள்ளன. இதில் அத்தியாயம் என்பதை பத்திரிகை எனக் குறிப்பிடப்பெற்றுள்ளது. இந்நூலை 1988ஆம் ஆண்டு சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழில் ச. திலகம் வெளியிட்டுள்ளார்.

ஸ்ரீவைகுந்தநாதர் பிள்ளைத்தமிழ்

திருவெண்ணெய் நல்லூரில் கோயில் கொண்டெழுந் தருளியுள்ள வைகுந்தநாதப் பெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு 101 பாடல்களில் இந்நூல் பாடப் பெற்றுள்ளது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இப்பிள்ளைத்தமிழ் செந்தமிழினால் அமையப்பெற்று, திணைமயக்கம், கற்பனை, சிலேடை முதலிய அணிகள் பொருந்திக் கற்போர் மனத்தைக் கவர்தற்குரிய ஆழ்ந்த பொருள் வன்மையுடையது. இந்நூலை 1932ஆம் ஆண்டு கலாநிலையம் இதழில் கி. வேங்கிடசாமி ரெட்டியார் வெளியிட்டுள்ளார்.

7. இதழ்களில் மருத்துவச் சுவடிப்பதிப்புகள்

கி.பி.1812ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே தமிழர்கள் அச்சகம் நடத்தத் தொடங்கினர். மாச தினசரிதையின் அச்சுக கூடம் ஒரு கிறித்துவத் தமிழரால் சென்னையில் நடத்தப் பெற்றிருக்கின்றது. இந்த அச்சுக்கூடத்தின் வழியாக 'மாசத் தினச்சரிதை' என்னும் மாதஇதழ் வெளிவந்திருக்கின்றது. இதுவே இந்தியாவில் இந்தியரால் குறிப்பாகத் தமிழரால் நடத்தப்பெற்ற முதல் இதழ் ஆகும். இவ்வச்சுக் கூடத்தின் வழியாகத் தான் 'திருக்குறள் மூலமும் நாலடியார் மூலமும்' என்னும் முதல் சுவடிப்பதிப்பு நூல் கி.பி.1812இல் வெளியாகி யிருக்கின்றது. அச்சகங்களைத் தொடங்கிய தமிழர்கள் அவ்வச்சகத்தின் வழியே இதழ்களையும் வெளியிட்டிருக் கின்றனர். அத்தோடு பண்டைய இலக்கிய இலக்கண மருத்துவ சோதிட நூல்களையும் வெளியிட்டிருக்கின்றனர் என்பது தெரிகின்றது.

தொடக்கக் காலத் தமிழக இதழ்களில் கிறித்துவ, சைவ, வைணவ, பௌத்த, இசுலாமிய சமயக் கருத்துகளுக் கிடையே சில இதழ்கள் மக்களின் தேவைக்கேற்ப மருத்துவப் பகுதிகளையும் இணைத்து வெளியிடலாயின. இவ்வகையில், கி.பி.1831ஆம் ஆண்டு வெளிவந்த 'தமிழ் மேகசின்' இதழில் காச நோய் பற்றிய கட்டுரை இடம்பெற்றுள்ளது. இக்கட்டுரையே இதழ்களில் வெளிவந்த முதல் அறிவியல் கட்டுரையாகும் (தமிழில் மருத்துவ இதழ்கள், ப.19). இவ்விதழைத் தொடர்ந்து பல அறிவியல் செய்திகளைப்

பல்வேறு வகையான இதழ்கள் வெளியிட்டிருக்கின்றன. மருத்துவ இதழ்கள் வெளிவந்த காலத்தை மூன்று பகுப்பாகப் பகுக்கலாம்.

அ. 1900க்கு முன் மருத்துவ இதழ்கள்

முதன்முதலாக மருத்துவம் பற்றிய செய்தி கி.பி.1831ஆம் ஆண்டு 'தமிழ் மேகசின்' என்னும் இதழில் வெளிவந்தது. இம்முதல் செய்தி காசநோய் பற்றியதாக அமைந்திருக்கின்றது. "தமிழகத்தில் வெளிவந்த தமிழ் மேகசின் இதழைப் போலவே இலங்கையில் பணியாற்றிவந்த சமயப் பணியாளர்களால் 1841ஆம் ஆண்டு 'உதய தாரகை' தொடங்கப்பெற்றது. மாதம் இருமுறையாக வெளிவந்த இந்த இதழில் சமயச் செய்திகளுடன் அறிவியல் கட்டுரைகளும் தொடர்ந்து வெளியிடப்பட்டுள்ளன. ஐரோப்பிய மருத்துவத்தை, குறிப்பாக ஐரோப்பிய அறிவியலைத் தமிழில் வெளியிட்ட உதயதாரகை தமிழ் மருத்துவத்தை ஆங்கிலத்தில் வெளியிட்டது. தமிழ் மருத்துவச் சுவடிகளில் இருந்த அகத்தியர் மருந்து தயாரிப்பு வகையை ஆங்கிலத்தில் உதயதாரகை வெளியிட்டது" (தமிழில் மருத்துவ இதழ்கள், ப.19) என்பதைப் பார்க்கும் போது கி.பி.1841ஆம் ஆண்டு உதயதாரகையில் மருத்துவச் சுவடிப்பதிப்பு தொடங்கப் பெற்றிருப்பது தெரிகிறது.

அதன்பிறகு கி.பி.1855ஆம் ஆண்டு பெர்சிவல் பாதிரியாரால் தொடங்கப் பெற்ற தினவர்த்தமானி இதழில் அறிவியல் கட்டுரைகள், சுகாதாரம், பொது மருத்துவம் போன்ற பொருண்மைகள் இடம்பெற்றிருக்கின்றன. கி.பி.1870இல் தொடங்கப்பெற்ற ஜனவிநோதினி இதழில் தொற்றுநோய் தடுப்புமுறை, கள்ளுண்ணாமை போன்ற பொருண்மைகள் இடம்பெற்றிருக்கின்றன. ஜனவிநோதினி வெளிவந்த அதே ஆண்டில் 'அகத்திய வர்த்தமானி' என்னும் மருத்துவ இதழ் சென்னையிலிருந்து வெளிவந்திருக்கின்றது. இவ் இதழ்தான் மருத்துவத்திற்கென்றே வெளிவந்த தனி இதழாகும். எனவே, அகத்திய வர்த்தமானியை முதல் மருத்துவ இதழ் என்பர்(தமிழில் அறிவியல் இதழ்கள், ப.140). அகத்திய வர்த்தமானியைத்

தொடர்ந்து சுகஜீவனி *(1887)*, ஆயுர்வேத பாஸ்கரன் *(1889)*; விவேக சிந்தாமணி *(1892)*, விவேக சுந்தரம் *(1894)*, சுகாதார போதினி *(1891)*, வைத்திய போதினி *(1897)*, வைத்திய விசயன் *(1897)* போன்ற மருத்துவ இதழ்கள் ஐரோப்பிய மருத்துவத்தை ஆங்கிலத்திலும் தமிழிலும் கட்டுரை வடிவில் கொடுத்துவந்தன. என்றாலும் சில இதழ்கள் சித்த மருத்துவச் செய்திகளையும் சித்த மருத்துவ நூல்களையும் வெளியிட்டுள்ளன.

ஆ. 1990 முதல் 1947 வரை மருத்துவ இதழ்கள்

*1900*ஆம் ஆண்டு முதல் சென்னை மாகாணத்தின் பல பகுதிகளில் ஐரோப்பிய அடிப்படையிலான கல்வி கற்பிக்கும் நிறுவனங்கள் பல தொடங்கப்பட்டன. இக்கல்வி நிறுவனங்களில் ஐரோப்பிய அறிவியல் பாடங்கள் தமிழ், தெலுங்கு மொழிகளில் கற்பிக்கப்பட்டன. ஐரோப்பிய அறிவியல் பாட நூல்களை எழுதிய ஆசிரியர்கள் இக்கால கட்டத்தில் வெளி வந்த இதழ்களில் சுகாதாரம் மற்றும் தொற்றுநோய் குறித்த மருத்துவக் கட்டுரைகளை எழுதினர். பொது இதழ்களை நடத்திவந்த இதழாசிரியர்கள் மக்களிடம் அறிவியல் அறிவு, மருத்துவ அறிவியல் அறிவு, குறிப்பாக ஐரோப்பிய மருத்துவ அறிவியல் அறிவு பரவவேண்டும் என்பதில் ஆர்வமுடைய வர்களாக இருந்தனர்.

இந்நோக்கத்தில் அறிவு விளக்கம் *(1901)*, யதார்த்த பாஸ்கரன் *(1902)*, தமிழகம் *(1905)*, சுகாதார போதினி *(1906)*, ஆரோக்கிய போதினி *(1908)*, வைத்திய போதினி *(1910)*, நல்வழி *(1912)*, வைத்திய கலாநிதி *(1913)*, தமிழ் வைத்தியக் களஞ்சியம் *(1921)*, ஆரோக்கியமும் சிசுவின் வாழ்க்கையும் *(1923)*, தன்வந்திரி *(1923)*, ஆயுள்வேதம் *(1023)*, ஆரோக்கிய தீபிகை *(1924)*, செல்வக் களஞ்சியம் *(1926)*, இயற்கை *(1926)*, மருத்துவன் *(1928)*, வைத்தியக் களஞ்சியம் *(1930)*, ஆரோக்கிய சிந்தாமணி *(1930)*, வைத்தியன் *(1931)*, ஆயுர்வேத சீவரட்சகம் *(1932)*, சித்தர் களஞ்சியம் *(1934)*, சித்தன் *(19345)*, வைத்திய சந்திரிகா *(1938)*, தமிழ் மருத்துவப்பொழில் *(1941)*, அகஸ்தியர் *(1944)*, உேறாமியோபதி *(1947)* போன்ற இதழ்கள் மருத்துவக்

கருத்துக்களையும் மருத்துவத் துணுக்குகளையும் மருத்துவக் கட்டுரைகளையும் வெளியிட்டுள்ளதோடு பல மருத்துவச் சுவடிப்பதிப்புகளையும் வெளியிட்டுள்ளன.

இ. 1947க்குப் பின் மருத்துவ இதழ்கள்

விடுதலைக்குப் பிந்தைய அறிவியல் இதழ்கள் என்று பட்டியலிட்டுப் பார்க்கும் நிலையில் மருத்துவ இதழ்கள் அதிகமான எண்ணிக்கையில் உள்ளன. இவ்விதழ்கள் ஏறத்தாழ 1970ஆம் ஆண்டு வரை பெரும்பாலும் பொதுச் சுகாதாரம், உடல்நலம், துப்புரவு என்று பொதுமையான கருத்துக்களைச் சொல்லி அவற்றுடன் ஆன்மீகம் மற்றும் மனநலம் குறித்த செய்திகளை அவ்விதழ்கள் தவறாது எழுதி உடலுடன் மனமும் சுற்றுப் புறமும் சீராக இருக்கப் பாடுபட்டு வந்தன. மருத்துவ இதழ்களைவிடுத்துப் வார மற்றும் மாத இதழ்களும் கூடப் பொதுச் சுகாதாரத்தையும், உடல்நலத்தைப் பேணுவதையும் குறித்துக் கட்டுரைகள் வெளியிட்டுள்ளன.

இந்நோக்கத்தில் ஹோமியோபதி மித்திரன் (1951), ஆரோக்கியம் (1955), தி வாய்ஸ் ஆப் ஹோமியோபதி (1956), ஹோமியோ பிரகடனம் (1958), ஞானி வைத்திய செய்தி (1959), ஆர்கனான் (1961), ஹானிமன் (1962), நந்தி (1962), ஆரோக்கிய மார்க்கம் (1962), மூலிகைமணி (1964). கிராம வைத்தியன் (1965), தமிழ் முனிவன் (1971), சுகவழி (1977), ஆரோக்கிய மலர் (1980), இருமலர் (1980), சித்தர் கருவூலம் (1981), ஹோமியோ அறிவியல் (1981), ஜீபிடரின் மருத்துவ மஞ்சரி (1982), கண்ஒளி (1983), பேதியின் சேதி (1984), கற்பக அவிழ்தம் (1986), உலகக்ஷேமம் (1989), வாழ்க நலமுடன் (1989), ஓம்சக்தி மருத்துவ மலர் (1990), உங்கள் உடல்நலம் (1991), உங்கள் நலம் நாடும் ஹெல்த் (1992), ப்யூட்டி மற்றும் ஹெல்த் (1992), மருத்துவ அறிவியல் மலர் (1992), தந்வந்திரி (1993), நவீன மருத்துவ மலர் (1993), ஆரோக்கியம் மற்றும் மருத்துவம் (1994), உங்கள் ஆரோக்கியம் (1995), நவபாஷாண மருத்துவம் (1995). தேனமுதம் (1995), ஜீவ மூலிகை (1996), ஹலோ டாக்டர் (1996), ஹெல்த் லைப் (1997), பேமிலி

ஹெல்த் (1997), புதிய மருத்துவ உலகம் (1997), மூலிகை மலர் (1997), சித்தர் அறிவியல் (2000), மூலிகை குழந்தைகள் (2000), ஹெல்த் டைம் (2000), மருத்துவ உலகம் (2000), தமிழ் வைத்தியம் (2001), உங்கள் ஹெல்த் (2001), ஹெல்த் பாய்ண்ட் (2002), குமுதம் ஹெல்த் (2002), மெடிகேர் டைஜஸ்ட் (2002), பாடி பில்டிங் (2002) போன்ற இதழ்களைக் குறிப்பிடலாம். இவற்றில் சில இதழ்கள் சுவடிப்பதிப்புகளையும் வெளியிட்டு உள்ளன. இம்மருத்துவ இதழ்கள் மட்டுமல்லாமல் பல இலக்கிய இதழ்களிலும் சித்தமருத்துவச் சுவடிப்பதிப்புகள் வெளிவந்திருக்கின்றன. குறிப்பாக உண்மை விளக்கம் அல்லது சித்தாந்த தீபிகை (1897), ஞானபோதினி (1897), விவேகபாநு (1900), செந்தமிழ் (1902), செந்தமிழ்ச் செல்வி (1923), கலாநிலையம் (1928), கலைமகள் (1932), சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ் (1939) போன்ற இலக்கிய இதழ்களிலும் மருத்துவச் சுவடிப்பதிப்புகள் வெளிவந்திருக்கின்றன. இதழ்களில் வெளிவந்த மருத்துவச் சுவடிப்பதிப்புகள் அனைத்தையும் ஆயின் ஆய்வு விரியும் என்பதால் விவேகபாநு, செந்தமிழ், சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ், தமிழ் மருத்துவப்பொழில் ஆகிய நான்கு இதழ்களில் வெளிவந்திருக்கக் கூடிய மருத்துவச் சுவடிப்பதிப்புகளை மட்டும் இங்கு ஆய்வுப்பொருளாகக் கொண்டு ஆய்வு செய்யப்பெறுகிறது.

1. **விவேகபாநு** (1900)

விவேகபாநு எனும் திங்களிதழ் வள்ளிநாயக சுவாமி அவர்களை ஆசிரியராகக் கொண்டு திருநெல்வேலியிலிருந்து 1900ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் வெளிவந்துள்ளது. அறிவு, உலகப்பற்று, பண்பாடு, ஒழுக்கம் ஆகியவற்றை மக்களுக்கு ஊட்டும் முக்கிய நோக்கத்தோடு இவ்விதழ் தோற்றுவிக்கப்பெற்றுள்ளது. என்றாலும் இதழின் இடையிடையே மருத்துவக் குறிப்புகள் சுவடிகளிலிருந்து சில இடம்பெற்றிருக் கின்றன. காட்டாக, “கூவிளத் தைலம்: - வில்வவேர் பலம் 100. இதனை மேல்மண் போக்கிச் சிறுக நறுக்கி மட்பாண்ட மொன்றிலிட்டு 8 வள்ளச் சுத்த சலம் வார்த்து அடுப்பேற்றிக்

கமலாக்கினி(இருசுடர் கொண்டு எரியும் நெருப்பு)யா யெரித்து ஒரு வள்ளமாகக் குறுக்கி வடித்த கஷாயத்தில் வெள்ளேலம் பலம் 10, அதிமதுரம், தேவதாரம், சிற்றாமுட்டி வேர், பேராமுட்டிவேர், செம்முள்ளி சமூலம் வகைக்குப் பலம் 8. இவற்றையிடித்து 8 படி சுத்த சலத்திலிட்டு ஒரு படியாய்க் குறுக்கிய கஷாயத்தையும் 2 படி நல்லெண்ணெயையும் 2 படி பசும் பாலையும் விட்டு இக்கூட்டில் மிளகு, சீரகம், அதிமதுரம், நெல்லிவற்றல், பூஞ்சாந்துப் பட்டை, கிளியூரம் பட்டை வகைக்குப் பலம் 1/2 இவற்றைப் பசும் பாலாலரைத்துக் கரைத்து அடுப்பேற்றி முதலில் கமலாக்கினியாகவும், பின்னர் தீபாக்கினி(ஒருசுடர் கொண்டு எரியும் நெருப்பு) யாகவும் எரித்து அடிக்கடி கிளறிக் கொடுத்து மெழுகு பதத்தில் வடித்து விநாயக பூசை செய்து 40 நாள் தானிய புடம் வைத்தெடுத்துக் கொண்டு வாரம் இருமுறை முழுகிவர வேண்டியது. தீரும் வியாதிகள்: பித்தம் 40, கபரோகம் 96, மேகம் 21, சுவாசரோகங்கள், மீளாத இருமல் ரோகங்கள் முதலிய அநேக பயங்கர ரோகங்களும், தேக முற்றும் வேரூன்றி நிலைத்த சொரி, படர்தாமரை, புண்கள், அறிவுகெடல், மறதி, வாய்வு, பிதற்றல் முதலிய எல்லா ரோகங்களும் குணமாகும்''(விவேகபாநு, 3:4:1904, ப.119) என்பதிலிருந்து இவ்விதழ் மருத்துவத்துக்குக் கொடுத்திருந்த முக்கியத்துவம் புலப்படும்.

2. செந்தமிழ் (1902)

கி.பி.1902ஆம் ஆண்டு மு. இராகவையங்கார் அவர்களை ஆசிரியராகக் கொண்டு மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் தொடங்கப்பெற்று இன்றுவரை வெளிவந்து கொண்டு இருக்கும் ஓர் சிறந்த இலக்கிய இதழ் ''செந்தமிழ்'' ஆகும். இவ்விதழில் 109க்கும் மேற்பட்ட இலக்கிய இலக்கணச் சுவடிப்பதிப்புகள் வெளிவந்திருக்கின்றன (பருவ இதழ்களில் சுவடிப்பதிப்புகள், பக்.40-41). இவற்றோடு ஆரியன் வாகட வெண்பா, உதரக் கிரியை ஆகிய இரண்டு மருத்துவச் சுவடிப்பதிப்புகளும் வெளிவந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

அ. ஆரியன் வாகட வெண்பா

மனிதனுக்கு ஏற்படக்கூடிய கொடிய நோய்கள் சிலவற்றுக்கு வெண்பா யாப்பில் மருத்துவம் கூறும் நூல் "ஆரியன் வாகட வெண்பா". இந்நூல் செந்தமிழ் இதழ்த் தொகுதி 28, பகுதி 3, 1929இல் வெளியாகியிருக்கின்றது. இந்நூல் பதிப்பு குறித்து செந்தமிழ் இதழின் உதவிப்பத்திராதிபர் அவர்கள் "மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பாண்டியன் புத்தக சாலையில் உள்ள ஓலைச்சுவடிகளில் வைத்திய ஏடுகளை ஆராய்ந்ததில் ஆரியன் வாகட வெண்பா என்னும் சிறிய மருத்துவ நூலின் ஏட்டுப்பிரதியொன்று காணப்பட்டது. அது 141 வெண்பாக்களில் பல கொடிய பிணிவகைகளுக்கு எளிய சிகிச்சை முறைகளைத் தொகுத்துக் கூறுவது. அதனை இயற்றினார் பெயர் முதலிய விவரமொன்றும் தெரியவில்லை. அதிலுள்ள பாடல்கள் பல பிழைபட்டும் சிதைந்தும் உள்ளன. ஒரு பிரதியே யிருத்தலால் அவற்றைத் திருத்திச் செப்பஞ் செய்து புத்தகமாக வெளியிட இயலவில்லை. ஆயினும் கூடியவரை திருத்தமாயிருந்த பாடல்கள் இங்கே மாதிரியாகக் காட்டப் பட்டுள்ளன. அந்நூலிற் கூறும் சிகிச்சை முறை எல்லாரும் எளிதிற்செய்து பயனடையத் தக்கதாயிருத்தலால் அந்நூற்பிரதி யுடையார் கொடுத்துதவுவார்களாயின், பரிசோதித்துத் திருத்தித் தனிப் புத்தகமாக அச்சிட்டு வெளியிட உதவியாயிருக்கும்" (செந்தமிழ், 28:3:1929, ப.121) என்று கூறுவதைப் பார்க்கும் போது இம்மருத்துவச் சுவடிப்பதிப்பானது சுவடியிலிருந்து வெளியானது என்பதும் இதற்கு முன் இந்நூல் அச்சாகவில்லை என்பதும் தெரிகின்றது. இக்குறை நூல் இப்பதிப்பிற்குப் பிறகும் அச்சானதாகத் தெரியவில்லை. இந்நூலில் கல்லடைப்பு நீரடைப்புக்கு மருந்து செய்முறையைப் பின்வரும் பாடல்கள் சுட்டுவதைக் காணலாம்.

"ஏருள்ளிச் சாறுழக்கோ டேற்றகா ரங்கழஞ்சு
சார்க் குடத்திளெச்சந் தான்கழஞ்சு - வார்முலையாய்
ஒன்றா யளாவி யுடனருந்தக் கல்லடைப்புச்
சென்றோடு நீரடைப்புந் தீர்ந்து.

விட்ட நெருஞ்சியின்வேர் வெண்சுரையின் தண்டுசுக்குக்
கிட்டு கடுத்தான்றி கீழ்க்காய்வேர் - இட்டசிறு
பூளையின்வே ரோடு புகலுஞ் சிறுகீரை
வாளைவென்ற கண்ணாய்நீர் வார்த்து.
வார்த்தநீ ரெட்டொன்றாய் வற்றியபின் றானிருத்தே
யேற்றவெண்ணெய் மேற்போட் டிதையருந்தப் - பார்த்துத்
திகைத்தோடு நீரகடப்புச் சேர்கல் லடைப்பும்
பகைத்தோடுஞ் சொன்னேன் பரிந்து."

(செந்தமிழ்,28:3:1929,ப.123)

ஆ. உதரக் கிரியை

வயிற்றில் உண்டாகும் 70க்கும் மேலான நோய்களுக்கான குறிகுணங்களைப் பற்றியும் அவற்றின் விவரங்களைப் பற்றியும் உதரக் கிரியை என்னும் நூல் விளக்குகின்றது. இந்நூல் செந்தமிழ் இதழ்த் தொகுதி 28, பகுதி 4, 1929இல் வெளியாகியிருக்கின்றது. இந்நூல் பதிப்பு குறித்து செந்தமிழ் இதழின் உதவிப் பத்திராதிபர் அவர்கள் "உதரக்கிரியை யென்பது வயிற்றிலுண்டாகும் நோய்களின் விவரமும் அவற்றை அறிதற்கான குணங்குறிகளும் அவற்றுக்குச் செய்யும் சிகிச்சைகளும் விளங்க எளிய விருத்தச் செய்யுள்களால் அகத்தியர் வைத்தியத்தின் வழிநூலாக இயற்றப்பட்டதென்று தெரிகின்றது. இதனை இயற்றியவர் பெயர் முதலிய விவரம் ஒன்றும் தெரியவில்லை. இந்நூலின் ஏட்டுச்சுவடியொன்று மதுரைத் தமிழ்ச்சங்கத்துப் பாண்டியன் புத்தகசாலையிலுள்ளது. அது வயிற்றிலுண்டாகும் நோய்களிற் சற்றேறக்குறைய 70க்கு ஏதுவம் குணம் குறிகளும் மட்டும் கூறும் குறைப்பிரதியாயிருக்கிறது. ஆயினும் நாளடைவில் சிதல் முதலியவற்றால் அழிந்தொழியாது பாதுகாக்கக்கருதி ஏட்டிலிருந்தபடியே அது இங்கே வெளியிடப்பட்டுள்ளது. முழுதும் உள்ள பிரதிகளுடையார் கொடுத்துதவுவார்களாயின் பரிசோதித்துப் புத்தகமாக வெளியிடலாம்" (செந்தமிழ்,28:4:1929,ப.149) என்று கூறுகின்றார். இவ்விதழ்ப் பதிப்பிற்குப் பிறகு இந்நூல் தனிநூலாக வெளிவந்த விவரம் ஒன்றும் தெரியவில்லை. எனினும் இந்நூல் அமைப்பினை அறிய பின்வரும் பாடல் ஏதுவாக அமையலாம்.

"உதரத்தில் வாத பித்த சிலேற்பன மூன்றி னாலுங்
கதியுறு தொந்தத் தாலுங் கருதுநோ யொருநூற் றெட்டு
மதியுறு கிரியை தானு மருந்துசாத் தியம சாத்தியம்
விதியுறு நோவு சேரு மேதுவம் விளம்பக் கேளே."

(செந்தமிழ்,28:4:1929,ப.150)

3. சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ்

தஞ்சை மகாராஜா சரபோஜியின் சரஸ்வதிமகால் நூலகத்தின் நாத்திங்களிதழாக "சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ்" 1939ஆம் ஆண்டு தொடங்கப்பெற்று இன்றுவரை வெளிவந்துகொண்டிருக்கின்றது. இவ் இதழில் சமஸ்கிருதம், தமிழ், தெலுங்கு, மராத்தி, ஆங்கிலம் என ஐந்து மொழிகளில் கட்டுரைகளும் பல்வேறு வகையான பதிப்பு நூல்களும் மொழிபெயர்ப்புகளும் வெளிவந்துகொண்டிருக்கின்றன. இவ்விதழில் மருத்துவப் பதிப்பாக தன்வந்தரி வைத்தியம், தேரர் அருளிச்செய்த சிறுநீர்க்குறி சோதனை, ஆயுர்வேத உபதேசங்கள், குழந்தை பராமரிப்பு, கர்ப்பிணி ரக்ஷை, பத்தியமும் அபத்தியமும் போன்ற சுவடிப்பதிப்புகள் வெளிவந்திருக்கின்றன.

அ. தன்வந்தரி வைத்தியம்

பல்வேறு வகையான நோய்களின் குறி குணங்களையும் அவற்றின் வகைகளையும் "தன்வந்தரி வைத்தியம்" என்னும் நூல் சிறப்பாக எடுத்து விளக்குகின்றது. பொதுவான நோய்களின் குறி குணங்கள் சித்த மருத்துவ நூல்களில் ஆங்காங்கு கூறிச்செல்ல இந்நூல் பெரும்பான்மையான நோய்களின் குறி குணங்களை எடுத்துக் கூறுவதாக அமைந்திருக்கின்றது. மேலும் இவற்றுள் சுர ரோக சிகிச்சை முறைகள், வாத ரோகம், பித்த ரோகம், கபரோகம், நேத்ர ரோக சிகிச்சை முறைகள் போன்றனவும் இடம்பெற்றிருக்கின்றன. இம்மருத்துவ நூலினை எஸ். வெங்கட்டராஜன் அவர்கள் சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ்த் தொகுதி 12 முதல் தொகுதி 31வரை மூன்று பாகங்களாத் தொடர்ப்

பக்கவெண் கொடுத்து வெளியிட்டிருக்கின்றார். இவ்விதழ்ப் பகுதிகள் 1962, 1966, 1980ஆம் ஆண்டுகளில் முறையே முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பாகங்களாக வெளிவந்திருக்கின்றன.

ஆ. தேரர் அருளிச்செய்த சிறுநீர்க்குறி சோதனை

அகத்தியர் நூல்களில் காணப்படும் சிறுநீர்க்குறி சோதனைகளையும், சித்தசாரனவம், சித்திய வித்தியாதரம், நித்திய நாதீயம், மாதவ கற்பம் போன்ற நூல்களிலுள்ள சிறுநீர்க்குறி சோதனைகளையும் ஆராய்ந்து தேரர் என்பார் "சிறுநீர்க்குறி சோதனை" என்ற நூலை யாத்துள்ளார். இந்நூல் சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ்த் தொகுதி 21, பகுதி 1, 1967இல் ஆ.சண்முகவேலன் அவர்களால் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. இவ்விதழ்ப் பதிப்பு, பின்னர் இந்நூலக வெளியீடாக 1967ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. இந்நூலில், "சிறுநீர் இலக்கணம்:- சிறுநீர் தெளிந்திருந்தால் வாதநோய் காரணமாகும். மஞ்சள் நிறத்திலிருந்தால் பித்த நோய் காரணமாகும். வெண்மையாய் நுரைத்திருந்தால் கபநோய் காரணமாகும். கலந்திருந்தால் தொந்த நோய் காரணமாகும்" (சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ், 21:1:1967, ப.10) என்பன போன்ற பல செய்திகள் இடம்பெற்றிருக்கின்றன.

இ. ஆயுர்வேத உபதேசங்கள்

மனிதன் நோயற்று நீண்டநாள் வாழ்வதற்கான வழிமுறைகளை சரக ஸம்ஹிதை, ஸுஸ்ருத ஸம்ஹிதை, பேல ஸம்ஹிதா, காச்யப ஸம்ஹிதா, அஷ்டாங்க ஸங்கிரஹம், அஷ்டாங்க ஹிருதயம், சார்ங்கதர ஸம்ஹிதா, பாவப் பிரகாசம், மானஸோல்லாஸம், சிகித்ஸா திலகம், க்ஷேம குதூஹலம், போஜன குதூஹலம் முதலிய சமஸ்கிருத நூல்களில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இச்செய்திகளை எல்லாம் சி. ராஜராஜேச்வர சர்மா அவர்கள் திரட்டித் தமிழில் மொழிபெயர்த்து "ஆயுர்வேத உபதேசங்கள்" என்னும் பெயரில் சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ்த்

தொகுதி 21 முதல் 23 வரையிலான பகுதிகளில்(1967-1969) வெளியிட்டிருக்கின்றார். பின்னர் இவ்விதழ்ப் பகுதிகள் 1969ஆம் ஆண்டு இந்நூலக வெளியீடாக வெளிவந்திருக்கின்றது. இந்நூலில், "மூங்கிற் விசிறியின் காற்று வெப்பத்தை உண்டாக்கும். ரத்த சம்பந்தமான நோய்களையும் பித்தத்தையும் கிளப்பிவிடும்" (சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ், 22:1-3: 1969,ப.11) என்பன போன்ற பல செய்திகள் இடம்பெற்றிருக்கின்றன.

ஈ. குழந்தை பராமரிப்பு

பெற்றோர்கள் குழந்தைகளை நன்றாகப் பேணிக் காக்கும் முறைகளைத் தெரிந்து வைத்திருப்பது இன்றியமையாததாகும். குழந்தைகளைப் பேணிக்காக்கப் பின்பற்றப்பட வேண்டிய முறைகளை சரக ஸம்ஹிதை, ஸுஸ்ருத ஸம்ஹிதை போன்ற சமஸ்கிருத நூல்களில் கூறப்பெற்றிருக்கும் செய்திகளைத் திரு.சி. ராஜராஜேச்வர சர்மா அவர்கள் திரட்டித் தமிழில் மொழிபெயர்த்து சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ்த் தொகுதி 24, பகுதி 3, 1971இல் "குழந்தை பராமரிப்பு" என்னும் தலைப்பில் வெளியிட்டிருக்கின்றார். பிரசவித்த குழந்தை பால் உண்ணாத காலத்து பராமரிக்க வேண்டிய வழிமுறைகளை இந்நூல் தெளிவாக எடுத்துரைக்கின்றது. அதாவது, "பிரசவித்த அறையில் குழந்தை முலையுண்ணாவிடில் கடுக்காய், நெல்லிமுள்ளி, திப்பிலி இவற்றின் தூளுடன் நெய்யும் தேனும் கலந்து நாவில் தடவவேண்டும்" (சரஸ்வதி மகால் நூலகப் பருவ இதழ், 24:3:1971,ப.20) என்பதிலிருந்து இந்நூலின் அமைப்பை உணரலாம். இவ்விதழ்ப் பகுதி இந்நூலக வெளியீடாக 1971ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது.

உ. கர்ப்பிணி ரக்ஷை

கருவுற்ற பெண்ணைச் சிறந்த முறையில் பேணிக் காக்கப்படுதல் அவசியம். இதனைச் சரக ஸம்ஹிதா, ஸுஸ்ருத ஸம்ஹிதா போன்ற சமஸ்கிருத நூல்கள் ஆங்காங்குத் தெளிவாக விளக்கியிருக்கின்றன. இத்தகவல்களையெல்லாம்

திரு.சி. ராஜராஜேச்வர சர்மா அவர்கள் திரட்டித் தமிழில் மொழிபெயர்த்து "கர்ப்பிணி ரக்ஷை" என்னும் பெயரில் சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ்த் தொகுதி 23, பகுதி 2-3, 1970இல் வெளியிட்டிருக்கின்றார். இவ்விதழ்ப் பகுதி இந்நூலக வெளியீடாக 1970ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. இந்நூலில் "கருத்தரித்தவள் முதல்தினம் தொடங்கி எப்பொழுதும் மகிழ்வுடனும், சுத்தமாகவும், அலங்கரித்துக் கொண்டும் வெண்ணிறமுள்ள ஆடைகளை அணிந்தும், சாந்திகள், மங்களச் செயல்கள், கடவுள் பக்தி இவற்றில் ஈடுபட்டவளாகவும் இருக்கவேண்டும்" (சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ்,23:2-3:1970,ப.1) என்பன போன்ற பல செய்திகள் இடம்பெற்றிருக்கின்றன.

ஊ. பத்தியமும் அபத்தியமும்

இதமான உணவே மனிதன் நூறு வருடங்கள் வாழ்வதற்கு ஏற்றது. ஒவ்வொருவரின் உடல்நிலைக்கு ஏற்றவாறு எவ்வகையான உணவைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்த வேண்டும், அவ்வுணவுப் பொருட்களுக்கான குணங்கள் என்னென்ன என்பதைப் பற்றியெல்லாம் இந்நூல் விளக்குகின்றது. சரக ஸம்ஹிதா, ஸுச்ருத ஸம்ஹிதா, பாவப் பிரகாசம், சாலிக்கிராம நிகண்டு போன்ற நூல்களில் கூறப்பெற்றிருக்கும் உணவுப் பொருட்களின் குணங்களை மட்டும் தேர்ந்தெடுத்து விரிவான தமிழ் மொழிபெயர்ப்புடன் திரு.சி. ராஜராஜேச்வர சர்மா அவர்கள் "பத்தியமும் அபத்தியமும்" என்னும் பெயரில் சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ்த் தொகுதி 27, பகுதி 1-3, 1975இல் வெளியிட்டிருக்கின்றார். இவ்விதழ்ப் பகுதிகள் 1975ஆம் ஆண்டு இந்நூலக வெளியீடாக வெளிவந்துள்ளது. இந்நூல் தண்ணீர் பருகுவதில் உள்ள நியமங்கள் என்ன என்பது பற்றி விரிவாக எடுத்துரைக்கின்றது. அதாவது, "ஓரிடத்தில் தண்ணீர் சீரணமாகாமலிக்கும் போது மற்றொரு இடத்து தண்ணீரைக் குடிக்கக்கூடாது. கிணற்று நீரைக் குடித்து அது சீரணமாவதற்கு முன்பே ஆறு, குளம் முதலியவைகளின் நீரைப் பருகக் கூடாது. குளிர்ந்த

நீர் சீரணமாகாமலிருக்கும் போது கொதித்த நீரையும் குடிக்கக் கூடாது. கொதித்த நீரைக் குடித்து அது சீரணமாகிய பின்பும் அடுத்த வேளையில் சாப்பிடுவதற்கு முன்பே குளிர்ந்த நீரைப் பருகக் கூடாது. தண்ணீரை மாற்றி மாற்றிக் குடிப்பதால் ஜலதோஷம், தொண்டைக்கட்டு, இருமல், மூச்சுத் திணறல், தலைவலி முதலிய நோய்கள் உண்டாக இடமுண்டு" (சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ், 27:1-3:1975,ப.8) என்பன போன்ற பல செய்திகள் இந்நூலில் இடம்பெற்றிருக்கின்றன.

4. தமிழ் மருத்துவப் பொழில்

தமிழ் மருத்துவப் பொழில் என்னும் மருத்துவ மாத இதழ் மாங்காடு பண்டிதர் எம். வடிவேலு முதலியார் அவர்களை ஆசிரியராகக் கொண்டு 1941ஆம் ஆண்டு சனவரி மாதம் சென்னையில் தொடங்கப்பெற்றுள்ளது. இவ்விதழ் கவர்ன்மெண்ட் இந்திய மருத்துவப் பாடசாலையின் சித்த மாணவர் கழகத்தின் வெளியீடாக வெளிவந்திருக்கின்றது. இவ்விதழில் பொதுச் சுகாதாரவியல் தொடர்பான கட்டுரைகள், நோய்த்தடுப்பு முறைகள் தொடர்பான கட்டுரைகள், சித்த மருத்துவம் தொடர்பான கட்டுரைகள் மற்றும் சித்த மருத்துவச் சுவடிப்பதிப்புகள் என வெளிவந்திருக்கின்றன. இவற்றில் வைத்திய சதகநாடி, பிரமமுனி கருக்கடைச் சூத்திரம், தேரர் பொருட்பண்பு வெண்பா, அகத்தியர் அருளிச்செய்த வைத்திய ரத்தினச் சுருக்கம் 360, கவுசிகர் குழம்பு போன்ற மருத்துவச் சுவடிப்பதிப்புகள் வெளிவந்திருக்கின்றன.

அ. வைத்திய சதகநாடி

மனிதன் உயிர்வாழ உடம்பில் நாடி சீராகத் தன் போக்கில் ஓடவேண்டும். நாடி தடுமாறில் உடல் நோய் காணும் என்பது உண்மை. நாடியின் அமைப்பு அவற்றின் தன்மை அவற்றால் அறியத்தகும் நோயின் அறிகுறிகள் போன்ற வற்றை இந்நூல் எடுத்தியம்புகின்றது. இந்நூல் தமிழ் மருத்துவப்பொழில் இதழ்த் தொகுதி 1, பகுதி 12, 1941இல் வெளிவந்திருக்கின்றது. இந்நூல் ஏற்கெனவே பல பதிப்பு

களைப் பெற்றுள்ளது என்றாலும் திருத்தப் பதிப்பாக இவ்விதழ்ப் பதிப்பு வெளிவந்திருக்கின்றது குறிப்பிடத்தக்கது. நாடியின் பத்துக்கால் குறித்து இந்நூல் பின்வரும் பாடல் மூலம் விளக்குவதைக் காணலாம்.

> "பத்தான வாயுத்தான் பிராணனொ டபாணன்
> பதிவான வியானனுதா னன்ச மானன்
> சித்தான கூர்மனுட னாகன்கிரி கரனும்
> தேவதத்த னுடன்தனஞ் சயன்பத் தாகும்
> வித்தான பாணன்மூ லத்தைச் சேர்ந்து
> மேனோக்கிச் சிரசில்முட்டி விழியின் கீழாய்ச்
> செத்தாக நாசிவழி யோடுமீ ராறில்
> திரும்பியெட் டுள்புகுந்து நால்வீண் போமே"
>
> (பா.11)

ஆ. பிரமமுனி கருக்கடைச் சூத்திரம்

மனிதனுக்கு ஏற்படக் கூடிய பல்வேறு வகையான நோய்களுக்கு மருந்துகளையும் அம்மருந்துகளைச் செய்யும் முறைகளையும் பிரமமுனி கருக்கடைச் சூத்திரம் என்னும் நூல் விளக்குகின்றது. எண்சீர் விருத்தத்தால் மூலம் மட்டும் கொண்ட இந்நூல் தமிழ் மருத்துவப் பொழில் இதழ்த் தொகுதி 1, பகுதி 8, 1941இல் வெளிவந்திருக்கின்றது. ஏழுவகைப் பீனிசத்துக்கு முடிதயிலம் செய்முறையை,

> "பாரப்பா ஏழுவகைப் பீனிசமும் போகப்
> பாடுகிறேன் வெகுசுருக்கோர் நெய்யைக் கேளாய்
> காரப்பா எண்ணெய்படி தானி ரண்டு
> கரிசாலை அவிரிகஞ்சா பொன்னாங் காணி
> ஊரப்பா வெற்றிலைநீர் முசுமு சுக்கை
> உள்ளுலர்த்தி முக்கிரட்டை அத்திப் பட்டை
> ஆரப்பா வகைவகைக்கே ஒருபடிதான் சாறு
> ஆதண்டைச் சாறுபடி யிரண்டு வாரே" (பா.117)

எனும் பாடல் விளக்குவதைக் காணலாம். இதுபோல் இந்நூலில் பல்வேறு வகையான நோய்களுக்கான மருந்துகளும் மருந்து செய்முறைகளும் கூறப்பெற்றிருக்கின்றன.

இ. தேரர் பொருட்பண்பு வெண்பா

உலகில் உள்ள பொருட்களின் பண்புகளையும் அப்பொருட்கள் மருத்துவத்திற்குப் பயன்படும் விதம் குறித்தும் இந்நூல் தெளிவாக விளக்கிச் செல்கின்றது. குறிப்பாக தேள், கமடம், பன்றிநெய், கோலக்கட்டு, நாகப்பெருமை, மருந்துப்பு, கச்சோதம் போன்றவற்றிற்குப் பண்புகள் கூறப்பெற்றிருக்கின்றன. இந்நூல் தமிழ் மருத்துவப் பொழில் இதழ்த் தொகுதி 1, பகுதி 2, 1941இல் வெளிவந்திருக்கின்றது. தனிப்பக்க எண்ணுடன் இவ்விதழ்ப் பதிப்பு அமைந்திருப்பதைப் பார்க்கும் போது இந்நூல் 1941ஆம் தனிநூலாக வெளிவந்திருக்கவேண்டும் என்று தோன்றுகின்றது. காட்டாக, வெண்ணிறப் பசும்பாலின் பொருட்பண்பைப் பின்வரும் பாடல் சுட்டுவதைக் காணலாம்.

> "பித்தமெனு மந்திரியைப் பேசாம லோட்டுமகா
> ரத்தமுதற் காசத்தை நாட்டாது - நித்தியங்
> கவளத்தைச் செல்லுவத்துக் காயத்தைக் காக்குந்
> தவளப் பசுவின்சு தை."

(பா.17)

ஈ. அகத்தியர் அருளிச்செய்த வைத்தியரத்தினச் சுருக்கம் 360

இந்நூல் எண்சீர் விருத்தம் 365 கொண்டது. இந்நூல் பல்வேறு வகையான நோய்களுக்கு மருந்துகளையும் மருந்து செய்முறைகளையும் தெளிவாக விளக்குகின்றது. இந்நூல் தமிழ் மருத்துவப்பொழில் இதழ்த் தொகுதி 1, பகுதி 2, 1941இல் பதிப்பாகியிருக்கின்றது. இந்நூல் ஏற்கெனவே பல பதிப்புகள் வெளிவந்திருந்தாலும் இந்நூலைத் திருத்தியவர் பதிப்பித்தவர் ஆகியோரின் பெயரைக்கொண்டு சிறப்படைந்திருக்கின்றது. இந்நூலின் முகப்பட்டையில்,

அகத்திய முனிவர் அருளிச்செய்த
வைத்திய ரத்தினச் சுருக்கம்
(முந்நூற்றறுபது)
திருத்தியவர்:
அகத்தியர் பின் எண்பது, வீரமாமுனிவர் நசகாண்டம்,
குறுந்திரட்டு, புலிப்பாணி 500 என்னும் இவற்றின்
உரையாளரும்
வானமெழுகின் ஆராய்ச்சியுரையாளரும்
வடமொழி ஸத்வயித்திய ஜீவனம் என்னும் நூலைத்
தமிழில் மொழிபெயர்த்தவரும்
கவர்ன்மெண்ட் இண்டியன் மெடிகல் ஸ்கூல்
டெக்ஸ்ட்புக் கமிட்டித் தலைவரும்
தமிழ்ப் பண்டிதரும், தமிழ் மருத்துவ பண்டிதருமாகிய
மாங்காடு-வடிவேலு முதலியார்.
பதிப்பித்தவர்:
காரியக் கமிட்டியார்: சித்த மாணவர் கழகம்,
கவர்ன்மெண்ட் இந்திய மருத்துவ பாடசாலை
கீழ்ப்பாக்கம், மதராஸ்.

என அமைந்திருப்பதைப் பார்க்கும் போது இந்நூலின் சிறப்பு புலப்படும்.

உ. கவுசிகர் குழம்பு

ஒரே மருந்து பல்வேறு நோய்களுக்கும் பயன்படுத்துவது சித்த மருத்துவத்தில் உண்டு. இவ்வகையில் அமைவது "கவுசிகர் குழம்பு" என்னும் மருந்து. இக்குழம்பு 215 அகவல் வரிகளாலானது. இதில் இம்மருந்து செய்முறை பற்றியும் அதற்கான துணை மருந்துகள் பற்றியும் விரிவாக எடுத்துக் கூறுகின்றது. இந்நூல் தமிழ் மருத்துவப்பொழில் இதழ்த் தொகுதி 4, பகுதி 8, 1945இல் வெளிவந்துள்ளது. இந்நூற்பெயர் குறித்து இந்நூற் பதிப்பாசிரியர் "இவ்வகவல் கவுசிகர் குழம்பென்றும் கவுசிகர் மையென்றும் சொல்லப்படுகிறது. இஃதன்றி இக்குழம்பின் கடைசி அடியாகிய 215ஆம் அடியில் "வரமிகு கௌசிக மாமுனி தானே" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விரண்டையும் நோக்கி இம்மெழுகு கவுசிகமுனிவர் செய்ததென்று

சொல்லுகிறார்கள். ஆனால் இம்மெழுகு தவிர வேறோர் மெழுகாவது வேறோர் நூலாவது இம்முனிவர் செய்ததாகக் காணப்படவில்லை. இவர் மருந்து மரபினருமாகார், மருத்துவருமாகார். ஆகையால் இம்மெழுகு கௌசிக முனிவரால் செய்யப்பட்டதென்னும் வழக்கு ஒப்பக்கூடிய தாகாது. அன்றி, இக்குழம்பைப் புதுச்சேரி முதலிய சில ஊர்களி லுள்ள மருத்துவத் தொழிலினர் "சவுரியார் குழம்பு" என்கிற பெயரால் கையாளுகின்றனர். இவ்வாறிருத்தலால் இந்தப் பேர்களை ஒருவாறு ஒழித்து "கௌசிக பலம்" என்னும் பேர் தேங்காய்க்கு வழங்கப்படுதலின், அத்தேங்காய் ஓட்டுக்கரி இதில் சேர்க்கப்படுதலின் "கௌசிக பலகுழம்பு" என்று இதற்குப் பெயர் இருத்தல் வேண்டும். பிறகு பலம் என்பது விடப்பட்டு "கௌசிக மெழுகு", "கௌசிக குழம்"பென்று வழங்கிவிட்ட தாகக் கொள்ளவேண்டியிருக்கிறது" (தமிழ் மருத்துவப் பொழில், 4:8:1945, ப.7) என்கின்றார். இவரின் கூற்று ஏற்றுக்கொள்ளக் கூடியதே.

தொகுப்புரை

இதுபோல் மருத்துவ இதழ்களிலும் இலக்கிய இதழ்களிலும் மருத்துவச் சுவடிப்பதிப்புகள் பல இடம்பெற்றிருக் கின்றன. இவற்றையெல்லாம் தொகுத்தால் மருத்துவச் சுவடிப்பதிப்பின் வரலாறு விரிவதோடு மறைந்திருக்கும் பல மருத்துவச் சுவடிப்பதிப்புகளை வெளிக்கொணரலாம்.

8. பருவ இதழ்களில் வந்த சுவடிப்பதிப்புகளின் நோக்கும் போக்கும்

தமிழிலக்கிய இலக்கண நூல்களில் தேர்ச்சிபெற்ற தமிழறிஞர்கள் நாடெங்கும் பரவியிருக்கின்றனர். அவர்கள் கற்ற, கேட்ட, அறிந்த நூல்கள் அவர்களவிலேயே நின்றுவிடு கின்றன. ஒருவருக்கொருவர் தொடர்பின்றிப் போவதால் அவரவர் ஆய்ந்துணர்ந்த அரும்பொருள்கள் ம்ற்றவர்க்கு எட்டாமல் போக நேரிடுகின்றது. இக்குறையினைப் பருவ இதழ்கள் காலங்காலமாகப் போக்கி வருகின்றன. இவர்கள் தங்களிடமுள்ள சுவடிகளைப் பிறருக்குக் கொடுத்தோ, தாமாகப் பிரதிசெய்தோ பருவ இதழ்களில் வெளிப்படுத்தியிருக்கின்றனர். தனிநூலாக்கும் தன்மையற்ற சுவடிகளைத் தமிழுலகிற்கு அறிமுகப்படுத்திவிட வேண்டும் என்ற உயரிய நோக்கில் பெரும்பாலான பருவ இதழ்ப் பதிப்புகள் வெளிவந்திருக் கின்றன. இப்பகுதி, பருவ இதழ்களில் காணப்பெற்ற சுவடிப்பதிப்புகளின் நோக்கும் போக்கும் குறித்து ஆய்கிறது.

அழிந்து போகும் நிலையிலுள்ள நிறை/குறைச்சுவடி களைத் தமிழுலகம் அறியச் செய்வதையே தனது முக்கிய நோக்கமாகக் கொண்டு பல பருவ இதழ்கள் சுவடிப் பதிப்பு களை வெளியிட்டுள்ளன. அதாவது, நிறை/குறைச் சுவடி, தெளிவில்லாத நிறை/குறைச்சுவடி, மாற்றுச் சுவடி கிடைத்த/ கிடைக்காத சுவடி, முறிந்த - சிதைந்த - ஒடிந்த - செல்லரித்த - பூச்சியரித்த - அழிந்து போகும் பல்வேறு நிலையில் உள்ள சுவடி எனப் பல்வேறு நிலைகளில் உள்ள சுவடி, உரை/ மேற்கோள் ஆகியவற்றில் கிடைத்த பாடல்கள், மனன நிலையில் உருவான பாடல்கள் என இவ்வகைகளில் எல்லாம் அமைந்த பதிப்புகளைப் பருவ இதழ்கள் வெளியிட்டு உள்ளன.

அழிவிலிருந்து காக்கும் ஒரே உன்னத நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு பருவ இதழ்கள் சுவடிப் பதிப்புகளை வெளியிட்டுள்ளன. என்றாலும், அச்சுவடிப் பதிப்புகள் பருவ இதழ்களில் வெளிவரும் போது அவற்றின் போக்குகள் பல்வேறு விதமாக அமைந்திருக்கின்றன எனலாம். குறிப்பாக, நூற்பெயர் மாற்றம் பெற்றவை. உரைக்குறிப்பால் அறிமுகமானவை, குறைப்பதிப்பை நிறைவு செய்தவை, முதற்பதிப்பு கிட்டாமையால் பதிப்பித்தவை, பதிப்புரிமை பெற்றவை, அறிமுக நோக்கில் வெளிவந்தவை, நூலாசிரியரின் குறைப் பதிப்பை நிறைவு செய்தவை, குறைப்பதிப்பை முழு நூலாகக் கருதியவை, ஒரு நூலின் யாப்பை மாற்றிப் பதிப்பித்தவை, ஒரே நூல் இருவேறு பெயர்களில் வெளிவந்தவை, பாதுகாத்தவரால் நூற்பெயர் சுட்டியவை, மனன நிலையில் உருவானவை, மீண்டும் பருவ இதழில் பதிப்பித்தவை, ஏடு பிறழ்ச்சியால் உருவானவை, ஓரிதழில் மூலமும் பிறிதோரிதழில் உரையும் பதிப்பித்தவை, பதிப்புக்கு முன் அறிமுகப்படுத்தியவை, தவறான பதிப்புகளைச் சுட்டியவை, பல சுவடிப்பதிப்பு, குறைப் பதிப்பு, திருத்தப் பதிப்பு, முதற்பதிப்பும் மறுபதிப்பும், பக்க வெண் அமைப்பு, திரட்டு - தொகுப்பு கொண்டவை போன்ற பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகளின் போக்குகளைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

நூற்பெயர் மாற்றம் பெற்றவை

காலந்தோறும் இலக்கிய இலக்கணங்களில் வழக்குச் சொற்கள் இடம்பெறுவதியல்பு. பழந்தமிழ் இலக்கியங்களில் வழக்குச் சொற்களும் மொழிநடையும் இவ்வாறு அமைந்தவையே. அதனால்தான் இன்று பழந்தமிழிலக்கிய இலக்கணங்களை அறிந்துகொள்ளப் பல்வேறு வகையான உரைகள் தேவைப்படுகின்றன. உரைகளால் நூற்பொருள் அறிந்து தெளிதல் போல, நூற்பெயரால் நூல் பற்றிய செய்திகளை அறிந்துகொள்ள முடியும். நூல் பெயரும் நூல் தோன்றிய காலத்து வழக்குச் சொற்களில் அமையும். இச்சொல் நூல் பதிப்பாகுங் காலத்து உள்ள வழக்குச்

சொல்லாக மாற்றப்படுதலுண்டு. அதாவது, நூலாசிரியர் நூலிற்கிட்ட பெயரும், பதிப்பாசிரியர் நூலிற்கிட்ட பெயரும் வேறுவேறாக அமையும். "கூழையந்தாதி, வரராசையந்தாதி என்ற பெயர்கள் பிரதிகளில் காணப்பட்டாலும் தமிழ்நாட்டில் கூழை, வரராசைப் பெயர்கள் அதிகமாக வழக்கில் இல்லாமையால் எல்லோருக்கும் விளங்கவேண்டி சங்கரநயினார் கோயிலந்தாதி என்று வழக்கிலுள்ள பெயர் புதியதாக அமைக்கப்பட்டது" (சங்கரநயினார் கோயில் அந்தாதி - முகவுரை, ப.4) எனும் உ.வே. சாமிநாதையர் கூற்றுப்படி கூழையந்தாதி, வரராசையந்தாதி எனும் நூற்பெயரானது 'சங்கரநயினார் கோயிலந்தாதி'யாக மாற்றப்பெற்றது தெரிய வருகின்றது.

சுவடி நூலகங்கள், சுவடி அட்டவணைகள் பலவற்றை வெளியிட்டுள்ளன. சுவடிகளைக் கண்ணுறாத அறிஞர்களுக்கு இவ்வட்டவணையே பெரிதும் பயன்படும். அட்டவணை தயாரிக்கும்போது அட்டவணை தயாரிப்போராலோ அச்சிடும்போது நேர்ந்த சிறு பிழையினாலோ நூற்பெயர் மாற்றம் பெறுதலுண்டு. பின்னாளில் அந்நூலாய்வு செய்வோரால் நூற்பெயர் உறுதிப்படுத்தப்பெறுதலும் உண்டு. அட்டவணையில் குறிப்பிட்ட நூல் பெயரை நூல் பதிப்பாசிரியர் மாற்றிய பருவ இதழ்ப் பதிப்புகளும் உண்டு. காட்டாக, சரஸ்வதி மகால் நூலகச் சுவடிகள் அட்டவணையில் 'புல்லையந்தாதி' எனும் நூலைப் 'பிள்ளையந்தாதி' எனப் பெயரிடப்பெற்று உள்ளதைக் குறிப்பிடலாம். இந்நூலைப் பதிப்பிற்கு எடுத்துக்கொண்ட ரெ. இராமையங்கார், "ஒரு நூல் 'பிள்ளையந்தாதி' என்று புத்தக சாலை (தஞ்சை சரஸ்வதிமகால்) அட்டவணையிற் காட்டப் பட்டிருந்தது. அது அச்சேறிய தேசிகப் பிரபந்தத்திற் சேர்ந்த 'பிள்ளையந்தாதி' என்னும் பிரபந்தம் போலும் என்று எண்ணி யிருந்தேன். முடிவில் அதனை ஏட்டுப் பிரதியிற் பார்த்த பொழுது 'புல்லையந்தாதி' என்றிருந்தது. செய்யுட்களைப் படித்துப் பார்த்தபின் அது திருப்புல்லாணி விஷயமான பதிற்றுப்பத்தந்தாதி என்று தெரியவந்தது"

(செந்தமிழ், 34:5:1937, ப.167) என்று கூறுவதால் இக்கூற்று உண்மையாகின்றது.

நூற்பெயர் இன்னதென்றே விளங்காத போது, நூற்பொருளை அடிப்படையாகக் கொண்டு பதிப்பாசிரியரால் நூற்பெயர் சுட்டும் தன்மையையும் பருவ இதழ்ப் பதிப்புகளில் காணலாம். காட்டாக, களவியற்றுறை விளக்கம் என்னும் நூற்பெயர், சுவடிப்பொருளை அடிப்படையாகக் கொண்டு இந்நூல் பதிப்பாசிரியர் சம்பந்தம் பெயர் கொடுத்துள்ளார் என்பதை அறியமுடிகிறது. இதனை அவர், "இறையனார் களவியற் சூத்திரங்களை யடிப்படையாகக் கொண்டு பரந்து பட்ட அகப்பொருட் செய்திகட்கெல்லாம் அரிய மேற்கோள் காட்டி விரிந்து செல்கின்றது. இந்நூலின் பெயர் புலப்பட வில்லை. தொன்னூல் நிலையம் கையெழுத்துப் பிரதியில் 'இறையனாரகப்பொருட்டுறைச் சங்கச் செய்யுளாக உதாரண மெழுதியது எனக் காணப்படுகின்றது. இது, நூல் இன்னதென வுணர்தற்கு அதன் புறத்தே யெழுதிவைக்குந் தலைக்குறிப் பெனவே கொள்ளற்பாலது. நூற்பெயரன்றென்பது திண்ணம். இப்போது கொடுக்கப்பெற்றுள்ள 'களவியற்றுறை விளக்கம்' என்னும் பெயர் என்னாற் படைத்துக் கொள்ளப்பட்டதே யாகும்" (கலாநிலையம், 4:38:1931, ப.754) என்று கூறுகின்றார்.

உரைக்குறிப்பால் அறிமுகமானவை

ஒரு நூலின் உரையில் குறிப்பாகவோ மேற்கோள்க ளாகவோ பிறிதொரு நூலின் சில/பல பாடல்கள் இடம்பெறுவ தியல்பு. அச் சில/பல பாடல்களைக் கொண்டு நூலின் முழுப் பிரதியைத் தேடுவதும், கிடைத்தபின் நூல் முழுமையும் பதிப்பிப்பதையும் பருவ இதழ்ப் பதிப்புகளில் காணலாம். காட்டாக, 'திருநெறி விளக்கம்' எனும் நூல் அறிமுகமான நிலையைச் சுட்டலாம். அதாவது, மதுரைச் சிவப்பிரகாசரின் சிவப்பிரகாச உரையை மு. அருணாசலம் சைவசித்தாந்த மகாசமாஜ வெளியீடாக 1940ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார். உரையாசிரியர் குறிப்பில் 'திருநெறி விளக்கம்' பற்றிக்

குறிப்பிட்டுள்ளார். இவ்வுரையில் இடம்பெற்ற 'திருநெறி விளக்கம்' எனும் நூலின் ஆறு பாடல்களையும் தருமையாதீன வெளியீடான 'ஞானசம்பந்தம்' திங்களிதழில் 1941ஆம் ஆண்டு மேற்படியாரால் வெளியிடப் பெற்றுள்ளது. இவற்றைக் கண்ணுற்ற தி.கி. நாராயணசாமி நாயுடு இந்நூலைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். இந்நூல் தஞ்சை சரஸ்வதிமகால் நூலகச் சுவடிகளில் இருப்பதைக் கண்டு, பிரதி செய்து 'சித்தாந்தம்' திங்களிதழில் 1959-60ஆம் ஆண்டுப் பகுதிகளில் வெளியிட்டுள்ளார். இந்நூல் இதன்பிறகு அறிஞர் பெருமக்களிடையே பெரிதும் பேசப்பெற்றது. அதன் பிறகு சரஸ்வதிமகால் நூலகச் சுவடியை அடிப்படையாகக் கொண்டு இராம. கோவிந்தசாமி பிள்ளை தம்முடைய உரையுடன் 1963ஆம் ஆண்டு சரஸ்வதிமகால் வெளியீடாக வெளியிட்டு உள்ளார். ஆகப் பிறிதொரு நூலுரையால் அறிமுகமான இந்நூல் தனிநூலாக வெளிவந்து பல பதிப்புகளைக் கண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

குறைப்பதிப்பை நிறைவு செய்பவை

தனிநூலாக்க இயலாத சிறு மற்றும் குறை நூல்கள் பெரும்பாலும் பருவ இதழ்களில் வெளிவந்திருக்கின்றன. ஆயினும், 'கொத்து', 'திரட்டு' போன்ற தொகுப்பு நூல்களில் இடம்பெற்றிருக்கும் குறைப்பகுதியை நிறைவு செய்வதாகவும் பருவ இதழ்ப் பதிப்பு அமைந்துள்ளது. காட்டாக, தமிழ்நாட்டு அரசின் கீழ்த்திசைச் சுவடிகள் நூல் நிலைய வெளியீடான 'பிள்ளைத்தமிழ்க் கொத்து' (1959) இரண்டாம் பாகத்தில் ஐந்தாம் நூலாக 'யோக சாத்தையர் பிள்ளைத்தமிழ்' எனும் நூல் இடம்பெற்றுள்ளது. இது ஒரு குறை நூலாகும். இதில் நான்காம் பருவமாகிய சப்பாணிப் பருவத்தின் 5ஆம் பாடல் தொடங்கி நூல் முடிய உள்ளது. இந்நூலின் ஒவ்வொரு பருவமும் ஐந்தைந்து பாடல்களால் ஆக்கப்பெற்றுள்ளது. இந்நூலின் முழுப் பிரதியைப் பேரா. மு. சண்முகம் பிள்ளை 'அடிமதிக்குடி அய்யனார் பிள்ளைத்தமிழ்' என்ற பெயரில் 1976ஆம் ஆண்டு தமிழாய்வு இதழில் பதிப்பித்துள்ளார்.

நக்கீரதேவ நாயனாரின் 'திருஈங்கோய்மலை எழுபது' எனும் நூல் தொடக்க காலப் பதிப்புகளில் 48ஆம் பாடல் தொடங்கி 62ஆம் பாடல் வரையிலுள்ள 15 பாடல்கள் குறையுடன் பதிப்பாகியிருக்கின்றன. வி. உலகநாத முதலியார் மணிவிழா மலரிலும் (1942), சித்தாந்தம் இதழிலும் 1961ஆம் ஆண்டு மு. அருணாசலம் தாம் பார்வையிட்ட சுவடியைக் கொண்டு விடுபட்ட பாடல்களையும் சேர்த்துப் பதிப்பித்திருக் கின்றார். அதன்பிறகு வெளிவந்த திருஈங்கோய்மலை எழுபது பதிப்புகளில் இப்பாடல்களும் இடம்பெறலாயின. அதாவது, "இப்பாடல்களுள் 48ஆம் பாடல் தொடங்கி 62ஆம் பாடல் வரையில் எந்தப் பிரதிகளிலும் கிடைத்தில என்று சுப்பராயச் செட்டியார் பதிப்பு, ஆறுமுக நாவலர் பதிப்பு, காசிமடத்துப் பதிப்பு ஆகிய எல்லாப் பதிப்புகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளன. செப்பறை மடத்து ஏடு ஒன்றில் இப்பாடல்களை யாம் முதன் முதலில் கண்டு 1942ஆம் வருஷம் திரு.வி. உலகநாத முதலியார் மணிவிழா மலரில் இவற்றை வெளியிட்டிருந்தோம். பின்னர் இவை அதிலிருந்து எடுத்துக் காசிமடத்து இரண்டாம் பதிப்பில் (1963) பதிப்பிக்கப்பட்டுள்ளன" (மு. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு - 10ம் நூற்றாண்டு, ப.332) என்பர். வி. உலகநாத முதலியார் மணிவிழா மலரில் வெளிவந்த பகுதிகள் அப்படியே சித்தாந்தம் இதழில் 1961ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளனர். அதன்பிறகு இந்நூல் நிறைப்பதிப்பாக 1963ஆம் ஆண்டு காசிமடத்தின் இரண்டாம் பதிப்பு வெளிவந்திருக்கின்றது. இதனைப் பார்க்கும் போது குறைப்பதிப்பாக வெளிவந்து கொண்டு இருந்த நூற்பதிப்புகளை நிறைப்பதிப்பாக்குவதற்குப் பருவ இதழ்களில் வெளிவந்த சுவடிப்பதிப்புகள் துணைபுரிந்திருக்கின்றன எனலாம்.

முதற்பதிப்பு கிட்டாமையால் வெளிவந்தவை

சுவடிப்பதிப்பின் தொடக்க காலத்தில் நூற்றுக் கணக்கான சுவடிப்பதிப்புப் படிகளை அச்சிட்டதாகத் தெரிய வில்லை. கையொப்பம் (முன்பணம்) பெற்ற அளவில் தேவைக் கேற்பவே வெளிவந்திருக்கின்றன. அவை, சில காலங்

களிலேயே இருக்குமிடம் தெரியாது போய்விடுதலுமுண்டு. இந்நிலையில் ஏற்கெனவே அச்சான நூல் கிடைக்காமையாலும் இருக்கும் சுவடியும் சிதிலம் அடைந்து போகும் நிலையில் இருந்தமையாலும் அந்நூல் மீண்டும் பருவ இதழ்ப் பதிப்பாக வெளிவந்திருக்கின்றது. காட்டாக, சிறைவிடந்தாதி எனும் நூல் 1921ஆம் ஆண்டு செந்தமிழ் இதழ் வழி வெளிவருவதற்கு முன்பே ஒரு பதிப்பு வெளிவந்திருக்கின்றது. அப்பதிப்பு எங்கும் கிடைக்காததால் செந்தமிழில் வெளியிடப்பெற்றிருக்கின்றது. இந்நூல் பதிப்பாசிரியர் சு. நல்லசிவன் பிள்ளை, "பல்லாண்டு கட்கு முன் வெளிவந்துள்ள இது, இப்பொழுது யாங்கனும் கிடைக்காமை யானும் ஒரே பிரதியேயுள்ளமையானும் ஏட்டுப்பிரதி சிதிலமடைந்து போகுமுன் பாதுகாக்கப்படுத லவசியமாகலானும் தனியே புத்தகமாகப் பதிப்பித்தற்கு ஒப்பு நோக்கிச் செப்பனிட வேறு பிரதிகள் கிட்டாமையால் ஏட்டி லுள்ளவாறே செந்தமிழ்ப் பத்திரிகை மூலம் வெளியிடப் படுகிறது" *(செந்தமிழ், 19:6:1921, ப.212)* என்கின்றார்.

முன்னர் வெளிவந்த பதிப்பு கிட்டாமையாலும் அந்நூல் மக்களுக்குத் தேவைப்படுகின்றமைபாலும் பருவ இதழ்ப் பதிப்புகள் வெளிவந்திருக்கின்றன. காட்டாக, 'திருமாலிருஞ்சோலைமலை அழகர் பிள்ளைத்தமிழ்' எனும் நூல் முன்னரே அச்சிடப்பெற்றிருக்கின்றது. இந்நூல் கிடைக்காமையால் 1919ஆம் ஆண்டு செந்தமிழ் இதழில் பதிப்பிக்கப்பெற்றுள்ளது. அதாவது, "இந்நூல் (திருமாலிருஞ் சோலைமலை அழகர் பிள்ளைத்தமிழ்) சில பத்தாண்டுகளுக்கு முன்னரே ஒருவரச்சிடப்பட்டிருப்பினும் இப்பொழுது அச்சுப் புத்தகம் எங்கும் கிடைக்காமையால் இதனை அச்சிட்டாற் காவியங் கற்பார் பலர்க்கும் மிகப் பயன்படுமென்று கருதி மதுரைத் தமிழ்ச்சங்கத்திலிருந்த இரண்டு குறைப்பிரதிகளையும் ஓரச்சுப் புத்தகத்தையும் வைத்துப் பரிசோதித்துச் 'செந்தமிழ்' வாயிலாக வெளியிடலாயிற்று". (செந்தமிழ், 17:4:1919, ப.4) என்று கி. நாராயணையங்கார் கூறுவதால் அறியமுடிகிறது.

அச்சிட்ட நூற்படிகள் கிடைக்காமையாலும், நூற் பொருளைத் தமிழ் மக்கள் அறிந்து மகிழ்வதற்குமாக 'பரத

சாத்திரம்' எனும் நூல் தமிழ்ப்பொழில் 1947-51ஆம் ஆண்டுப் பகுதிகளில் க. வெள்ளைவாரணனார் பழைய உரையுடன் பதிப்பித்திருக்கின்றார். பின்னர் இந்நூற் பகுதி 1952ஆம் ஆண்டு தனிநூலாக வெளிவந்துள்ளது. இதனை இந்நூற் பதிப்பாசிரியர் க. வெள்ளைவாரணனார், "இப்பரத சாஸ்திரம் நெடுநாளைக்கு முன்பே அச்சிட்டு வெளிப்படுத்தப் பெற்று உள்ளது. அச்சுப் படிகள் இந்நாளிற் கிடைக்காமையால் இந்நூற் பொருளைத் தமிழ் மக்கள் அறிந்து மகிழ்தற்கு இயலாது போயிற்று. இந்நூலின் அச்சுப்படியொன்று நம் கரந்தைத் தமிழ்ச்சங்கச் சுவடி நிலையத்திற் சேமிக்கப் பெற்றிருந்தது. அதனையுணர்ந்த யாழ்நூலாசிரியர் அருள்மிகு விபுலாநந்த அடிகளார் கிடைத்தற்கரிய இந்நூலினை மீண்டும் அச்சியற்றி வெளியிடும்படி பணித்தருளினார்கள். முத்தமிழ் வித்தகராகிய அடிகளாரது ஆணையின்படி இந்நூல் நம் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தாரால் தமிழ்ப்பொழில் வாயிலாக முறையே வெளியிடப்பெற்று இப்பொழுது முழுநூலுருவில் காட்சி தருகின்றது" (பரத சாத்திரம், முன்னுரை) என்று கூறுகின்றார்.

பதிப்புரிமை பெற்றவை

தனிநூலான பதிப்பின் பதிப்புரிமை பெற்று வெளிவந்த பருவ இதழ்ப் பதிப்புகள், பருவ இதழ்ப் பதிப்பின் பதிப்புரிமை பெற்றுத் தனிநூலான பதிப்புகள் எனப் பருவ இதழ்களில் வெளிவந்த பதிப்புரிமைப் பதிப்புகள் இரண்டு நிலைகளில் அமைந்திருக்கின்றன. தி. சந்திரசேகரன் 1953ஆம் ஆண்டு சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலக வெளியீடாக 'திருமயிலைப் பிரபந்தங்கள்' எனும் தொகுப்பு நூலை வெளியிட்டுள்ளார். இத்தொகுப்பில் 'திருமயிலை உவமை வெண்பா' ஒன்று. இந்நூல் சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலக் அனுமதியுடன் குமரகுருபரன் இதழில் 1954-55ஆம் ஆண்டுகளில் வெளிவந்துள்ளது. சீகாழித் தாண்டவராயரின் உரையுடன் 'திருவாசக அனுபூதி' எனும் நூலை உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம் வெளியிட்டு

உள்ளது (குமரகுருபரன், 16:1:1965). இதன் பதிப்புரிமையைப் பெற்று 1965-69ஆம் ஆண்டு குமரகுருபரன் இதழ்ப் பகுதிகளில் வெளிவந்துள்ளது.

தி. சந்திரசேகரன் 'ஆத்திசூடித் திறவுகோல்' (1949) எனும் நூலையும், மு. பசுபதி 'சிதம்பர விலாசம்' (1952) எனும் நூலையும், பி.எஸ். சுலோசனா 'கணபதிதாசரின் நெஞ்சறி விளக்கம்' (1951) எனும் நூலையும் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் வெளியிட்டிருக்கின்றனர். இம் மூன்று நூல்களும் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தா ரிடமிருந்து பதிப்புரிமை பெற்று நூலாகவும், இதழ்ப்பதிப் பாகவும் வெளிவந்துள்ளன. 'ஆத்திசூடித் திறவுகோல்' எனும் நூலைத் தி. பட்டுச்சாமி ஓதுவார் திருப்பனந்தாள் காசிமடம் சீர்வளர்சீர் காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகளின் 6ஆவது ஆண்டு நினைவு வெளியீடாகத் தனிநூலாய் வெளியிட் டுள்ளார். தி. பட்டுச்சாமி ஓதுவாரின் குறிப்புரையுடன் 'சிதம்பர விலாசம்' மற்றும் கணபதிதாசரின் 'நெஞ்சறி விளக்கம்' ஆகிய இவ்விரு நூல்களும் குமரகுருபரன் இதழில் முறையே 1952, 1953ஆம் ஆண்டுகளில் வெளிவந்து உள்ளன.

அறிமுக நோக்கில் வெளிவந்தவை

அறிமுகப்படுத்தும் நோக்கத்தில் பருவ இதழ்களில் நூல்கள் குறையுடன் வெளிவந்திருக்கின்றன. இந்நூல்கள் பின்னாளில் தனிநூலாகவோ மீண்டும் முழுமையான பருவ இதழ்ப் பதிப்பாகவோ வெளிவரக்கூடும். 'திருஞானசம்பந்த சுவாமிகள் பிள்ளைத்தமிழ்' எனும் நூலின் சில பாடல்களை எஸ். சோமசுந்தர தேசிகர் செந்தமிழ் இதழில் 1918ஆம் ஆண்டு வெளிப்படுத்தியிருக்கின்றார். இது வெளிவந்து 48 ஆண்டுகள் கழித்து 1966ஆம் ஆண்டு ம. சீராளன் சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழில் ஆஃப் பிரிண்ட் முறையில் தனிப்பக்கவெண் கொடுத்துப் பதிப்பித்துள்ளார்.

'பட்டமதன வித்தார மாலை' எனும் நூலில் காப்பு வெண்பா 1ம், நூல் 98 அகவலடிகளையும் தமிழ்ப்பொழில் இதழில் 1930ஆம் ஆண்டு பண்டிதர் நாராயணசாமி வெளியிட்

டுள்ளார். இதனை அவர், "இந்நூலைப் பின் தனிநூலாக வெளிவிடுக்குங்கால் நூலாசிரியர் திறனும் நூலின்றிறனுங் கண்டு குறிப்புரை முதலியவற்றோடு சேர்த்து வெளிவிடுக்க நினைத்துளேன். இப்போது இங்குச் சிறிது வெளியிடுகின்றேன்" (தமிழ்ப்பொழில், 1:3-5:1930, ப.165) என்று குறிப்பிடுகின்றார். ஆகத் தனிநூல் வெளியிடுவதற்கு முன் இந்நூல்கள் பருவ இதழ்களில் அறிமுகப்படுத்தப் பெற்றுள்ளது விளங்குகின்றது.

நூலாசிரியரின் குறைப்பதிப்பை நிறைவு செய்தவை

நூலாசிரியரால் பருவ இதழ்களில் குறையுடன் வெளியிட்ட நூல் நீண்ட ஆண்டுகளுக்குப் பிறகு வேறொருவரால் மீண்டும் பருவ இதழில் முழுமையும் பதிப்பித்து வெளியிட்ட நூல்களாகச் சில காணப்படுகின்றன. குறிப்பாக, நா.ரா. சிவராஜ பிள்ளையின் 'கம்பராமாயணக் கவுத்துவமணிமாலை'யைக் காரைக்குடியிலிருந்து வெளிவந்த 'குமரன்' இதழில் முதல் 12 பாடல்கள் 1927ஆம் ஆண்டும், செந்தமிழ் இதழில் முதல் 16 பாடல்கள் 1928-29ஆம் ஆண்டுப் பகுதிகளிலும் நூலாசிரியரால் வெளியிடப்பெற்றுள்ளன. இந்நூல் இதற்குப் பிறகு வெளிவரவில்லை. நூலாசிரியரின் மறைவுக்குப் பிறகும், நூல் வெளிவந்த ஐம்பது ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகும் இந்நூலை மு. சண்முகம் பிள்ளை தமிழாய்வு இதழில் 1979ஆம் ஆண்டு முழுமையும் வெளியிட்டுள்ளார். ஆக, இந்நூல் நூலாசிரியரால் முழுமையும் வெளியிடமுடியாத போது பிறறொருவரால் நூல் முழுமையும் வெளியிட்டிருப்பதைப் பருவ இதழ்ப் பதிப்புகளில் காணமுடிகிறது.

குறைப்பதிப்பை முழுநூலாகக் கருதியவை

ஒரு முழுமையான நூல் பருவ இதழில் குறைப் பதிப்பாக வெளிவந்து, பின்னர்த் தனிநூலாகும் போது அக்குறைப் பதிப்பையே முழுநூலாக்கிய போக்கும் பருவ இதழ்ப் பதிப்புகளில் காணமுடிகிறது. 'கருணாம்பிகை யமக அந்தாதி' எனும் நூல் 30 பாடல்களாலானது. மாதாந்திர அமுதம் இதழில்

1988ஆம் ஆண்டு துணர் 9, பகுதி 2-6களில் ப.வெ. நாகராஜனின் உரையுடன் முதல் 29 பாடல்கள் வெளிவந்திருக்கின்றன. 30ஆவது பாடல் துணர் 9, பகுதி 7இல் வெளிவந்திருக்க வேண்டும். ஆனால் வெளிவரவில்லை. இவ்விதழ்ப் பதிப்பு 1988ஆம் ஆண்டு தனிநூலாக வெளிவரும் போது 30ஆவது பாடலை இணைக்காமல் இதழில் வெளிவந்த முதல் 29 பாடல்களை அச்சிட்டு 'முற்றும்' எனப் போட்டிருக்கின்றனர் என்கின்றார் இந்நூல் பதிப்பாசிரியர். இப்பதிப்பு இறுதிப்பாடல் இல்லாத ஒரு குறைப்பதிப்பாகத் திகழ்கின்றது. 'முற்றும்' போட்டுவிட்டதாலே முழுமை என்று கருதிவிடமுடியாது என்பதற்கு இப்பருவ இதழ்ப் பதிப்பு ஒரு சான்றாகத் திகழ்கின்றது.

ஒரு நூலின் யாப்பை மாற்றிப் பதிப்பித்தவை

ஒரு நூலுக்கான யாப்பை விடுத்து மாற்று யாப்பில் பதிப்பித்த போக்கையும் பருவ இதழ்ப் பதிப்புகளில் காண முடிகிறது. 'கோதை நாய்ச்சியார் தாலாட்டு' 167 தாழிசைகளைக் கொண்டதொரு நூலாகும். இந்நூல் எஸ். வையாபுரிப் பிள்ளை உபதேசித்து 1928ஆம் ஆண்டு ஆழ்வார்திருநகரி திருஞான முத்திரைப் பிரசுராலயம் மூலமாகப் பெரியன் ஸ்ரீநிவாஸன் வெளியிட்டுள்ளார். இப்பதிப்பில் விடுபட்ட பகுதிகள் கோடிட்டுக் காட்டப்பெற்றுள்ளன. ஆனால் இதே நூலை வ.ரா. கல்யாணசுந்தரம் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் 1953ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார். 1928ஆம் ஆண்டுப் பதிப்பில் கோடிட்ட பகுதிகள் இப்பதிப்பில் நீக்கப்பெற்று 316 அகவல்வரி கொண்ட நூலாக மாற்றிப் பதிப்பித்துள்ளார். இதனைப் பார்க்கும்போது இந்நூல் பதிப்பாசிரியர் வ.ரா. கல்யாணசுந்தரம் முன்பதிப்பையும் பார்க்க வில்லை; அதற்குச் சரியான யாப்பையும் தேர்ந்தெடுக்கவில்லை என்றே தோன்று கிறது. சுவடியில் விடுபாடுகள் மிகுதியாக இருந்தமையால் ஸ்ரீநிவாஸனால் யாப்பை முழுமையாகத் தேர்ந்தெடுக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கலாம் என்றே தோன்றுகிறது.

ஒரே நூல் இருவேறு பெயர்களில் வெளிவந்தவை

பருவ இதழ்களில் சுவடிப்பதிப்பு வெளிவருவதற்கு முன்/பின் வெளிவந்த தனிநூல்/பருவ இதழ்ப் பதிப்புப் பெயரில் சிறுமாற்றம் பெற்று வெளிவந்திருக்கின்றன. திருவாரூர் சோமசுந்தர தேசிகர் அவர்களால் ‘கீழ்வேளூர் உலா’ செந்தமிழ் இதழில் 1926ஆம் ஆண்டு வெளியிடப்பெற்றுள்ளது. இந்நூலை 1981ஆம் ஆண்டு ‘திருக்கீழ்வேளூர் உலா’ என்று பெயரில் சிறு மாற்றத்தோடு அ. இராசேந்திரன் தொல்பொருள் ஆய்வுத்துறையின் 82ஆம் வெளியீடாக வெளியிட்டுள்ளார்.

செந்தமிழ் இதழில் 1909ஆம் ஆண்டு ‘சங்கரசோழன் உலா’ வெளிவந்திருக்கின்றது. இந்நூல் 1977ஆம் ஆண்டு ‘சங்கரராசேந்திர சோழன் உலா’ என்ற பெயரில் கி.வா. ஜெகந்நாதனின் குறிப்புரையுடன் உ.வே. சாமிநாதையர் நூலக வெளியீடாக வெளிவந்துள்ளது.

மு. சண்முகம் பிள்ளை ‘சேலம் தாலந்தீர்த்த செழியன் மஞ்சரி’யைத் தமிழாய்வு இதழில் 1978ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார். இந்நூல் இதே பதிப்பாசிரியரால் 1986ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியிட்ட ‘செழியதரையன் பிரபந்தங்கள்’ எனும் தொகுப்பு நூலில் ‘அந்தாலந்தீர்த்த செழியன் மஞ்சரி’ என்று மாற்றப்பெற்றிருக்கின்றது.

மேற்கூறிய இம்மூன்று நூல்களும் பருவ இதழ்களில் வெளிவந்ததற்குப் பிறகு வந்த தனிநூற் பதிப்புகள், பெயர் மாற்றத்துடன் வெளிவந்திருக்கின்றன.

‘திருக்குறள் அதிகாரசாரமாகிய நன்னெறித் தாலாட்டு’ எனும் நூலை 1910ஆம் ஆண்டு மதுரை ஸ்ரீராமச்சந்திர விலாச அச்சியந்திரசாலை வெளியிட்டுள்ளது. பிறகு இந்நூல் செல்வக் களஞ்சியம் இதழில் ஆர்.எஸ். பதி ‘திருக்குறள் அதிகார சாரமாகிய திருத்தாலாட்டு’ என 1916ஆம் ஆண்டு வெளியிட்டு உள்ளார்.

1867ஆம் ஆண்டு 'திருத்தணிகைச் சிலேடை வெண்பா' வெளிவந்துள்ளது. இந்நூலை வே.ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் சித்தாந்தம் இதழில் 1970-71ஆம் ஆண்டு 'தணிகை வெண்பா' என வெளியிட்டுள்ளார். இதற்குப் பின்னர் வெளிவந்த மு. சண்முகம் பிள்ளை பதிப்பும், 1980ஆம் ஆண்டுப் பதிப்பும் 'தணிகை வெண்பா' என்றே வெளிவந்து உள்ளன.

'திருத்தொண்டர் மாலை' 1912ஆம் ஆண்டு மெ.அரு.ந. இராமநாதஞ் செட்டியாரவர்களால் வா. மகாதேவ முதலியாரின் குறிப்புரையுடன் வெளிவந்திருக்கின்றது. மேலும் இந்நூல் 'பெரியபுராணச் சரித்திர வெண்பா மாலை' என்று 1916ஆம் ஆண்டும், 'திருத்தொண்டர் வெண்பா' என்று 1917ஆம் ஆண்டும், 'திருத்தொண்டர் மாலை - மூலமும் உரையும்' என்று 1923ஆம் ஆண்டும் வெளிவந்திருக்கின்றது. தனிநூற்பதிப்பு களைப் பொறுத்தமட்டில் இந்நூல் மூன்று வகையான பெயர்களில் வெளிவந்திருக்க, அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் 'திருத்தொண்டர் மாலை' (1950) என்றே வெளிவந்திருப்பது தெரிகிறது.

'மாறன் பாப்பாவினம்' 1929ஆம் ஆண்டு கலா நிலையம் இதழில் வெளிவந்துள்ளது. இதே நூல் 1931ஆம் ஆண்டு செந்தமிழ் இதழில் 'பாப்பாவினம்' என்று வெளிவந்து 1932ஆம் ஆண்டு தனிநூலாகவும் வெளிவந்திருக்கின்றது.

பாதுகாத்தவரால் நூற்பெயர் சுட்டப்பெற்றவை

சுவடியில் நூற்பெயர் இல்லாத போழ்து சுவடிப் பொருளைக் கொண்டு பதிப்பாசிரியரால் பொதுவானதொரு நூற்பெயர் சுட்டும் வழக்கம் உண்டு. அதுபோல் சுவடியைப் பாதுகாத்து வருபவர்கள், அட்டவணை தயாரிப்பவர்கள் ஆகியோராலும் நூற்பெயர் சுட்டப்பெற்றுள்ள பருவ இதழ்ப் பதிப்புகளும் உண்டு. காட்டாக, தஞ்சை சரஸ்வதிமகால் நூலக வெளியீடாக 'தஞ்சை வெள்ளைப்பிள்ளையார் குறவஞ்சி'

எனும் நூல் இவ்வகையில் பெயர் பெற்றதாகும். இந்நூலைப் பதிப்பித்த புலவர் வீ. சொக்கலிங்கம், "இந்நூலுக்கு நூலாசிரியரால் இடப்பட்ட பெயர் இன்னதெனத் தெரியவில்லையாயினும், இந்நூலைப் பாதுகாத்தவர்களால் 'பிள்ளையார் பேரில் குறவஞ்சி' என்றும், 'பிள்ளையார் சரித்திரம்' என்றும், 'வெள்ளைப்பிள்ளையார் குறவஞ்சி' என்றும் பெயர் கொடுக்கப் பட்டு இருக்கின்றன. 1925ஆம் ஆண்டு, தஞ்சை சரஸ்வதிமகால் தமிழ் ஏட்டுச் சுவடிகளின் அட்டவணை தயாரித்த, திருவையாறு தமிழ்க் கல்லூரிப் பேராசிரியர் உயர்திரு எல். உலகநாத பிள்ளை அவர்களால் இந்நூலுக்குத் 'தஞ்சை வெள்ளைப்பிள்ளையார் குறவஞ்சி' என்று பெயர் கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே இப்பெயர் பொருத்தமென்று கருதியே இந்நூலுக்குத் 'தஞ்சை வெள்ளைப்பிள்ளையார் குறவஞ்சி' என்ற தலைப்புக் கொடுத்து உள்ளேன்" (சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ், 1:3:1962, ப.4) என்கின்றார்.

மனன நிலையில் உருவானவை

மூலச் சுவடி அல்லது படிச்சுவடி எங்கும் இல்லாத போழ்து, அச்சுவடி படித்தவரின் நினைவிலிருந்தும் நூல்களை உருவாக்கியிருக்கின்றனர். இவ்வாறான நூல்கள் பருவ இதழ்ப் பதிப்புகளாகவும் வெளிவந்திருக்கின்றன. காட்டாக, 'தளசிங்க மாலை' எனும் நூலைக் குறிப்பிடலாம். இந்நூல் கருங்காலக் குடி குப்புசாமிக் குருக்களுக்குப் பாடமாய் இருந்திருக்கின்றது. இந்நூல் பதிப்பிக்க எண்ணும்போது பிரதிகள் எங்கும் கிடைக்கவில்லை. குப்புசாமிக் குருக்களின் நினைவில் இருந்து 25 பாடல்கள் கிடைத்தன. அப்பாடல்களை மட்டும் திருவாரூர் எஸ். சோமசுந்தர தேசிகர் செந்தமிழ் இதழில் பதிப்பித்திருக் கின்றார். "இந்நூல் (தளசிங்க மாலை) இங்கு (மதுரைத் தமிழ்ச் சங்கம்) வந்திருந்த கருங்காலக்குடி குப்புசாமிக் குருக்கள் அவர்கட்குப் பாடமாயிருந்ததை அவர் வாய்படக் கேட்டு எழுதியது" (செந்தமிழ், 16:7:1918) என்னும் சோமசுந்தர தேசிகரின் கூற்று இதனை மெய்ப்பிக்கின்றது.

மீண்டும் பருவ இதழில் பதிப்பித்தவை

ஒரு நூல் பருவ இதழில் அறிமுகமாகிப் பின்னர் நீண்ட நாள்களுக்குப் பிறகு மீண்டும் பருவ இதழ்களிலேயே வெளிவந்த சூழல்களிலும் சில நூல்கள் காணப்படுகின்றன. அதாவது, நூல் கிடைக்காமையாலும் நூலின் தேவை கருதியும் முதற்பதிப்பாகவோ இரண்டாம் பதிப்பாகவோ இதழ்ப் பதிப்புகள் வெளிவராமல், மீண்டும் பருவ இதழ்ப் பதிப்பாக - இரண்டாவது முறையாக வெளிவந்திருக்கின்றன. இவ்வகையில் கோமதி அந்தாதி, தருக்க சூத்திரம், புலவராற்றுப்படை ஆகிய மூன்று நூல்களைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

'கோமதி அந்தாதி' எனும் நூல் சித்தாந்தம் இதழில் 1955, 1976ஆம் ஆண்டுகளிலும், 'தருக்க சூத்திரம்' எனும் நூல் செந்தமிழ் இதழில் 1902, 1908ஆம் ஆண்டுகளிலும், 'புலவராற்றுப்படை' எனும் நூல் செந்தமிழ் இதழில் 1903, 1969ஆம் ஆண்டுகளிலும் முறையே முதல் மற்றும் இரண்டாம் பதிப்புகளாக வெளிவந்திருக்கின்றன. இவற்றில் கோமதி அந்தாதி மட்டும் குறைப்பதிப்பாகும். இந்நூல் குறைப்பதிப் பாகவே தனி நூலாகவும் வெளிவந்திருக்கின்றது. இந்நூலின் பதிப்பாசிரியர் அம்பை இரா. சங்கரன், "பெரும்பாலும் அந்தாதிகள் நூறு பாட்டுக்களைக் கொண்டே யிலங்குவது வழக்கம். அதேபோன்று இந்நூலும் நூறு பாட்டுக்களைத்தான் பெற்றிருக்கவேண்டும். அப்படியிருக்க நம் போகூழினால் அவ்வேட்டுச் சுவடியில் 44 பாட்டுகளேயிருந்தன. அவைகளை அப்படியே பிரதி செய்து கொண்டு எஞ்சிய பகுதி யாண்டாவது கிடைக்க இயலும் எனப் பல்லிடத்தும் விசாரிக்க முற்பட்டேன். இருபது ஆண்டுகட்கு முன் சித்தாந்தம், மலர் 28, இதழ்10லும் இந்நூல் பற்றி விசாரித்து எழுதியிருந்தேன். எவ்வகையான தகவலும் கிடைத்திலது. எனவே கிடைத்தவற்றையாவது வெளியிட்டு விட வேண்டும் என்ற நோக்கங் கொண்டு இதை வெளியிடலானேன்" (கோமதி அந்தாதி, ப.9) என்கின்றார்.

ஏடு பிறழ்ச்சியால் உருவானவை

சிதைந்தும், பிறழ்ந்தும், கூடியும், குறைந்தும், பிழைபடவும் உள்ள ஒரு சுவடியைப் பதிப்பிக்க மாற்றுச் சுவடிகள் இல்லாத போழ்து பதிப்பாசிரியரின் வன்மையால் உத்தேசபாடங் கொண்டும் பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகள் வெளிவந்திருக்கின்றன. காட்டாக, பேரா. எஸ். வையாபுரிப் பிள்ளை பதிப்பித்த இராஜராஜதேவருலாவைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். இந்நூற் பதிப்பின் முன்னுரையில், "இப்பிரதியை (இராஜராஜதேவருலா) நான் பெற்றுக்கொண்ட பொழுது, வேறு பிரதிகளும் சம்பாதித்து ஒப்புநோக்குதல் முதலியன செய்து திருத்தமுறப் பதிப்பிக்கவேண்டும் என்பது எனது நோக்கமாயிருந்தது. ஆனால், பிரதிகள் அகப்படுவது அரிதாக முடிந்தமையால், அந்நோக்கத்தைத் தற்காலம் கைவிட வேண்டியதாயிற்று. கிடைத்துள்ள கையெழுத்துப் பிரதிதானும் இடையிடையே சிதைந்தும் பிறழ்ந்தும் கூடியும் குறைந்தும் மிகப் பிழைபட்டிருக்கின்றமையால், அங்கங்கே கீழ்க்குறிப்பில் உத்தேச பாடங்கள் தரப்பட்டுள்ளன" (செந்தமிழ், 23:10:1925, ப.377) என்று குறிப்பிடுகின்றார்.

இந்நூல் வெளிவந்த பிறகு திருவாரூர் எஸ். சோமசுந்தர தேசிகர் தம்மிடமுள்ள இராஜராஜனுலாப் பிரதியோடு ஒத்துப்பார்த்து இப்பதிப்புச் சுவடியின் தன்மையை, "இப்போது வெளியிட்டுள்ள இராஜராஜ தேவருலாவிலே பாட்டுடைத் தலைவனாகிய இராஜராஜன் முன்னோர்களில் இராஜராஜன் பாட்டனான விக்கிரமன் வரை முதலிருபத்தெட்டுக் கண்ணிகளாற் கூறியிருப்பினும், விக்கிரமனை யடுத்து, அவன் மகனும் இவ்விராஜராஜனுக்குத் தகப்பனுமான குலோத்துங்கன் பெயரும் இவ்விராஜராஜன் பெயரும் காணப்படவில்லை. பாட்டுடைத் தலைவனாகிய இராஜராஜன் பெயர், இவ்வுலாவின் தொடக்கத்துப் பரம்பரை கூறுமிடத்து மட்டுமன்றி, இவ்வுலா முழுவதிலும் ஓரிடத்தேனும் வெளிப்படையாகக் கூறப்படவில்லை.

மேலும் இவ்வெளி வந்த உலாவில் 32ஆம் கண்ணியுடன் 83ஆம் கண்ணி முதலியன பொருட்டொடர்பின்றி நிற்கின்றன. என்னிடமுள்ள இவ் விராஜராஜனுலாக் கையெழுத்துப் பிரதி 1-32ஆம் கண்ணி வரை இவ்வச்சுப் பிரதியோடு ஒத்தும், 33ஆம் கண்ணி முதல் உலா முழுவதும் ஒவ்வாது வேறுபட்டும் காணப்படுகின்றன" (செந்தமிழ், 24:2:1925-26, ப.49). "32ஆம் கண்ணிக்குப் பின் காணப்படுவனவெல்லாம் எவ்வுலாவைச் சேர்ந்தவையெனிற் கூறுவன்..... மூவருலாக்களும் முறைதவறிக் கலந்து இராஜராஜதேவருலா என்று பெயர் கொண்ட ஓரேட்டுச் சுவடியைப் பார்த்து எழுதிய பிரதியைக் கொண்டு இப்பொழுது இவ்விராஜராஜனுலா வெளியிடப்பட்ட தென்னேற்படுகிறது. இவ்வாறு பிறழ்ந்த பிரதியொன்று சென்னை மாநகரிலே யுண்டென்று என் நண்பர் காலஞ்சென்ற திரு. செல்வக்கேசவராய முதலியாரவர்கள் சொல்லக் கேட்டதுண்டு"[16] (செந்தமிழ், 24:2:1925-26, ப.57) என்கின்றார். ஆக, பேரா. எஸ். வையாபுரிப்பிள்ளை பதிப்பித்த சுவடி ஏடு பிறழ்ந்தது என்பது தெரிகின்றது.

ஓரிதழில் மூலமும் பிறிதோரிதழில் உரையும் பதிப்பித்தவை

ஒரு நூலின் மூலம் ஓர் இதழிலும் உரை மற்றோர் இதழிலும் எனத் தனித்தனியாக வெளிவந்த போக்கைப் பருவ இதழ்களில் காணமுடிகிறது. 'பர்த்ருஹரி நீதிசதகம்' எனும் நூலின் மூலம் மட்டும் 'அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ்'ப் பகுதியில் 1949ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. இந்நூல் பத்துப் பகுதிகளாகப் பகுக்கப்பட்டு ஒவ்வொரு பகுப்பிற்கும் பெயர் வைக்கப்பெற்றுள்ளது. இந்நூலின் உரைப்பகுதியானது 1909-10ஆம் ஆண்டு 'வித்தியாபாநு' இதழ்ப் பகுதிகளில் வெளிவந்துள்ளது. இவ்வுரையினை ஆர். சேதுநாராயணன் சர்மா எழுதியுள்ளார். இவ்வுரையும் பத்துப் பகுதிகளாக அமைந்துள்ளது. இதனைப் பார்க்கும்போது உரைப்பகுதியும் அடுத்து மூலப் பகுதியும் இதழ்களிலேயே தனித்தனியாக வெளிவந்து இருப்பது தெரிகின்றது. பத்துப்

பகுதிகளின் பெயர்களிலும் சில மாற்றங்கள் செய்யப்பெற்று உள்ளதும் தெரிகின்றது. அவை பின்வருமாறு:

மூலப்பகுதி	**உரைப்பகுதி**
அவிவேக பத்ததி	மூர்க்கர் படலம்
வித்தியா பத்ததி	கல்விப் படலம்
மானசௌரிய பத்ததி	சௌரியப் படலம்
அர்த்த பத்ததி	செல்வப் படலம்
துச்சன பத்ததி	துர்ஜனர் படலம்
சஜ்ஜன பத்ததி	நல்லோர் படலம்
பரோபகார பத்ததி	பரோபகாரப் படலம்
தயிரிய பத்ததி	தைரியப் படலம்
தெய்வ பத்ததி	விதிப் படலம்
கன்ம பத்ததி	கன்ம படலம்

பதிப்புக்கு முன் அறிமுகப்படுத்தியவை

ஒரு நூல் அச்சாவதற்கு முன் அந்நூல் பற்றிய செய்திகளைத் தகவல் தொடர்பு கருவிகளின் வாயிலாக அறிமுகப் படுத்தும் போக்கு தமிழ்ப் பதிப்புலகில் காணக்கூடிய ஒன்று. சில நூல்களை இதழ்களில் அறிமுகப்படுத்தியும் வானொலியில் உரையாற்றியும் பதிப்பித்திருக்கின்றனர். இவ்வகையில், தஞ்சை வெள்ளைப்பிள்ளையார் குறவஞ்சி, வலைவீசு புராணம், மூவர் அம்மானை, எக்காலக் கண்ணி, கோதை நாய்ச்சியார் தாலாட்டு ஆகிய பருவ இதழ்ப் பதிப்புகள் இடம்பெறுகின்றன.

'சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ்'ப் பகுதி 6, எண்.2, 1947இல் மீ. குழந்தைவேலன் தஞ்சை வெள்ளைப் பிள்ளையார் குறவஞ்சியின் 13, 14, 15, 24ஆம் பாடல்களை அறிமுகப்படுத்தியிருக்கின்றார். அதன் பிறகு இந்நூலைப் புலவர் வீ. சொக்கலிங்கம் 1962ஆம் ஆண்டு 'சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ்'ப் பகுதி 16, எண்.1-3இல் வெளியிட்டு உள்ளார். பின்னர் இந்நூல் தனிநூலாகவும் வெளிவந்துள்ளது. அதுபோல் வலைவீசு புராணம் எனும் நூலிலிருந்து சில பாடல்களை மேற்கூறிய பருவ இதழ்ப் பகுதி 18, எண்.1&2, 1965இல் அறிமுகப்படுத்தப்

பெற்றது. அதன்பிறகு இந்நூலை ம. சீராளன் 1975-80ஆம் ஆண்டுகளில் வெளிவந்த சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ்ப் பகுதி 27, எண். 1& 3, 1975 முதல் பகுதி 31, எண் 2&3, 1980 வரையுள்ள பகுதிகளில் வெளியிட்டுள்ளார். ஆக, சரஸ்வதி மகால் நூலகப் பருவ இதழ்ப் பதிப்புகளில் தஞ்சை வெள்ளைப் பிள்ளையார் குறவஞ்சி மற்றும் வலைவீசு புராணம் ஆகிய இரண்டும் முறையே 1947, 1965ஆம் ஆண்டுகளில் அறிமுகப் படுத்தப்பெற்று முறையே 1962, 1975-80ஆம் ஆண்டுகளில் பருவ இதழ்ப் பதிப்புகளாக வெளிவந்திருக்கின்றன என்பது தெரிகின்றது.

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்திலுள்ள மூவர் அம்மானை, எக்காலக்கண்ணி, கோதை நாய்ச்சியார் தாலாட்டு ஆகிய மூன்று நூல்களும் சென்னை வானொலியில் உரை யாற்றிய பிறகு பதிப்பிக்கப்பெற்றதாகத் தெரிகின்றது. மூவர் அம்மானையின் சிறப்பியல்புகள் குறித்துத் தி. சந்திரசேகரன் 28.4.1951லும், எக்காலக் கண்ணியின் சிறப்பு இயல்புகள் குறித்து வ.ரா. கல்யாணசுந்தரம் 14.6.1952லும், கோதை நாய்ச்சியார் தாலாட்டின் சிறப்பியல்புகள் குறித்து வி.எஸ். கிருஷ்ணன் 20.9.1952லும் உரையாற்றியுள்ளனர். இவ்வுரை களுக்குப் பிறகு இந்நூல்கள் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் 1953ஆம் ஆண்டு வெளிவந்துள்ளன. உரையாற்றியவர்களே இந்நூற் பதிப்பாசிரியர்களாக இருந்து உள்ளனர்.

தவறான பதிப்பைச் சுட்டியவை

அழிந்துபோகும் நிலையிலுள்ள, அரிதின் கிடைத்த சுவடியைக் கொண்டு பல சுவடிப்பதிப்புகள் வெளிவந்திருக் கின்றன. மூலத்தில் உள்ளதை உள்ளவாறே பதிப்பிக்கும் போக்கு 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பெருவழக்காக இருந்திருக்கின்றது. 'திருக்குறள் மூலம்' (1812) சுவடி யெழுத்தைப்போல் பதிப்பித்திருந்ததை இங்குக் குறிப்பிடலாம். மாற்றுச் சுவடிகள் கிடைக்காத போது, பிழைகள் மலிந்திருந் தாலும் நூல் பதிப்பாக வேண்டும் என்ற எண்ணத்தில்,

பிழையுடன் பல பதிப்புகள் வெளிவந்திருக்கின்றன. பின்னாளில் மாற்றுச் சுவடிகள் கிடைத்த போது திருத்தப்பதிப்பாகப் பருவ இதழ்ப் பதிப்புகள் வெளிவந்திருக்கின்றன. காட்டாக, திருவானைக்காவுலாப் பதிப்பைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

1890ஆம் ஆண்டு திருவானைக்காவுலா முதற்பதிப்பு வெளிவந்துள்ளது. இந்நூற்பதிப்பைக் கண்ணுற்ற எஸ். சரவணப்பிள்ளை, அதில் நடந்து உள்ள தவறுகளைக் கொண்டு வெதும்புகின்றார். "இதையச்சிட்டதினும் இறந்துபட விட்டிருப்பதே நன்று என்று தோன்றிற்று. ஒருங்கே நாலுவரிக்குப் பொருள்கொள்ள வியலாது பல்வகைப் பிழையும் பொதிந்து கிடந்தமையால்" (உண்மை விளக்கம் எனும் சித்தாந்த தீபிகை, 1:1:1897, ப.67) என்று தம்முடைய ஆதங்கத்தைக் காட்டுகின்றார். மாற்றுச் சுவடியால் இத்தவறான பதிப்பிற்குத் திருத்தப் பதிப்பாகப் பருவ இதழில் வெளியிட்டுத் தம்முடைய ஆதங்கத்தைப் போக்கிக் கொண்டுள்ளார் எனலாம். இப் பதிப்பின் முன்னுரையில் அவர், "திருவானைக்காவுலாவை அச்சுரூபத்திற் கண்டு துக்கமே யதிகரிக்கப்பெற்று நிற்கையில் அச்சம்புகேச்சுரர் திருவருளால் அவ்வுலா ஏட்டுப் பிரதியொன்று கிடைத்தது. அதுவும் மேற்கூறியபடி எழுதுவோரால் நேர்ந்த பல வழுக்கள் நிறைந்ததே. ஆயினும் அதைக் கொண்டே ஒரு பிரதி செம்மை செய்து இப்போது வெளியிடலாயிற்று" (உண்மை விளக்கம் எனும் சித்தாந்த தீபிகை, 1:1:1897, ப.67) என்கின்றார்.

முதற்பதிப்பும் மறுபதிப்பும்

பருவ இதழ்களில் வெளியான நூல்களின் முதற் பதிப்புகள் அனைத்தையும் பருவ இதழ்ப் பகுதியில் வெளிவந்த அளவிலேயே (size) அமைத்துக்கொண்டு உள்ளனர். பருவ இதழ்ப் பகுதிக்குள் இடம்பெற்றிருக்கும் நூல் பகுதிக்கு மட்டும் தனிப்பக்கவெண் கொடுத்திருக்கின்றனர். இப்பகுதிகளை அச்சிடும்போது இதழ்ப் பகுதிகளை அச்சிடும் எண்ணிக்கையை விடக் கூடுதலாக அச்சிட்டுத் தனியே வைத்துக்கொள்கின்றனர். நூல் பகுதிகள் இதழ்ப் பகுதிகளில் வெளியிட்டு முடிந்தவுடன்,

நூல் பகுதிகள் எல்லாவற்றையும் முறையே ஒன்றாக்கி, இதழ்ப் பகுதியின் இறுதியில் வேறொரு தனிப் பக்கவெண் பெற்று வெளிவந்த முன்னுரை/ஆய்வுரை/பதிப்புரைப் பகுதியை முதலில் வைத்து முகப்பட்டையைத் தனியே அச்சிட்டுத் தனிநூலாக்கும் முறை இருந்து வருகின்றது. இம்முறையை 'OFF PRINT METHOD' என்பர். பருவ இதழ்ச் சுவடிப்பதிப்பு களில் இருந்து வெளிவந்த முதற்பதிப்புகள் எல்லாம் இவ் வகையில் வெளிவந்தவையே ஆகும்.

இந்நூல்களில் சில மறுபதிப்பாக வெளிவரும்போது இதழ்ப் பகுதியின் அளவிலிருந்து மாற்று அளவில் (திம்மி - கிரௌன்; தபுள் திம்மி - திம்மி அல்லது கிரௌன்) கூடுதல் தகவல்களுடன் அச்சிடப்பெற்றுள்ளன. காட்டாக, சரஸ்வதி மகால் நூலகப் பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகள் இவ்வகையில் வெளிவந்திருக்கின்றன. சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ் தபுள் திம்மி அளவில் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக் கின்றது. இந்நூலகப் பருவ இதழ்ச் சுவடிப்பதிப்பின் முதற்பதிப்புகள் 'தபுள் திம்மி' அளவிலேயே வெளிவந்து இருக்கின்றன. இவை மறுபதிப்பாக வெளிவரும்போது நுண்ணாய்வுக்குட்பட்டுத் திம்மி அளவில் வெளிவருகின்றன. நுண்ணாய்வுக்குட்படாத நூல்கள் மீண்டும் தபுள் திம்மி அளவிலேயே வெளிவந்திருக்கின்றன. அதாவது, பருவ இதழ்களில் வெளிவந்து நுண்ணாய்வு செய்யப்பெற்ற நூல்கள் மட்டும் மறுபதிப்பாக வெளிவரும் போது தபுள் திம்மி அளவிலிருந்து திம்மி அளவிற்கு மாற்றம்பெறுகின்றன. காட்டாக, தஞ்சை வெள்ளைப்பிள்ளையார் குறவஞ்சி, திருநெறி விளக்கம், நண்ணாவூர் சங்கமேசுவரசுவாமி வேதநாயகியம்மன் பேரில் விறலிவிடுதூது போன்ற பதிப்புகளைக் குறிப்பிடலாம். நுண்ணாய்வு செய்யப்பெறாத நூல்கள் மறுபதிப்பாக வெளிவரும்போது தபுள் திம்மி அளவிலேயே வெளிவந்திருக் கின்றன. காட்டாக, கமலாலய அம்மன் பிள்ளைத்தமிழ், காஞ்சி மன்னனம்மானை, குயில் ராமாயணம், குருக்ஷேத்திர மாலை, வள்ளலார் பிரபந்தங்கள், முருகர் கதம்பம் போன்ற பதிப்புகளைக் குறிப்பிடலாம்.

திருத்தப் பதிப்பு

திருத்தப் பதிப்புகளும் பருவ இதழ்களில் வெளிவந்திருக்கின்றன. இவ்வகையில் ஞானாமிர்தம், பதிபசுபாசத் தொகை, நாலடியார் - இருவருரைத் திருத்தம் ஆகிய மூன்று நூல்கள் வெளிவந்திருப்பது தெரிகின்றது.

ஔவை சு. துரைசாமிப்பிள்ளையின் விளக்க உரையுடன் 'ஞானாமிர்தம்' எனும் நூல் திருத்தப் பதிப்பாக 1935-38ஆம் ஆண்டு சித்தாந்தம் இதழ்ப் பகுதிகளில் வெளிவந்துள்ளது. இப்பதிப்பு தோன்றுவதற்கான காரணத்தை ஔவை சு. துரைசாமிப்பிள்ளை "1932ஆம் ஆண்டுக் கோடைவிடுமுறைக்கு யான் என் ஊராகிய ஔவையார் குப்பம் சென்றிருந்த போது, வீட்டில் ஒரு மூலையில் கிடந்த ஏடுகளைப் புரட்டிப் பார்க்கலானேன் .... அதன்கண், 'இன்னிசை எழுவர்ப் பயந்தோள் - சுநந்தன் முதலிய எழுவரைப் பெற்றாள்' என்ற உரை இருக்கக் கண்டு, இது ஞானாமிர்தம் என்று அறிந்து அதனைப் படியெடுத்து அச்சுப்பிரதியோடு ஒப்பு நோக்கினேனாக, வேறுபாடுகள் பல் இருப்பது புலனாயிற்று. அது கொண்டு ஞானாமிர்தத்துக்கு விளக்கவுரையொன்று எழுதுவது எனத் துணிந்து, முதற்கண் சில பாட்டுக்கு உரை எழுதிச் சென்னைச் சைவசித்தாந்த சமாஜத்தின் வெளியீடான சித்தாந்தம் என்னும் திங்கள் இதழில் வெளியிட்டேன்" (ஞானாமிர்தம், ப.6) என்கின்றார்.

'பதிபசுபாசத்தொகை' எனும் நூல் பால்வண்ண முதலியாரின் உரையுடன் 1903ஆம் ஆண்டு தனிநூலாகவும், பின்னர் விவேகபாநு இதழில் 1906ஆம் ஆண்டு பருவ இதழ்ப் பதிப்பாகவும் வெளிவந்திருக்கின்றது. இந்நூலைச் சில திருத்தங்களுடன் கே. சோமசுந்தரம் பிள்ளை 1913ஆம் ஆண்டு செந்தமிழ் இதழில் வெளியிட்டுள்ளார்.

'நாலடியார்' பலரின் உரைகளைப் பெற்ற ஒரு நூல். வை.மு. சடகோபராமாநுஜாசாரியார், கிருஷ்ணமாசாரியார் ஆகிய இருவரின் உரைகள் ஆங்காங்கே சில பாடல்களுக்கும்

தொடர் மொழிகளுக்கும் உரிய பொருள் காணப்படாமை யாலும், பிழைபட்ட இலக்கணக் குறிப்புகள், பொருந்தா மேற்கோள்கள், அவசியமில்லாத கதைகள், சொற்பெருக்கம் முதலியன காணப்படாமையால் திருவனந்தபுரம் தமிழ்ப் பண்டிதர் திரு. சத்தியவாகீசுவையர் இவ்விருவர் உரையில் மேற்கொள்ளவேண்டிய திருத்தங்களைத் திருத்திப் புதிய உரையொன்றை உருவாக்கி 1950-52ஆம் ஆண்டு செந்தமிழ் இதழ்ப் பகுதிகளில் வெளியிட்டுள்ளார். இவற்றையெல்லாம் பார்க்கும்போது பருவ இதழ்களில் திருத்தப் பதிப்புகளை வெளியிடும் போக்கு இருப்பதும் தெரிகின்றது.

பல சுவடிப்பதிப்பு

ஒரு நூல் தொடர்பான பல சுவடிகள் கிடைக்கும் போது, ஒவ்வொன்றும் ஒரே மாதிரியாக இருக்க வாய்ப்பில்லை. அவை பாடவேறுபாடுகளுடன் இருப்பதியல்பு. மேலும் கிடைத்த சுவடிகளெல்லாம் நல்ல நிலையிலும் முழுமையாகவும் இருக்கும் என்று சொல்லமுடியாது. ஒரு சுவடியில் உள்ள பகுதி மற்றொன்றில் இல்லாமலும் இருக்கும். ஒரு நூல் தொடர்பான பாடல்களைப் பல பிரதிகளிலிருந்து தேர்ந் தெடுத்தும் பருவ இதழ்ப் பதிப்புகள் வெளிவந்திருக் கின்றன. காட்டாக, சரஸ்வதிமகால் நூலக வெளியீடான 'திருஞான சம்பந்தர் பிள்ளைத்தமிழ்'ப் பதிப்பைச் சுட்டலாம். இந்நூலைப் பதிப்பித்த ம. சீராளன், "சரஸ்வதிமகாலில் திருஞானசம்பந்தர் பிள்ளைத்தமிழ்ச் சுவடிகள் நான்கு உள்ளன. அவற்றின் எண்களாவன:444, 445, 447, 564a. இவற்றில் 447, 564a ஆகிய எண்ணுள்ள இரண்டு சுவடிகளும் மிகச் சிதைந்தும், பூச்சி அரித்தும், ஏடுகள் முறிந்துமுள்ளன. மற்ற இரு சுவடிகளையும் ஒப்பு நோக்கிச் சிறந்த பாடம் கொடுக்கப்பட்டு உள்ளது. அதிக பாடபேதங்கள் ஒப்பு நோக்கையில் தென்பட்டன. 444ஆம் எண்ணுள்ள சுவடியில் சிறுதேர் பருவம் தவிர்த்து ஏனைய ஒன்பது பருவங்களும் உள்ளன. ஆகையால் இப் பருவத்தில் 444ஆம் எண் சுவடியில் உள்ள பாக்களை அப்படியே தந்துள்ளோம். சில பருவங்களில் பாக்கள்

முன்னுக்குப் பின்னாக மாற்றி எழுதப்பட்டுள்ளன. ஆனால் பாக்களில் எவ்வித மாற்றமும் இல்லை" (சரஸ்வதி மகால் நூலகப் பருவ இதழ், 20:1:1966, ப.4) என்கின்றார். இவரின் கூற்றுப்படி இந்நூல் இரு சுவடிகளிலிருந்து தெரிவுசெய்யப் பெற்றது என்பது தெரிகின்றது.

குறைப்பதிப்பு

பருவ இதழில் குறைப்பதிப்பு வெளியிடுவது இயல்பாகி இருக்கின்றது. பெரும்பாலான குறைப்பதிப்புகள் தனிநூலாக வெளிவருவதில்லை. அவை இதழ்களிலேயே முடங்கிவிடு கின்றன. என்றாலும் ஒருசில பாடல்கள் (முன்/பின்/இடை) மட்டும் இல்லாத குறைப்பதிப்புகள் மக்களின் தேவை கருதித் தனிநூலாகவும் வெளிவந்திருக்கின்றன. பருவ இதழ்களில் வெளியான குறைப்பதிப்புகளை உற்று நோக்கும் போது ஒரு பொதுவான கருத்து வெளிப்படுகின்றது. அதாவது, சுவடியை அழிவிலிருந்து காக்கும் பொருட்டுப் பருவ இதழ்களில் குறைப்பதிப்புகள் வெளிவந்திருக்கின்றன என்பது தெரிகிறது.

பருவ இதழ்களில் குறைப்பதிப்புகள் பல வகைகளில் வெளிவந்திருக்கின்றன. அவற்றுள் சில எடுத்துக்காட்டுகளுடன் இங்குச் சுட்டப்பெறுகின்றன. நூல் வெளிவந்து கொண்டிருந்த இதழ் நின்றுவிட்டதன் காரணமாகவும் குறைப்பதிப்புகள் தோன்றியிருக்கின்றன. கோவைத் தமிழ்ச்சங்க வெளியீடான கொங்குமலர் எனும் இதழில் 1936-37ஆம் ஆண்டுப் பகுதிகளில் வெளிவந்த ஆனந்தரங்கன் கோவையை இவ்வகைக்கு எடுத்துக் காட்டாகச் சுட்டலாம். இப்பதிப்பு குறித்து ந. சுப்பிரமணியன், "ந. பலராம ஐயரவர்கள் நூலை நன்கு ஆராய்ந்து அதற்கு ஏற்றதொரு குறிப்புரையும் வரைந்து வைத்தனர். 1920ஆம் ஆண்டிலேயே இந்நூலுக்குக் குறிப்புரை எழுதி முற்றுப் பெற்றுவிட்டதாயினும், இந்நூலை மூலமும் உரையுமாக அச்சிடவேண்டுமென்று ஐயரவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் ஒன்றும் பல காரணங்களால் கைகூடவில்லை. ஐயரவர்கள் 1935ஆம் ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தி னின்றும் விலகிக், கோயமுத்தூரில் ஓய்வு பெற்றுக் கொண்டு

இருந்த காலத்தில் கோவைத் தமிழறிஞர் திரு. இராவ்பகதூர் சி.எம். இராமச்சந்திரன் செட்டியாரவர்கள் இந்நூலைத் தாம் பிரசுரித்து வந்த 'கொங்கு மலர்' என்னும் பத்திரிகை வாயிலாக வெளியிட ஒப்புக்கொண்டார். அவ்வாறு ஏறத்தாழ முதல் நூறு (தவறு - 261 பாடல்கள் வரை வெளிவந்திருக்கின்றன) செய்யுள்கள் வரை வெளிவந்தன. ஆயினும் யார் செய்த தவக்குறைவோ 'கொங்கு மலர்' வெளியீடும் நின்று போயிற்று. அதோடு ஆனந்தரங்கன் கோவைப் பதிப்பும் தற்காலிகமாக நின்றுவிட்டது" (ஆனந்தரங்கன் கோவை, பக்.28-29) என்று குறிப்பிடுகின்றார்.

சிதைந்தும் தொடர்பின்றியும் முறைபிறழ்ந்தும் கிடைத்த சுவடியைக் கொண்டும் பருவ இதழ்ப் பதிப்புகள் வெளிவந்திருக் கின்றன. டி.எஸ். இராமச்சந்திரன் 'அண்ட புராணம்' பதிப்பித்த விதம் பற்றி அந்நூல் முன்னுரையில் குறிப்பிடு கின்றார். அவர், "எனக்குக் கிடைத்த இந்நூலின் பழைய ஏட்டுப் பிரதி சிதைவுற்றுத் தொடர்பற்று முறைபிறழ்ந்து கிடைத்தமையால், அதை ஒய்வு நேரங்களில் பரிசோதிக்கையிற் சில பாடல்கள் பூர்த்தியாக அகப்பட்டன. இவற்றைப் படித்துப் பார்க்கையில் பாடல்கள் பழையனவாகவும், இதில் கூறப்பட்ட விஷயங்கள் தற்கால நிலைமைக் கேற்றனவாகவும், இக் காலத்தில் புதியனவென்றும் பரதேசத்தனவென்றும் நாம் கருதும் பல பொருள்கள் பண்டைக் காலத்தில் இந்நாட்டி லிருந்தனவாகவும் காணப்பட்டமையால், யாவரும் படிக்க விரும்புவாரெனக் கருதி இந்நூலை அச்சிட்டு வெளியிட விரும்பினேன். விரும்பி, இந்நூலின் மற்ற பாகங்களுமடங்கிய முழுப்பிரதி ஏதாவது கிடைக்குமோ வென்று முற்றுத் தேடியும் கிடைக்கவில்லை. ஆகையால் கிடைத்த பகுதிகள் இவற்றை மட்டும் இப்பொழுது இப்பத்திரிகையில் வெளியிடுகின்றேன்" (கலாநிலையம், 2:36:1929, ப.716) என்று கூறுவதிலிருந்து இக்கூற்று மெய்யாகின்றது.

தமக்குக் கிடைத்த சுவடியை முழுதும் பிரதி எழுதுவ தற்குள் வேறொருவர் படிக்க வாங்கிச் சென்று, திரும்பி

வராததால் பிரதி எடுத்த அளவில் பருவ இதழ்க் குறைப் பதிப்புகள் வெளிவந்திருக்கின்றன. காட்டாக, மயிலை. சீனி. வேங்கடசாமி பதிப்பித்த 'அப்பாண்டைநாதர் உலா'வைக் குறிப்பிடலாம். "அப்பாண்டைநாதர் உலா எனும் பெயருள்ள ஏட்டுச் சுவடி ஒன்றை மேல்சித்தாமூர் ஜைன மடத்தினின்றும் கொண்டு வந்து ஜீவபந்து திரு. டி.எஸ். ஸ்ரீபால்ஜெயின் சில காலத்துக்கு முன்பு என்னிடம் கொடுத்தார்கள். அதனைப் படித்துப் பார்த்தபோது, அது சொல் வளமும் பொருள் வளமும் பொதிந்த சிறந்த நூலாகக் காணப்பட்டது. அதனைப் பிரதி எழுத நினைத்து எழுதத் தொடங்கினேன். ஓய்வு கிடைக்காத படியால் சிறு பகுதியை மட்டும் எழுதினேன். இதற்குள்ளாக அவ்வேட்டுச் சுவடியை வேறு ஒரு புலவர் படிக்க விரும்பியபடியால், அச்சுவடியை என்னிடமிருந்து வாங்கிக் கொண்டு போய்விட்டார். அந்தப் பிரதி இன்னும் திரும்பி வராதபடியால் நான் எழுதி வைத்த சிறு பகுதியை மட்டும் இங்கு வெளியிடுகிறேன்" (நல்லறம், 4:1:1961) என்ற அவர்தம் கூற்றால் அப்பாண்டைநாதர் உலா குறைப்பதிப்பானதற்கான காரணம் தெரிகின்றது.

நூல் பதிப்பாசிரியர் இயற்கையெய்தியதாலும் பருவ இதழ்களில் குறைப்பதிப்புகள் வெளிவந்திருக்கின்றன. செந்தமிழ் இதழில் கி. இராமாநுஜையங்காரின் குறிப்புரை யுடன் 'திருக்குறுங்குடி அழகியநம்பி பிள்ளைத்தமிழ்' எனும் நூலில் 1950-51ஆம் ஆண்டுகளில் முதல் 55 பாடல்கள் வெளிவந்திருக்கின்றன. 1951ஆம் ஆண்டு இந்நூலின் பதிப்பாசிரியர் கி. இராமாநுஜையங்கார் இயற்கையெய்தியதின் பிறகு இந்நூல் பதிப்பும் செந்தமிழில் வெளிவருவது நின்றுவிட்டிருக்கின்றது. செந்தமிழில் தனிப் பக்கவெண் பெற்று வெளிவந்த பருவ இதழ்ப் பதிப்புகள் எல்லாம் முழுமையான நூலாகவே இருக்கின்றன. இந்நூலும் செந்தமிழில் தனிப்பக்கவெண் பெற்று வெளிவந்தும் குறைப்பதிப்பாகத் திகழ்கின்றதைக் காணும்போது இந்நூல்

முழுமையும் வெளிவருவதற்கு முன் இப்பதிப்பாசிரியர் இயற்கையெய்திவிட்டமையால் முழுமையான நூலும் குறையுடன் வெளிவந்திருப்பது தெரிகின்றது.

ஒரேயொரு பிரதி மட்டும் குறைவாக இருப்பதால் அதன் தன்மை அழியாதபடி காக்கவேண்டிடச் சுவடியில் உள்ளதை உள்ளபடியே பதிப்பிக்கப்பெற்ற பருவ இதழ்ப் பதிப்புகள் உண்டு. இவ்வகையில், சு. நல்லசிவன் பிள்ளை பதிப்பித்த 'இரணியன்வதைப் பரணி' எனும் பருவ இதழ்ப் பதிப்பைச் சுட்டலாம். அப்பதிப்பின் முன்னுரையில் அவர், "இது மதுரைத் தமிழ்ச்சங்கத்தைச் சார்ந்த பாண்டியன் புத்தகசாலையில் இதுவரை அச்சுக்கு வராத தமிழ் நூல்களுட் பரிசோதிக்கவியலாத ஒரே பிரதியா யேட்டிற் சிதைவடைந் திருப்பதால் அதன் சொரூபமழியாது பாதுகாக்கக் கருதி இருந்தபடியே வெளியிடப்படுகிறது" (செந்தமிழ், *15:1:1916*, ப.*41*) என்று குறிப்பிடுவதால் அறியமுடிகிறது.

இதேபோல் உ.வே. சாமிநாதையர் பதிப்பித்த 'தமிழ்நெறி விளக்கம்' எனும் பதிப்பையும் சுட்டலாம். கலைமகள் - சென்னை இதழில் *1936-37*ஆம் ஆண்டுப் பகுதிகளில் இந்நூல் வெளிவந்திருக்கின்றது. இந்நூல் பதிப்பைக் குறித்து உ.வே. சாமிநாதையர், "இந்நூலின் ஏட்டுப் பிரதியொன்று பல வருஷங்களுக்கு முன், பவானிபோர்டு ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர் ம-ள-ள-ஸ்ரீ குமாரசாமிப் பிள்ளை அவர்களிடமிருந்து கிடைத்தது. இதன் முற்பகுதியும் பிற்பகுதியும் கிடைக்குமோ வென்று பல இடங்களுக்குச் சென்று தேடியும் கிடைக்க வில்லை. இருக்கும் பகுதியும் பயன்படாமற்போமே யென்றஞ்சி இந்த அளவிலேயே இதனை வெளியிட எண்ணிச் சென்ற ஆவணியில் பதிப்பிக்கத் தொடங்கினேன்" (தமிழ்நெறி விளக்கம், முன்னுரை, ப.12) என்று குறிப்பிடுவதிலிருந்து சுவடி அழிந்துபோகும் முன் காக்கவேண்டி குறைப்பதிப்பாக வெளியிடப்பெற்றுள்ளது தெரிகின்றது.

ஒரு நூலின் சில கவிகளை வெளிப்படுத்தி ஏனைய கவிகளைத் தேடும் முயற்சியையும் பருவ இதழ்க் குறைப் பதிப்புகளில் காணலாம். காட்டாக, அ. குமாரசாமிப்பிள்ளை பதிப்பித்த 'கரவை வேலன் கோவை'யைக் குறிப்பிடலாம். அப்பதிப்பின் முன்னுரையில் அவர், "இக்கோவையைத் தேடிப் படிப்பாரும் நாடிக் கேட்பாரும், பாதுகாத்தெழுதி வைப்பாரு மின்மையாற் பழுதடைந்த தமிழ் நாட்டிற் பரந்து நிலைபெறுதல் செல்லாதாயிற்று..... சிதம்பரநாதப் பிள்ளை என்பவர் யாதோ ஒரு பிரதி கிடைக்கப்பெற்றுத் தாமெழுதிக்கொண்ட கவிகள் என்று சிலபல கவிகள் அனுப்பிவைத்தனர். பழுதின்றி முழுது மமைந்த பிரதிகள் அகப்படுமாயின் அச்சிடுவித்து வெளிப்படுத்த விடுவதும் அவர் கருத்து. பிரதிகள் வைத்திருப்பவர்கள், அவர் கருத்துக்குத் துணைபுரிதல் அவசியம் என்பது எமது கருத்து. சில கவிகள் வெளிப்படுமாயின் பிரதிகளினிருக்கையையும் தாரதம்பியங்களையும் வெளிப்படுத்திவிடுதலுங் கூடும். ஆதலின் இடையிடை கவிகளை வெளிப்படுத்தும்" (செந்தமிழ், 8:5:1910) என்று குறிப்பிடுவதால் அறியமுடிகிறது.

பழஞ்சுவடிகள் கிடைத்த அளவிலேனும் பதிப்பித்து நூற்பகுதிகளைக் காக்கவேண்டும் என்ற நோக்கத்திலும் பருவ இதழ்க் குறைப்பதிப்புகள் வெளிவந்திருக்கின்றன. உ.வே. சாமிநாதையரின் குறிப்புரையுடன் 'திருக்காளத்தி இட்டகாமிய மாலை' எனும் குறைச்சுவடி கலைமகள் இதழில் 1938ஆம் ஆண்டு வெளிவந்திருக்கின்றது. "இந்நூலின் ஏட்டுப்பிரதி ஒன்று காளத்தியிலிருந்த சைவர் ஒருவரிடமிருந்து எனக்குக் கிடைத்தது. இதில் காப்புச் செய்யுளும் அதன்பின் 49ஆம் செய்யுள் வரையுள்ள செய்யுட்களும் காணப்பட்டன. அவற்றுள்ளும் 32, 33, 34 என்னும் மூன்று செய்யுட்கள் உள்ள ஏடு கிடைக்கவில்லை. பழந்தமிழ்ச் செய்யுட்களைக் கிடைத்த வரையிலேனும் வெளிப்படுத்தவேண்டும் என்னும் எண்ணத்தி னால் இந்நூலைக் கலைமகள் வாயிலாக வெளியிடலானேன்" (கலைமகள், முன்னுரை, 14:83:1938) என்று உ.வே. சாமிநாதையர் குறிப்பிடுவதால் இந்நூலின் பதிப்புத் தன்மை வெளிப்படுகின்றது.

செப்பஞ் செய்ய இயலாத குறைச்சுவடிகளையும் முடிந்த வரை செப்பனிட்ட பருவ இதழ்ப் பதிப்புகள் வெளிவந்திருக் கின்றன. காட்டாக, சம்பந்தன் பதிப்பித்த 'களவியற்றுறை விளக்கம்' பதிப்பைச் சுட்டலாம். இப்பதிப்பின் முன்னுரையில் அவர், "இதன்கண் நூலின் முதலும் இறுதியும் காணப்பட வில்லை. அன்றியும் வாசிப்போர் பயனடையக் கூடாத வண்ணம் பிழைபொதிந்தும் இதழ்கள் முறைபிறழ்ந்தும் செய்யுட்களும் வாக்கியத் தொடர்களும் மறைந்து போய்விட்டன. எனவே, எத்துணை முயன்றாலும் முழுவதும் இதனைச் செப்பஞ்செய்தல் இயலாததொன்றாகும். ஆயினும் கிடைத்த நூற்பகுதி மிகவும் பயன்படக் கூடியதாயிருத்தலின் ஒருவாறு செப்பஞ்செய்து இப்போது வெளியிடப்பெறுகின்றது" (கலாநிலையம், **4:38:1931**, ப.**754**) என்று குறிப்பிடுவதால் அறியமுடிகிறது.

கிடைத்த ஒரு குறைப்பிரதியும் அழிந்து போகாமல் இருத்தலின் பொருட்டும் பருவ இதழ்ப் பதிப்புகள் வெளிவந் திருக்கின்றன. காட்டாக, திருவாரூர் எஸ். சோமசுந்தர தேசிகர் பதிப்பித்த 'கீழ்வேளூர் உலா'வைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். இப்பதிப்பின் முன்னுரையில் அவர், "இவ்வுலா நூல் முழுதும் கிடைப்பதரிவதோடு இருக்கும் பிரதிகளும் இறக்கவாரம் பிக்கின்றன. அவ்வாறு சிதைந்து போகாமலிருத்தற் பொருட்டு அரிவைப் பருவத்தில் ஒரு பகுதியோடு நிற்கும் இக்குறை நூலைச் செந்தமிழ் மூலமாக வெளியிடுகின்றேன்" (செந்தமிழ், **24:6:1926**, ப.**225**) என்று குறிப்பிடுவதால் அறியமுடிகிறது.

சில பாடல்களில் சொற்கள் பிழைபடவும், சில அடிகளில் எழுத்துக்கள் கூடவும் குறையவும் தளையோசை சிதையவும், சில அடிகளும் தொடர்களும் சிதைந்தனவும் ஆகிய பருவ இதழ்க் குறைப்பதிப்புகள் வெளிவந்திருக்கின்றன. காட்டாக, செந்தமிழில் வெளியான 'பாண்டி மண்டல சதகம்' எனும் பருவ இதழ்க் குறைப்பதிப்பைச் சுட்டலாம். இவ்விதழ்ப் பதிப்பாசிரியர் இந்நூல் பதிப்பான நிலையை "இதில் விஷயங்கள் முறைபெறக் கோக்கப்படவில்லை. இடையிடையே சில பாடல்களிற் சொற்கள் பிழைபடப் பிரயோகிக்கப்பட்டுள்ளன.

சிற்சில அடிகளில் எழுத்துக்கள் கூடவும் குறையவும் தளை யோசை சிதையவும் எழுதப்பட்டிருக்கிறது. சில பாடல்களில் சில அடிகளும் தொடர்களும் சிதைந்து குறைந்துள்ளன. ஆயினும், தமிழ் மண்டலத்திற் சிறந்த நம் பாண்டி மண்டல வைபவத்தைப் பாராட்டுதலால் இதிலுள்ள விஷயங்களிலொரு சில ஆராய்ச்சிக்குபயோகமாகு மென்றெண்ணி இதிலிருந்து தெளிவான பாடல்களே ஏட்டிலுள்ளபடி இங்கு வெளியிடப் படுகின்றன" (செந்தமிழ், 19:8:1921, ப.257) என்கின்றார்.

பதிப்பாசிரியரின் பதிப்பு முறையாலும், பருவ இதழ்க் குறைப்பதிப்புகள் வெளிவந்திருக்கின்றன. அதாவது, சுவடியிலுள்ள பாடல்களில் சில மக்களின் பொதுவாழ்வுக்குப் பயன்படாது என்று கருதியதால் அச்சிலபல பாடல்களை விடுத்துப் பருவ இதழ்க் குறைப்பதிப்புகள் வெளிவந்திருக் கின்றன. காட்டாக, வ.ரா. கல்யாணசுந்தரம் பதிப்பித்த 'பூதர விலாசம்' எனும் பருவ இதழ்க் குறைப்பதிப்பைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். இப்பதிப்பின் முன்னுரையில் அவர், "நூலினிறுதியிற் காணுஞ் செய்யுட்களுள் சில கலவியை மிகைப்படுத்திக் கூறுவதால், அவை வெளியிடத்தக்கன வல்ல வென விலக்கப்பட்டிருக்கின்றன. மிகுதியான செய்யுட்களே ஈண்டு தொடரெண் கொடுக்கப்பட்டு அச்சிடப்பட்டுள்ளன" (அரசினர் கீழ்த்திஸைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 1:1:1948) என்று குறிப்பிடுவதால் அறியமுடிகிறது.

நூலின் தொடக்கத்தில் சிலபல ஏடுகள் இல்லாத போது கிடைத்த பகுதியிலிருந்து பதிப்பிப்பதே முறை. ஆனால் மூலநூல் பகுதி பகுதியாக இருக்கும் போது குறைவான முதல் பகுதியை முதலில் பதிப்பிக்காமல் முழுதும் உள்ள இரண்டாம் பகுதியை முதலிலும் குறைப்பகுதியை அவற்றின் இறுதியிலும் பதிப்பித்துள்ள போக்கு பருவ இதழ்க் குறைப்பதிப்பில் காணலாம். காட்டாக, மு. சண்முகம்பிள்ளை பதிப்பித்த 'மெய்ம்மொழிச் சரிதை - பரபக்கம், சுபக்கம்' எனும் நூல் பதிப்பான நிலையைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். இப்பதிப்பு அமைந்த விதம் குறித்து பதிப்பாசிரியர், "மெய்ம்மொழிச்

சரிதை - பரபக்கம், சுபக்கம் என்னும் இருபெரும் பகுதியதாய் மொத்தம் 485 பாடல்களைக் கொண்டுள்ளது. பரபக்கத்தின் முற்பகுதிக்கும், இடையிற் சில பகுதிகளுக்கும் உரிய ஏடுகள் சிதைந்துவிட்டன. இதன் மூன்றிலொரு பகுதி அழிந்து போயிற்று; அதனை அறிவதற்கு வேறு ஏடு எதுவும் கிட்டவும் இல்லை. ஆனால் சுபக்கப் பகுதி முழுமையாயுள்ளது. எனவே இந்தப் பதிப்பில் சுபக்கப் பகுதி முதற்கண் தந்து நூலின் முற்பகுதியாய் அமைந்த சிதைவுற்ற பரபக்கப் பகுதியைப் பின்னிணைப்பாகச் சேர்த்துள்ளேன்" (தமிழாய்வு, 6:1977) என்று குறிப்பிடுவதால் அறியமுடிகிறது.

இதுவரை வெளிவராத நூல் என்று கருதி அதற்கு உரையும் எழுதி பருவ இதழில் வெளியிட்டு வரும்போது ஏற்கெனவே அந்நூல் அச்சிடப்பெற்று இருப்பதை அறிந்ததும் இவ்விதழ்ப் பதிப்பு நிறுத்தப்பட்டிருக்கின்றது. இதனாலும் பருவ இதழ்களில் குறைப்பதிப்புகள் தோன்றியிருக்கின்றன. இவ்வகையில் வே.ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் தம்முடைய உரையுடன் மூலமும் உரையுமாக 'சித்தாந்தம்' இதழில் 1971ஆம் ஆண்டு முதல் தணிகை வெண்பா வெளிவந் திருப்பதும், இது இடையில் நிறுத்தப்பெற்றிருக்கின்றது என்பதும் அறியமுடிகிறது. இப்பதிப்பினைக் குறித்து மு. சண்முகம் பிள்ளை "தணிகை வெண்பாவின் உரையுடன் கூடிய ஏடு, 88 வேலம்பாளையம் பெரும்புலவர் வே.ரா. தெய்வ சிகாமணிக் கவுண்டர் அவர்கள் தொகுத்த சுவடிகளுள் ஒன்றாகும். இந்த நூலையும் உரையையும் வாசித்து மகிழ்ந்த புலவரவர்கள் ஒரு சிறப்புக் கட்டுரையைச் சைவசித்தாந்த மகாசமாஜம் நடத்திவரும் 'சித்தாந்தம்' பத்திரிகையில் வெளியிட்டார்கள் (1970, சித்தாந்தம், மலர் 43, இதழ் 6, ப.168). அதனைப் படித்து மகிழ்ந்த அன்பர்கள் நூலையும் உரையையும் சித்தாந்தத்தில் முழுமையாய் வெளியிட விரும்பிக் கேட்டுக் கொண்டனர். சமாஜ அன்பர்களின் விருப்பத்திற்கு இணங்கப் பெரும்புலவர் வே.ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் அவர்கள் ஏடு பார்த்து எழுதிச் சித்தாந்தத்தில் தொடர்ந்து வெளியிட்டு வரலானார்கள் (1971, மலர் 44, இதழ் 7, ப.183

முதல் இதழ் 11, ப.312 வரை) முதல் 55 பாடல்கள் வரை இப்பத்திரிகையில் வெளியாகியுள்ளது. காஞ்சிபுரத்திலிருந்த சிவசாமி தேசிகர் இந்நூல் ஏற்கெனவே அச்சாகியிருப்பதாகச் சமாஜத்திற்குத் தெரிவித்திருந்த கடிதச் செய்தி புலவர் அவர்களின் காதுக்கு எட்டியது. அதன் பின் தொடர்ந்து பிரதி எழுதுவதில் பெரும்புலவர் அவர்கள் ஊக்கம் கொள்ளவில்லை. ஆகவே, சித்தாந்தத்தில் தொடர்ந்து இந்நூலை வெளியிட வில்லை'' (தணிகை வெண்பா, 1980, முகவுரை) என்று குறிப்பிடுவதால் அறியமுடிகிறது.

சொற்சுவை, பொருட்சுவை, சந்த அமைப்பு, இனிய நடை போன்றவை சிறப்புறப் பெற்றிருந்தும் சுவடி முழுமை யாகக் கிடைக்காத நிலையில் முழுச் சுவடியைத் தேடும் முயற்சியாகவும் பருவ இதழ்க் குறைப்பதிப்புகள் வெளிவந்திருக் கின்றன. காட்டாக, இராமாநுஜையங்கார் பதிப்பித்த 'ஆழ்வார் பிள்ளைத்தமிழ்' எனும் பருவ இதழ்க் குறைப்பதிப்பைச் சுட்டலாம். இப்பதிப்பின் முன்னுரையில் அவர், "இந்நூற் செய்யுட்களிற் சில (23 பாடல்கள்) எனக்குக் கிடைத்தன. அவை பக்திச் சுவையைப் பெருக்குவனவாகவும், இலக்கியங் கற்கப் புகுவார்க்குப் பெரிதும் பயன்படத்தக்கனவாகவும், செய்யுள் செய்யுந் திறத்தை யுண்டாக்குவனவாகவும், இனிய நடையில் இயற்றப்பட்டனவாகவும் விளங்குகின்றன. ஒவ்வொரு செய்யுளும் அழகர் பிள்ளைத்தமிழே போல வெவ்வேறு சந்தச் சுவைபெறப் பாடப்பட்டுள்ளது. இச்செய்யுட்கள் எனக்குக் கிடைத்தபடியே பதிப்பிக்கப் பெற்றுள்ளன. இதிற் காணப்படும் பிழைகளைத் திருத்திக் கொள்ளும்படி அறிஞர்களை வேண்டுகிறேன். இந்நூலின் எஞ்சிய பாகமுள்ள ஏட்டுச் சுவடிகள் வைத்திருப்போர் அவற்றைக் கொடுத்துதவுவார்க ளாயின் இயன்றவரை திருத்திச் செந்தமிழிற் புத்தகமாக வெளியிடற்குபகாரமாகும்'' (செந்தமிழ், 19:1:1920, ப.9) என்று குறிப்பிடுவதால் அறிய முடிகிறது.

பக்கவெண் அமைப்பு

பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகள் ஒரே இதழ்ப் பகுதியிலும் ஒன்றுக்கும் மேற்பட்ட இதழ்ப் பகுதிகளிலும்

வெளிவந்திருக்கின்றன. இப்பதிப்புகள் இரண்டு வகையான பக்கவெண் அமைப்புகளைப் பெற்றுள்ளன. அவை, தனிப் பக்கவெண் அமைப்பு, தொடர் பக்கவெண் அமைப்பு ஆகியவை யாகும்.

அ. தனிப்பக்கவெண் அமைப்பு

தனிப்பக்கவெண் பெற்று வெளிவரும் பருவ இதழ்ச் சுவடிப்பதிப்பானது நூல் வெளிவரும் காலத்திலேயே தனி நூலாக்கும் நோக்கத்துடன் வெளிவந்தவையாகும். இதனை ஞானசம்பந்தம் இதழாசிரியர் தெளிவுபடுத்துகிறார். அதாவது, "திருவாரூர் மும்மணிக்கோவை, கோவை பெரியபுராண விரிவுரையாசிரியர் சிவக்கவிமணி திரு.சி.கே. சுப்பிரமணிய முதலியார் அவர்க்ள் எழுதிய விரிவுரையுடன் இவ்விதழில் தொடங்கி வெளிவருகிறது. தனிநூலாகத் தொகுத்துக் கொள்வதற்கு ஏற்ற முறையில் தனிப்பக்கவெண் கொடுத்து வெளியிடப்படுகிறது" (ஞானசம்பந்தம், 8:11:1949, ப.378) என்பர். இத்தனிப்பக்கவெண்கள் 4, 8, 12, 16, 20 போன்ற அளவில் பக்கங்களைப் பெற்றிருக்கும். ஏனெனில் அச்சுக்கலை தோன்றிய நாள்தொட்டு அச்சு எந்திரங்களில் நான்கு அல்லது நான்கின் மடங்குப் பக்கங்களை அச்சிடும் வசதியே இருந்து கொண்டிருக்கிறது. எனவே, தனிப்பக்கவெண் பெற்ற பதிப்புகள் ஒன்றுக்கும் மேற்பட்ட இதழ்ப் பகுதிகளில் வெளிவரும் போது 4, 8, 12, 16, 20 ஆகிய பக்க அளவுகள் முறையே 1-4, 5-8, 9-12, 13-16, 17-20 என்ற பக்கவெண்களில் வெளியிடப் பெற்றிருக்கும்.

இவ்வாறு தனிப்பக்கவெண் பெற்றுள்ள பகுதிகள் இதழின் இடையிலோ இறுதியிலோ இணைக்கப்பெற்று இருக்கும். 4, 8, 12, 16, 20 ஆகிய பக்கங்களின் இறுதியில் இடம்பெற்றிருக்கும் பாடலோ, தொடரோ முற்றுப் பெறவில்லை என்றாலும் அச்சு கோர்த்த அதே நிலையில் நிறுத்தித் 'தொடரும்' போட்டு நிறுத்திவிடுவர். அடுத்த இதழ்ப் பகுதி விட்ட இடத்திலிருந்து தொடரப்பெற்றிருக்கும். காட்டாக, சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ்ப் பகுதி 24, எண் 3இல்

'சரப புராணம்' நான்காவது அறிவுறுத்திய சருக்கத்தின் 20ஆவது பாடலின் முதலிரண்டடிகள் பதிப்பாகி இருக்கின்றன. இப்பாடலின் பின்னிரண்டடிகள் இவ்விதழ்ப் பகுதி 26, எண் 1இல் பதிப்பாகியிருக்கின்றன. அப்பாடல் பின்வருமாறு:

"சலச யோனியு மிந்திரா திபர்களுந்
நிலைய னின்றிடச் செய்தலென் செயலென நினைதி
யலகி லாவவர்க் குயர்ச்சியு ஞானமு மருளி
விலகு வித்தலென் கடனென மெய்மையாக் கோடி"

எனும் பாடல் இரு இதழ்கள் வழி நிறைவுறுகின்றதைப் பார்க்கமுடிகிறது. இதேபோல் ஒரே இதழ்ப் பகுதியில் ஒன்றுக்கும் மேற்பட்ட சுவடிப்பதிப்புகளும் இம்முறையில் இடம்பெறுதலுண்டு. இதழ்களில் தனிப்பக்கவெண் பெற்று வெளிவந்த பதிப்புகள் பெரும்பாலும் 'OFF PRINT' முறையில் தனிநூலாக்கம் பெற்றிருக்கின்றன.

தனிப்பக்கவெண் பெற்று இதழ்ப் பகுதிக்குள் வெளிவருவதைப்போல், தனிப்பக்கவெண் பெற்று அனுபந்தமாகவும் வெளிவந்திருக்கின்றது. இவ் அனுபந்தப் பகுதியானது இதழின் இறுதியிலோ தனித்தோ இடம்பெற்றிருக்கும். இதழின் அளவிற்கும் சற்றுக் குறைவான அளவிலும் இவை அச்சாகி இருக்கின்றன. மேலும், ஓர் இதழோடும், ஒன்றுக்கும் மேற்பட்ட இதழ்களுக்கும் விரவி வருவதையும், 16 பக்க அளவுடையதாகவும் இருக்கின்றன. கலைமகள் இதழில் வெளிவந்த பதிப்புகள் எல்லாம் இவ்வகையில் வெளிவந்தவையேயாகும்.

தனிநூலாக்க முடியாத சிறுசிறு நூல்களின் திரட்டுகளும் தொகுப்புகளும் கூடப் பருவ இதழ்களில் தனிப்பக்கவெண் பெற்று, பின்னாளில் தனிநூலாக்கம் பெற்றுள்ளன. இத்திரட்டு/தொகுப்பானது ஆசிரியர் பெயர் முறையிலோ நூற்பொருள் முறையிலோ அமைந்திருக்கும். இவ்வகையில் வள்ளலார் பிரபந்தங்கள், முருகர் சுதம்பம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

ஆ. தொடர் பக்கவெண் அமைப்பு

இதழின் தொடர் பக்கவெண்ணைப் பெற்று வரும் சுவடிப்பதிப்புகள் 'OFF PRINT' முறையில் தனிநூலாக்கம் பெறவில்லை. இவை அளவில் சிறு/குறை நூலாக இருக்கும். இந்நூல்கள் இதழளவில் அறிமுகமாகி இதழிலேயே இருக்கக் கூடியனவை. இந்நூற் சுவடிகள் அழிந்ததன் பிறகு மறைந்திருக்கும் நூல்களில் ஒன்றாகப் பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகள் விளங்குகின்றன. தொடர் பக்கவெண் பெற்ற சில நூல்கள் தனி வெளியீடாகவும் வெளிவந்திருக்கின்றன. இவ்வகையில் அருள்முறைத் திரட்டு, ஆனந்தரங்கன் கோவை, கருணாம்பிகை யமக அந்தாதி, திருவானைக்காவுலா போன்றவற்றைக் குறிப்பிடலாம். ஆகத் தொடர் பக்கவெண் பெற்ற இதழ்ப் பதிப்புகள் 'OFF PRINT' முறையில் தனிநூலாக வெளிவரவில்லை. என்றாலும் மறுபதிப்பால் தனிநூலாக வெளிவந்திருக்கின்றன என்று கூறலாம். திரட்டு/தொகுப்பு நூல்களும் தொடர் பக்கவெண் அமைப்பு முறையில் வெளிவந்திருக்கின்றன. இவ்வகையில் திருப்புல்லாணி எம்பெருமான் மீது பாடிய சிறு பிரபந்தங்கள், நம்மாழ்வார் பிரபந்தங்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

திரட்டு - தொகுப்பு

ஒருபொருள் குறித்தனவும், ஓரிடம் குறித்தனவும், ஓராசிரியர் குறித்தனவும், ஓராசிரியர் எழுதியனவும் எனப் பல்வேறு உரை/மேற்கோள்களில் இருப்பனவற்றையெல்லாம் ஒன்று கூட்டுவதைத் 'திரட்டு' என்றும், ஒருபொருள் குறித்தனவும், ஓரிடம் குறித்தனவும், ஓராசிரியர் குறித்தனவும், ஓராசிரியர் எழுதியனவும் ஆகிய நூல்களையெல்லாம் ஒன்று கூட்டுவதைத் 'தொகுப்பு' என்றும் கூறலாம். பருவ இதழ்ச் சுவடிப்பதிப்பு களில் திரட்டும் தொகுப்பும் ஆகிய இரண்டு நிலைகளில் நூல்கள் வெளிவந்திருக்கின்றன.

திரட்டு நிலையில் அசதிக்கோவை, ஆசிரியமாலைச் செய்யுட்கள், திருமலை வெண்பா, பெருந்தொகை,

பெரும்பொருள் விளக்கப் பாடல்கள், முத்தொள்ளாயிரச் செய்யுட்கள், வளையாபதிச் செய்யுட்கள் ஆகியவையும், தொகுப்பு நிலையில் திருப்புல்லாணி எம்பெருமான் மீது பாடிய சிறுபிரபந்தங்கள் (சிளைப்பாட்டு, தாலாட்டு, திருவனந்தல், நலங்கு), நம்மாழ்வார் பிரபந்தங்கள் (திருக்கோலக்கவி, ஆழ்வார் திருவனந்தல், நம்மாழ்வார் பதம்), வள்ளலார் பிரபந்தங்கள் (ஞானசாரம், தத்துவ விளக்கம், திருநெறி விளக்கம்), முருகர் கதம்பம் (வருமுருகாற்றுப்படை, கதிர்காம வேலவன் தோத்திரம், செந்தில் வேலவன் தோத்திரம், பழனி வேலவன் தோத்திரம், பழனி மாலை, கந்தர் காதல், திருச்செங்கோட் டகவல்), இராமானந்தத் திரட்டு (சூரிய மூர்த்தி பதிகம், சைவ சமயம், சாத்தேய சமயம், காணாபத்திய சமயம், வைணவ சமயம், விநாயகர் பதிகம், மெய்ஞ்ஞானக் காதல், பஞ்சகம், கௌமார சமயம், பதிக அந்தாதி, பிடித்த பதிகம், சற்குரு பதிகம், சற்குரு அந்தாதி மாலை, சந்தப்பதிகம், தயாநிதிக் கண்ணி, அடைக்கலப் பதிகம், பெரியோர் வணக்கம், குருகீத ரசம், சபரிமலை ஐயப்பசாமி பதிகம், சண்முகமாலை) ஆகியவையும் வெளிவந்திருக்கின்றன.

இத்திரட்டு/தொகுப்பு நூல்கள் முதன்முதலில் பருவ இதழ்களில்தான் வெளிவந்திருக்கின்றன. இவற்றில் சில நூல்கள் தனிநூலாக்கமும் பெற்றுள்ளன. சில இன்னும் இதழ்களிலேயே இருக்கின்றன எனலாம்.

பருவ இதழ்ச் சுவடிப்பதிப்பு நெறிமுறைகள்

பருவ இதழ்களில் வெளிவ்ந்த சுவடிப்பதிப்புகளின் நெறிமுறைகளை ஆறு வகையான பருவ இதழ்களுக்கும் தனித்தனியே அமைத்துக் காணலாம். அதாவது, தனியார் பதிப்பு நெறிமுறை, தமிழ்ச்சங்கப் பதிப்பு நெறிமுறை, சுவடிநூலகப் பதிப்பு நெறிமுறை, ஆதீனப் பதிப்பு நெறிமுறை, நிறுவனப் பதிப்பு நெறிமுறை, பல்கலைக்கழகப் பதிப்பு நெறிமுறை எனப் பருவ இதழ்ப் பதிப்பு நெறிமுறைகளை வகைப்படுத்தலாம்.

தனியார் பதிப்பு நெறிமுறைகள்

தனியார் பருவ இதழ்களில் வெளிவந்த சுவடிப் பதிப்புகளை நோக்கும் போது அவற்றிற்கான நெறிமுறைகள் தெரிகின்றன. அவை,

- பெரும்பான்மை முழுமையான சுவடிகளை வெளியிடுவது.
- தனியார் பருவ இதழ்களில் வெளிவந்த சுவடிப் பதிப்புகள் அவர்களாலேயே தனிநூலாக்கப் பெற வில்லை. என்றாலும், இத்தனியார் பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகளை ஆதாரமாகக் கொண்டு பிறிதொரு வராலோ பிறிதோர் அமைப்பாலோ தனிநூற்பதிப்பு களாக வெளியிட அனுமதிப்பது.
- எத்தரத்தினரிடமிருந்தும் எவ்வகையிலேனும் கிடைத்த சுவடியைக் கொண்டு வெளியிடுவது.
- பெரும்பான்மை மூலப்பதிப்புகளாகவே வெளியிடுவது.
- மூலமும் உரையும், மூலமும் குறிப்பும் கொண்டவை முழுச்சுவடிகளாகத் திகழ மூலப்பதிப்பு மட்டும் சில குறைப்பதிப்புகளாக வெளியிடுவது.
- சிவநேசன் தவிர்த்த ஏனைய தனியார் பருவ இதழ்ப் பதிப்புகளுக்கு முன்னுரை இல்லாதிருப்பது.
- தனிப்பக்க எண் எப்பதிப்பும் பெறாதிருப்பது.
- இவர்களின் பதிப்புகளை மட்டும்தான் வெளியிடுவது என்ற வரன்முறை இல்லாமல் தமிழறிஞர் யாவரின் சுவடிப்பதிப்புகளையும் வெளியிடுவது.
- பொதுவாகச் சிறு நூல்களை மட்டும் வெளியிடுவது.
- இன்ன பொருண்மை என்ற வரன்முறையில்லாமல் அனைத்துப் பொருண்மைகளிலும் வெளியிடுவது.

- நல்ல நிலையில் உள்ள சுவடிகளை மட்டும் வெளியிடுவது.
- ஒப்பீடு செய்யாத சுவடிப்பதிப்புகளை வெளியிடுவது

போன்ற தனியார் பருவ இதழ்ப் பதிப்பு நெறிமுறைகளைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

தமிழ்ச் சங்கப் பதிப்பு நெறிமுறைகள்

தமிழ்ச் சங்கப் பருவ இதழ்களில் வெளிவந்த சுவடிப் பதிப்புகளை நோக்கும் போது அவற்றிற்கான நெறிமுறைகள் தெரிகின்றன. அவை,

- அழிந்துபோகும் நிலையிலுள்ள முழுமை/குறைச் சுவடிகளை அச்சேற்றுவது.
- முறிந்த, சிதைந்த, விடுபட்ட, செல்லறித்த, ஒடிந்த மற்றும் பயன்பாட்டில் இல்லாத சுவடிகளை அச்சேற்றுவது.
- ஒருமுறை அச்சான பிறகும் அதன் தெளிவு கருதி, மீண்டும் திருத்தப் பதிப்பாக வெளியிடுவது.
- ஒரு நூல் தொடர்பான பாடல்களைப் பல்வேறு உரை/மேற்கோள்களில் இருந்து திரட்டும் தொகுப்பும் செய்து வெளியிடுவது.
- தனி நூலாக்குவதற்கு முன் இதழ்வழி வெளிப்படுத்துவது.
- நாடுவாரும் கேட்பாரும் அற்றுக் கிடந்த நூல் களைத் தமிழுலகிற்கு அறிமுகப்படுத்துவது.
- முன்னுரை/பதிப்புரை/ஆய்வுரை ஆகியன நூற் பதிப்பின் இறுதியில் தனியானதொரு பக்க எண்ணுடன் வெளியிடுவது.
- தங்களிடமுள்ள சுவடிகளுடன் எங்கெல்லாம் சுவடிகள் கிடைக்கின்றதோ அங்கெல்லாம் சென்று சுவடிகளைப் பெற்றுச் செம்பதிப்பாக வெளியிடுவது.

- தமிழறிஞர்களே பதிப்பாசிரியர்களாக இருந்து பதிப்பிப்பது.
- சிறுநூல், பெருநூல் என்ற பாகுபாடு காட்டா திருப்பது.

போன்ற தமிழ்ச் சங்கப் பருவ இதழ்ப் பதிப்பு நெறிமுறைகளைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

சுவடிநூலகப் பதிப்பு நெறிமுறைகள்

சுவடிநூலகப் பருவ இதழ்களில் வெளிவந்த சுவடிப்பதிப்புகளை நோக்கும்போது அவற்றிற்கான நெறிமுறைகள் தெரிகின்றன. அவை,

- முழுமையான சுவடிகளை வெளியிடுவது.
- சில நூல்கள் பதிப்பாவதற்கு முன்னரே தகவல் தொடர்பு கருவிகளின் மூலம் மக்களுக்கு அறிமுகம் செய்வது.
- அந்தந்த நூலகச் சுவடிகளை மட்டும் பதிப்புக்கு எடுத்துக்கொள்வது.
- அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ்ப் பதிப்பின் முன்னுரைகள் சுருக்கமாக ஆங்கிலம், தமிழ் ஆகியவற்றில் நூலின் தொடக்கத்திலேயே அமைப்பது.
- சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ்ப் பதிப்பின் முன்னுரைகள் ஒன்றுக்கும் மேற்பட்ட இதழ்களில் வெளிவரும்போது நூலின் இறுதிப் பகுதியை அடுத்தும், ஒரே இதழில் நூல் முற்றுப்பெறும் போது நூலின் முதலிலும் அமைப்பது.
- அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ்ப் பதிப்புகளின் (பிரபந்த மரபியல் தவிர) முன்னுரைகள் சுருக்கமாகவும், சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ்ப் பதிப்புகளில் தனிநூலாக்கம்

பெற்ற பதிப்புகளுக்கான முன்னுரைகள் பெரும்பாலும் விரிவாகவும் அமைப்பது.

- அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ்ப் பதிப்புகள் பெரும்பாலும் ஒரே இதழ்ப் பகுதியில் பதிப்பாகியிருக்க, சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ்ப் பதிப்புகள் பெரும்பாலும் பல இதழ்ப் பகுதிகளில் பதிப்பாகியிருப்பது.
- சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ்ப் பதிப்புகள் ஆஃப்பிரிண்ட்டியில் தனிநூலாக வெளியிடுவது.
- அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ்ப் பதிப்புகள் அந்நூலகத் தனிநூலாக வெளியிடாதது.
- அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழில் வெளிவந்த சுவடிப்பதிப்புகளைப் பிறர் பதிப்புரிமை பெற்று இதழ்களிலும் தனிநூலாகவும் வெளியிட அனுமதிப்பது.
- நாடுவாரும் கேட்பாரும் அற்றுக்கிடந்த சுவடிகளை வெளியிடுவது.
- சிறு நூல், பெருநூல் என்ற பாகுபாடு காட்டாதிருப்பது

போன்ற சுவடிநூலகப் பருவ இதழ்ப் பதிப்பு நெறிமுறைகளைக் குறிப்பிட்டுச் சொல்லாம்.

ஆதீனப் பதிப்பு நெறிமுறைகள்

ஆதீனப் பருவ இதழ்களில் வெளிவந்த சுவடிப் பதிப்புகளை நோக்கும் போது அவற்றிற்கான நெறிமுறைகள் தெரிகின்றன. அவை,

- பெரும்பான்மை முழுமையான சுவடிகளை வெளியிடுவது.
- மூலச்சுவடிப்பதிப்புகளுக்கு இணையாக உரைப் பதிப்புகள் அமைந்திருப்பது.

- சிறுநூல், பெருநூல் என்ற பாகுபாடு காட்டா திருப்பது.
- இதழ் சார்ந்த சமயப் பொருண்மை மட்டும் வெளியிடுவது.
- பதிப்புரிமை பெற்ற பதிப்புகளை வெளியிடுவது.
- தங்களிடமுள்ள சுவடிகளல்லாமல் பல்வேறு இடங்களிலும் கிடைக்கக்கூடிய சுவடிகளைப் பெற்று வெளியிடுவது.
- தனிநூற்பதிப்பாக்கும் எண்ணத்தில் வெளியிடும் பருவ இதழ்ப் பதிப்புகள் மட்டும் தனிப்பக்கவெண் இட்டு வெளியிடுவது.
- தனிப்பக்கவெண் பெறாத பருவ இதழ்ச் சுவடிப் பதிப்பு மறு அச்சால் அவ்வாதீன தனிநூற் பதிப்பாக வெளியிடுவது.
- சுவடிப்பதிப்புகளை வெளியிட்ட ஆதீனப் பருவ இதழ்களைத் திம்மி அளவில் அமைப்பது.
- தனக்கெனச் சில ஆதீனங்கள் சுவடி நூலகங்களை வைத்திருந்தாலும் ஒப்பீட்டிற்காகப் பல்வேறு இடங்களுக்கும் சென்று அங்கங்கு இருக்கக் கூடிய சுவடிகளை ஆய்ந்து திருத்தப் பதிப்பாக வெளியிடுவது

போன்ற ஆதீனப் பருவ இதழ்ப் பதிப்பு நெறிமுறைகளைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

நிறுவனப் பதிப்பு நெறிமுறைகள்

நிறுவனப் பருவ இதழ்களில் வெளிவந்த சுவடிப் பதிப்புகளை நோக்கும் போது அவற்றிற்கான பதிப்பு நெறிமுறைகள் தெரிகின்றன. அவை,

- பெரும்பான்மை முழுமையான சுவடிகளை வெளியிடுவது.
- கலைமகள் தவிர்த்த ஏனைய பருவ இதழ்களில் வெளிவந்த சுவடிப்பதிப்புகள் அவ்வவ் நிறுவனப் பதிப்பாக வெளிவராதிருப்பது.
- கலைமகள் இதழ் மட்டும் அனுபந்தப் பகுதியாகத் தனிநூற் சுவடிப்பதிப்புகளைத் தனிப்பக்க எண்ணுடன் வெளியிட, ஏனைய பருவ இதழ்கள் இதழ்ப் பகுதிக்குள் இதழ்ப்பக்கவெண் கொண்டு சுவடிப்பதிப்புகளை வெளியிடுவது.
- தனக்கென எந்த நிறுவனமும் சுவடிகள் நூலகம் வைத்திருக்கவில்லை. என்றாலும் பல்வேறு இடங் களிலுள்ள சுவடிகளை ஆதாரமாகக் கொண்டு பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகளை வெளியிடுவது.
- செந்தமிழ்ச்செல்வி, முக்குடை, நல்லறம் ஆகிய பருவ இதழ்கள் தவிர்த்த ஏனைய நிறுவனப் பருவ இதழ்கள் ஒவ்வொரு பக்கமும் இரு பகுதிகளாக அமைவது. திருக்கோயில் இதழில் சில சுவடிப் பதிப்புகள் மட்டும் பக்கத்திற்கு ஒரு பகுதியாக அமைய அதே இதழ்ப் பகுதியில் ஏனைய பொருண்மைகள் இரு பகுதிகளாக அமைப்பது

போன்ற நிறுவனச் சுவடிப்பதிப்புப் பருவ இதழ்களின் நெறிமுறைகளைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

பல்கலைக்கழகப் பதிப்பு நெறிமுறைகள்

பல்கலைக்கழகப் பருவ இதழ்களில் வெளிவந்த சுவடிப்பதிப்புகளை நோக்கும்போது அவற்றிற்கான நெறிமுறைகள் தெரிகின்றன. அவை,

- முழுமையான சுவடிகளை வெளியிடுவது.
- முன்னுரை, ஆய்வுரை, பதிப்புரை, சொல்லகராதி, உரை, குறிப்புரை, செய்யுள் முதற்குறிப்பகராதி,

பின்னிணைப்புகள் ஆகியவற்றில் ஒன்றோ ஒன்றுக்கும் மேற்பட்டோ அமைப்பது.

- செம்பதிப்பாக வெளியிடுவது.
- ஒரே இதழில் செம்பதிப்பாக வெளிவரவேண்டும் என்பதில் உறுதியாக இருந்தாலும் சில சமயம் அவ்வாறு வெளிவராதும் பதிப்பிப்பது. காட்டாக, அப்பாண்டைநாதர் உலாவைக் குறிப்பிடலாம். "இந்நூலை உரை விளக்கக் குறிப்புகளுடன் அங்கங்கே அடிக்குறிப்பாகத் தந்து பதிப்பிக்க வேண்டும் என்றே தமிழ்த்துறைத் தலைவர் அவர்கள் கருதினார்கள். எனினும் மூல நூலின் விரிவை நோக்கி உரையையும் உடன் இணைப்பதானால் ஓரிதழிலேயே நூலை முற்றுப்பெறச்செய்ய இயலாது. நூல் முற்றும் வெளிவராவிடில் இந்நூலின் அழகு களும் கற்பார்க்கும் புலப்பட மாட்டா. ஆகவே, நூலை முற்றும் முதலில் வெளியிடுவது என்று தீர்மானிக்கப்பெற்றது.

பொருள் முடிவு, இலக்கணக் குறிப்புகள், ஒப்புமைப் பகுதிகள் முதலியன எல்லாம் எடுத்துக் காட்டி விரிவான முறையில் உரை விளக்கம் இதில் இப்பொழுது சேர்க்க இயலவில்லை. எனினும், இந் நூலுள் தெய்வப்பெயர், மக்கட்பெயர், நாடு, ஊர், பருவப்பெயர் முதலியன மிகுதியாக வருதலால் சிறப்புப் பெயர் முதலியவற்றின் அகராதி ஒன்று நூலினிறுதியில் சேர்க்கப்பெற்றிருக்கிறது" (மு. சண்முகம் பிள்ளை, தமிழாய்வு, தொகுதி 1, 1974, பதிப்புரை, பக்.8-9).

தொகுப்புரை

- சிறிய, பெரிய, நிறை, குறை, முறிந்த, கிழிந்த, ஒடிந்த, பூச்சி அரித்த, செல்லரித்த போன்ற நிலைகளில் உள்ள சுவடிகளைக் காக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகள் வெளிவந்திருப்பது தெரிகின்றது.

- காலத்திற்கேற்ப நூற்பெயர் மாற்றிப் பதிப்பிக்குந் தன்மையும், நூற்பொருளைக் கொண்டு நூற்பெயர் சுட்டும் தன்மையும் பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகளில் காணமுடிகிறது.
- குறைப்பதிப்புகளை நிறைவு செய்து வெளியிடுவதும், பல்வேறு வகையில் அமைந்திருக்கும் குறைச் சுவடிகளை பாதுகாக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் பருவ இதழ்களில் வெளியிடும் போக்கும் பருவ இதழ்ப் பதிப்புகளில் காணப் படுகிறது.
- மக்களின் தேவை கருதி ஏற்கெனவே அச்சான நூல்களாக இருந்தாலும் மீண்டும் பருவ இதழ்களில் வெளியிடும் போக்கையும் பருவ இதழ்களில் காணமுடிகிறது.
- பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகள் மறுபதிப்பாகவோ தனிநூற் பதிப்பாகவோ வெளிவராத போது, அந் நூலின் தேவை கருதிச் சிலர் அவற்றின் பதிப்புரிமையைப் பெற்று வெளியிட்ட போக்கும் பருவ இதழ்ப் பதிப்புகளில் வெளிப்படுகின்றது.
- நூற்பெயர் இன்னதென்றே விளங்காத போது அந்நூற் சுவடியைப் பாதுகாத்தவர்கள்/அட்டவணை தயாரித்தவர்கள் போன்றோராலும் நூற்பெயர் சுட்டும் தன்மையும் பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகளில் வெளிப்படுகின்றது.
- மூலச்சுவடியோ, அதன் படிச்சுவடியோ இல்லாத போது அந்நூல் படித்தவரின் மனன நிலையில் இருந்து எழுதப்பெற்ற நூலைப் பருவ இதழில் பதிப்பித்த போக்கும் தெரிகின்றது.
- ஒரு நூல் பருவ இதழில் வெளிவருவதற்கு முன் அந்நூல் பற்றிய செய்திகளை வானொலி மூல

மாகவோ, பருவ இதழ்களின் மூலமாகவோ வெளிப்படுத்தும் போக்கையும் பருவ இதழ்ப் பதிப்புகளில் காணமுடிகிறது.

- ஒரு நூல், மூலம் ஓர் இதழிலும் உரை மற்றோர் இதழிலும் எனத் தனித்தனியாக வெளியிட்ட போக்கையும் பருவ இதழ்ப் பதிப்புகளில் காண முடிகிறது.
- திருத்தப் பதிப்புகளை வெளியிட்ட போக்கும் பருவ இதழ்ப் பதிப்புகளில் திகழ்கிறது.
- பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகள் தனிநூலாகாத நிலை ஏற்படும் போது மீண்டும் அந்நூல் அதே பருவ இதழில் இரண்டாம் முறையாக வெளியிடப்படும் போக்கும் வெளிப்படுகிறது.
- ‘OFF PRINT’ முறையில் சுவடிப்பதிப்புகளை வெளியிடும் போக்கும் பருவ இதழ்களில் உள்ளது.

பயன்படுத்தப்பெற்ற நூல்கள்

தமிழ் நூல்கள்

1. அகநானூறு - களிற்றியானைநிறை, கழக வெளியீடு, சென்னை, 1943.
2. அகநானூறு - மணிமிடைபவளம், கழக வெளியீடு, சென்னை,1959.
3. அச்சுக்கலை, மா.சு. சம்பந்தன், தமிழர் பதிப்பகம், சென்னை, 1976.
4. அச்சும் பதிப்பும், மா.சு. சம்பந்தன், தமிழர் பதிப்பகம், சென்னை, 1980.
5. அந்தாதி இலக்கியங்கள், பி. கலியபெருமாள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1967.
6. அந்தாதிக் கொத்து, தி. சந்திரசேகரன்(பதி.), அ.கீ.சு. நூலகம், சென்னை, 1956.
7. ஆறுமுகநாவலர் அவர்களின் சரித்திரச் சுருக்கமும் அவர்கள் இயற்றியருளிய தனிப்பாமாலையும், சி. செல்லையாபிள்ளை (ஆசி.), இரா.வை. கனகரத்தினம் (பதி.), அன்புதாசன் வெளியீடு, இலங்கை, 2ம் பதிப்பு 1996.
8. ஆனந்தரங்கன் கோவை, தியாகராய தேசிகர் (ஆசி.), ந. பலராம ஐயர் (குறிப்.), ந. சுப்பிரமணியன் (பதி.), அ.கீ.சு. நூலகம், சென்னை, 1955.
9. இதழாளர் ஆதித்தனார், அ.மா. சாமி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1990.
10. இதழியல், சூ. இன்னாசி & மா. எட்வர்ட் சாலமோன் ராஜ், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1995.

11. இதழியல், இரா. கோதண்டபாணி, கற்பக நூலகம், மதுரை, 1980.
12. இதழியல், சு. சக்திவேல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1997.
13. இதழியல் கலை, மா.பா. குருசாமி, குரு-தேன்மொழி, திருச்செந்தூர், ஆறாம் பதிப்பு, 1999.
14. இதழியல் நோக்கு, மா.ரா. இளங்கோவன், சேகர் பதிப்பகம், சென்னை, 1981.
15. இந்திய இதழ்கள், மா.ரா. இளங்கோவன், சேகர் பதிப்பகம், சென்னை, 1981.
16. இந்திய காலக்கணிதம், மோ.கோ. கோவைமணி, பாமொழிப் பதிப்பகம், தஞ்சாவூர், 1997.
17. இந்திய பத்திரிகைச் சுதந்திரம், மணிமேகலைப் பிரசுரம், சென்னை, 1987.
18. இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள் -1, இ. சுந்தரமூர்த்தி & மா.ரா. அரசு(பதிப்.), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை,
19. இந்து சமய இதழ்கள் - ஓர் ஆய்வு, அ.மா. சாமி, நவமணி பதிப்பகம், சென்னை, 2000.
20. இராமசெயத் திருப்புகழ் - பகுதி 1-2, பாலபாரதி (ஆசி.), கோ. பாலசுந்தர நாயகர் (பதி.), திருமலை-திருப்பதி தேவஸ்தான அச்சுக்கூடம், திருப்பதி, 1954.
21. இராமானந்தத் திரட்டு, கௌமார சபை, கோவை, 1921.
22. இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம், மா. இராமலிங்கம், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 3ம் பதிப்பு, 1985.
23. இலக்கண வரலாறு - பாட்டியல் நூல்கள், மருதூர் அரங்கராசன், பாலமுருகன் பதிப்பகம், மருதூர், 1983.
24. இலக்கிய வகை அகராதி, புலவர் இளங்குமரன், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1985.
25. இலக்கிய வடிவங்கள், கு. முத்துராசன், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1984.

26. இஸ்லாமியத் தமிழ் இதழ்கள் - ஓர் ஆய்வு, அ.மா. சாமி, நவமணி பதிப்பகம், சென்னை, 1994.
27. உரையாசிரியர்கள், மு.வை. அரவிந்தன், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 3ம் பதிப்பு, 1995.
28. உலகப் பத்திரிகைகளின் தோற்றமும் வளர்ச்சியும், மணிமேகலைப் பிரசுரம், சென்னை, 1987.
29. உலா இலக்கியங்கள், ந.வீ. செயராமன், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1966.
30. எண்பத்திரண்டில் தமிழ், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1985.
31. எண்பத்தொன்றில் தமிழ், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1983.
32. என் சரித்திரம், உ.வே. சாமிநாதையர், உ.வே.சா. நூல் நிலையம், சென்னை, 1982.
33. கந்தபுராணம் -அசுர காண்டம், கச்சியப்பசிவாசாரியார் (ஆசி.), சூ. சுப்பராய நாயகர் (பொழிப்.), தா. குப்புசாமி நாயகர் (பதி.), சென்னை ஸ்டார் ஆப் இந்தியா பிரஸ், சென்னை, விளம்பி வருடம்.
34. கம்பராமாயணம் - பாலகாண்டம், வை.மு. கோபால கிருஷ்ணமாசாரியார், வை.மு.கோ. கம்பெனி வெளியீடு, சென்னை, 1973.
35. கம்பன் ஆய்வடங்கல், ச. சிவகாமி, தமிழ்ப் பதிப்பகம், சென்னை, 1978.
36. களவியல் என்ற இறையனார் அகப்பொருள் உரை, நக்கீரர் (உரை), கழகம், சென்னை, மறுபதிப்பு, 1976.
37. குறுந்தொகை - மூலமும் உரையும், உ.வே. சாமிநாதையர் (பதி.), அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணா மலை நகர், 1983.
38. கோமதி அந்தாதி, அம்பை இரா. சங்கரன் (பதி.), அம்பை நூலகம், சென்னை, 1976.
39. சங்கரநயினார் கோயில் அந்தாதி, உ.வே.சாமிநாதையர் (பதி.), செந்தமிழ்ப் பிரசுரம், மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை, 1934.

40. சதக இலக்கியங்கள், ந.வீ. செயராமன், மணிவாசக பதிப்பகம், சென்னை, 1966.
41. சிலப்பதிகாரம் - மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும், உ.வே. சாமிநாதையர் (பதி.), தமிழ்ப் பல்கலைக்கழக நிழற்படப் பதிப்பு, தஞ்சாவூர், 198
42. சிற்றிதழ்கள், பொள்ளாச்சி நசன், மணிவாசக பதிப்பகம், சென்னை, 1997.
43. சிற்றிலக்கிய அகராதி, ந.வீ. செயராமன், பா நிலையம், சென்னை, 1983.
44. சிற்றிலக்கியத் திறனாய்வு, ந.வீ. செயராமன் இலக்கியப் பதிப்பகம், சென்னை, 1980.
45. சிற்றிலக்கியப் புலவர் அகராதி, ந.வீ. செயராமன் நறுமலர்ப் பதிப்பகம், சென்னை, 1983.
46. சிற்றிலக்கிய வகைகள், மு. சண்முகம்பிள்ளை மணிவாசகர் நூலகம், சென்னை, 1982.
47. சீவகசிந்தாமணி - மூலமும் நச்சினார்க்கினியருரையு உ.வே. சாமிநாதையர் (பதி.), தமிழ்ப் பல்கலை கழகம், தஞ்சை, நிழற்படப் பதிப்பு, 1986.
48. சுவடிக்கலை, இரா. இளங்குமரன், அரிமா பதிப்பகம், சேலம், 1991,
49. சுவடிப்பதிப்பியல், வே.இரா. மாதவன், பால வெளியீட்டகம், தஞ்சை, 2000.
50. சுவடிச்சுடர், தி. மகாலட்சுமி முதலியோர் (பதி உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2001.
51. சுவாமிநாதம், கல்லிடையூர் சாமிகவிராசன் (ஆசி செ.வை.சண்முகம் (பதி.), அண்ணாமலைப் பல்கலை கழகம், அண்ணாமலை நகர், 1975.
52. செய்தி இதழ்களின் கதை, பி.வி. கிரி, கழகம், சென்னை 1981.
53. செய்திக்குப் பின் பத்திரிகை இயல், என். வேப ஸ்வாமி, சென்னை, 1981.
54. சைவ ஆதீனங்கள், ஊரன் அடிகள், சமரச சன்மார் ஆராய்ச்சி நிலையம், வடலூர், 2002.

55. ஞானாமிர்தம், வாகீச முனிவர் (ஆசி.), ஔவை சு. துரைசாமிப்பிள்ளை (உரை), அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், 1954.
56. டாக்டர் உ.வே.சா. பதிப்புப்பணி - ஓராய்வு, பூ. சொல்விளங்கும் பெருமாள், வஞ்சிக்கோ பதிப்பகம், மதுரை, 1981.
57. தணிகை வெண்பா - உரையுடன், மு. சண்முகம் பிள்ளை (பதி.), தி.சி. நாராயணசாமி நாயுடு வெளியீடு, கடலூர், 1980.
58. தண்டியலங்காரம், தண்டியாசிரியர் (ஆசி.), சுப்பிரமணிய தேசிகர் (உரை), கொ. இராமலிங்கத் தம்பிரான் (பதி.), கழகம், சென்னை, 1984.
59. தமிழாய்வு, பெ. மாதையன், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1995.
60. தமிழில் சிறு பத்திரிகைகள், வல்லிக்கண்ணன், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, 1991.
61. தமிழில் தலபுராணங்கள் - தொகுதிகள் 1 மற்றும் 2, வே.இரா. மாதவன், பாவை வெளியீட்டகம், தஞ்சை, 1995.
62. தமிழ் இதழியல், மு.அ. முகம்மது உசேன், அற்புதா பதிப்பகம், கும்பகோணம், 1989.
63. தமிழ் இதழியல் களஞ்சியம், மா.சு. சம்பந்தம், தமிழர் பதிப்பகம், சென்னை, 1990.
64. தமிழ் இதழியல் சுவடுகள், மா.சு. சம்பந்தம், தமிழர் பதிப்பகம், சென்னை, 1990.
65. தமிழ் இதழியல் வரலாறு, மா.சு. சம்பந்தம், தமிழர் பதிப்பகம், சென்னை, 1987.
66. தமிழ் இதழ்கள், சோமலே, சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை, 1975.
67. தமிழ் இதழ்களின் தோற்றம் வளர்ச்சி, அ.மா. சாமி, நவமணி பதிப்பகம், சென்னை, 1987.
68. தமிழ் இலக்கிய அகராதி, ந.சி. கந்தையா பிள்ளை, ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1952.

69. தமிழ் இலக்கிய வகையும் வடிவும், ச.வே. சுப்பிரமணியன், தமிழ்ப் பதிப்பகம், சென்னை, 1984.
70. தமிழ் இலக்கிய வரலாறு - நூற்றாண்டு வரிசை 9 முதல் 16 வரை, மு. அருணாசலம், காந்தி வித்தியாலயம், திருச்சிற்றம்பலம், 1969-77.
71. தமிழ் இலக்கிய வரலாறு - 13, 14, 15ஆம் நூற்றாண்டுகள், தி.வை. சதாசிவ பண்டாரத்தார், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், 1977.
72. தமிழ் இலக்கிய வரலாறு - 16, 17ஆம் நூற்றாண்டுகள், சோமசுந்தர தேசிகர், 1936-1937.
73. தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம் - 1 & 2 தொகுதிகள், மது.ச. விமலானந்தம், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, 1987.
74. தமிழ் இஸ்லாமிய இதழ்கள் - ஓர் ஆய்வு, அ.மா. சாமி, நவமணி பதிப்பகம், சென்னை, 1997.
75. தமிழ் ஏடுகள் - வழிகாட்டி, க. பட்டாபிராமன், செந்திலன் பதிப்பகம், பட்டுக்கோட்டை, 1966.
76. தமிழ்க் கிறிஸ்தவ இதழ்கள் - ஓர் ஆய்வு, அ.மா. சாமி, நவமணி பதிப்பகம், சென்னை, 1996.
77. தமிழ்நூல் தொகுப்புக் களஞ்சியம், சுந்தர சண்முகனார், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1990.
78. தமிழ்நெறி விளக்கம், உ.வே. சாமிநாதையர் (பதி.), உ.வே.சா. நூலகம், சென்னை, 3ம் பதிப்பு, 1994.
79. தமிழ்ப் பத்திரிகைகளின் தோற்றமும் வளர்ச்சியும், மணிமேகலைப் பிரசுரம், சென்னை, 1987.
80. தமிழ்ப் பத்திரிகைகள், க. பட்டாபிராமன், அருணோதயம், சென்னை, 1968.
81. தமிழ்ப் பேரகராதி 1 - 6 தொகுதிகள் மற்றும் அனுபந்தம், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1982.
82. தமிழ் வாழ்க்கை வரலாற்றிலக்கியம், ச. சிவகாமி, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1985.
83. திராவிட இயக்க இதழ்கள் - ஒரு பார்வை, க. திருநாவுக்கரசு, நக்கீரன் பதிப்பகம், சென்னை, 1998.

84. திராவிடமொழி இலக்கியங்கள், ச.வே. சுப்பிரமணியன், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1983.

85. திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும் - 3ம் பகுதி காமத்துப்பால், கோ. வடிவேலு செட்டியார் (தெளிபொருள் விளக்கம்), மதுரைப் பல்கலைக்கழகம், மதுரை, 1976.

86. திருமுறைத் தலங்கள், பு.மா. ஜயசெந்தில் நாதன், தமிழ் நிலையம், சென்னை, 3ம் பதிப்பு, 1997.

87. திருவிளையாடற் புராணம், உ.வே.சாமிநாதையர் (பதி.), கேசரி அச்சுக்கூடம், சென்னை, 1927.

88. தூது இலக்கியங்கள், ந.வீ. செயராமன், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1965.

89. தேவாரம் - பண்முறை 1, 2 தொகுதிகள், தி.வே. கோபாலையர் (பதி.), பிரெஞ்சு இந்திய நிறுவனம், புதுவை, 1985.

90. தொல்காப்பியப் பதிப்புகள், ச.வே. சுப்பிரமணியன், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1992.

91. தொல்காப்பியம் செய்யுளியல் இளம்பூரணம், அடிகளாசிரியர் (பதி.), தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1985.

92. தொல்காப்பியம் பொருளதிகாரம் இளம்பூரணம் - களவியல் கற்பியல் பொருளியல், கழகம், சென்னை, 1986.

93. தொல்காப்பியம் பொருளதிகாரம் இளம்பூரணம் - மெய்ப்பாட்டியல் உவமவியல் செய்யுளியல் மரபியல், கழகம், சென்னை, 1986.

94. நந்திக் கலம்பகம், அ. கோபாலையர் (பதி.), செந்தமிழ்ப் பிரசுரம், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை, 1927.

95. நாலடியார் - பாட்டும் உரையும், சாமி. சிதம்பரனார் (உரை), சிவகாமி சிதம்பரனார் (பதி.), இலக்கிய நிலையம், சென்னை, 3ம் பதிப்பு, 1986.

96. நாலாயிர திவ்வியப் பிரபந்தம் - 1,2 பாகங்கள், தி லிட்டில் ப்ளவர் கம்பெனி, சென்னை, மறு அச்சு, 1986.

97. நூற்றாண்டு கண்ட தமிழ் இதழ்கள், அ.மா. சாமி, நவமணி பதிப்பகம், சென்னை, 1999.

98. பதிப்பு நிறுவனங்கள், ம.சா. அறிவுடை நம்பி & சி. இலட்சுமணன் (பதி.), தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை, 2002.

99. பதிப்புப் பார்வைகள், அ. விநாயகமூர்த்தி, பால முருகன் பதிப்பகம், மதுரை, 1983.

100. பத்திரிகைகளின் வகைகளும் வேறுபாடுகளும், மணிமேகலைப் பிரசுரம், சென்னை, 1987.

101. பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் இதழ்கள், அ.மா. சாமி, நவமணி பதிப்பகம், சென்னை, 2ம் பதிப்பு, 1993.

102. பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம், ச. சிவகாமி, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1994.

103. பரணி இலக்கியங்கள், சோம. இளவரசு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1967.

104. பரத சாத்திரம், அரபத்த நாவலர் (ஆசி.), க. வெள்ளை வாரணனார் (பதி.), கரந்தைத் தமிழ்ச் சங்கம், கரந்தை - தஞ்சை, 1952.

105. பழமொழி நானூறு, மா. இராசமாணிக்கம் பிள்ளை (உரை), கழகம், சென்னை, 2ம் பதிப்பு, 1954.

106. பன்னிருபாட்டியல், கா.ரா. கோவிந்தராஜ முதலியார் (உரை), கழகம், சென்னை, மறுபதிப்பு, 1978.

107. பிரபந்தத் திரட்டு, அன்னிதாமசு (பதி.), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1980.

108. புறத்திரட்டு, இரா. இளங்குமரன் (பதி.), கழகம், சென்னை, 1972.

109. பெரியபுராணம் என்று வழங்குகின்ற திருத்தொண்டர் புராணம், தி. பட்டுச்சாமி ஓதுவார் (பதி.), காசி மடம், திருப்பனந்தாள், 1950.

110. பெருங்கதை - வத்தவ காண்டம் - நரவாண காண்டம், உ.வே. சாமிநாதையர் (பதி.), உ.வே.சா. நூலகம், சென்னை, 5ம் பதிப்பு, 1996.
111. மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களின் பிரபந்தத்திரட்டு, உ.வே.சாமிநாதையர் (பதி.), சென்னப் பட்டணம் கமர்ஷியல் அச்சுக்கூடம், சென்னை, 2ம் பதிப்பு, 1926.
112. மறைந்துபோன தமிழ் நூல்கள், மயிலை சீனி. வேங்கடசாமி, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 3ம் பதிப்பு, 1988.
113. மனோன்மணியம், வி. மரிய அந்தோணி (பதி.), பூங்கொடி பதிப்பகம், விருதுநகர், 1970.
114. முதல் தமிழ் நாளிதழ்கள் மூன்று,- மா.ரா. இளங்கோவன், சேகர் பதிப்பகம், சென்னை, 1982.
115. முதுமொழி மேல்வைப்பு, கமலை வெள்ளியம் பலவாண முனிவர் (ஆசி.), கலியாணசுந்தரையர் (குறிப்.), காசி மடம், திருப்பனந்தாள், 1949.
116. முத்துவீரியம், முத்துவீர உபாத்தியாயர் (ஆசி.), கு. சுந்தரமூர்த்தி (பதி.), கழகம், சென்னை, 1972.
117. முற்காலத் தமிழ் இதழ்கள் - ஓர் அறிமுகம், மா.ரா. இளங்கோவன், சேகர் பதிப்பகம், சென்னை, 1979.
118. விடுதலைப் போரில் தமிழ் இதழ்கள், பெ.சு. மணி, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1998.
119. ஸ்ரீமீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் சரித்திரம், உ.வே.சாமிநாதையர் (பதி.), தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை, நிழற்படப் பதிப்பு, 1986.

அட்டவணைகள்

120. அனைத்துலக தமிழ் ஓலைச்சுவடிகள் அட்டவணை 1-5 தொகுதிகள், செல்லமுத்து முதலியோர் (பதி.), தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1991.

121. இந்திய தேசிய நூல்விவரப் பட்டியல் (தமிழ்ப் பகுதி) - ஆண்டு வரிசை 1958, 1960, 1963-67, 1968, 1974, 1985, 1986, தமிழ்நாடு அரசு வெளியீடு, சென்னை, 1960-1989.

122. கல்கத்தா தேசிக நூலகத் தமிழ்ச் சுவடிகள், மு. சண்முகம் பிள்ளை & இ. சுந்தரமூர்த்தி (பதி.), சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1979.

123. சகலகலாவல்லி நூல்நிலையப் புத்தகப்பட்டியல், ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாத சுவாமிகள், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள், 1947.

124. சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகள், ந. சஞ்சீவி, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1973.

125. சிவகுருநாதன் செந்தமிழ் நூல்நிலையம் - புத்தகப் பட்டியல், சிவகுருநாதன் செந்தமிழ் நூல் நிலையம், கும்பகோணம், 1971.

126. சிவஞானமுனிவர் நூல்நிலையம் - நூற்பட்டியல், சிவஞானமுனிவர் நூல்நிலையம், கழகம், சென்னை, 1957.

127. செந்தமிழ்த் தொகுதிகள் - அட்டவணைக் குறிப்பு, மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை, 1981.

128. சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் முதல் 1008 நூல்களின் பாராட்டு விழா நூற்பட்டி, எஸ்.ஆர். ரங்கநாதன், கழகம், சென்னை, 1961.

129. தமிழ் உரைநூல் உரையாசிரியர் நூலடைவு, மு.அ. முகம்மது உசேன், அற்புதா பதிப்பகம், கும்பகோணம், 1988.

130. தமிழ்ச்சுவடி விளக்க அட்டவணை 1 - 6 தொகுதிகள், த.கோ.பரமசிவம் முதலியோர் (பதி.), தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1987-1992.

131. தமிழ்நாட்டு நூற்றொகை (தமிழ்ப் பகுதி) ஆண்டு வரிசை 1964 முதல் 2000 வரை (கையெழுத்துப்படி), கன்னிமாரா நூலகம், சென்னை, 1972.

132. தமிழ் நூல்களின் தொகை - 1951, பொது நூலக நெறியாளர், சென்னை, 1957.
133. தமிழ் நூல்களின் பட்டியல், ஜி.யு. போப் & எல்.டி. பார்னெட் (பதி.), பிரிட்டன் காட்சியகம், இலண்டன், 1909.
134. தமிழ் நூல்களின் பட்டியல் - அனுபந்தம், எல்.டி. பார்னெட் (பதி.), பிரிட்டன் காட்சியகம், இலண்டன், 1931.
135. தமிழ்நூல் விவரஅட்டவணை 1 முதல் 7 தொகுதிகள், தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சித் துறை வெளியீடு, சென்னை, 1961-1978.
136. தமிழ்ப் புலவர் அகரவரிசை 1 & 2 தொகுதிகள், சு.அ. இராமசாமிப் புலவர், கழகம், சென்னை, 1959 & 1962.
137. தமிழ்ப் புலவர் அகராதி - புலவர் அகர வரிசை, ந.சி. கந்தையா பிள்ளை, ஆசிரியர் நூற்பதிப்புக்கழகம், சென்னை, 1952.
138. தமிழ்ப் புலவர் வரிசை 1 முதல் 10 தொகுதிகள், சு.அ. இராமசாமிப் புலவர், கழகம், சென்னை.
139. திருவனந்தபுரம் கேரளப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சுவடிகள் - அட்டவணை, இரா. நிர்மலாதேவி (பதி.), உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1983.
140. நாள், கிழமை, திங்கள் இதழ் விளக்க வரிசை, சு.அ. இராமசாமிப் புலவர், கழகம், சென்னை, 1961.
141. நூற்பட்டி, கையெழுத்துப்படி, மறைமலையடிகள் நூலகம், சென்னை.
142. நூற்பட்டி, உ.வே.சா. நூலகம், சென்னை.
143. நூற்பட்டி, ரோஜாமுத்தையா ஆராய்ச்சி நிலையம், சென்னை.
144. நூற்பட்டி, கரந்தைத் தமிழ்ச்சங்கம், கரந்தை - தஞ்சை.
145. நூற்பட்டி, அடையாறு நூலகம், சென்னை.
146. நூற்பட்டி, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
147. நூற்பட்டி, கோபாலராவ் நூலகம், கும்பகோணம்.

148. பழந்தமிழ் நூற் சொல்லடைவு (பாகம் 1 அ-ஔ), பிரெஞ்சு இந்தியக் கலைக்கழகம், புதுவை, 1967.
149. புத்தகப்பட்டியல் 1 & 2 தொகுதிகள், கோட்டூர் இரங்கசாமி முதலியார் இலவச நூல்நிலையம், மன்னார்குடி, 1948 & 1958.

மலர்கள்

150. கரந்தைத் தமிழ்ச்சங்கச் செய்திமலர் - சிறப்பிதழ், செந்தில்குமார் (பதி.), கரந்தைத் தமிழ்ச் சங்கம், மலர் 2, இதழ் 7, நவம்பர் 1990.
151. தமிழவேள் உமாமகேசுவரனார் நூற்றாண்டு நினைவு கட்டுரைப் பூங்கா, கரந்தைத் தமிழ்ச் சங்கம், கரந்தை, 1984.
152. தவத்திரு குமரகுருபர சுவாமிகள் அருளாட்சி விழா சிறப்பு மலர், சிரவையாதீனம், கௌமார மட வெளியீடு, பழனி, 2001.
153. திருவீழிமிழலைத் திருக்கோயில் மஹாகும்பாபிஷேக மலர், திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, 2000.

பருவ இதழ்கள்

154. அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ் - 1 முதல் 27 தொகுதிகள்.
155. உண்மை விளக்கம் எனும் சித்தாந்த தீபிகை - புத்தகம் 1 மற்றும் 5.
156. உயராய்வு - 1 முதல் 14 தொகுதிகள்.
157. கலாநிலையம் - 1 முதல் 8 தொகுதிகள்.
158. கலைமகள் (சென்னை) - 1 முதல் 122 தொகுதிகள்.
159. கல்வெட்டு - 1 முதல் 25 இதழ்கள்.
160. குமரகுருபரன் - 1 முதல் 28 தொகுதிகள்.
161. கொங்கு மலர் - மலர் 3 மற்றும் 4.
162. சக்தி - 1 முதல் 14 மலர்கள்.
163. சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ் - 1 முதல் 46 தொகுதிகள்.
164. சித்தாந்தம் (1912) - 1 முதல் 6 தொகுதிகள்.

165. சித்தாந்தம் (1928) - 7 - 11, 14 - 70 தொகுதிகள்.
166. சிவநேசன் - 6 முதல் 15 ஆண்டுகள்.
167. செங்குந்தமித்திரன் - 4 முதல் 7 தொகுதிகள்.
168. செந்தமிழ் - 1 முதல் 81 தொகுதிகள்.
169. செந்தமிழ்ச்செல்வி - 1 முதல் 75 சிலம்புகள்.
170. செல்வக்களஞ்சியம் - தொகுதி 1, பகுதி 12.
171. ஞானசம்பந்தம் - 10 முதல் 48 மலர்கள்.
172. ஞானபோதினி - 1 முதல் 7 ஸம்புடங்கள்.
173. தமிழாய்வு - 1 முதல் 14 தொகுதிகள்.
174. தமிழ்க்கலை - 1 முதல் 12 தமிழ்கள்.
175. தமிழ்ப்பொழில் - 1 முதல் 61 துணர்கள்.
176. திருக்கோயில் - 1 முதல் 26 மாலைகள்.
177. தேனோலை - 7 - 14, 16, 18, 22-30 இதழ்கள்.
178. நல்லறம் - மலர் 3.
179. பஞ்சாமிர்தம் - தொகுதி 1 மற்றும் 2.
180. புலமை - 1-10, 12, 14, 15, 18, 25 தொகுதிகள்.
181. பைந்தமிழ் - தொகுதி 1.
182. மாதாந்திர அமுதம் - 1 முதல் 21 குடங்கள்.
183. முக்குடை - 2 முதல் 15 மலர்கள்.
184. மெய்கண்டார் - 1 முதல் 18 மலர்கள்.
185. விவேகபாநு - 1 முதல் 6 வால்யூம்கள்.
186. ஹரிசமய திவாகரன் - 1 முதல் 10 தொகுதிகள்.
187. ஸ்ரீகாமகோடி ப்ரதீபம் - 1 முதல் 19 மலர்கள்.
188. ஸ்ரீகுமரகுருபரர் - 1 முதல் 21 தொகுதிகள்.
189. ஸ்ரீசங்கர க்ருபா, 1 முதல் 18 மற்றும் 24 மலர்கள்.

ஆய்வேடுகள்

190. செந்தமிழ் - இதழியல் ஆய்வு, இரா. கோதண்டபாணி, முனைவர் பட்ட ஆய்வேடு, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, 1987.
191. பருவ இதழ்களில் சுவடிப்பதிப்புகள், மோ.கோ. கோவைமணி, முனைவர் பட்ட ஆய்வேடு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2002.

ஆங்கில நூல்கள்

192. A Catalogue of the Tamil Books in the Library of the British Museum, L.D. Barnett. and G.U. Pope, British Museum, London, Reprint vol.1-1985, vol.2-1995.

193. Bibliography on Translations, S. Sivagami, I.I.T.S., Madras, 1983.

194. Catalogue of Books in the Madras Secretariat Library, Madras Secretariat Library, Madras, 1956.

195. Catalogue of Books in the Madras Secretariat Library, upto 31st December 1966, Govt. of Madras, Madras, 1968.

196. Classified Catalogue of the Public reference Library, Books Registered from 1867-1889, Office of the Registrar of Books, Madras, 1894.

197. Classified Catalogue of Tamil Printed Books, John Murdoch, Govt. of Tamil Nadu, Reprint 1968.

198. Encyclopedia of Tamil Literature, Shu Hikosaka & G. John Samuel, Institute of Asian Studies, Madras, vol.1 -1991, vol.2-1992.

199. Lexicon Universal Encyclopedia, Lexicon Publications Inc, New york, 1984.

200. National Catalogue of University Level Books (1965-1970), National Book Trust, New Delhi, 1971.

201. The Dharmapuram Adhinam Library Catalogue, Dharmapauram Adhinam Library, Dharmapuram, 1945.

பருவ இதழ்ச் சுவடிப்பதிப்புகள்

அகரவரிசை

1. அகப்பொருள் விளக்கம் - மூலமும் உரையும், நாற்கவிராச நம்பி (ஆசி.), பொ. பாண்டித்துரைத் தேவர் (பதி.), செந்தமிழ், தொகுதி 9, பகுதி 4, 1910 - தொகுதி 11, பகுதி 9, 1913, நிறை.
2. அகராதி நிகண்டு, ரேவண சித்தர் (ஆசி.), திரு. நாராயணையங்கார் (பதி.), செந்தமிழ், 18:4:1920 - 18:12:1920, நிறை.
3. அகவல்பா, கொற்றவன்குடி உமாபதி சிவாசாரிய சுவாமிகள் (ஆசி.), பதி.இ., குமரகுருபரன், 10:1:1959, நிறை.
4. அசதிக்கோவை, ஔவையார் (ஆசி.), பு. சிதம்பர புன்னைவன நாதன் (பதி.), செந்தமிழ், 20:3:1922, குறை.
5. அச்சில் விடுபட்ட அப்பர் பாடல், திருநாவுக்கரசு சுவாமிகள் (ஆசி.), ந.ரா. முருகவேள் (பதி.), சித்தாந்தம், 34:11:1961, நிறை.
6. அடிமதிக்குடி அய்யனார் பிள்ளைத்தமிழ், ஆசி.இ., மு. சண்முகம் பிள்ளை (பதி.), தமிழாய்வு, 4:1975, நிறை.
7. அட்டாங்க யோகக் குறள், ஆசி.இ., சே.ரா. சுப்பிரமணியக் கவிராயர் (பதி.), செந்தமிழ், 2:6:1904, நிறை.
8. அணிமுருகாற்றுப்படை, ஆசி.இ., எம்.பி.எஸ். துரைசாமி முதலியார் (பதி.), சித்தாந்தம், 10:2:1937, நிறை.

9. அண்டபுராணம், கர்க்கியர் (ஆசி.), டி.எஸ். இராமச்சந்திர ஐயர் (பதி.), கலாநிலையம், 2:36:1929 - 2:41:1929, குறை.
10. அநுபோக ரத்னமாலை, ஆவுடையக்காள் (ஆசி.), பதி.இ., ஸ்ரீசங்கர க்ருபா, 8:3:1966 - 8:4:1966, நிறை.
11. அப்பாண்டைநாதர் உலா, அனந்தவிசயர் (ஆசி.), மயிலை சீனி. வேங்கடசாமி (பதி.), நல்லறம், 4:1,2:1961, குறை.
12. அப்பாண்டைநாதர் உலா, அனந்தவிசயர் (ஆசி.), மு. சண்முகம் பிள்ளை (பதி.), தமிழாய்வு, 1:1974, நிறை.
13. அமுதரஸ மஞ்சரி, அழகிய சிற்றம்பலம் (ஆசி.), இரா. நாகசாமி (பதி.), கல்வெட்டு, 10:1978 - 13:1977, நிறை.
14. அம்பிகை நவமணிமாலை, ஆசி.இ., த.ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை (பதி.), செந்தமிழ், 46:8-9:1950, நிறை.
15. அருங்கலச்செப்பு, ஆசி.இ., பூ. சுப்பிரமணியம் (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 20:1:1972 - 20:2:1972, நிறை.
16. அருட்பா மாலை, அழகிய சிற்றம்பல தேசிகர் (ஆசி.), எஸ். சோமசுந்தர தேசிகர் (பதி.), சித்தாந்தம், 11:6:1938, நிறை.
17. அரும்பொருள் விளக்க நிகண்டு, அருமருந்தைய தேசிகர் (ஆசி.), எஸ். வையாபுரிப்பிள்ளை (பதி.), செந்தமிழ், 27:9:1929 - 29:4:1931, நிறை.
18. அருவியன் காதை, ஆசி.இ., கே.என். சிவராஜபிள்ளை. (பதி.), செந்தமிழ், 21:2:1922-23 - 21:6:1923, நிறை.
19. அருள்முருகாற்றுப்படை, ஆசி.இ., எம்.பி.எஸ். துரைசாமி முதலியார் (பதி.), சித்தாந்தம், 10:2:1937, நிறை.
20. அருள்முறைத்திரட்டு, உமாபதி சிவனார் (தி.ஆசி.), எஸ். சோமசுந்தர தேசிகர் (பதி.), சித்தாந்தம், 3:-:1930, நிறை.

21. அருள்முறைத்திரட்டு, உமாபதி சிவனார் (தி.ஆசி.), மா.வே. நெல்லையப்பப் பிள்ளை (உரை & பதி.), சித்தாந்தம், 5:4:1932 - 6:11:1933, நிறை.
22. அலங்கார நூல் (மன்மதன் அலங்காரம்), ஆசி.இ., சு. சௌந்தர பாண்டியன் (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 24:1997, நிறை.
23. அல்லி கதை, கப்பினிபதி பிள்ளை (ஆசி.), இ. சுந்தர மூர்த்தி (பதி.), தமிழாய்வு, 14:1984-90, நிறை.
24. அறநெறி வெண்பா, தவத்திரு கந்தசாமி சுவாமிகள் (ஆசி.), தவத்திரு சுந்தர சுவாமிகள் (பதி.), மாதாந்திர அமுதம், 13:10:1992, நிறை.
25. ஆசிரியமாலைச் செய்யுள்கள், ஆசி.இ., ரா. இராகவையங்கார் (தொ.ஆசி.), செந்தமிழ், 5:10:1907, குறை.
26. ஆத்திசூடித் திறவுகோல், குறுமுனி (ஆசி.), தி. சந்திரசேகரன் (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 2:1:1949, நிறை.
27. ஆத்திசூடி - பரிமேலழகர் உரையுடன், ஔவையார் (ஆசி.), ம. இராசேந்திரன் (பதி.), உயராய்வு, 2 & 3:1984-85, நிறை.
28. ஆத்திசூடி வெண்பா, ஆசி.இ., வ.ரா. கல்யாணசுந்தரம் (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 3:1:1959, நிறை.
29. ஆழ்வார் திருவனந்தல், ஆசி.இ., த. கிருட்டினமூர்த்தி (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 14:1:1961, நிறை.
30. ஆழ்வார் பிள்ளைத்தமிழ், ஆசி.இ., திரு.கி. இராமானுஜ ஐயங்கார் (பதி.), செந்தமிழ், 19:1:1920, குறை.
31. ஆனந்தரங்கன் கோவை - குறிப்புரையுடன், தியாகராஜ தேசிகர் (ஆசி.), சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார் (பதி.), கொங்கு மலர், 3:9:1936 - 4:10:1937, குறை.
32. ஆன்மலிங்க மாலை, ஆசி.இ., எஸ். சோமசுந்தர தேசிகர் (பதி.), செந்தமிழ், 28:2:1929-30, நிறை.

33. இரட்டையர் அம்மானை, ஆசி.இ., பதி.இ., செங்குந்த மித்திரன், 4:4:1930 - 4:12:1931, நிறை.

34. இரணியன் வதைப்பரணி, ஆசி.இ., சு. நல்லசிவன் பிள்ளை (பதி.), செந்தமிழ், 15:1:1916 - 16:5:1918, நிறை.

35. இராமசெயம், பாலபாரதி (ஆசி.), திரு.கி. இராமாநுஜ ஐயங்கார் (பதி.), செந்தமிழ், 36:11:1938 - 39:10:1942, நிறை.

36. இராமாயணத் திருப்புகழ், பாலபாரதி (ஆசி.), பதி.இ., ஹரிசமய திவாகரன், 2:2-10:1925, நிறை.

37. இராமானந்தத் திரட்டு, தவத்திரு இராமானந்த சுவாமிகள் (ஆசி.), தவத்திரு சுந்தரசுவாமிகள் (பதி.), மாதாந்திர அமுதம், 14:7:1993 - 15:12:1993-94, குறை.

38. இராஜராஜ தேவருலா, ஒட்டக்கூத்தர் (ஆசி.), எஸ். வையாபுரிப்பிள்ளை (பதி.), செந்தமிழ், 23:10, 11:1925, நிறை.

39. இரிஷிவிந்தக் குறவஞ்சி, திருவெண்ணெய் நல்லூர் இராசப்பன் (ஆசி.), ஆர்.கே. பார்த்தசாரதி மற்றும் பூ. சுப்பிரமணியம் (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 17:2:1965 - 18:1:1968, நிறை.

40. இருபுராண விருத்தம், ஆசி.இ., இ. சுந்தரமூர்த்தி (பதி.), உயராய்வு, 2 & 3:1984-85, நிறை.

41. இலக்கண தீபம், ஆசி.இ., நாராயணையங்கார் (பதி.), செந்தமிழ், 14:6:1916, நிறை.

42. இலக்கண தீபம், ஆசி.இ., வி.எஸ். கிருஷ்ணன் (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 8:1:1955, நிறை.

43. இலக்கண தீபம், ஆசி.இ., இ. சுந்தரமூர்த்தி (பதி.), புலமை, 7:டிசம்பர்:1981, நிறை.

44. இலக்குமி வெண்பா, ஆசி.இ., இ.பா. வேணுகோபால் (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ்,, 9:2:1956, குறை.

45. இலந்துறை அருட்பா மாலை, அழகிய சிற்றம்பல தேசிகர் (ஆசி.), எஸ். சோமசுந்தர தேசிகர் (பதி.), சித்தாந்தம், 11:6:1938, நிறை.
46. இளசை ஒருபாவொருபஃது, மகாகவி சுப்பிரமணிய பாரதியார் (ஆசி.), பதி.இ., செந்தமிழ்ச்செல்வி, 43:9:1969, நிறை.
47. இனியது நாற்பது - உரையுடன், பூதஞ்சேந்தனார் (ஆசி.), ரா. இராகவையங்கார் (பதி.), செந்தமிழ், 1:7:1903, நிறை.
48. ஈச்சநாரி விநாயகர் பதிகம், தவத்திரு கந்தசாமி சுவாமிகள் (ஆசி.), ப.வெ. நாகராஜன் (உரை & பதி.), மாதாந்திர அமுதம், 19:8-9:1998, நிறை.
49. ஈச்சநாரி விநாயகர் பதிற்றுப்பத்தந்தாதி, தவத்திரு கந்தசாமி சுவாமிகள் (ஆசி.), தவத்திரு சுந்தர சுவாமிகள் (பதி.), மாதாந்திர அமுதம், 13:12:1992-14:6:1992, நிறை.
50. ஈனமுத்துப் பாண்டியன் கதை, ஆசி.இ., மு. சண்முகம் பிள்ளை & சு. சண்முகசுந்தரம் (பதி.), தமிழாய்வு, 3:1974, நிறை.
51. உதயகுமார காவியம், ஆசி.இ., வீ. சண்முகம் (பதி.), தமிழ்ப்பொழில், 6:1-2:1930, நிறை.
52. உதயணகுமார காவியம், ஆசி.இ., உ.வே. சாமிநாதையர் (பதி.), கலைமகள், 7:37-42:1935 - 8:43-48:1935, நிறை.
53. உதயத்தூர் புலைமாடத்தி வரத்து, ஆசி.இ., மோ.கோ. கோவைமணி (பதி.), தமிழ்க்கலை, 12:1-4:1994, நிறை.
54. உரூப சொரூப அகவல், காவை. அம்பலவாணத் தம்பிரான் (ஆசி.), பதி.இ., ஞானசம்பந்தம், 18:5:1959, நிறை.
55. உவமான சங்கிரகம் (விருத்தம் 37), ஆசி.இ., திரு. நாராயணையங்கார் (பதி.), செந்தமிழ், 9:3:1911, நிறை.
56. உவமான சங்கிரகம் (நூற்பா), ஆசி.இ., எ.எம். சடகோபராமாநுஜாசார்யன் (பதி.), செந்தமிழ், 14:4:1916, நிறை.

57. எக்காலக் கண்ணி, ஆசி.இ., வி.எஸ். கிருஷ்ணன் (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 6:1:1953, நிறை.

58. எட்டெட்டந்தாதி, ஆசி.இ., மு. பசுபதி (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 7:2:1954, நிறை.

59. எதிராசரந்தாதி, பிள்ளைப்பெருமாளையங்கார் (ஆசி.), மு. இராகவையங்கார் (பதி.), செந்தமிழ், 4:10:1906, நிறை.

60. எதிராசரந்தாதி, பிள்ளைப்பெருமாளையங்கார் (ஆசி.), ரெ. இராமையங்கார் (குறிப். & பதி.), ஹரிசமய திவாகரன், 6:4:1929, நிறை.

61. எலிவிடுதூது, ஆசி.இ., இ.பா. வேணுகோபால் (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 8:2:1955, நிறை.

62. ஐந்திணையெழுபது - உரையுடன், மூவாதியர் (ஆசி.), ரா. இராகவையங்கார் (பதி.), செந்தமிழ், 4:3:1906, குறை.

63. ஐந்திணையைம்பது-உரையுடன், மாறன் பொறையனார் (ஆசி.), ரா. இராகவையங்கார் (பதி.), செந்தமிழ், 1:1:1902 - 1:2:1902, நிறை.

64. ஐயனார் கதை - வில்லுப்பாட்டு, ஆசி.இ., சு. சௌந்தரபாண்டியன் (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 27:2000, நிறை.

65. கடம்பர்கோயில் உலா, ஆசி.இ., உ.வே. சாமிநாதையர் (பதி.), செந்தமிழ், 30:9:1932 - 30:12:1932, நிறை.

66. கட்டிமகிபன் பள்ளு, ஆசி.இ., வி.எஸ். கிருஷ்ணன் (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 13:1:1960 - 13:2:1960, நிறை.

67. கண்ணிநுண் சிறுதாம்பு, கோயில் கந்தாடையண்ணன் (ஆசி.), ரெ. இராமையங்கார் (பதி.), ஹரிசமய திவாகரன், 8:10:1931, நிறை.

68. கதிர்காமச் சிந்து, ஆசி.இ., பூ. சுப்பிரமணியம் (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 17:1:1965, நிறை.
69. கதிர்காம வேலவன் தோத்திரம், ஆசி.இ., வீ. சொக்கலிங்கம் (பதி.), சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ், 17:2:1963 - 17:3:1964, நிறை.
70. கந்தர் காதல், ஆசி.இ., வீ. சொக்கலிங்கம் (பதி.), சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ், 18:3:1965, நிறை.
71. கமலாலய அம்மன் பிள்ளைத்தமிழ், வைத்தியநாத தேசிகர் (ஆசி.), வீ. சொக்கலிங்கம் (பதி.), சரஸ்வதி மகால் நூலகப் பருவ இதழ், 21:2:1968 - 22:1,2,3:1969, நிறை.
72. கம்பராமாயண கவுத்துவமணிமாலை, நா.ரா. சிவராஜ பிள்ளை(ஆசி. & பதி.), செந்தமிழ், 26:4:1928, குறை.
73. கம்பராமாயண கவுத்துவமணிமாலை, நா.ரா. சிவராஜபிள்ளை (ஆசி.), மு. சண்முகம் பிள்ளை (பதி.), தமிழாய்வு, 9:1979, நிறை.
74. கர வகுப்பு, ஆசி.இ., எம்.பி.எஸ். துரைசாமி முதலியார் (பதி.), சித்தாந்தம், 10:2:1937, நிறை.
75. கரவைவேலன் கோவை, யாழ்ப்பாணம் நல்லூர் சின்னத்தம்பிப்புலவர் (ஆசி.), அ. குமாரசாமிப்பிள்ளை (பதி.), செந்தமிழ், 8:5:1910 - 8:9:1910, குறை.
76. கருணாகர மாலை, ஆசி.இ., மு. பசுபதி (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 9:1:1956, நிறை.
77. கருணாம்பிகை யமக அந்தாதி, தவத்திரு கந்தசாமி சுவாமிகள் (ஆசி.), ப.வெ. நாகராஜன் (பதி.), மாதாந்திர அமுதம், 9:2-6:1988, குறை.
78. கருணையந்தாதி, ஆசி.இ., வே.ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் (பதி.), சித்தாந்தம், 43:8:1970 - 43:11:1970, நிறை.
79. கருந்திட்டைக்குடிப் பதிகம், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் (ஆசி.), தி.செ. முருகதாச பிள்ளை (பதி.), தமிழ்ப்பொழில், 25:11:1950, நிறை.

80. கலியுக மாலை, ஆசி.இ., அ. மாதவையர் (பதி.), பஞ்சாமிர்தம், 2:5:1925, குறை.
81. கலைசைக் கோவை, சுப்பிரமணிய முனிவர் (ஆசி.), உ.வே. சாமிநாதையர் (பதி.), செந்தமிழ், 31:7:1933 - 32:8:1934, நிறை.
82. கலைமகளந்தாதி, ஆசி.இ., கி. வெங்கடசாமி ரெட்டியார் (பதி.), கலாநிலையம், 4:24:1931, நிறை.
83. களக்காட்டு சத்தியவாசகர் இரட்டைமணிமாலை, ஆசி.இ., உ.வே. சாமிநாதையர் (பதி.), கலைமகள், 2:1932, நிறை.
84. கள வகுப்பு, ஆசி.இ., எம்.பி.எஸ். துரைசாமி முதலியார் (பதி.), சித்தாந்தம், 10:2:1937, நிறை.
85. களவியற்றுறை விளக்கம், ஆசி.இ., சம்பந்தன் (பதி.), கலாநிலையம், 4:38:1931 - 4:49:1931, குறை.
86. கனா நூல், பொன்னவனார் (ஆசி.), ரா. இராகவையங்கார் (பதி.), செந்தமிழ், 1:3:1903, நிறை.
87. காஞ்சி மன்னனம்மானை, ஆசி.இ., ம. சீராளன் (பதி.), சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ், 23:1:1969 - 24:2:1971, நிறை.
88. காத்தவராயன் சுவாமி பேரில் கும்மிப்பாடல், ஆசி.இ., ச. திலகம் (பதி.), சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ், 42:1,2,3:1994, நிறை.
89. காரமடை ஆண்டாள் பதிகம், .தவத்திரு கந்தசாமி சுவாமிகள் (ஆசி.), ப.வெ. நாகராஜன் (உரை & பதி.), மாதாந்திர அமுதம், 19:6,7:1997-98, நிறை.
90. காரியார் நாரியார் பாப்பகுந்துகொண்ட திருவிளையாடல், பெரும்பற்றப்புலியூர் நம்பி (ஆசி.), சௌந்தரபாரதி (பதி.), விவேகபாநு, 2:3:1903, நிறை.
91. காரைக்காலம்மையார் சரித்திரம், ஆசி.இ., வே.ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் (பதி.), ஞானசம்பந்தம், 8:9:1949, நிறை.
92. காழியந்தாதி, ஆசி.இ., எஸ். சோமசுந்தர தேசிகர் (பதி.), செந்தமிழ், 10:5:1911, நிறை.

93. கீரநத்தம் விநாயகர் திருப்புகழ், தவத்திரு கந்தசாமி சுவாமிகள் (ஆசி.), ப.வெ. நாகராஜன் (பதி.), மாதாந்திர அமுதம், 19:12:1998, நிறை.
94. கீரநத்தம் விநாயகர் பதிகம், தவத்திரு கந்தசாமி சுவாமிகள் (ஆசி.), ப.வெ. நாகராஜன் (பதி.), மாதாந்திர அமுதம், 19:9:1998 - 19:11:1998, நிறை.
95. கீழ்வேளூர் உலா, அந்தகக்கவி வீரராகவ முதலியார் (ஆசி.), எஸ். சோமசுந்தர தேசிகர் (பதி.), செந்தமிழ், 24:6:1926 - 24:7:1926, குறை.
96. குமரகுருபர சுவாமிகள் சரித்திர சார பஞ்சகம், ஆசி.இ., பதி.இ., ஸ்ரீகுமரகுருபரர், 11:7:1989, நிறை.
97. குமரகுருபர சுவாமிகள் சரித்திரம், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை (ஆசி.), அ. நாராயண சுவாமி (குறிப். & பதி.), குமரகுருபரன், 26:3:1975 - 26:12:1975, நிறை.
98. குமாரபுரி முருகன் மும்மணிக்கோவை, வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் (ஆசி.), மு. பசுபதி (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 10:2:1957, நிறை.
99. குயில் ராமாயணம், ஆசி.இ., ம. சீராளன் (பதி.), சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ், 22:1,2,3:1969, நிறை.
100. குருகைமான்மியம் -1, திருக்குருகைப்பெருமாள் கவிராயர் (ஆசி.), திரு.கி. இராமானுஜையங்கார் (பதி.), செந்தமிழ், 30:1:1931 - 39:10:1942, நிறை.
101. குருகைமான்மியம் -2, திருக்குருகைப்பெருமாள் கவிராயர் (ஆசி.), திரு.கி. இராமானுஜையங்கார் (பதி.), செந்தமிழ், 39:10:1942, குறை.
102. குருநாதபூபதி பேரில் அட்டமங்கலம், ஆசி.இ., ச. திலகம் (பதி.), சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ், 33:1,2,3:1984, நிறை.
103. குருந்தமலை ஸ்ரீகுழந்தை வேலாயுதசாமி பிள்ளைத் தமிழ், தவத்திரு கந்தசாமி சுவாமிகள் (ஆசி.),

மருதாசலசாமி (பொழிப். & பதி.), மாதாந்திர அமுதம், 16:9:1995 - 17:10:1995-96, நிறை.

104. குருபரம்பரை, அழகிய நம்பிதாசர் (ஆசி.), திரு.கி. இராமானுஜையங்கார் (பதி.), செந்தமிழ், 25:12:1927 - 28:3:1930, நிறை.

105. குருபரம்பரை அகவல், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை (ஆசி.), மு. அப்பாவு பிள்ளை (பதி.), செந்தமிழ்ச்செல்வி, 3:1:1925, நிறை.

106. குருமுதற் பாசுர நூல், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் (ஆசி.), தவத்திரு சுந்தர சுவாமிகள் (பதி.), மாதாந்திர அமுதம், 10:7:1990, நிறை.

107. குருக்ஷேத்திர மாலை, ஆசி.இ., ம. சீராளன் (பதி.), சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ், 26:2,3:1974 - 27:1,2,3,:1975, நிறை.

108. குலோத்துங்கன் சோழன் கோவை, ஒட்டக்கூத்தர் (ஆசி.), வி.கோ. சூரிய நாராயண சாஸ்திரி (பதி.), ஞானபோதினி, 6:9:1903 - 6:12:1903, நிறை.

109. குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ், ஒட்டக்கூத்தர் (ஆசி.), எல். உலகநாத பிள்ளை (பதி.), தமிழ்ப்பொழில், 4:5-6:1928 - 5:5:1929, குறை.

110. கூடற்புராணம், ஆசி.இ., திரு.கி. இராமானுஜையங்கார் (பதி.), செந்தமிழ், 20:8:1922 - 26:11;1928, நிறை.

111. கூந்தலூர் அருட்பா மாலை, அழகிய சிற்றம்பல தேசிகர் (ஆசி.), எஸ். சோமசுந்தர தேசிகர் (பதி.), சித்தாந்தம், 11:6:1938, நிறை.

112. கைலாச நிகண்டு சூளாமணி, ஆசி.இ., எஸ். வையாபுரிப் பிள்ளை (பதி.), சக்தி, 1:3:1939 - 2:5:1940, நிறை.

113. கோதை நாய்ச்சியார் தாலாட்டு, ஆசி.இ., வ.ரா. கல்யாணசுந்தரம் (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 6:2:1953, நிறை.

114. கோமதி அந்தாதி, காவடிச்சிந்து அண்ணாமலை ரெட்டியார் (ஆசி.), அம்பை. சங்கரன் (பதி.), சித்தாந்தம், 28:10:1955, குறை.

115. கோமதி அந்தாதி, காவடிச்சிந்து அண்ணாமலை ரெட்டியார் (ஆசி.), அம்பை. சங்கரன் (பதி.), சித்தாந்தம், 49:1:1976, குறை.

116. கோவை இராமநாதபுரம் விநாயகர் பதிகம், தவத்திரு கந்தசாமி சுவாமிகள் (ஆசி.), ப.வெ. நாகராஜன் (உரை & பதி.), மாதாந்திர அமுதம், 19:2,3:1997, நிறை.

117. கௌமார விநோத நூல், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் (ஆசி.), தவத்திரு சுந்தர சுவாமிகள் (பதி.), மாதாந்திர அமுதம், 10:8:1990, நிறை.

118. சக்தி வகுப்பு, ஆசி.இ., எம்.பி.எஸ். துரைசாமி முதலியார் (பதி.), சித்தாந்தம், 10:2:1937, நிறை.

119. சங்கர சிவக்கொழுந்து மாலை, பனங்குடி கந்தசாமி பிள்ளை (ஆசி.), சொ. சிங்காரவேலன் (பதி.), ஞானசம்பந்தம், 22:1:1962, நிறை.

120. சங்கர சோழனுலா, ஆசி.இ., திரு. நாராயணையங்கார் (பதி.), செந்தமிழ், 7:12:1909 - 8:7:1910, நிறை.

121. சங்கர நயினார் கோயில் அந்தாதி, ஆசி.இ., உ.வே. சாமிநாதையர் (பதி.), செந்தமிழ், 31:1:1932 - 31:5:1933, குறை.

122. சங்கரலிங்க உலா, ஆசி.இ., உ.வே. சாமிநாதையர் (பதி.), சிவநேசன், -:-:1933, நிறை.

123. சட்டைநாதர் தோத்திரம், ஆசி.இ., இராம. திலகம் (பதி.), சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ், 27:1,2,3:1975, நிறை.

124. சதுரங்க நூல், கபிலர் (ஆசா.), திரு.கா. இராமாநுஜையங்கார் (பதா.), செந்தமிழ், 24:5:1926, நிறை.

125. சரப புராணம், ஆசி.இ., வீ. சொக்கலிங்கம் (பதி.), சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ், 24:2:1971 - 25:3:1972, நிறை.

126. சரித்திர சார வண்ணம், தவத்திரு கந்தசாமி சுவாமிகள் (ஆசி.), இல. பழனிச்சாமி (உரை & பதி.), மாதாந்திர அமுதம், 9:9:1989 - 10:7:1990, நிறை.

127. சனிபகவான் தோத்திரம், ஆசி.இ., மு. பசுபதி (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவஇதழ், 7:1:1954, நிறை.

128. சாத்தூர் நொண்டி, ஆசி.இ., சம்பந்தம் (பதி.), சக்தி, 1:1:1939 - 1:2:1939, குறை.

129. சிதம்பரச் செய்யுட்கோவை, ஸ்ரீகுமரகுருபரர் (ஆசி.), ய. மணிகண்டன் (பதி.), சரஸ்வதிமகால் நூலகப் பருவஇதழ், 45:1-4:1999, நிறை.

130. சிதம்பரப்பாட்டியல் - உரையுடன், பரஞ்சோதியார் (ஆசி.), மு. இராகவையங்கார் (பதா.), செந்தமிழ், 5:5:1907 - 6:5:1908, நிறை.

131. சிதம்பர விலாசம், ஆசி.இ., மு. பசுபதி (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவஇதழ், 5:2:1952, நிறை.

132. சிதம்பர விலாசம், ஆசி.இ., தா. பட்டுச்சாமி ஓதுவார் (குறிப்.), குமரகுருபரன், 3:10:1952 - 3:11:1952, நிறை.

133. சித்தரந்தாதி, சித்தர் (ஆசி.), எல். உலகநாத பிள்ளை (பதி.), தமிழ்ப்பொழில், 12:5:1936 - 12:7:1936, நிறை.

134. சிரவை சற்குரு பதிகம், தவத்திரு கந்தசாமி சுவாமிகள் (ஆசி.), தவத்திரு சுந்தரசுவாமிகள் (பதி.), மாதாந்திர அமுதம், 13:11:1992, நிறை.

135. சிராமலைக் கோவை, ஆசி.இ., உ.வே. சாமிநாதையர் (பதி.), செந்தமிழ், 32:9:1934 - 34:4:1936, நிறை.

136. சிராமலையந்தாதி, வேம்பையர்கோன் நாராயணன் (ஆசி.), டி,வா. சதாசிவப் பண்டாரத்தார் (பதி.), தமிழ்ப்பொழில், 11:1:1935, நிறை.

137. சிவகாமி அம்மன் பேரில் அகவல், ஆசி.இ., இராம. திலகம் (பதி.), சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ், 26:2,3:1974, நிறை.

138. சிவசயிலப் பள்ளு, இராமநாதன் கவிராயர் (ஆசி.), கு. அருணாசலக் கவுண்டர் (பதி.), ஞானசம்பந்தம், 20:12:1961 - 21:5:1962, குறை.

139. சிவசிவ வெண்பா, ஆசி.இ., உ.வே. சாமிநாதையர் (பதி.), கலைமகள், 11:64:1937 - 11:66:1937, நிறை.

140. சிவபாரத சரித்திரம் (உரைநடை), பரமானந்தர் - கவீந்திரர் (ஆசி.), ம. சீராளன் (பதி.), சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ், 24:3:1971 - 25:3:1972, நிறை.

141. சிவானந்த போதம், ஆசி.இ., எல். உலகநாத பிள்ளை (பதி.), செந்தமிழ்ச்செல்வி, 2:2:1924, நிறை.

142. சிறுத்தொண்டன் சிந்து, ஆசி.இ., த. பெரியாண்டவன் (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 15:1:1962, நிறை.

143. சிறுவேளூர் அருட்பா மாலை, அழகிய சிற்றம்பலக் கவிராயர் (ஆசி.), எஸ். சோமசுந்தர தேசிகர் (பதி.), சித்தாந்தம், 11:6:1938, நிறை.

144. சிறைவிடந்தாதி, கோனேரிப் புலவன் (ஆசி.), சு. நல்ல சிவன் பிள்ளை (பதி.), செந்தமிழ், 19:6:1921 - 19:10:1921, நிறை.

145. சிறைவிடந்தாதி, கோனேரிப் புலவன் (ஆசி.), க. இனியன் கருப்பக்கிளர் (பதி.), குமரகுருபரன், 5:1:1954 - 5:4:1954, நிறை.

146. சுந்தரர் சரித்திரச் சுருக்க அகவல், ஆசி.இ., ச. திலகம் (பதி.), சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ், 43:3,4: 1997, நிறை.

147. சுமிருதி சந்திரிகை - உரைநடை, ஆசி.இ., வீ. சொக்கலிங்கம் (பதி.), சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ், 23:2,3:1970 - 24:2:1971, நிறை.

148. சுவாமிநாதம், கல்லிடையூர் சாமிகவிராசன் (ஆசி.), இராம. கோவிந்தசாமிப் பிள்ளை (பதி.), தமிழ்ப் பொழில், 4:7-9:1928, குறை.

149. செட்டிச்சியம்மாள் கதை, ஆசி.இ., ச. திலகம் (பதி.), சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ், 45:1-4:1999, நிறை.

150. செந்தில் வேலவன் தோத்திரம், ஆசி.இ., வீ. சொக்கலிங்கம் (பதி.), சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ், 17:3:1964, நிறை.

151. சேலம் தாலந்தீர்த்த செழியன் மஞ்சரி, ஆசி.இ., மு. சண்முகம் பிள்ளை (பதி.), தமிழாய்வு, 7:1978, நிறை.

152. சொரூப வகுப்பு, ஆசி.இ., எம்.பி.எஸ். துரைசாமி முதலியார் (பதி.), சித்தாந்தம், 10:2:1937, நிறை.

153. சோடசகலா பிராசாத யோகம், ஆசி.இ., எஸ். சோமசுந்தர தேசிகர் (பதி.), செந்தமிழ், 9:5:1911, நிறை.

154. சோடசகலா பிராசாத விருத்தம், ஆசி.இ., எஸ். சோமசுந்தர தேசிகர் (பதி.), செந்தமிழ், 28:12:1930, நிறை.

155. சௌமியநாராயணப் பெருமாள் திருநாள் வாகனக்கவி, அரிதாசன் (ஆசி.), மு. அருணாசலம் (பதி.), செந்தமிழ், 39:3:1942, நிறை.

156. ஞான உலா, ஆசி.இ., மு. பசுபதி (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 8:1:1955, நிறை.

157. ஞானக்குறவஞ்சி, ஆசி.இ., வீ. சொக்கலிங்கம் (பதி.), சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ், 26:1,2,3:1974, நிறை.

158. ஞானசாரம், கண்ணுடைய வள்ளல் (ஆசி.), இராம. கோவிந்தசாமிப் பிள்ளை (பதி.), சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ், 13:3:1959, நிறை.

159. ஞானசாரம், கண்ணுடைய வள்ளல் (ஆசி.), பதி.இ., சித்தாந்தம், 34:10:1961, நிறை.

160. ஞானவந்தாதி, வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் (ஆசி.), தவத்திரு சுந்தர சுவாமிகள் (பதி.), மாதாந்திர அமுதம், 10:9:1990, நிறை.

161. ஞானவம்மானை, குமாரதேவர் (ஆசி.), ம. சீராளன் (பதி.), சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ், 21:1:1967, நிறை.

162. ஞானாமிர்தம் - பழைய உரையுடன், வாகீசர் (ஆசி.), கு. சுந்தரமூர்த்தி (பதி.), ஸ்ரீகுமரகுருபரர், 8:11:1986 முதல் தொடர்ந்து.

163. ஞானாமிர்தம் - மூலமும் விளக்கவுரையும், வாகீசர் (ஆசி.), ஔவை சு. துரைசாமிப் பிள்ளை (உரை & பதி.), சித்தாந்தம், 8:7:1935 - 11:8:1938, நிறை.

164. தசகாரியம், ஆசி.இ., அனவரதவிநாயகம் பிள்ளை (பதி.), சித்தாந்தம், 12:6:1936, நிறை.

165. தசாவதாரப் பத்து, ஆசி.இ., த. கிருட்டிணமூர்த்தி (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 14:1:1961, நிறை.

166. தஞ்சை வெள்ளைப்பிள்ளையார் குறவஞ்சி, ஆசி.இ., வீ. சொக்கலிங்கம் (பதி.), சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ், 16:1:1962 - 16:3:1962, நிறை.

167. தணிகை வெண்பா, கந்தப்பய்யர் (ஆசி.), வே.ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் (உரை & பதி.), சித்தாந்தம், 43:6:1970 - 44:11:1971, நிறை.

168. தண்டபாணி மாலை, தவத்திரு கந்தசாமி சுவாமிகள் (ஆசி.), தவத்திரு சுந்தர சுவாமிகள் (பதி.), மாதாந்திர அமுதம், 14:7:1993, நிறை.

169. தண்டலையார் சதகம், படிக்காசுப்புலவர் (ஆசி.), சே.ரா. சுப்பிரமணியக் கவிராயர் (பதி.), செந்தமிழ், 19:9:1921, நிறை.

170. தத்துவ விளக்கம், சம்பந்த சரணாலயர் என்கின்ற காழிக்கண்ணுடைய வள்ளலார் (ஆசி.), எல். உலகநாத பிள்ளை (பதி.), செந்தமிழ்ச் செல்வி, 2:3:1924, நிறை.

171. தத்துவ விளக்கம், கண்ணுடைய வள்ளல் (ஆசி.), எல். உலகநாத பிள்ளை (பதி.), தமிழ்ப்பொழில், 4:10-12:1929, நிறை.

172. தத்துவ விளக்கம், கண்ணுடைய வள்ளல் (ஆசி.), இராம. கோவிந்தசாமிப் பிள்ளை (பதி.), சரஸ்வதி மகால் நூலகப் பருவ இதழ், 13:3:1959, நிறை.

173 தமிழ்நெறி விளக்கம், ஆசி.இ., உ.வே. சாமிநாதையர் (பதி.), கலைமகள், 10:55-60:1936 - 11:61-66:1937, குறை.

174. தருக்க சூத்திரம், ஆசி.இ., ரா. இராகவையங்கார் (பதி.), செந்தமிழ், 1:10:1902 மற்றும் 7:1:1908, நிறை.

175. தளசிங்க மாலை, அழகிய சிற்றம்பலக் கவிராயர் (ஆசி.), எஸ். சோமசுந்தர தேசிகர் (பதி.), செந்தமிழ், 6:1:1907, குறை.

176. தளவாய் ரெகுநாத சேதுபதியவர்கள் மீது வண்ணம், ஆசி.இ., சே.ரா. சுப்பிரமணியக் கவிராயர் (பதி.), செந்தமிழ், 17:2:1918, நிறை.

177. தனிப்பாடற்றிரட்டு, ஆசி.இ., அ. மாதவையர் (பதி.), பஞ்சாமிர்தம், 2:6:1925 - 2:7:1925, குறை.

178. தாயுமானவர் மடல் - குறிப்புரையுடன், ஆசி.இ., வே.ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் (குறிப். & பதி.), ஞானசம்பந்தம், 8:1:1948 - 8:6:1949, நிறை.

179. தாள சமுத்திரம் - உரையுடன், பரத சூடாமணி (ஆசி.), எல். உலகநாத பிள்ளை (பதி.), செந்தமிழ்ச் செல்வி, 1:7:1923 - 1:11:1923, குறை.

180. தாளவோத்து - நூற்றெட்டுத் தாளங்கள், ஆசி.இ., எல். உலகநாத பிள்ளை (பதி.), செந்தமிழ்ச் செல்வி, 1:3:1923 - 1:4:1923, நிறை.

181. திணைமாலை நூற்றைம்பது - மூலமும் உரையும், கணிமேதாவியார் (ஆசி.), ரா. இராகவையங்கார் (பதி.), செந்தமிழ், 3:-:1904 - 1908, நிறை.

182. தியாகராசர் பள்ளேசல், ஞானப்பிரகாசர் (ஆசி.), எல். உலகநாத பிள்ளை (பதி.), தமிழ்ப்பொழில், 13:3:1937 13:8:1937, குறை.

183. திரிபதார்த்த தசகாரியம், ஆசி.இ., ஜெ.எம். நல்லசாமி (பதி.), சித்தாந்தம், 4:7:1915, நிறை.

184. திருஇலஞ்சி முருகன் உலா, பண்டாரக் கவிராயர் (ஆசி.), உ.வே. சாமிநாதையர் (பதி.), கலைமகள், 6:31-36:1934, நிறை.

185. திருஈங்கோய்மலை எழுபது, நக்கீரர் (ஆசி.), மு. அருணாசலம் (பதி.), சித்தாந்தம், 34:10:1961, நிறை.

186. திருஉருமாமலைச் சிலேடை வெண்பா, ஆசி.இ., பதி.இ., விவேகபாநு, 6:12:1907, நிறை.

187. திருக்கயிலாய ஞான உலா, ஆசி.இ., வை. சுந்தரேச வாண்டையார் (பதி.), செந்தமிழ், 45:9,10:1948 - 46:2:1949, நிறை.

188. திருக்கலம்பகம் - மூலமும் உரையும், உதீசி தேவர் (ஆசி.), மு. இராகவையங்கார் (பதி.), செந்தமிழ், 5:7:1907 - 6:4:1908, நிறை.

189. திருக்கழுக்குன்றச் சிலேடை வெண்பா, காஞ்சி மகாவித்துவான் சபாபதி முதலியார் (ஆசி.), உ.வே. சாமிநாதையர் (பதி.), சிவநேசன், 7:-:1933, நிறை.

190. திருக்கழுக்குன்ற மாலை, அந்தகக்கவி வீரராகவ முதலியார் (ஆசி.), பி.எஸ். சுலோசனா (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 4:1:1951, நிறை.

191. திருக்காளத்தி இட்டகாமியமாலை, சேறைக்கவிராசர் (ஆசி.), உ.வே. சாமிநாதையர் (பதி.), கலைமகள், 14:82:1938 - 14:83:1938, குறை.

192. திருக்குணமங்கலம் அருட்பா மாலை, அழகிய சிற்றம்பல தேசிகர் (ஆசி.), எஸ். சோமசுந்தர தேசிகர் (பதி.), சித்தாந்தம், 11:6:1938, நிறை.

193. திருக்குருகூர்த் திருப்பணிமாலை, ஆசி.இ., திரு.கி. இராமாநுஜையங்கார் (பதி.), செந்தமிழ், 46:1:1949 - 46:8,9:1950, நிறை.

194. திருக்குறள் அதிகார சாரமாகிய திருத்தாலாட்டு, யாழ்ப்பாணம் வ.ஞா. கணேச பண்டிதர் (ஆசி.), ஆர்.எஸ். பதி (பதி.), செல்வக்களஞ்சியம், 1:4:1926 - 1:6:1926, நிறை.

195. திருக்குறுங்குடி அழகியநம்பி பிள்ளைத்தமிழ், ஆசி.இ., திரு.கி. இராமாநுஜையங்கார் (பதி.), செந்தமிழ், 47:1:1950 - 46:4.5:1951, குறை.

196. திருக்குற்றால ஊடற்பிரபந்தம், திரிகூடராசப்பக் கவிராயர் (ஆசி.), மே.சொ. சுப்பிரமணியக் கவிராயர் (பதி.), செந்தமிழ், 25:1:1927, நிறை.

197. திருக்குற்றாலக் குறவஞ்சி, திரிகூடராசப்பக் கவிராயர் (ஆசி.), உ.வே. சாமிநாதையர் (பதி.), கலைமகள், 6:31-36:1934 - 8:43-48:1935, நிறை.

198. திருக்குற்றாலச் சிலேடை வெண்பா, திரிகூடராசப்பக் கவிராயர் (ஆசி.), உ.வே. சாமிநாதையர் (பதி.), கலைமகள், 16:91:1939 - 17:102:1940, நிறை.

199. திருக்குற்றால மாலை, திரிகூடராசப்பக் கவிராயர் (ஆசி.), திரு.கி. இராமாநுஜையங்கார் (பதி.), செந்தமிழ், 19:7:1921 - 19:9:1921, குறை.

200. திருச்சிறுபுலியூர் உலா, வடமலையப்பன் கவிராயர் (ஆசி.), திரு.கி. இராமாநுஜையங்கார் (பதி.), செந்தமிழ், 46:2:1949 - 46:10-12:1950, நிறை.

201. திருச்செங்கோட்டகவல், ஆசி.இ., வீ. சொக்கலிங்கம் (பதி.), சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ், 19:1,2:1966, நிறை.

202. திருச்செந்திற் கலம்பகம், சுவாமிநாத தேசிகர் (ஆசி.), சே.ரா. சுப்பிரமணியக் கவிராயர் (பதி.), செந்தமிழ், 2:7:1904 - 3:2:1904, நிறை.

203. திருச்செந்தூர்பரணி, சீனிச்சர்க்கரைப் புலவர் (ஆசி.), பதி.இ., செந்தமிழ், 28:5:1930, குறை.

204. திருச்செந்தூர் முருகக் கடவுள் நற்றாய் இரங்கல் வண்ணம், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் (ஆசி.), இல. பழனிச்சாமி (உரை & பதி.), மாதாந்திர அமுதம், 19:12:1998 - 20:3:1998, நிறை.

205. திருச்சோற்றுத்துறை தலபுராணம், திருவிடைமருதூர் அம்பலவாண தேசிகர் (ஆசி.), இராம. கோவிந்தசாமிப்

பிள்ளை (பதி.), சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ், 12:3:1958 - 14:1:1960, நிறை.

206. திருஞானசம்பந்த சுவாமிகள் ஆனந்தக்களிப்பு, மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை (ஆசி.), தி.சு. கோவிந்தசாமிப் பிள்ளை (பதி.), மெய்கண்டார், 9:6:1991, நிறை.

207. திருஞானசம்பந்த சுவாமிகள் திருத்தாலாட்டு, கண்ணுடைய வள்ளல் (ஆசி.), ப.அ. முத்துத் தாண்டவராய பிள்ளை (பதி.), செந்தமிழ்ச்செல்வி, 8:1:1930, நிறை.

208. திருஞானசம்பந்த சுவாமிகள் பிள்ளைத்தமிழ், மாசிலாமணி தேசிகர் (ஆசி.), எஸ். சோமசுந்தர தேசிகர் (பதி.), செந்தமிழ், 16:7:1918, குறை.

209. திருஞானசம்பந்த சுவாமிகள் பிள்ளைத்தமிழ், மாசிலாமணி தேசிகர்(ஆசி.), ம. சீராளன் (பதி.), சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ், 19:1,2:1966 - 20:1:1966, நிறை.

210. திருஞானசம்மபந்தர் பிள்ளைத்தமிழ், மாணிக்கவாசக தேசிகர் (ஆசி.), ந.ரா. முருகவேள் (பதி.), திருக்கோயில், 7:1:1964 - 7:12:1965, நிறை.

211. திருஞானத்தாழிசை, ஆசி.இ., ப. சிதம்பரம் பிள்ளை (பதி.), செந்தமிழ்ச் செல்வி, 23:8:1949 - 23:9:1949, நிறை.

212. திருத்தணிகைத் திருவிருத்தம், தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர் (ஆசி.), உ.வே. சாமிநாதையர் (பதி.), செந்தமிழ், 5:1:1906, நிறை.

213. திருத்தணிகை முருகன் தாலாட்டு, ஆசி.இ., கிருஷ்ணா சஞ்சீவி (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 14:2:1961, நிறை.

214. திருத்தொட்டிக்கலைக் கேசவப்பெருமாள் வண்ணம், தொட்டிக்கலை ஸ்ரீசுப்பிரமணிய முனிவர் (ஆசி.), திரு.கி. இராமாநுஜையங்கார் (பதி.), செந்தமிழ், 20:2:1921-22, நிறை.

215. திருத்தொண்டர் மாலை, குமாரபாரதி (ஆசி.), ந. வேங்கடாசாரியன் (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 3:1:1950, நிறை.

216. திருநறையூர்நம்பி மேகவிடுதூது, ஆசி.இ., திரு.கி. இராமாநுஜையங்கார் (பதி.), செந்தமிழ், 19:4:1921, குறை.

217. திருநாதர் குன்றத்துப் பதிகம், ஆசி.இ., ஆதிமைந்தன் (பதி.), நல்லறம், 3:11:1950 - 3:12:1960, நிறை.

218. திருநாவுக்கரசு சுவாமிகள் சரித்திரச் சுருக்க அகவல், பர்வத சஞ்சீவி அய்யர் (ஆசி.), ச. திலகம் (பதி.), சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ், 40:3,4:1992, நிறை.

219. திருநீலகண்டர் பள்ளு, ஆசி.இ., கொடுமுடி சண்முகப் பிரகதம் (பதி.), தேனோலை, 13:1977, நிறை.

220. திருநூற்றந்தாதி - மூலமும் உரையும், அவிரோதிநாதர் (ஆசி.), ரா. இராகவையங்கார் (பதி.), செந்தமிழ், 1;★;1903 - 2:1:1903, நிறை.

221. திருநெறி விளக்கம், கண்ணுடைய வள்ளல் (ஆசி.), தி.கி. நாராயணசாமி நாயுடு (பதி.), சித்தாந்தம், 1959-60, நிறை.

222. திருநெறி விளக்கம், கண்ணுடைய வள்ளல் (ஆசி.), இராம. கோவிந்தசாமிப் பிள்ளை (பதி.), சரஸ்வதி மகால் நூலகப் பருவ இதழ், 13:3:1959, நிறை.

223. திருப்பணி மாலை, ஞானதேசிகம் பிள்ளை (ஆசி.), பொ. பாண்டித்துரைத் தேவர் (பதி.), செந்தமிழ், 6:4:1908 - 7:2:1909, குறை.

224. திருப்பதிக்கோவை, திருவரங்கத்து அமுதனார் (ஆசி.), ரெ. இராமையங்கார் (பதி.), செந்தமிழ், 44:4,5:1947, நிறை.

225. திருப்பரங்கிரிக் குமரனூசல், திருஎவ்வுளூர் இராமசாமி செட்டியார் (ஆசி.), பதி.இ., ஞானபோதினி, 4:8:1901, நிறை.

226. திருப்பரங்கிரிக் குமரன் தாலாட்டு, ஆசி.இ., பதி.இ., ஞானபோதினி, 3:9:1900, நிறை.

227. திருப்பழனி முருகக்கடவுள் கலவி மகிழ்தல் வண்ணம், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் (ஆசி.), இல. பழனிச்சாமி (உரை & பதி.), மாதாந்திர அமுதம், 20:4:1998 - 29:7:1999, நிறை.

228. திருப்புகலூர் அருட்பா மாலை, அழகிய சிற்றம்பல தேசிகர் (ஆசி.), எஸ். சோமசுந்தர தேசிகர் (பதி.), சித்தாந்தம், 11:6:1938, நிறை.

229. திருப்புகழ் - வெளிவராத இரு பாடல்கள், அருணகிரிநாதர் (ஆசி.), பதி.இ., சித்தாந்தம், 10:2:1937, நிறை.

230. திருப்புல்லாணி எம்பெருமான் மீது பாடிய தாலாட்டு, செந்தமிழ் வீரராகவன் (ஆசி.), மு. பசுபதி (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 14:1:1961, நிறை.

231. திருப்புல்லாணி எம்பெருமான் மீது பாடிய திருவனந்தல், செந்தமிழ் வீரராகவன் (ஆசி.), மு. பசுபதி (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 14:1:1961, நிறை.

232. திருப்புல்லாணி எம்பெருமான் மீது பாடிய நலங்கு, செந்தமிழ் வீரராகவன் (ஆசி.), மு. பசுபதி (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 14:1:1961, நிறை.

233. திருப்புல்லாணி எம்பெருமான் மீதும் பதுமாசனித் தாயார் மீதும் பாடிய கிளைப்பாட்டு, செந்தமிழ் வீரராகவன் (ஆசி.), மு. பசுபதி (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 14:1:1961, நிறை.

234. திருப்புல்லாணிச் செகநாதர் பேரில் ஊசல், ஆசி.இ., திரு.கி. இராமானுஜையங்கார் (பதி.) செந்தமிழ், 39:7:1942, நிறை.

235. திருப்புல்லாணிச் செகநாதர் பேரில் சிந்து, ஆசி.இ., திரு.கி. இராமானுஜையங்கார் (பதி.), செந்தமிழ், 39:5:1942, நிறை.

236. திருப்புல்லாணிச் செகநாதர் பேரில் வண்ணம், ஆசி.இ., திரு.கி. இராமானுஜையங்கார் (பதி.), செந்தமிழ், 39:7:1942, நிறை.
237. திருப்புல்லாணிச் செகநாதர் பேரில் வண்ணம், ஆசி.இ., திரு.கி. இராமானுஜையங்கார் (பதி.), செந்தமிழ், 39:7:1942, நிறை.
238. திருப்புல்லாணி நொண்டி நாடகம் - குறிப்புரையுடன், ஆசி.இ., திரு.கி. இராமானுஜையங்கார் (பதி.), செந்தமிழ், 47:6-7:1951 - 47:10-12:1951, நிறை.
239. திருப்புல்லாணிப் பதுமாசனித் தாயார் பேரில் ஊசல், ஆசி.இ., திரு.கி. இராமானுஜையங்கார் (பதி.), செந்தமிழ், 39:7:1942, நிறை.
240. திருப்புல்லாணி மாலை, ஆசி.இ., திரு. நாராயணையங்கார் (பதி.), செந்தமிழ், 1915, நிறை.
241. திருமயிலாபுரிப் பத்து, ஆசி.இ., மு.கோ. இராமன் (பதி.), முக்குடை, 6:3:1979, நிறை.
242. திருமயிலை உவமை வெண்பா, நடலிங்க கவிராசர் (ஆசி.), பதி.இ., குமரகுருபரன், 5:7:1954 - 6:3:1955, நிறை.
243. திருமயிலை யமகவந்தாதி - மூலமும் பழைய உரையும், ஆசி.இ., உ.வே. சாமிநாதையர் (பதி.), சிவநேசன், திங்கள் 9இன் அனுபந்தம், 1935-36, நிறை.
244. திருமலையாண்டவர் குறவஞ்சி, ஆசி.இ., உ.வே. சாமிநாதையர் (பதி.), கலைமகள், 13:73:1937 - 14:81:1938, நிறை.
245. திருமலை வெண்பா, ஆசி.இ., டி.வி. சதாசிவ பண்டாரத்தார் (பதி.), தமிழ்ப்பொழில், 5:7-8:1929, குறை.
246. திருமாலிருஞ்சோலைமலை அழகர் பிள்ளைத்தமிழ், ஆசி.இ., திரு. நாராயணையங்கார் (பதி.), செந்தமிழ், 16:8:1918 - 17:4:1919, நிறை.
247. திருமுருகாற்றப்படை - உரையாசிரியருரையுடன், நக்கீரர் (ஆசி.), எஸ். வையாபுரிப்பிள்ளை (பதி.), செந்தமிழ், 38:1:1940 - 40:5:1943, நிறை.

248. திருமூலர் தியானக்குறிப்பு (திருமந்திர மாலை), ஆசி.இ., வ.ரா. கல்யாண சுந்தரம் (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 1:2:1949, நிறை.
249. திருமேற்றிசையந்தாதி, ஆசி.இ., மயிலை சீனி. வேங்கடசாமி (பதி.), நல்லறம், 3:3:1960 - 3:6:1960, நிறை.
250. திருவள்ளுவர் பிள்ளைத்தமிழ், திரு.நா. கனகராசையர் (ஆசி.), ஆர்.கே. பார்த்தசாரதி மற்றும் பூ. சுப்பிரமணியம் (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 18:2:1968 - 19:1:1969, நிறை.
251. திருவாசக அநுபூதி, ஆசி.இ., சீகாழித் தாண்டவராயர் (உரை), குமரகுருபரன், 16:6:1965 - 20:11:1969, நிறை.
252. திருவாரூருலா, அந்தகக்கவி வீரராகவ முதலியார் (ஆசி.), உ.வே. சாமிநாதையர் (பதி.), செந்தமிழ், 3:4:1905 - 4:1:1905, நிறை.
253. திருவாரூர் இரட்டைமணிமாலை, சதாசிவ தேசிகர் (ஆசி.), எஸ். சோமசுந்தர தேசிகர் (பதி.), செந்தமிழ், 18:1:1919, நிறை.
254. திருவாரூர்க் கமலைப் பராசக்தி மாலை, ஆசி.இ., பதி.இ., திருக்கோயில், 21:10:1979, நிறை.
255. திருவாரூர் மும்மணிக்கோவை, சேரமான் பெருமாள் நாயனார் (ஆசி.), சி.கே. சுப்பிரமணிய முதலியார் (உரை & பதி.), ஞானசம்பந்தம், 8:11:1949 - 9:2:1950, நிறை.
256. திருவாவடுதுறை குருபரம்பரை, பூஜை சுப்பிரமணியத் தம்பிரான் (ஆசி.), பதி.இ., சித்தாந்தம், 12:7:1939, நிறை.
257. திருவானைக்காவுலா, காளமேகப் புலவர் (ஆசி.), எஸ். சரவண பிள்ளை (பதி.), உண்மை விளக்கம் எனும் சித்தாந்த தீபிகை, 1:3:1897 - 1:11:1898, நிறை.
258. திருவான்மியூர் சிவபெருமான் பதிகம், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் (ஆசி.), பதி.இ., சித்தாந்தம், 39:4:1966, நிறை.

259. திருவிசைப்பாவுடையார் துவாதசமாலை, ஆசி.இ., ப.அ. முத்துத் தாண்டவராய பிள்ளை (பதி.), செந்தமிழ்ச் செல்வி, 9:12:1931 - 10:1:1932, நிறை.

260. திருவிடைமருதூர் அருட்பா மாலை, அழகிய சிற்றம்பல தேசிகர் (ஆசி.), எஸ். சோமசுந்தர தேசிகர் (பதி.), சித்தாந்தம், 11:6:1938, நிறை.

261. திருவிளையாடற் கருணைத் திருவிருத்தம், ஆசி.இ., எஸ். வையாபுரிப் பிள்ளை (பதி.), கலாநிலையம், 8:11:1935, நிறை.

262. திருவிளையாடற் கருணைத் திருவிருத்தம், ஆசி.இ., எஸ். வையாபுரிப் பிள்ளை (பதி.), சித்தாந்தம், 8:8:1935, நறை.

263. திருவிளையாடற் பயகரமாலை, ஆசி.இ., சு. சௌந்தரபாண்டியன் (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 25:1998, குறை.

264. திருவூடல், ஆசி.இ., இராம. திலகம் (பதி.), சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ், 28:1-3:1976, நிறை.

265. திருவையாற்றுத் தருமசம்வர்த்தனி மாலை, ஆசி.இ., மு.கோ. இராமன் (பதி.), ஞானசம்பந்தம், 38:5:1979 - 38:8:1979, நிறை.

266. திருவையாற்றுப் பதிற்றுப்பத்தந்தாதி, திருவையாறு ஸ்ரீமுத்துச்சாமி பாரதி (ஆசி.), இராம. கோவிந்தசாமிப் பிள்ளை (உரை & பதி.), ஞானசம்பந்தம், 29:12:1970 - 32:12:1973, நிறை.

267. தில்லை இதழகல் அந்தாதி, வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் (ஆசி.), தவத்திரு கந்தசாமி சுவாமிகள் (உரை), தவத்திரு சுந்தர சுவாமிகள் (பதி.), மாதாந்திர அமுதம், 4:2:1983 - 5:10:1985, நிறை.

268. தில்லையுலா, ஆசி.இ., எல். உலகநாத பிள்ளை (பதி.), தமிழ்ப்பொழில், 1212:1937 - 13:1:1939, குறை.

269. தினகர வெண்பா, ஆசி.இ., எஸ். வையாபுரிப்பிள்ளை (பதி.), கலாநிலையம், 5:5:1932 - 5:11:1932, நிறை.

270. தீபங்குடிப் பத்து, ஆசி.இ., மு.கோ. இராமன் (பதி.), முக்குடை, 6:3:1979, நிறை.

271. தென்சேரி மாலை, பழனிமலை உபாத்தியாயர் (ஆசி.), சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார் (பதி.), கொங்கு மலர், 3:1:1936, குறை.

272. தேரூர்ந்த சோழன் கதை - உரைநடை, ஆசி.இ., ச. திலகம் (பதி.), சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ், 38:1-3:1989, நிறை.

273. தேவிகாலோத்ர ஆகமம் - தமிழ் மூலமும் சித்தாந்தரத்ன விருத்தி என்னும் உரையும், சிவாக்கிர யோகிகள் (ஆசி.), பொ. முத்தையா பிள்ளை (உரை & பதி.), சிவநேசன், 8:1:1934 - 9:-:1935, நிறை.

274. தேவிமான்மியம், நல்லதம்பிப் பிள்ளை (ஆசி.), வே.ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் (உரை & பதி.), ஞானசம்பந்தம், 9:-:1949 - 12:-:1952, நிறை.

275. தேவையுலா, பலபட்டடை சொக்கநாத கவிராயர் (ஆசி.), உ.வே. சாமிநாதையர் (பதி.), செந்தமிழ், 5:3:1907 - 5:6:1907, நிறை.

276. தையல்நாயகி அந்தாதி - மூலமும் உரையும், சாமி. பொன்னுபாத்தியாயர் (ஆசி.), இராம. கோவிந்தசாமிப் பிள்ளை (உரை & பதி.ப), ஞானசம்பந்தம், 24:11:1965 - 27:3:1968, நிறை.

277. தொட்டிக்கலைக் கேசவப்பெருமாள் இரட்டைமணி மாலை, தொட்டிக்கலை ஸ்ரீசுப்பிரமணிய முனிவர் (ஆசி.), மு. இராகவையங்கார் (பதி.), செந்தமிழ், 5:1:1906, நிறை.

278. தொல்காப்பியம் சொல்லதிகாரம் - கல்லாடர் விருத்தியுரை, தொல்காப்பியர் (ஆசி.), கு. சுந்தரமூர்த்தி (பதி.), ஞானசம்பந்தம், 9:2:1950 - 23:-:1963, நிறை.

279. தொல்காப்பியம் பொருளதிகாரம் செய்யுளியல் நச்சினார்க்கினியம், தொல்காப்பியர் (ஆசி.), ரா. இராகவையங்கார் (பதி.), செந்தமிழ், 2:8:1904 - 6:-:1908, நிறை.

280. தோத்திர வெண்பா, ஆசி.இ., பதி.இ., ஞான போதினி, 3:1:1899, குறை.

281. நந்திக் கலம்பகம், ஆசி.இ., அ. கோபாலையர் (பதி.), செந்தமிழ், 24:8:1926, குறை.

282. நம்மாழ்வார் ஊஞ்சற் கவிதை, ஆசி.இ., வி.எஸ். கிருஷ்ணன் (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 12:2:1959, நிறை.

283. நம்மாழ்வார் திருக்கோலக்கவி, ஆசி.இ., த. கிருட்டிணமூர்த்தி (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 14:1:1961, நிறை.

284. நம்மாழ்வார் பதம், ஆசி.இ., த. கிருட்டிணமூர்த்தி (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 14:1:1961, நிறை.

285. நம்மாழ்வார் வண்ணம், நல்லகுற்றாலக் கவிராயர் (ஆசி.), சே.ரா. சுப்பிரமணியக் கவிராயர் (பதி.), செந்தமிழ், 17:2:1918, நிறை.

286. நரி விருத்தம், திருத்தக்கதேவர் (ஆசி.), மு. இராகவையங்கார் (பதி.), செந்தமிழ், 5:11:1907, நிறை.

287. நல்லபிள்ளை சித்திரமடல், ஆசி.இ., ஆர்.கே. பார்த்தசாரதி (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 18:1:1968, நிறை.

288. நல்வழிப் பாடல்கள், ஔவையார்(ஆசி.), ந. வேங்கடாசார்யன் (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 2:1:1949, நிறை.

289. நவக்கிரக தோத்திரம், ஆசி.இ., மு. பசுபதி (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 7:1:1954, நிறை.

290. நண்ணாவூர் சங்கமேசுவர சுவாமி வேதநாயகி அம்மன் பேரில் விறலிவிடுதூது, ஆசி.இ., வீ. சொக்கலிங்கம் (பதி.), சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ், 21:1:1967 - 23:1:1969, குறை.

291. நாககுமார காவியம், ஆசி.இ., மு. சண்முகம் பிள்ளை (பதி.), தமிழாய்வு, 2:1973, நிறை.

292. நாசிகேது புராணம - உரைநடை, ஆசி.இ., ம. சீராளன் (பதி.), சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ், 26:1:1973, நிறை.

293. நாடோடிப் பாடல்கள், ஆசி.இ., எஸ். தியாகராஜன் (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 22:1995, நிறை.

294. நாலடியார் - திருத்தவுரை, சைவ முனிவர்கள் (ஆசி.), சத்திய வாகீசுவையர் (உரை & பதி.), செந்தமிழ், 46:6-7:1950 - 48:9-10:1952, நிறை.

295. நாலுமந்திரி கதை, சின்னத்தம்பி (ஆசி.), த. கிருட்டினமூர்த்தி (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 15:2:1962, நிறை.

296. நான்மணிக்கடிகை - பழைய உரையுடன், விளம்பி நாகனார் (ஆசி.), ரா. இராகவையங்கார் (பதி.), செந்தமிழ், 2:9:1904 - 2:12:1904, நிறை.

297. நியதிப் பயன், கண்ணுடைய வள்ளல் (ஆசி.), ப.அ. முத்துத்தாண்டவராய பிள்ளை (பதி.), செந்தமிழ்ச் செல்வி, 10:3:1932 - 10:4:1932, நிறை.

298. நீதிசாரக் கரு, ஆசி.இ., வி.எஸ். கிருஷ்ணன் (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 5:1:1952, நிறை.

299. நீதி நூல், ஆசி.இ., ம. இராசேந்திரன் (பதி.), உயராய்வு, 2 & 3:1984-85, குறை.

300. நீதிமொழி, திருவண்ணநாதக் கவிராயர் (ஆசி.), பதி.இ., விவேகபாநு, 31:1904, நிறை.

301. நீதி வெண்பா, ஆசி.இ., மு. மாணிக்க நாயகர் (பதி.), பைந்தமிழ், 1:5:1923, நிறை.

302. நீதி வெண்பா, ஆசி.இ., பதி.இ., குறிப்புயையுடன், ஸ்ரீகுமரகுருபரன், 20:9:1998 - 20:11:1998, நிறை.

303. நுண்பொருண்மாலை, ஆழ்வார் திருநகரி இரத்தினக் கவிராயர் (ஆசி.), திரு. நாராயணையங்கார் (பதி.), செந்தமிழ், 6:4:1908 - 10:7:1911, நிறை.

304. நூற்றெட்டுத் திருப்பதி வெண்பா,

315. பஞ்சாக்கர மாலை - மூலமும் பழைய உரையும், கண்ணுடைய வள்ளல் (ஆசி.), எஸ். சோமசுந்தர தேசிகர் (பதி.), சித்தாந்தம், 5:-:1932, நிறை.

316. பட்டமதன வித்தார மாலை, கடிகைமுத்துப் புலவர் (ஆசி.), பண்டிதர் நாராயணசாமி (பதி.), தமிழ்ப்பொழில், 6:3-5:1930, குறை.

317. பட்டினத்தார் வெண்பா, ஆசி.இ., வி.எஸ். பரமசிவம், (பதி.), சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ், 6:1:1943 - 6:2:1943, குறை.

318. பட்டினத்துப்பிள்ளை சரித்திரச் சுருக்க அகவல், ஆசி.இ., ச. திலகம் (பதி.), சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ், 31:1:1979, நிறை.

319. பதிக உந்தி நூல், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் (ஆசி.), தவத்திரு சுந்தர சுவாமிகள் (பதி.), மாதாந்திர அமுதம், 10:7:1990, நிறை.

320. பதிபசுபாசத் தொகை, மறைஞான தேசிகர் (ஆசி.), பால்வண்ண முதலியார் (பதி.), விவேகபாநு, 5:11:1906, நிறை.

321. பதிபசுபாசத் தொகை, மறைஞான தேசிகர் (ஆசி.), பால்வண்ண முதலியார் (பதி.), செந்தமிழ், 11:7:1913, நிறை.

322. பதிபசுபாசத் தொகை, மறைஞான தேசிகர் (ஆசி.), ஜெ.எம். நல்லசாமி (பதி.), சித்தாந்தம், 2:8:1913, நிறை.

323. பதிபசுபாசத் தொகை, மறைஞான தேசிகர் (ஆசி.), கே. சோமசுந்தரம் பிள்ளை (பதி.), தமிழ்ப் பொழில், 4:12:1929, நிறை.

324. பதிபசுபாசப் பனுவல், கண்கட்டி மறைஞானசம்பந்தர் (ஆசி.), எல். உலகநாத பிள்ளை (பதி.), தமிழ்ப் பொழில், 4:3-4:1928 - 6:9:1930, நிறை.

325. பதிபசுபாச வகை, ஆசி.இ., எல். உலகநாத பிள்ளை (பதி.), தமிழ்ப்பொழில், 4:1-2:1928, நிறை.

326. பத்திநெறிப் பதிகம், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் (ஆசி.), பதி.இ., குமரகுருபரன், 6:8:1955, நிறை.

327. பத்மகிரிநாதர் தென்றல்விடுதூது, பலபட்டடைச் சொக்கநாத பிள்ளை (ஆசி.), உ.வே. சாமிநாதையர் (பதி.), கலைமகள், 1:1-6:1932, நிறை.

328. பரத சாத்திரம் - பழைய உரையுடன், அரபத்த நாவலர் (ஆசி.), க. வெள்ளைவாரணனார் (பதி.), தமிழ்ப் பொழில், 23:-:1947 - 27:-:1951, நிறை.

329. பரமோபதேசம், கண்கட்டி மறைஞானசம்பந்தர் (ஆசி.), எல். உலகநாத பிள்ளை (பதி.), தமிழ்ப் பொழில், 3:2-3:1927, நிறை.

330. பரிபூரண சித்தி, பரிபூரணர் (ஆசி.), பூ. சுப்பிரமணியம் (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 17:1:1965, நிறை.

331. பர்த்ருஹறி சிருங்கார சதகம், பர்த்ருஹறி (ஆசி.), வ.ரா. கல்யாண சுந்தரம் (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 3:1:1950, நிறை.

332. பர்த்ருஹறி நீதி சதகம், பர்த்ருஹறி (ஆசி.), வ.ரா. கல்யாண சுந்தரம் (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 2:1:1949, நிறை.

333. பழமலைக்கோவை, துறைமங்கலம் சாமிநாத தேசிகர் (ஆசி.), உ.வே. சாமிநாதையர் (பதி.), சிவநேசன், 8:1:1934 - 8:3:1934, நிறை.

334. பழமொழி - மூலமும் உரையும், முன்றுறையரையனார் (ஆசி.), திரு. நாராயணையங்கார் (பதி.), செந்தமிழ், 14:1:1915 - 20:5-7:1921, குறை.

335. பழனி இரட்டைமணிமாலை, ஆசி.இ., உ.வே. சாமிநாதையர் (பதி.), கலைமகள், 2:7-12:1932, நிறை.

336. பழனிக்கோவை, ஆசி.இ., திரு.கி. இராமாநுஜையங்கார் (பதி.), செந்தமிழ், 35:8:1937 - 36:8:1938, நிறை.

337. பழனிப் பிள்ளைத்தமிழ், சின்னப்ப நாயக்கர், ஆசி.இ., உ.வே. சாமிநாதையர் (பதி.), செந்தமிழ், 30:8:1932, நிறை.

338. பழனிமலைக் கந்தசுவாமி கலித்துறைமாலை, ஆசி.இ., க. சுப்பிரமணிய ஐயர், மு.கோ. இராமன் (பதி.), திருக்கோயில், 21::5:1979 - 21:6:1979, நிறை.

339. பழனிமலை வடிவேலவர் பதிகம், ஆசி.இ., பத்மாவதி (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 11:1:1958, நிறை.

340. பழனி மாலை, ஆசி.இ., வீ. சொக்கலிங்கம் (பதி.), சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ், 18:2:1965, நிறை.

341. பழனியாண்டவர் கலித்துறை, அழகிய சிற்றம்பல கவிராயர் (ஆசி.), த. பெரியாண்டவன் (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 16:1:1963, நிறை.

342. பழனிவேலவன் தோத்திரம், ஆசி.இ., வீ. சொக்கலிங்கம் (பதி.), சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ், 17:3:1964 - 18:1,2:1965, நிறை.

343. பழைய பாடற்றிரட்டு, ஆசி.இ., எல். உலகநாத பிள்ளை (பதி.), தமிழ்ப்பொழில், 12:9:1937 - 12:11:1937, நிறை.

344. பன்னிரு பாட்டியல், ஆசி.இ., ரா. இராகவையங்கார் (பதி.), செந்தமிழ், 2:1:1903 - 2:5:1904, நிறை.

345. பாசவதைப் பரணி, திருவாரூர் வைத்தியநாத தேசிகர் (ஆசி.), உ.வே. சாமிநாதையர் (பதி.), கலைமகள், 2:7-12:1932 - 3:13-18:1933, நிறை.

346. பாண்டிமண்டல சதகம், மதுரை ஐயம்பெருமாள் கவிராயர் (ஆசி.), மு. இராகவையங்கார் (பதி.), செந்தமிழ், 19:8:1921, குறை.

347. பாதாதிகேச உவமானம், திருவேங்கட ஐயர் (ஆசி.), சு. சௌந்தர பாண்டியன் (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 16:1999, நிறை.

348. பாப்பாவினம் (மாறன் பாப்பாவினம்), திருக்குருகைப் பெருமாள் கவிராயர் (ஆசி.), திரு.கி. இராமாநுஜையங்கார் (பதி.), செந்தமிழ், *29:6:1931 - 29:12:1931*, நிறை.

349. பாரதி தீபம், திருவேங்கடபாரதி (ஆசி.), மு. சண்முகம் பிள்ளை (பதி.), தமிழாய்வு, *1:1980*, நிறை.

350. பாலையானந்த சுவாமியார் ஞானக்கும்மி பாடல், பாலையானந்தர் (ஆசி.), த. பெரியாண்டவன் (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், *15:2:1962*, நிறை.

351. பிரபந்த தீபிகை, முத்துவேங்கட சுப்பையர் (ஆசி.), வேம்பத்தூர் பி. பாஸ்கரையர் (பதி.), செந்தமிழ், *17:3:1919*, குறை.

352. பிரபந்த மரபியல், ஆசி.இ., மு. அருணாசலம் (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், *21:1976*, நிறை.

353. பிராசாத அகவல், காவை. அம்பலவாணத் தம்பிரான் (ஆசி.), எஸ். சோமசுந்தர தேசிகர் (பதி.), செந்தமிழ், *28:12:1930*, நிறை.

354. பிராசாத அகவல், காவை. அம்பலவாணத் தம்பிரான் (ஆசி.), எஸ். சோமசுந்தர தேசிகர் (பதி.), சித்தாந்தம், *7:3:1934 - 7:4:1934*, நிறை.

355. பிராசாத தீபம், ஆசி.இ., எஸ். சோமசுந்தர தேசிகர் (பதி.), செந்தமிழ், *28:10:1930*, நிறை.

356. பிராசாத மாலை, ஆசி.இ., எஸ். சோமசுந்தர தேசிகர் (பதி.), செந்தமிழ், *28:10:1930*, நிறை.

357. புகையிலைவிடுதூது, சீனிச்சர்க்கரைப் புலவர் (ஆசி.), உ.வே. சாமிநாதையர் (பதி.), கலைமகள், *16:91-96:1939*, நிறை.

358. புரூரவ சரிதை, ஐயம்பெருமாள் சிவந்த கவிராசர் (ஆசி.), மு. இராகவையங்கார் (பதி.), செந்தமிழ், *20:3:1922 - 23:11:1925*, நிறை.

359. புலவராற்றுப்படை, சிறிய இரத்தினக் கவிராயர் (ஆசி.), திரு. நாராயணையங்கார் (பதி.), செந்தமிழ், 1:5:1903 - 1:6:1903, நிறை. இரண்டாவது முறை 64:3:1969.

360. புலவர் பிணைபோன வரலாறு, ஆசி.இ., அடிகளாசிரியர் (பதி.), தமிழ்ப்பொழில், 28:7:1952 - 28:8:1952, நிறை.

361. புலிமுலை புல்வாய்க்கருளின திருவிளையாடல், பெரும்பற்றப்புலியூர் நம்பி (ஆசி.), சௌந்தரபாரதி (பதி.), விவேகபாநு, 2:7:1903, நிறை.

362. புல்லையந்தாதி, ஆசி.இ., ரெ. இராமையங்கார் (பதி.), செந்தமிழ், 34:5:1936 - 34:11:1936, குறை.

363. பூதர விலாசம், ஆசி.இ., வ.ரா. கல்யாணசுந்தரம் (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 1:1:1948, குறை.

364. பூர்வச்சக்கரவர்த்தி நாடகம், கருப்பனேந்திரன் (ஆசி.), கொடுமுடி சண்முகப் பிரகதம் (பதி.), தேனோலை, 1:1974, நிறை.

365. பெருந்தொகை, மு. இராகவையங்கார் (தொகுப். & பதி.), செந்தமிழ், 21:12:1923 - 33:4:1936, நிறை.

366. பெரும்பொருள் விளக்கப் பாடல்கள், ஆசி.இ., ரா. இராகவையங்கார் (பதி.), செந்தமிழ், 6:12:1908, குறை.

367. பேரூர் ஸ்ரீஅகிலாண்டநாயகி பதிகம், தவத்திரு கந்தசாமி சுவாமிகள் (ஆசி.), ப.வெ. நாகராஜன் (உரை & பதி.), மாதாந்திர அமுதம், 19:3,4:1997, நிறை.

368. பொதிகை நிகண்டு (விருத்தம்), சாமிநாதக் கவிராயர்(ஆசி.), எஸ். வையாபுரிப்பிள்ளை (பதி.), கலாநிலையம், 5:26:1932 - 5:49:1932, குறை.

369. பொதிகை நிகண்டு (நூற்பா), சாமிநாதக் கவிராயர் (ஆசி.), எஸ். வையாபுரிப்பிள்ளை (பதி.), கலா நிலையம், 5:26:1932 - 5:49:1932, நிறை.

370. பொருட்டொகை நிகண்டு, வே. சுப்பிரமணிய பாரதி (ஆசி.), சே.ரா. சுப்பிரமணியக் கவிராயர் (பதி.), செந்தமிழ், 17:6:1919 - 17:11:1919, நிறை.

371. பொருள் முருகாற்றுப்படை, ஆசி.இ., எம்.பி.எஸ். துரைசாமி முதலியார் (பதி.), சித்தாந்தம், 10:2:1937, நிறை.

372. பொன்வண்ணத்தந்தாதி, சேரமான் பெருமாள் நாயனார் (ஆசி.), சே.வெ. ஜம்புலிங்கம் பிள்ளை (பதி.), செந்தமிழ், 45:4:1948 - 45:7,8:1948, நிறை.

373. பொன்னாணிக் கோவை, ஆசி.இ., வே.ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் (பதி.), செந்தமிழ்ச் செல்வி, 38:3:1963, நிறை.

374. மகரநெடுங்குழைக்காதர் பாமாலை, நாராயண தீட்சிதர் (ஆசி.), உ.வே. சாமிநாதையர் (பதி.), கலைமகள், 30:85-90:1939, நிறை.

375. மகாமக அந்தாதிக் கும்மி, ஆசி.இ., ம. சீராளன் (பதி.), சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ், 40:1-2:1991, நிறை.

376. மகாலக்குமி பதிகம், தவத்திரு கந்தசாமி சுவாமிகள் (ஆசி.), தவத்திரு சுந்தர சுவாமிகள் (பதி.), மாதாந்திர அமுதம், 13:11:1992, நிறை.

377. மதுரைக்கோவை, நிம்பை சங்கரநாரணன் (ஆசி.), எஸ். வையாபுரிப்பிள்ளை (பதி.), கலாநிலையம், 7:1:1934 - 7:30:1934, நிறை.

378. மதுரை மும்மணிக்கோவை, பலபட்டடை சொக்கநாத பிள்ளை (ஆசி.), உ.வே. சாமிநாதையர் (பதி.), செந்தமிழ், 30:3:1932 - 30:6:1932, நிறை.

379. மல்லை சிவந்தெழுந்த பல்லவராயன் பேரில் உலா, மல்லையூர் சிற்றம்பலக் கவிராயர் (ஆசி.), இரா. நாகசாமி (பதி.), கல்வெட்டு, 6:1975 - 9:1976, நிறை.

380. மன்னார் மோகனப்பள்ளு, ஆசி.இ., ச. திலகம் (பதி.), சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ், 35:1-3:1985, நிறை.

381. மாணிக்கப் பவழக்கோவை, மாணிக்கவாசகர் (ஆசி.), மு. பசுபதி (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 11:2:1959, குறை.

382. மாணிக்கவாசகர் ஞானக்கலித்துறை, மாணிக்கவாசகர் (ஆசி.), மு. பசுபதி (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 11:1:1958, நிறை.

383. மாணிக்கவாசகர் திருமணியகவல், மாணிக்கவாசகர் (ஆசி.), ந. வேங்கடாசார்யன் (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 1:2:1949, நிறை.

384. மாயாப் பிரலாபம், கண்ணுடைய வள்ளல் (ஆசி.), பதி.இ., செந்தமிழ்ச்செல்வி, 11:5:1933 - 11:6:1933, நிறை.

385. மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும், திருக்குருகைப்பெருமாள் கவிராயர் (ஆசி.), திரு.கி. இராமாநுஜையங்கார் (பதி.), செந்தமிழ், 27:1:1928 - 29:11:1931, குறை.

386. மாறனலங்காரம் - பழைய உரையுடன், திருக்குருகைப் பெருமாள் கவிராயர் (ஆசி.), நாராயணையங்கார் (பதி.), செந்தமிழ், 10:10:1912 - 11:12:1913, நிறை.

387. மாறன் பாப்பாவினம் (பாப்பாவினம்), திருக்குருகைப் பெருமாள் கவிராயர் (ஆசி.), டி.என். சேஷாசலம் (பதி.), கலாநிலையம், 2:14:1929 - 2:31:1929, நிறை.

388. மான்விடுதூது, மிதிலைப்பட்டிக் குழந்தைக் கவிராயர் (ஆசி.), உ.வே. சாமிநாதையர் (பதி.), கலைமகள், 8:43-47:1935 - 9:48-53:1936, நிறை.

389. மிழலைச் சதகம், சர்க்கரை முத்துமுருகப்பப் புலவர் (ஆசி.), பதி.இ., செந்தமிழ், 24:1:1925, நிறை.

390. மீனாட்சியம்மன் கிளிப்பாடல், ஆசி.இ., முத்தம்மாள் கௌரிநாதன் (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 17:1:1965, நிறை.

391. முத்தி நிச்சயம், குருஞானசம்பந்த சுவாமிகள் (ஆசி.), பதி.இ., செந்தமிழ்ச்செல்வி, 3:6:1925, நிறை.

392. முத்தி நிச்சயம், குருஞானசம்பந்த சுவாமிகள் (ஆசி.), பதி.இ., ஞானசம்பந்தம், 22:7:1963, நிறை.

393. முத்திரை, சிதம்பரநாத தேசிகர் (ஆசி.), எஸ். சோமசுந்தர தேசிகர் (பதி.), செந்தமிழ், 10:9:1912, நிறை.

394. முத்தொள்ளாயிரச் செய்யுட்கள், ஆசி.இ., ரா. இராகவையங்கார் (தொகுப். & பதி.), செந்தமிழ், 3:3:1905, குறை.

395. முப்பந்தொட்டியுலா, சிதம்பரம் சிவப்பிரகாசர் (ஆசி.), பதி.இ., சித்தாந்தம், 7:6:1934, நிறை.

396. முருகரனுபூதி, ஆசி.இ., கிருஷ்ணா சஞ்சீவி (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 15:1:1962, நிறை.

397. முனிமொழி, ஆசி.இ., வி.எஸ். கிருஷ்ணன் (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 9:1:1956, நிறை.

398. மூதுரை, ஔவையார் (ஆசி.), ய. மணிகண்டன் (பதி.), சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ், 43:3,4:1997, நிறை.

399. மூர்த்திநாயனார்க்கரசளித்த திருவிளையாடல், பெரும்பற்றப்புலியூர் நம்பி (ஆசி.), சௌந்தரபாரதி (பதி.), விவேகபாநு, 2:6:1903, நிறை.

400. மூவர் அம்மானை, ஆசி.இ., மு. பசுபதி (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 6:2:1953, நிறை.

401. மூவர் அம்மானை, ஆசி.இ., பதி.இ., குமரகுருபரன், 4:10:1953 - 4:12:1953, நிறை.

402. மெச்சும்பெருமாள் பாண்டியன் கதை, ஆசி.இ., கொடுமுடி சண்முகப் பிரகதம் (பதி.), தேனோலை, 6:1975, நிறை.

403. மெய்ஞ்ஞானத்தங்கம், தட்சிணாமூர்த்தியார் (ஆசி.), மு. சண்முகம் பிள்ளை (பதி.), ஸ்ரீகாமகோடி ப்ரதீபம், 6:6:1965, நிறை.

404. மெய்ம்மொழிச்சரிதை, இளங்காரிகுடி மெய்ம்மொழித் தேவர் (ஆசி.), மு. சண்முகம்பிள்ளை (பதி.), தமிழாய்வு, 6:1977, குறை.

405. மேருமந்தர மாலை, பாரீசுவநாதன் (ஆசி.), மு. சண்முகம் பிள்ளை (பதி.), தமிழாய்வு, 8:1978, நிறை.

406. யாப்பருங்கலம், அமிர்தசாகரனார் (ஆசி.), ய. மணிகண்டன் (பதி.), சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ், 46:1-4:2000, நிறை.

407. யோக மாலை, ஆசி.இ., த. கிருட்டிணமூர்த்தி (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 14:2:1961, நிறை.

408. ராம சரிதப்பாட்டு, ஆசி.இ., து.அ. கோபிநாத ராவ் (பதி.), செந்தமிழ், 13:8:1915, குறை.

409. வசந்தன் உயிர்வரு படலம், ஆசி.இ., அ. அரங்கசாமி மூப்பனார் (பதி.), தமிழ்ப்பொழில், 28:1:1952, நிறை.

410. வண்ணத்தியல்பு நூல், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் (ஆசி.), ந.ரா. முருகவேள் (பதி.), திருக்கோயில், 7:8:1965 - 7:9:1965, நிறை.

411. வயலூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி, ஆசி.இ., மு.கோ. இராமன் (பதி.), திருக்கோயில், 21:3:1978, நிறை.

412. வருகைப்பத்து, ஆசி.இ., பூ. சுப்பிரமணியம் (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 17:1:1965, நிறை.

413. வருத்தமறவுய்யும் வழி, ஆசி.இ., சே.ரா. சுப்பிரமணியக் கவிராயர் (பதி.), செந்தமிழ், 2:6:1904, நிறை.

414. வருமுருகாற்றுப்படை, ஆசி.இ., எம்.பி.எஸ். துரைசாமி முதலியார் (பதி.), சித்தாந்தம், 10:2:1937, நிறை.

415. வருமுருகாற்றுப்படை, ஆசி.இ., வீ. சொக்கலிங்கம் (பதி.), சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ், 17:2:1963, நிறை.

416. வலிவல மும்மணிக்கோவை, ஆசி.இ., உ.வே. சாமிநாதையர் (பதி.), கலைமகள், 5:25-30:1934, நிறை.

417. வலைவீசு புராணம், காங்கேயன் (ஆசி.), பதி.இ., சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ், 18:1,2:1965, குறை.

418. வலைவீசு புராணம், காங்கேயன் (ஆசி.), வீ. சொக்கலிங்கம் (பதி.), சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ், 27:1-3:1975 - 31:2,3:1980, நிறை.

419. வளையாபதிச் செய்யுட்கள், ரா. இராகவையங்கார் (தொகுப். & பதி.), செந்தமிழ், 1:4:1903, குறை.

420. வாதவூரார் ஆனந்தக் களிப்பு, ஆண்டியப்பன் (ஆசி.), வி.எஸ். கிருஷ்ணன் (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 7:1:1954, நிறை.

421. விக்கிரம சோழனுலா, ஒட்டக்கூத்தர் (ஆசி.), மு. இராகவையங்கார் (பதி.), செந்தமிழ், 7:4:1909 - 7:6:1909, நிறை.

422. விசயராகவ நாயக்கர் அய்யன் பேரில் முளைப்பாட்டு, ஆசி.இ., ச. திலகம் (பதி.), சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ், 34:1-3:1984, நிறை.

423. விநாயகமான்மியம், ச. பூபாலபிள்ளை (ஆசி.), பதி.இ., குமரகுருபரன், 19:5:1968, நிறை.

424. விநாயகர் தோத்திராஷ்டகம், ஸ்ரீகச்சியப்ப முனிவர் (ஆசி.), ஸ்ரீமத் சுந்தரமூர்த்தி சுவாமிகள் (பதி.), மெய்கண்டார், 8:9:1990, நிறை.

425. விபூதி தோத்திரம், ஆசி.இ., ச. திலகம் (பதி.), சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ், 30:1-3:1984, நிறை.

426. விராலிமலை வேலவர் காதல், ஆசி.இ., முத்தம்மாள் கௌரிநாதன் (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 16:2:1964, நிறை.

427. விராலிமலை வேலவர் குறவஞ்சி நாடகம், பிள்ளைப்பெருமாள் கவிராயர் (ஆசி.), மு. பசுபதி (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 12:1:1959 - 12:2:1959, நிறை.

428. வில்லிபாரதம் - மௌளி சூட்டுச் சருக்கம், வில்லிபுத்தூராழ்வார் (ஆசி.), தி. சந்திரசேகரன் (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 1:2:1949, நிறை.

429. வீரபுரப்பத்து, ஆசி.இ., மு.கோ. இராமன் (பதி.), முக்குடை, 6:5:1979, நிறை.

430. வெள்ளக்கிணற்று வள்ளிநாயகன் பதிகம், தவத்திரு சுந்தசாமி சுவாமிகள் (ஆசி.), ப.வெ. நாகராஜன் (உரை & பதி.), மாதாந்திர அமுதம், 19:5,6:1997, நிறை.

431. வேங்கடேசப்பெருமாள் தமிழ்மாலை, ஆவுடையநாதன் (ஆசி.), த. கிருட்டிணமூர்த்தி (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 16:1:1963, நிறை.

432. வேதபுரி ஈசுவரர் அந்தாதி, ஆசி.இ., மு. பசுபதி (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பருவ இதழ், 6:1:1953, நிறை.

433. ஸ்ரீமெய்கண்டதேசிகர் மாலை, ஸ்ரீவேளூர் சுப்பிரமணிய தேசிகர் (ஆசி.), புலவர் சுயம்புநாதத் தம்பிரான் (பதி.), மெய்கண்டார், 15:1:1996, நிறை.

434. ஸ்ரீவீரபோக வசந்தராயர் வரலாறு - உரைநடை, ஆசி.இ., ச. திலகம் (பதி.), சரஸ்வதிமகால் நூலகப் பருவ இதழ், 37:1-3:1988, நிறை.

435. ஸ்ரீவைகுந்தநாதர் பிள்ளைத்தமிழ், ஆசி.இ., கி. வேங்கிடசாமி ரெட்டியார் (பதி.), கலாநிலையம், 1932, நிறை.